மருத்துவக்
கலைச்சொல்
களஞ்சியம்
மணவை முஸ்தபா

மருத்துவக் கலைச்சொல் களஞ்சியம்

வளாதமிழச செலவர்

மணவை முஸ்தபா

விலை ரூ. 150/-

வெளியீடு :

மணவை பப்ளிகேஷன்

AE-5 (103) அண்ணா நகர்,

சென்னை - 600 040.

Maruthuva Kalaichchol Kalangiam

Valar Tamil Selvar
MANAVAI MUSTAFA

Price Rs. 150/-

Published by
MANAVAI PUBLICATION
AE-5(103) Anna Nagar,
Chennai - 600 040.

ஆயவாளா

பேராசிரியா, டாகடா

லலிதா காமேஸ்வரன்

முனனாள துணைவேநதா

எம ஜி ஆா மருததுவப பலகலைக கழகம

தொகுப்புத துணைவர்

இரா. நடராசன், எம ஏ , பி ஏ எல ,

வலலுநா :

டாக்டர் செம்மல் சையத் மீராசா,

எம பி பி எஸ , டி எல ஒ

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	**Maruthuva Kalichchol Kalangiam**
Author	**Manavai Mustafa**
Copyright holder	Author
First Edition	1996
Re-edition .	2002
Paper used .	16kg White Cream Wove
Size of the Book	Demy Octovo
Printing Points used	10 points
No of Pages	450 + 16 = 466 Pages
Price	Rs 150/-
Printer	**Karis Offset Printers** 60, Nelson Manickam Road, Aminijikarai, Chennai - 600 029
Publishing Place	**Manavai Publication** AE-5 (103), Anna Nagar, Chennai - 600 040

நுழைவாயில்

எனது கால் நூற்றாண்டுக் கனவுகளிலொன்று இன்று நனவாக நூலுருவில் உங்கள் கரங்களில் தவழ்வது எனக்கு எல்லையில்லா மகிழ்வூட்டுவதாயுள்ளது நான் இலக்கியத்தையும் மொழியியலையும் முதன்மைப் பாடங்களாக எடுத்துப் படித்தவன் என்றாலும் எனக்கு எப்போதும் அறிவியல்,தொழில் நுட்பப் பாடங்களில குறிப்பாக மருத்துவத்துறை நூல்களைப் படிப்பதிலும் அவற்றைப் பற்றித் தமிழிலே சிந்திப்பதிலும் எனக்கு எப்போதுமே விருப்பம் அதிகம். மருத்துவத்தைத் தமிழில் சொல்ல வேண்டும் என்ற எனது விருப்பத்தை என் இளைய மகன் செம்மல் மூலம் நிறைவேற்றிக் கொள்ள விரும்பியதன் விளைவே அவன் மருத்துவ மாணவனாகியது. மருத்துவக் கல்லூரியில் அவன் காலடி எடுத்துவைக்குமுன் அவனிடம் என் உள்ளுணர்வுகளை வெளிப்படுத்தினேன்:

''உன் எதிர்கால நல்வாழ்வுக்காக மட்டும் உன்னை நான் மருத்துவம் பயில அனுப்பவில்லை. என்னுள் பல ஆண்டுகளாகக் கனன்று கொணடிருக்கும் பேராசையொன்றை உன்மூலம் நிறைவேற்றி,உன் வாழ்வோடு என் வாழ்வையும் வெற்றியுடையதாக ஆக்கிக் கொள்ள வேணடும் என்ற பேரவா எனக்குண்டு. நீ மருத்துவப் படிப்பை வெற்றிகரமாக முடித்தபின் உன்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு மருத்துவ நூல்களைத் தமிழில் தர வேண்டும். இவ்வெண்ணத்தை மருத்துவக் கல்லூரியில் கால்வைக்கும்போதே உறுதிமிக்க முடிவாக உன் உள்ளத்தின் அடித்தளத்தில் அழுத்தமாகப் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். மருத்துவத்தை ஆங்கில மொழிமூலம் படித்தாலும் அதைத் தமிழில் சொலவது எப்படி என்ற சிந்தனை எப்போதும் உனக்கு இருந்து கொண்டே இருக்க வேண்டும். அப்படி நீ தமிழில் சொல்ல விழையும் அறிவியல், மருத்துவச் செய்திகளை இலக்கிய நயத்தோடும் கற்பனைத் திறனோடும் புனைகதை வடிவில இயன்றவரை கூற முற்பட வேண்டும். அப்போதுதான் சாதாரணமானவர்கள் புரிந்து கொள்ளக் கடினமாக உள்ள மருத்துவச் செய்திகளும் எளிமையாக அமைந்து. சாதாரண படிப்புள்ளவர்களுக்கும் எளிதாகப் புரியவும் விரைவாக அவர்களைப் போய்ச் சேரவும் வழியேற்படும். இதுவே, மகன் என்ற முறையில் தந்தையாகிய எனக்கு நீ செய்யும் உண்மையான கைம்மாறாக இருக்கும். இதைத் தவிற வேறு எதையும் நான் உன்னிடம் எதிர்பார்க்கவில்லை. இதைச் செய்வதாக எனக்கு நீ உறுதி மொழி தர வேண்டும்'' என்று நான் கூறியபோது, ''உங்கள் விருப்பத்தை நிறைவேற்று

வதையே என் வாழ்க்கையின் முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்படுவேன்'' என உறுதியளித்தான்.

என் மகனோடு இணைந்து நானும் கடந்த ஆறாண்டு காலமாக மருத்துவப் பாடநூல்களைப் படித்து வரலானேன். என் ஐயப்பாடுகளையெல்லாம் நான் தமிழில் கேட்பதும் அவற்றிற்கான விளக்கங்களை அவன் எனக்குத் தமிழில் விளக்குவதும் வழக்கமாகியது. இதன்மூலம் எங்கள் இருவரிடையேயும் மருத்துவக் கருத்துக்களைத் தமிழில் பரிமாறிக் கொள்வது எளிதானதாக மட்டும் அமையவில்லை. இனிமையானதாகவும் அமைந்ததெனலாம். அப்போதெல்லாம் வெளிப்படும் கருத்துக்களைக் குறித்து வைத்துக் கொள்வதையும் நான் வாடிக்கையாக்கிக் கொண்டேன். கடந்த ஆறு ஆண்டு காலமாக என் மகன் டாக்டர் செம்மலின் உறுதுணையோடும் என் அருமை நண்பர் திரு இரா. நடராசன் அவர்களின் ஒத்துழைப்போடும் டாக்டர் லலிதா காமேஸ்வரன் அவர்களின் உதவியோடும் 'மருத்துவக் கலைச்சொல் களஞ்சியம்'' எனும் பெயரில் இந்நூல் வெளிவந்துள்ளது.

எனினும், இதற்கான அடித்தளம் முப்பதாண்டுகட்கு முன்பே என் உள்ளத்தில் அழுத்தமாகப் போடப்பட்டிருந்ததை இந்நேரத்தில் நினைவுகூராமல் இருக்க முடியவில்லை.

இன்றைக்குச் சரியாக முப்பது ஆண்டுகட்கு முன்பு, 'Wonder Drugs' எனும் ஆங்கில மருத்துவ நூலை தென்மொழிகள் புத்தக நிறுவனத்துக்காகத் தமிழில் பதிப்பிக்கும் பணியை நான் மேற்கொண்டபோதுதான், தமிழைப் பொறுத்தவரை இம்முயற்சியில் நாம் எங்கே நிற்க வேண்டியுள்ளது என்பது தெளிவாகப் புலப்பட்டது. அந்நூலை வெளியிட்டதனால் நான் பெற்ற பட்டறிவு மிகவும் பயனுள்ளதாயமைந்தது. 'உயிரியல்' என்ற நூலையும் 'யுனெஸ்கோ கூரியர் திங்களிதழில் தொடர்ந்து 1970இல் புற்றுநோய் பற்றியும் அடுத்து 1972இல் 'இதய நோய், பற்றியும் சிறப்பிதழ்களை தமிழில் வெளியிடும் போது மருத்துவத்தைத் தமிழில் செல்லும்போது எதிர்ப்படும் இடர்ப்பாடுகள் என்னென்ன என்பது புலனாகியது.

மருத்துவ நூல்கள் தமிழில் நிறைய வெளிவர வேண்டும் எனப் பெரிதும் விரும்புகிறோம். ஆனால், பிற மொழிகளில் வெளிவரும் அளவுக்கு அறிவியல், தொழில்நுட்ப, மருத்துவ நூல்கள் தமிழில் வெளிவருவதில்லை. இதற்கு என்ன காரணம்?

நம்மிடையே அறிவியல், தொழில்நுட்ப, மருத்துவத் துறைகளில் பொருளறிவும் தமிழறிவும் எழுத்துத் திறனுமிக்கவர்

கட்குப் பஞ்சமில்லை. இத்துறைகளைப் பற்றித் தமிழில் தெளிவாகவும் திட்பமாகவும் விளக்கிககூற முடியும் என்ற ஆர்வத் துடிப்பினர் பலருண்டு. அவர்கள் எழுதவும் முனைகிறார்கள். அப்போது அவர்கள் முயற்சிக்குப் பெரும் முட்டுக்கட்டையாக வந்தமைவது கலைச் சொற்கள் (Technical terms) ஆகும். ஆங்கிலக் கலைச் சொற்களுக்கேற்ற நேர்த தமிழ் கலைச் சொற்களை,எழுத முனையும் எல்லோராலும் உரிய முறையில் கலைச் சொற்களை உருவாக்க இயலுவதிலலை. அதற்கேற்ற மொழியறிவும் இலக்கணப் புலமையும் போதிய அளவு இல்லாததால ஆங்கிலக் கலைச் சொற்களை மொழி பெயர்ப்புச் செய்தும் சில சமயங்களில் ஒலி பெயர்ப்புச் செய்தும் பயன்படுத்த வேணடிய கட்டாயச் சூழ்நிலை உணடாகிறது. இதனால் கலைச் சொல் மொழிபெயர்ப்பு நீளமாகவும் பொருட் பிறழ்வுடையதாகவும் அமைய நேர்கிறது. பெயர்ப்பால் போதிய பொருள் விளக்கம் பெற முடிவதில்லை. இதனால் சொற்செட்டும் பொருட்செறிவுமுடைய சுருங்கிய வடிவிலான கலைச் சொற்கள் உருவாக இயலாமல் போகிறது. இதன் விளைவாக ஆர்வத்தோடு எழுத முனைந்த நூலாசிரியர் ஒருசில பக்கங்களிலேயே மனச்சோர்வடைந்து தன முயற்சியை தொடராது விட்டுவிட நேர்கிறது. இதனை, இம்முயற்சியாளர்கள் மூலம் கேட்கும்போதெல்லாம் கலைச்சொல் இடர்பாட்டை நீக்கினால் பொருளறிவுமிக்க, ஓரளவு தமிழறிவும் எழுத்தாற்றலுமுள்ள இவர்கள் நூல் எழுத ஏதுவாக இருக்குமே என்ற எணணம் என்னுள் அழுத்தம் பெறும். அதன் விளைவாக அறிவியல், தொழில்நுட்ப, மருத்துவததுறைக் கலைச் சொல்லாக்க முயற்சியில் முழு ஈடுபாடு கொள்ளலானேன.

நூல் எழுதுவோருக்கும் கற்பிக்கும் ஆசிரியர்கட்கும் படிப் பார்வலர்கட்கும் மட்டும் பயன்படுவதோடமையாது சாதாரண வாசகர்கட்கும் பயன்பட வேண்டும். ஆங்கிலக் கலைச சொல்லுக்கு நிகரான தமிழ்க் கலைச் சொல்லும், அக் கலைச் சொல்லுக்கு விளக்கமாக ஒரு அறிவியல் செய்தியும் படிப்போர்க்குக் கிடைக்கவேணடும் என்று விழைந்தேன். அதையும் பட விளக்கத்தோடு தந்துதவ வேண்டும் விரும்பினேன். விளைவு களஞ்சியப் போக்கில் ஒரு புதுவகை கலைச் சொல் அகராதியை வடிவமைத்தேன்.

இப்புதுவகை 'கலைச்சொல் களஞ்சிய' முதல் தொகுதி 'அறிவியல் கலைச்சொல் களஞ்சியம்' என்ற பெயரில் 1990இல் வெளிவந்தது. இதே பெயரில் இரண்டாவது தொகுதி 1993இல் வெளிவந்தது. இவற்றில் 36 அறிவியல் தொழில்

நுட்பப்பிரிவுகட்கான கலைச் சொற்களும் விளக்கங்களும் இடம் பெற்றன மூன்றாவது தொகுதி 1995இல்''மருத்துவ, அறிவியல் தொழில் நுட்பக் கலைச்சொல் களஞ்சிய அகராதி என்ற பெயரில் வெளிவந்தது 56 அறிவியல்' தொழில் நுட்ப, மருத்து வப் பிரிவுகட்கான கலைச் சொற்களையும் விளக்கங்களையும் கொண்டதாக அஃது அமைந்தது. இந்நூல் அரசு, மக்களின் பேராதரவையும பெற்றது. இதழ்களும் நூலாசிரியர்களும் அறி வியல் தமிழ் ஆர்வலர்களும் என முயற்சியைப் பாராட்டி ஊக்கு வித்தனர். 'அனந்தாச்சாரி ஃபௌண்டேஷன் ஆஃப் இந்தியா' போன்ற அமைப்புகள் பரிசும் பாராட்டும் வழங்கிச் சிறப் பிததனர்.

இதே போக்கில் மருத்துவவியலின் பதினைந்து பிரிவுகட் குரிய ஆங்கிலக் கலைச் சொற்களுககு நேர்த் தமிழ்க் கலைச் சொறகளும் அவறறிற்கான பொருள் விளககமும் படங்களோடு தயாரிக்கத் தொடங்கினேன். ஆங்கிலக் கலைச் சொற்களை இனங்கண்டு தேர்வு செய்வதில் என மகன் டாக்டர் செமமலின் பங்கு கணிசமானது. தமிழ்க் கலைச் சொல் உருவாக்கத்திலும் தமிழில் பொருள் விளக்கம் வரைவதிலும் நணபர் திரு இரா. நடராசனின் ஒத்துழைப்பு குறிப்பிடத்தக்கதாகும். நாங்கள் எவ்வளவுதான் திறம்படச் செயல்பட்டாலும் மருத்துவவியல் வல்லுனர் என்ற முறையில் ஸ்ரீராமச்சந்திரா நிகர்நிலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தரும் நீண்ட காலமாக என் அறிவியல் தமிழ் வளர்ச்சி முயற்சிகளுக்குப் பின் துணையாக இருப்பதில் பெருமகிழ்வு கொள்பவருமான பேராசிரியர், டாக்டர் லலிதா காமேஸவரன் அவர்கள தனக்குள்ள பெரும் பணிகளுக்கிடையேயும் வரிவரியாகப் படித்து குறை நிறை களைச் சுட்டிக் காட்டியும் தேவையான மாற்ற திருத்தங்களைச் செய்து செப்பனிட்டும் நூலை முழுமைப்படுத்தித் தந்தார்கள். மாநிலத் திட்டக் குழு உறுப்பினராகவும் உள்ள அவர்கள் ஒரு நாளைக்குக குறைந்தது பத்துப் பக்கங்களாவது படிப்பது எனத் தனக்குத்தானே கண்டிப்பான வரையறை செய்து கொண்டதோடு, வாரத்திற்கு ஒருமுறை என்னுடன் கலநதுரை யாடுவது என்ற முறையையும் கடைப்பிடிதது வந்தார்கள். அப்போதெல்லாம் மருத்துவச் செய்திகளை இனிய தமிழ் நடையில் ஆங்கிலத்தை விடத தெளிவாகத் தமிழில் தரமுடி கிறதே என வியந்து பாராட்டத் தவறுவதில்லை. அச் சமயங் களில் அவர்களின் தமிழார்வமும் தமிழறிவும் மருத்துவத் துறைப் புலமையும் திறனாளர்களை ஊக்குவிக்கும் பாங்கும் என்னை வியக்கவைக்கும்.

'அலோபதி' என்றழைக்கப்படும் ஆங்கில மருத்துவத்தைத் தமிழில் தரும் முயற்சி 1852லேயே ஃபிஷ்கிரீன் எனும் அமெரிக்க மருத்துவப் பேராசிரியரால் இலங்கை யாழ்ப்பாணத்தில்முதன முதல் தொடங்கி வைக்கப்பட்டது. டாக்டர் கட்டர் ஆங்கிலத்தில் எழுதிய 'Anatomy Physiology and Hygiene' எனும் நூலை 'அங்காதிபாத சுகரணவாத உற்பாவன நூல்' என்ற பெயரில் மொழி பெயர்த்தார். தமிழ் நூல் என மகுடம் தாங்கி வெளி வநத போதிலும் அதில் இடம் பெற்ற பெரும்பாலான சொற்கள், குறிப்பாகக் கலைச் சொற்கள் தமிழ் எழுத்தோடு கூடிய சம்ஸ்கிருதச் சொற்களே யாகும். தமிழோடு கலந்து அதிகப் புழக்கத்திலிருந்ததால் சம்ஸ்கிருத மொழிச் சொற்களைத் தமிழ்ச் சொற்களாகவே ஃபிஷ்கிரீன கருதியதே இதற்குக் காரணம்.

தமிழில் கலைக் களஞ்சியங்கள் வெளிவரத் தொடங்கிய பின்னர் மருத்துவம் தொடர்பான கட்டுரைகளை எழுதிய மருத்துவத்துறை வல்லுனர்கள், கூடியவரை மருத்துவக் கலைச் சொற்களைத் தமிழில் தருவதில் பேரார்வம் காட்டினர் சென்னைப் பல்கலைக் கழக 'ஆங்கில-தமிழ் சொற்களஞ்சியம' உருவானபோது அதில் மருத்துவம் தொடர்பான ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழிலேயே சொல்விளக்கம் கொடுக்கப் பட்டது. தமிழ் நாடு பாடநூல் நிறுவனம் கல்லூரிப் பாட நூல்களாக சில மருத்துவ நூல்களை மருத்துவர்களைக் கொணடு எழுதச் செய்தது. அந்நூல்கள் விரும்பும் வகையில் அமைய இயலாமற் போயினும் அதில இடம் பெற்ற மருத்துவக் கலைச் சொற்கள் தமிழிலேயே பெரும்பாலும் அமைந்திருந்தன. இதற்குக் காரணம் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனமே மருத்துக் கலைச் சொற்களைத் தொகுத்து நூலாசிரியர்கட்கு வழங்கியதாகும்.

தமிழ்ப் பல்கலைக் கழகம் 'அறிவியல் களஞ்சியம்' தொகுதிகளை வெளியிட முனைந்தபோது நல்ல தமிழில் மருத்துவக் கட்டுரைகளை எழுதச் செய்து பெறுவதில் பெருங்கவனம் செலுத்தியது. மருத்துவப் புலமையோடு தமிழறிவுமிக்க டாக்டர் சாமி சண்முகம் போன்றவர்கள் அறிவியல் களஞ்சியப் பதிப்பாசிரியர் குழுவில் இடம் பெற்றிருந்ததால் மருத்துவக் கலைச் சொற்கள் அழகான தமிழ்ச் சொல்வடிவங்களாக இடம பெற்றன. அப்போதைய துணை வேந்தர் டாக்டர் வ. அய் சுப்பிரமணியம் அவர்களின் விருப்பத்திற்கேற்ப 'அறிவியல் களஞ்சியம்' முதல் தொகுதியை வடிவமைத்து அச்சுப் பதிவம் தயாரிக்கும் பணியை நிறைவேற்றும் வாய்ப்பை நான்

மேற்கொண்டு, நிறைவேற்றினேன். அவற்றுள் இடம் பெற்ற மருததுவக் கலைச்சொறகள் பல அழகு தமிழில் பொருட் செறிவோடு அமைநதவைகளாகும்.

தமிழில வெளிவந்து கொணடிருக்கும் 'கலைக் கதிர்' திங் களிதழில இடமபெறற அறிவியல கலைச் சொற்களையெல் லாம் பேராசிரியர் ஜி ஆர் தாமோதரன் அவர்கள் தொகுத்து 'அடிப்படை அறிவியல்', 'பயனுறு அறிவியல்' என றபெயர்களில் நூலுருவில வெளியிட்டார். இவை பொருளறிவைக் காட்டிலும் மொழித திறததுக்கு முதன்மை தருபவைகளாக அமைந்து விட்டதெனலாம. 'யுனெஸகோ கூரியர்' பன்னாட்டுத் திங்களி தழில் பனனூறு மருத்துவக கட்டுரைகள் கடந்த கால நூற் றாண்டு காலமாக வெளிவந்துள்ளன. அவற்றைத் தமிழில வெளியிடும்போது மொழிபெயர்ப்பாளர்களின் உதவியோடும் மருததுவ வல்லுநர்களின உறுதுணையோடும் பல நூறு மருத் துவக் கலைச் சொறகளை உருவாக்கிப் பயன்படுததும இனிய வாய்ப்பு எனக்கேற்பட்டது.

மருததுவக் கலைச் சொற்களைப் பொறுத்தவரை கடந்த கால முயற்சிகளைக் கருத்திற் கொண்டு 'மருத்துவக் கலைச் சொல களஞ்சியம்' நூலை உருவாக்கியுள்ளேன. மருததுவத் துறை தொடர்பான பொருளறிவைப் புகட்டுவதற்கான துணைக் கருவியாகத்தான் மொழியைக் கையாண்டுள்ளேன். இயலபிலேயே தமிழ் ஓர் அறிவியல் மொழியாக-அறிவியலை நுண்மாண நுழைபுலததோடு உணர்த்தவல்ல ஆற்றல்மிகு மொழியாக-அமைந்திருப்பதால கடினமானதாகப் பலரும கருதும் கலைச் சொல்லாக்க முயற்சி எளிதானதாக அமைவதா யிற்று. தமிழைப் போற்றத் தெரிந்த அளவுக்கு அதன் அளப்பரிய ஆற்றலை அறிநது கொளளவோ உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளவோ முனையாமலிருக்கிறோம் என்பதுதான் உணமை. அறிவியலைப் பொறுத்தவரை தமிழின் தனித்திறத்தை செயல் வடிவாக உலகுமுன் எணபிககும் வகையிலே என முயற்சிகளைத் தொடர்ந்து கொணடுள்ளேன.

தமிழைப் பொறுத்தவரை எட்டு வயதில் தந்தை பெரி யாரின் பேச்சால் ஈர்க்கப்பட்டு, தொடர்ந்து அறிஞர் அண்ணா வால் 'காலத்திற்கேற்பத் தமிழ்ப் பணி' அமைய வேணடும் என்ற உணர்வு ஊட்டப்பட்டு, பேராசிரியர் தெ.பொ மீ. அவர்களால் மொழியியலறிவும் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரால் வேர்ச் சொல்லறிவும் மகாவித்துவான்

ச. தண்டபாணி தேசிகரால் பழந்தமிழ்ச் சொல்லாட்சித் திற னும் ஊட்டி வளர்க்கப்பட்ட நான், இவையெல்லாம் ஒருங் கிணைந்த நிலையில் எனது தமிழ்ப் பணியமைய எலலா வகை யிலும் ஊக்குவிக்கும பேருக்கியாக என்னுள் கடந்த கால் நூற் றாண்டுக்கு மேலாக விசையென என் உள்ளத்தளவில் இயக்கி வருபவர் தமிழினக் காவலர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். தமிழகப் பொற்காலச் சிற்பியான டாக்டர் கலைஞர் அவர்கள் நான் 1986இல் எழுதிய 'காலம் தேடும் தமிழ்' நூல் வெளியீட்டு விழாவில் ''அறிவியல் தமிழ்ச் சிற்பி'' எனப் பட்ட மளித்து என்னைப் பாராட்டியபோது கூறிய சொற்கள் ஒவ் வொன்றும் என் எதிர்காலத் தமிழ்ப் பணிக்குரிய வழியைக் காட்டுவதாக அமைந்ததோடு தமிழகத்துக்கு என்னை உரிய முறையில் இனங்காட்டுவதாகவும் அமைந்தது. அதன் பின்னர் தமிழ் உள்ளங்கள பலவும் என்னிடமிருந்து பலவகையான எதிர்பார்ப்புகளை எதிர்நோக்கவும் செய்தன.

டாக்டர் கலைஞர் அவர்கள் 1989இல் ஆட்சிப் பொறுப் பேற்றவுடன் எனக்கு ''திரு வி.க'' விருதளித்துப் பரிசும் தந்த தோடு நேரிடையாகவும் மறைமுகமாகவும் என் அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கான முயற்சிகளை ஊக்கியும் வந்தார். இவை யெல்லாம் எனக்குப் பெரும் வேகமூட்டிகளாயின என்பதில் ஐய மில்லை. அண்மையில 'ஆழ்வார்கள் ஆய்வு மையம்' சார்பில் 'எம்.ஜி ஆர்' விருது பெற்றதற்கும் அவர்களே அடித்தளக் காரணம் என்பதை அறிந்தபோது பெருமகிழ்வடைந்தேன். வர லாற்று நாயகராக, பொற்காலச் சிற்பியாகத் திகழும் டாக்டர் கலைஞர் அவர்களின் உள்ளத்தில் எனக்கொரு சிறப்பிடம் கிடைத்துள்ளதை வாழ்க்கையில் நான் பெற்ற பெரும் பேறாகக் கருதி மகிழ்கிறேன்.

மீண்டும் கலைஞர் ஆட்சி மலர்ந்தவுடனேயே தமிழ் வளர்ச் சிக்கெனத் தமிழாய்ந்த தமிழ்க்குடிமகனாரை அமைச்சராக்கிய தோடு, அடுதத ஆண்டுமுதல் பொறியியல், மருத்துவஞ் சார் தொழில் (paramedical) மற்றும் மருத்துவப் படிப்பு களில் சில பிரிவுகள் தமிழில் கற்பிக்கப்படும் என அறிவிப்புச் செய்துள்ளது என் போன்றவர்களை பேருவகை கொள்ளச் செய்தன. மருத்துவப் பாட நூல்கள் தமிழில் எழுதும்போது நூலாசிரியர்கட்கு ஏற்படும் கலைச்சொல் முட்டுப்பாட்டை நீக்கும் வழியாக உடனடியாக முதல் தொகுதியை வெளியிட விழைந்ததன் விளைவே இந்நூல் வெளியீடு.இதைத் தொடர்ந்து இரணடாவது தொகுதியை மேற்கொண்டுள்ளேன.

தமிழில் பெரிய அளவில் வெளிவரும் முதல் கலைச் சொல் தொகுதியாக இருப்பதால் தமிழக வரலாற்று நாயகராகத் திகழும் முத்தமிழறிஞர், முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் முன்னுரையோடு வெளியிட வேண்டும் எனப் பெரிதும் விரும்பினேன். எனமீது கொண்டுள்ள அன்பினாலும் அறிவியல் தமிழ் வளர்ச்சியினபால் உள்ள ஆர்வததினாலும் பல்வேறு பணி பளுவுக்கிடையிலும் நூலைப் படித்து, திறனாய்வுப் போக்கிலான அருமையான முன்னுரை வழங்கிச் சிறப்புத்துள்ள டாகடர் கலைஞர் அவர்கட்கு எஸ்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளேன்.

தமிழ் வளர்ச்சிக்கு, குறிப்பாக அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு ஆர்வமும் ஊக்கமும் அளித்து வரும் பெரியவர் சி. சுப்பிரமணியம் அவர்கள் என் மீதும் என் தமிழ்ப் பணியின் மீதும் அன்பும் அக்கறையும் கொண்டவர்கள். அவர்கள் இந்நூலைப் படித்து மிகச் சிறப்பான வாழ்த்துரை ஒன்றை வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள். அவர்கட்கு என் உளமார்ந்த நன்றியைப் புலப் படுத்திக் கொள்கிறேன்.

என்னை ஓரளவு சரியாகப் புரிந்து கொண்டு என் முயற்சிகளை எல்லாவகையிலும் ஊக்கி அவ்வப்போது அரிய ஆலோசனைகளை வழங்கிவருபவர் மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகனார் அவர்கள். இந்நூலை முழுமையாகக் கண்ணுற்று மிகஅருமையான திறனாய்வை சிறப்புரையாக அளித்து மகிழ்வித்துள்ளார்கள். அவர்கள் அன்புக்கு நான் என்றும் கடப்பாடுடையவன்.

இந்நூலுக்கு மிகச் சிறப்பான அணிந்துரையை வழங்கியுள்ளார் தமிழ் நாடு அரசு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின் துறை அமைச்சர் மாண்புமிகு ஆற்காடு நா. வீராசாமி அவர்கள். இந்நூலைப் பெற்றபோது அவர்கள் வெளிப்படுத்திய மகிழ்ச்சியும் பாராட்டு அன்பு மொழிகளும்மறக்க முடியாதவை; என்றென்றும் நன்றியுடன் நினைவு கூரத்தக்கவை

இந்நூலை விரைவாக அச்சேற்றி வெளிக்கொணர்ந்ததோடு இரண்டாவது தொகுதியை அச்சேற்றும் முயற்சியிலும் முனைப்புடன் ஈடுபட்டுள்ள திருமதி சித்தை சௌதா அவர்கட்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எனது முந்தைய நூல்களைப் போன்றே இதையும் தமிழுலகம் ஏற்றுஊக்குவிக்கும்என்பதில் எனக்கு முழுநம்பிக்கையுண்டு.

மணவை முஸ்தபா
நூலாசிரியர்

முன்னுரை

''சென்றிடுவீர் எட்டுத திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்''

என்ற பாரதியின் கனவை நினைவாக்கும் முயற்சியில் மட்டுமின்றி யுனெஸ்கோ கூரியர் இதழ்வழி தமிழர்தம் மொழி, கலை, பண்பாட்டுத் தொடர்பான செய்திகளை எட்டுத்திக்கும் எடுத்துச் செல்லும் பணியிலும் மணவை முஸ்தபா ஈடுபட்டிருப்பது பாராட்டிற்குரியதாகும்.

ஆங்கில மருத்துவத்தைத் தமிழில் தரும் முயற்சி ஈழத்தில் 1852-லேயே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தொடர்ந்து தமிழ் நாட்டுப்பாடநூல் நிறுவனம் சில நூல்களை வெளியிட்டது. தமிழ்ப்பல்கலைக்கழகமும் இப்பணியில் ஈடுபட்டு வருகிறது 'டேவிட் வெர்னர்' ஆங்கில மருத்துவம் பற்றி எழுதிய நூல் இந்தியச் சூழலுக்கு ஏற்பத் திருத்தங்கள் செய்யப் பெற்றுத் தமிழில் 'டாக்டர் இல்லாத இடத்தில்' என்று 1984 வாக்கில் வெளிவந்துள்ளது.

இத்தகைய பணிகளின் தொடர்ச்சியாக மணவை முஸ்தபா 'மருத்துவக்கலைச்சொல் களஞ்சியம்' என்ற இந்நூலை வல்லுநர்களின் உதவியோடு எழுதியிருக்கிறார். இந்நூல் சொல்லுக்குப் பொருள்தரும் அகராதியாக மட்டுமின்றி, நூலின் பெயருக்கேற்ப விளக்கம் தரும் கலைக்களஞ்சியமாகவும் திகழ்கிறது. சான்றாக ''Viral haemorrhagic fever'' என்பதறகுத் தமிழில் 'கிருமிக் குருதிப் போக்குக் காய்ச்சல்' என்று பொருள் தருவதோடு 'வெப்பமண்டலப் பகுதிகளில் கொசுவினால் அல்லது நச்சு உண்ணிகளால் பரவும் குருதிப் போக்குக் காய்ச்சல்' என்று விளக்கமும் இதில் தரப்பட்டுள்ளது. poliomyelitis - என்பதற்கு 'இளம்பிள்ளைவாதம்' என்பதோடு 'முதுகுத்தண்டின் சாம்பல்நிற உட்பகுதியில் ஏற்படும் அழற்சி. மூளைத் தண்டிலும் முதுகுத்தண்டிலும் உள்ள முன்பக்கக் கொம்புகளின் இயக்க நரம்பணுக்களை ஒரு கொள்ளை நோய்கிருமி தாக்குவதால் இது உண்டாகிறது' என்று விளக்கம் தரப்பட்டுள்ளது. ஆனால் இந்த விளக்கத்துடன் இளம்பிள்ளைக்கு ஐந்து வயதிற்குள் உரியவாறு சொட்டு மருந்து கொடுத்தால் இந்நோயி

விருந்து வருங்காலச் சந்ததியினரைக் காப்பாற்றலாம் என்ற குறிப்பும் இருந்திருந்தால் இன்னும் பயனுடையதாக இருந்திருக்கும். அடுத்த பதிப்புகளில் இத்தகைய ஆலோசனைகளும் இடம் பெற்றால் மக்களுக்கு மேலும் பயன் தரககூடும்.

எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பதை வெறும் முழக்கமாக மட்டுமின்றி செயற்படுத்தும் நோக்கோடு தமிழ்வளர்ச்சிக்கென்று தனியாக ஒரு அமைச்சரை நியமித்து, மொழியியல், மருத்துவம் போன்ற துறைகளையும் தமிழில் கற்கமுடியும் என்பதற்கான பணிகளில் இந்த அரசு ஈடுபட்டு வருகிறது. இத்தகைய பணிகளுக்கு மணவை முஸ்தபாவின 'மருத்துவக் கலைச்சொல் களஞ்சியம்' கைகொடுக்கும்.

16/12/1996

(மு. கருணாநிதி)

முதலமைச்சர்

வாழ்த்துரை

'நேற்று, இன்று, நாளை; நடப்பவை, நடந்தவை நடக்க வேண்டியவை அனைத்தையும் கவனித்துத் தொடர்ச்சியாக. தேவையான முறையில்தான தமிழ் வளர்ச்சியடைய வேண்டும்'

வருடத்திற்கு வருடம் பருவத்திற்கு பருவம் மரம் செடி கொடிகளில் புதுப்புது மலர்கள் பூத்து, காய்கள் காய்த்து, பழங்கள் கனிந்து குலுங்கி மணமும் பயனும் சுவையும் தருவதைப் போலத்தான் தமிழிலும் காலத்தையொட்டிய மாறுதல்களும் கருத்துக்களும் பூத்து, காய்த்து கனிந்து பலன் தர வேண்டியது அவசியம்.

பல்வேறு தமிழ்க் கவிஞர்களாலும், தமிழ் வல்லுனர்களினாலும் இன்றைய தமிழ் மணக்கிறது. பழங்காலத் தமிழ் மணம் மட்டும் போதாது.புதிய மணமும் வேண்டும். காலத்திற்கேற்ற கருத்துக்கள் அனைத்தும் தமிழில் எடுத்துக் கூறும் வன்மையைத் தமிழ் பெற வேண்டும். வேகமாக முன்னேறி வரும் புதுப்புது எண்ணங்கள் கருத்துக்கள் யாவையும் எழுத்தில் வடித்துத் தருவதற்குத் தமிழால் முடியும் எனற அளவிற்கு தமிழ் வளர்ந்தால்தான் தமிழ் வளர்ச்சி அடைநதிருப்பதாகக் கொள்ள முடியும் எனவே தமிழ் நாட்டில் இத்தகைய சக்தியும் ஆர்வமும் கொண்ட பல்வேறு தமிழ் மேதைகள் தோனற வேண்டும். வசனகர்த்தாக்கள், புலவர்கள், ஆராய்ச்சியாளர்கள், வரலாற்று ஆசிரியர்கள், விஞ்ஞானிகள், தத்துவ மேதைகள், அரசியல் தலைவர்கள்,நிர்வாக நிபுணர்கள் எல்லாம் தமிழ் நாட்டில் ஏராளமாகத் தோன்ற வேண்டும். தமிழில் எல்லாக் கருத்துக்களையும் எண்ணங்களையும் உணர்த்த வேண்டும், எடுத்துக் கூற வேண்டும். நூலகள் எழுதி வெளியிட வேண்டும். போதிக்க வேண்டும்.

எல்லாம் தமிழால் முடியும் என்ற நிலைதான் தமிழின் வளர்ச்சி, தமிழனின் வளர்ச்சி தமிழ் நாட்டின் வளர்ச்சி என்பதை நாம் எல்லோரும் உணர வேண்டும் அதே எண்ணம் நம் தமிழ் பெருமக்களிடையே எவ்வளவுக்கெவ்வளவு ஆழமாக உறுதியாகப் பதிகின்றதோ அதே அளவுக்கு தமிழ்நாடு எல்லா வகையிலும் சிறக்கும், மணக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

தமிழகம் தழைததோங்க தமிழால் முடியும் என்ற அந்த நம்பிக்கை எல்லோரிடத்திலும் வளர வேண்டும் என்பதே

எனது விருப்பம்; வேண்டுகோள்.' மேலே கண்டிருப்பது நான் 25-1-62இல் வெளியிட்ட ''தமிழால் முடியும்'' என்ற நூலின் முடிவுரை.

கடந்த 35 ஆண்டுகளில் பல தமிழன்பர்கள் நான் அன்று கண்ட கனவை நனவாக்க முயற்சி எடுத்து சிலர் வெற்றியும் கண்டுள்ளனர். அவர்களில் முதன்மை பெற்று விளங்குபவர் திரு மணவை முஸ்தபா அவர்கள். உலக அளவில் பன் மொழிகளில் வெளிவரும் 'யுனெஸ்கோ கூரியர்' என்ற மாதப் பத்திரிகையைத் தமிழாக்கி தமிழ் மக்களுக்கு வழங்கி வரு கிறார். பல நுண்ணிய நவீன கருத்துக்களையும் தமிழில் கூற முடியும் என்பதை நிரூபித்துக்காட்டி வருகிறார். இதன் மூல மாக புதிய தமிழ்ப் பதங்களையும் உருவாக்கி தமிழின் வளத் தை பெருக்கி வருகிறார். இது மணவை முஸ்தபா அவர்கள் தமிழ்த் தாய்க்கு ஆற்றும் மாதாந்திரப் பணியாக அமைந் துள்ளது.

இதோடு திருப்தி அடையாமல் தமிழில் அறிவியல், தொழில் நுட்ப நூல்களை பலர் எழுதுவதற்கு உதவும் முறையில் பல கலைச்சொல் களஞ்சியங்களை பெருமுயற்சியுடன் சிறந்த முறையில் வெளியிட்டு வருகிறார். தற்போது 'மருத்துவக் கலைச்சொல் களஞ்சிய'த்தை வெளியிட முன் வந்துள்ளார். இக் களஞ்சியத்தின் சிறப்பை மருத்துவ நிபுணர் பேராசிரியர் டாக்டர் லலிதா காமேஸ்வரன் அவர்கள் தன்னுடைய ஆய் வுரையில் விளக்கியுள்ளார். இக்களஞ்சியம் தமிழில் பல மருத் துவ நூல் வெளிவர உதவுமென நம்புகிறேன்.

திரு மணவை முஸ்தபா அவர்கட்கு எனது நல்வாழ்த்துக்கள்

சி. சுப்பிரமணியம்
(முன்னாள் நிதியமைச்சர்
மத்திய அரசு மற்றும்
ஆளுநர், மகாராஷ்டிர
மாநிலம்).

சிறப்புரை

வறுமைச் சூழலுக்கு ஆளான குடும்பத்தில் பிறந்து,
பெற்றோர் செய்தொழிலில் தானும் உழைத்தவாறே,
பள்ளியில் சேர்ந்து படித்திடத் தானே வலியச் சென்று சேர்ந்து,
ஓய்வு வாய்த்த போதெல்லாம் ஏடுகள் பல பயின்று,
இளம் பிள்ளையாய்த் தந்தை பெரியாரின் பேச்சினைக் கேட்டு,
சமூகத்தில் மூட நம்பிக்கைகளை மறுக்கும் துணிவெய்தி,
அறிஞர் அண்ணாவின் உரையினைக் கேட்டு ஊக்கங்கொண்டு,
பள்ளியிலேயே கட்டுரை வரைவதில் வல்லவனாகி,
பின்னர் பேச்சாற்றலும் காட்டிப் பரிசுகள் பல பெற்று,
தமிழறிஞர் பலராலும் பாராட்டப்பட்ட மாணவ மணியாகி,
அண்ணாமலை பல்கலைக் கழகம் சார்ந்து தமிழில் முதுகலைஞனாகி,
தமிழ்த் தொண்டே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு,
வாய்த்த கல்லூரி ஆசிரியர் பணியையும் ஊதியத்தையும் துறந்து
தமிழ் ஆக்கத்திற்கே முழுநேரம் உழைத்திடும் உறுதி பூண்டு,
ஏடுகட்கு எழுதுவதையே வாழ்க்கைத் தொழிலாக ஏற்று,
தென்மொழிகள் புத்தக நிறுவனத்தின் பணியில் சேர்ந்து,
அறிவியல் தொழில்நுட்ப நூல்களும் கலை ஏடுகளும் வெளிவர
மூலநூலைச் சீர்செய்து மெய்ப்புத் திருத்துவதில் திறன்காட்டி,
முத்திங்கள் இதழான 'புத்தக நண்ப'னைச் சீருற வெளியிட்டு,
யுனெஸ்கோவின் அறிவியல் பேழையாம் 'கூரியர்' ஏட்டின்
தமிழ்ப்பதிப்பை வெளியிடும் பணியிலும் பங்கேற்றுத்
தன் மதிநுட்பம் காட்டியும் நிறுவனத்தார் மதிப்பைப் பெற்றும்
பொறுப்பாசிரியராய் உயர்ந்து, கால் நூற்றாண்டாக
அதன் செவிலித் தாயாகச் சீராட்டி வளர்த்து வருபவர்தான்
என் நண்பர் மணவை முஸ்தபா என்னும் தமிழ் மறவர்.

'கூரியர்' ஏட்டினைத் தமிழில் வெளியிடும் சிறப்பினை யுனெஸ்கோ பாராட்டிய செய்தி கண்டு உவந்த தமிழுள்ளங் கொண்ட காயிதேமில்லத் இசுமாயில் சாகிப் வழங்கிய அன்புப் பாராட்டும் வாழ்த்தும் முஸ்தபாவின் தமிழ்த் தொண்டினை மேலும் ஊக்குவித்தது. அவரது அயராத அறிவியல் தமிழ்த் தொண்டினைப் பாராட்டி சிந்தனையாளர் பேரவை சார்பில் தமிழக முதல்வர் கலைஞரால், 'அறிவியல் தமிழ்ச் சிற்பி' என்னும் பாராட்டுப் பட்டமும் வழங்கிட அவரது அரிய தமிழ்த் தொண்டு தமிழுலகின் மதிப்பைப் பெற்றது. தமிழக அரசின் 'கலைமாமணி' விருதும், 'திரு.வி.க.' விருதும் இன்னும் பலவகை பாராட்டுகளையும் பெற்ற பெருமை அவருக்கு உண்டு. பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைத் தாக்கம் அவரை மூடநம்பிக்கையை விரட்டும் அறிவியல் சிந்தனையை வளர்ப்பதிலும், அறிஞர்

அண்ணாவின் கொள்கை வழித்தாக்கம் அறிவியல் சிந்தனை யைத் தமிழில் வளர்ப்பதிலும் அவரை முனைந்திடச் செய்தது.

அவரது குறிக்கோளுக்குக் 'கூரியர்' பொறுப்பு நல்வாய்ப் பாயிற்று. கூரியர் வளர்ச்சிக்கு அவரது தொண்டு நல்வாய்ப் பாயிற்று. இந்த இஸ்லாமியத் தமிழர், தமிழிலும் தேர்ச்சி பெற்றதன்றி, அடிப்படை வடமொழிப் பயிற்சியும் பெற்றவரா வார். எம்மொழிப் பயிற்சியும் எத்துறை அறிவும் திறமையும் எல்லாம் எந்தாய்மொழி தமிழின் ஆக்கத்திற்கே எனும் திண்மை யர் அவர். ''நான நிறையப் படிக்கிறேன், படித்தவைகளைப் பற்றி ஆழச் சிந்திக்கிறேன். அவை என் மனதில் அப்படியே படிந்து விடுகின்றன. எழுதும்போது அவையெல்லாம் அப்படியே என் எழுததில் பதிகின்றன'' என்று தன் எழுத்துத் திறமையை ஐயுற்ற ஆசிரியருக்கு மாணவர் முஸ்தபா கூறிய பதில ''விளையும் பயிர் முளையிலே'' தந்த காட்சி. ''விளைந்த பயிர் முதிர்விலே'' அதன் பயனை உலகு பாராட்டுகிறது.

பேச்சும் எழுத்துமாக மாந்தர் எண்ணத்தை வெளியிட ஏது வாகும தலைசிறந்த கருவி மொழி. அவ்வகையில் மனித உணர்வுகளை, பண்பாடுகளை, ஒழுக்க நெறிகளை, உயர் சிந்தனையை வெளியிடுவதற்கு முழு ஆற்றல் பெற்ற நிறை மொழியாக விளங்குவதே செந்தமிழ். தமிழ்மொழி பேசி வாழ்ந்துவரும் மக்கள நாகரிக வளர்ச்சியும் அறிவியல் சார்நத முயறசிகளிலும் மேம்பட்டு விளங்கிய காலம் வரையில், அவர் தம் மொழியும் அதற்கேறற சொற்களையும் கண்டு வளம் பெறறு வந்துள்ளது. கடந்த பல நூற்றாண்டுகளாகத் தமிழர் களின வாழ்வில் சமய வழிப்பட்ட சிந்தனையும் புராணக் கற்பனையுமே மேம்பட்டு நின்றதால், உலகியல் வாழ்விலும் அறிவியல் எணண வளர்ச்சியிலும பின்தங்கி விட்டனராதலின், தமிழ்மொழியும அறிவியல் துறையில் புத்தாக்கம் பெறும் வாய்ப்பிழந்தது. ஆங்கில நாட்டவர் ஆட்சியின விளைவாக நமது மக்கள் பயில நேரிட்ட ஆங்கிலமே மேல்நாடுகளில் வியத் தகு வளாசசி பெற்றுவந்த அறிவியல் கருத்துககளை நாமறிய வாய்த்ததொரு வாயிலாக அமைந்தது. நமமைப் பொறுத்த வரையில் 'ஆங்கிலமே' புத்துலக அறிவியல் ஒளி வழங்கிய பல கணியாகும்.

எழுத்தறிவு பெறாத மக்கள் பெரும்பான்மையினராக இருந்த நிலையிலும், ஏட்டறிவை வளர்த்துக் கொள்ளும் ஆர் வம பெற முடியாத வறுமைச் சூழலிலும்-அறிவியல் கருத்துக்

கள், விஞ்ஞான விளக்கங்கள் மக்களைச் சென்றடையவில்லை. மக்களின் பலவகை மூடநம்பிக்கைகள் ஒரு வகையில் அறிவு நாட்டத்திற்குத் தடையாயிற்று எனினும், அறிவியல் உண்மை விளக்கங்கள் தாய்மொழியில் விளக்கப்படாமையே அடிப் படைக் காரணமாகும். கடந்த ஐம்பது ஆண்டுகளாகப் பள்ளி மாணவர்கள் அறிவியல் சார்ந்த கல்வியைத் தமிழிலேயே பயில் வதற்கு வழிசெய்யும் முயற்சியாகப் பலநூறு ஏடுகள் தமிழில் வெளிவந்துள்ளன. கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கான உயர்கல்வி ஏடுகளும் பல இயற்றப்பட்டுள்ளன. ஆயினும் பல் கலைக்கழகப் பட்டப்படிப்பு அனைத்தையும் தமிழிலேயே பயிலச் செய்யும் அளவிற்கோ, மாணவர்களே பயில முன்வரும் அளவிற்கோ பல்கலை அறிவியற் பாடங்கள் அனைத்தும் தமிழில் வெளிவருவதற்கான முயற்சி தொடரவேண்டியுள்ளது. மருத்துவம், பொறியியல், உயிரியல், வேதியியல், இயற்பியல், கால்நடை மருத்துவம் முதலான துறைகள் பலவற்றையும் தமிழில் வழங்கச் செய்யும் நோக்கம் நிறைவேற வேண்டு மெனில் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் அறிவியல் ஆய்வுக் கண்டுபிடிப்புகளால் நாள்தோறும் வெளிவரும் புதிய உண்மை களையும் நுணுக்கங்களையும் உடனுக்குடன் மொழிபெயர்ப்புச் செய்து தமிழில் அரங்கேற்றும் கடமையைத் தொடர்ந்து நிறை வேற்ற வேண்டும்.

இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் வகைப்படுத்தப்பட்டி ருந்த அறிவியல் துறைகள் இன்று மேலும் பல கிளைகளாக விரி வடைந்திருப்பது மட்டுமின்றி, கடந்த ஒரு நூற்றாண்டில் அறி வியல் எய்திய வளர்ச்சி விகிதத்தை இந்த நூற்றாண்டின முதல் முப்பது ஆண்டுகளிலேயே எட்டியுள்ளது. இன்றோ அதைப் போன்று மேலும் பல மடங்கு விரைவுடன் அறிவியல் வளர்ந்து வருகின்றது. அது உலகத்தின் பல நாடுகளிலும் (சில மொழி களிலும்) நாளும் உருவாகி வரும் அறிவியல் வளர்ச்சியின் விரைவு என்பதால், நாம் அந்த விரைவுக்கு ஈடுகொடுக்கும் சூழல் இல்லை. எனினும் அவற்றின் பயனை நாமும் உடனுக் குடன் பெறுவதற்கு இன்றியமையாத மொழிபெயர்ப்புத் திறனை மிகப் பெரிய அளவில் மட்டுமின்றி, விரைவாகச் செய் திடவல்ல கணிப்பொறிப் பயன்பாட்டையும் மேற்கொண்டு நிறைவேற்றிட முனைய வேண்டும். அப்படிப்பட்ட வழிமுறை கள் மேற்கொள்ளப்பட்டாலன்றி, நமது முன்னேற்றம் மட்டு மன்றி, வாழ்க்கை நிலையும் மேலும் பின்னடைவுக்கு ஆளாகி; நாம் உலகோரால் கருதப்பட வேண்டாதவர் ஆவோம்.

இதைத் தெளிவாக உணர்ந்தவர் திரு மணவை முஸ்தபா. அறிவியல் கருத்தைத் தமிழில் தர முடியுமா? மாணவர்களின் அறிவியல் பயிற்சி மொழியாகும் தகுதி தமிழுக்கு உண்டா? இருப்பினும் பயன்படுமா? என்றெல்லாம் ஐயுறவு எழுப்பியவர் கட்கெல்லாம்-தகுந்த விடை அளித்தவர் அவர்.

''தமிழில் எந்தத் (அறிவியல்) துறைச் செய்தியையும், சொற்செட்டோடும் பொருட்செறிவோடும் கூற முடியும். எத் தகைய அறிவியல் நுட்பக் கருத்துக்களையும், தெளிவாகவும் திட்பமாகவும் சொல்ல முடியும். ஏனெனில் தமிழ் கடந்தகால மொழி மட்டுமல்ல; நிகழ்கால மொழியுமாகும்; ஆற்றல்மிக்க எதிர்கால மொழியுமாகும். இன்று முதல் தமிழில் எதையும் கூற முடியும் என்பதை வெறும் சொல்லால் அல்ல; செயலால் நிரூபிப்பதே என் வாழ்வின் ஒரே இலட்சியம். ''குறிக்கோள்'' என்று ஒரு மேடையில் திரு. முஸ்தபா கூறிய உறுதிமொழியைச் செயற்படுத்திக் காட்டவே தன்னை முழுவதுமாய் அப்பணிக்கே ஒப்படைத்துக் கொண்டுள்ளவர் அவர்.

எந்தப் பொருள் குறித்த சொல்லாயினும் மக்கள் வழக்கில் இடம்பெற்று அப்பொருளைக் குறிக்கும் ஒரே சொல்லாக இது நிலை பெறுவதைப் பொறுத்தே ஒரே சொல்லாக அமைய லாகும்.

சைக்கிள் - ஈருருளி, மிதிவண்டி எனவும்,

பிளசர் கார் - மகிழுந்து, சீருந்து எனவும்,

பஸ் - பேருந்து, பயணி உந்து எனவும்

டிரெயின - தொடர்வண்டி - நீராவி வண்டி எனவும்,

ஏரோபிளேன் - விமானம், வானூர்தி எனவும்

வழங்குவது போன்ற நிலை இடைக்காலத்தே தொடர்வது இயல்பே. மலேசியாவிலும் சிங்கையிலும் பெட்ரோல் பம்பு எண்ணெய்க்கடை என்றும், டிபன் சாப்பிட்டீர்களா என்று கேட்கப்படும் காலைச் சிற்றுணவைக் குறிக்கும் வகையில் 'பசி யாறியாச்சா' என்றும் கேட்கின்றனர். இது வழக்காற்றலால் ஒரு சொல் ஒரு பொருளை உணர்த்தும் திறன பெறுவதைக் காட்டும். தமிழகத்தில் எண்ணெய்க் கடை, உணவுக்கு வேண்டிய எண்ணெய்களை விற்கும் இடத்தையே குறிக்கும். மேலும் கெரசின் 'மண்ணெண்ணெ' என்று வழங்குவது போன்று பெட்ரோலுக்கும், டீசலுக்கும் தமிழில் தனிச்சொல் அமையவில்லை.

அவைபோன்று மருத்துவத் துறை சார்ந்த Dettol; Tincture; Turpentine; Terramycin முதலான சொற்களுக்கு ஈடாகத் தனித் தமிழ்ச் சொல் இல்லை. அப்படியே வழங்கலும் பொருந்தும். ஆங்கிலத்தில் இடம்பெற்ற அறிவியல் கலைச் சொற்கள் அவை உருக்கொண்ட வகையால் பருப்பொருளை உணர்த்துவதிலும், அப்பொருளையும், இயல்புகளையும் விளைவுகளையும் நுணுக்க மாகப் புலப்படுத்தும் திறமுடையவையாதலின், சொல்லுக்குச் சொல் இதுவே தமிழ்ச்சொல் எனக்கொண்டு வரையறுத்துக் கையாளுதல் மொழிபெயர்ப்பில் எளிதன்று; சொல்லுக்குச் சொல் இது என்னும் நிலை அறிவியல் கலைச் சொல் மொழி பெயர்ப்பில் உருவாகிட, தமிழில் கையாளப்படக் கூடிய கலைச் சொற்களைப் பொருள் வரையறை செய்து முறைப்படுத்து வதும் விரைவு படுத்தப்பட்டாக வேண்டும். A Dictionary of standardised Scientific and Technological terms in Tamil உரு வாக்கப்பட வேண்டியுள்ளது. அந்தப் பணிக்கும் இன்றியமை யாத அடிப்படைப் பணியாக அமைந்திருப்பது இந்தக் களஞ் சியம் ஆகும். ஆங்கிலச் சொற்கள் பல நாம் வழக்கமாக உணரும் பொருளில் இருந்து சற்றே வேறுபட்டதொரு குறிப் பிட்ட பொருளை வழங்குவதாக மருந்துவத் துறையில் பயன் படுத்தப்படுகிறது.

Advancement	-	எனில் மாறுகண் அறுவை சிகிச்சை
Affiliation	-	எனில் (தொடர்புடைய) மூலம் காணல்
Antisocial	-	எனில் மன நலக்கேடு
Aspiration	-	எனில் உறிஞ்சி இழுத்தல்
Contract	-	எனில் நோய்பீடித்தல், தொற்றுதல்
Culture	-	எனில் நுண்ணுயிர் வளப்புப் பண்ணை
Flora	-	எனில் நுண்ணுயிர் படை எனவும்

வழங்குவதையும் அவைபோன்ற பல சொற்களையும் இக்களஞ் சியத்தில் காணலாம். நாம் அடிக்கடி பயன்படுத்தும் சில மருத்துவச் சொற்களின் பொருளை நாம் விளங்கிக் கொள்வ தில்லை. அப்படிப்பட்ட Angina; Angiogram; Angiography x-ray Gamma Rays; virus; Laser முதலான பல சொற்கள் குறிக்கும் பொருளை இந்தக் களஞ்சியம் தெளிவடையச் செய்கிறது.

அறிவியல் ஆய்வு புதிய உண்மைகளையும், பல பொருள் ஆற்றலையும் பயனையும் அதனைப் பயன்கொள்ளும் கருவியை யும் கண்டுபிடிப்பதால் நாள்தோறும் வளர்வது. அப்படிக் கண்டறிந்த மேதைக்கு உலகம் கடமைப்பட்டுள்ளது. எனவே

அவர் பெயராலோ, அவர் சூட்ட நேரிட்ட பெயராலோ அவை வழங்குவது தமிழ் ஆக்கத்திற்குத் தடையல்ல. பொருளின் பெயர்-மருந்துப் பெயர் பலவும் பெயர்ச் சொற்களேயாவதால் அதே பெயர் தமிழிலும் பயன்படுத்தப்படுவது தவறல்ல. ஆனால் அவற்றை எவரும் எதுவெனத் தெளிவதற்கான விளக்கம் தமிழில் தரப்படுவதே தமிழுக்கு ஆற்றவேண்டிய அறிவியல் ஆக்கப்பணியாகும். அந்த அரிய பணியைத் திறம்படவும் தெளிவுடையதாகவும் ஆற்றியுள்ளார் திரு மணவை முஸ்தபா.

தமிழ் மண்ணில் தொன்னாளிலேயே வளர்ந்து, பயன் பட்டு அண்மைக் காலத்தில் தொய்வடைய நேரிட்டுள்ளது சித்தமருத்துவம். அந்த மருத்துவ முறையையும் மருந்து செய்முறைகளையும் விளக்கி எழுந்த செய்யுள் ஏடுகள் பல. அவர்கள் உடற்கூற்றினையும் அதன் இயக்கத்தையும், உள் உறுப்புகளையும் குறித்து அறிந்து பெயரிட்டு வழங்கி யுள்ளனர். ஆங்கிலத்தில் இடம்பெற்ற மருத்துவக் கலைச் சொற்கள் பலவற்றிற்கு ஈடான தமிழ்ச் சொற்களை நாம் அவற்றுள் கண்டறியலாகும். சித்த மருத்துவச் சொற்கள் பல வும், சில நோய்களின் பெயர்களும் முன்னரே கைக்கொள்ளப் பட்டுள்ளன. அந்த வகை முயற்சியில் சித்தமருத்துவக் கல்வி யில் பட்டம் பெற்றவர்கள் ஈடுபடவும், அம்முயற்சியால் மருத்துவ அறிவியல் தழைக்கவும் இந்தக் களஞ்சியம் ஏற்ற தொரு துணையாகும். மேலும் "மருத்துவம், வேதியியல், தாவரஇயல் தொடர்புடைய அறிவியல்" என்னும் பெயருடன் அறிவியல் தமிழ்ச் சொற்களுக்குத் தமிழிலும் ஆங்கி லத்திலும் விளக்கம் தரும் பேரகராதி ஒன்றினை, அறிவாற்ற லில் சிறந்த டி. வி. சாம்பசிவம் பிள்ளை அவர்கள் அரை நூற்றாண்டுக்கு முன்னரே தன் தனி முயற்சியால் உருவாக்கி யுள்ளதை அறிந்தவர் எவரும் நன்றியுடன் போற்றத் தவறார், சித்த மருத்துவ நூற்களிலும் தமிழ் வழக்கிலும் இடம்பெற்ற பெயர்களாக அந்த அகரவரிசையில் காணப்படும் சொற்கள் பலவும், இப்படிப்பட்ட மருத்துவக் களஞ்சியப் பணி விரிவுக் குப் பெரிதுப் பயன்படும் என்று கருதுகிறேன்.

அலோபதி மருத்துவப் பட்டப்படிப்பும் தமிழில் பயிற்று விக்கப்பட வேண்டும் என்று விரும்புவதற்கான நியாயங்கள் வளர்ந்துள்ள இக்காலத்தில், தேர்ந்த மருத்துவ அறிவாற் றலைத் தமிழில் பெறமுடியுமா? என்னும் கேள்வி எழுப்பும் இளைஞர் உலகம் தெளிவடைந்து தன்னம்பிக்கை கொள்வதற் கும் இந்தக் களஞ்சியம் வழிசெய்யும் என்பதில் ஐயமில்லை.

அறிவியல் மருத்துவ நூல் எழுதுவார்க்கும் தகுந்த தமிழ் வழக்கை நாடுவார்க்கும் ஏற்றதொரு கையேடாகவும் இது விளங்கும்.

மேலும் விரித்துரைக்க நான் ஒரு மருத்துவனோ அறிவியல் துறையினனோ அல்ல, சுருங்கச் சொல்வதானால், இந்தக் களஞ்சியம் மருத்துவ அறிவியல் தமிழ் ஆக்கத்திற்கு அமைக்கப் பட்ட புதிய பாதையாகும். இந்தப் பாதையைப் பயன்படுத்தி நடப்போர் பலராகிடின் தமிழில் அறிவியல் கருத்துக்களைக் கையாளும் திறலும் அதனை வளர்க்கும் ஆர்வமும் மேலோங் கும் என்பது உறுதி.

காலமெல்லாம் தமிழ் ஆக்கப் பணியில் ஈடுபட்டுள்ள 'சூரியர்' ஆசிரியரும், சூரிய சிந்தனையாளருமான இதன் ஆசிரி யர் காலம் தேடும் தமிழன் மணவை முஸ்தபா அவர்கள் எவ் வளவு பாராட்டினும் தகும்! அவருக்கு-அவரது தொண்டு தொடர என் வாழ்த்துக்கள்.

27-11-1996
சென்னை-9

க. அன்பழகன்
(கல்வியமைச்சர்,
தமிழ்நாடு அரசு)

அணிந்துரை

தமிழுக்குப் பொற்காலம் பூத்துவரும் காலகட்டத்தில் அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு மேலும் வலுவூட்டும் வகையில் திரு மணவை முஸ்தபாவின் ''மருத்துவக் கலைச் சொல் களஞ்சியம்'' நூல் வெளிவருகிறது. இந்நூலை விரித்தபோது எனக்கு வியப்பும் திகைப்பும் ஏற்பட்டதென்றே கூற வேண்டும். இன்றையச் சூழ்நிலையில் தமிழ் வளர்ச்சிக்கு குறிப்பாக அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவை 'கலைச் சொல்லாக்கம்' எனப் பேசியும் எழுதியும் வருகிறோம். அத்துறையில் பல ஆண்டுகளாக முனைப்புடன் ஈடுபட்டு பலநூறு கலைச் சொற்களை உருவாக்கி, அவற்றை நூலுருவில் வெளியிட்டு வரும் திரு மணவையார், இப்போது மருத்துவக் கலைச் சொல் தொகுப்பை வெளியிடுகிறார். மருத்துவத் துறையின் பதினைந்து பிரிவுகளுக்கான சுமார் பத்தாயிரம் கலைச் சொற்களைக் கொண்டுள்ளது இந்நூல்.

கல்லூரி மட்டத்தில் அறிவியல், தொழில்நுட்ப, மருத்துவப் படிப்புகளில் சில பிரிவுகளை, தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கற்பிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முயற்சி மேற்கொண்டு வரும் வேளையில் இந்நூல் வெளிவருவது மிகவும் பொருத்தமுடையதாகும்.

மருத்துவத்தைத் தமிழில் பயிலும் மாணவர்களுக்கு மட்டுமல்லாது, மருத்துவம்பற்றி நூல் எழுதுவோருக்கு, குறிப்பாக பாடநூல் எழுதும் நூலாசிரியர்கட்குப் பெரிதும் பயனபடும் வகையில் திரு மணவை முஸ்தபா இம் 'மருத்துவக் கலைச் சொல் களஞ்சியம்' நூலை உருவாக்கியுள்ளார், மருத்துவ நூல் எழுதுவோர் எளிதாக இக்கலைச் சொற்களைப் பயன்படுத்தி இடர்ப்பாடின்றி எளிதாக நூல் எழுத இயலும். இந்நூலில் இடம்பெற்றுள்ள மருத்துவத் தமிழ்க் கலைச் சொற்கள் சொற்செட்டும் பொருட்செறிவுமுடையவைகளாக சுருங்கிய வடிவில் அமைந்துள்ளன. ஒரு ஆங்கிலக் கலைச் சொல்லுக்கு ஈடாக, ஒன்றுக்கு மேற்பட்ட தமிழ்க் கலைச் சொற்களைக் கூறுவதன் மூலம் வாசகர்களும், நூல் எழுதுவோர்களும் இடத்திற்கேற்பப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்து

எடுத்து பயன்படுத்த வாய்ப்பளிப்பது இந்நூலின் மற்றொரு சிறப்புத் தன்மையாகும்.

'அகராதி', 'களஞ்சியத்' தன்மைகள் ஒருங்கிணைந்து புது வடிவெடுத்துள்ள இந்நூல், தமிழில் மட்டுமல்லாது இந்திய மொழிகளிலேயே முதலாவதாக வெளிவந்துள்ள 'மருத்துவக் கலைச் சொல் களஞ்சியம்' என்ற சிறப்பைப் பெறுகிறது. மேலும், இந்நூல் தமிழில் பலப்பல மருத்துவ நூல்கள் வெளி வர துணைநிற்கும் அடித்தள நூலாகவும் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

திரு மணவை முஸ்தபா அவர்களுக்கு என் நல்வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது பணி தொடர்ந் திட வேண்டுமெனும் என் விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆற்காடு நா. வீராசாமி

(மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்துறை அமைச்சர்)

ஆய்வுரை

தமிழில் பேச்சுவழக்கில் ''ஒரே கல்லில் இரண்டு மாங்காய்'' என்று பலர் கூறுவதைக் கேட்டிருக்கிறோம். திரு மணவை முஸ்தபா அவர்கள் படைத்திருக்கும் ''மருத்துவக் கலைச்சொல் களஞ்சியம்' என்ற இந்த நூல் அடிப்படையில் ஒரு கலைச்சொல் அகராதியாக மட்டுமின்றி, மருத்துவக் கலைக் களஞ்சியமாகவும் உருப்பெற்றிருக்கிறது. ஆனால், இரண்டு மாங்காய்களுடன் ஆசிரியர் நின்றுவிடவில்லை. மூன்றாவது ஒரு மாங்காய் விழுந்தாலும் விழட்டுமே என்ற கருத்தும் மறைவாக மிளிர்கிறது. அகராதியைப் பயன்படுத்துவோர் சிந்தனைக்கு ஒரு தூண்டு கோலாகவும் இந்நூல் இயங்க வாய்ப்பிருக்கிறது. சுமார் ஐந்நூறு பக்கங்கள் அடங்கிய இந்த மருத்துவஅகராதிக் கலைக் களஞ்சியத் தொகுப்பினை பயன்படுத்துவோர், இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் கலைச் சொற்களைவிட சிறந்த வேறு பொருத்தமான சொறகளைப் புனைய முன்வரின் மூன்றாவது குறிக்கோளும் நிறைவுபெறும்.

இன்றைய மருத்துவ அறிவியல் சொற்களுக்கெல்லாம் தனித் தமிழ்ச் சொற்களை உருவாக்கி, அவைகளைப் பயன்படுத்தி, மருத்துவ நூலாக்கத்தை இயக்கி-மருத்துவம் சார்ந்த கல்வி-மற்றும் பயிற்சி அரங்குகள் அனைத்தும் தமிழில் வர வேண்டும் என்று காத்திருந்தோமானால் அது அண்மைக்காலத்திற்குள் நிறைவேறக் கூடிய கனவாக இருக்காது.

லண்டன் மாநகரத்தில் மாலை நேர வகுப்பில் சேர்ந்து சில காலம் ''அறிவியல் ருசிய மொழி'' பயிற்சி பெற்றேன். நான் ஏற்கெனவே ஆங்கிலத்தில் பழகியிருந்த பல மருத்துவச் சொற்கள் உருசிய மொழி அறிவியல் கட்டுரைகளில் பயன்படுத்தப் படுவதைப் பார்த்தேன். ஆசிரியையாக இருந்த உருசியப் பெண மணியிடம் இதுபற்றிப் பேசினேன். அவர்கள் சொன்ன கருத்தை எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய அவசியம் கருதி கீழே தருகிறேன்: ''உலகில் பல பகுதிகளும் ஓரளவு நாகரிகம் வளர்ச்சியடைந்திருந்த காலத்தில் கருத்துப் புரட்சி, சமுதாயப் புரட்சி இவை ஐரோப்பாக் கண்டத்தில் தோன்றி, அறிவியல் வளர்ச்சிகும் ஆராய்ச்சிக்கும் வித்திட்டன

பலவாறான ஆராய்ச்சிகள் பல நாடுகளில் மேற்கொள்ளப் பட்டன. பல புதிய கண்டுபிடிப்புகள் உலகுக்கு அறிமுகமாயின. இங்கிலாந்து, ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் பல ஆராய்ச்சிகள் நடைபெற்று, புதிய கண்டுபிடிப்புகள் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் பல அறிவியல் சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டு, உலகுக்கு அறிமுக

மாயின. இவைகளை ஆங்கிலச் சொல் என்றோ, செர்மானியச் சொல் என்றோ, சப்பானியச் சொல் என்றோ சொல்லிவிட முடியாது. ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்பையும் யார் முதலில் உலகுக்கு வழங்குகிறார்களோ அவர்கள் அவைகளை விளக்க உருவாக்கிய சொற்களை உலகம் ஏற்றுக் கொள்ள வேண்டும். கண்டுபிடிப்புக்களுக்கு எப்படி அவர்களைச் சொந்தக்காரர்கள் என்று சொல்கிறோமோ அதைப்போலவே அவர்கள் உருவாக்கிய சொற்களும் அவர்களுடைய படைப்புக்களே. அந்தச் சொற்களை அறிவியல் மக்கள் சமுதாயம்-உலகப் பொதுச் சொற்களாகத்தான் கருத வேண்டும்'' என்பதே அந்த அம்மையார் தந்த விளக்கம். இந்த முறையில் ''வைரஸ்,'' ''லேசர்,'' ''பெனிசிலின்,'' ''மார்ஃபின்'' போன்ற பல சொற்களை நாம் அப்படியே பயனபடுத்தினாலும்கூட ஒரு அறிவியல மருத்துவக் களஞ்சியத்தில் அந்த சொற்கள் உருவாகிய அடிப்படை வரலாற்றையும் குறிப்பிட்டு எழுதும்போதுதான அதன பொருளும் விளக்கமும் முழுமையாகக் கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

சோதனைக் குழாய், புதை சாக்கடை, கட்டி, கரப்பான், புற்று, காசம, ஈளை, இருமல் போன்ற பல சொற்கள் ஏற்கெனவே தமிழ் வழக்கில் இருக்கின்றன. இப்படி ஏற்கனவே வழக்கில் இருக்கும சொற்களை இன்றும் அறிவியல கருததுக்களை எடுத்தியம்பும்போது பயனபடுத்துகிறோம். இவை தவிர, முன் பழக்கத்தில் இருந்து, மறைந்துபோன சில தமிழ் அறிவியற் சொற்களைக் கணடுபிடித்து மறுபடியும் அவற்றிற்குப் புத்துயிரூட்டி பழக்கத்திற்குக் கொண்டு வரவேண்டும். திரு மணவை முஸ்தபா அவர்கள் இந்த முயற்சியில் கணிசமான அளவு வெற்றியடைநதிருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும. 'Slough' என்றால் ''பொருக்கு,'' 'Desquamation' என்றால் ''செதிளுதிர்வு'' என்று மிகத் தெளிவாக விளங்கும் வகையில் சொற்களைப் பயன்படுத்தும் முறையைச் சுட்டியிருக்கிறார்கள்.

இது தவிர பழைய சித்த மருததுவ நூல்களில் உடலுறுப்புகளையும் நோய் வகை மருததுவ முறைகள போன்றவற்றைச் சுட்டுவதற்கும் பல சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். நாடி, நரம்பு, நாளம், நோய் என்று பல சொற்களை நாம் எடுத்தாள்கிறோம். அதைப் போலவே இன்னும் பல சொற்கள் இருக்கக் கூடும். சித்த மருத்துவர்களும், தமிழறிஞர்களும் கூட்டாகச் சேர்ந்து ஒரு தமிழ்-ஆங்கில (சித்த) மருத்துவ அகராதியைத் தயாரித்தால் அது நமக்குப் பெரும் பயனளிக்கும். மறைந்த தமிழ் மருத்துவ அறிவியற் சொற்களைத் தெரிந்து கொள்ள முடியும்.

ஆங்கில மருத்துவச் சொற்கள் எப்படி உருவாக்கப்பட்டன என்று அறியும்போது சில சொற்கள் காரணப் பெயர்களாக இருக்கக் காண்கிறோம். அதே காரணங்களுக்கு ஈடான தமிழ்ச் சொற்களைக் கண்டுபிடித்து அவற்றில் இருந்து புதுத்தமிழ் மருத்துவச் சொற்களை உருவாக்கும் வழியும் கடைப்பிடிக்கப் பட்டு, அப்படி சில நல்ல சொற்கள் நமக்குக் கிடைத்திருக் கின்றன. 'Thyroid' என்பதற்கு 'கேடயச் சுரப்பி' என்றும் 'Adrenal' என்பதறகு 'அணணீரகச் சுரப்பி' என்றும் சொற்கள் உருவாக்கப்பட்டு அவை தமிழில பழக்கத்தில் வந்து விட்டன. இவைகளை எல்லாம் கூடியவரை ஆசிரியர் அகராதிக்குள இணைததிருக்கிறார்.

நாட்டுப்புற மக்கள் சில சமயங்களில் அனுபவரீதியில் அவர்களாகவே சில சொற்களை உருவாககி விடுவார்கள். மலேரியா காயச்சலை 'முறைக் காய்ச்சல்' எனறும் தூரத்துப் பார்வையை 'வெள்ளைமுத்து' என்றும 'wrist' என்பதற்கு 'மணிக்கட்டு' எனறும் தமிழ்ச் சமுதாயம் ஏற்கனவேஉருவாக்கி விட்ட சொறகளையும் நாம் தள்ளிவிட முடியாது. அவைகளை நம்முடைய சொற்களஞ்சிய தொகுப்புகளில் சேர்க்கத்தான் வேண்டும்.

ஆங்கிலம் மற்றும் ஐரோப்பிய மொழிகளில் பல புதுச் சொற்களை உருவாக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்போது கிரேக்கம் மற்றும் லத்தீன் மொழியில் தொடர்புடைய பொருள தரும் சொற்களில் வேர்ச் சொற்களை ஆராய்ந்து எடுதது அவற்றில் இருந்து புதுச்சொற்களை உருவாக்கியிருக்கிறார் கள். மார்ஃபின் (morphine) என்னும் மருந்து தூக்கத்தை உண் டாக்கும். கிரேக்கப் புராணத்தில் கனவுக்கு (dreams) பொறுப் பான கடவுள் மார்ஃபியோ. அதனால் இந்த மருந்து கண்டு பிடிக்கப்பட்டவுடன் அதற்கு 'மார்ஃபின்' என்று பெயர் சூட்டி னார் அதைக் கணடுபிடித்த வேதியல் நிபுணர். அப்படிப்பட்ட சொற்கள் அனைத்தையும் காரணச் சொல்லுக்கு ஈடான தமிழ் சொல்லையும் அதன் வேர்ச் சொல்லையும் கண்டுபிடித்து அதி லிருந்து புதிய தமிழ்ச் சொல்லை உருவாக்கலாம் என்று நினைத் தோமானால் அது முடிவே இல்லாத பணியாகிவிடும். அப்படிப் பட்ட பல சொறகளை நாம அப்படியே தமிழில் எழுதி பயன் படுததிக் கொள்ள வேணடிய சூழ்நிலையில்தான இருக்கிறோம். வேறு புதுச் சொற்களை உருவாக்க முடியாத இததகு சூழ்நிலை களில் இன்று ஆங்கிலத்தில் இருக்கும் சொறகளை எடுத்துத் தேவைக்கேற்றபடி பகுதி, விகுதி மாற்றங்களை மட்டும் செய்து கொணடு, தமிழ்ப் பழக்கத்திற்கு அவைகளை கொண்டு வர

லாம் என்று, நாம் உணரும் வகையில் திரு மணவை முஸ்தபா அவர்கள் பல சொற்களை கலைச்சொல் அகராதிக் களஞ்சியத்தில் சேர்த்திருப்பது பாராட்டுதற்குரியது.

இந்த அகராதி களஞ்சியத் தொகுப்பை பயன்படுத்துவதில் பல அரிய வாய்ப்புகளும் சிந்தனைகளும் உருவாக வழியுண்டு.

1. தமிழில் மருத்துவ நூல்கள் எழுத வேண்டும் என்று நினைப்போர் பொருத்தமான தமிழ் மருத்துவக் கலைச் சொற்களைத் தேடிபல அகராதிகளை வைத்துக் கொண்டு நேரம் அனைத்தும் வீணாகாமல் இந்த நூலை அருகில் வைத்துக் கொண்டு விரைவாகக் கருத்துக்களுக்கு உரிய எழுத்து வடிவம் கொடுக்கமுடியும்.

சாதாரண அகராதிகளைப்போல் தமிழில் ஆங்கிலச் சொல்லுக்கு நேர்ச் சொல் மட்டும் தந்து பொறுப்பை முடித்து விடாமல், அதன பொருள் விளக்கததையும் சுருக்கமாகத் தந்திருக்கிறார் ஆசிரியர். மருத்துவத் தமிழ்ச் சொல்லைத் தெரிந்து கொள்வதுடன் சாதாரண மக்கள் அறிவியல் செய்திகளையும் தெரிந்து கொள்ளப் பயன்படும் வகையில் தொகுத்திருக்கிறார். எ.கா. ''Version' என்ற சொல்லுக்கு'நிலைதிருப்பம்' என்று மட்டும் சொல்லி நிறுத்தி விடாமல், ''மகப்பேற்று மருத்துவத்தில் குழந்தை எளிதாக வெளிவரும் பொருட்டு கருப்பைக்குள் குழந்தை கிடக்கும் நிலையை மாற்றி தலைப்பாகம் முதலில் வெளியேறுமாறு செய்தல்'' என்று விளக்கம் தந்திருக்கும் பாங்கு மக்கள் எளிதில் தெரிந்துகொண்டு பொருளுடன், செய்தியையும் உணர்ந்து கொள்ள ஒரு கருவியாய் அமைகிறது. இந்நூல் இப்படி ஆசிரியர் விளக்கி இருப்பதால் எதிர்காலத்தில் சில நல்ல விளைவுகளை எதிர்பார்க்கலாம். இப்படி தரப்பட்டிருக்கும் பல விளக்கங்களை படிக்கும் யாருக்காவது இதை விட சிறப்பான ஒரு தமிழ்ச் சொல்லை உருவாக்கக்கூடிய கறபனை தோனறும்போது தமிழுக்குப் புதுச் சொற்கள் சேரும்; தமிழ் வளம் பெறும்.

2. அகராதியைப் பயன்படுத்தும்போது அதில் தரப்பெற்றிருக்கும் சொல் பொருத்தமானதாக இல்லை எனறு ஒருவருக்குத் தோன்றினாலும இருக்கும் சொற்களில் சிறு மாற்றங்கள் செய்து வலிமை தந்து சொல்லை ஏற்றம் பெறச் செய்யவும் வாய்ப்பிருக்கிறது.

3. முழுவதுமாகவே ஒரு சொல் பொருத்தமற்றது என்று அதைத் தள்ளிவிட்டு சிறந்த ஒரு புதுச் சொல்லை உருவாக்க

ஒரு சிலராவது முயல்வர். அதனாலும் தமிழுக்கு வளம் சேரும்.

எந்த வகையில் பார்த்தாலும் இதைப் பாராட்டுவோர் தொண்டாலும், குறைகூறுவோர் முயறசியாலும் இறுதியில் மேலும் பல புதிய சொற்கள் உருவாகித் தமிழ் வளர வாய்ப் பாகும் என்ற ஒரு காரணத்திற்காகவே ஆசிரியரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பழைய இலக்கியத் தமிழ், இன்றைய பழகு தமிழ்-இவை பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்போருக்கிடையே, புதிய தமிழ், நாளையத் தமிழ், அறிவியல் தமிழ் என்றெல்லாம் சிந்திப்போரும் சிலர் இருக்கிறார்கள். அவர்களில் திரு மணவை முஸ்தபா அவர்களை முதன்மையானவராகத் திகழ்கிறார் எனத தயக்கமின்றிச் சொல்லலாம்.

மருத்துவச் சொற்களை திட்ப நுட்பத்துடன் தமிழில் சொல்ல முடியும் எனக் காட்டியிருப்பதுடன்,சொற்செட்டுடன் பொருட் செறிவும் ஒருசேர அவற்றுடன் இலக்கிய மெருகும் ஏற்றி சுவைபட அறிவியல் செயதிகளைத் தமிழில் சொல்லலாம் என்பதற்கு இநநூல் ஒரு எடுத்துக்காட்டு. மொழிக்கு மட்டும் முதன்மை தராமல் மருத்துவப் பொருளறிவை விளக்க வல்ல துணைக் கருவியாக மொழியைக் கையாளும் பாங்கால், மருத்து வச் செய்திகளை ஆற்றலுடன் ஆசிரியரால் விளக்க முடிகிறது. இதற்காகத் தவிர்க்க முடியாத இடங்களில ஆசிரியர் தனித் தமிழ் போக்கினைக் கூட நழுவ விடவேண்டிய நிலை உருவா கிறது.

மருத்துவப் பல்கலைக் கழகங்களும் வல்லுனர் குழுவும் செயல்பட்டு உருவாக்கப்பட வேண்டிய ஒரு 'கலைச் சொல் தொகுப்பு நூலை' தனியொருவராக முயன்று,பாராட்டத்தக்க முறையில் நிறைவேற்றியிருப்பது தமிழரனைவர்க்கும் மகிழ்ச்சி தரக் கூடியது. துறை வல்லுனர்கள் கூட அவரவர் துறைகளில் தான் சிந்தனையாளராகத் திகழமுடியும். ஆனால் பல மருத்து வப் பிரிவுகளுக்கும் உரிய கலைச் சொலாக்கங்களை கணடிருப் பதன் மூலம் இம்முயற்சியில் திரு மணவை முஸ்தபா அவர்கள் தமிழறிவுடன மருததுவ அறிவையும் எவ்வளவு ஆழ்ந்து நுணு கிக் கற்றுத் தேர்வுபெற்றுளளார் என்பது அனைவரையும் வியக்க வைக்கும்.

ஆங்கிலத்தில் இவ்வகையான அகராதி-களஞ்சிய நூல்கள் பல இருப்பினும் இந்திய மொழிகளுள் இதுவே முதலாவதான

முயற்சியாய் இருக்கக்கூடும் என்று நம்புகிறேன். ஒரு சொல் மூலம், ஒரு மருத்துவச் செய்தியைக் கூறுவதன் மூலம் சாதாரணப் படிப்பறிவு உள்ளவர்களும் மருத்துவ அறிவு பெறவும் அறிவைப் பெருக்கிக் கொள்ளவும் துணை செய்வதாகும்.

இந்நூலின் குறிப்பிடத்தக்க மற்றொரு சிறப்பம்சம் பல இடங்களில் தெளிவான படங்களையும், பட விளக்கங்களையும் கொண்டமைந்திருப்பதாகும். எல்லா வகையிலும் நூல் சிறப்பாக அமைய வேண்டும் என்னும் ஆசிரியரின வேட்கையை இது புலப்படுத்துகிறது. இந்நூல்வழி மேலும் பல மருத்துவத் தமிழ் நூல்கள் பெருமளவில் வர வகை செய்துள்ளார் திரு மணவை முஸ்தபா அவர்கள். அவர் முயற்சி மேலும் தொடர்ந்து வளம் பெற்று அவர் வழியில் இன்னும் பலர் மருத்துவத் தமிழ் நூல்களை இயற்றித் தமிழ் மொழி ஏற்றத்தை விரைவில் எய்த வேண்டும் என்பதே அனைவரின் ஆவலாகவும் இருக்கும். அவர் முயற்சியும் அவரால் தூண்டப்பட்டு மேலும் பலர் செய்யப் போகும் முயற்சிகளும் வெற்றி பெற வேண்டி வாழ்த்துவோம்.

பேராசிரியர் டாக்டர் **லலிதா காமேசுவரன்,**

துணைவேந்தர், ஸ்ரீ ராமச்சந்திரா நிகர் நிலைப் பல்கலைக்கழகம், மற்றும் உறுப்பினர், மாநிலத் திட்டக் குழு, தமிழ்நாடு அரசு.

காணிக்கை

1852ஆம் ஆண்டிலேயே ஈழத்தில்
தமிழில் மருத்துவம் கற்பித்ததோடு,
தமிழில் மருத்துவ நூல் எழுதி வழி
காட்டிய அமெரிக்க மருத்துவ
அறிஞர் ஃபிஷ்கிரீன் அவர்களின்
இனிய நினைவுக்கு இந்நூலை
காணிக்கையாக்குகிறேன்.

நூலாசிரியர்

A

abacterial *:* **நுண்ணுயிரற்ற; பாக்டீரியா சாரா வீக்கம்** *:* *பாக்டீரியாவினால் உண்டாகாத, குறுகிய கால வீக்கத்திற்கான சூழ்நிலையைக் குறிக்கும் சொல்.*

abandon *:* **தங்குதடையிலா மனப்பான்மை; கவலையிலா மனநிலை; உதறித்தள்ளு**

abdomen . **வயிறு; அடிவயிறு; அகடு; உதரம்** *:* *நெஞ்சுக் கூட்டினை அடுத்துக் கீழே உள்ள மிகப் பெரிய உடல் உட்குழிவு. இதனை ஈரலுக்கும் குடலுக்கும் நடுவேயுள்ள இடையீட்டுச் சவ்வுத் திரையானது நெஞ்சுக் கூட்டிலிருந்து பிரிக்கிறது. இது பெரும்பாலும் தசையினாலும், தசைநார் சூழ்ந்த தசைப்பட்டையாலும் சூழப்பட்டுள்ளது. எனவே, இது தனது வடிவளவையும் வடிவத்தையும் மாற்றிக் கொள்ளும் தன்மையுடையதாகும். இது, அடிவயிற்று உட்பகுதியைச் சூழ்ந்துள்ள நீரடங்கிய இரட்டைச் சவ்வுப்பை (வபை) மூலம் உள்வரியிடப்பட்டுள்ளது.*

முனைப்பான அடிவயிறு *இருக்குமாயின் அதனை உடனடியாக அறுவைச் சிகிச்சைமூலம் சீர்படுத்த வேண்டும்.*

தொங்கலான அடிவயிறு *இருக்குமாயின், அதன் முன்புறச் சுவர் சற்றுத தளர்ச்சியாக அமைந்திருக்கும். இதனால், அது பூப்பு மென்மைக்கு மேலே தொங்கிக் கொண்டிருக்கும்.*

படகு வடிவ அடிவயிறு *முன்புறச் சுவர் உட்குழிவுடையதாகும்.*

abdominal· **அடிவயிறு: அடிவயிற்றைச் சார்ந்த.** *நுரையீரல்களுக்குள செல்லும் காற்றின் அளவையும், அவற்றிலிருந்து வெளியேற்றப் படும் காற்றின் அளவையும் அதிகரிப்பதற்காக, ஈரலுக்கும் குடலுக்கும் நடுவேயுள்ள இடையீட்டுச் சவ்வுத் திரை (உந்து சவ்வு) யையும், அடிவயிற்றுத் தசைகளையும் வழக்கத்திற்கு மிகுதியாகப் பயன்படுத்திச் சுவாசித்தல். உடற்பயிற்சிகள் மூலம் வேண்டுமென்றே இவ்வாறு செய்யலாம். நோயின்போது இவ்வாறு செய்தால், அது பற்றாக்குறை ஆக்சிஜனூட்டத்தை ஈடுசெய்கிறது. குதவாயின் அடிவயிற்று அறுவைச் சிகிச்சையை ஒரே சமயத்தில் இரு அறுவை மருத்துவர்கள் செய்கிறார்கள். அடிவயிற்று அறுவைச் சிகிச்சை மூலம் குதவாயை அசையும்படி செய்கிறார்கள். குடலை இரண்டாகப் பிளந்து கட்டியின் மையத்தை நோக்கி அமைக்கிறார்கள். கட்டி மையம் நோக்கிய முனை நிரந்தரப் பெருங்குடல் முனையாக வெளிக்கொணரப்படுகிறது. கட்டியை உடைய மையத்திலிருந்து மிகவும் விலகிய குடலை ஆசன வாயுடன் சேர்த்துத் துன்*

டித்து எடுப்பது, உடலில் விதைப் பைக்கும் கருவாய்க்கும் இடைப் பகுதியில் ஓர் அறுவை செய்வதன் மூலம் முடிக்கப்படுகிறது.

அடிவயிற்று வலி என்பது, குழந்தைகளுக்கு அடிக்கடி உண்டாகும் குடைவு வலியும். குமட்டலும் ஆகும். இது பெரும்பாலும் தலை வலியுடன தொடர்புடையது.

abdomino centesis : **வபை வலி; அடி வயிற்றுத் துளை** : இது, அடி வயிற்று உட்பகுதியைச் சூழ்ந் துள்ள நீரடங்கிய இரட்டைச் சவ் வுப்பை (வபை) உட்குழிவின் பக்க வலியாகும்.

abdomino-pelvis:**வயிற்றையொட் டிய இடுப்பு.**

abdomino perineal : **கீழ் வயிற்று மூல உறுப்புப் பகுதி; அடிவயிற்று விதை-கருவாய இடைப்பகுதி** : அடி வயிறறுககும் உடலில் விதைப் பைக்கும கருவாய்க்கும் இடைப் பட்ட பகுதிக்கும் தொடர்புடைய நோய்.

abduct: **உடல் நடுத் தசைப்பிடிப்பு; விரி** : உடலின நடுப்பகுதியி லிருந்து தசையைப் பிடிததிழுத்தல்

abduction.**உடல்நடுத்தசை இழுப்பு. புறபபெயர்ச்சி; விரிப்பு வெளிவாங் கல**: உடலின நடுப்பகுதியிலிருந்து தசையை பிடிததிழுத்தல.

abductor : **பிடித்திழுக்கும் தசை; வெளிவாங்கி, விரிபபி**. உடலின நடுப்பகுதியிலுள்ள தசையானது சுருங்குவதால், அது உடலின் நடுப் பகுதியிலிருந்து பிடிததிழுக்கும் தசை.

aberrant · **நெறிதிறம்பிய, மாறு பட்ட** இயல்புக்கு மாறுபடுகிற. பொதுவாக, இது தனது இயல் பான நெறியிலிருநது பிறழ்ந்து திரிகிற இரத்த நாளததை அல்லது நரம்பினைக் குறிககிறது.

aberration: **நெறிதிறம்புதல்;திரிபு**· இயல்பான நெறியிலிருந்து பிறழ்ந்து சுற்றித் திரிதல்.

உயிரணுக்களின் இனக்கீற்று களில் (குரோமோசோம்) மர பணுப் பொருள்களில் இயல்புக்கு மாறாக இழப்பீடு, சேர்மானம் அல்லது பரிமாற்றம் ஏற்படுவ தால், மரபணு அழிவு, இருமடிப் பெருக்கம், தலைகீழ் மாற்றம் அல் லது உள்நிலைப் புடைபெயர்ச்சி உண்டாகி மனக்கோளாறுகள் உண்டாதல்.

abiogenesis: **முதல் உயிர்த் தோற் றம்; உயிரிலாப் பிறப்பு** : உயிரற்ற பொருளினின்றும் உயிர்ப்பொருள் தோற்றம் பெற்றதெனும் கோட் பாடு.

abiogenetic தற்பிறப்புள்ள; உயிரற்ற பொருளிலிருந்தே உயிர்ப் பொருள் தோற்றம் பெற்றதெனக் கருதும் கோட்பாடு சார்ந்த கொள்கை.

abiogenist : உயிரற்ற பொருளி லிருந்தே உயிர்ப் பொருள் தோற் றம் பெற்றதெனக் கருதும் கோட் பாட்டாளர்.

abiotrophy: **உயிர்வீரியச் சீர்கேடு**: மரபணுசார்ந்த சிலவகை உயிர ணுக்களின், திசுக்களின உயிர் வீரி யம் உரியகாலத்திற்கு முன்னரே அழிந்துபடுதல் அலலது சீர்கேடுறு தல்.

ablation:**நீக்கல், அகற்றல், உறுப்பு நீககம்** : அறுவைச் சிகிச்சையில் துண்டித்தல அல்லது அறுத்து எடுத்தல் மூலம் உறுப்பினை அகற் றுதல்

abort : **கருச்சிதைவுறுத்தல்**· உரிய காலத்திறகு முன்பு கருவைச் சிதை வுறச் செய்தல்.

abortifacient **கருச்சிதைவிப்பி; கருககுலைப்பான், சிதைவியம்;கருச**

சிதைவுறுத்து மருந்து. உரிய காலத்திற்கு முன்பு கருப்பையிலிருந்து கருவை வெளியேற்றுவதற்குத் தூண்டுகிற அல்லது வினையூக்கம் செய்கிற ஒரு மருந்து.

abortion : கருச்சிதைவு : கருப்பையில் ஒரு கரு ஒருவடிவம் பெறுவதற்கு முன்னரே அதனைக் கருப்பையிலிருந்து வெளியேற்றி விடுதல்.

சூல் கொண்ட முதல் மூன்று மாதத்திற்குள் கரு சிதைதல்.

abortus : சிதைவுற்ற கரு : சிதைவுற்ற அல்லது சிதைவுறுத்தப்பட்ட கரு. இது 500 கிராமுக்கும் குறைவான எடையுடன் இருக்கும். இது இறந்து போனதாகவோ அல்லது உயிர்பிழைக்க இயலாததாகவோ இருக்கும்.

abrasion சிராய்ப்பு; தோற்காயம்: சுரண்டுதல் அல்லது உராய்தல் மூலம் தோலில் அல்லது சளிச்சவ்வில் ஏற்படும் மேற்காயம் அல்லது தோல் உரிதல். தழும்புள்ள திசுவினை நீக்குவதற்கு மருத்துவ முறையில் இது பயன்படுத்தப்படுகிறது.

abreaction : சோக நினைவின் எதிர்விளைவு; அக எதிரியக்கம்; மன உட்கிடக்கைத் திறப்பு : கடந்த கால வேதனை மிகுந்த அனுபவங்கள் நினைவுக்கு வருவதால் ஏற்படும் ஒருவகை உணர்ச்சித்தூண்டுதல். இது, உளவியல் பகுப்பாய்வின்போது அல்லது இலேசான மயக்க நிலையின்போது அல்லது மருந்துகளின் பாதிப்பின்போது பேச்சிலும் செயலிலும் வெளிப்படுகிறது.

abruptioplacenta : கருக்குடை விலகல்.

abscess: சீழ்க்கட்டு; கழலை; கட்டி: சீழ் உருவாக்கும் உயிரிகள் ஓர் உறுப்பெல்லைக்குள் உண்டாக்கும் சீழ்த் தொகுப்பு. இது தீவிரமானதாகவோ நாட்பட்டதாகவோ இருக்கலாம்.

acalulia: கணிப்புத்திறன்குறைபாடு: மிக எளிமையான கணக்குகளைக் கூடச் செய்ய இயலாதிருத்தல்.

acatalasia : செரிபொருள் வினையின்மை : செரிமானப் பொருள் வினையூக்கம் இல்லாதிருப்பதாக மரபணுவியல் முறைப்படித் தீர்மானிக்கப்பட்ட ஒரு குறைபாடு இது வாய்வழியான சீழ்த்தொற்றுக்கு முன்பே எளிதில் ஆளாகும் நிலையை ஊட்டுகிறது.

accident : ஏதம்; விபத்து; திடீர் நேர்வு; தற்செயல் நிகழ்வு.

accidental haemorrhage: திடீர் நேர்வில் குருதி சிந்தல்.

acclimatation : சூழல் ஏற்புடல்: புதிய தட்ப வெப்ப நிலைக்கேற்ப உடல் பழகிக் கொள்ளல்.

acclimation : சூழல் ஏற்பு.

acclimatization: சூழல் இணக்கம்.

accomodation of eye : கண் சீரமைவுத்திறன்: ஏற்பமைவு: ஆடியின் புறக் குவி வினை பொருள்கள் அருகிலிருப்பதை அல்லது தொலைவிலிருப்பதைப் பொறுத்து மாற்றிக் கொள்வதற்குக் கண்ணுக்குள்ள ஆற்றல். இதனால், எப்போதும் பிம்பம் தெளிவாகத் தெரிகிறது.

accouchement : மகப்பேறு : பிள்ளைப்பேறு; பிரசவம்; மகபேற்று நிலை.

accoucheur : பேறுகால மருத்துவர் : பிள்ளைப்பேறு பார்ப்பதில் தேர்ந்தவர்; தாய்மை மருத்துவ வல்லுநர்.

accouheuse : பேறுகால மருத்துவச்சி : தாய்மை மருத்துவத்தில் தேர்ந்த பெண்.

accretion : திரட்சி; வளர்படிமம்; ஒட்டு வளர்ச்சி: ஒரு மையப் பொருளைச் சுற்றிப் பொருள்கள் அதிகரித்தல் அல்லது படிதல்.

பல்லைச் சுற்றிக் கல்லடைப்பு அல்லது ஊத்தை திரள்வது இதற்கு எடுத்துக்காட்டு.

acebutolol : அசிபுட்டோலோல் : ஒழுங்கற்ற நெஞ்சுத் துடிப்பு, இடதுமார்பு வேதனைதரும் இதய நோய், மட்டுமீறி மிக உயர்ந்த இரத்த அழுத்தம் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் குண்டிக்காய்ச் சுரப்பி இயக்கு நீர்த் தடைப்படுத்தும் காரகி.

acellularcementum: பற்காரை.

acephalous : தலையற்ற; கபாலமில்லாத.

acetabuloplasty : பந்துக்கிண்ண மூட்டு அறுவை மருத்துவம்: பிறவியிலேயே உள்ள இடுப்பு எலும்பு இடப் பெயர்ச்சி. இடுப்பு எலும்பு மூட்டு வீக்கம் போன்ற கோளாறுகளில், தொடையெலும்பின் பந்துக் கிண்ண மூட்டு பொருந்துகிற குழிவின் ஆழத்தையும் வடிவையும் மேம்படுத்துவதற்குத் தேவைப் படும் அறுவைச் சிகிச்சை.

acetabulum : பந்துக்கிண்ணக் குழிவு; கிண்ணி : தொடையெலும்பின் பந்துக்கிண்ண மூட்டு பொருந்துகிற குழிவு.

acetate : அசிட்டேட் : அசிட்டிக் அமிலத்தின் (புளிங்காடி) ஓர் உப்பு.

acetazolamide : அசிட்டாசோலமைடு : குறுகிய காலத்திற்கு சிறுநீர்க் கழிவினைத் தூண்டுவதற்காக வாய்வழியே கொடுக்கப்படும் நீர் நீக்கி, கரிமம் சார்ந்த மருந்துப் பொருள். கண்விழி விறைப்பு நோயைக் குணப்படுத்த இது பயன்படுத்தப்படுகிறது.

acetic acid : அசிட்டிக் அமிலம் (புளிங்காடி) : புளிக்காடியில் உள்ள அமிலம். மூன்று வகை அசிட்டிக் அமிலங்கள் மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றன. (1) உறை நிலை அசிட்டிக் அமிலம். இது சில சமயம் கடுங்காரமாகப் பயன் படுத்தப்படுகிறது. (2) சிறுநீர்ச் சோதனைகளில் பயன் படுத்தப்படும் சாதாரண அசிட்டிக் அமிலம். இருமல் மருந்துகளில் அவ்வப்போது பயன்படுத்தப்படுகிறது.

acetoacetic acid : அசிட்டோ அசிட்டிக் அமிலம் : ஒரே உப்பு மூலமுடைய, அதாவது நீக்கி நிரப்பக் கூடிய ஹைட்ரஜன் ஒன்றுடைய ஒரு கரிம அமிலம். மனிதர் உடலில் கொழுப்புப் பொருள்கள் ஆக்சிகரமாகும்போது ஓர் இடைநிலையில் இது உற்பத்தியாகிறது. இரத்தத்தில் அளவுக்கு மேல் காடிப் பொருள் இருத்தல் அல்லது நீரிழிவு போன்ற சில வளர்சிதை மாற்றக் கோளாறுகளில், இது இரத்தில் அளவுக்கு மீறி இருந்து, சிறுநீர் வழியாக வெளியேறுகிறது. சிறுநீர்வெளியேறாமல் இருந்தால், இது அசிட்டோனாக மாறுகிறது. இரத்தத்தில் இந்த அமிலம் அளவுக்குமேல் இருக்குமானால், எல்லா உணர்ச்சியும் இழந்த முழு மயக்க நிலை உண்டாகிறது.

acetohexamide : அசிட்டோஹெக்சாமைடு : வாய வழி உட்கொள்ளப்படும், நீரிழிவு நோய்க்கு எதிரான ஒரு மருந்து.

acetomenaphthone : அசிட்டோமொனாஃப்தோன்:வைட்டமின K எனற ஊட்டச்சததின் ஒரு செயற்கை வடிவம். வாய்வழி உட்கொள்ளும்போது தீவிரமாகச் செயற்படுகிறது. மஞ்சட் காமாலை நோயைக் குணப் படுத்துவதற்கும், நோய்த் தடுப்பு மருத்துவததில் பிறவி இரததப்

போக்குக்கு எதிராகவும் இது பயன்படுத்தப்படுகிறது.

acetonaemia : **அசிட்டோனேமியா; அசிட்டோனிரத்தம் :** *இரத்தத்தில் அசிட்டோன் பொருள்கள் கலந்திருத்தல்.*

acetone : **அசிட்டோன் :** *உயிரியக்கச் சேர்மங்களுடன் கலந்து கரைசலாகும் இயல்புடைய நிறமற்ற படிக நீர்மம்.*

இது எளிதில் தீப்பிடிக்கக்கூடியது.

acetonuria : **அசிட்டோனூரியா; அசிட்டோன் நீரிழிவு :** *சிறுநீரில் அளவுக்கு மேல் அசிட்டோன் பொருள்கள் இருத்தல். இதனால் இனிப்பான மணம் உண்டாகிறது.*

acetylcholine : **அசிட்டில் கோலின்:** *தசையின் ஊனீர் சுரப்பிகளையும், மற்ற நரம்பு உயிரணுக்களையும் வினைபுரியத் தூண்டுவதற்காக நரம்பு முனைகளிலிருந்து வெளியாகும் வேதியியல் பொருள். இதனை வெளியிடும் நரம்பு இழைகள், 'கோலின் இழைகள்' எனப்படும். நரம்பு முனைகளைச் சுற்றிலும், இரத்தத்திலும் பிற திசுக்களிலும் இருக்கும் அசிட்டில் கோலினஸ்டெராஸ் எனப படும் செரிமானப் பொருளினால் (என்சைம்) கோலின், அசிட்டிக் அமிலம் ஆகியவற்றினுள் இது சேர்க்கப்படுகிறது.*

acetylcysteine : **அசிட்டில் சிஸ்டைன்:** *சிறுநீர்ப்பை இழை அழற்சியில் உள்ள குழம்பு நீர்ப்பொருள்.*

acetylsalicylic acid : **அசிட்டில் சாலிசிலிக் அமிலம் :** *உணர்ச்சியின்மை உண்டு பண்ணுகிற அல்லது நோவகற்றும் மருந்தாகப் பெருமளவில் பயன்படுத்தப்படுகிற ஒரு மென்மையான மருந்து. ஏராளமான நோவகற்றும் மாத்திரைகள் தயாரிக்க அடிப்படைப் பொருளாகப் பயன்படுகிறது. 'ஆஸ்பிரின்' என்பது இதன் அதிகாரபூர்வமான பெயர்.*

achalasia: உணவுக் குழாய் அலைவிழப்பு; தளர்விழப்பு; தளராமை : *தசை நரம்புகளைத் தளர்வுறுத்தத் தவறுதல்.*

achilles tendon : **குதிகால் தசைநார்; குதிநாண் :** *குதிகால் எலும்பினுள் செலுத்தப்பட்டுள்ள இளக்க மற்றும் கெண்டைக்கால் புடைப்புத் தசைகளின் தசைநாண் முனை.*

achillotomy : **குதிநாண் வெட்டு.**

achlorhydria ; **ஹைடிரோ குளோரிக் அமிலமின்மை :** *வயிற்றில் ஹைட்ரோ குளோரிக் அமிலம் இலலாதிருத்தல். மரணம் விளைவிக்கும் இரத்தசோகை. இரைப்பைப் புற்று ஆகிய நோய்களின்போது இந்நிலை தோன்றும்.*

acholia : **பித்த நீரின்மை.**

acholuria : **அக்கோலூரியா; பித்தமற்ற நீரிழிவு :** *சிறுநீரில் பித்த நீா நிறமி இல்லாதிருததல்.*

achondroplasia : **எலும்பு வளர்ச்சித் தடை; குறுத்து வளராமை :** *நீண்ட எலும்புகளின் வளர்ச்சி தடைபட்டு, பெரிய தலையும் குறுகிய உறுப்புகளும் கொண்ட குள்ள உருவம உருவாதல். இது பரம்பரையாக வரும் ஒரு பண்பு இதில் அறிவுத்திறன் பாதிக்கப்படுவதில்லை. பாரம்பரியப் பண்பு மேலோங்கியிருக்கிறது.*

achroma : *இயல்புநிறமின்மை.*

achromatopsia : **நிறக்குருடு; நிறப் பாாவையின்மை :** *வண்ணங்களை முழுமையாக அடையாளங் காண இயலாதிருத்தல். இந்நோய் பிடித்தவர்களுக்கு ஒரே நிறம் மட்டுமே கண்ணுக்குப் புலனாகும்.*

achromycin : **அக்ரோமைசின் :** 'டெட்ரோசைக்கிளின்' என்ற

மருந்தின் வாணிக உரிமைப் பெயர்.

achylia : **உணவுப்பால் இன்மை; சாறின்மை; பித்தநீரின்மை :** உடலில் உணவிலிருந்து ஊறும் கொழுப்புக் கலந்த வெள்ளை நிணநீர் இல்லாதிருத்தல்.

acid : **அமிலம் (காடிப் பொருள்). திராவகம் ;** கரைசல்களில் ஹைட்ரஜன அயனிகள் அளவுக்கு மேல் உண்டாக்கக்கூடிய பொருள எதனையும் இது குறிக்கும். இது, நீல லிட்மஸ் தாளை சிவப்பாக மாற்றுகிறது. இதனை ஒரு காரத்தினால் செயலற்றதாக்கிவிடலாம். அப்போது ஓர் உப்பு உண்டாகும். இவ்விரு சோதனைகள் மூலம இதனை அடையாளம் காணலாம்.

acidaemia: **அமில மிகைப்பு; அமிலப் பெருக்க நோய், அமில ரத்தம் .** இரதத்தின் அளவுக்குமீறிய அமிலததன்மை. இதனால், ஹைட்ரஜன் அயனிகள், இயல்புக்குக் குறைந்த PH அளவில் உண்டாகின்றன. காற்றோட்டக் குறைபாடு, கார்பன்டையாக்சைடு பெருக்கம் காரணமாக இது உண்டாகும்போது இதனை 'சுவாச அமிலப் பெருக்கம' என்பர். தசைகளில் லாக்டிக் அமிலம் என்ற காடிப் பொருள் அதிகரிப்பினால இது உணடாகுமானால, அது 'வளர்சிதை மாற்ற அமிலப் பெருக்கம்' என்று கூறப்படும்.

acid-fast; **அமிலம் ஏற்கா தன்மை; அமிலத்துக்கழியாமை.**

acidalcoholfast : **அமில- ஆல்ககால் எதிர்ப்பு ·** பாக்டீரியாவியலில் ஓர் உயிரி மாசுபடும்போது, ஆல்ககாலினாலும், அமிலத்தாலும் அது நிறமிழபபதற்கு எதிர்ப்பு உண்டாகிறது.

acid-base balance . **அமில-உப்பு மூலச் சமநிலை; அமிலக காரச் சமன்பாடு :** இரத்தத்திலும் உடல் நீர்மங்களிலும் அமிலத்திற்கு உப்பு மூலங்களுக்குமிடையில் சமநிலை நிலவுதல்.

acid fast : **அமில எதிர்ப்பு :** பாக்டீரியாவியலில், ஓர் உயிரி மாசுபடும்போது, நீர்த்த அமிலங்கள் பட்டால் நிறம் மாறாமலிருத்தல்.

acidity : **அமிலத் தன்மை :** காடித் தன்மை; புளிப்புத் தன்மை. அமிலத் தன்மையின அளவு PH அளவுகளில் அளவிடப்படுகிறது. PH 6.69 என்பது மிகவும் வலுக் குறைந்த அமிலத்தைக் குறிக்கும். PH1 எனபது ஒரு வலுவான அமிலத்தைக் குறிக்கும்.

acidimeter · **காடிமானி:** காடிப் பொருள்களின் ஆற்றலை அளக்கும் கருவி.

acidosis : **அமிலவேற்றம்; அமிலத் தேக்கம்; குருதி அமிலப் பெருக்கம் :** இரத்தத்தில் காரப் பொருள் குறைந்து, அளவுக்கு மேல் அமிலப் பொருள் (காடிப் பொருள்) இருத்தல். இதனால் இரத்ததில் அமில உப்பு மூலச் சமநிலை சீர்கெடுகிறது.

acid phosphatase test : **அமில ஃபாஸ்ஃபேட்டாஸ சோதனை :** கார்போஹைட்ரேட்டுகளின் ஃபாஸ்ஃபேட் டெஸ்டர்களை ஓர் அமில ஊடகததில் ஒருங்கிணைக்கும் ஒரு செரிமானப் பொருள் (என்சைம்). இந்தப் பொருளின் அளவு இரதததில் அதிகரிக்குமானால் அது ஆண்பால உறுப்புப் பெருஞ்சுரப்பியில் புற்றுநோய் உணடாகியிருப்பதை குறிக்கும்.

aciduria· **அமிலச் சிறுநீர் :** அமிலம் கலந்த சிறுநீர் வெளியேறுதல். மன வளர்ச்சி குன்றியிருப்பதற்கு இது ஒரு காரணம் என்று அண்மை ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

acini : **ஊனீர் சுரப்பு இழைகள் :** சிறுபையுறை போன்ற ஊனீர்

சுரக்கும் உயிரணுக்கள் கொண்ட உடற்பகுதி. பல ஊனீர் சுரப்பு இழைகள் சேர்ந்து ஒரு சிறு இதழாக அமைகின்றன.

acme : நோய் உச்சநிலை; நோயின் நெருக்கடி: ஒரு நோய் மிக முற்றிய உச்சநிலை.

acmesthesia: கூர்தொடுவுணர்வு.

acne, acne vulgaris : முகப்பரு : ஆண்பால் இயக்கு நீர்மங்களின் (ஆண்ட்ரோஜன்) சுற்றோட்டத்தினால் மயிர்ப்பை நெய்மச் சுரப்பிகள் அளவுக்குமேல் தூண்டப்படுவதாலும் மயிர், கொம்பு, நகம் போன்றவை உருவாவதற்கு அடிப்படைப்பொருளாக நிற்கும் வெடியகப் பொருள் (கெராட்டின்) அடைபட்டு, மயிர்ப்பை நெய்மம் (செபம்) அளவுக்கு அதிகமாகச் சேர்வதாலும் உண்டாகும் நிலை. பின்னர், தோல் பாக்டீயாக்கள் அடைபட்ட மயிர்ப்பை நெய்மத்தை அரிப்பு உண்டாக்கும் கொழுப்பு அமிலங்களாக மாற்றுகிறது. இந்த அமிலங்களே வீக்கத்திற்கும், கொப்புளம் உண்டாவதற்கும் காரணமாகின்றன. இதைக் குணப்படுத்த 'மானோசைக்ளின் மருந்தைப் பயன்படுத்தலாம்.

acne vulgaris : முகப்பரு : முகத்தில் ஏற்படும் சிறுசிறு கட்டிகள்.

acology: மருந்து மருத்துவ இயல்: மருந்து தொடர்பான மருத்துவத் துறைத் தனி இயல்

acquired immune deficiency syndrome(AIDS):ஈட்டிய நோய்த் தடைக்காப்புக் குறைபாட்டு நோய் (எய்ட்ஸ்) : இது மனித நோய்த் தடைக்காப்புக குறைபாட்டு நோய்க் கிருமியினால் (Human Immune Deficiency Virus-HIV) உண்டாகிறது. இந்தக் கிருமி, நலிவுறுத்தும் கிருமிக் குழுமத்தைச் சேர்ந்தது. இது நான்கு கட்டங்களாக வகைப்படுத்தப் பட்டுள்ளது:(1)நோய்எதிர்ப்புப்பொருள். இது கிருமியைக் கொண்டுசெல்லும் பொருள். இந்நிலையில் இந்நோய் பீடிக்க 10% வாய்ப்புகள் உண்டு. (2) தொடர்ந்து நீடிக்கும் பொது நிணநீர் கொண்டு செல்லும் பொருள். இந்த நிலையில், புறநோயாளிகளுக்கான சிகிச்சை தேவை. (3) 'எய்ட்ஸ்' நோய் தொடர்புடைய, நெஞ்சுவலி, பேதி, படிப்படியாக அதிகரிக்கும் மனச் சீர்கேடு போன்ற சிக்கல்கள் தோன்றுதல். (4) குணப்படுத்த முடியாத முழுமையான 'எய்ட்ஸ்' நோய்.

acri flavine : அக்ரி ஃபிளேவின் : ஆற்றல் வாய்ந்த நோய் நுண்ம அல்லது நச்சுத் தடைப்பொருள் இது காயங்களுக்கு 1:1000 கரைசலாகவும்; நமைச்சலுக்கு 1:4000 முதல் 1:8000 வரையிலான கரைசலாகவும் பயன்படுத்தப்படுகிறது. அக்ரிஃபிளேவின் பால்மம், மென்மையான, ஒட்டிக் கொள்ளாத காயங்களுக்குக் கட்டுப்போடக் கூடிய ஒரு மருந்து. இதில் திரவ கன்மெழுகு (பாரஃபின) அடங்கியுள்ளது. புரோஃபிளேவின், யூஃபிளேவின் இரண்டும் ஒரே மாதிரியான கூட்டுப் பொருள்கள்.

acrocephalia : கூம்புத்தலை : இது பிறவியிலேயே அமையும் பொருத்தமில்லா உருவக்கேடு. இதில், அம்புத்தலை வடிவ மற்றும் தலை ஓட்டின்மூலம் முகட்டெலும்பையும் பின்முகட்டெலும்பையும் இணைக்கும் பொருத்துவாயானது முதிர்வதற்கு முனபே மூடிக்கொளவதன் காரணமாகத் தலையின் உச்சி கூம்பாகவும், கண்கள் வெளியே துருத்திக் கொண்டும் இருக்கும்.

acrocephalo syndactyly: கூம்புத் தலை வாத்து விரல் : இது பிறவியிலேயே அமையும் ஓர் உருவக்கேடு. இதில், தலையின் உச்சி கூம்பு வடி

விலும், கைவிரல்களும் பாதவிரல் களும் வாத்தின் கால்விரல்களைப் போன்று இடைத் தோலினால் ஒன்றுபட்டிணைந்தும் இருக்கும்.

acrocyanosis : கைகால் நீலம் பூத்தல் : ஆக்சிஜன் சரிவர ஊட்டப்பெறாத இரத்தம் சுழல்வதன் காரணமாகக் கைகால் பகுதிகள் நீலம்பூத்து இருக்கும் நோய் வகை.

acrodermatitis : கைகால் தோல் அழற்சி.

acrodynia : கைகால் சிவப்பு : தோல் நரம்புக் கோளாறில் கை கால் பகுதிகளில் வேதனைதரும் அளவுக்குச் சிவப்பு நிறமாதல்.

acromegaly : உறுப்பு அகற்சி, புற முனைப் பருமன் கபச் சுரப்பி நோய்: குருதியில் கலந்து உறுப்புகள் செயற்படத் தூண்டும் உட்சுரப்பு இயக்குநீர் (ஹார்மோன்) அளவுக்கு மேல் சுரப்பதால், கைகள், பாதங்கள், முகம் ஆகியவை அளவுக்குமீறி அகன்றுவிடுதல். குழந்தைகளிடம் இது அரக்க உருத் தோற்றத்தை உண்டாக்குகிறது.

acromicria ; உறுப்புக் குறுக்கம் : உடல் வளர்ச்சிக்கு முக்கியமாக உதவக்கூடிய தூம்பற்ற மூளை யடிச் சுரப்பியிலிருநது (கபச் சுரப்பி) சுரக்கும் இயக்குநீர் (ஹார்மோன) குறைவாகச் சுரப்பதன் காரணமாக கைகள், கைகால் பாதங்கள் ஆகியவை சிறுத்துவிடுதல் அல்லது குறுகிவிடுதல்.

acromion process : தோள திருகு நோய் : தோள பட்டை எலும்பின ஒரு பகுதி சற்றே பின்புறமாகத் திருகி இருத்தல்.

acroparaesthesia : கை மரமரப்பு : கைகளில் உட்கூச்செறிவும் மரமரப்பும ஏற்படுதல்

acrylics : உறுப்பு ஒட்டுப்பசைகள் : உடம்பில் செயறகை உறுப்புகள் இணைப்பதற்குப் பயன்படுத்தப் படும், வெப்பத்தால் இளகிக் குளிரில் இறுகும் இயல்புடைய பொருள்களின் தொகுதி.

acthar gel : அக்தார் கூழ் : இது கூழ்ப்போன்ற அரைத் திணமக் கரைசலாகவுள்ள ஓர் "அக்த" தயாரிப்பு. இது குண்டிக் காய்ச் சுரப்பியின் புறப்பகுதியில் நோய் நாடல் சோதனைக்குப் பயன்படுத் தப்படுகிறது. தோல்படை நோய், தோல் தடிப்பு நோய், கீல்வாத முட்டு வீக்கம், ஒவ்வாமை நோய்கள ஆகியவற்றைக் குணப்படுத்தவும் பயனபடுகிறது.

actified: ஆகடிஃபெட் : சியூடோஃபெட்ரின், டிரிப்ரோலிடின் ஆகியவை அடங்கிய மருந்து.

acting out : துன்ப உணர்வுக் குறைப்பு : உணர்ச்சி வயப்பட்ட மனவேதனையைக் குறைத்தல். இதில் முநதையமனக்குழப்பங்கள், மனப்போக்குகள் மூலம் தன்னை யறியாமல் ஏற்பட்டுவிட்ட தடுமாற்றமான அல்லது மூர்க்கத்தன மான நடத்தையிலிருந்து நோயாளி விடுவிக்கப்படுகிறார்.

actinic dermatoses : ஒளிக் கதிர்த் தோல் அழற்சி : தோலின் புறவூதா ஒளிபட்டால் இயல்புக்கு மீறி எளிதில் புணபடக் கூடியதாக இருத்தல்.

actinism : ஒளிக்கதிர் வேதியியல் விளைவு: ஒளிக்கதிரினால், முக்கியமாகப் புறவூதா ஒளிக் கதிரினால் உணடாகும் வேதியியல் விளைவு.

actinobiology : ஒளிக்கதிர் உயிரியல், ஒளிய உயிரியல்: உயிா வாழும் உயிரிகளின் மீது ஒளிக்கதிரியக்கத் தின விளைவுகளை ஆராய்தல்.

actinomyces : கதிர்வீச்சுப் பாக்டீரியா : ஒளிக்கதிா வீசும் பூசண வலையைக கொண்ட பூஞ்சனம் போனற ஒட்டுண்ணிப் பாக்டீரியா. இதிலிருநது பல்வேறு நோய்

எதிர்ப்பு மருந்துகள் தயாரிக்கப் படுகின்றன.

actinomycosis ; கதிர்வீச்சு ஒட்டுயிர்க் காளான் நோய் : ஒளிக்கதிர் வீசும் ஒட்டுயிர்க் காளானால் தோன்றும் ஒருவகை நோய். இந்நோய், நுரையீரல், தாடை, குடல் ஆகிய உறுப்புகளை முக்கியமாகப் பாதிக்கிறது. இந்நோயினால், சிறுமணிகள் போன்ற கட்டிகள் தோன்றி, அவற்றிலிருந்து மஞ்சள் நிறத் கந்தகக் குருணைகள் அடங்கிய திண்மையான எண்ணெய்ப் பசையுள்ள சீழ் வெளிப்படுகிறது

actinotherapy : ஒளி மருத்துவம் : அகச்சிவப்பு அலலது புறவூதா ஒளிக்கதிா பாய்ச்சி நோய் தீர்க்கும் மருத்துவ முறை.

action : உறுப்பு இயக்கம் : உடலின ஏதேனுமொரு பகுதியின் செயல்முறை அல்லது அலுவற்பணி, எதிரெதிர்க் குழுமத்தின் இயக்கத்தைக் கட்டுப்படுத்தும் தசைகள் எதிர்வினையைச் செய்கின்றன. ஒருவரின சொந்த விருப்பத்திற்கு எதிரான கட்டாய வினையை இன்னொரு தசை செய்கிறது. சொந்த விருப்பின்பேரிலன்றி, திடீர் உந்துதல் காரணமாகத் தூணடுவிசை வினை நடைபெறுகிறது. இணைவிழைச்சு போன்ற நரம்புக் கிளாச்சிக்கு இணங்கத் தன்னியல்பாகத் தூண்டப்படும் உள்ளுறுப்பியக்கச் செயல்கள் தன்னியல்பு வினைகளாகும். தனியாகச் செயல்புரிய முடியாமல், இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட தசைகளின் ஒத்துழைப்பினால நடைபெறுவது இணைவு வினையாகும்.

actisorb : சீழ் நாற்றத் தடுப்புப் பையுறை : சீழ் கசியும் காயங்களிலிருந்து நாற்றத்தைத தடுப்பதற்கான செயல் தூண்டல் பெற்ற கரிப்பையுறைகள்.

actin : ஆக்டின் : தசை உயிரணுக்களிலுள்ள புரதங்களில் ஒன்று. இது, தசைச் சுருக்கம் உண்டாக்குவதற்காகத் தசைப்பற்றுடன் எதிர்வினை புரிகிறது.

activator : செயலூக்கி : ஏதேனும் ஒன்று செயற்படத் தூண்டுகிற ஒரு பொருள். இது இயக்குநீர் (ஹார்மோன்) சுரப்பு, செரிமானப் பொருள். (என்சைம்) உற்பத்தி போன்ற செயல்களை ஊக்குவிக்கிறது.

active : செயலூக்கம் : நோயாளி தனது நரம்புத் தசை இயக்கமுறையைப் பயனபடுத்திச் சுறுசுறுப்பான இயக்கங்களை உண்டாக்குதல். சிககலான அமைப்பான்களை கொண்ட ஒரு மருந்திலுள்ள ஓர் அமைப்பான் இத்தகைய செயலூக்கத்தை உண்டாக்குகிறது. நச்சுப் பூண்டிலிருந்து எடுக்கப்படும் "பெல்லாடோனனா" என்ற மருந்திலுள்ள 'அட்ரோப்பின்' ஒரு செயலூக்கியாகும்.

actrapid : அக்ட்ராப்பிட் : இயல் நிலை இன்சுலின ஊசி மருந்தின வாணிகப் பெயர்.

acuity: கூர்மைத் திறன் : கூர்மை, தெளிவு, நுண்மை தெளிவாகவும் கூர்மையாகவும் கேட்குந்திறன் கேட்புக் கூர்மைத் திறனாகும். இசைக்கவடு, தாழ்குரல்,ஒலிமானி ஆகியவற்றின்மூலம் இத்திறன் சோதனை செய்யப்படுகிறது.குழந்தைகளின கேட்புக் கூர்மைத் திறனைச் சோதிக்க மணிஒலி. கிலுகிலுப்பை, தேக்கரண்டி பயன்படுத்தப்படுகின்றன. கண்விழியின் பின்புறத்திரையில் உருக்காட்சிகள் தெளிவாக ஒருமுகப்பட்டு விழுவதைப் பொறுத்துப் பார்வைக் கூர்மைத் திறன் சோதனை செய்யப்படுகிறது. இந்தச் சோதனை பெரும்பாலும் 6 மீட்டர் தூரத்திலிருந்து ஸ்னெலன் சோதனை முறைப்படி செய்யப்படுகிறது.

acupan : அக்குபன் : 'நெஃபோபன்' என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

acupressure; ஊசியழுத்த முறை : ஊசியினால் நரம்பு மற்றும் குருதி நாளத்தை அழுத்தி நோயைக் குணப்படுத்தும் முறை.

acupuncture : அலகுமுனை மருத்துவம் : உடலின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஊசியால் துளையிட்டு நோயைக் குணப்படுத்தும் அல்லது நோயைக் குறைக்கும் மருத்துவ முறை.

acyanosis : நீலநிறமின்மை : ஆக்சிஜன் சரிவர ஊட்டப்படாத இரத்தம் சுழல்வதனால் தோல் நீலநிறமாகக் காணப்படா திருத்தல்.

acyanotic : நீலத்தோலின்மை : பிறவியிலேயே உண்டாகும் நெஞ்சுப்பை நாளக் கோளாறுகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுதறகுப் பயனபடும் சொல்.

acyclovir : அசிக்ளோவிர் தேமல், படர்தாமரை போன்ற தோல் நோய்களைக் குணப்படுத்துவதற்குப் பயன்படும் கிருமி ஒழிப்பு மருந்து.

acystia : சவ்வுப்பை இன்மை; பித்த சிறுநீர்ப்பையின்மை : பித்த நீர்ப்பை, சிறுநீர்ப்பை ஆகியவை பிறவியிலேயே இல்லா திருத்தல்

adam's apple: குரல்வளைக் கூர்; குரல்வளை மணி : கழுத்தின் முன் பகுதியில், குறிப்பாகவயதுவந்த ஆண்களிடம், உள்ள குரல்வளைப்படைப்பு இது, சங்குகளைக குறுத்தெலும்பின் இரு சிறகங்களும சந்திக்கு மிடத்தில் அமைந்துள்ளது.

குரல்வளை மணி

adaptability:தகவமைப்புத் திறன்: தழுவு திறன் : நிலைமைக்குத் தக்கபடி உளவியல் முறையிலும், உடலியல் முறையிலும் தன்னை மாற்றியமைத்துக் கொள்வதற்கான திறன்.

adaption : பழக்கும் திறமை; ஏற்புத் திறன்; தகைவு; தகவமைப்பு : உயிர்கள் தங்களைச் சுற்றியுள்ள சூழ்நிலைக்கொப்ப தங்களைத் தகவமைத்துக் கொள்ளும் திறன். இஃது உறுப்பு, நிறம் முதலானவற்றில் அமையும்.

adcortyl : அட்கார்ட்டில் : 'டிரியாம்சினலோன' என்ற மருநதின் வாணிகப் பெயர். வாய்ப்புண்களுக்குப் பயனபடுத்தப்படும் ஒரு வகைப் பற்பசை.

addiction ; தீய பழக்கத்திற்கு அடிமையாதல்; பழக்க அடிமைத்தனம்; பழக்கப்பற்று . போதை மருந்துகள், ஆல்ககால், மதுபானம், புகையிலை போன்ற போதைப்பொருள்களை உணணும் கெட்ட பழக்கத்திற்கு அடிமையாகி விடுதல். இந்தப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் தங்களைக் கட்டுப்படுத்த முடியாமல் அந்தப் போதைப் பொருள்களை நாடிச் செல்கிறார்கள்

addition : சேர்த்தல்.

addison's disease : அடிசன் நோய் (குருதிச் சோர்வு நோய்) தோல் கருமை நோய் : வரவரத் தளர்ச்சியூட்டும் குருதிச் சோர்வுடன் மேனியில் ஊதா நிறம் படர்விக்கும் ஒரு நோய். குண்டிக்காய்ச் சுரப்பியின் புறப்பகுதியில் கார்ட்டிசால், ஆல்டோஸ்டெரோன் என்னும் சுரப்புப் பொருள் குறைவாகச் சுரப்பதால் இது உண்டாகிறது. இதனால், இரத்தத்தின் அளவு குறைதல், இரத்த அழுத்தம் குறைதல், எடைக் குறைவு, நரம்புத் தளர்ச்சி, தசை நலிவு,

இரைப்பை-குடல் கோளாறுகள், தோல் ஊதாநிறமாக மாறுதல் போன்ற கோளாறுகள் உண்டா கின்றன.

adduction: தசை மையைச் சுரிப்பு; தசை மைய ஒடுக்கம்; அகப்பெயர்ச்சி: உடலின் தசை நார்கள் உடலின மையம் நோக்கி இழுத்தல்

adductor : மையச் சுரிப்புத் தசை நார் : உடல் உறுப்பு எதனையும் உடலின் மைய அச்சினை நோக்கி இழுக்கும் இயல்புடைய தசைநார்.

adductor muscle : மைய இழுப்புத் தசை : முன்னிழுக்கும் இயல புடைய தசைநார் கையை உடலை நோக்கிக் கொண்டு வருவது இந் தத் தசைதான்.

adenectomy : சிகிச்சை நிண நீர் கணு நீக்கம்; சுரப்பி நீக்கம்: ஒரு சுரப்பியை அறுவைச் சிகிச்சை செய்து அகற்றுதல்.

adenitis : சுரப்பி அழற்சி : ஒரு சுரப்பியில் அல்லது நிணநீர்க் கரணையில் ஏற்படும் வீக்கம். மூச்சுக் குழாய் நிணநீர்க் கரணை களில் ஏற்படும் வீக்கம் அல்லது அழற்சி.

adenocarcinoma: சுரப்பிப் புற்று; சுரப்பித் திசுப் புற்று : சுரப்பித் திசுக்களில் ஏற்படும் புற்றுநோய். இதனை "சுரப்பிப் பிளவை" என் றும் கூறுவர்.

adenoidectomy : மூக்கடித் தசை அறுவைச் சிகிச்சை ; மூக்கடித் தசைத் திசுவின் அழற்சியை அறு வைச் சிகிச்சை மூலம் அகற்றுதல்

adenoids : மூக்கடித் தசை வளர்ச்சி (மூக்கடியான்) : மூக்கடித் தசையிலுள்ள நிணநீர்ச் சுரப்பித் தசை மிகையான வளர்ச்சி. இத னால் மூச்சடைப்பு ஏற்படுவ துடன், கேட்கும் திறனும் குறை யும்.

adenoma: சுரப்பிக் கட்டி; கோளப் புற்று; சிறு சுரப்பிக் கட்டி : சுரப் பித் திசுக்களில் உண்டாகும் கழ லைக் கட்டி

adenomyoma: கருப்பைக் கழலை: தசையும் சுரப்பிக் கூறுகளும் கொண்ட கழலைக் கட்டி பொது வாக இது கருப்பையில் தோன் றும் கடுமையல்லாத வளர்ச்சி யைக் குறிக்கும்.

adenopathy : சுரப்பி நோய்; நிண நீர் சுரப்பிப் பெருக்கம்; கோள நோய் : ஒரு சுரப்பியில், குறிப்பாக ஒரு நிண நீர்ச்சுரப்பியில் உண்டா கும் ஏதேனும் நோய்.

adenosinase : அடினோசின் சிதைப்பி.

adenosclerosis : சுரப்பி கெட்டி யாகல்; கோளத் தடிமன் : ஒரு சுரப்பி, வீக்கத்துடன் அல்லது வீக்கமின்றி, கட்டியாகி விடுதல். இழைமத் திசுவின் பதிலீடு அல்லது சுண்ணக மயமாக்குதல் காரண மாக ஒரு சுரப்பு கடினமாகிறது.

adenosine diphosphate (ADP): அடினோசின் டைஃபாஸ்ஃபேட் : (ADP) : உயிரணுவிற்குள் நடை பெறும் எரியாற்றல் பரிமகற்றத் தில் உள்ளடங்கிய உயிர்மங்களா லான ஒரு முக்கியமாக வளர்சிதை மாற்றப் பொருள். இந்தப் பொருளின் மூலமாக உயிரணுவில் வேதியியல் எரியாற்றல் பாது காத்து வைக்கப்படுகிறது.

adenosine triphosphate (ATP): அடினோசின் டிரைஃபாஸ்ஃபேட் (ATP) : நடுத்தரமான மிகு எரி யாற்றல் கூட்டுப் பொருள். இது அடினோசின் டைஃபாஸ்ஃபேட் டினை நீரிடைச் சேர்மப் பிரிப்பு செய்யும் போது பயனுள்ள வேதி யியல் எரியாற்றலை வெளியிடு கிறது. உயிர்ப்பொருள் கட்டமைப் பின்போது இந்தப் பொருள உண் டாகிறது .

adenosis : சுரப்பி நோய்

adenotonsillectomy : மூக்கடியான்-அடிநாத்தசை அறுவைச் சிகிச்சை : *மூக்கடிததசை வளர்ச்சி (மூக்கடியான்) அடிநாத்தசை மூலம் அகற்றுதல்.*

adenovirus : சுரப்பிக் கிருமிகள் : *ஊனீர்ச்சுரப்பு சார்ந்த 47 தனித் தனி வகைகள் அடங்கிய கிருமி களைக் கொண்ட ஒரு டிஎன்ஏ* (DNA) *குழுமம். இந்த 47 வகை களில் மனிதனிடம் 31 வகைகள் கணடுபிடிக்கப்பட்டுள்ளன. பல் வேறு விலங்கினங்களில் வேறு பல வகைகள் காணப்படுகினறன. இவற்றுள் சில மேல் மூச்சுக் கோளாறுகளையும், வேறு சில சீத சனனி அலலது சளிககாய்ச்சல எனனும் நிமோனியாக் காய்ச் சலையும், இன்னும் சில கொம்பு-நக அழற்சியையும் உண்டாக்கு கின்றன.*

adermine : ஆடாமின் : *பைரி டாகசின்;* **வைட்டமின்** B_6

adexolin : அடக்சோலின் : A, D **வைட்டமின்களின் கலவை.**

adhesion : இருவேறு உறுப் பிணைவு, ஒட்டுகை : *வீங்கிய இரு வேறு உறுபபுகளின் இயற்கைக்கு மாறுபட்ட இணைப்பு, பிளவுற்ற பரபபு இணைவு அடிவயிற்றில் இத்தகைய பிணைவினால் குடலில் அடைப்பு ஏற்படும். மூட்டுகளில் இது போனற பிணைவு, அசை வைக் கட்டுப்படுததுகிறது. இரு மார்பு வரிப் பரப்புகளிடையிலான பிணைவு காரணமாக மார்புக் கூடு முழுமையாக இணைவதைத் தடுக்கிறது.*

adipose : உயிரினக்கொழுப்பு; கொழுப்பார்ந்த; கொழுப்பேறிய. *கொழுப்புக் குரிய; கொழுத்த.*

உயிரினக் கொழுப்புத திசு அடங் கிய உயிரணுக்களில் வெள்ளை அல்லது பழுப்பு நிறக் கொழுப்பு அடங்கியுள்ளது.

adiposity : கொழுப்புடைமை; கொழுப் பேற்றம் : *உடலில் அள வுக்கு மேல் கொழுப்பு சேர்தல்.*

aditus : அணுகுவாய்; அணுகுவழி: *உடல் உறுப்புகளின் அமைப்பு பற்றி ஆராயும் உடல் உட்கூறிய லில், அணுகுவதற்கான நுழைவா யில் அல்லது திறப்பு வழி.*

adjuvant. துணை மருந்து; துணை யம் : *மறற மருந்துகளின வினை களுக்கு உதவி புரிவதற்காகச் சேர்க்கப்படும் துணை மருந்துப் பொருள். முதன்மையான மருத்து வச் சிகிச்சையுடன கூட இநதத துணை மருநது அளிக்கப்படுகிறது*

adler's theory : ஆட்லர் கோட் பாடு : *"வலுவான தாழ்மை உணர்ச்சி காரணமாகவே நரம்புக் கோளாறுகள் உண்டாகின்றன" என்னும் கோட்பாடு.*

adnexa : அண்டை உறுப்பு : *உட லில் ஓர் உறுப்புக்கு மிக நெருக்க மாகவுள்ள உறுப்புகள் அல்லது கட்டமைப்புகள்.*

adrenal function tests : அண் ணீரகச் சுரப்பிச் சோதனை : *குண் டிக்காய்ச் சுரப்பியின புறப்பகுதி இயல்புக்கு மீறுதலாகச் செயறபடு வதைக் கண்டறிவதற்கான ஒரு சோதனை. இதில் நிண நீர் சுரக் கும் அளவினைக் கணக்கிடுவதன் மூலம் இது கண்டறியப்படுகிறது.*

adrenalectomy : அணணீரகச் சுரப்பி அறுவைச் சிகிச்சை ; *கட்டி ஏற்பட்டுளள ஒரு குணடிக்காய்ச் சுரப்பியை அகற்றுவதறகான அறு வைச் சிகிச்சை. குண்டிக்காய்ச் சுரப்பிகள் இரண்டையுமே அகற்றி விட்டால், உட்சுரப்பு இயக்குநீர் களை (ஹார்மோனகள) உட் செலுத்துதல் வேண்டும்.*

adrenaline : அண்ணீரகச் சுரப்பு நீர் : *பாலூட்டிகளில் குண்*

டிக்காய்ச் சுரப்பியிலிருந்து ஊறும் இயக்குநீர் (ஹார்மோன்). இந்த நீர் உடலை போராடுவதற்கு(அல்) தப்பிப்பதற்குத் தயார் செய்கிறது. இந்த இயக்குநீரைச் செயற்கை முறையிலும் தயாரிக்கலாம். புறத் தூண்டுதலால் உயிர்மம் முழுதும் எதிரியங்குறுவதில்,இந்த நீர் பானமாக உட்கொள்ளப்படுகிறது. நிணநீருசியால் உண்டாகும் கொப்புளக் காய்ச்சல், மூச்சுத்தடையுடன் கூடிய ஈளை நோய் (ஆஸ்த்மா), காஞ் சொறித் தடிப்பு போன்ற ஒவ்வாமை நோய்களுக்கு ஊசிமூலம் இது செலுத்தப்படுகிறது. உறுப்பெல்லை உணர்வு நீக்கக் கரைசல்களில்,விரவிப் பரவுவதைக் குறைப்பதற்காகவும், உணர்விழப்பு நிலையை நீடிப்பதற்காகவும் இது சேர்க்கப்படுகிறது. இரத்தவோட்டச் சீர்குலைவு நிலைகளில்,மிகவும நீர்த்த கரைசலாக (1:1,00,000) மெதுவாக, மெதுவாக நரய்பு மூலம் செலுத்தப்படுகிறது.

adrenal glands : **அண்ணீரகச் சுரப்பி; அண்ணீரகச் சுரப்பி :** இவை சிறுநீரகத்தை அடுத்துள்ள சுரப்பிகள். இந்தச் சுரப்பியின் உட்பகுதியான உட்கருவிலிருந்து ஊறும் ''அட்ரினலின்'' எனப்படும் சுரப்பு நீர் இரத்தத்தில் பாய்ந்து, திடீர் அச்சம் அல்லது கோபத்தின் போது விரைவானஇதயத்துடிப்பு, வெறுத்த முகம் போன்ற விளைவுகளை உண்டாக்குகிறது. இந்தச் சுரப்பியின் புறப்பகுதி உள்ளுறுப்பு மாறுதல்களை உண்டாக்குகிறது. பறவைகளிலும் மீன்களிலுமுள்ள இந்தச் சுரப்பிகள் முறறிலும் வேறானவை.

adrenergic : **அண்ணீரகச் சுரப்பு நீர் நரம்புகள் :** குண்டிக்காய்ச் சுரப்பு நீரையோ, குண்டிக்காய்ச் சுரப்பு அல்லாத இயக்குநீரையோ அவற்றின் சேர்முனையங்களிலிருந்து வெளியேற்றுகிற நரம்புகள். பெரும்பாலான பரிவு நரம்புகள், குண்டிக்காய்ச் சுரப்பு அல்லாத இயக்குநீரை வெளியேற்றுகின்றன.

adrenogenital syndrome : **உட்சுரப்புக் கோளாறு; அண்ணீரகப் பாலுறுப்பு நோய்த் தொகுப்பு :** குண்டிக்காய்ச் சுரப்பியின் புறப்பகுதியின் இயல்புக்கு மீறிய நடவடிக்கையின் விளைவாகப் பிறவியிலேயே தோன்றும் ஒருவகை உட்சுரப்புக் கோளாறு இதனால் ஒரு பெண்குழந்தையிடம் விரிவடைந்த மகளிர் கந்தும், உதட்டு இதழ்கள் இணைந்தும் காணப்படலாம். அப்போது அந்தக் குழந்தையை ஆண் என்று தவறாகக் கருத இடம் ஏற்படும். ஆண் குழந்தையிடம் வெளிப்படையான மயிரும், விரிவடைந்த ஆண குறியும் காணப்படும். ஆண் பெண் குழந்தைகள் இரண்டிலும் விரைவான வளர்ச்சியும். திணணிய தசைப் பற்றும். மிகுந்த எலும்பு முதிர்ச்சியும் காணப்படும்.

adriamycin : **அட்ரியாமைசின் :** 'டாக்சோரூபிக்கன்' என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

adsorbents : (ஆவி)உறிஞ்சிகள் : தங்கள் மேற்பரப்புகளிலுள்ள வாயுக்களை அல்லது கரைசல் பொருள்களை உறிஞ்சிக் கொள்கிற திடப்பொருள்கள். கட்டைக்கரி, வாயுக்களை உறிஞ்சி, ஒரு மணம் அகற்றுப் பொருளாகச் செயற்படுகிறது. காவோன் பாக்டீரியா நச்சுப் பொருள்களையும் பிற நச்சுப் பொருள்களையும் உறிஞ்சிக் கொள்கிறது. இதனால் இது உணவு நஞ்சூட்டு நேர்வுகளில் பயன்படுத்தப்படுகிறது.

adsorption : **ஆவியை உறிஞ்சுதல்; புறத்துறிஞ்சல்; மேலீர்ப்பு :** தனது மேறபரப்பிலுள்ள ஒரு

வாயுவை, திரவத்தை அல்லது திடப பொருளை கரைசலாகவோ மிதவலாகவோ உறிஞ்சி வைத்துக் கொள்வதற்கு ஒரு பொருளுக்கு உள்ள பணபு.

advancement : **மாறுகண் அறு வைச் சிகிச்சை :** மாறுகண் பாா வையைச் (ஒருக்கணிப்புப் பார் வை) சீர்படுத்துவதற்காகச் செய் யப்படும் அறுவைச் சிகிச்சை. இதில், ஒருக்கணிப்புத் திசைக்கு எதிரிலுள்ள தசை நாண்களைப் பிரிதெடுத்து. வெள் விழிக் கோளத்தின் புறத் தோலுடன் பொருத்தித தைதது விடுகிறார் கள்.

adventitia : **குருதி நாளப் புறத் தோல்; குருதிக் குழாய் வெளிபபட லம் :** இதயததிலிருந்து குருதியைக் கொணடு செல்லும் நாளமாகிய தமனியின் அல்லது இதயததிற்குள் குருதியைக் கொண்டு செல்லும் நாளமாகிய சிரையின் மேலுறைத் தோல்.

adynamia : **உயிராற்றல் அழிவு** படுகிடை நிலை.

A E G : **காற்று மூளை இயக்கப் பதிவு :** மூளையின் இயககத்தை ஒரு காற்றுக் கருவிமூலம் பதிவு செய்தல்.

aeration : **காற்றூட்டல்; காற் றூட்டம் :** உயிர்ப்பு மூலம் குருதி யுடன ஆக்சிஜன கலக்கும்படி செய் தல்.

aerobe : **ஆக்சிஜன் உயிரி; உயிர் வளி உயிரிகள; காற்றுயிரி :** உயிர் வாழ்வதறகு ஆகசிஜன் (O_2) தேவைப்படுகிற ஓர் நுணணுயிரி

aerobiology : **ஆக்சிஜன் உயிரி யல், உயிாவளி உயிரியல :** காற்றில கலந்து மிதககும் நுண்ணணு உயி ரிகள், நுண்ணணுச் சிதல்கள் ஆகி யலை பற்றிய உயிரியல் துறை.

aerobiosis : **ஆக்சிஜன் வழி உயிர் வாழ்வு :** ஆக்சிஜனைக் சுவாசித்து உயிா வாழ்க்கை நடததுதல்.

aerogenous : **காற்று உற்பத்தி செய்கிற.**

aerophagia, aerophagy : **காற்று மிகை ஈாப்பு :** காறறினை அள வுககு மிகுதியாக உள்ளே ஈர்த்துக் கொள்ளுதல்.

aerophobia : **கடுங்காற்றச்சம்.**

aerosol : **தூசிப்படலம்; புழுதிப் படலம் ;** வாயுநிலையில் மிக நுண் ணிய துகள்கள கலந்திருத்தல் இத னால் சில தொற்று நோய்கள் பரவுகின்றன. எடுததுக்காட்டாக, தும்முதல் மூலம் தொற்று நோய் பரவுகிறது. காற்றிலுள்ள தூசி யில் நுணமங்களை (கிருமிகள்) நீக்குவதற்கும், பூச்சிகளைக் கட் டுப்படுததுவதற்தும், தோலில் தெளிப்பதற்கும சிலவகை தூசித் தெளிப்பான்கள் பயன்படுகின்றன.

aerosporin ; **ஏரோஸ்போரின் :** 'பாலிமிக்சின்-B' எனற மருநதின் வாணிகப் பெயர்.

aesculapius : **ஏஸ்கலபியஸ :** ரோ மானியரின் மருத்துவக் கடவுள்.

aetiology. **நோய்முதல் ஆய்வியல்; நோயக்காரண ஆயவியல்; நோய்க் காரணவியல் :** நோய்க் காரணம் பற்றி ஆராயும் அறிவியல் துறை.

afebrile : **காய்ச்சலின்மை; காய்ச் சலற்ற.**

affect : **செயல் தூண்டுணர்ச்சி; தாக்கம் :** உடல் உணர்ச்சியின் இன்ப துன்பநிலை.

affection : **உணர்வு நிலை;** உடல் நிலை பாதிக்கப்பட்டிருக்கும் போது உண்டாகும் மனப்போக்கு, மனநிலை அல்லது உணாச்சி.

affective : **உணர்ச்சி சார்ந்த :** உடல் நிலை பாதிக்கப்பட்டிருக் கும்போது உண்டாகும் மனப்

போக்குகள் அல்லது உணர்ச்சிகள் தொடர்பான 'உணர்ச்சிப் பைத்தியம்' என்று ஒரு முக்கிய மன நிலைக் கோளாறாகும். பாதிக்கப்பட்டவர்கள், கடுமையான உணர்ச்சி அல்லது மனநிலைச் சீர்குலைவுக்கு ஆளாகிறார்கள்.

afferent : **அகமுக நோக்கிய; நடு ஈர்ப்புவழி** : நரம்பு மையங்களுக்கு உணர்ச்சிகளைக் கொண்டு சேர்க்கிற.

afferent nerve : **உணர்ச்சி நரம்பு**: மூளைக்கும் தண்டுவடத்திறகும் உணர்ச்சிகளைக் கொண்டு சேர்க்கிற நரம்பு.

affiliation : **மூலம் காண்டல்** : முறையற்ற வகையில் பிறந்த குழந்தையைத் தந்தை இன்னாரென்று கண்டுபிடித்து அவரிடம் சேர்த்தல்.

affinity : **இணைப்பீர்ப்பு; நாட்டம்**: இரண்டு பொருள்கள் வேதியியல் முறையில் இணைதல். எடுத்துக் காட்டு: ஆக்சிஜன், சிவப்பணு (ஹேமோகுளோபின்).

afibrinogenaemia : **குருதி உறையாமை** : குருதிக்கட்டு (இரத்தம உறைதல்) இன்மை என்னும் ஒரு கடுமையான நோய். இரத்தத்தை இறுகி உறையச் செய்யும் பொருள் போதிய அளவு இல்லாமையால் இது உண்டாகிறது.

aflatoxin : **புற்றுத் தூண்டு பொருள்; பூசண நச்சு** ; வெதுவெதுப்பும் ஈரமும் வாய்ந்த தட்பவெப்ப நிலைகளில் சேமித்துவைக்கப் பட்டிருக்கும் நிலக்கடலை, கார்போஹைட்ரேட் உணவுகள் ஆகியவற்றைப் பாதிக்கக்கூடிய ஒருவகைப் பூஞ்சைக் காளானிலுள்ள புற்றுநோய் வளரத் தூண்டுதல் செய்யும் பொருளின் வளர்சிதை மாற்றப் பொருளகள் இவற்றில் நான்கு முக்கிய பிரிவுகள உண்டு B_1, B_2, G_1, G_2.

மனிதரின் நுரையீரல் உயிரணுக்களில் இந்தப பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் போதுமான செரிமானப் பொருள்கள் (என்சைம்) உள்ளன. இது நுரையீரல் புற்று நோய் பிடிப்பதற்கு முன் அறிகுறியாகும்.

afterbirth : **பேறு கால இளங்கொடி; நச்சுக் கொடி** : குழந்தை பிறந்த பின்பு கருப்பையிலிருந்து வெளியேற்றப்படும் நச்சுக் கொடி மற்றும் சவ்வுகள்.

கருவில் வளரும் குழந்தை தாயிடமிருந்து உணவும் ஆக்சிஜனும் பெறுவதற்கு உதவும் உறுப்பு. குழந்தை பிறந்த பின்பு இது தாயிடமிருந்து வெளியே வந்து விடும். இதனுடன் குழந்தை உருவாகும் கருப்பையின் உள்படலமும் வெளிவரும். இவை இரண்டும் சேர்ந்து பேறுகால இளங்கொடி எனப்படும்.

aftercare : **பிற்காப்பு; மருத்துவத்துக்குப் பின் பேணுவது** : நோயிலிருநது குணமடைந்து உடல்தேறி நலம் பெறும் போதும், மீண்டும் பழைய வாழ்க்கைக்குத் திரும்பும் போதும் அளிக்கப்படும பிற்பாதுகாப்பு அல்லது கவனிப்பு.

after effect · **பின் விளைவு** : உயிர்த்தசை இயக்கத்தைத் தூண்டும் பொருளின் தொடக்க விளைவுக்குப் பின்பு ஏற்படும் ஓர் எதிரெதிர் விளைவு.

after image : **பின் தோற்றம்; மீள் வடிவம்**: ஒரு பொருளைப் பார்த்த பின்பு மனத்தில் சிறிது நேரம் பதிந்திருக்கும் உருவம். இந்த உருவம் அதன இயல்பான முனைப்பு வண்ணங்களுடன இருக்குமானால் அது 'நேர் பின்தோற்றம்' எனப்படும். ஒளிரும் பகுதிகள் கருப்பாகவும், கரும் பகுதிகள் ஒளிர்வுடனும் இருக்குமாயின் அது 'எதிர் பின்தோற்றம்' எனப்படும்.

afterpains : பின்நோவு : மகப்பேற்றுக்குப் பின்பு, கருப்பைத் தசை இழைகள் சுருங்குவதன் காரணமாக உண்டாகும் நோவு.

agalactia : தாய்ப்பால் சுரப்பின்மை; பால் சுரக்காமை : மகப்பேற்றுக்குப் பிறகு தாயிடம் தாய்ப்பால் சுரக்காமல் இருத்தல் அல்லது குறைவாகச் சுரத்தல்.

agammaglobulinaemia : தொற்று நோய்த் தடைக் காப்பின்மை : இரத்தத்தில் "காமா குளோபுலின்' இல்லாதிருத்தல். இதனால் நோய்த் தொற்றினைத் தடுக்கும் திறன் இல்லாமல் போகிறது.

aganglionosis : நரம்புக் கணு இன்மை : மங்கிய சாம்பல் நிற மாப் பொருள் நிரம்பிய நரம்பு மண்டல மையங்கள் இல்லாதிருத தல்.

agar : கடற்கோரைக் கூழ் (அகர்; அகர்-அகர்) : கடறகோரை வகைகளிலிருந்து செய்யப்படும் கூழ். இது, பேதி மருந்தாகவும், பாக்டீரியா வளர்ப்புக் கலவை நீர்மத்தைத் திடமாக்கும் பொருளாகவும் பயன்படுகிறது.

age : முதுமை; அகவை; வயது : வாழ்நாள்; ஆயுள்; வயது; பருவம் முதிர்ச்சி. இது உள்ள முதிர்ச்சி; உடல் முதிர்ச்சி என இருவகைப் படும்.

ageism : முதிர்ச்சி வகைப்பாடு : கால வரிசைப்படியான வயதுக் கிணங்க மக்களை வகைப்படுதது தல். ஆக்க முறையான அம்சங் களை விட்டு விட்டு, எதிர்மறை அம்சங்களுக்கு அளவுக்குமேல் முக்கியத்துவம் கொடுத்தல்.

agenesis : குறை வளர்ச்சி; உறுப்பு வடிவு பெறாமை, முழுமை பெறாத குறையுற்ற வளர்ச்சி.

agglutination : குருதியணு ஒட்டுத்திரள; ஒட்டுத் திரட்சி: முன்னர் நோயுற்ற ஆளின் அல்லது விலங்கின் குருதி நிணநீரில் (சீரம்) உருவான 'அணு ஒட்டுப் பொருள்கள்' (அக்ளுட்டின்) எனப்படும் நோய் எதிர்ப்புப் பொருள்களினால் பாக்டீரியா, சிவப்பணுக்கள் அல்லது உயிர்த்தற்காப்புப் பொருள் துகளகள் ஒன்றாகத் திரண்டு கெட்டியாதல். ஆய்வுக் கூடங்களில் பல பரிசோதனைகளுக்கு இது அடிப்படையாக அமைந்துள்ளது.

agglutinogen : அணு ஒட்டுப் பொருள்; ஒட்டுத் திரட்டி : அணு ஒட்டு பொருள்கள்' (அக்ளுட்டின்) எனப்படும் நோய் எதிர்ப்புப் பொருள்களின் உற்பத்தியைத் தூண்டுகிற ஓர் உயிர்த் தற்காப்புப் பொருள் (ஆண்டிஜன்). இது தொற்று நோய்களிலிருந்து முழுத் தடைக் காப்பு அளிக்கப் பயன் படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டு: ஊசி மருந்திலுள்ள இறந்து போன பாக்டீயா; நச்சுக் கொல்லி களிலுள்ள தனிவகைப் புரதம்.

aggressin . பாக்டீரியா முனைப்பு வினை : சிலவகைப் பாக்டீரியாக் கள்; தங்களின ஒட்டுண்ணி ஆதார விலங்குகளுக்கு எதிரான தங்களது வலுத்தாகுதல் நடவடிக்கையைத் தீவிரப்படுததுவதற்காக உற்பத்தி செய்யும் ஒருவகை வளர்சிதை மாறறப் பொருள்

aggression: வலுச்சண்டையுணர்வு; தன்முனைப்பு நடத்தை : வலியச் சண்டைக்குச் செலல முனையத் தூண்டும் கோப உணர்வு அல்லது பகையுணர்வு.

agitated depression : கிளர்வூட்டும் மனச்சோர்வு : கடும மனச் சோர்வும் அச்சவுணர்வும் நிறைந்த இடையறாத மனவுலைவு நிலை. எளிதில் உணர்ச்சி வயப்படும் பைத்திய நிலையில் இது உணடாகிறது.

aglossia : நாக்கு இன்மை

aglutination : **குருதியணு ஒட்டுத் திரள்; ஒட்டுத் திரட்சி :** *இரத்தச் சிவப்பணுக்கள் அல்லது பாக்டீரி யா போன்ற மிக நுண்ணிய உயிரி கள் கண்ணுக்குப் புலனாகும் வகையில் ஒன்றாக ஒட்டித் திரள் தல்.*

agnathia : **தாடை வளர்ச்சிக் குறைபாடு; கீழ்த் தாடையின்மை :** *தாடை வளர்சசியின்றியோ முழு மையாக வளர்ச்சியடையாமலோ இருத்தல்.*

agnosia : **புலனுணர்வு இன்மை; அறிந்துணராமை; நுண்ணுணர் விழப்பு ;** *புலனுணர்வுகளை உணர இயலாதிருத்தல்.*

agonist : **தசைச் சுருக்கம் :** *ஒரு தசை, இயங்குவதற்காகச் சுருங்கு தல்.*

agoraphobia : **திடல் மருட்சி; வெட்டவெளி அச்சம் :** *பெரிய, திறந்த வெளிகளில் இருக்கும் போது தன்னந்தனியாகி விட் டோம் என ஏற்படும பீதியுணர்வு அல்லது அச்சம்.*

agranulocyte : **குருதி நுண்மம் :** *சிறுமணிகளாக இராத குருதியின் நிறமற்ற நுண்மம்.*

agranulocytosis : **குருதி நுண்மக் குறைபாடு :** *குருதி நுணமங்கள் வெகுவாகக் குறைந்திருத்தல் அல் லது முழுவதுமாக இல்லாதிருத் தல்.*

agraphia : **எழுத்தாளர் விசிப்பு :** *மூளை நோய் அல்லது படுகாயம் காரணமாக எழுதும் ஆற்றலை இழத்தல்.*

ague : **முறைக் காய்ச்சல்; குளிர் காய்ச்சல் :** *குளிர் காய்ச்சல்; மலேரியாக் காய்ச்சல்.*

aids : **எய்ட்ஸ் (AIDS) ;** *ஈட்டிய நோய்த் தடைக் காப்புக் குறை பாட்டு நோய் (Acquired Immune Deficiency Syndrome).*

aids-related complex : **எய்ட்ஸ் சார்ந்த கோளாறுகள் ;** *வெளிப் படையான ஈட்டிய நோய்த் தடைக்காப்பு நோயைவிடச் சற்று கடுமை குன்றிய நோய் நிலை. எயட்ஸ் நோய்க் கிருமிகள் பீடித்த சிலரிடம் இந்தக் கோளாறு காணப்படும். இதன் நோய்க்குறி புலனாகாமல் இருக்கும்; அல்லது இது காய்ச்சலின் தன்மையுடைய தாக இருக்கும்.*

air : **காற்று :** *பூமியைச் சூழ்ந் திருக்கும் வாயுமணடலமாக உரு வாகியுள்ள வாயுக் கலவை. இதில் 78% நைட்ரஜன், 20% ஆக்சிஜன், 0.4% கார்பன்டையாக்சைடு, 1% ஆர்கான், ஓசோன், நியோன், ஹீலியம் முதலியவற்றின் சிறுசிறு அளவுகள், பல்வேறு அளவிலான நீராவி ஆகியவை அடங்கியுள்ளன.*

air-born : **ஏர்-பான் :** *'அசிட்டில் சிஸ்டைன்' என்பதன் வாணிகப் பெயர்.*

akathisia : **கட்டளை நரம்புத் துடிப்பு; உட்கார இயலாமை :** *தசை இயக்கத்தைத் தூண்டுவதற்கான கட்டளை நரம்பு (இயக்கு தசை) எப்போதும் படபடவெனத் துடித் துக் கொண்டிருக்கும் நிலை. நரம்புக் கோளாறுகளுக்கான மருந்துகளின் பக்க விளைவு காரணமாக இது உண்டாகக் கூடும்.*

akinetic : , **இயக்கமின்மை; அசை வற்ற :** *உடல் இயக்கம் இல்லா திருக்கும் நிலை.*

akineton : **அக்கினட்டோன் :** *'பைபெரிடன்' என்ற மருந்தின் வாணிகப் பெயர்.*

aldactide : **அல்டாக்டைடு :** *ஸ்பிரோனோலாக்டோன் ஹைட ரோ ஃபுளூமிதியாசைடு ஆகியவை அடங்கிய மருந்தின் வாணிகப் பெயர்.*

alastrim . சின்னம்மை : பெரியம்மை நோயை விடச் சற்று கடுமை குறைந்த அம்மை நோய்.

albinism : பாண்டு நோய்· வெள்ளுடல் நோய்; பெரு வெண்மை : பிறவியிலேயே இயல்பான நிறமிகள் உடலில் இல்லாதிருத்தல். இதனால், தோலும் முடியும் வெண்மையாகவும், கண்கள் இளஞ்சிவப்பு நிறமாகவும் இருக்கும். இவர்களுக்கு ஒளிரும் வெளிச்சத்தைப் பார்த்தால கண்கூசும். விலங்குகளுக்கும் இந்நோய் பிடிப்பதுண்டு.

albino (albinass) . பாண்டு நோயாளி; வெண்குட்டம் : பாண்டு நோய்க்கு ஆளானவர்.

albumin : கருப்புரதம்; வெண்கரு· வெணபுரதம் : நீரில கரையகக் கூடியதும், கரைந்து வெப்பத்தால் கட்டியாகக் கூடியதுமான புரதவகை குருதி நிணநீர்க் கருப்புரதம் எனபபடும் குருதி நிணநீரின் முதன்மையான புரதம்

albuminuria . வெண்ணீர் நோய்; வெணபுரத நீரிழிவு : சிறுநீரில் கருப்புரதம் இருககும நோய். இந்நிலை தறகாலிகமாக இருநது முழுவதுமாக நீங்கி விடலாம்

albumose : அல்புமோஸ் : கருப்புரதத்தைப் போன்ற ஒரு பொருள். ஆனால, இது வெப்பத்தினால கட்டியாவதில்லை

albumosuria : அல்புமோசூரியா : சிறுநீரில் அலபுமோஸ இருக்கும் நோய்.

alcohol : ஆல்ககால்; வெறியம், சாராயச் சத்து, மது . சர்ககரைக் கலவைகளிலிருந்து வடித்தெடுக்கப் படும் வெறியச் சத்து இயககம்-உணர்ச்சி-சுவை ஆகிய மூன்றையும் தூண்டுகிற நரம்புவலி, மற்றும அடங்காத வலி ஆகியவற்றைக் குணப்படுததுவதறகு இது அரிதாக ஊசி மருந்தாகப் பயன் படுத்தப்படுகிறது. இயலபு நீக்கிய ஆல்ககால் (90% ஆல்ககால்), 'டிங்சர்' என்ற சாராயக் கரைசல் மருந்து தயாரிக்கப் பயனபடுகிறது. 95% ஆல்ககால் கொணட மெதிலேற்றிய சாராயம், புறப் பூச்சு மருந்தாகப் பயன்படுகிறது. நோவகறறும் மருந்தாகவும் இது பயன்படுததப்படுகிறது.

alcohol fast : நிறம் நீக்கி : பாக்டீரியாவியலில், நிறங்கெடும் போது, ஆல்ககாலினால் நிறம் நீங்குவதை எதிர்க்கும் ஓர் உயிரி.

alcoholism ஆல்ககால் நச்சுத் தன்மை; சாராய மயககம் ஆல்ககாலுக்கு (போதைப் பொருள) அடிமையாவதன் விளைவாக உணடாகும் நச்சுத் தனமை. இது முற்றி விடும்போது, நரமபு மணடலமும், சீரண மண்டலமும் சீர்குலைகிறது.

alcoholuria · ஆல்ககாலூரியா; சிறு நீரில சாராயம் : சிறுநீரில் ஆலககால இருத்தல். ஆல்ககால் அருந்திய பின ஊர்தி ஓட்டுவதற்குத தகு நிலையுள்ளதா என்பதற்கான ஒரு சோதனைக்கு இது அடிப்படையாகும்

alcopar· அல்கோபார்: பெஃபினியம் ஹைட்ரோக்சைனாஃதோயேட் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

alcuronium . அல்குரோனியம் : ஒரு செயற்கைத் தசைத் தளர்வுறுத்துப் பொருள். இது 'டியூபோகுராரின' என்ற மருந்தினைப் போனற பண்புகளையுடையது. ஆனால், சிறிதளவுகளில் உட்கொள்வதால மட்டுமே இது பயனளிககும்.

aldactone A : அல்டாக்டோன் A : ஸ்பிரோனோலாக்டோன் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

aldolase test : அல்டோலாஸ் சோதனை : ஒரு செரிமானப் பொருள் (என்சைம்) சோதனை. தசையைப் பாதிக்கும் நோயில், குருதி நிணநீர்ச் செரிமானப் பொருள் அல்டோலாஸ் அதிக மாக இருக்கும்.

aldomet : அல்டோமெட்: 'மெதில் டோப்பா' என்ற மருந்தின் வாணி கப் பெயர்.

aldosterone : அல்டோஸ்டெ ரோன் இயக்கு நீர் : குண்டிக்காய்ச் சுரப்பிப் புறப்பகுதியில் சுரக்கும் நீர். இது, சிறுசிரக நுண்குழாய் கள்மீது செயற்படுவதன்மூலம் மின்பகுப்பு வளர்சிதை மாற்றத் தை ஒழுங்குபடுத்துகிறது. இத னால் இது கனிமச் சுரப்புப் பொருள் என்று அழைக்கப்படு கிறது. இது பொட்டாசியம் வெளி யேறுவதை அதிகரிக்கிறது. சோடி யம் குளோரைடைச் சேமித்து வைக்கிறது.

aldosteronism : அல்டோஸ் டெரோன் மிகைப்பு நோய்: அண்ணீ ரகச் சுரப்பிப் புறப்பகுதியில் ஏற் படும் கட்டிகளினால் உண்டாகும் நிலை. இதில், மின்பகுப்பு நீர்மப் பொருள் சமநிலையின்மை ஏற் பட்டு, முறை நரப்பிசிவு உண்டா கிறது.

aleudrin : அலூட்ரின் : ஐசோப் ரனலின் சல்ஃபேட் என்ற மருந் தின் வாணிகப் பெயர்.

alexia : சொற்குருடு; படித்துப் புரி யும் உணர்வின்மை : பார்க்கும் சொற்களை உணர்ந்து வாசிக்க முடியாத மூளை நோய். கல்வியின் தொடக்க நிலையில் ஏற்படும் மூளை நைவுப்புண அல்லது புலனு ணர்வுப் பற்றாக் குறை காரண மாக இது ஏற்படும்.

alexin: குருதிப்புரதம் (அலக்சின்): குருதியில் நோயணுக்களை அழிக் கும் திறனுடைய புரதம்.

alexipharmic : நச்சு மாற்று மருந்து : நஞ்சுக்கு மாற்றாக அளிக்கப்படும் மருந்து.

alfentamil : ஆல்ஃபென்தமிழ் : நோவுணர்ச்சி அகற்றும் மருந்து. இது 'மார்ஃபின்' என்ற அபினிச் சத்துப் பொருள் போன்றது.

algesia : மிகை வலியுணர்வு; அதி வலியுணர்வு : அளவுக்கு மீறிய வலி யுணர்வு; அபரிமிதமான நரம் புணர்ச்சிக் கோளாறு.

algesimeter : வலியுணர்வுமானி : வலியை உணரும் திறனளவைப் பதிவு செய்வதற்கான ஒரு கருவி.

algidty : சன்னி குளிர் : கடுமை யான காய்ச்சல், குறிப்பாக முறைக் காய்ச்சல் (மலேரியா) நிலை. இந்நிலையின்போது, குத வழி வெப்பநிலை அதிகமாக இருக்கும்.

alginates : அல்ஜினேட்டுகள் : கடற்பாசி வழிப்பொருள்கள். இவற்றை உறுப்பெல்லைக்குட் பட்டுப் பயன்படுத்தும் போது, இரதத்தை மூடிக்கொள்கின்றன. அல்ஜினேட்டுகள் கரைசலாகவும், செறிவுறுத்திய மென்வலையாக வும் கிடைக்கின்றன.

alidine : அலிடின் : 'அனிலரிடின்' என்ற மருந்தின் வாணிகப்பெயர்.

alienation : மனமுறிவு : உள வியல் முறையிலும், சமூகவியல் முறையிலும் மக்களிடமிருந்து மன முறிவு கொள்ளுதல்.

alimentary : உணவூட்டம் சார்ந்த; ஊட்ட உணவு ஊனேற்பு :

alimentation : உணவூட்டமளித் தல்: உணவு ஏற்றல் : இயற்கை வளர்ச்சிக்கு உதவுகிற உணவூட்ட மளித்துப் பேணுதல்.

alkali : காரப்பொருள்; வன்காரம்; காரம் : சோடா, பொட்டாஷ், அம்மோனியா போன்ற கரையக்

கூடிய, அரிமானத்தன்மையுடைய உப்பு மூலப்பொருள். இது அமிலத்தின் முனைப்பழித்து உப்புகளாக மாறுகிறது; கொழுப்புகளுடன் இணைந்து சவர்க்காரமாகிறது. காரக்கரைசல், சிவப்பு லிட்மசை நீலமாக மாற்றுகிறது.

alkaline : காரத்தன்மையுடைய: காரமான : 1. ஒரு காரப்பொருளின இயல்புகளைக் கொண்டிருத்தல்; 2. ஹைடிராக்சில் அயனிகளை மிகுதியாகக் கொண்டிருத்தல். இரத்தத்தில் கார ஃபாஸ்பேட் இருக்குமானால், அது மஞ்சட்காமாலை, பல்வேறு எலும்பு நோய்கள் இருப்பதைக் குறிக்கும்.

alkalinuria: சிறுநீர்க் காரம்; சிறுநீரில் காரக்கூறுகள் . சிறுநீரில காரத்தன்மை இருத்தல்.

alkaloid : ஆல்க்கலாய்ட்; காரகம்: ஒரு காரப் பொருளை ஒத்திருக்கிற பொருள். தாவரங்களில் காணப்படும் கரிம மூலப்பொருள்களின் ஒரு பெருந் தொகுதியைக் குறிக்கிறது. இவை முக்கியமான உடலியல் வினைகளைப் புரிகின்றன. மார்ஃபின், கொய்னா, காஃபின், ஸ்டிரைக்கினின் ஆகியவை முக்கியமான ஆல்க்கலாய்டுகள்.

alkalosis : காரச்சார்பு நோய்; காரத் தேக்கம் காரமிகை: உடலில் காரப் பொருள் அளவுக்கு அதிகமாக இருப்பதால் அமிலங்கள் குறைவாக இருப்பதால் உண்டாகும் நோய் காரப் பொருளை மிகுதியாக உட்கொள்ளுதல், அளவுக்கு மேல் வாந்தியும் பேதியும் ஏற்படுதல், அடக்கிய உணர்ச்சி திடீரென வெளிப்படுதல் போன்ற பல காரணங்களால் இது உண்டாகிறது. 'நரம்பிசிவு நோய்' எனப்படும் நரம்பு-தசைக் கிளர்ச்சியும் இதனால் ஏற்படுகிறது.

alkaptonuria . அல்காப்டானூரியா, அல்காப்டன் சிறுநீர் : சிறுநீரில் 'அல்காப்டோன்' எனப்படும் ஹோமோஜென்டிசிக் அமிலம் இருத்தல். இதனால்; ஃபெனிலாலைனின், டைரோசின் ஆகிய இரண்டுப் ஒரு பகுதி மட்டுமே ஆக்சிகரணமாகின்றன. இதனால் வாழ்க்கையின் பிற்பகுதியில் மூட்டுவீக்கம் (மூட்டுவலி) உண்டாகலாம். இது தவிர இதனால் வேறு தீய விளைவுகள் ஏற்படுவதில்லை.

alkeran : அல்கெரான் : 'மெல்பாலன்' என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

alkylating agents : ஆல்கைலேட்டிங் வினையூக்கிகள் : கருமையத்திலுள்ள 'டிஎன்ஏ' (DNA)யுடன் அல்கேயில் தொகுதிகளைச் சேர்த்து டிஎன்ஏ-ஐப் பாதிப்பதன் மூலம் உயிரணுப் பகுப்பு நடவடிக்கையைச் சீர்குலைக்கும் பொருள்கள். இவற்றில் சில, உக்கிரமான உயிரணு வளர்ச்சிக்கு எதிராகப் பயன்படுகின்றன.

allegron : அல்லெக்ரோன் : 'நார்ட்ரிப்டிலின்' என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

allelomorphs ; இணை இனக்கீற்று : மெண்டல் என்ற அறிவியல அறிஞரின் கருத்துப்படி உயிர்களின் மரபுவழியில் மாற்றி மாற்றித் தொடரும் இரட்டைப் பண்புக் கூறுகளில் (இணை இனக்கீற்று) ஒன்று. எடுத்துக்காட்டாக, இயல்பான நிறப்பார்வை அல்லது நிறக்குருடு. சில பொருள்களைச் சுவைக்கும் திறன் அல்லது சுவைக்க இயலாமை ஆகியவை மாறிமாறித் தோன்றக் கூடும். ஒரே 'இனக்கீற்று இடச்சூழலில் ஒரு மரபணுவின் மாற்று வடிவங்கள் இருப்பதால் இது தோன்றுகிறது.

allergen : ஒவ்வாமை ஊக்கி : ஒரு நோய்த்தடைக் காப்புத் திறனுக்கு மாறுபட்ட நிலையை அல்லது

அறிகுறியை உண்டாக்கக் கூடிய உயிர்த் தற்காப்புப் பொருள்.

allerey : **ஒவ்வாமை :** உடலில் அயற்பொருள நுழைவின் விளைவாக வீக்கம், இழைம அழிவு போன்ற எதிர் விளைவுகள் ஏற்படுதல் சில மருந்துகளுக்கான எதிர் விளைவுகள், தூசியினால் ஏற்படும் வேனிற்காலச சளிக் காய்சசல், பூச்சிகடி எதிர் விளைவுகள், காஞ்சொறித் தடிப்புகள், மூச்சுத்தடையுடன் கூடிய இருமல் (ஆஸ்துமா) போன்றவை சில ஒவ்வாமை நோய்கள்.

allocheiria : **இயல்பு மீறிய ஊறுணர்வு :** தொட்டறியக்கூடிய உணர்வு இயல்புக்கு மீறியதாக இருத்தல். இதனால் நோயாளியின் உடலில் அளவு கடந்த தொடுவுணர்வுத் தூண்டுதல் ஏற்படுகிறது.

allograft : **உறுப்பு மாற்று அறுவை மருத்துவம்; ஓரினத் திசு ஒட்டு:** ஒருவரிடமிருந்து ஒரே வகை உறுப்பு மாற்று உயிர்த் தறகாப்புப் பொருளகளைக் கொண்டிராத இன்னொருவருக்கு ஓர் உறுப்பினை அல்லது திசுவினை மாற்றிப் பொருத்தும் அறுவை மருத்துவம்.

allopath (**allopathist**)**: 'எதிர் முறை' மருத்துவர்**

allopathic : ''எதிர்முறை' மருத்துவம் சார்ந்த : நோய்க குறிகளுக்கு எதிர்ப்பண்புகள் ஊட்டுவதன் மூலம் நோயைக் குணப்படுததும் மருத்துவ முறையைச் சார்ந்த.

allopathy : 'எதிர்முறை' மருத்துவம் : நோய்க் கூறுகளுக்கு எதிர்க் கூறுகளை ஊடடுவதன் மூலம் நோய் தீர்ககும் மருத்துவ முறை.

allopurinol : அல்லோபூரினால் : ˌகரையாத சிறுநீர் (யூரிக்) அமிலத்திலிருந்து படிகப்படிவுகள் ஏற்படுˌதைத் தடுக்கும் ஒரு பொருள் இது கீல்வாத (சந்துவாதம் அலலது ஊளைச்சதை நோய்) நோயில் கீல்வாத நீரைக் (டோஃபஸ்) குறைக்கிறது. கீல்வாதம் அடிக்கடி வருவதைக் கணிசமாகக்குறைப்பதுடன,அதன் கடுமையினையும் குறைக்கிறது. தோல் பகுதியில் வேனற்கட்டி உண்டாக்குகிறது.

aloes : கற்றாழை இலைச்சாறு : சோற்றுக் கற்றாழை எனனும் வெப்பமண்டலத்தாவரத்திலிருந்து பறித்த இலைகளிலிருந்து எடுக்கப்படும் வற்றிய சாறு. கடும் கசப்புச் சுவையுடையது. ஆற்றல் வாய்ந்த பேதி மருந்து

alopecia : தலை வழுக்கை; வழுக்கை; மயிர்க்கொட்டு; சொட்டை : தலை வழுக்கை பிறவியிலேயே ஏற்படக கூடும். உரிய காலத்திற்கு முன்னர் ஏற்படும் அல்லது முதுமை காரணமாக ஏற்படும் வழுககை பெரும்பாலும் தற்காலிகமானது. இதற்கு இன்னும் காரணம் அறியப் படவில்லை. எனினும், அதிர்ச்சியும் கவலையும வழுக்கை ஏற்படத் தூண்டும் பொதுவான காரணிகள் என்பன.

alophen : அலோஃபென் : 'ஃபினோல்ஃப்தலின' என்ற மருநதின வாணிகப் பெயர்

aloxiprin : அலோக்சிப்ரின் : அலுமினியம் ஆஸ்பிரின மருநதின் ஒரு கூட்டுப் பொருள். இது ஆஸ்பிரினைவிடக் குறைந்த அளவில் குடல் எரிச்சல் உணடாக்குகிறது. சிறுகுடலில் உடைந்து ஆஸ்பிரினை வெளியேற்றுகிறது

alpha-chymotrypsin : ஆலஃபா-கைமோட்ரிப்சின் : கண அறுவை மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் கணையச் செரிமானப் பொருள் (என்சைம) இது, பொதியுறைத் தசை நார்களைக் கரைதது, கணணின் பாவை வழியாகக் காயத்தி

விருந்து பளிக்குவில்லையை (லென்ஸ்) வெளியே எடுப்பதற்கு இது உதவுகிறது. இதனை வாய் வழி உட்கொள்ளும்போது வீக்கம் ஏற்படாமல் தடுக்கிறது.

alphafeto protein : ஆல்ஃபா-ஃபெட்டோ-புரதம் : முதிர் கரு இயல்பு திரிந்து இருக்கும் நேர்வுகளில் தாயின் நிணநீரிலும், கருவை அடுத்துச் சுற்றியுள்ள சவ்வுப் படலத்தின் நீர்மத்திலும் இருக்கும் பொருள்.

alpha-toco-pherol : ஆல்ஃபா-டோக்கோ-ஃபெரோல : 'வைட்டமின் E' என்ற ஊட்டச்சத்தின மருத்துவப் பெயர்.

alprenolol : ஆல்பிரனோலால் : அண்ணீரகச் சுரப்பியிலிருந்து இயக்குநீர் சுரப்பதைத் தடுக்கும் மருந்து. இடது மார்பு வேதனை தருப் இதய நோயில், நெஞ்சுப்பையின் இயக்கததைக் குறைக்கிறது. இதயத் துடிப்பு வேகவீதத்தையும், நெஞ்சுப்பை இயக்குநீர் சுரக்கும் அளவையும், தமனி அழுதத்தையும் குறைக்கிறது.

alrine : வயிறு சார்ந்த.

alternative medicine : மாற்று மருத்துவம் : அலகுமுனை மருததுவம் (அக்குபங்சா), உயிரியல் பின்னூட்டு, வர்ம மருத்துவம், இனமுறை மருத்துவம் (ஓமியோபதி), தசைத் தளர்ப்பீடு யோகம் போன்ற மாற்று மருத்துவ முறைகள்.

alum : படிக்காரம் : பொட்டாசியம் அல்லது அம்மோனிய அலுமினிய சல்ஃபேட்டு இதன் இறுகச் செய்யும் தன்மை காரணமாக, வாய்கொப்புளிக்கும் திரவமாகவும (1%), நச்சுப் பொருளை வெளியேறற பீற்று குழலின் தாரையாகவும் (0.5%) பயனபடுகிறது.

aluminium hydroxide: அலுமினியம் ஹைட்ராக்சைடு : வயிறறுப் புளிப்பகற்றும் மருந்து; புளிப்பு மாற்று மருந்து; புளிப்புத் தன்மைக்கு எதிரிடானது. இரைபபைப்புண்ணைக் குணப்படுத்துவதற்குப் பயன்படுத்தும்போது நீணட நாட்கள் வினை புரிகிறது. இது பெரும்பாலும் மென்மையான பாலேடு அல்லது கூழ் வடிவில் இருக்கும்.

aluminium paste : அலுமினியம் களிம்பு : அலுமினியத்தூள, துத்தநாக ஆக்சைடு, திரவக் கன்மெழுகு (பாரஃபின்) ஆகியவை கலநத ஒரு களிம்பு. இது தோல் காப்பு மருந்தாகப் பயனபடுத்தப்படுகிறது இதனை 'பால்ட்டிமோர் களிம்பு' என்றும் கூறுவர்.

alupent : அலுப்பென்ட் : 'ஆர்சிப்ரனலீன சல்ஃபேட்' என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

alveolar capillary block syndrome : நுரையீரல் கணணறைத் தந்துகி அடைபபு நோய் : நோய்க் காரணம் கணடறியப்படாத ஓா அரிய நோய். இதில் நுரையீரல் கணணறை உயிரணுக்கள பருத்து விடுவதன் காரணமாக ஆக்சிஜன பரவுதல நடைபெறாமல் மூச் சடைப்பு, தோல் நீலநிறமாதல், வலது இதயம் செயலிழத்தல் போனற கோளாறுகள் உணடாகின்றன

alveolitis : நுரையீரல் கண்ணறை வீக்கம் . நுரையீரல் கண்ணறைகளில் வீக்கம் ஏற்படுதல. பூந்தாது (மகரந்தம்) போன்ற ஓா அயற பொருளைச் சுவாசிபபதால் இது உண்டாகிறது. இதனை 'அயற பொருள் ஒவ்வாமை நுரையீரல் கணணறை வீக்கம்' என்பர்.

alveolus : மூச்சுச் சிற்றறை; கண்ணறை . (1) நுரையீரலிலுள்ள காறறுக் கணணறைகள் (2) பல லுககு ஆதரவாகவுள்ள பல் பொருந்து குழி.

alzheimer's disease : அல்ஜைமர் நோய் : மூளைத் தளர்ச்சியினால் அறிவு குழம்பி ஏற்படும் பைத்தியம்.

amalgam: உலோகப் பூச்சு; இரசக் கலவை (இரசக்கட்டு); மாழைப் பூச்சு : பாதரசமும் ஏதேனும் மற்றொரு உலோகமும் சேர்ந்த கலவை. ''பல் இரசக் கலவை' என்பது, பல் குழியை நிரப்புவதற்குப் பயன்படும் ஓர் இரசக் கலவை. இதில் பாதரசம், வெள்ளி, வெள்ளீயம் (டின்) கலந்துள்ளன.

amantadine : அமன்ட்டாடின் : நோய்க்கிருமி எதிர்பபு மருந்து. இது நோய்க் கிருமியால் உண்டாகும ஹாங்காங் சளிக்காய்ச்சல் (இன்ஃபுளுவென்சா). சுவாசக் கோளாறுகள் போன்றவற்றில் நோயின் காலநீட்சியைக் குறைக்கிறது.

பார்க்கின்சன் நோயில் நடுக்கத்தையும், விறைப்பையும் குறைப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

amastia : மார்பகமின்மை; முலையின்மை : பிறவியிலேயே மார்பகஙகள (முலை) இல்லாதிருத்தல்.

amaurosis : குருட்டுத் தன்மை; பார்வையின்மை; ஒளியின்மை: பார்வை நரம்புக் கோளாறு காரணமாக உண்டாகும் ஓரளவு அல்லது முழுமையான குருட்டுத் தனமை.

amaurotic : குருட்டுத் தன்மையுடையர் : கண்ணின் புறவுறுப்புச் சரியாக இருந்தும் அல்லது கணணின் புறத தோற்றததினால் மாறுதல் தோன்றாதிருந்தும் முழுககுருடாக இருக்கிற

ambidexterity : ஒருப்போல் இருகைத் திறன் : இருகைகளையும ஒரே விதமாகத் துறம்படப் பயனபடுத்தும் திறன்.

ambidextrous : ஒருப்போல் இருகைப் பழக்கம்; இருகைச் சமன் திறன் : இருகைகளையும் ஒரே வகையாகத் திறம்படப் பயன் படுத்தக் கூடிய.

ambilhar : அம்பில்கார் : 'நிரிடாசோல்' என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

ambivalence : இருமனப்போக்கு; விருப்பும் வெறுப்பும் : ஒருவரிடம் ஒரே சமயத்தி எதிர் மாறான இருமுக உணர்ச்சிப் போக்கு இருத்தல். எடுத்துக்காட்டு: அன்பு, பகைமை.

amblyopia : பார்வை மந்தம்; மங்கு பார்வை : குருட்டுத்தன்மையின் அளவுக்குப் பார்வை மந்தமாக இருத்தல். இதனை ''புகைபிடிப்பார் குருடு' என்றும் கூறுவர்.

ambulance : நோயாளி ஊர்தி (ஆம்புலன்ஸ்) : நோயாளிகளை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதற்கான ஊர்தி. இயங்கு மருந்தகம். இயங்கு மருந்தகமாக இருக்கிற ஊர்தி.

ambulatory : ஊர்தி மருத்துவம் : நோயாளிகள் இருக்கும் இடங்களுக்கு நோயாளி ஊர்தியில் சென்று, நோயாளிகளுக்குச் சிகிச்சையளித்து அவர்களின் முன்னேற்றம் குறித்து மருத்துவ மனையின் புறநோயாளர் துறைகளுக்குத் தெரிவித்தல்.

amelia : உறுப்புக் குறைபாடு; பிறவி ஊனம்; அங்கமின்மை: பிறவியிலேயே உறுப்பு அல்லது உறுப்புகள் இல்லாதிருத்தல். கைகளும், கால்களும் இல்லாதிருந்தால் அது 'முழு உறுப்புக் குறைபாடு' எனப்படும்.

amelioration : நோய்க் கடுமைக் குறைப்பு; நோய்த் தணிவு : நோய்க் குறிகளின கடுமையைக் குறைத்தல்.

amenorrhoea: மாதவிடாய் தோன்றாமை; மாதவிலக்கின்மை; தீட்டு நிறுத்தம் : *மாதவிடாய் தோன்றா திருத்தல்; மாதவிடாய் தோன்ற வேண்டிய நேரத்தில் தோன்றா திருந்தால் அது "தொடக்க நிலை மாதவிடாய் தோன்றாமை" எனப் படும். மாதவிடாய் ஒரு முறை தொடங்கிய பிறகு தோன்றாம லிருந்தால், அது "இரண்டாம் நிலை மாதவிடாய் தோன்றாமை" எனப்படும்.*

amentia : மன வளர்ச்சிக் குறைபாடு ; உளக் குழப்பம்; மூளைத் திறனிழப்பு : *பிறவியிலிருந்து மன வளர்ச்சி குன்றியிருத்தல். மனத் தளர்ச்சியினால் ஏற்படும் பைத்திய நிலையிலிருந்து (Dementia) இது வேறுபட்டது.*

amethocaine hydrochloride : அமெத்தோக்கைன் ஹைட்ரோகுளோரைடு : *கோக்கைன் என்ற மருந்துப் பொருளின் சில பண்புகளையுடைய ஒரு செயற்கைப் பொருள். தண்டுவட உணர்ச்சி யிழப்பு மருந்தாகப் பயன்படுகிறது 60 மி.கி. அளவுடைய மாத்திரைகளாக இது பயன்படுத்தப்படுகிறது.*

amentria : கருப்பை இன்மை· *பிறவியிலேயே கருப்பை இல்லாதிருத்தல்.*

ametropia : பார்வைக் குறைபாடு; குறை பார்வை : *கண்ணின் ஒளிக் கோட்ட ஆற்றல் குறைபாட்டினால் உண்டாகும் பார்வைக் குறைபாடு.*

amicar : அமிக்கார்· *அமினோ காப்ராய்க அமிலத்தின் வாணிகப் பெயர்.*

amidin : மாச்சத்துக் கரைசல்· *கரைசல நிலையிலுள்ள மாச்சத்து.*

amikacin : அமிக்காசின் *பாக்டீரியச் செரிமானப் பொருள்கள் (என்சைமகள்) தரங்குறைவதைத் தடுக்கும் ஒரு நோய் எதிர்ப்புப் பொருள். இது 'கனாமைசின' பொருளிலிருந்து எடுக்கப்படும் செயற்கை வழிப் பொருள்.*

amiken : அமிக்கென் : *'அமிக்காசின' என்னும் எதிர்ப்புப் பொருளின் வாணிகப் பெயர்*

amino acids : கரிம அமிலங்கள் (அமினோ அமிலங்கள்): *ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஹைட்ரஜன் அணுக்களுக்கு பதிலாக கரிம (அமினோ) அணுக்களைக் கொண்ட கரிம அமிலங்கள் (NH_2) புரதத்தை நீரியல் பகுப்பு செய்வதன் விளைவாக இவை கிடைக்கின்றன. இவற்றிலிருந்து உடல் தனது சொந்தப் புரதங்களை மறுபடியும் தயாரித்துக் கொள்கிறது இவை அனைத்தையும் உடல் உற்பத்தி செய்து கொள்ள முடியாது. எனவே இவை உணவில் இன்றியமையாது சேர்க்கப்பட வேண்டும். ஆர்கினைன், ஹிஸ்டிடின, ஐசோலியூசின், லியூசின், லைசின், மெத்தியோனைன, ஃபினைலாலனின், திரியோனின், டிரிப்டோஃபான், வாலைன் ஆகியவை இன்றியமையா கரிம அமிலங்கள். எஞ்சியவை அவசியமற்ற கரிம அமிலங்கள் என வகைப்படுத்தப் பட்டுள்ளன.*

aminoaciduria : கரிம அமில நோய்; அமினோ அமிலச் சிறுநீர் : *சிறுநீரில கரிம அமிலம் (அமினோ அமிலம்) இயல்பு அளவுக்குமேல் இருப்பதால உண்டாகும் நோய். இது வளர்சிதை மாற்றத்தில உள்ளார்ந்த தவறு இருப்பதைக் காட்டுகிறது*

aminocaproic acid : அமினோ காப்ராய்க் அமிலம் : *கட்டியாக உறையக்கூடிய நாரியல் கசிவு ஊனீர் (ஃபைப்ரின) சீர்குலைவதைத் தடுப்பதன் மூலம் நேரடியாகக் குருதிப்போக்கினை நிறுத்*

தும் வினையைப் புரிகிறது. இது பிளாஸ்மினோஜன் வினையூக்கிகளின் செயலைத் தடைசெய்கிறது.

aminocrine : அமினோக்ரைன்: அக்கிஃப்ளேவின் போன்ற, கறைப்படுத்தாத ஒரு நோய் நுண்ம (கிருமி) ஒழிப்புப் பொருள்.

aminoglutethimide : அமினோகுளுட்டித்திமிட் : இயக்குநீரை (ஹார்மோன்) சார்ந்த புற்று நோய்களில் அண்ணீரகச் சுரப்பியிலிருந்து ஊறும் இயக்குநீரை நிறுத்துவதற்குப் பயன்படுத்தப் படும் ஒரு மருந்து.

aminophylline : அமினோஃபைலின் : எத்திலின் டயாமின் கலந்த தியோஃபைலின். இது தியோஃபைலினிலிருந்து எடுக்கப்படும் ஒரு வழிப்பொருள்; கரையக் கூடியது. ஈளை நோய் (ஆஸ்த்துமா) குருதியின் அடர்த்தி மிகுதியினால் ஏற்படும் மாரடைப்பு, நெஞ்சுப்பை இழைம அழற்சி ஆகிய நோய்களைக் குணப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது.

aminoplex : அமினோப்ளக்ஸ் : நரம்பு வழி உட்செலுத்துவதற்கு உகந்த ஒரு செயற்கைத் தயாரிப்பு மருந்துப் பொருள். சாதாரணமாகப் புரதமாக உட்செலுத்தப்படும் கரிம அமிலங்களை (அமினோ அமிலங்கள்) இது கொண்டிருக்கிறது இது காயங்களைக் கழுவிக் குணப்படுத்தப் பயன்படுகிறது.

amino-salicylic acid : அமினோ-சாலிசிலிக் அமிலம் : காசநோயை (எலும்புருக்கி நோய்-டி.பி.) குணப்படுத்துவதற்கு வாய்வழி கொடுக்கப்படும் ஒரு பாக்டீரியா எதிர்ப்பு மருந்து.

aminosol : அமினோசோல் : கரிம அமிலங்களின் (அமினோ அமிலங்கள்) ஒரு கரைசல். இது, குளுக்கோஸ், ஃபிரக்டோஸ், எதில் ஆல்ககால் ஆகிய அடங்கிய தயாரிப்புகளாகக் கிடைக்கிறது. இதனை வாய்வழியாகவோ, நரம்பு வழியாகவோ செலுத்தலாம்.

amitosis : உயிரணுப் பகுப்பு; உயிரணுப் பிளவு : ஓர் உயிரணு, நேரடிப் பிளப்பு மூலம் பகுதிகளாகப் பிரிவுறுதல்.

amitriptyline : அமிட்ரிப்டிலின் : முச்சுழ்றசியுடைய வலி தணிப்பு மருந்து. இது 'இமிப்ராமின்' மருந்தினைப் போனறது. இதில் ஒருவகை நோவாற்றும் விளைவு உண்டு. இது குழப்பத்துடன் கூடிய மனத் தளர்ச்சியின்போது மிகவும் பயன்படுகிறது.

ammonia : நவச்சார ஆவி (அம்மோனியா): நைட்ரஜனும் ஹைட்ரஜனும் இணைந்து இயற்கையாகக் கிடைக்கும் ஒரு கூட்டுப் பொருள். மனிதர்களிடம் நவச்சார வளர்சிதை மாற்றத்தில் உளளார்ந்து ஏற்படும் பல்வேறு பிழைபாடுகள் காரணமாக மன வளர்ச்சிக் குறைபாடு, நரம்புக் கோளாறுகள், வாத சன்னி போன்ற திடீர் நோய்ப் பிடிப்புகள் உண்டாகின்றன. நவச்சார ஆவிக்கரைசல் நிறமற்ற திரவம்; காரநெடியுடையது; இது சிறுநீர்ச் சோதனையில் பயன்படுத்தப்படுகிறது.

ammonium bicarbonate : அம்மோனியம் பைக்கார்பனேட் : இருமல் மருந்துகளில் கபத்தை வெளிக் கொணரும் மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. அரிதாக வயிற்று மந்த நோயாளிகளுக்கு வயிற்று உப்புசம் அகற்றுகிற மருந்தாகக் கொடுக்கப்படுகிறது.

ammonium chloride : அம்மோனியம் குளோரைடு : சிறுநீர்க் கோளாறுகளில் சிறுநீரில் அமிலத் தன்மையை அதிகரிப்பதற்கு இது பயன்படுத்தப்படுகிறது. அரிதாக

கபம் வெளிக்கொணரும் மருந்தாகவும் பயன்படுகிறது.

amnesia : **மறதி நோய் (நினைவிழப்பு); மறதி :** மனத் தளர்ச்சியினால் ஏற்படும் மனநோய் நிலை இசிவு நோயின்போது அதிர்ச்சிக்குப் பின்பு நினைவாற்றல் முழுவதுமாக இழந்து விடுதல். ஒரு விபத்திற்குப் பிறகு அண்மை நிகழ்ச்சிகள மறந்து போகுமானால் அது "முன்னோக்கிய மறதி" எனப்படும்; கடந்தகால நிகழ்ச்சிகள் மறந்து போகுமானால் அது "பின்னோக்கிய மறதி" எனபபடும்

amniocentesis : **கருச் சவ்வுத் துளைபபுச் சோதனை** அடிவயிற்றுச் சவ்வின் வழியாகக் கருவை அடுத்துச் சுற்றியுள்ள சவ்வுக் குழியினைத் துளைத்தல். குழந்தை பிறப்பதற்கு முன்னர்இனக்கீறறுக் கோளாறுகள், வளர்சிதை மாற்றப் பிழைபாடுகள், முதிர்கருக் குருதி நோய்கள் உள்ளனவா என்று கண்டுபிடிக்கும் சோதனைக்காகத் திரவ மாதிரியை எடுப்பதற்காக இவ்வாறு செய்யப்படுகிறது

amniography . **கருச் சவ்வுப்பை ஊடுகதிர்ப்படம்; பனிக்குட வரைவி.** கருவை அடுத்துச் சுற்றியுள்ள சவ்வுப் பையினுள் ஒளி ஊடுருவாத ஊடு பொருளை ஊசி மூலம செலுத்தியபின், அந்தச் சவ்வுப் பையினை ஊடுகதிர (எக்ஸ்-ரே) ஒளிப்படம் எடுத்தல. இதில் கொப்பூழ்க் கொடியும், நசசுக் கொடியும பதிவாகும்

amnion : **கருச்சவ்வுப்பை; பனிககுட உறை :** குழந்தை பிறபபதற்கு முன கருவை அடுத்துச் சுற்றியுள்ள சவ்வுப்பை இதில் முதிர் கருவும, கருப்பைத திரவமும் இருக்கும் இது கொப்பூழ்க கொடியைப் போர்த்தியிருக்கும்; இது முதிர் கருவுடன் கொப்பூழ்க் குழியில இணைக்கப்படடிருககும.

amnionitis : **கருச்சவ்வுப்பை வீக்கம்; பனிக்குட அழற்சி**

amnioscopy: **கருநோக்குக் கருவி; பனிக்குட நோக்கி :** அடிவயிற்றுச் சுவரின வழியாகச் செலுத்திக் கருவையும், கருப்பைத் திரவத்தையும் பார்ப்பதற்கு உதவும் ஒரு கருவி. கருப்பைத் திரவம் தெளிவாகவும், நிறமின்றியும் இருந்தால் அது இயல்பான நிலையாகும். இத் திரவம் மஞ்சளாக அல்லது பச்சையாக இருந்தால், அதில் அபினிக் அமிலம் கலந்திருப்பதைக் குறிக்கும். இது கருவில நோய் கண்டிருப்பதைக் காட்டுவதாகும்.

amniotic cavity : **கருச்சவ்வுக் குழி** ' குழநதை பிறப்பதற்குமுன் கருவை அடுத்துச் சுற்றியுள்ள சவ்வுககும், தொடக்க நிலையிலுள்ள (முதிராத) கருமுளைக்குமிடையில் உள்ள திரவம் நிரம்பிய குழிவு.

amniotic fluid : **கருப்பைத் திரவம்; பனிகுட பாய்மம் :** குழந்தை கருப்பையில இருக்கும் காலம் முழுவதும், கருப்பைச் சவ்வும், முதிர்கரு உற்பத்தி செய்யும் ஒரு திரவம். இது முதிர்கருவுக்குப் போர்வைபோல் இருந்து பாதுகாப்பளிக்கிறது இந்தத் திரவம், தீவிரமாக வேதியியல் பரிமாற்றங்கள் நடைபெறும் ஒரு ஊடு பொருளாகும் இதனைக் கருச்சவ்வுக குழியைச் சுறறியுள்ள உயிரணுக்கள சுரந்து, மீண்டும் ஈர்த்துக் கொள்கினறன.

amniotomy : **கருப்பை பிளவுறுத்தல** முதிர்கருச் சவ்வுகளைச செயற்கை முறையில் பிளவுறுததுதல பிள்ளைப் பேற்று வலியை விரைவு படுத்துவதற்காக இவ்வாறு செய்யப்படுகிறது.

amoeba : **அமீபா (ஓரணுவுயிர்), நெகிழி :** ஒரே அணுவுடன் உயிர் வாழும உயிரினம; வயிற்றுடலி.

இதில், ஒரே அணுவே, உணவு உட்கொள்ளுதல், கழிவுப் பொருளை வெளியேற்றுதல், சுவாசித்தல், இடம் பெயர்தல் ஆகிய அனைத்துப் பணிகளையும் செய்கிறது. இது தன்னைத்தானே பிளவுபடுத்திகொண்டு இனப்பெருக்கம் செய்கிறது. இதில் ஒரு வகையான "என்டாமீபா" என்ற நுண்ணுயிர் மனிதரிடம் வயிற்று அளைச்சல் (சீதபேதி) உண்டாக்குகிறது.

அமீபா ஓரணுயிர்

amoebiasis : அமீபா உறைவு; பெருங்குடல் சீழ்ப் புண் : பெருங்குடலில் ஓரணுவுயிர் என்டாமீபாக்கள் ஏராளமாக மொய்த்திருத்தல். இதனால் சளித்தாக்குதல் ஏற்பட்டுச் சீழ்ப்புண் (அல்சர்) உண்டாகிறது. இது இழைமச் சளிச்சவ்விலும், இரத்தத்திலும் சீழ் உண்டாகி வயிற்று அளைச்சல் (சீதபேதி) ஏற்படுகிறது. குருதிநாள இரத்தவோட்டத்தில் அமீபா நுழையுமானால் கல்லீரல் சீழ்க்கட்டு உண்டாகிறது. மலத்தில் உள்ள அமீபாவைக் கொண்டு இந்நோய் கண்டுபிடிக்கப்படுகிறது.

amioebiform: வயிற்றுடலி வடிவமுள்ள.

amoebicide : அமீபா கொல்லி : அமீபாவைக் கொல்லும ஒரு மருந்து.

amoeboid : அமீபா போன்ற : ஓரணுவுயிராகிய அமீபாவை (வயிற்றுடலி) வடிவிலும் அசைவிலும் ஒத்திருக்கிற உயிர். எடுத்துக்காட்டு: இரத்த வெள்ளை அணுக்கள்.

amoeboma : அமீபோமா; அமீபா கட்டி; நெகிழிக் கட்டி : பெருங்குடல் வாயில் அல்லது பெருங்குடல் குதவாயில் ஏற்படும் கட்டி. இது என்டாமீபாக்களினால் உண்டாகிறது. தசைநார் வீக்கம் ஏற்பட்டு குடலில் அடைப்பு ஏற்படுகிறது.

amoxil : அமோக்சில் : 'அமோக்சிலின்' என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

amoxycillin : அமோக்சிசிலின் : இது ஒரு நோய் எதிர்ப்புப் பொருள். இது காற்றுக் குழாய்ச் சுரப்புகளில் ஆம்பிசிலினைவிட எளிதாக ஊடுருவி மூச்சடைப்பு நோய்களைக் குணப்படுத்துகிறது.

ampiclox : ஆம்பிக்ளாக்ஸ் : ஆம்பிசிலின், கிளாக்சாசிலின் ஆகிய இரண்டும் கலந்த கலவையின் வாணிகப் பெயர்.

ampoule : மருந்துச் சிமிழ்: தோலினுள் செலுத்தப்படும் ஊசிமருந்தினையுடைய கண்ணாடிச் சிமிழ்.

ampulla : குழாய்க்குடுவை; குடுவை : உடலிலுள்ள குழாய் அல்லது பையின விரிந்த கடைப் பகுதி.

amputation : உறுப்பு நீக்கம்; அங்க வெட்டு; துண்டித்தல் : உடம்பில் நோயுற்ற ஓர் உறுப்பினை அறுத்து எடுத்து விடுதல். மார்பகத் துண்டிப்பு.

amylase : அமிலேஸ் : மாச்சத்துப் பொருள்களை சர்க்கரையாக மாற்றக்கூடிய ஒரு செரிமானப் பொருள் (என்சைம்).

amylnitrite : அமில்நைட்ரைட்டு : விரைந்து ஆவியாகக் கூடியதாகவும், துரிதமாகச் செயற்படத்தக்கதாகவும் உள்ள குருதிநாள விரிவகற்சி மருந்து. இதயப் பாதிப்பினால் ஏற்படும்தொண்டையடைப்பைக் குணப்படுத்தபயன்படுகிறது.

amylobarbitone : அமிலோபார்பிட்டோன் : நடுத்தரமான செறிவினை நீட்சி உடைய 'பார்பிட்டுரேட்' என்னும் தூக்க மருந்து.

amyloid : **அமிலாய்ட்** : மாச்சத்து போன்ற பொருள். 'அமிலாய்டாசிஸ்' எனப்படும் அமிலாய்ட் திரட்சிக் கோளாறுகளில் இந்தச் சிக்கலான பொருள் அளவுக்குமேல் திரள்கிறது.

amyloidosis : **அமிலாய்ட் திரட்சி நோய் ;** ஏதேனும் உறுப்பில்,குறிப்பாக நுரையீரலிலும், சிறு நீரகத திலும் 'அமிலாய்ட்' எனப்படும் மாச்சத்து போன்ற பொருள் படிதல்.

amylolysis : **மாச்சத்துச் செரிமானம் :** மாச்சத்துப் பொருள்கள் செரிமானமாதல்.

amylopsin : **கணையநீர் :** மாச்சத்தினைச் சர்க்கரையாக மாற்றும் கணைய நீர். இது கார ஊடு பொருளில் கரையாத மாச்சத்தினை கரையும் சர்க்கரையாக மாற்றுகிறது.

amylum : **அமைலம் :** மாச்சத்துப் பொருள்.

amytal : **அமிட்டால் :** 'அமிலோபாபிட்டோன்' என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

anabolic compound : **உயிர்ச் சத்துக கூட்டுப் பொருள் :** உடலிலுள்ள புரதத்தை கூட்டிணைவு செய்கிற வேதியியல் பொருள். நோய் நீங்கி உடல தேறிவரும் காலத்தில் இது பயனுடையதாகும். பல்வேறு ஆண்பால் இயக்கு நீர் மங்கள இந்த வகையைச் சேர்ந்தவை.

anabolism : **உயிர்ப்பொருள் கூட்டமைப்பு; வளர் வினை:** கட்டுமான மிகைவு; **வளர்மை :** உயிர்ச் சத்தினை அடிப்படையாகக் கொண்ட சேர்மான வகைகள் வேதியியல் முறையில் உருவாதல்.

anacidity: **அமிலத்தன்மையின்மை; அமிலமின்மை :** இயல்பு அளவுக்கு அமிலத்தன்மை இல்லாதிருத்தல் முக்கியமாக இரைப்பை நீரில் அமிலத்தனமை இல்லாதிருத்தல்.

anaemia : **குருதிச்சோகை; சோகை; வெளிறு :** இரத்ததில் சிவப்பணுக்கள் குறைவாக இருத்தல். கடுமுயற்சியின் போது சோர்வு,மூச்சடைப்பு போன்றவை ஏற்படுதல் இதன் நோய்க்குறிகளாகும். இது பல்வேறு காரணங்களால் உண்டாகிறது. இந்தக் காரணத்திற்கேற்ப சிகிச்சையளிக்கப்படுகிறது.

anaerobe : **ஆக்சிஜன் இன்றி வாழும் உயிர்; அல்வளி உயிரி :** நேரடியாக ஆக்சிஜன் இல்லாமல் வாழத்தக்க உயிர் வகை.

anaerobic respiration: **அல்ஆக்சிஜன் மூச்சுவிடல் :** ஆக்சிஜன் குறைவாக இருககும்போதே மூச்சு விடுதல். முதிர் கரு இவ்வாறு சுவாசிக்கிறது.

anaesthesia : **உணர்ச்சியிழப்பு ; உணர்ச்சியின்மை :** உணர்ச்சி மயக்கம்; உணர்ச்சியின்மை; நோவுணராமை உறுப்பெல்லை உணர்வு நீக்கத்தின்போதுவேதனையுணர்வு மூளையை எட்டாத வகையில் நரம்பு இயக்கம் நேரடியாகத் தடுக்கப்படுகிறது. முதுகந்தண்டில் ஓர் உறுப்பெல்லை உணர்வு நீக்கி மருந்தினை ஊசிமூலம் செலுத்தி உணர் விழக்கச் செய்யப்படுகிறது.

மயக்கமடைவதற்கு குளோரோஃபார்ம் போன்ற மயக்க மருந்துகளும் உடல் உறுப்பை உணர் விழக்கச் செய்ய கோக்கைன் போன்ற உணர்வின்மை ஊட்டும் பொருள்களும் பயனபடுகின்றன.

anaesthesiology : **உணர்வு நீக்கியல், ஊட்டு மயக்கவியல் :** உணர்வு நீக்கு மருந்துகள், அவற்றைச் செலுத்துதல், அவற்றின் விளைவுகள் பற்றிய அறிவியல்.

anaesthetic : **உணர்வு நீக்கி மருந்து (மயக்க மருந்து); உணர்வகற்றி; உணர்விழப்பி :** (1) உணர்

விழக்கும்படி செய்கிற அல்லது உணர்வு மயக்கம் உண்டுபண்ணு கிற மருந்து.

(2) உணர்வின்மை ஊட்டுகிற.

(3) உணர்ச்சி மயக்க மூட்டுகிற மருந்து.

உடலின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டும் உணர்விழக்கச் செய்யும் மருந்தும் உண்டு. இதனை உறுப்பெல்லை உணர்வு நீக்கி என்பர். எடுத்துக்காட்டாக, ஒரு பல்லைப் பிடுங்க வேண்டுமானால் அந்தப் பல் இருக்கும் பகுதியை மட்டும் உணர்விழக்கச் செய்ய இந்த மருந்து கொடுக்கப்படும் பொது அல்லது அனைத்து உறுப்பு மயக்க மருந்து கொடுததால், நோயாளி மயக்கமடைந்துவிடுவார்.

anaesthetist : மயக்க மருந்து கொடுப்பவர்; உணர்வகற்றி மருத்துவர்; உணர்வியல் மருத்துவர் : மயக்க மருந்து கொடுப்பதற்கு மருத்துவ முறைப்படி தகுதிபெற்றவர்.

anafranil : அனாஃப்ரானில் : 'குளோமிப்பிராமின்' எனற மருந்தின் வாணிகப் பெயர்.

analeptic : ஊக்க மருந்து; நல மூட்டி : நலமூட்டும் மருந்து; நலிவகற்றி நலமூட்டுகிற மருநது. காபி, தேயிலைப் பானங்களிலுள்ள 'காஃபின்' மற்றும சோர்வகற்றி மருந்துகள் இவ் வகையைச் சேர்ந்தவை.

analgesia: நோவின்மை; உணர்ச்சியின்மை; வலியின்மை; வலி உணர்வுக் குறைவு : புலனுணர்வினை மட்டும் இழத்தல்.

analgesic : நோவகற்று மருந்து; வலி நீக்கி; வலி குறைப்பான் : உணர்ச்சியின்மை உண்டு பண்ணுகிற மருந்து.

analysis : பகுப்பாய்வு : வேதியியலில் ஒரு கூட்டுப் பொருளைத் தனித்தனிப் பொருள்களாக பகுத்து ஆய்வு செய்தல். உளவியல் பகுப்பாய்வு.

anamnesis : முன் நினைவு : நோயாளியின் மறதியில் ஆழ்ந்து விட்ட பழைய செய்திகளின் மறு நினைவு

anaphrodisiac : பாலுணர்ச்சி மட்டுப்படுத்தும் மருந்து; பாலுணர்வுக் குறைப்பி: பாலுணர்சசியை மட்டுப்படுத்துவதற்கு உதவுகிற மருந்து.

anaphylaxis:அயற்பொருள் தாங்கா அதிர்ச்சி : அதி ஒவ்வாமை : வெளியிலுள்ள புரதம் அல்லது வேறு பொருள் ஊசிமூலம் செலுத்தப்படும்பொழுது அதன் எதிர்ப் பொருள் உடலில் முன்னரே இருப்பதால் ஏற்படும் தாக்கம்அதிர்ச்சி.

anaplasia : தனிப் பண்பிழந்து பல்கும் வளர்ச்சி:பிரித்துணர் விழப்பு; பிறழ் வளர்ச்சி : ஓர் உயிரணு தனது தனிப்பண்புகளை இழத்தல். புற்று நோயில் ஏற்படுவது போல் பரவல் நடவடிக்கை யுடன் இது தொடர்புடையது.

anaplasty : உயிர்க் கூறு ஒட்டு முறை : அருகிலுள்ள நல்ல கூறுகளை ஒட்டி மேலீடான சிறுகாயங்களைக் குணப்படுத்தும் மருத்துவ முறை.

anarthria : பேச்சின்மை; பேச்சிழப்பு : ஒருவர் வாய்பேச முடியாதிருக்கும் ஒரு நிலை.

anasarca : தோலடி நீர்க்கோவை ; முழு மெய் வீககம்; உடல் வீக்கம்: நீர்க்கோவை : புறத்தோலின் அடித்திசுக்களிலும், நிணநீர்க்குழிகளிலும் ஊனீர் ஊடுருவித் தேங்கியிருத்தல்.இது பொதுவாக இழைம அழற்சி அல்லது இழைமஙகளின் நீர்க்கோவை எனப்படும்.

anastomosis : குருதி நாளப் பின்னல்; பிணைப்பு; நாளப்பிணைப்பு : இரண்டு அல்லது அவற்றுக்கு

மேற்பட்ட தமனிகள் அல்லது சிரைகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருத்தல்.

அறுவை மருத்துவத்தில் உட்புழையுள்ள இரண்டு உறுப்புகள், குழாய்கள் அல்லது நரம்புகள் பின்னி ஒன்றுபட்டிருத்தல்.

anatomical position : **உடற்கூற்றியலான; உடல் உட்கூற்று அமைப்பு நிலை** : உடலின் உள் உறுப்புகளின் முன் புறத் தோற்றத்தைப் பார்க்கும் வகையில் உடல் முன்னோக்கியவாறு நேராக நிற்கும் தோற்றத்தில் அமைநதிருக்கும். இதில் கைகள் உடலில பக்கவாட்டில் உள்ளங்கைகள் முன்னோக்கியவாறு அமைத்திருக்கும். முதுகுப்புறம் நேராக உள்ளநிலையில் பின்புறத் தோற்றம் அமைந்திருக்கும்.

anatomy : **உடல் உட்கூறியல்** : உள்ளுறுப்புகளான எலும்புகள் போன்ற உள்ளுருப்புகளின் அமைப்பினை பிளந்து பார்த்து ஆராயும் துறை.

anchylose : **மூட்டு விறைப்பு** : எறும்பு மூட்டுகள விறைத்துப் போதல்.

anchylosis : **மூட்டு விறைப்பு நோய்** : மூட்டுக்கள விறைத்துப் போகும் நோய்; கணுக்கள் திமிர் கொள்ளுதல்.

anchylostomiasis : **கொக்கிப் புழு நோய்** : கொக்கிப்புழு போன்ற புழுவால் ஏற்படும குருதிச்சோர்வு நோய்.

ancoloxin . **ஆங்கோலாக்சின்** : புண் ஏற்பட்ட இடததில குருதியில் விழுப்புப் பரவிச்செயலாற்றாமல் தடுக்கும் மருந்துகளில் (எதிர் விழுப்புப் பொருள்) ஒன்று.

ancrod : **குருதிக் கட்டுத் தடைப் பொருள் (ஆங்க்ரோட்)** : மலேயாக் குழிவிரியன பாம்பின் நஞ்சிலிருந்து எடுக்கப்படும் குருதி உறைவதைத் தடுக்கும் பொருள். இது கட்டியாக உறையக்கூடியக் கசிவு ஊனீரை அழித்து இரத்தத்தில் இந்தக் கசிவு ஊனீர் (ஃபிப்ரின்) உருவாவதற்கான முக்கிய காரணியைக் குறைத்து விடுகிறது. இது ஓர் அயல் புரதமாகையால், இது உடலில் நோய் எதிர்ப்புப் பொருள் உண்டாகத் தூண்டுகிறது இதனால் சில வாரங்களில் நோயாளியிடம் இதன் வினைக்குத் தடை உண்டாகிறது. எனவே இதனை குறுகிய விளைவுக்கே பயன்படுத்தப்படுகிறது.

ancylostoma : **குடற்புழு** : சிறுகுடல் முகப்பில் மொய்த்திடும் புழுக்கள். இவை மலத்துடன் வெளியே வந்து, ஈர மண்ணில் முட்டையிட்டு, கொக்கிப்புழுக்கள் உருவாகின்றன.இக்கொக்கிப்புழுக்கள் பாதங்கள் வழியாக உடலுக்குள் சென்று நோய் உண்டாக்குகின்றன. காலணிகளை அணிவதன் மூலமும், கழிப்பிடங்களைப் பயன்படுததுவதன் மூலமும் இப்புழுக்கள் உடலுக்குள் செல்லாமல் தடுக்கலாம்.

ancylostomiasis : **குடற்புழு நோய்**: மனிதரின் குடலில்கொக்கிப் புழுக்கள் மொய்தது உண்டாகும் நோய். இதனால் ஊட்டச்சத்துக் குறைபாடும், கடுமையான இரத்த சோகையும் ஏற்படும்.

androblastoma : **ஆண்மையாக்க நோய்** . பெண் கருப்பையில் ஏற்படும் ஒருவகைக் கட்டி. இது ஆண்பால் அல்லது பெண்பால இயக்கு நீர்களை (ஹார்மோன்) உற்பத்தி செய்து, பெண்களிடம் ஆண் தன்மையினையும், சிறுமியரிடம் பருவத்திற்கு முந்தியே பூக்கிற தன்மையையும் உண்டாக்குகின்றன.

androcur . **ஆண்ட்ரோக்குர்** : 'சைப்ரோட்டெரான்' என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

androgens : ஆண்பால் இயக்குநீர்; ஆண்மையூக்கி: ஆண்பால் மரபுக் கூறுகளை வளர்த்துப் பேணக் கூடிய இயக்கு நீர்மப் பொருள் (ஹார்மோன்). இதனால், ஆண்களிடம் மயிர் வளர்வது, குரல் ஆண் குரலாக மாறுவதும் நடைபெறுகின்றன. பெண்களிடம் இது ஆண் தன்மையை வளர்க்கின்றன.

andursil : ஆண்டுர்சில் : அலுமினியம் ஹைட்ராக்சைடும் மக்னீசியம் ஹைட்ராக்சைடும் கலந்த கலவையின் வாணிகப் பெயர். இது புளிப்பு மாற்று மருந்தாகவும் வயிற்றுப் பொருமல் அகற்றும் மருந்தாகவும் பயனபடுகிறது.

anencephaly : மூளையின்மை: கருவிலேயே மனித இயல்பு இல்லா திருத்தல். இது வாழ்க்கைக்கு ஒவ்வாத நிலை. கருவை அடுத்துச் சுற்றியுள்ள சவ்வில் சுரக்கும் திரவததில் ஆல்ஃபாஃபெட்டோபுரட்டீன் அதிக அளவில் இருப்பதைக் கொண்டு இது கண்டறியப்படுகிறது.

anethaine : அனித்தைன் : 'அமித்தோக்கைன்' என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

aneurine : நரப்பூட்டச் சத்து (அனிரின்); சிறுநீரின்மை : சத்துக் குறைபாட்டால் நரம்புகள் சீர் கெடாதபடி தடுக்கும் ஒருவகை ஊட்டம். தையாமின் அல்லது வைட்டமின்-B ஊட்டச்சத்தின் பழைய பெயர்.

aneurysm : குருதிநாள அழற்சி : குருதி நாளம் (தமனி) இயற்கை மீறி வீங்கியிருத்தல். தமனிச் சுவரில் ஏற்படும் தளர்வு பலவீனம் காரணமாக இது உண்டாகிறது.

angiectasis : குருதிநாள அழற்சி; குருதிக் குழாய்த் தளர்ச்சி : இரத்த நாளங்கள் இயல்புக்கு மீறி விரிவடைந்திருத்தல்.

angitis : நாள வீக்கம் : இரத்த நாளம் அல்லது நிணநீர் நாளம் வீங்கியிருத்தல்.

angina: தொண்டை அடைப்பு; இதய வலி; நெஞ்சுவலி : இடது மார்பு வேதனை தரும் இதய நோய் காரணமாக ஏற்படும் மூச்சடைப்பு அல்லது தசைச் சுருக்க உணர்வு தற்காலிகமாக நெஞ்சுப்பை வலி ஏற்படும். இந்தத் தற்காலிக வலி, கைகளுக்கும் பரவலாம். முனைப்பு உடற்பயிற்சியினால் இந்த தாக்குதல் தூண்டப்படுகிறது.

angiocardiography ; இதய இயக்கம் காட்டுங்கருவி : ஒளி ஊடுருவாத ஓர் ஊடு பொருளை ஊசி மூலம் செலுத்திய பின்பு இதய அறைகளையும், பெருங்குருதி நாளங்களையும் கண்கூடாகக் காட்டும் கருவி

angioma : குருதிக் கட்டி: இரத்த நாளங்களில் ஏறபடும இரத்தக் கட்டி.

angina pectoris : இதயக் குத்தல்; இடது மார்பு வலி : இதயததிற்கு இரத்தம் வழங்கும் குருதிநாளம குறுகலாவதன் காரணமாக இடது மார்பு வேதனை தரும் கடும் இதய வலி.

angiogram; angiography: இதய அழுத்தப் பதிவு, குழல வரைவியல்: இதய அழுததத்தைப் பதிவு செய்வதற்கான ஒரு பரிசோதனை முறை. இதயத்தில் நடத்தப்படும இப்பரிசோதனை மூலம் எந்தவிதமான இதயச் சிகிச்சையளிக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. ஒரு சிறிய குழாயை (Catheter) துடையின் முதன்மைத் தமனி அல்லது மூச்சுக் குழாய்த் தமனி வழியே செலுத்தி அதன்மூலம் இதய இயக்கத்தைப் பதிவு செய்கிறார்கள் ஒரு தனி வகைத் திரவம் தமனியினுள் செலுததப்பட்டு, முக்கியப் பகுதிகள் ஆராயப்பட்டு உடனுக்குடன் படமும எடுக்கப்படுகிறது. இது

முடிந்ததும் அந்தக் குழாய் எடுக்கப்பட்டு அங்கே நேரான அழுத்தம் மூலம் 15-30 நிமிடம் வரை குருதிக் கசிவை நிறுததுவதற்காக அழுத்தப்படவேண்டும்.இந்தப் பரிசோதனை முடிந்த அன்றேகூட வீட்டுக்குச் சென்றுவிடலாம். இந்தப் பரிசோதனை செய்து கொள்வதற்கு முன்பு கடைப்பிடிக்க வேண்டிய மூன்று இன்றியமையாத நிபந்தனைகள்: (1) பரிசோதனைக்கு முந்திய நாள் இரவுக்கு மேல் எதையும் சாப்பிடவோ குடிக்கவோ கூடாது. (2) காலையில் பல் தேய்க்கலாம; வாய்கழுவலாம். ஆனால், தண்ணீர் உள்ளே செல்லாமல பார்த்துக் கொளளவேண்டும், (3) பரிசோதனை முடிந்து உடனே வாகனங்களை ஓட்டக்கூடாது

அமெரிக்காவில் இந்தப் பரிசோதனையை "வடிகுழாய் இதய அழுதத அளவீடு (Cardiac Cathete-reization) என்கின்றனர்.

angiology : **குருதி நாளவியல்; உடற்குழாயியல்; குழலியல் :** *குருதி நாளங்கள், ஊனீர நாளங்கள் பற்றி ஆராயும் அறிவியல்.*

angle of mandible . கீழ்த் தாடைக கோணம் :

angioma · குருதி நாளக் கட்டி : *இரதத நாளஙகளில் ஏற்படும் இரத்தக் கட்டு*

angiooedema · குருதி நாளழற்சி : *இது ஒரு கடுமையான காஞ்சொறி நமைச்சல் நோய். ஒவ்வாமையால முகம, கைகள் பிறப்புறுப்புகள் ஆகியவற்றின் தசைகள், வாய், தொண்டை ஆகியவறறின் சளிச்சவ்வுகளிலும் உண்டாகிறது.குரல் வளையில் ஏற்படும் அழறசியினால் மரணம் நேரிடலாம் குரல் வளை அழற்சியினால் உடனடியாக நாளங்களில ஊடுருவல் அதிகரிக்கிறது. இதனால இரத்த நாளங்களிலிருந்து ஊனீர் அண்டைத் திசுகளுக்குள் ஊடுருவிச் செல்கிறது. வீககமும் ஏற்படுகிறது.*

angioplasty : குருதிநாள ஒட்டறுவை மருத்துவம்; குருதிக் குழாய்ச் சீரமைப்பு; குழல் அமைப்பு : *இரத்த நாளங்களில இழைம அறுவைச சிகிச்சை செய்தல்.*

angiosarcoma:குருதிநாளப் புற்றுக் கட்டி; குருதிக் குழாய்ப் புற்று; குழல் சதைப் புற்று : *இரத்த நாளங்களில் உணடாகும உக்கிரத் தன்மை வாய்ந்த கட்டி.*

angiospasm : குருதிநாள இசிப்புத் தசைச் சுருக்கம்;குழாய் இசிவு:குருதி *நாளங்களில ஏற்படும கடுமையான தசைச் சுரிப்பு நோய்.*

anhidrosis : வியர்வைக் குறை நோய்; வியர்வையின்மை : *வியர்வை போதிய அளவில் சுரக்காததால் உண்டாகும் நோய்.*

anhidrotics : வியர்வைக் குறைப்பு மருநது; வியர்வைத் தணிப்பிகள் : *வியர்வை சுரப்பதைக் குறைக்கும் ஒருவகை மருந்து*

anhydraemia : குருதித் திரவக் குறைநோய்; வரளி இரத்தம்;குருதிக் குறை . *இரத்ததததில திரவம் போதய அளவு இலலாதிருத்தல்.*

anhydrous · நீரின்மை நோய்; வரண்ட நோய்; நீரற்ற; நீரில்லா : *உடலில் நீர் அடியோடு இல்லாது போதல்*

anicteric : மஞ்சட் காமாலையின்மை, மஞ்சள் நிறமின்மை : *மஞசட் காமாலைக் கோளாறு இல்லாதிருத்தல.*

anileridine : அனிலரிடின்· *அபினி போனற பண்புகள கொணட ஒரு செயற்கை மருந்து*

ansiline அன்சிலின் *நிலக்கரியிலிருநது எடுககப்படும் எண்ணெய்ப் பசையுளள ஒரு கூட்டுப் பொருள்.*

இது நோய் நுண்மத் தடைச்சாயம் தயாரிக்கப் பயன்படுகிறது.

aniridia : விழித்திரைக் கோளாறு; விழிச் சுருக்குத் தசையின்மை; திரையின்மை : கண்ணில் விழித திரை இல்லாதிருத்தல் அல்லது குறைபாடுடையதாக இருத்தல். இது பெரும்பாலும் பிறவியிலேயே ஏற்படும் கோளாறு.

anischuria : சிறுநீர் ஒழுக்கு சிறு; நீர் அடக்க இயலாமை; சிறுநீர் கட்டற்ற ஒழுக்கு : சிறுநீரை அடக்க இயலா வண்ணம் கட்டற்ற முறையில் ஒழுகிக் கொண்டிருப்பது.

anisocoria : சமனிலாக் கண்மணி; ஒழுங்கற்ற கண்பார்வை: இரு கண் மணிகளின் விட்டம் ஏற்றத்தாழ்வுடன் இருத்தல்

anisocytosis : சமனிலாச் சிவப் பணுக்கள்; சமனிலா செல்லியம் : இரத்தச் சிவப்பணுக்கள் வடிவளவில் ஏற்றத்தாழ்வுடன் இருத்தல்.

anisomelia : சமனிலா உறுப்புகள்: உடல் உறுப்புகள் சமச்சீரான நீளத்தில் இல்லாதிருத்தல்.

anisometropia : கண்ணொளிக் கோட்ட மாறுபாடு ; சமனிலா பார்வை வீக்கம. ஒத்த பார்வையின்மை : இரு கண்களின ஒளிக கோட்டமும் மாறுபட்டிருத்தல்.

ankle clonus : கணுக்கால் தசைத் துடிப்பு; கணுக்கால் உதறல் : உள்ளங்காலில் அழுத்தம் அதிகரிப்பதன் காரணம் பாதம் பின்புறமாக வளைகிறபோது பினகால் தசைப் பகுதி விரைவாக மாறி மாறிச் சுருக்கமும் தளர்வுமாகத் துடித்தல்

ankylurethria : சிறுநீர் வடிகுழாய் அடைப்பு; சிறுநீர் வடிகுழாய் குறுக்கம் · சிறுநீா வடிகுழாய் அடைப்பு அல்லது சிறுநீர் வடிகுழாய் குறுகியிருப்பது.

ankyloblepharon : கண்ணிமை இணைவு; ஒட்டிய இமை; கண்ணிமைகளின் விளிம்புகள் இயற்கைக்கு மாறாக ஒட்டிக் கொண்டிருத்தல்.

ankylosis: மூட்டு விறைப்பு: நோய் காரணமாக ஒரு மூட்டு விறைத்து விடுதல்.

annular : மூட்டு இணைப்புத் தசை நார்: வளைய உரு: மோதிரம் பேர்ன்ற வளைய வடிவுடைய தசை நார். 'மணிக்கட்டு, கணுக் கால் மூட்டுகள உள்ளது போனற நீண்ட எலும்புகளை இது பிணைக் கிறது.

anodyne : நோயாற்றும் மருந்து (அனோடைன்); வலியகற்றி; வலி நீக்கி : வலிமை நீக்கும் ஒருவகை மருந்து.

anogenital : குதம் - பிறப்புறுப்பு மண்டலம் : குதம், பிறப்புறுப்பு மண்டலம் தொடர்பான.

anomaly : முறை திறம்பிய; நெறி விலகல் : இயல்பு நிலையிலிருந்து மாறுபட்ட அல்லது வேறுபட்ட அல்லது இயல்பு திறம்பிய.

anomia : பெயர் மறதி நோய் : பொருள்களின் அல்லது ஆட்களின் பெயர்களைக் கூறமுடியாத நிலை.

anomie : தனிமையில் வாழ்பவர் : மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள முடியாத நிலையில் மற்றவர்களுடன இணைந்து வாழ முடியாத காரணததால் தனிமையில் வாழும் ஒரு நபர்

anonychia: நகமின்மை : நகங்கள் இல்வாதிருத்தல்.

anoperineal: குதம்-எருவாய் மண்டலம் : குதம், விரைப பைக்கும் எருவாய்க்கும் இடைப்பகுதி ஆகியவை தொடர்பான மண்டலம்.

anopheles : மலேரியாக் கொசு; முறைக் காய்ச்சல் கொசு : முறைக் காய்ச்சலை (மலேரியா) உண்டாக

கும் ஒருவகைக் கொசு இனம். இந்தக்கொசு இனத்தின் பெண்கொசுக்கள கடிப்பதால் மனிதருக்கு முறைக் காய்ச்சல் உண்டாகிறது.

anoplasty : குத அறுவைச் சிகிச்சை : குதத்தில் அறுவைச் சிகிச்சை செய்து நோயைக் குணப்படுத்தும் முறை.

anorchism : விரையின்மை : ஒருவருக்கு ஒன்று அல்லது இரண்டு விரைகளும் பிறவியிலேயே இல்லாதிருத்தல.

anorectal : குத வாய் தொடர்பான நோய் : குதம், குதவாய் தொடர்பான வெடிப்பு நோய்

anorectic : பசியின்மை; பசி தணிப்பி; பசியடக்கி; பசி குறைப்பி :
(1) உணவு உண்பதில் விருப்பம் இல்லாதிருக்கும நோய்.
(2) பசியின்மை நோயால் அவதியுறுபவர்.

anorexia (anorexia nervosa) : பசியின்மை நோய், பசியாமை நோய். பெரும்பாலும் குமரப் பருவப் பெண்களைப் பீடிக்கும் ஒரு சிக்கலான உளவியல நோய உடல் பருத்துவிடுமோ என்ற அச்சத்தில் இளம பெண்கள் மிகக குறைவாக உணவு உண்பதைப் பழக்கமாக்கிக் கொள்ளும்போது இந்தப் பழக்கம் ஓர் உளவியல் நோயாக மாறி உணவு உண்பதில் வெறுப்பை உண்டாக்கி விடுகிறது இதனை "ஒல்லியாவதற்கு அடிமையாதல்" என்றும கூறலாம. இந நோய் கணடவர்களுக்கு உடல் எடை குறைகிறது; உடல் எடை குறைந்தாலும் உடல் குணடாகிறது என னும அச்சவுணர்வு தீவிரமடைகிறது உடல மெலிதல், இயல்புக்கு மீறி மாதவிடாய வராது போதல், மலச்சிக்கல், கால் விக்கம ஆகியவை ஏற்படுகினறன. அததுடன மிகக் குறுகிய காலத்தில் பெருந்தீனி உணணும் பெரும் வேட்கையும் உணடாகிறது. உணவு உட்கொள்வது குறைந்து கொணடே வருவதால் இறுதியில் மரணம் விளைகிறது.

anosmia : முகர்வுணர்வின்மை ; மோப்ப உணர்வின்மை; மோப்பமின்மை : முகரும் உணர்வை இழந்து விடுதல்.

anovular : கருவளர்ச்சியின்மை; முட்டையின்மை;சூலற்ற : கருத்தடை மாததிரைகளை உட்கொள்வதால் பெண்களிடம் கருவுறுதலின்றி மாதவிடாய் உண்டாகிறது. இதனால் இரத்தப் போக்கு அதிகமாகும்.

anoxaemia : குருதி ஆக்சிஜன் குறைபாடு; உயிர்வளிக்குறை குருதி: இரதத்தில் ஆக்சிஜன இலலாதிருத்தல்.

anoxia திசு ஆக்சிஜன் குறைபாடு; உயிரியமின்மை, உயிரிய முடக்கம் : திசுக்களில் ஆக்சிஜன் இல்லாதிருத்தல்.

antacid : புளிப்பு நீக்க மருந்து, அமில எதிர்ப்பி, அமில முறி : வயிற்றில் புளிப்பை அகற்றும் மருந்து, காடித் தன்மைக்கு எதிரடான அல்லது மாற்றான மருந்து. காரத் தன்மையுடைய வயிற்றுவலி நீக்கத தூள் கலவை மருநதுகளில பயன்படுத்தப்படுகிறது.

antagonism : எதிர்ப்புத் தன்மை; எதிர்ப்பியல். சில மருநதுகளிலுள்ள தீவிரமான எதிர்ப்புத தன்மை. எடுத்துக்காட்டாக, "நாக்சோலோன்" என்ற மருந்து, மயக்க மருந்துகளின அனைத்து விளைவுகளையும் எதிர்மாறாக்குகிறது. சிலவகைத் தசைகளுக்கும், உறுப்புகளுக்குங்கூட இநத எதிர்ப்புத தனமை உண்டு.

antazoline : எதிர்விழுப்புப் பொருள் : ஒவ்வாமைக்கு எதிர்ப்பு மருந்து. ஹிஸ்டமின் எனும் பொருளுக்கு எதிர்ப் பொருள்களில ஒன்று.

anteflexion : **உறுப்பு முன் வளைத்தல்; முன்மடக்கம் :** கருப்பையின் நிலையிலிருந்து பொதுவாக முன்னோக்கி வளைந்திருக்கும் ஓர் உறுப்பு.

antemortem : **மரணத்திற்கு முந்திய; இறக்குமுன்; மரிக்குமுன்;** மரணததிற்கு முற்பட்ட நிலை.

antenatal : **பேறு காலத்திற்கு முற்பட்ட; முன்பேற்று; கருககாலம்: பேற்று முன் நிலை :** பிள்ளைப் பேற்றுக்கு முந்திய நிலை.

antepar : **ஆன்டிப்பார் :** பைப்பரசீன் அடங்கிய நீர்மம் அல்லது மாத்திரை.

antepartum : **பிறப்புக்கு முன்; மகப்பேற்றுக்கு முன்; பிறப்பு முன் நிலை :** பொதுவாக, நிறைமாத மகப்பேற்றுக்கு முந்திய 4 மாதங்கள். அதாவது, 6ஆம் மாதம் முதல் 9ஆம் மாதம் வரை.

anteversion : **முன்னோக்கிச் சாய்வு; முன் சாய்வு :** உடலின் ஓர் உறுப்பு அல்லது பகுதி முன்னோக்கிச் சாய்ந்தோ இடம்பெயர்ந்தோ இருத்தல்.

anthelmintic : **குடற்புழு நீக்க மருந்து; புழுப்பகை; குடற்புழு மருந்து :** குடலிலுள்ள புழுக்களை வெளியேற்றுகிற அல்லது ஒழிக்கிற ஒரு மருந்து.

anthiphen : **ஆந்திஃபன் ;** மெப்பிராமின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

anthracosis : **நுரையீரல் நோய்; நுரையீரல் கரிப்படிவு; கரிம நோய் :** நிலக்கரித்தூள் கலந்த காற்றை உட்கொள்வதால் உண்டாகும் நுரையீரலில் கார்பன் சேர்ந்து உண்டாகும் நோய்.

anthrax : **நச்சுப்பரு :** கால்நடைகளுக்கு உண்டாகும் ஆபத்தான நச்சுச் சிக்கட்டு நோய் இது ஒரு தொற்று நோய். இது கால் நடைகளிடமிருந்து மனிதருக்கும் தொற்றக் கூடும்.

நச்சுப்பரு

anthropoid : **சுருங்கிய இடுப் பெலும்பு :** இடுப்பு வளையம் பக்கத்துக்குப் பக்கம் குறுகிச் சுருங்கியுள்ள இடுப்புக்கூடு.

anthropology : **மானுடவியல்; மாந்தவியல் :** மனிதகுலத்தைப் பற்றி ஆராயும் துறை. இதில் பல பிரிவுகள் உண்டு.

anthropometry : **மனித உடலளவை; உடல் அளவி; மானிட நிலை அளவி :** மனிதரின் உடல், அதன் உறுப்புகள் ஆகியவற்றின் அளவை ஒப்பீடு செய்வதற்காகவும், பாலினம், வயது, எடை, இனம் போன்றவற்றுக்கான உருமாதிரிகளை வகுப்பதற்காகவும இந்த அளவை பயன்படுகிறது.

antiadrenergic: **நரம்புத் தூண்டல் சமனமாக்கல் :** பரிவு நரமபு மண்டலத்தின் நரம்பு இழைகளினால் உண்டாகும் தூண்டு விளைவுகளைச் சமனப்படுததுதல் அல்லது குறைத்தல்.

antiallergic : **ஒவ்வாமைத் தடுப்பு; மாற்று விளைப்பகை :** ஒவ்வாமையைத தடுததல்; குறைத்தல்.

antianabolic : **புரதச் சேர்மம் தடுப்பு :** உடல் புரதத்தின் கூட்டிணைவைத் தடுத்தல.

antianaemic : **குருதிப் போக்குத் தடுப்பு மருந்து; சோகை எதிர்ப்பி :** குருதிக் குழாய்களிலிருந்து இரத்தம் வெளிப்படுவதைத் தடுக்கப் பயன்படும் மருந்து. எடுத்துக் காட்டு: வைட்டமின் K.

antiarrhythmic : இதய சீர்மாறிய துடிப்பு மருத்துவம் : *பலவேறு இதயத் துடிப்புக் கோளாறுகளைக் குணப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் மருநதுகளும், சிகிச்சை முறைகளும்.*

antibacterial பாக்டீரியா எதிர்ப்பு மருந்து; நுண்ணுயிரி முறி : *பாக்டீரியாக்களை அழிக்கிற அல்லது அவற்றின் வளர்ச்சியைத் தடுக்கிற ஒரு மருந்து.*

anti beri beri : தவிட்டான் எதிர்ப்பு மருந்து : *ஊட்டசசததுக் குறைவினால் உண்டாகும தவிட்டான் என்ற நோய்க்கு எதிரான மருந்து. எடுத்துக்காட்டு: வைட்டமின் B கலவையிலுள்ள தையாமின்.*

antibiosis : உடன்வாழ் ஒவ்வாமை எதிர் உயிரிகள், உயிர்ப் பகைமை : *ஓா உயிரின இயல்பான வாழ்க்கை விளைவான பொருள், மற்றோா இன உயிரின் வளர்ச்சிச்குக் கேடாக இருக்கும் தன்மை.*

antibiotics : நோய் நுணம எதிர்ப்பு பொருள்கள், உயிாக கொல்லி; நுண்ணுயிர்க் கொலலி; நோய் முறியம் *பூஞ்சணம், பாக்டீரியா போன்றவற்றிலிருந்து எடுக்கப்படும் நோயக்கிருமி எதிர்ப்புப் பொருள்கள் பென்சிலின இதற்கு ஓர் எடுததுக்காட்டு. பினனர் கணடுபிடிக்கப்பட்ட டெட்ராசைக்ளின போன்றவை நோய் உண்டாக்கும் உயிரிகளுக்கு எதிராகத திறம்பட வேலை செய்கின்றன, இவற்றை வாய்வழியாகவும் கொடுக்கலாம் நியோமைசின, பாசிட்ராசின போன்றவை அதிக நசசுத் தன்மையுடையனவாக இருப்பதால், உளளே பயனபடுத்தப்படுவதில்லை. புறக்காயங்களுக்குப் பயன்படுததப்படுகின்றன.*

antibody நோய் எதிர்ப்பொருள; தற்காபபு மூலம் : *தீங்குதரும் அயற பொருளுக்கு எதிராக உயிரினத்தின் உடலில் உண்டாகும் பொருள்.*

anticholinergic : பித்தநீர் நரம்புக் கோளாறு : *பிததநீர் நரம்பு, அசிட்டில்கோலின் என்ற ஒரு வேதியியல பொருளின் மூலமாகத் தனது தூண்டல்களை நரம்பு அல்லது இதய நரம்புச் சந்திப்புகளுக்கு அனுப்புகிறது இந்த நடவடிக்கைக்குத் தடையாக இருக்கும் செயல்.*

anticoagulant : குருதிக்கட்டுத் தடைப் பொருள: உறைவு எதிர்ப்பி : *உடலில் காயம்பட்டு இரத்தமஅளவுக்கு அதிகமாக வெளியேறி வீணாவதைத் தடுப்பதற்காக, இரத்தத்தை இறுகி உறையச் செய்யும் பொருள் இரததத்தில் உள்ளது. இவ்வாறு இரத்தம் உறையச் செய்வதைத் தடுக்கும் பொருள் குருதிக்கட்டுத் தடைப் பொருள் ஆகும். நோயியல் பரிசோதனைகளுக்காக இரத்தம் முழுவதையும் எடுக்க வேண்டியிருக்கும்போது, ஆக்சாலிக் அமிலம (வெல்லக அமிலம) குருதிக் கட்டுத் தடைப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. இரத்தம் செலுத்துவதற்காக இரத்தம் எடுக்கும்போது, சோடியம சைட்ரேட் குருதிக் கட்டுத் தடைப்பொருளாகப் பயன படுகிறது.*

anticonvulsant வலிப்புத் தடைப் பொருள; வலிப்படக்கி; வலிப்புமுறி. *வலிப்பை அறவே ஒழிக்கிற அல்லது தடுக்கிற பொருள்*

antidepressants : சோர்வு நீக்க மருந்துகள்; உளச் சோர்வுப் போக்கிகள் : *சோர்வினை அகற்றுகிற மருந்துகள் டிரைசைக்ளிக் குழுமத்தைச் சேர்ந்த மருந்துகள் இதற்குப் பெருமளவில பயன்படுத்தப்படுகின்றன. அகச்சோர்வுக் கோளாறுகளுககு இவை பயன்படுகின்றன,*

antidiabetic: நீரிழிவு மருத்துவம்; சர்க்கரை நோய் எதிர்ப்பி; நீரிழி வடக்கி : *நீரிழிவு நோய்க்கு எதிரான மருத்துவச் சிகிச்சை முறைகளை இது குறிக்கிறது. இயக்குநீர் கணையச் சுரப்பு நீர் (இன்சுலின்) வாய்வழி மருந்துகள் ஆகியவை இதில் அடங்கும்.*

antidiphtheritic : தொண்டை அழற்சித் தடுப்புச் சிகிச்சை : *தொண்டை அழற்சி நோயைத் (டிப்தீரியா) தடுப்பதற்கான சிகிச்சை முறைகள் தொற்று நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் இதில் அடங்கும்.*

antidiuretic : சிறுநீர்க் கழிவுத் தடுப்பு மருத்துவம்; சிறுநீர்க் குறைப்பி; நீர் பெருக்கடக்கி : *சிறுநீர் அளவுக்குமீறிக் கழிவதைத் தடுப்பதற்கான சிகிச்சை முறை.*

antidote : மாற்று மருந்து; நச்சு முறிப்பி; நச்சுமுறி : *நச்சுப் பொருளை முறிப்பதற்குக் கொடுக்கப்படும் மாற்று மருந்து. எடுத்துக் காட்டாக அமில நஞ்சினை முறிக்க சோடியம் பைக் கார்பனேட் போன்ற காரப் பொருட்களைக் கொடுத்தல்.*

anti-dysenteric : அளைச்சல் தடுப்பு மருந்து : *வயிற்றளைச் சலைத தடுப்பதற்கான மருந்து.*

antiembolic: குருதிக் குழாயடைப்புத் தடுப்பு மருந்து : *பக்க வாதத்திற்குரிய நிலையில் குருதிக் குழாய்களில குருதிக்கட்டி வழியடைப்பதைத் தடுக்கும் மருந்து.*

antiemetic : வாந்தித் தடுப்பு மருந்து; வாந்தியடக்கி : *குமட்டலையும், வாந்தியையும் தடுக்கும் மருந்து.*

antienzyme . இயக்குநீர் தடைப் பொருள்; இயக்கு நீர் எதிர்ப்பி : *ஓர் இயக்குநீர் (என்சைம) செயற்படுவதைத் தடுக்கும் பொருள். இது சிரணமண்டலத்தில் இருந்தால், நோய்த்தடுப்பை எதிர்க்கிறது.*

antiepileptic : வலிப்பு நோய் தடுப்பு மருந்து; வலிப்படக்கி மருந்து : *காக்காய் வலிப்பு அடிக்கடி வருவதைக் குறைக்கும்மருந்து.*

antifebrile : காய்ச்சல் தடுப்பு மருந்து; காய்ச்சலடக்கி : *காய்ச்சலைத் தடுக்கும் அல்லது குறைக்கும் மருந்து.*

antifebrin : காய்ச்சல் எதிர்ப்பு மருந்து : *காய்ச்சலைக் குணப்படுத்தக் கொடுக்கப்படும் அசிட்டானிலைடு என்ற மருந்து. இது அசிட்டிக் அமிலம், அனிலின் இரண்டும் கலந்து பெறப்படுகிறது.*

antifibrinolytic :ஊனீர் கோளாறு தடுப்பு மருந்து : *கட்டியாக உறையக்கூடிய ஊனீர் கசிவுக் கோளாறுகளைத் தடுக்கக்கூடிய மருந்து.*

antifungal : காளான் ஒழிப்பு மருந்து; காளான் நீக்கிகள்; பூசணப் பகை : *நோய்த்தன்மையுடைய காளான் (நாய்க்குடை) வகையை ஒழிக்கும் மருந்து.*

antigen : காப்பு மூலம்; உடற்காப்பு ஊக்கி; விளைவியம் : *அயல் பொருளிலிருந்து உயிரினைக் காக்கும் தற்காப்புக்காக உண்டு பண்ணும் பொருள்மூலம்.*

antihaemophilic globulin(AHG) குருதிப்பெருக்குத் தடுப்புப் புரதப் பொருள்: *இரத்தக்கட்டியில் அடங்கியுள்ள காரணி VIII.இது நிணநீரில் உள்ளது; குருதி நிணநீரில்இல்லை. குருதிப் பெருக்கில் குறைவாக இருக்கிறது.*

antihaemorrhagic : குருதிப் போக்குத் தடைப் பொருள் , *குருதிக் குழாய்களிலிருந்து இரத்தம் வெளிப்படுவதைத் தடுக்கும் பொருள். இதனை வைட்டமின்-K என்பர்.*

antihypertensive : **உயர் இரத்த அழுத்தத் தடைப்பொருள் ; மிகை யழுத்தக் குறைப்பி; பேரழுத்தத் தணிப்பி :** *உயர்ந்த இரத்த அழுத தத்தைக் குறைக்கும் ஒரு பொருள்.*

antiinfective : **தொற்றுத் தடைப் பொருள் :** *நோய் தொற்றுவதைத் தடுக்கும் மருந்து. இதனை வைட்ட மின் 'A' என்பர்.*

antiinflammatory : **வீக்கத் தடுப் புப் பொருள்; நீக்கி; அழற்சித்தடை:** *வீக்கதைதைக் குறைக்கிற அல்லது வீக்கம் ஏற்படாமல் தடுக்கிற பொருள்.*

antileprotic : **தொழுநோய்த் தடுப்பு மருந்து; தொழுநோய் எதிர்ப்பி; தொழுநோய்ப் பகை.** *தொழுநோய் ஏற்படாமல் தடுக் கிற அல்லது தொழுநோயைக் குணப்படுத்துகிற ஒரு மருநது.*

antilymphocyte serum (ALS) : **நிணநீர் அணு எதிர்ப்பு ஊனீர்ப்படிநீர்ச் செல் எதிர்ச் சீரம் :** *நிணநீர்களின் செயல்களைத் தடுத்து அவற்றைக் கட்டியாக்குகிற நோய் எதிர்ப்புப் பொருள்களையுடைய ஊனீர்.*

antimetabolite : **வளர்சிதை மாற்றத் தடுப்புப் பொருள் :** *ஓர் உயிரணுவின கருமையப் புரதங் களில் ஒருங்கிணைதது அதன் வளர்ச்சியைத் தடுபபதற்குத் தேவையான வேதியியல் பொருள் களை ஒத்திருக்கும் ஒரு கூட்டுப் பொருள். இது புற்று நோயச் சிகிச்சையில் பயன்படுத்தப்படு கிறது.*

antimicrobial: **நுண்ணுயிர் எதிர்ப் புப் பொருள; நுணணுயிர்ப் பகை; நோய் நுணமத் தடை :** *உயிர் நுண் மங்களுககு எதிராகச் செயறபடும் பொருள்*

antimigraine : **ஒற்றைத் தலை வலித் தடுப்பு மருந்து:** *கடுமையான ஒற்றைத் தலைவலியைத் தடுக்கும் மருநது.*

antimitotic : **உயிரணுவுப் பின விபக்கத் தடுப்பு மருந்து; திசுப்பிளப் புத் தடை :** *உயிரணு நுண்ணிழை யாகப் பிரிந்து இனப்பெருக்கம செய்வதைத் தடுக்கும் மருந்து. புற்று நோயைக் குணப்படுத்து வதற்கான பல மருந்துகளை இது குறிக்கும்.*

antimony and potassium tart rate: **கருநிமிளை மற்றும் பொட்டா சியம் டார்ட்ரேட் :** *அஞ்சனக்கல் எனப்படும் கருநிமிளை (ஆன்டி மணி) பொட்டாசியம் புளியகக் காடியின் உப்புச்சத்து அடங்கிய ஒருவகைப் பழைய மருந்து. இது இப்போது, வெப்பமண்டல நோய் களைக் குணபபடுதத முக்கிய மாகப் பயன்படுத்தப்படுகிறது.*

antimutagen : **வகை மாற்றத் தடுப்புப் பொருள் :** *உயிரின வகை மாற்ற வினையைப் பயனற்றதாக் கும் ஒருபொருள்.*

antimycotic : **காளான் அழிப்புப் பொருள்; காளான் எதிர்ப்பி :** *நோய் உண்டாக்கும ஒட்டுயிர்க்காளான் களை அழிக்கும் ஒரு மருந்து.*

antineoplastic: **புது உயிர் ஊன்ம எதிர்ப்புப் பொருள் .** *புதிய உயிர் ஊன்மங்களுககு எதிராகச் செயற் படும் ஒரு பொருள்.*

antineuritic : **நரம்பு நோய்த் தடுப்பு மருந்து; நரம்பழற்சித் தடை:** *நரம்பு நோயைத தடுக்கும மருந்து. இது குறிப்பாக வைட்டமின்-B கலவையைக் குறிக்கும்*

antioxidants : **ஆக்சிகரண எதிர்ப்புப் பொருள; ஆக்சியேற்றி எதிர்ப்புப் பொருள; உயிர் வளியேற்ற எதிர்ப்பிகள :** *ஆக்சிகரண முறை யைத் தாமதபபடுத்தும் ஒரு பொருள்.*

antiparkinson (ISM) drugs : **பார்க்கின்சன் நோய்த்தடை மருந்து:** *'ஃபினோத்தியாசின்' போனற முக்கிய சமனப்படுத்தும் மருந்து*

கள். இவை நரம்பு சார்ந்த அல்லது உளவியல் சார்ந்த நோய்களைக் குணப்படுத்தும் மருந்துகளின் பக்கவிளைவுகளைத் தடுக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

antiparasitic : **ஒட்டுயிர் ஒழிப்புப் பொருள்; ஒட்டுண்ணி எதிரி :** ஒட்டுண்ணிகளை அல்லது ஒட்டுயிர்களைத் தடுக்கிற அல்லது அழிக்கிற பொருள்.

antipellagra : **தோல் வெடிப்பு நோய்த் தடை மருந்து :** ஊட்டக் குறைவினால் ஏற்பட்டு, இறுதியில் மூளைக் கோளாறில் கொண்டு விடும் தோல் வெடிப்பு நோயைக் குணப்படுத்தும் மருந்து. வைட்டமின் 'B' கலவையிலுள்ள நிக்கோட்டினிக் அமிலம் என்ற பகுதி இப்பணியைச் செய்கிறது.

antiperiodic : **காலாந்தர நோய்த் தடுப்பு மருந்து :** முறைக் காய்ச்சல் (மலேரியா) போன்ற காலாந்தரங்களில் திரும்பத் திரும்ப வருகிற நோய்களைத் தடுப்பதற்கான மருந்து.

antiperistalsis : **தசைச் சுருக்க எதிர்மாற்று அலை: எதிரலையியக்கம்; குடலலை எதிர்ப்பிகள்; குடல் அசைவு மறிநிலை :** உணவு சாரம் எளிதில் செல்லுவதற்கிசைவான உணாவற்ற வட்டாகாரமான தன்னியக்கத் தசைச் சுருக்க அலைகளின் இயல்பான இயக்கத்தை எதிர்மாறாக்குதல்.

antiprothrombin : **குருதிக் கட்டுத் தடுப்பு :** குருதி நாளங்களில் குருதி உறைவதைத் தடுத்தல்.

antipruritic : **அரிப்புத் தடுப்பு மருந்து; நமைச்சலடக்கி; அரிப்புக் குறைப்பி; நமைச்சுத்தடை** தோலில் அரிபபு ஏறபடுவதைக் குணப்படுத்தும் அல்லது தடுக்கும் மருந்து.

antipurpura : **செந்நீலப் புள்ளித் தடுப்பு மருந்து :** தோலின்மேல் செந்நீலநிறப் புள்ளிகள் கொண்ட நோய் ஏற்படுவதைத் தடுக்கும் மருந்து. வைட்டமின் 'P' இந்தப் பணியைச் செய்கிறது.

antipyretic : **காய்ச்சல் குறைப்பான் மருந்து; சுரமடக்கி; காய்ச்சலடக்கி; சுரத்தடை :** குழந்தைக்கணை (ரிக்கட்ஸ்) நோயைத் தடுக்கும் மருந்து. வைட்டமின் D இப்பணியைச் செய்கிறது.

antiRhesus : **உறை ஊக்க எதிர்ப்புக் கூறு :** குருதியில் உறைமம் ஊக்குங் கூறு செலுத்தப்படும்போது எதிர்ச்செயல் காட்டுகிற (Rh-positive) குழந்தை பெறுகிற பெண்களுக்குப் பிந்திய மகப்பேற்றின்போது கருமூலத்தாள் சவ்வில் பாதிப்பு ஏற்படாமல் தடுப்பதற்காக, குருதியில் உறைமம் ஊக்குங் கூறு செலுத்தப்படும்போதுஎதிர்ச்செயல் காட்டாத (Rh-negative) கூறு அளிக்கப்படுதல்.

antirheumatic: **கீல்வாதத் தடுப்பு மருந்து; மூட்டுவலித் தடை; வாதமடக்கி; முடக்கு நோய் தடுப்பி; முடக்கு நோய் நீக்கி :** கீல்வாதத்தைத் தடுக்கக் கூடிய அல்லது குறைக்கக் கூடிய மருந்து.

antiscorbutic : **சொறிநோய்த் தடுப்பு மருந்து; மூக்கு வறட்சி நோய் நீக்கி; கசிநோய்த் தடை :** ஊட்டச் சத்துக் குறைவினால் ஏற்படும் சொறி, கரப்பான, பல் எகிர் வீக்க நோயைத் (ஸ்கர்வி) தடுக்கிற அல்லது குணப்படுத்துகிற மருந்து. வைட்டமின்-C இநதப் பணியைச் செய்கிறது.

antisecretory : **சுரப்புத் தடுப்பு மருந்து; சுரப்புத் தடை; சுரப்புக் குறைப்பி :** ஊனீர் சுரப்பதைத தடுக்கும் மருந்து.

antisepsis : **நுண்மத்தடை; சீழ்த் தடை; சீழ் தடுப்பி :** நோய் நுண்மங்கள் வளர்ச்சியடைந்து திசுக்களை அழித்துவிடாமல் தடுத்தல்.

லிஸ்டர் பிரபு 1880இல் அறுவைச் சிகிச்சையில் கார்பாலிக் அமிலத்தை முதன் முதலாக இதற்குப் பயன்படுத்தினார்.

antiseptics : நோய் நுண்மத் தடை மருந்துகள்; சீழ் எதிர்ப்பி; நச்சு நீக்கி நச்சு நீக்குனி : நோய்களை உண்டாக்கும் நுண்ணுயிர்களை அழிக்கிற அல்லது அவற்றின வளர்ச்சியைத் தடுக்கிற வேதியியல் பொருள்கள். இவை உயிருள்ள திசுக்களில் பயன்படுத்தப் படுகிறது.

antiserum : நோய் எதிர்ப்பு ஊனீர்; எதிர்ச் சீரம் ; ஒருவிலங்கின் இரததததிலிருந்து தயாரிக்கப்படும் பொருள். இது தேவையான காப்பு மூலத்தின் மூலம் நோய்த் தடைக்காப்பு செய்யப்பட்டிருக்கும். இதில் பெருமளவில் நோய் எதிர்ப்புப் பொருளகள அடங்கியிருக்கும்.

antisialagogue : உமிழ்நீர் தடுப்புப் பொருள்; எச்சில் சுரப்பு ஒடுக்கி : வாயில் அளவுக்குமிஞ்சி எச்சில ஊறுவதைத் தடுக்கும் பொருள்.

antisocial : மனநலக் கேடு : சமுதாயத்தை வெறுக்கிற மனநிலை. ஒரு சமுதாயத்தின் அதன் உறுப்பினர்கள் விதிக்கும் கடமைப் பொறுப்புகளையும், கட்டுப்பாடுகளையும் ஏற்றுக் கொள்ள மறுக்கும் மனநிலை

antispasmodic : தசைச் சுரிப்புத் தடுப்பு முறை; இசிவகற்றி : தசையில் சுரிபபுக் கோளாறுகளினால் ஏற்படும் வலியைக் குணப்படுத்தப் பயன்படுததப்படும் முறை.

antisterility: மலடு நீக்க மருந்து; மலடு நீக்கி . இனப்பெருக்கத் தகுதியின்மையை நீக்குவதற்கான மருந்து வைட்டமின் 'E' இபபணியைச் செய்கிறது.

antisyphilitic . மேகப்புண் தடுப்பு முறை; மேகப் புண் ஒழிப்பு; மேகப் புண் தடை : மேகப்புண் (கிரந்தி) என்ற மேக நோயைத் தடுப்பதற்கான சிகிச்சை முறை.

antithrombin : திராம்பின் தடை; குருதியுறைவுத் தடுப்புப் பொருள் : இரத்தத்தில் இயற்கையாக இருக்கும் குருதியுறைவுத் தடுப்புப் பொருள். எடுத்துக்காட்டு : ஹெப்பாரின்.

antithrombotic : குருதிக் கட்டுத் தடுப்பு மருத்துவமுறை; படிம உறை வெதிர்ப்பு : குருதி நாளங்களில் குருதிக்கட்டு ஏற்படாமல் தடுப்பதற்கான அல்லது அதனைக் குணப்படுத்துவதற்கான சிகிச்சை முறை.

antithymocyte globulin (ATG): கணையச் சுரப்பி நோய்த் தடுப்புத் தசைப்புரதம்: கழுத்துக கணையச் சுரப்பி நீரை காப்பு மூலங்களுடன் பிணைக்கும் நோய்த் தடுப்புத் தசைப் புரதம்.

antithyroid : கேடயச் சுரப்பிக் குறைப்பு மருந்து;தைராய்டு எதிர்ப்பி: கழுததிலுள்ள நாளமற்ற சுரபபியான கேடயச் சுரப்பியின் (தைராய்டு) நடவடிக்கையைக் குறைக சுப் பயன்படும் ஒரு மருந்து.

antitoxin : நஞ்சு எதிர்ப்புப் பொருள்; எதிர் நச்சு; நச்செதிர்ப்பி; நச்சு முறியம் : ஒரு நஞ்சினை முறிப்பதற்காகக் கொடுக்கப்படும் ஒரு நோய எதிர்ப்புப் பொருள்.

antitragus : செவிக்கரடு : புறச் செவியின நுழைவாய் எதிர்ப் புடைப்பு.

antituberculosis : காசநோய் மருத்துவமுறை ; காசநோய் எனப் படும் எலும்புருக்கி நோயைத் தடுப்பதற்கான அல்லது குணப் படுத்துவதற்கான சிகிசசைமுறை.

antitumour : கழலை எதிர்ப்பு மருந்து : கழலை அலலது கட்டி

வளர்வதைத் தடுப்பதற்கான மருந்து.

antitussive : **இருமல் சிகிச்சை முறை; இருமல் அடக்கி; இருமல் தடை :** *இருமலை நீக்குவதற்கான சிகிச்சை முறை.*

antivaccinationism : **அம்மை குத்தெதிர்ப்பு :**

antivenin : நச்சு மாற்று மருந்து; நச்செதிர்ப்பி : *பாம்புக கடித்த நஞ்சுககு முறிவாகக் கொடுககப் படும் மருந்து.*

antiviral : நோய்க்கிருமி எதிர்ப்பி; அதி நுண்ணுயிர் எதிர்ப்பி . *நோய்க் கிருமிகளை எதிர்த்துச் செயற் படுதல்.*

antivitamin : **எதிர் ஊட்டம்; ஊட்டச் சாரா எதிர்ப்பி; உயிரச்சத்து எதிர்ப்பி; உயிர்ச்சத்துத் தடை :** *'வைட்டமின்' என்ற ஊட்டச்சத் தின் செயலைத் தடுக்கும் ஊட்டப் போலி. எடுத்துக்காட்டு: அவிடின்.*

anti-vivisection· உயிரோடறுவை எதிர்ப்பு: *உயிருடன் விலங்கு, சிற்று யிரினங்களை அறுத்து ஆராய் வதை எதிர்த்தல்.*

antrectomy: இரைப்பை நீர்சுரப்புத் தடை அறுவை மருத்துவம்; இரை முழை எடுப்பு : *சிறுகுடல அழற்சி யைக் குணப்படுததுவதற்காக, வயிற்றிலுள்ள இரைப்பைச் சிறு குடல் முதற்கூறறு இடை வழி வாய்ப்பகுதி உள்வளைவினை வெட்டியெடுத்துவிட்டு, இரைப் பை நீர் சுரப்பு ஆதாரத்தை அகற்றுதல்.*

antrostomy : **மேல் தாடைக் குழிவு அறுவை மருத்துவம்; முழை வாய் அமைப்பு :** *தாடை எலும்பு உட்புழையின் உட்குழிவிலிருந்து மேலதாடை உள்வளைவு வரையில் வடிமான நோக்கத்திற்காக செயற்கை முறையில் (அறுவை செய்து)திறந்து சிகிச்சை செய்தல்.*

antrum · குகைக் குழிவு; எலும்புக் குழிவெட்டு. எலும்பறை வெட்டுக் குழி: *மேல் தாடை உள் வளைவு. இது பற்களுக்கு மேலே, நெற்றிக் குள்ளே, கண்களுக்குச் சற்று மேலே காதின் பின்புறமுள்ள எலும்பில் அமைந்திருக்கும்.*

தாடைக் குழிவு

anturan : அண்டுவாரன் : *சல்ஃபின் பைராசோன் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.*

anuria: சிறுநீர்த்தடை: சிறு நீரற்ற; சிறு நீர்க்கட்டு; சிறுநீர்ப் பொய்ப்பு : *சிறு நீரகங்கள் சிறுநீரை சுரக்கா மலிருத்தல்.*

anus : குதவாய்; மலவாய்; கழி வாய் : *மலம் கழியும் வாய். இது ஒரு புழைவாய்ச் சுரிதசை. இது சுருங்கிவிரிநது மலங்கழிக்க இட மளிக்கிறது.*

anxiety : கவலை; ஏக்கம்; கலக்கம் : *அச்சவுணாவு காரணமாக உண்டாகும் கவலை. இது நரம்புக் கோளாறு காரணமாக உண்டா கிறது. கடுமையான கவலை சில சமயம் மரணம் விளைவிக்கிறது.*

anxiolytics: கவலைக் குறைப்பு மருந்து : *கவலையைக் குறைக்கும் மருநது.*

aorta : பெருந்தமனி : *இதயத்தின் இடது மேலறையிலிருநது புறப் படும் பெரிய இரத்தக் குழாய்.*

aortitis · பெருந்தமனி வீக்கம்; பெருந்தமனி அழற்சி : *இதயத் தின இடது மேலறையிலிருந்து புறப்படும் பெரிய இரத்தக் குழா யில் ஏற்படும் வீக்கம்.*

apathy : உணர்ச்சியின்மை; உணர் விழப்பு; உணர்வற்ற; ஈடுபாடின்மை: *இயலபுக்கு மீறி அக்கறையின்றி*

இருத்தல்; செயலற்ற தன்மை; பாராமுகமாக இருத்தல்.

apepsia : வயிற்று மந்தம்: செறிமானமின்மை; செமிப்புக் குறை : செமிக்கும் ஆற்றல் குறைவாக இருத்தல்.

aperient (peritive) பேதி மருந்து; மலமிளக்கி , மலத்தை இளக்கிப் பேதியாகும்படி செய்கிற மருந்து.

aperitif : பசியெழுப்பும் நீர்மம் : பசியூட்டும் மதுபானம்

aperistalsis : குடல் முடக்கு வாதம்; அலைவின்மை : குடலில் உணவு சாரம் எளிதில செல்லுவ தற்கிசைவான உணர்வற்ற வட்டாகாரமான தன்னியக்கத் தசைச் சுருக்க அலைகள் இல்லாதிருத்தல்.

apgar score : அப்கார் கணிப்பு: பிறந்த குழநதையின பொதுவான நிலைமையைக் கணித்தறிவதற்கு அமெரிக்க மருத்துவ அறிஞா டாக்டர் விர்ஜினியா அப்கார் வகுத்த ஒருமுறை. இதன்படி, மூககு வழியாக ஒரு சிறு குழலைச் செலுததி இதயத் துடிப்பு விகிதம், சுவாச முயற்சி, தோல் நிறம், தசையின் இயல்பு, அனிச்சை செயல் ஆகியவற்றின அடிப்படையில் 0,1,2 எனற கணிப்பு எண்கள் கொடுக்கப்படுகினறன. 8-10வரை கணிப்பு எண் இருக்குமாயின குழந்தை மிகச்சிறந்த நிலையில் இருக்கிறது என்று கருதப்படுகிறது.கணிப்பு எண் 7-க்குக் குறைவாக இருக்குமாயின் குழந்தையின் நிலை கவலைக்குரியது என்று கருதப்படுகிறது

aphagia : தொண்டையடைப்பு; விழுங்கின்மை : விழுங்குவதற்கு இயலாதிருத்தல்.

aphakia புரையிலாக் கண் விழி விலலையின்மை; ஒளியமின்மை : கணணில ஒளி எளிதில ஊடுருவும் முகப்புக் குமிழ் இல்லாதிருத்தல. கணபுரையை அகற்றிய பின்பு உள்ள கண்ணின் நிலை.

aphasia : பேச்சின்மை : மூளைக் கோளாறினால் உண்டாகும் பேச்சிழப்பு. இதில் முக்கியமாக உந்து பேச்சின்மை, உணர்வுப் பேச்சின்மை என்று இருவகை உண்டு. பெரும்பாலான நோயாளிகளுக்கு இநத இருவகைக் கோளாறுகளும் அமைந்திருக்கும்.

aphasic பேச்சின்மை நோய்மருந்து; பேச்சற்றவர்: பேச்சிழப்புக் கோளாறுக்குரிய மருந்து.

aphonia : குரலின்மை; பேச்சொலியின்மை : நரம்புக் கோளாறினால் பேச்சாற்றலை இழத்தல்.

aphonic aphonous: வாய்பேசாத,

aphrodisiac . இணை விழைச்சுத் தூணடு மருநது,பாலுணர்வு ஊக்கி; பாலுணர்வூட்டி: சிறறின்ப நுகர்ச்சியைத் தூண்டுகிற பொருள் அல்லது மருநது.

aphtha . கொப்புளம் வாயின் உட்பகுதியை மூடியிருக்கும் சளிச்சவ்வு வழியாக, சில நஞ்சுடைய அலலது எரிச்சலூட்டும் பொருளிலிருந்து வெளிப்படும் கழிவுப் பொருளினால் வாயில் உணடாகும் கொப்புளம்.

aphthae : கொப்புளங்கள்; வாய்க் கொபபுளம் : தோலில் பட்டைபட்டையாகத் தடிப்புடன் ஏற்படும் சிறு கொபபுளங்கள்.

apicectomy : பல் நுனித் துணடிப்பு பல் வேரின் மேல் நுனியைத துணடிதது எடுத்தல்.

aplacental : கொப்பூழ்க் கொடியற்ற.

aplasia திசுவளர்ச்சிக் குறைபாடு, வளர்ச்சிக் குறை; வளர்வின்மை : திசுக்கள் முழுமையாக வளராதிருத்தல் அல்லது அறவே வளராதிருத்தல்.

aplastic புதுத்தசை வளர்ச்சியின்மை, வளர்விலாத புதிதாகத திசு வளர்ச்சி ஏற்பட இயலாதிருத்தல்;

கட்டமைப்பு அல்லது வடிவம் இல்லாதிருத்தல்.

apnoea : மூச்சு நிறுத்தம்; மூச்சின்மை : *மூச்சு விடுதல தறகாலிகமாக நின்று போதல். தேவையான கார்பன்டையாக்சைடு* (CO_2) *இல்லாதிருத்தல், சுவாச மையத்தில் தூண்டல் ஏற்படாதிருத்தல் காரணமாக இது உண்டாகும்.*

apocrine glands : வியர்வைச் சுரப்பிகள் : புறச் சுரப்பிகள் : *அக்குள், பிறப்புறுப்புகள், விரைப்பைக்கும் கருவாய்க்கும் இடைப்பட்ட பகுதி ஆகியவற்றில் இவை உள்ளன. பூப்பெய்திய பின்னர் உடலில் ஏற்படும் வாடைக்கு இவையே காரணம்.*

apod : கால் இல்லா உயிரினம் ; *கால் அல்லது வயிறறடிச் செதிள்கள் இல்லாத உயிரினம்.*

apodia : காலின்மை; அடிக்காலின்மை, பாதமின்மை : *பிறவியிலேயே கால்கள் இல்லாதிருத்தல.*

apomorphine : வாந்தி மருந்து : *ஊசி மூலம் செலுத்துமபோது வாந்தி வரக்கூடிய கடுமையான மருந்து. நஞ்சுண்டவர்களின் வயிற்றிலிருந்து நஞ்சை வெளிக்கொணர்வதற்கு இது பயன்படுத்தப்படுகிறது*

aponeurosis : திசுப் பட்டை; தசை நாண் படலம்; தசைச் சவ்வு . *மினுமினுப்பான, தசைததளைபோனற திசுககளின் அகன்ற பட்டை. இது தசைகளைப் போர்த்தி ஒன்றோடொன்று இணைத்துக் கொள்ள உதவுகிறது.*

aponeurosis : திசுப்பட்டை வீக்கம்; தசை நாண் படல அழற்சி; தசைச் சவ்வு அழற்சி: *திசுப்படடையின் அழற்சி.*

apophysis : எலும்புப் புடைப்பு : *எலும்புப் புறவளர்ச்சியுறறு நீட்டிக் கொண்டிருத்தல் அல்லது புடைத்திருத்தல்.*

apoplexy: வலிப்பு நோய் (சன்னி); உறுப்பின் உட்கசிவு; நினைவிழப்பு வீழ்ச்சி; அதிர் நிகழ்வு : *மூளையின் குருதிப் பெருக்கினால் பெரும்பாலும் விளைகிற உணர்ச்சி, செயல் ஆகியவற்றின் இழப்பு.*

apositia : உணவு வெறுப்பு : *உணவு உண்பதில் வெறுப்பு உண்டாக்கும் நோய்.*

appendicectomy : குடல் முளை அறுவைச் சிகிச்சை : *குடல் வாலையினை அறுவைச் சிகிச்சைமூலம் அகற்றுதல்.*

appendicitis : குடல்வால் அழற்சி: குடல் முளை அழற்சி : *குடல முளை வீககம் அலலது அழற்சி.*

appendix: குடல்வால்; குடல் முளை : *குடலின் மேற்புறத்திலிருந்து தோன்றும சிறுமுளை. இது குடல்முளை என்றும் கூறப்படுகிறது. இது ஒரு பென்சில் அளவுக்குக் கனமாகவும், 50.8 முதல் 152 4 மி.மீ. வரை நீள முடையதாகவும் இருக்கும்.*

apperception : புலன் உணர்வு : *பொறியுணர்வை வாங்கிப் புலனுணர்வாக்கும் இயல்பு.*

apraxia : கைமுடக்கம்; செயல் திறன் குறை : *மூளைக் கோளாறு காரணமாகப் பொருள்களைத் திறம்படக் கையாள்வதற்கு இயலாதிருத்தல்.*

aptin : ஆப்டின் : *ஆல்பிரினால் எனற மருந்தின வாணிகப் பெயர்.*

aptitude : நாட்டம் *பணிகளைச் செய்வதில் இயல்பான உளவியல் அல்லது உடலியல் நாடடம் மற்றும் திறம்பாடு.*

apyrexia : காய்ச்சல் இன்மை : *காய்ச்சல நின்றிருத்தல்.*

apyrogen : வாலை வடிநீர்: நோய் நுண்மங்கள் நீக்கப்பட்ட, வாலை வடித்த நீர். இது கண்ணாடிக் குமிழ்களில் அடைக்கப்பட்டிருக்கும். இதில் காய்ச்சல் உண்டு பண்ணுகிற நோய் நுண்மங்கள் இரா. ஊசி மூலம் செலுத்தக் கூடிய தூள் வடிவிலுள்ள மருந்து கள் தயாரிக்க இது பயன்படுகிறது.

aqua : நீர் : நீரியல் பொருள்; நீர்மம்; கரைசல்.

aqueduct : சிறுகுழாய்; நீர் நாளம்: பாலுண்ணிகளின் தலையில் அல் லது உடலில் உள்ள சிறு குழாய்

aqueous humour : முன்கணநீர்; விழி முன்னறை நீர்மம் : விழிமுன தோலுக்கும் விழிச்சிலலுக்கும் இடையிலுள்ள நீர்.

aquosity : நீர்த்தன்மை

arachidonic acid : அராக்கிடோனிக் அமிலம் . இன்றியமையாத கொழுப்பு அமிலங்களில் ஒன்று. மனிதர், விலங்கு நுரையீரல் மற்றும் உறுப்புக் கொழுப்புகளில் சிறிதளவு உள்ளது. இது வளர்ச்சியை உண்டு பணணும் காரணி.

arachis oil : கடலை எணணெய் : நிலக்கடலையிலிருந்து எடுக்கப் படும ஆலிவ் எணணெய் போன் றது.

arachnodactyly : சிலந்தி விரல் நோய் : சிலந்தி போன்ற விரல்கள உணடாகும் ஒரு பிறவி நோய்

arachnoid : சிலந்திச் சவ்வு; சிலந்தி வலையுரு : சிலந்தி நூல் (நூலாம்படை) போன்ற நீர் மயிர் சவ்வு. இது மூளையையும் முதுகந தண்டினையும் மூடியிருக்கும்.

aramine : ஆராமின் : 'மெட்டாராமினால்' என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

arborization : மரத்தோற்ற நரம் பிழை; கிளைவிரிவு : மரம் போன்ற தோற்றமுடைய நரம் பிழைம அமைப்பு.

arboviruses : கொசு வழி பரவும் நோய்க் கிருமிகள்; ஆர்போ அதி நுண்ணுயிர் : ஒட்டுத்தோடுடைய இணைப்புடலி உயிரினங்களினால் பரவும் 'RNA' என்ற நோய்க் கிருமிகள் இதில் கொசுவினால் பரவும் நோய்க் கிருமிகளும் அடங் கும். மஞ்சள் காய்ச்சல், மூட்டு களில் கடும்நோவு உணடுபண்ணும் கொள்ளைக் காய்ச்சல் (டெங்கு காய்ச்சல்) போனற நோய்கள் இவற்றினால் பரவுகின்றன.

arcus senilis : மூப்புப்படலம் : வயது ஏறஏற கருவிழியைச் சுற்றி உருவாகும் வெளிறிய மஞ்சள வளையம்.

areola : மார்பு முகட்டு வட்டம்; முலைக் காம்புத் தோல் : மார்பின் காம்பைச் சுற்றியுள்ள முகட்டு வட்டம்.

arfonad : ஆர்ஃபோனாட் : 'டிரி மெட்டாஃபான' எனற மருநதின் வாணிகப் பெயர்.

arginase : ஆர்கினேஸ : நுரை யீரல, சிறுநீரகம், மண்ணீரல ஆகியவறறில காணப்படும் ஒரு வகை இயக்குநீர் (என்சைம்). இது 'ஆர்கினைன' எனற பொருளை ஆானித்தைன, மூதத்திரை ஆகிய பொருள்களாகப் பிரிக்கிறது.

arginine : ஆர்கினைன் : இன்றி யமையாத அமினோ அமிலங்களில் ஒனறு. கடுமையான நுரையீரல் நோயைக் குணப்படுத்தப் பயன படுத்தப்படுகிறது.

arginino-succinuria : ஆர்கினி னோ-சக்சினூரியா : சிறுநீரில் ஆர் கினைன், சக்சினிக் அமிலம் ஆகிய வை அடங்கியிருத்தல. இது மனக் கோளாறுகளுக்குக் காரணமா கிறது.

argon: ஆர்கான் (மடியம்): *காற்று மண்டலத்திலுள்ள அணு எடை 18 உடைய, இயக்கத் திறனற்ற ஒரு வாயு.*

argyll robartson pupil : ஒளி யுணர்விலாக் கண்மணி : *கண்ணின் பாவை ஒளியுணர்வு இல்லா திருத்தல். நரம்பு மேகப் புண்ணில் இந்நிலை உண்டாகிறது. நடு நரம்பு மண்டலம் முழுவதும் திட்டுத் திட்டாகத் தடிப்புக் காணும் நோய் உண்டாகும் போதும் நீரிழிவு நோயின்போதும் இந்நோய் ஏற்படலாம்.*

ariboflavinosis : வைட்டமின் B குறைபாடு : *'ரிபோஃப்ளேவின்' போன்ற வைட்டமின் B கலவைக் கூறுகள் இல்லாமையால் ஏற்படும் குறைபாட்டு நிலை.*

arief : ஆரியஃப் : *ஃபுளூஃபினேம் அமிலத்தின் வாணிகப் பெயர்.*

arnold chiari malformation : 'ஆர்னால்ட் சியாரி மூளைக் கோளாறு : *மூளையின் ஆதாரத தைப் பாதிக்கக்கூடிய பல கோளாறுகளின் ஒரு தொகுதி. தலையில் நீர்தங்கி மூளை நீர்க் கோவை ஏற்படும்போது இவை பெரும்பாலும் உண்டாகின்றன.*

arrhythmia : பிறழ்வு இதயத் துடிப்பு; லயமின்மை : *இதயத் துடிப்பு இயல்பான கதியிலிருந்து பிறழ்ந்திருத்தல்.*

arsenic : ஆர்செனிக் உள்ளியம் : *அரிதார நஞ்சு; சவ்வீரம் உடல் நலியச் செய்யும் இரத்தசோகை, இரைப்பை-குடல் கோளாறு, நரம்புக் கோளாறு போன்ற நோய்களை இநதக் கடும் நஞ்சு உண்டாக்குகிறது.*

artane : ஆர்ட்டான் : *'பென்செக் சால்' எனற மருந்தின் வாணிகப் பெயர்*

artefact : செயற்கைத் திசு மாற்றம் ; *திசுவின் கட்டமைப்பில் செயற்கையான மாற்றத்தை உண் டாக்குதல்.*

arteralgia : தமனி நோவு; தமனி வலி : *இதயததிலிருந்து குருதி கொண்டு செல்லும் நாளமாகிய தமனியில் ஏற்படும் வலி.*

arteriography : தமனி இயக்க முறை; தமனி வரைவியல் : *ஊடுருவக்கூடிய ஒரு திரவத்தை ஊசிமூலம் செலுத்தி தமனி மண்ட லம் இயங்குவதைக் காட்டுதல்.*

arteriole: நுண்தமனி; குருதி நாடி; குறுந்தமனி : *ஒரு தமனியோடு இணையும் ஒரு நுண தமனி, தமனிகளிலிருநது குருதிநாளங் களுக்கு இரத்தத்தைக் கொண்டு செல்லும் சிறிய இரத்த நாடிகள். பின்னர் சிரைகள்மூலம் இரத்தம் இதயத்திற்குச் செல்லும்.*

blind loop syndrome : குடலடைப்பு நோய் . குடலில் ஏற்படும் தடை அல்லது அறுவைச்சிகிச்சையினால் குருதிநாளங்கள் தடைபடுதல் காரணமாக ஏற்படும நோய். சிறு குடலில் குருதியோட்டம் நினறுபோய் பாக்டீரியா வளர்ச்சி ஊக்குவிக்கப்படுகிறது. இதனால்,

வயிற்றுப்போக்கும், செரிமான மின்மையும் ஏற்படுகிறது.

blind sight . **குருட்டுப் பார்வை** : பார்வைக்குரிய புறணி சேதமடைவதால், சில நோயாளிகள், வழக்கமான சோதனைகளுக்குப் பிறகு, பார்வையிழந்தவர்கள் என அறிவிக்கப்படுகின்றனர். எனினும், எஞ்சியுள்ள பார்வையைப் பயன படுத்திக் கொள்வதற்கு அவர்களுக்குப் பயிற்சியளிக்கலாம.

blind spot : **குருட்டுப் பகுதி; குருட்டுப் பொட்டு** : விழித்திரையின குருட்டுப்பகுதி. இங்கு பார்வை நரம்பானது, விழித்திரையிலிருந்து விலகிவிடுகிறது. இதனால, இப்பகுதியினால் ஒளியை உணர இயலாது.

blister : **எரிகொப்புளம்** : குருதி ஊனீர் அல்லது குருதி சேர்வதால், உள்தோலிலிருந்து வெளிததோல் பிரிநது விடுதல்.

Blocadren . **பிளாக்காட்ரன்** : டிமோலால்மாலியேட் என்ற மருந்தின வாணிகப் பெயர்.

blood : **இரத்தம் (குருதி)** : இதயத்திலும் இரததநாளங்களில் நிறைந்திருக்கும செந்நிற நெய்ப்புத்தன்மையுடைய திரவம்.இதில், குருதிநீர் (பிளாஸ்மா) எனப்படும் உயிர்மப்பொருள் அடங்கியுள்ளது இதில இரததச் சிவப்பணுக்கள, இரத்த வெள்ளணுக்கள், தகட்டணுககள் மிதககின்றன குருதி நீரில், இரததம் கட்டிக்கொள்ள உதவும் பொருள்கள உட்படப் பல் வேறு பொருள்கள் கரைசலாக அடங்கியுள்ளன

blood bank : **இரத்த வங்கி; குருதி வங்கி** : இரத்ததானம் கொடுபபோரிடமிருந்து இரததத்தை எடுத்து, அதனைத் தேவையானவர்களுக்குச் செலுத்துவது வரையில் பாதுகாப்பாகக் குளிர் பதனப் பெட்டியில் சேமித்து வைக்கும் நிலையம்.

bloodbrain barrier : **இரத்த மூளை வேலி** : சுற்றோட்ட இரத்தத்திற்கும் மூளைக்குமிடையிலான சல்வுப் படல வேலி.சில மருந்துகள் இரததத்திலிருந்து இந்தத் தடையின் வழியாக மூளைத் தண்டுவட நீருக்குச் செல்ல முடியும். மற்றவற்றால் முடியாது. எடுத்துக்காட்டு: ஸ்டிரப்டோமைசின்.

blood casts : **இரத்தத் துணுக்குகள்** : உறைந்துபோன இரததச் சிவப்பணுக்களின் துணுக்குகள். இவை, சிறுநீர்க் குழாய்களில் உருவாகி, சிறுநீரில் காணப்படும்.

blood clotting : **இரத்தக் கட்டு : (குருதி உறைதல்)** . இரத்த நாளங்களில அடைப்பு ஏற்பட்டு இரத்த ஓட்டம் தடைபடுகிறது. நுண்ணிய தட்டணுக்களின் துகள் திரண்டு இரத்த நாளச் சுவர்களில் உள்ள 'கோலேஜன' என்ற பொருளில் ஒட்டிக்கொணடு, இடைவெளியை அடைத்துவிடுகின்றன. பொதுவாக நாளச் சுவர்களில் படிந்துள்ள மெல்லிய உயிரணுப் படலத்தினால் பாயும் இரத்தத்திலிருந்து 'கோலேஜன்' பிரிக்கப்படுகிறது. இந்தப் படலத்தில் ஒரு பிளவு ஏற்படும்போதுதான், கோலேஜனுடன் இரத்தத்திற்குத் தொடர்பு உண்டாகிறது அதனால் தட்டணுக்கள் அதில் ஒட்டிக்கொள்கின்றன சுருங்குதலும், அடைப்பும் குருதிப் போக்குகளில் ஏற்படுகின்றன.

blood culture **குருதி வளர்ப்பு; குருதி வரைமை** : ஒரு நாளத்திலிருநது இரத்தம் வெளியேற்றப் பட்டதும், பெரிதும் உகந்ததொரு வெப்பநிலையில் பொருத்தமான தொரு ஊடகத்தில் இரத்தம் பெருக்கமடையுமாறு செய்யப்படுகிறது. இதனால் உள்ளடங்கிய உயிரிகள் பெருக்கமடைய முடி

கிறது. இந்த உயிரிகளைத் தனிமைப்படுத்தி நுண்ணோக்காடி மூலம் அடையாளங் காணலாம்.

blood count : குருதியணு எண்ணிக்கை : குருதியணு அளவைமானியைப் பயன்படுத்தி, இரத்தத்தில் ஒரு மில்லி மீட்டரில் எத்தனை சிவப்பணுக்கள் அல்லது வெள்ளணுக்கள் இருக்கின்றன என்பதைக் கணக்கிடுதல். இதன் மூலம், இரத்தத்தில் சிவப்பு-வெள்ளணுக்களின் வீத அளவு கணக்கிடப்படுகிறது. பாலிமார்ஃபஸ் - 65%-70%: லிம்ப்போசைட்ஸ் - 20%-25%; மானோசைட்ஸ் - 5%; ஈசினோஃபில்ஸ்-0%-3%; பாசோஃபில்ஸ் - 0%-0.5%;குழந்தைப் பருவத்தில் லிம்ப்போசைட்டுகளின் வீத அளவு அதிகமாக இருக்கும்.

blood glucose profiles : குருதிச் சர்க்கரை அளவு: நீரிழிவு நோயாளிகளின் இரத்தத்திலுள்ள சர்க்கரையின் வீத அளவைக் கண்டறிதல். இது நீரிழிவு நோயாளிகளுக்குரிய சிகிச்சையளிப்பதற்கு உதவுகிறது. நீரிழிவு நோயாளியின் இரத்த மாதிரிகள் காலை உணவுக்கு முன்பும், காலை உணவுக்கு 2மணி நேரம் பின்பும், நண்பகல் உணவுக்கு 2 மணிநேரம் பின்பும், மாலை உணவுக்கு முன்பும், இரவு படுக்கைக்குப் போகும் நேரத்திலும், சில நோயாளிகளுக்கும் இரவு நேரத்திலும் எடுக்கப்பட்டுச் சர்க்கரை அளவு கணக்கிடப்படுகிறது. இதன் அடிப்படையில் நோயாளிக்குரிய சிகிச்சை முறை தீர்மானிக்கப்படுகிறது.

blood group : குருதிப் பகுப்பினம்; குருதி வகை; குருதி வகைபறிதல் : குருதியின் நால்வகைப் பகுப்பினங்கள். இவை A, B, AB, O என்னும் இனங்களாகும். இந்தப் பகுப்பினங்களில், 'O' இனம் தவிர மற்ற மூன்று இனங்களின் உயிரணுக்களில் நேரிணையான காப்பு மூலங்களைக் (ஆன்டிஜன்) கொண்டிருக்கின்றன. O இனத்தின் உயிரணுக்களில், 'A காப்பு மூலமோ, 'B' காப்பு மூலமோ அடங்கியிருக்கவில்லை. இதனாலேயே, 'O' இரத்தத்தை உடையவர்களுக்குச் செலுத்தலாம். இதனால், 'O' இனம், 'பொது இனம்' எனப்படுகிறது. ஒருவர் எந்த இன இரத்தத்தைக் கொண்டிருக்கிறாரோ அந்த இன இரத்தம் மட்டுமே அவருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

blood letting : குருதி வடித்தல்; குருதி விடுப்பு : மருத்துவ முறைப்படி குருதியை வடித்தல்.

blood pressure : குருதி அழுத்தம் (இரத்த அழுத்தம்): இரத்த நாளங்களின் சுவர்களில் இரததம் உண்டாக்கும் அழுத்தத்தின் அளவு. பொதுவாக இது இதயத்திலிருந்து குருதி கொண்டு செல்லும் நாளங்களாகிய தமனிகளில் ஏற்படும் அழுத்தத்தைக் குறிக்கிறது. குருதி அழுத்தமானி எனப்படும் கருவியைப் பயன்படுத்தி, அதிலுள்ள பாதரச அளவினை மில்லிமீட்டரில் கணக்கிட்டு இரத்த அழுத்தம் அளவிடப்படுகிறது. ஒவ்வொரு இதயத் துடிப்பின்போதும் தமனி இரத்த அழுத்தம் ஏறி இறங்குகிறது. இதயத்திலிருந்து தமனிகளுக்கு இரத்தம் பாயும் அளவைப் பொறுத்து இதயச் சுருக்க அழுத்தம் மிக உயர்ந்த அளவில் இருக்கும். தமனி மற்றும் நுரையீரல் தமனியின் தடுக்கிதழ்கள் (வால்வு) மூடப்பட்டு, இதயம் தளர்ச்சியடையும்போது, இதயச் சுருக்க அழுத்தம் மிகக் குறைவாக இருக்கும். இந்த மிக உயர்ந்த மிகக் குறைந்த அழுத்த அளவுகள் பதிவு செய்யப்படுகின்றன (எடுத்துக்காட்டு : 120/70).

blood serum : குருதி நிணநீர் (குருதி ஊனீர்/குருதி வடிநீர்): குருதி

ஊனீர்; குருதி தெளிநீர் : குருதி உறையும்போது வெளிப்படும் திரவம். இது, உறைய வைக்கும் பொருள் இல்லாத உயிரியற் பொருள் (பிளாஸ்மா) ஆகும்.

blood sugar : குருதிச் சர்க்கரை : சுற்றோட்டமாகச் செல்லும் இரத்தத்திலுள்ள சர்க்கரையின அளவு. இது இயல்பான வரம்பளவுகளுக்குள மாறுபடுகிறது. இதன் அளவினை பல்வேறு செரிமானப் பொருள்களும் (என்சைம்).இயக்குநீர்களும் (ஹார்மோன்), கட்டுப்படுத்துகின்றன. இவற்றில் முக்கியமானது 'இன்சுலின்' என்ற கணையச் சுரப்பு நீர் ஆகும்.

blood urea : இரத்த மூத்திரை : இரத்தத்தில் புரத வளர்சிதை மாற்றத்தின் காரணமாக இறுதியாக உண்டாகும் பொருள (யூரியா) இதன் அளவு, இயல்பான வரம்புக்குள மாறுபடும். இந்தப் பொருளை முக்கியமாக வெளியேற்றுகிற சிறுநீரகங்கள் இயல்பாக இயங்கும்போது, உணவிலுள்ள புரதத்தின் அளவினால் இது பாதிக்கப்படுவதில்லை. சிறுநீரகங்கள் நோயுறும் போது, இரத்த மூத்திரையின் அளவு விரைவாக அதிகமாகிறது.

blue baby : நீலக்குழந்தை : பிறப்பிலேயே தோலில் நீலம் படரும் நோய்வகையுடைய குழந்தை. பிறவியிலேயே ஏற்படும் சிலவகை இதயக் கோளாறுகளினால் இதுத்தோன்றுகிறது.

bluxism : பல் இறுக்கம் : பற்கள் அழுத்தமாக மூடிக கொள்ளுதல். இதனால் தசைசசோர்வு ஏற்பட்டு தலைவலி உண்டாகும்.

body image : உடல் உருக்காட்சி : ஒருவரின் சொந்த உடல் பற்றி அவரது மனதில் தோன்றும் உருக்காட்சி. உணவு உண்ண விருப்பமில்லாத போது, இது போன்ற மனத்திரிபுகள் ஏற்படும்.

body language : உடல் மொழி : ஒருவரின் தற்போதைய உடல் நிலையினையும், மன நிலையினையும் குறிக்கும், வாய்மொழியற்ற உடற்குறியீடுகள். நிற்கும் தோரணைகள், முகபாவங்கள், இடஞ்சார்ந்த நிலைகள், ஆடையணிகள் ஆகியவை இதில் அடங்கும்.

Boeck's disease : போயக் நோய் : தசைநார் தொடர்பான ஒருவகை நோய்.

Bohn's nodules : போஹ்ன் திரளை : பிறந்த குழந்தையின் அண்ணததில் உள்ள நுண்ணிய வெண்ணிற நரம்புக் கணுக்கள்.

boil (syn furuncle) : கொப்புளம்: (குருதிக்கட்டி) : ஒரு மயிர்மூட்டுப் பையைச் சுற்றி ஏற்படும் கடுமையான வீக்கம் அல்லது கட்டி. இதில் பொதுவாகச் சீழ்கட்டும். அரசபிளவை போலன்றி, இதில் சீழ்வடிவதற்கு ஒரு வாய் இருக்கும்

Bolvidon: போல்விடான் : மியான்ஸ்கிரின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

bonding : பிணைப்பு : ஒருவர் மற்றொருவருடன் கொள்ளும் உணர்வுபூர்வமான பிணைப்பு. இதுநீண்டகாலஉணர்ச்சிமயமான உறவுநிலைக்கு இன்றியமையாதது. பிறந்த குழந்தைகள், தீவிரச்சிகிச்சைப் பிரிவில் கவனிக்கப்படவேண்டிய பிரிவில் கவனிக்கப்பட வேண்டியசமயத்தில் குழந்தைக்கும் பெற்றோர்களுக்கும், முக்கியமாகத் தாய்க்குமிடையே இந்தப் பிணைப்பு உயிரியல் முறையில் இன்றியமையாதது. பிறந்த குழந்தைக்கும் அவற்றின்பெறறோருக்குமிடையே அன்பிணைப்பை வளர்ப்பதற்குத் தனி முயற்சிகள தேவை.

bone : எலும்பு : ஒரு வகை இணைப்புத் திசு கால்சியம் கார் போனேட், கால்சியம் பாஸ் ஃபேட் போன்ற உப்புப்பொருள் கள் இதில் படிந்து இதனைக் கடினமாககி அடர்த்தியாக்குகிறது. தனித்தனி எலும்புகள் சேர்ந்து எலும்புக் கூடாக அமைகின்றன.

bone graft : எலும்பு ஒட்டுச் சிகிச்சை : உடம்பின் ஒரு பகுதி யிலிருந்து ஓர் எலும்புத்துண்டை எடுத்து இன்னொரு பகுதியில் பொருத்துதல் அல்லது ஒருவரிட மிருந்து இனனொருவருக்கு மாற் றிப் பொருத்துதல். எலும்புக் கோளாறுகளைச் சீர்படுத்துவ தற்கு அல்லது எலும்பு உருவாக் கத் திசுக்களை அளிப்பதற்கு இந்தச் சிகிச்சை பயன்படுகிறது.

bone marrow : எலும்பு மஞ்ஞை (எலும்புச் சோறு); எலும்பு நாளக கூழ் : எலும்பு உட்புழையிலுள்ள சோறு போன்ற பொருள். பிறக் கும் போது இந்த உடபுழைகளி னுள், சிவப்புச் சோறு போல் அமைந்த இரத்தம் நிறைந்திருக் கும். பினனர், நீண்ட எலும்புகளி னுள் கொழுப்புப் பொருள்படிந்து சிவப்புச்சோறு, மஞ்சள் எலும்புச் சோறாக மாறுகிறது.

bone-marrous cancer (multiple myeloma) : எலும்பு மஞ்ஞைப் புற்று : எலும்புச் சோறு எனப் படும் எலுமபு மஞ்ஞையிலுள்ள ஒருவகை இரத்த வெள்ளணுக் களில் படிப்படியாக ஏற்படும் புற்றுநோய். இதில் தொடக்க நிலையில், காரணமின்றி எலும்பு வலி, அடிக்கடித் தொற்று நோய் கள், சிறுநீரகம் செயலிழத்தல் போன்ற நோய்க்குறிகள் தோன் றும். இந்த நோய் பொதுவாக 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு உண்டாகிறது.

இந்த நோயைக் குணப்படுத்து வதற்கான ஒரேவழி எலும்பு மஞ்ஞை மாற்று அறுவைச் சிகிச்சையே ஆகும். இந்த அறுவை சிகிச்சையில், நோயுற்ற மஞ்ஞை நீக்கப்பட்டு, மாறறாக ஆரோக் கியமான எலும்பு மஞ்ஞை வைக் கப்படுகிறது.

bone-marrow transplant: எலும்பு மஞ்ஞை மாற்று அறுவை சிகிச்சை : பெரும்பாலான எலும்பு களின் மையப்பகுதியில் எலும்புச சோறு அல்லது எலும்பு மஞ்ஞை என்னும் மென்மையான திசு உள்ளன. இதுதான், உடம்பி லுள்ள நோயை எதிர்ப்பதற்கான இரத்த வெள்ளணுக்களை உற் பத்தி செய்து, முதிர்ச்சியடையச் செய்கிறது. எலும்பு மஞ்ஞையின் இந்தச் செயல்முறை சேதமடை யும்போது நோயாளி இறந்து விடு கிறார். இதைத் தடுப்பதற்கு மாற்று அறுவைச்சிகிச்சை மூலம நோயுற்ற எலும்பு மஞ்ஞை உயிர ணுக்களை அகற்றிவிட்டு அதற்குப் பதிலாக ஆரோக்கியமான உயிர ணுக்களை மஞ்ஞையில் வைக் கிறார்கள்.

இந்த ஆரோக்கியமான உயிர ணுக்களை நோயாளியிடமிருந்தே எடுக்கலாம்; இல்லையெனில் இன் னொருவரிடமிருநது எடுக்கலாம். இந்த உயிரணுக்களைப் பெரும் பாலும் மார்பெலும்பிலிருந்து அல்லது இடுப்பெலும்பு வரை முகட்டிலிருந்து எடுக்கிறார்கள். எலும்பில் பல துளைகளிட்டு ஊசி கள் மூலம் மஞ்ஞை எடுககப்படு கிறது. இது நோயாளிக்கு நரம்பு வழியாகச செலுத்தப்படுகிறது.

நோயை எதிர்க்கும் உயிரணுக் கற்றைகளின் முன்னோடிகளான நடுத்தண்டு உயிரணுக்களையும் நோயுற்ற உயிரணுக்களுக்குப் பதிலாக வைக்கலாம். நடுத்தண்டு உயிரணுக்களை, எலும்பு மஞ்ஞை இரத்தம், தொப்புள் கொடி இரத்

தம் அல்லது கருப்பைச் சிசுவின் நுரையீரலிலிருந்து எடுக்கலாம்.

borax: வெண்காரம் : போரிக் அமிலம் போன்றதொரு மென்மையான நோய்க் கிருமித்தடைப் பொருள். போரக்ஸ் கிளிசரைனும் எலும்பு நிரம்பிய போரக்சும் தொண்டைப் பூச்ச மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. எனினும் இதனை அரிதாகவே பயனபடுததுதல் வேண்டும்.

borborygmi: வயிற்றுப் பொருமல்: குடலில் வாயுக்கள் அசைவதால் உண்டாகும் குமுறல் சத்தம்.

bordetella : கக்குவான் கிருமி : கக்குவான் இருமல் நோய் உண்டாக்கும் 'புருசெலலாங்கசியே' என்ற நோய்க்கிருமி (பாக்டீரியா).

boric acid : போரிக் அமிலம் : மென்மையான நோய்க் கிருமித் தடைப்பொருள். கண் சொட்டு மருந்தாகவும், காதுச்சொட்டு மருந்தாகவும் பயன்படுகிறது. இதன தூளையும் கரைசலையும் உடலின் வெற்றுப்பகுதியில் தடவுதலாகாது. அதனால், போரிக் நச்சு உண்டாகலாம்.

Bornholm disease: பார்ன்ஹால்ம் நோய் . டென்மார்க்கைச் சேர்ந்த பார்ன்ஹால்ம் என்ற தீவில் அதிகம் பரவியிருந்த இந்த நோயை சில்வெஸ்டரின் 1934இல் கண்டறிநது விளக்கினார். ஒருவகை நோய்க் கிருமியினால் இந்நோய் உண்டாகிறது. இந்நோய்க் கிருமி பிடித்த 14 நாட்களில் நோய்க் குறிகள் தோன்றுகின்றன. நெஞ்சின் அடிப்பகுதி அல்லது அடிவயிறு அல்லது முதுகெலும்புத் தசைகளில் திடீரெனக் கடும் வலி தோன்றி, மூச்சுவிடுவது கடினமாகிறது வலிகாரணமாக, காய்ச்சலும் தோன்றுகிறது. இந்நோய் ஒருவாரம் நீடிக்கும். இதற்குச் சிகிச்சை எதுவுமில்லை.

botulism : தகர நச்சு : தகர கலங்களில் அடைத்து வைக்கப்படும் உணவுகளில்கிருமிகளால்விளையும் நச்சுப்பாடு. இதனால், வாந்தி, மலச்சிக்கல், வாய் மற்றும் தொண்டை வாதம் ஏற்படும். சில சமயம் இந்த நஞ்சுணவு உண்ட 24-72மணிநேரத்திற்குள் குரலிழப்பும் ஏற்படக் கூடும். எனவே தகரக் கலங்களில் இடப்பட்ட காய்கறிகள், உணவுப் பொருள்களைத் தவிர்த்தல் வேண்டும்.

bougie: வளைவுக் கத்தி; புகுத்தி : வளையும் இயல்புடைய மென்மையான அறுவைக் கத்தி. இது நீள் உருளை வடிவுடையது. இது பிசின் நெகிழ்வு உலோகத்தினாலானது. இறுக்கங்களை விரிவடையச் செய்வதற்கு இது பயன்படுபடுகிறது.

bovine : கால்நடை சார்ந்த; மாட்டினம் :பசுமாடு, எருது போன்ற கால்நடை சார்ந்த.

Boyle's anaeasthetic machine: பாயில் மயக்க மருந்து எந்திரம் : குளோரோஃபார்ம், ஈதர், நைட்ரஸ் ஆக்சைடு வாயு, ஆக்சிஜன் போன்ற மயக்க மருந்துகள் கொடுப்பதற்கான எந்திரம்.

brachial : மேற்கை சார்ந்த : மேற்கை மணடலத்திலுள்ள நாளங்கள் கழுத்தின் அடியிலுள்ள நரம்புப் பினனல் ஆகியவற்றை இது குறிக்கிறது.

brachial artery :மேற்கைத் தமனி: மேற்கைக் குருதி நாளம்.

brachium : மேற்கை; மேலங்கம்: புயம்:தோள்முதல் முழங்கை வரையுள்ள கையின் பகுதி; கைபோன்ற ஓர் இணைப்புறுப்பு.

Bradford frame : பிராட்ஃபோர்ட் படுக்கை : நோயாளிகளைத தூக்கிச் செல்லப் பயன்படும் தூக்குப் படுக்கை (ஸ்டிரச்சர்) போன்ற

அமைப்புடைய ஒரு படுக்கை இது முதுகுத் தண்டு அசையாமலிருப்பதற்கும், உடலும், முதுகுத் தசையும படிந்திருப்பதற்கும், உருத் திரிபு ஏற்படுவதைத் தடுப்பதற்கும் பயன்படுகிறது

Bradosol : பிராடோசால் : டோமிஃபென் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

bradycardia : **தளர் நெஞ்சுப்பைத் துடிப்பு; குறை இதயத்துடிப்பு; இதயக் குறைத் துடிப்பு**: இதயம் பொதுவான விதத்தில சுருங்குவதால உண்டாகும் மெதுவான நாடித் துடிப்பு. காய்ச்சல் இருக்கும் போது, உடல் வெப்ப நிலையில் ஏற்படும் ஒரு பாகை உயர்வுக்கும் நாடித் துடிப்பு நிமிடத்திற்கு 10 துடிப்புகள் வீதம் அதிகரிக்கவேண்டும். அவ்வாறு அதிகரிக்கவில்லையானால், அது தளர் நெஞ்சுத் துடிப்பு எனப்படும்.

brain : **மூளை** : அறிவின் இருப்பிடம். இது மைய நரம்பு மண்டலத்தின மிகப்பெரிய பகுதி. இது மண்டையோட்டின் உட் குழிவினுள் அமைந்துள்ளது. இதனை. மூளை வெளியுறை எனப்படும் மூன்று சவ்வுப் படலங்கள் சூழ்ந்திருக்கின்றன. மூளையினுள் இருக்கும் திரவம், நுட்பமான நரம்புத திசுக்கள் அதிர்ச்சியைத் தாங்குவதற்கு உதவுகின்றன.

bran : தவிடு : தானியங்களில் புறப்பகுதியாக அமைநதுள்ள குத்துமி. குறிப்பாகக் கோதுமையி லுள்ள தவிடு, இழைமச் சத்து நிறைந்தது; வைட்டமின்-B தொகுதியும் இதில் நிறைந்துள்ளது.

branchial : செவுள் சார்ந்த : மனிதக் கருவின் கழுத்தின் இரு பக்கங்களிலும் உண்டாகும் பிளவுகள் அல்லது வெடிப்புகள். இவை மூக்கு, காதுகள், வாயு ஆகிய உறுப்புகளாக உருவாகின்றன.

செவுள் வெடிப்புகள் இயல்புக்கு மீறுதலாக ஏற்படும் கழுததில செவுள் நீர்க்கட்டி உண்டாகிறது.

Brandt andrews technique : பிராண்ட் ஆண்ட்ரூஸ் உத்தி : மகப்பேறறுக்கான ஒருவகை உத்தி இதில் அடிவயிற்றில், தொப்பூள் கொடியினைப பிடித்துக்கொணடு கருப்பையை மேலே தூக்குகிறார்கள். அவ்வாறு தூக்கும்போது நஞ்சுக் கொடியானது கருப்பையின அல்லது யோனிக் குழாயின மேற்பகுதியில் இருக்கும். பினனர், மேலே தூக்கப்பட்ட கருப்பையின் உச்சிப் பரப்பின் கீழே அழுத்தம் கொடுக்கும்போது நஞ்சுத் திசு உறுப்பு வெளியே வருகிறது.

Braun's frame : உலோகக் கட்டுப் பட்டை : புண்களுக்குக் கட்டுப் போடுவதற்காகப் பயன்படும் ஓர் உலோகப்பட்டை கூண்டுமுறிவேற்பட்ட முன்கால் எலும்புகளில் கட்டுப் போடுவதற்கு இது பயன்படுகிறது.


மாாபகம

breast: மார்பகம்; முலை; நகில் . (1) பெண்களுக்குத் தாய்ப்பால் சுரக்கும் உறுப்பு. (2) மார்புக் கூட்டின் புறமேற் பகுதி.

breath H_2 (hydrogen) test : ஹைட்ரஜன் சோதனை : சர்க்கரைக் குறைபாட்டினைக் கண்டறிவதற்கான ஒரு மறைமுகமான முறை.

breech birth presentation : பிட்டப் பிறப்பு நிலை : கருப்பையிலிருந்து குழநதை பிறப்பதற்கு இயல்பாக அதன் தலை முன்னோக்கி அமைநதிருக்கவேண்டும. சில சமயம், கருப்பையில் குழந்தையின் பிட்டப் பகுதி முன்னோக்கி அமைந்திருக்கும். இதனை 'பிட்டப் பிறப்பு நிலை' எனபர்.

bregma: முன்னிணைவிலா எலும்பு முன் உச்சி : மண்டை ஓட்டின் முன்னிணைவிலாப் பகுதி விலா எலுமபு.

Brevidil : பிரவிடில் : சுக்சாமெத்தோனியம் எனனும் மருந்தின் வாணிகப் பெயர்

Bricanyl . பிரிக்கானில் : டெர்புட்டாலின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

Brietal : பிரைட்டல் : மெத்தோஹெக்சிட்டோன் சோடியம் என்னும மருந்தின் வாணிகப் பெயர்.

Bright's disease : பிரைட் நோய் ; சிறுநீரகத்தில் வீக்கம் ஏற்படும் நோ...வகை.

brilliant green: பிரில்லியன்ட் கிரீன்:நோய்க் கிருமியை ஒழிக்கும் திறனுள்ள அவுரியிலிருந்து எடுக்கப்படும் சாயப் பொருள். கழுவு நீர்மமாகப் (1:1000) பயன்படுகிறது.

**Brinaldix: பிரினால்டிக்ஸ் : க்ளோப்பாமைட் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

Brocadopa : பிரோக்காடோப்பா : லெவோடோப்பா என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

Broca's area : புரோக்கா மையப் பகுதி : பெருமூளையின் இடக்

கோளார்த்தத்திலுள்ள பிளவின் தொடக்கத்தில் அமைந்துள்ள பேச்சு இயக்க மையம். இந்த மையம் காயமுற்றால், பேச இயலாது போதல் உட்பட மொழிக் குறைபாடு உண்டாகும்.

Brodie's abscess : பிராடி கழலை: எலும்பில் உண்டாகும கடுமை யான சீழ்க்கட்டி.

bromhexine : புரோம்ஹெக்சின் : சளியை இளக்கும் மருந்து. இது வாய்வழி உட்கொள்ளப்படுகிறது. இது இருமலுக்கு முன்பு சளியை இளக்குகிறது. ஈளைநோய் (ஆஸ்த்மா) உடையவர்களுக்கு நரம்பு வழியாகச் செலுத்தும் மருந்தாகவும் கிடைக்கிறது.

bromidrosis : நாற்ற வியர்வை : பாதங்களில் மிகுந்த நாற்றத்துடன் உண்டாகும் வியர்வை

bromism: புரோமை நச்சு : சோரிகை எனப்படும புரோமைடுகளைத் தொடர்ந்து அல்லது அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துவதால் உண்டாகும் கடுமையான நச்சுத் தன்மை.

bromosulphthalein test : புரோமோசல்ஃப்தாலைன் சோதனை : நுரையீரல் செயற்படுவதைக் கணித்தறிவதற்காகப் பயன்படும் சோதனை. உடல் எடையின் ஒரு கிலோ கிராமுக்கு 5 மில்லிகிராம் என்ற வீதத்தில் நீலச்சாயம் ஊசி மூலம் நரம்பு வழியாகச் செலுத்தப்படுகிறது. அவ்வாறு செலுத்தப் பட்ட 45 நிமிடத்திற்குப் பின்னரும் இரத்தத்தில் 5%க்கு மேல் சாயம சுற்றோட்டத்தில் இருக்குமானால் அப்போது கல்லீரலின் செயற்பாடு பழுதுபட்டிருக்கிறது என்று அறியப்படுகிறது.

Brompton mixture : புரோம்ப்டன் கலவை! ஆல்ககால், அபினி (மார்ஃபின்), கோக்கைன் அடங்கிய ஒரு மருந்துக் கலவை. கடைக்கணு மூட்டுவலிவைக் குறைக்க இது பயன்படுகிறது.

brom-valetone : புரோம்-வாலெட்டோன் : ஒரு மென மையான மயக்க மருந்து. கார்புரோமால் மருந்தினைப் போன்றது.

bronchi : மூச்சுக்குழாய்கள் ; மூச்சுக் குழாயின இரு பிரிவுகள்.



bronchial asthma : மூச்சுக் குழாய் ஈளைநோய் : ஒவ்வாமைப் பொருள்களை உட்கொள்ளுதல், நோய்த் தொற்று, உடற்பயிற்சி, உணர்ச்சிவயப்படுதல் காரணமாக மூச்சுக் குழாயில் காற்றுத் தடை உணடாகி ஏற்படும் ஈளை நோய்.

bronchial tubes : மூச்சு நுண் குழாய்கள்: மூச்சுக்குழாய்கள சுவாசப் பைகளுள நுழைநத பிறகு பல பிரிவுகளாகப் பிரியும் நுண்குழாய்கள.

bronchiectasis : மூச்சு நுண் குழாய் விரிவடைதல் : குழந்தைப் பருவத்தில் சீதசனனி (நிமோனியா) போனற நோய்களினால் மூச்சு நுண்குழாய்கள் விரிவடைதல். பொதுவாக மூச்சுக் குழாய்ச் சிலேட்டுமப் படலததில் ஏறபடும் சில உள்ளார்ந்த கோளாறுகளினால் இது உண்டாகிறது. இதனால், முடைநாற்றமுடைய சளி மிகுதியாக ஏற்படுகிறது. இதனால் அடிக்கடிச் சுவாசக் கோளாறுகள் ஏறபட்டு, இறுதியில் மூச்சடைப்பு உண்டாகக் கூடும்.

bronchiole : மூச்சுக்குழாய் நுண் பிரிவு; மூச்சுநுண்குழாய் : நுரை

யிரல்களின் காற்றுப்பைகளில் (கண்ணறைகள்) முடிவடையும் மூச்சுக் குழாய்களின் மிக நுண்ணிய உட்பிரிவு.

bronchiolitis: **மூச்சுக்குழாய் நுண்பிரிவு வீக்கம்; மூச்சு நுண்குழாய் அழற்சி :** மூச்சுக்குழாய நுண பிரிவுகள் வீக்கமடைதல். பொதுவாக, குழந்தைகளுக்கு ஒரு வயதுக்குள் ஏற்படும்.

bronchitis : **மார்புச்சளி நோய்; மூச்சுக்குழாய் அழற்சி :** பொதுவாகக் குழந்தைகளுக்கு நோய்க் கிருமிகளினால் உண்டாகும் தடுமன, நச்சுக்காய்ச்சல், கக்குவான் இருமல், தட்டம்மை போன்ற நோய்களின்போது மார்புச் சளி உண்டாகிறது. பெரியவர்களுக்கு கிருமிகளினாலும், சில சமயம் காற்றுத் தூய்மைக்கேட்டினாலும் இந்தச் சளி ஏற்படுகிறது. கடுமையான சளிப்பிடிப்பினால், மூச்சுக் குழாயில் அடைப்பு ஏற்பட்டு, இளைப்பும், மூச்சடைப்பும் உண்டாகலாம்.

bronchocele : மூச்சுக் குழாயின் ஒரு பகுதித் தளர்வால் விரிவடைதல்.

bronchoconstrictor : **மூச்சுக் குழாய்ச் சுருக்க மருந்து :** மூச்சுக் குழாய்களைச் சுருங்கச் செய்கிற மருந்து.

bronchodilator : **மூச்சுக் குழாய் விரிவாக்க மருந்து, மூச்சுக் குழாய்த் தளர்த்தி :** மூச்சுக் குழாய்களை விரிவடையச் செய்வதற்கான மருந்து.

bronchogenic : **மூச்சுக் குழாய் சார்ந்த :** மூச்சுக் குழாயிலிருந்து எழுகிற.

bronchography : **மூச்சுக் குழாய் வரைபடம்; நிறயேற்ற நுரையீரல் ஒளிர்ப்படம் .** ஒரு சிறிதளவு திரவத்தைச் செலுத்தி மூச்சுக் குழாய்களின் பிரிவுகளை ஊடுகதிர் மூலம் வரைபடம் எடுத்தல்.

bronchomycosis : **நுரையீரல் நோய் :** மூச்சுக் குழாய்களையும், நுரையீரல்களையும் பாதிக்கும் பலவகைக் காளான் சார்ந்த நோய்கள்.

bronchopneumonia : **மூச்சுக் குழாய்ச் சீதசன்னி; நுரையீரல அழற்சி; குழல நிமோனியா:** மூச்சுக் குழாயின் சுற்றுப் பகுதிகளில் ஏற்படும் ஒருவகைச் சீதசன்னி (நிமோனியா).

branchorrhoea : **மூச்சுக் குழாய்ச் சளிப்பிடிப்பு :** மூச்சுக் குழாய்ச் சளிச் சவ்வுப் படலத்திலிருந்து அளவுக்கு அதிகமாகச் சளி வெளியேறுதல்.

bronchoscope : **மூச்சுக் குழாய்ச் சோதனைக் கருவி; மூச்சுக் குழல் நோக்கி :** மூச்சுக் குழாய்களின உட் பகுதிகளில் சோதனைகள் நடத்தவும், உயிர்ப் பொருள் ஆய்வு (பயாப்சி)நடத்தவும் பயன் படுத்தப்படும் ஒருவகைக் கருவி.

bronchospasm : **மூச்சுக் குழாய்ச் சுருக்கம் :** மூச்சுக் குழாய்ச சுவர்களில உள்ள இயங்கு தசைகள் சுருங்குவதன் காரணமாக மூச்சு நுண் குழாய்கள் திடீரெனச் சுருக்கமடைதல்.

bronchostenosis : **மூச்சுக் குழாய் குறுக்கம் :** மூசசுக் குழாய்களில ஒன்று குறுக்கமடைதல்.

brow : **புருவம்; தலைப் புருவம்; முகப் புருவம் :** கண்குழிக்கு மேலேயுள்ள பகுதி.

brow ague: **ஒற்றைத் தலை மண்டையிடி.**

Broxil : **பிராக்சில் :** ஃபெனத்திசிலின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

Brudzinski's sign **உறுப்பு வளைவு :** தலையணையிலிருந்து தலையைத் தூக்கும்போது முழங்கால் மூட்டுகளும், இடுப்பும் மூளை

வெளியுறை அழற்சியில் ஏற்படு வது போன்று வளைதல்.

bruise : கன்றிய காயம்; கீறல் : கன்றிப் போன காயம்; இரத்தம் கட்டிய நோவிடம்.

bruxism : பல் அமைப்பு; பல் கடித்தல் : பற்களை இயல்புக்கு மீறுத லாகக் கடித்து அரைத்தல். இதனால், பல் தேய்ந்து வலுவிழந்து விடுகிறது.

bubo : அரையாப்பு; அக்குக்கட்டு; நெறிக்கட்டு; நிணநீர்க்கட்டியழற்சி: நிணநீர்ச் சுரப்பிகள, முக்கியமாக இடுப்புப் பகுதியிலுள்ள நிணநீர்ச் சுரப்பிகள் விரிவடைவதால், அக்குளிலோ, தொடை மடிப்பிடத்திலோ ஏற்படும் வீக்கம்.

bubonocele : இடுப்போத நோய் :

buccal : கன்னம் சார்ந்த; வாய்க்குரிய; வாய் சார்ந்த : கன்னம் அல்லது வாய் சார்ந்த.

Buerger's disease : குருதியுறைவு நோய் : வெளிநாளங்களில நோய் ஏற்படுவதால் ஏற்படும் குருதியுறைவு நோய். இதனால் அடிக்கடி நொண்டுதல் உண்டாகிறது

buffer : சமநிலைப்படுத்திகள்; செறிவு மாறா; விளைவெதிர் : ஹைட்ரஜனையும், ஹைட்ராக்சில் அயனிகளையும் பிணைக்கும் திறனுள்ள ஒரு கலவைப் பொருட் கரைசல். அமிலங்களை அல்லது காரங்களைச் சேர்க்கும்போது நிலை மாற்றத்தை எதிர்க்கும் தன்மையுடையது.

bulbar : தொண்டை முடக்கு வாதம் : மூளையின் பின் கூறாகிய முகுளத்தில் ஏற்படும் முடக்கு வாதம் அல்லது உதடு - நாக்கு தொண்டைப் பகுதி வாதம். இது முகுளத்திலுள்ள இயக்கு உட்கரு சிதைவுறுவதால் உண்டாகிறது. இந்நோயினால் இயல்பான காப்பு நரம்பியக்கங்களை நோயாளி இழந்துவிடுகிறார். மூச்சடைப்பு, சுவாசச் சீதசன்னி போன்ற நோய்கள் ஏற்படும் அபாயமும் உண்டாகிறது. மிகவும் ஊனமுற்ற குழந்தைகள் உணவு உண்ண மிகவும் சிரமப்படுவார்கள்.

bulbourethral : துணைச் சுரப்பிகள்; இரண்டு துணைச் சுரப்பிகள். இந்தச் சுரப்பிகள், ஆணின் சிறுநீர்ப் புற வழியின் குமிழுக்குள் திறப்புடையதாக இருக்கும். இவற்றின் சுரப்புநீர், விந்து நீரின் ஒரு பகுதியாக அமைந்திருக்கும்.

bulimia: தீராப்பசி நோய் (ஆனைப் பசி); பெரும்பசி; பசி நோய் : குறுகிய காலததில் பெருமளவு உணவைக் கட்டுப்பாடின்றி உண்ண வேண்டும் என்ற பெருண் வேட்கை.

bulla : நீர்க் கொப்புளம்; பெருங் கொப்புளம்; வலியக் குமிழ் : பெரிய நீர்க் கொப்புளம். சரும இயலில் தோலில் உண்டாகும் நீர்க்கோப்பு நோய் வகைகளை இது குறிக்கிறது. எனினும், தோல் அழற்சி போன்ற வேறு தோல்நோய்களின் போது இவ்வகைக் கொப்புளங்கள் உண்டாகின்றன.

bumetanide : பூமெட்டானைடு : வீரியச் சிறுநீர் பெருக்கி மருநது.

bunion : கால்வீக்கம்; பெருவிரல் முண்டு : கால் பெருவிரலின் முதற் கணுவின் வீக்கம். இந்தப் பகுதியில் காலணிகள் உராய்வதாலும் அழுத்துவதாலும் ஒரு வனக மசகு நீர் சுரக்கிறது. முனைப் பாகவுள்ள எலும்பும் அதன்மசகு நீரும் சேர்ந்து கால் வீக்கம் எனப்படுகிறது.

பெருவிரல் முண்டு

buphthalmos : கண்விழி புடைப்பு நோய்; மாட்டு விழி : பிறவியிலேயே ஏற்படும் கண்விழி விறைப்பு நோய்.

bupivacaine : பூபிவாக்கைன் : நீண்ட நேரம் செயற்படக்கூடிய உறுப்பெலலை உணர்வு நீக்கி மருந்துகளில் ஒன்று. இது நரம்பு மண்டலத்திற்கு ஏறபுடையது. கோக்கைனைவிட நச்சுத்தன்மை குறைந்தது.

buprenorphine : பூப்பிரினோர்ஃபின் : ஒருவகை நோவகற்றும் மருந்து. இது மார்ஃபினைவிட நீண்டநேரம செயல்படக்கூடியது.

bur: கணையம் : வயிற்றுச் சுரப்பி வகை.

burinex : பூரினெக்ஸ் : பூமெட்டானைடு எனற மருந்தின் வாணிகப் பெயர்.

burkitts lymphoma : பர்க்கிட் நிணநீர்ச் சுரப்பி நோய் : தாடையில் அடிக்கடி ஏற்படும் உக்கிரமான நிணநீர்ச்சுரப்பி நோய். மற்றப் பகுதிகளிலும் உண்டாகும். முக்கியமாகக் குழந்தைகளைப் பாதிக்கிறது. மலேரியாநோய் கொள்ளை நோயாகப் பரவும் ஆஃப்ரிக்க பகுதியிலும் நியூகினியிலும் தென்படும் புறறுநோய் வகை.

burn: வெந்தபுண; தீக்கொப்புளம்; தீப்புண், சுடுபுண்; எரிகாயம் : வேதியல் பொருள்கள், கடும வெப்பம். மின் பிழமபு, உராய்வு, கதிர்வீச்சு காரணமாக தோலில் உண்டாகும் நைவுப்புண். எரிந்துளள தோலின் ஆழத்தைப் பொறுதது, இந்தப் புண, முழுமையானது அல்லது பகுதியானது என வகைப்படுத்தப்படுகிறது. புண் ஆழமாக இருந்தால், தோல் மாறறுச் சிகிச்சை செய்யவேண்டியிருக்கும். இதைக் குணப்படுததுவதில் அதிர்ச்சியைத் தடுப்பதும், ஊட்சத்துக் குறைவும் முக்கியமானதாகும்.

burnout syndrome : மன வெதும்பல் : மற்றவர்களின் சிக்கல்களினால் ஒருவர் மனம் வெதும்பித் தனது சக்தியை இழந்து விடும் நிலை. இந்தகையவர்கள், ஒரு குழுமத்தின உறுப்பினராகச் செயலற்றுப்போய் ஒதுங்கிவிடுகிறார்கள்

bursa: மசகு நீர்ச் சுரப்பி; குழிப்பை இழைமப்பை; பசை நீர்ப்பை: உராய்வைத் தடுப்பதற்குரிய பசை நீர் சுரக்கும் பை போன்ற அமைப்பு. மசகுநீர்ச் சுரப்பிகள், தசை நாணுக்கும் எலும்புக்குமிடையிலும, தசைக்கும் தசைக்குமிடையிலும் காணப்படும் இந்தப் பரப்புகளிடையே உராய்வு ஏற்படாமல் அசைவுகள் இயங்குவதற்கு உதவுவது இதன் பணியாகும்.

மசகு நீர்ச சுரப்பி

bursities: பசை நீர்ச்சுரப்பி வீக்கம்; குழிப்பை அழற்சி : மசகு நீர்ச சுரப்பி பையில் ஏறபடும் வீக்கம்.

buscopan : பஸ்கோப்பான் : ஹயோசின் எனப்படும் வழிப் பொருளின் வாணிகப் பெயர் உணவுப்பாதைப் புண்ணின்போது தசையைச சமனப்படுத்துவதற்குப் பயன்படுகிறது. இதனை ஊசி மூலம் செலுததினால, மிகவும் பயனளிக்கும்.

busulphan : புசல்ஃபான் : உயிர்ம நச்சினைக காரப் பொருளாக்கும மருந்து. இது எலும்பு மஞ்ஞையை (எலுமபுச் சோறு) நலிவுறுத்தக் கூடியதாகையால், இரத்தத்தில சீரான வெள்ளை சிவப்பு அணுக்

களின் எண்ணிக்கைத் தரம் இன்றி யமையாததாகும்.

butacaine : பூட்டாக்கைன்: கோக்கைன் போன்ற உறுப்பெல்லை உணர்வு நீக்கக் கூடிய ஒரு செயற்கை மருந்து. இது கண்நோயியலில் 2% கரைசலாகப் பயன்படுத்தப் படுகிறது. இது, கோக்கைன்போல் கண்ணின் மணியை விரிவடையச் செய்வதில்லை.

butobarbitone : பூட்டோபார்பிட்டோன் : விரைவில் துயிலூட்டக் கூடிய ஒருவகை மருந்து.

buttock : பிட்டம்; குண்டி மேடு : உடலின் பினபுறத்தில் இடுப்பிற்குக் கீழ்ப் புடைப்பாகவுள்ள பகுதி.

butylamino benzoate: பியூட்டைலாமினோ பென்சோயேட்: உறுப்பெல்லை உணர்வு நீக்கியாகப் பயன்படுத்தப்படும் ஒரு களிம்பு மருந்து.

butyn : பூட்டின் : பூட்டாக்கைன் என்ற மருநதின் வாணிகப் பெயர்.

byssinosis : நுரையீரல் நோய்; தூசியேற்ற நுரையீரல் நோய்; நுரையீரல் பஞ்சு நோய் : ஆலைத் தொழிலாளர்கள் பஞ்சுத் தூசியைச் சுவாசிப்பதால் உண்டாகும் நுரையீரல் நோய் வகை.

C

cacao : கொக்கோ : அமெரிக்க வெப்ப மண்டலத்தில் வளரும் 'கொக்கோ' என்ற மரத்தின் விதை. இதிலிருந்து இன்பசைத் தின்பண்டம் (சாக்கலேட்), கோக்கோ வெண்ணெய் தயாரிக்கப்படுகிறது.

cachet : மருந்துப் பொதியுறை, மருந்துக் குளிகை; மருந்துச் சிமிழ் : கசப்பான தூள் மருந்தினைப் பொதிந்து வைக்க உதவும் சிறு மருந்துப் பொதியுறை அல்லது மருந்துறை.

cachexia : உடல் உருக்கி நோய்; உடல் மிகை மெலிவு; கடு நலிவு : உடல் நலக் கோளாறு, ஊட்டச் சத்துக் குறைபாடு, பொதுவான உடல் நோய் நிலை ஆகியவற்றைக் குறிக்கும் சொல். உடல் மெலிதல், மேல் தோல் வெளிறுதல், கண்களின் ஒளி குன்றுதல் ஆகியவை இதன் முக்கிய அறிகுறிகள்.

cadaver · பிணம் : மருத்துவத்தில் இச்சொல் ஒரு பிணத்தைக் குறிக்கும். மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்கள் அறுத்துச் சோதிக்கும், உடலையும், பிணவறையில் பிணப் பரிசோதனை செய்யப்படும் உடலையும் இது குறிக்கிறது.

cadmium . காட்மியம் : தகரம் போன்ற வெண்ணீல உலோகம். இது துத்தநாகத் தாதுப் பொருள்களில் உள்ளது. பல்வேறு தொழில்களில் பயன்படுத்தப்படுகிறது. இதன் புகையைச் சுவாசித்தால் நாளடைவில் நுரையீரல் சேதமடையும். காட்மியம் கலந்த தொழிற்சாலைக் கழிவுகள் கலந்தால் உணவு நஞ்சாகும்.

caecitis : குடல்வால் அழற்சி.

caecostomy : பெருங்குடல் வாய்ப் பற்றுக்குழாய் அறுவை மருத்துவம் : பெருங்குடல் வாய்க்கும் அடிவயிற்றுச் சுவரின் முன்புறத்திற்குமிடையில் அறுவைச் சிகிச்சைமூலம் பொருத்தப்படும் பறறுக் குழாய். பெருங்குடல வாயினுள் ஓர் அகன்ற துளைக் குழாயினைச் செருகி இது ஏற்படுத்தப்படுகிறது. மலம் சீராகக் கழிவதற்கு இது உதவுகிறது.

caecum : பெருங்குடல் வாய்; பெருங்குடல் முனை : பெருங்குடலின் முற்பகுதி. இது ஒரு முட்டுக் குழாய். வலது பின் சிறுகுடலிலிருந்து இது தொடங்குகிறது. இது பின் சிறுகுடலிலிருந்து ஒரு தடுக்கிதழ் மூலம் பிரிக்கப்படுகிறது.



caEDTA : கேயட்டா : கால்சியம் டைசோடியம் எடிட்டேட். இது ஈய நச்சு நீக்கியாகவும், சுண

ணாம்பு நீற்று புண்களை ஆற்றும் மருந்தாகவும் பயன்படுகிறது.

caesarean section: கருப்பை அறுவை மருத்துவம் : வயிற்றைக கிறிக் குழந்தையை வெளிப்படுத்தும் அறுவை மருத்துவமுறை ரோமானிய முதல் பேரரசர் ஜூலியஸ் சீசர் இந்த முறையில் பிறந்ததாகக் கூறுவர். எனவே அவர் பெயரால் இது 'சிசேரியன் முறை' என்று அழைக்கப்படுகிறது.

caesium 137(^{137}Cs) சீசியம்^{137}: நீல ஒளி வரையுடைய கார இயல்புடைய வெள்ளி போன்ற கதிரியக்க உலோகம். 'கோபால்ட்' என்ற உலோகத்திற்குப் பதிலாக ஒளிக்கற்றைச் சிகிச்சை முறையில் பயன்படுத்தப்படுகிறது. ஊசிகளாக அல்லது குழாய்களாக முத்திரையிடப்பட்டு, ரேடியத்திற்குப் பதிலாகப் பயன்படுத்தப்படுகிறது.

caffeine : கா:ஃபின் : காப்பி, தேயிலை போன்ற குடிவகைகளிலுள்ள மைய நரம்பு மண்டலத்திற்குக் கிளர்ச்சியூட்டக் கூடிய மர உப்புச்சத்து. இது சிறுநீர் பெருக்கியாகக் கொடுக்கப்படுகிறது. எனினும், முக்கியமாக நோவகற்றும் மருந்துகளில் பயன படுத்தப்படுகிறது.

ceffeinism (caffeism) : காஃபி நஞ்சேற்றம்; கா:ஃபின் நோய். காஃபி, தேயிலை போன்ற குடிவகைகளிலுள்ள மர உப்புப் பொருளினால் உண்டாகும் கோளாறு நிலை.

caisson disease : காற்றழுத்த நோய் (கேய்சான் நோய்); அழுத்தக் காற்றறை நோய்: அழுத்தம் மிகுநத காற்றின ஊடாக உழைப்பவர்களுககு உண்டாகும். காற்றழுத்தம திடீரெனக் குறைவதால் இநத நோய் ஏற்படுகிறது நீரில் முக்குளிப்போர் மேற்பரப்புக்கு வரும் போதும், விமானிகள் மிகுந்த உயரத்திலிருந்து கீழே குதிக்கும் போதும் இது நேரிடுகிறது. இரத்தத்திலுள்ள கரைசலிலிருந்து நைட்ரஜன் குமிழ்கள் வெளிவருவதால் இது உண்டாகிறது. காற்றழுத்தத்தைப் படிப்படியாகக் குறைப்பதன் மூலம் இதனைத் தடுக்கலாம்.

caladryl: காலாட்ரில்: காலமைன் டைஃபன்ஹைடிராமின் அடங்கியுள்ள கழுவு நீர்மம், களிம்பேடு ஆகியவற்றின் வாணிகப் பெயர்.

calamine : காலமைன் : அய ஆக்சைடு கலந்த இளஞ்சிவப்பு நிறத் துத்தநாகக் கார்போனேட். தோலில் குருதியை உறையச் செய்யும் இதன் மென்மையான செயல் முறைக்காக இது கழிவு நீர்மங்களிலும், களிம்பேடுகளிலும் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது. கார்பாலிக் அமிலத்தின் மென்மையான கரைசலில் காலமைன் கரைந்துள்ள காலமைன் கழிவு நீர்மம், எரிச்சலை நீக்கி நோவகற்றும் தன்மையுடையது.

calcareous: சுண்ண நீற்று சார்ந்த; சுண்ணம் சார்ந்த : சுண்ண நீற்றுச் சார்புள்ள; சுணண நீற்றலான.

calciferol : கால்சிஃபெரால் : 'D_2' என்ற வைட்டமின்-D என்னும் ஊட்டச் சத்துவகை. இதனைச் செயற்கை முறையிலும் தயாரிக்கலாம். வைட்டமின்-D குறைபாடு காரணமாகக் குழந்தைகளுக்கு உண்டாகும் 'குழந்தைக் கணை' என்ற எலும்பு மென்மையாகும் நோயைக் (ரிக்கெட்ஸ்) குணப்படுத்த இது கொடுக்கப்படுகிறது.

calcification: சுண்ணக மயமாக்குதல்· மென்திசு சுண்ணமேற்றம்; மென்திசு காரையேற்றம்; மாற்றிடச் சுண்ண மயம் : ஒரு கரிமப் பொருளிலுள்ள காலசியம் உப்புகள் அதில் படிவதால் அந்தப்

பொருள் கடினமாகிச் சுண்ணக மயமாகும் மாறுதல். இது எலும்புகளில் இயல்பாகவும், தமனிகளில் நோயியல் முறையிலும் உண்டாகலாம்.

calcitonin : கால்சிட்டோனின் : கேடயச் சுரப்பிகளில் உள்ள 'C' உயிரணுக்களில் சுரக்கும் இயக்குநீர் (ஹார்மோன்). இது இரத்தத்திலுள்ள கால்சியம் அளவை முறைப்படுத்துவதில் இது முக்கியப் பங்கு வகிக்கிறது.

calcium chloride : கால்சியம் குளோரைடு : குருணை வடிவிலுள்ள கால்சியம் உப்புகளில் ஒன்று. நீரில் கரையக் கூடியது. கால்சியம் குறைபாட்டு நோய்க்கு உடலில் செலுத்தப்படுகிறது.

calcium gluconate : கால்சியம் குளுக்கோனேட்: பரவலாகப் பயன்படுத்தப்படும் கால்சியம் உப்புகளில் ஒன்று கால்சியம் குறைபாட்டு நோய்கள் அனைத்திலும், ஈயநச்சு நிலையிலும் இது பயன படுத்தப்படுகிறது.

calcium lactate : சுண்ண (கால்சியம்) லாக்டேட்: கரையும் தன்மையுள்ள கால்சியம் உப்புகளில் ஒன்று. இது கால்சியம் குளோரைடை விடக் குறைந்த எரிச்சலூட்டும் இயல்புடையது. கால்சியம் குறைபாட்டு நோய்கள் அனைத்திலும் கால்சியம் குளுக்கோனேட் போன்று வாய்வழியாகக் கொடுக்கப்படுகிறது.

calcium oxalate . சுண்ண (கால்சியம்) ஆக்சாலேட்: இது ஒருவகை உப்பு. இது சிறுநீரில் அதிகச் செறிவுடன் இருந்தால், சிறுநீர்க் கல்லடைப்பு உண்டாகும்.

calculus கல்லடைப்பு, உடல் கல்; காரை : உடலின் உள்ளுறுப்புகளில் உண்டாகும் கல் போன்ற தடிப்பு. இது முக்கியமாகத் தாதுப் பொருள்களினாலானது. இது சுரப்புப் பாதைகளில் அல்லது உட்குழிவுகளில் ஏற்படுகிறது.

callosity : தோல் தடிப்பு (தோல் காய்ப்பு); காய்ப்பு : அழுத்தம் அல்லது உராய்வு காரணமாகத் தோல் பரபரப்புடன் கடினமாகி விடுதல். இது பெரும்பாலும் பாதங்களிலும் உள்ளங்கைகளிலும் ஏற்படுகிறது.

callus : தோலின் மேல் தடிப்பு; தோல் காய்ப்பு; கல்முண்டு; இழை எலும்பு : எலும்பு முறிவு குணமாகும்போது எலும்பு முனைகளில் உண்டாகும் சுண்ணக மயமாக்கிய திசு.

calor : வீக்க வெப்பம்; உடல் வெப்பம்; தோல் வெப்பம்; வெப்பக் கூறு : வீக்கத்தின்போது ஏற்படும் நான்குவகை அறிகுறிகளில் ஒன்று வெப்பம்.

calcined bone : புடமிட்ட எலும்பு: உலர் வெப்பமூட்டுதல் மூலமாகத் தயாரிக்கப்பட்ட, எளிதில் தகர்ந்து விடக்கூடிய, தூளாக மாற்றப் பட்ட எலும்பு.

caloric test : கலோரி சோதனை; வெப்பச் சோதனை : புறக்காதுக் குழாயினுள் சூடான அல்லது குளிர்ந்த திரவத்தைப் பாய்ச்சிக் காது மையப்புழையில் நோய் இருக்கிறதா என்பதைக் கண்டறிவதற்கான சோதனை. காதில் நோயில்லாமல் இருந்தால், காதில் 'நிஸ்டாக்மஸ்' என்ற பொருள் இருக்கும் நோயுற்ற காதில் இந்தப் பொருள் உற்பத்தியாவதில்லை

calorie : கலோரி, வெப்ப அலகு; கனலி வெப்ப அளவை அலகு. நடைமுறையில், கலோரி மிகச் சிறிய அலகாக இருப்பதால் அது பயனபடுவதில்லை. வளர்சிதை மாற்றத்தில் கிலோ கலோரிதான வெப்ப அளவை அலகாகப் பயன படுகிறது. ஒரு கிலோ கலோரி என்பது, ஒரு கிலோகிராம் நீரின

வெப்பத்தை ஒரு பாகை சென்டி கிரேடுக்கு உயர்த்துவதற்குத் தேவைப்படும் வெப்பத்தின் அளவு ஆகும். அறிவியலில் பொதுவாகக் கலோரிக்குப் பதிலாக ஓர் அலகு ஆற்றல் பணி, வெப்பத்தைக் குறிக்க 'யூல்' என்ற அலகு பயன்படுத்தப்படுகிறது. ஒரு 'யூல்' என்பது ஏறத்தாழ ¼ கலோரி.

calorific value : வெப்ப அளவு : உணவு அல்லது எரிபொருள் தரும் சூட்டின் அளவு.

calorimeter : கனல்மானி : சூட்டின் அளவு காட்டும் கருவி.

calorimetry : கனலளவை :

camcolit : காம்கோலிட் : லிதியம் கார்போனேட் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

camphor : கற்பூரம் (சூடம்) : வயிற்று உப்புசம் அகற்றும் மருந்தாகப் பயன்படுகிறது. இருமல் மருந்துகளில் கற்பூரம் கலந்த அபினிக் கரைசலாகச் சேர்க்கப்படுகிறது. கற்பூர எண்ணெய் நோவகற்றுவதற்கு வெளிப்பூச்சு மருந்தாகப் பயன்படுகிறது.

campylobacter : காம்பிலோபாக்டர் : கிராம் சாயம் எடுக்காத, நகரும் திறனுடைய நீண்ட பாக்டீரியம். இது பல நாட்கள் நீடிக்கக்கூடிய கடுமையான வயிற்றுப் போக்கினை உண்டாக்குகிறது.

canaliculotomy : எலும்புக் குழாய் மாற்று மருத்துவம் : 'கானலிகுலஸ்' என்ற உடலில் உள்ள சிறு கால்வாய் போன்ற அமைப்பின் பிற்பகுதிச் சுவரைத் துண்டித்துவிட்டு, வடிகால் குழாயினை ஓர் எலும்புக் கால்வாயாக மாற்றுதல்.

canaliculus : கானலிகுலஸ்; மென் குழாய்; நுண்கால்வாய்; சிறுகுழல் : உடலிலுள்ள சிறு கால்வாய் போன்ற அமைப்பு. புருவத்தின் விளிம்பிலிருந்து, கண்ணீர்ப்பை வரையுள்ள குழாய் இதற்கு எடுத்துக்காட்டு.

cancellous : கடற்பஞ்சுத்தன்மையுடைய; புரைத்தமென் எலும்பாகிய : எலும்புகளில் இழையிதழ்க் குறுக்குப் பின்னல் அமைப்பு மூலம் கடற்பஞ்சு போன்ற; தேன்கூடு போன்ற தன்மையுடைய.

cancer : புற்றுநோய்; புற்று : உடலின் எந்தப் பகுதியிலுமுள்ள தாறுமாறான வளர்ச்சி எதனை



புற்று நோய்
புற்று

யும் இது குறிக்கிறது. இந்த வளர்ச்சி தேவையின்றி ஏற்படுகிறது. உடலிலுள்ள சத்துப் பொருள்களை ஒட்டுண்ணிபோல் உண்டு வளர்கிறது. இது உறுப்புகளை உள்ளிருந்து அழிக்கிறது. அணடைத் திசுக்களைத் தாக்கி, உறுப்புகளை உருமாற்றுகிறது.

cancerocidal : புற்றுக்கொல்லி : புற்று நோய்க்கொல்லி மருந்து.

cancerophobia : புற்றுநோய்க் கிலி; புற்றுநோயச்சம்; புற்றுமருட்சி : புற்றுநோய் பற்றிய அளவுக்கு மீறிய அச்சம்.

cancrum oris : குழந்தை வாய்ப் புண்: வாயழுகல்: நரம்புத் தளர்ச்சியுடைய குழந்தைகளின் கன்னக் கதுப்புகளில் உண்டாகும் தசையழுகலுடன் கூடிய வாய்ப்புண். ஆஃப்ரிக்காவில் ஊட்டச்சத்துக் குறைவுடைய குழந்தைகளுக்குத் தட்டம்மை ஏற்படும்போது இதுவும் உண்டாகிறது.

candida : இருதிரிபுக் காளான் : இரு திருபுருப்படிவங்களையுடைய காளானில் ஒருவகை. நொதி (ஈஸ்ட்) போன்ற உயிரணுக்களையுடைய இது சில வகை இழைமங்களை உண்டாக்குகிறது. இயற்கையில் பரவலாகக் கிடைக்கிறது.

candidiasis : இருதிரிபுக் காளான் நோய்: சளளை நோய் : இருதிரிபுக் காளான்களின் ஒருவகையினால் உண்டாகும் ஒருவகைத் தொற்று நோய்.

caninetooth . கோரைப்பல்; கோரப்பல் : நாய்க்கு இருப்பது போன்ற கோரைப்பல். ஒவ்வொரு தாடையிலும் உளிப்பல் எனப படும் முன் வாய்ப்பற்களுக்கும் முன் கடைவாய்ப்பற்களுக்குமிடையில் இரு கோரைப்பற்கள் அமைந்துள்ளன. இவற்றைக் 'கோரப்பற்கள' எனறும் கூறுவர்.

cannabis indica : கானா வாழைப் பிசின் . 'கானா' எனப்படும் இந்தியக் கல்வாழை எனற சணல் இனச் செடியின் பிசின். ஒரு காலத்தில நரம்புக்கோளாறுகளின் போது மூளைப்பகுதியைச் சமனப்படுத்தும் மருந்தாகப் பயன்படுத்தப் பட்டது. இந்த மயக்க மூட்டும் மருந்தினைப் பயன்படுத்துவது பல நாடுகளில தடை செய்யப்பட்டுள்ளது.

cannula : குழாய்க் கருவி; உடல் வடிகுழாய்; கடின வடிகுழாய் : துளைக்கருவி உட்கொண்ட குழாய்க்கருவி, உடலில் திரவங்களைச் செலுத்தவும், உடலிலிருந்து திரவங்களை வெளியே எடுக்கவும் பயனபடுகிறது.

cannulation : குழாய்க் கருவி செலுத்துதல் : துளைக் கருவி உட்கொணட குழாய்க் கருவியை உடலினுள் செலுத்துதல்

cantharides : கொப்புள ஈ : கொப்புளம் உண்டாகப் பயன் படுத்தப்படும் ஈவகை.

canthus : கடைக்கண் : கண் இமைகள் கூடுமிடத்திலுள்ள கோணம்.

carapres : காராப்பிரஸ்: குளோனிடின் என்ற மருநதின வாணிகப் பெயர்.

carbachol : கார்பக்கோல் : துணைப்பரிவு நரம்பு மண்டலத்தைச் செயற்படத் தூணடும் மருந்து. அசிட்டில்கோலின் போன்றது. எனினும் வாய்வழி கொடுத்தால் செயலூக்கம் உடையது. ஊசி வழி செலுத்தினால் நிலையான செயற்பாடு உடையது. அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு சிறுநீரை நிலைப்படுத்துவதற்கும் குடல் நலிவினபோதும், கண்விழி விறைப்பு நோயின்போது கண்சொட்டு மருந்தாகவும் பயன்படுத்தப்படுகிறது.

carbamazepine : கார்பாமாசெப்பின் : வலிப்பு நீக்கும மருநது. நோவையும் அகற்றுகிறது. இயக்கம், உணர்ச்சி, சுவை மூனறையும் தூண்டும் முத்திற மண்டை உணர்வு நரமபுக கோளாறுக்கும் பயன்படுகிறது.

carbamino haemoglobin : கார் பாமினோ ஹேமோகுளோபின்: 'கார்பன்டையாக்சைடுககும், இரத்தத்திலுள்ள குருதி உருண்டைப் புரதத்திற்கும் (ஹேமோகுளோபின) இடையிலுள்ள கூட்டுப் பொருள்.

carbaryl : கார்பாரில் : தலைப் பேனுக்குப் பயன்படும் மருந்து.

carbenoxolone : கார்பெனோக் சோலோன் : அடிவயிற்று நோய் களைக் குணப்படுத்தும் மருந்து. ஆனால், சிறுகுடல் புண்களை இது ஆற்றாது.

carbimazole : கார்பிமாசோல் : கேடயச் சுரப்பு எதிர்ப்பு மருந்து. அயோடினும், டைரோசினும் இணைவதைத் தடுக்கிறது. இது, மெதில்தியோராசிலைவிட வீரி யம் மிக்கது; குறைந்த நச்சுத் தன்மையுடையது. கேடயச் சுரப் புக் கோளாறுகளுக்கு மருந்தாகப் பயன்படுகிறது.

carbohydrate: கார்போஹைடிரேட் (கரி நீரகி); மாவுச்சத்து; மாவுப் பொருள் : மாச்சத்து வகை, சர்க் கரை, பழவெல்லம் முதலிய பொருள்களின் இனம். கார்பன், ஹைட்ரஜன், ஆக்சிஜன் அடங்கிய கரிமக் கூட்டுப் பொருள். தாவரங் களில் இயற்கையில் நடைபெறும் ஒளிச்சேர்க்கை முறையின்படி உரு வாகிறது. கார்போ-ஹைட்ரேட்டு கள் வெப்பத்தை உண்டாக்கக் கூடியது.

carboluria : வண்ணச் சிறுநீர் : பசுமை நிறமான அல்லது அடர் வண்ணமுடைய சிறுநீர். கார் பாலிக் அமில நச்சினபோது கார் பாலிக் அமிலம் வெளியேறுவதால் இந்த நிறம் ஏற்படுகிறது.

carbon: கார்பன் (கரிமம்); கரியம்; கரி : உலோகத் தொடர்பற்ற தனிமம். உயிர்ப் பொருள்கள் அனைத்திலும் இது உள்ளது. கார் பனடையாக்சைடு எனனும் வாயு வாக உள்ளன. பல் உள்ளெரிதலி லும், வளர்சிதை மாற்றத்திலும் இது ஒரு கழிவுப்பொருள். மூச்சு விடும்போது கார்பனடையாக் சைடு வெளியேறுகிறது கார்பன் மானாக்சைடு ஒரு நச்சுவாயு.

carbonic anhydrase : கார் பானிக் நீரா நீக்கி : செரிமானப் பொருள் (என்சைம்) அடங்கிய ஒரு துத்தநாகம். இது திசுக்களி லிருந்து இரத்தத்திற்கு கார்பன் டையாக்சைடை மாற்றுவதற்கு உதவுகிறது. கார்பானிக் அமில மானது, கார்பன்டையாக்சைடா வும், நீராகவும் பகுத்துச் சிதை வதை ஊக்குவிப்பதன மூலம் பல் லடிக் காற்றுக்கும் கார்பன்டை யாக்சைடை மாற்றுகிறது.

carboxyhaemoglobin : கார்போக் சிஹேமோகுளோபின் : கார்பன் மானாக்சைடும் ஹேமோகுளோபி னும் இணைவதால் உண்டாகும் ஒரு நிலையான கூட்டுப்பொருள். இதன் மூலம் இரத்தச் சிவப்பணுக் கள் தங்கள் சுவாசப் பணியை இழக்கின்றன.

carbrital : கார்பிரிட்டால் : கார்பு ரோமால, பென்டோ பார்பிட் டோன் தயாரிப்புகளின் வாணிகப் பெயர்.

carbromal : கார்புரோமால் : ஒரு வகைத் தூக்க மருந்து.

carbuncle : அரசபிளவை; பிள வைக்கட்டி; பிளவை : பல மயிர் மூட்டுப்பைகளிலும், சுற்றுப்புறத தோலடித திசுக்களிலும் ஏற்படும் கடுமையான கட்டி இதில் சீழ் வெளிவருவதற்குப் பல வாய்கள் இருக்கும்.

carcholin : கார்கோலின்: கார் பக்கால் என்ற மருநதின் வாணி கப் பெயர்.

carcinogen : புற்றுத் தூண்டு பொருள; (கார்சினோஜீன்); புற்று ஊக்கி; புற்றுச்சினை : புற்றுநோய் வளரத தூணடுகிற ஒரு பொருள் அல்லது கிருமி.

carcinogenesis . புற்று நோயாக் கம் : புற்றுநோயை வரவழைத் தல்.

carcinoid syndrome : புற்றுப் போல் கட்டி; புற்றுருவான: குடல

வாலில் உண்டாகும் உயிர்த் தசை மங்களைப் பொறுத்து உக்கிர வேகமுடையதாகவும், மருத்துவத்தைப் பொறுத்துப் பெரும்பாலும் கடுமையின்றியும் இருக்கும் கட்டி. இதிலிருநது செரோட்டோனின எனப்படும் பொருள் சுரக்கிறது. இப்பொருள், மிருதுவான தசையைத் தூண்டி, வயிற்றுப்போக்கு (பேதி), ஈளை நோய் சார்ந்த இசிப்பு, முகத்தின் நரம்பு நாளங்களில் குருதிப் பாய்ச்சல் போன்ற கடுமையான நோய்களை உண டாக்குகிறது.

carcinoma: எலும்புத் தசைப்புற்று; புற்றுநோய் : எலும்புத் தசை, உயி ரணுக்கள், உள்ளுறுப்புகள் போன்ற புற அடர்படலத திசுக் களிலும் சுரப்புகளிலும் புற்று நோய் போன்ற வளர்சசி உண்டா தல். இதில் நோய்க்குறிகள் புலனா வதில்லை. இதிலுள்ள உயிரணுக் கள், புற்று நோய் உயிரணுக் களைப் பெரிதும் ஒததிருக்கின்றன. இதனைப் புற்று நோயின் தொடக்கநிலை எனலாம். இதில் சுற்றுப்புறத் திசுக்களைப் புறத்தே தள்ளிவிட்டு, அதில் புற்று தானே வளாகிறது. இதனால் தாறு மாறான தசை வளர்ச்சி உண்டா கிறது. கருப்பை, சிறுநீர்ப்பை முன் வாயில் சுரப்பி ஆகியவற்றில் இது முக்கியமாக ஏற்படுகிறது

carcinomatosis . புற்றுநோய் பர வல்; புற்று மையம் ; உடலெங்கும் புற்று நோய் பரவுவதற்குரிய ஒரு நிலை.

cardia : உணவுக் குழாய் வாயில்; இரைப்பை வாய்; சுரப்பிலா இரைப் பைப் பகுதி; இதயமுனை் இணைப் பையை நோககித திறந்திருக்கும் உணவுக் குழாய் வாயில்

cardiac : நெஞ்சுப்பை மருந்து; இதய : நெஞ்சுப்பைக்கு வலிவு தரும் மருந்து.

cardiac : 1. நெஞ்சுப்பைக்குரிய ; இதயம் சார்ந்த

2. இரைப்பையின் மேற்புறத்துக் குரிய; உணவு அடைப்பு : தடங்கல் இல்லாதிருந்தும் இரைப்பைக்குள் உணவு செல்ல முடியாதிருத்தல். பாதிக்கப்பட்ட உணவுக் குழா யின் சிலபகுதிகளில் தசையடுக்கு களினுள் நரம்புக்கணு உயிரணுக் கள் அழிந்து படுவதால் இது உண் டாகிறது.

மாரடைப்பு : மூளைப் பகுதிக்குப் போதிய இரத்த ஓட்டத்தைச் செலுத்தும் இதயத்தின நடவடிக் கை நின்றுபோவதால் மாரடைப்பு உண்டாகிறது

cardiac-cathetrization : இதய அழுத்த அளவீடு.

cardialgia : நெஞ்சுப்பை எரிச்சல்; நெஞ்சுவலி : இரைப்பையின மேற் புறததண்டை ஏற்படும் எரிச்சல்.

cardiogenic: நெஞ்சுப்பை நோய்; இதயம் சார்ந்த : குருதி நாளங் களில் குருதியுறைவு (குருதிக்கட்டு) ஏற்படுதல் போனற நெஞ்சுப்பை சார்ந்த நோய்.

cardiogram : நெஞ்சுத் துடிப்புப் பதிவு வரைவி; இதய மின்னலை வரைவி : நெஞ்சுத் துடிப்பளக்கும் கருவி பதிவு செய்த நெளிவரை.

cordiograph : நெஞ்சுத் துடிப்புப் பதிவு வரைவுமானி; இதயத் துடிப்பு வரைவி : நெஞ்சுத துடிப்பைப் பதிவு செய்யும் கருவி.

cardioid : நெஞ்சுப்பை வடிவான, இதய வடிவம் : நெஞ்சுப்பை வடி வான வளைவு

cardiology : இதயவியல் : இதயத் தின கட்டமைப்பு, செயறபாடு, இதயத்தில் உண்டாகும் நோய்கள் அவற்றைக் குணப்படுத்தும் முறை கள ஆகியவற்றை ஆராயும் மருத் துவ அறிவியல் துறை.

cardiomegaly: **இதய விரிவாக்கம்; பேரிதயம்; இதய வீக்கம் :** இதயம் விரிவடைதல்.

cardiomyopathy : இதயத் தசைக் கோளாறு; இதயத் தசைநோய்; இதயத் தசை வழு : இதயத்தசையில் ஏற்படும் கடுமையான கோளாறு. இந்த நோய்க்கான காரணம் அறியப்படவில்லை. நெஞ்சுப்பையின் உள்வரி மென்தோலில் அல்லது சில சமயம் நெஞ்சுப்பையை மூடிக்கொண்டிருக்கும் சவ்வில் பெரும்பாலும் இது உண்டாகிறது.

cardiophone : இதய ஒலி வரைவி; இதய ஒலிக் கருவி; இதய ஒலி பேசி : இதய ஒலிகளைக் கேட்பதற்கு உதவும் ஒலிக் கருவி. இதயத்துடிப்பினை அளவிட்டுப் பதிவு செய்கிற மின்னணுவியல் சாதனத்தின் மூலம் நாடித்துடிப்பினை வரைபடமாக வரைய இது உதவுகிறது. கருப்பைச் சிசுவின் நாடித்துடிப்பை அறியவும் இதனைப் பயன்படுத்தலாம்.

cardioplegia: நெஞ்சுபையடைப்பு; இதயச் சுருக்கம் நிறுத்தல் ; திறந்த நிலை இதய அறுவைச் சிகிச்சையின்போது. நெஞ்சுப்பையின் தசைப் பகுதியின் அசைவைக் குறைப்பதற்காக மின் எந்திரவியல் மூலம், மருந்து அல்லது வெப்பத் தணிப்பு (hypothermia) மூலம் செயலிழக்கச் செய்தல்.

cardiopulmonary : இதயம்-நுரையீரல் சார்ந்த : இதயம், நுரையீரல்கள் இரண்டும் தொடர்பான. திறந்த நிலை இதய அறுவைச் சிகிச்சையின்போது இதய—நுரையீரல் பக்கவழி பயன்படுத்தப்படுகிறது. இரத்தவோட்டத்திலிருந்து இதயமும், நுரையீரல்களும் நீக்கப்பட்டு, அவற்றுக்குப்பதிலாக ஓர் இறைப்பு ஆக்சிஜனேற்றி பயன்படுத்தப்படுகிறது.

cardiorator : இதயத் துடிப்புப் பதிவுக் கருவி: இதயத்துடிப்பினைக் கண்ணால் பார்க்கும்படி பதிவு செய்யும் கருவி

cardiorenal : இதயம்-சிறுநீரகம் சார்ந்த; இதய நீரக : இதயம், சிறுநீரகங்கள் இரண்டும் தொடர்பான.

cardiorespiratory : இதயம் சுவாச மண்டலம் சார்ந்த; இதய மூச்சு : இதயம், சுவாசமண்டலம் இரண்டும் தொடர்புடைய.

cardiorraphy : இதயச் சுவர் தையல்: வழக்கமாக காயங்களுக்கு அறுவைச் சிகிச்சையில் பயன படுத்துவதுபோல், இதயச் சுவருக்குத் தையலிடுதல்.

cardioscope : உள் இதயச் சோதனைக் கருவி : இதயத்தின உட்பகுதியைப் பரிசோதனை செய்வதற்காக, ஆடிகளும், ஒளிச்சுடரும் பொருத்தபட்ட ஒரு கருவி.

cardiothoracic : இதயம்-மார்புக் குழி சார்ந்த; இதய மார்பக: இதயம், மார்புக்குழி இரண்டும் தொடர்புடைய சிகிச்சையின் ஒரு தனிப் பிரிவு.

cardiotocography : சூல் சிசு இதயத்துடிப்பு அளவீடு . கருப்பையில் இருக்கும் குழந்தையின் இதயத்துடிப்பு வீதத்தை அளவிடுவதற்கான ஒரு நடைமுறை. இதனை ஒரு புற ஒலிக்கருவி மூலமாக அல்லது கருப்பையில் இருக்கும் குழந்தையின் கபாலச் சருமத்தில் ஒரு மின்முனையைப் பொருத்தி, இந்த இதயத்துடிப்பு வீதம் பதிவு செய்யப்படுகிறது. குழந்தை பிறப்பதற்குமுன் கருவை அடுத்துச் சுற்றியுள்ள சவ்வுக் குழியினுள் ஓர்அக இறங்கு குழலைச் செலுத்தி அல்லது தாயின் அடிவயிற்றில் ஒரு புற நுண்ணிடை இயக்கமானியை வைதது தாயின் அடிவயிறறுச் சுருக்கததையும் அளவிடலாம்.

cardiotomy syndrome : **இதய அறுவைச் சிகிச்சை நோய்க் குறிகள்:** இதய அறுவைச் சிகிச்சையினைத் தொடர்ந்து, காய்ச்சல் குலையுறை அழற்சி, நுரையீரல் உறைச் சொரிவு ஆகியவை ஏற்படுதல். இதய அறுவைச் சிகிச்சை நடந்த பல வாரங்களுக்கு அல்லது மாதங்களுக்குப் பிறகு இது ஏற்படலாம். இது ஒரு தன்னியக்க ஏமத் தடை வினை என்று கருதப்படுகிறது.

cardiotoxic : **இதய நச்சுப் பொருள்; இதய நச்சு :** இதயத்திற்குத் தீங்கு விளைக்கும மருந்து எதனையும் இது குறிக்கும்.

cardiovascular : **இதயம் குருதி நாளம் சார்ந்த, இதயக் குழலிய :** இதயம், குருதி நாளங்கள் இரண்டும் தொடர்புடைய.

cardioversion : **இதயத் துடிப்பு மீட்பு: இதயத் திருப்பம்.** இதயத துடிப்பினை இயல்பான நிலைக்கு மீட்பதற்காக மின்னியல் சாதன அதிர்ச்சியைப் பயன்படுத்துதல்.

carditis : **இதய வீக்கம்; இதய அழற்சி :** நெஞ்சுப்பை அழற்சி.

cardophyllin : **கார்டோஃபைலின்:** அமினோஃபைலின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

caries : **பல் சொத்தை; எலும்புத் திசு மரிப்பு; சொத்தை :** பல சொத்தையாதல்; எலும்பு உள்ளழிவு.

carina : **குரல் வளை அடிக்கட்டை; கவை :** குரல்வளை இரு மூச்சுக் குழாய்களாகப் பிரியும் இடத்திலுள்ள அடிக்கட்டை (கீல்) வடிவ குருத்தெலும்புமூலம் முனைப்பாக காட்டப்படும் அடிக்கட்டை அமைப்பு.

cariogenic : **பல் சொத்தை ஊக்கிக் கிருமி :** பல் சொதததையினை உண்டாக்கும் கிருமி ஏதுவும்.

carminative : **வயிற்று உப்புச மருந்து: இரைப்பைக் குடல் வலி நீக்கி; பசியூட்டி :** வயிற்று உப்புசத்தை நீக்குகிற மருந்து இலவங்கப்பட்டை, கிராம்பு, இஞ்சி, ஜாதிக்காய் போன்றவை இந்த வகையைச் சேர்ந்தவை.

carneous mole : **தசைப் பிண்டம்:** கருப்பையினுள் உள்ள ஒரு தசைக் கட்டி. இது இரத்தக்கட்டி, கருச்சிதைவினால வெளியேறாமல் இருக்கும் இறந்துபோன கருச்சிசு அல்லது அதன் பகுதி ஆகியவற்றினாலானது.

carotenes: **கரோட்டீன்; மஞ்சளம்:** இயற்கையாகக் கிடைக்கும் நிறமிகளின் தொகுதி. இது ஆல்ஃபா, பீட்டா, காமா என்ற மூன்று வடிவங்களில் உள்ளது. இதில் பீட்டா வடிவம், உடலில வைட்டமின்-A ஊட்டச் சத்தாக மாற்றப்படுகிறது.

carotenoids : **கரோட்டின் நிறமிக் குடும்பம் :** இயற்கையில் கிடைக்கும், செம்மஞ்சள் வண்ணமுள்ள சுமார் 100 நிறமிகளின் தொகுதி. இவை பெரும்பாலும் செடிகளில் காணப்படுகிறது இவற்றில சில கரோட்டின்கள் ஆகும்.

carotid : **கழுத்துத் தமனி; தலைத் தமனி :** கழுததின இருபுறமும் உள்ள பெரும குருதி நாளங்கள் இரண்டில் ஒன்றுஇது தலைக்குக் குருதியை கொண்டு செல்லுகிறது

கழுததுத் தமனி

carphology : **சன்னிச் சேட்டை:** உணர்வு தன்வசமிழந்த நிலையில் படுக்கை, துணி முதலியவற்றைத் தாறுமாறாகப் பிடித்திழுததல்.

carpaltunnel syndrome : **மணிக் கட்டு எலும்புக் குழாய் நோய்க்குறித் தொகுப்பு** : கையிலுள்ள நடு நரம் புப் பகிர்மானப் பகுதியில் ஏற் படும் இரவுநேர நோவு,மரமரப்பு, கூச்சம் ஆகியவை. தசை நார்த் தளையின் கீழே நரம்பு செல்லும் போது ஏற்படும் அழுத்தம் காரண மாக இந்நோய் உண்டாகிறது. நடுத்தர வயதுப் பெண்களுக்குஇந் நோய் பெரும்பாலும் உணடாகும்.

carpometacarpal : **மணிக்கட்டு, எலும்பு மண்டலம் தொடர்பான** : மணிக்கட்டு, உள்ளங்கை எலும்பு கள்,அவற்றுக்கிடையிலான மூட்டு கள், அவறறை இணைக்கும் தசை நார்கள் ஆகியவை தொடர் புடைய.

carpopedal : **கைகால் இசிப்பு** : கைகள, பாதங்கள் தொடர் புடைய நோய். உறுப்புச் சுருக்கம் காரணமாக உண்டாகும் முறை நரப்பிசிவில் கைகள் பாதங்களின் இசிப்பு ஏற்படுகிறது.

carrier : **நோய் கிடத்தி; நோய்ப் பரப்பி; தாங்கி** ; தான் நோய்க் குட்படாமல் நோய்க் கிருமியைப் பரப்பும் உயிரினம்.

cartilage : **குருத்தெலும்பு; குருத்து** : அழுததத்தைத தாங்க வலல அடர்த்தியான இணைப்புத் திசு. இது செயறபடும் முறையைப் பொறுத்து இது பலவகைப்படும். ஒரு குழநதையின் எலும்புக் கூட் டில அதிகமான குருத்தெலும்புகள் உள்ளன. குழந்தை வளர்நது உரிய வயதையடையுமபோது இந்தக் குருததெலும்புகளில் பெரும் பாலானவை எலுமபுகளாக மாறி விடுகின்றன.

caruncle : **தசைத் திரளை; தசை மேடு** : வான்கோழி முதலிய பற வைகளின் தலையில அல்லது கழுத தில இருப்பதைப் போன்ற தசைத் திரளை முதிரா இளமைப் பருவத் தில் பெண குறியின் புறவாயை மூடியிருக்கும் தாள் போன்ற மைத் திரைச்சவ்வில் ஏற்படும் தசைத்திரளையானது கன்னிமைத் திரைச் சவ்வினைக் கிழித்து விட்டுக் கருப்பைக்குழாய் வாயைச் சூழ்நது கொள்கிறது. கணணீர் சார்ந்த தசைத் திரளானது, கண் ணின் உட்கோணததில் தசைத் திரளையாக முனைப்பாக வளர் கிறது.

cascara : **குடலிளக்கப் பட்டை** : குடலிளக்கும மருந்தாகப் பயன் படும் வட அமெரிக்காவின் கலி போர்னியா மாநில மரப்பட்டை வகை. இந்தப் பட்டையிலிருந்து மாத்திரைகளும், திரவமும், வடி நீரும் தயாரிககப்படுகின்றன.

caseation : **உறைச் சளிக் கட்டி; பாலாடைக் கூழ்மை** : காசநோயில் ஏற்படுவது போன்று ஒரு மென் மையான பால் போன்ற சளிக கட்டி உருவாதல்.

casein : **பால் புரதம்** : உறைபால் கட்டியின் அடிபபடைக்கூறு. பால் இரைப்பையில் நுழைந்ததும் உண் டாகிற ஒருவகைப் புரதம். இது கால்சியததுடன் இணைவதால் திட்பமாகிறது.

caseinogen: **பால் புரத மூலம்**: பாலிலுள்ள முக்கியமான புரதம். இது நீரில் கரைவதில்லை. ஆனால் கரிமம் இல்லா உப்புகளினால் (அனங்கக உப்புகள்) இது பாலில் கரைசலாக வைத்திருக்கப்படு கிறது. நீரில் கரையக் கூடியதும் கரைந்து வெப்பத்தால் கட்டி யாகக கூடியதுமான பால் கருப் புரதத்தின் வீத அளவு, தாய்ப் பாலைவிடப் பசும்பாலில் அதிகம். பால் உறைவிக்கும பொருள்(ரென் னின்) இருப்பதால், பாலகருப் புர தம் கரையாத பால் புரதமாக மாற்றப்படுகிறது

caseous degeneration : **உறை பால் திசுச் சிதைவு** : உறைபால் கட்டி போனற அமைப்புடைய

திசுக்கள் உருவாதல். மேகக்கட்டி காரணமாகத் திசுக்கள் சத்தின்றித் தேய்ந்து சிதைவதால் இது உண்டாகிறது.

Casilan: கேசிலான்: திரவ உணவுகளை மட்டுமே உண்ணக் கூடிய நிலையிலுள்ள நோயாளிகளுக்குப் போதிய புரதம் கிடைக்கும்படி செய்வதற்காகக் கொடுக்கப்படும் ஒருவகைத் தூள் மருந்தின் வாணிகப் பெயர். இதில 90% புரதம் அடங்கியுள்ளது.

Casoni test: நீர்க்கட்டிச் சோதனை: கிருமி நீக்கிய நோய் நீர்த் தேக்கத் திரவததை 0.2மி.லி. அளவு ஊசி மூலம் செலுத்தி செய்யப்படும சோதனை. வெண்ணிறக் கொப்புளம் தோன்றுமானால், அது நோய் நீர்த் தேக்கக் கட்டி இருக்கிறது எனபதைக் குறிககும்.

castor oil: விளக்கெண்ணெய், ஆமணக்கு நெய்: ஆமணக்கு விதையிலிருந்து எடுக்கப்படும எண்ணெய். குடலிளக்க மருந்தாகவும், மசகு எண்ணெயாகவும் பயன்படுகிறது. வேனல் கட்டி, புண் ஆகியவறறுக்கு துத்தநாகக் களிம்புடன் சேர்த்து மருந்தாகப் பயனபடுத்தப் படுகிறது.

castration: விரை நீக்கம், ஆண்மை நீக்கம், காயடித்தல்: ஆண்களின் விரையை அல்லது பெண்களின கருப்பையை அறுவைச் சிகிச்சை மூலம் நீக்குதல். இயக்கு நீர் (ஹார்மோன) சார்நதுள்ள புற்றுநோய்க்கான சிகிச்சையின் ஒரு பகுதியாக இவ்வாறு செய்யப் படுகிறது.

catabolism (or KATABOLISM): உயிர்ப் பொருள் மாறுபாடு; வளர்சிதை மாற்றம்; சிதைவியம்: உயிரியச் சிதைவு; உயிரப் பிராணியின் உடலில் ஏற்படும் தொடர்ச்சியான வேதியியல் வினைகள். இநத வினைகளினால், உணவாக உட்கொள்ளப்படும் சிக்கலான பொருள்கள், எளிமையான பொருள்களாகப் பகுக்கப் படுகின்றன. அப்போது ஆற்றல் வெளிப்படுகிறது. இநத ஆற்றல உடலின் உயிர்ப் பொருள் கட்டமைப்புக்கும் பிற நடவடிக்கைகளுக்கும் இன்றியமையாதவை.

catalase: ஊக்குபொருள்: மனிதர் உயிரணுக்களில ஹைட்ரஜன் பெராக்சைடு முறிவினை ஊக்குவிப்பதற்காகவுள்ள ஒரு செரிமானப் பொருள் (என்சைம்) நொதி

catalysis: இயைபியக்க ஊக்குவிப்பு: தான் மாறாமலே மற்றப் பொருள்களில்வேதியியல் மாற்றம் உண்டாக்கத துணை செய்தல்.

catalyst: இயைபியக்க ஊக்கி; வினையூக்கி: கிரியா வினையூக்கி; ஊக்கி: இயைபியககத்தை ஊக்குவிக்கும் ஒரு மருந்து. இது இந்த வினையினபோது தான எநத வித மாற்றமும் அடைவதில்லை.

cataplasm: மரப்பசை; பற்று: வீக்கத்திற்குக் கட்டுகிற மரப் பசை.

cataplexy: அசைவற்ற நிலை; துயிற்சோர்வு: கடுமையான மன அதிர்ச்சி அல்லது அச்சம் போன்ற உணர்ச்சியினால் தசை விறைப்பு உண்டாகி ஏற்படும் அசைவற்ற நிலை. இந்த நிலையின்போது நோயாளி நினைவுடனேயே இருப் பார்.

cataract: கண் புரை நோய் (கண் படலம்); விழிப்புரை; புரை: முதுமை காரணமாகக் கண்ணின விழித் ஆடியில் வெண்படலம் ஏறபடுவதால் பார்வை மங்குதல். இது பிறவி நோயாகவோ, முதுமை, நோய், வளர்சிதை மாற்றக் கோளாறுகள், நீரிழிவு காரணமாகவோ ஏற்படலாம.

catarrh: மூக்கடைப்பு; தடுமன்; சளி மூக்கு; கபக் கட்டு: தடிமன்;

நீர்க் கோப்பு; சளிச்சவ்வு அழற்சி.

catgut : நரம்பிழை; தையல் நரம்பு: விலங்கின் குடல், தசைநாளங்களி லிருந்து இழைக்கப்படும் நரம் பிழை அல்லது நரம்புக் கம்பி.

cathersis : கசடு நீக்கம்; தூய்மை யாக்கி; (குடல்) கழுவல் : வயிற்றி ளக்கம்; பேதி; குடல் கசடு நீக்கம், உளவியலில். மன நோயாளியின் உணர்ச்சியைத் தூய்மைப்படுத்து தல்.

catheter : ஊடு குழல்; வடி குழாய்; வடிகுழல் : நீர்மம அல்லது வாயுக்களை உடற் குழாய்களில் ஏற்றவோ வடிய விடவோ உதவும் குழல். இது ரப்பர், நெகிழ்வுக் கண்ணாடி, வெள்ளி போன்ற உலோகங்கள், குழைமப் பொருள் கள் ஆகியவற்றால் தயாரிக்கப்படு கின்றன. அண்மையில், இழைமஒளி யியல் இதய இறக்குங்குழல் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதிலுள்ள ஒளிததுடிப்புகளைக் கொண்டு இரததத்தில் ஆக்சிஜனின பூரித அளவைக் கணக்கிடலாம்.

catheterization : இறக்குங் குழல் அளவீடு; குழல் செலுததுகை : சிறு நீர்ப்பை, இதயக் குழாய, நரம்பு கள் ஆகியவற்றை இறக்குங் குழலை இறக்கி அழுததததை அள விடுதல்.

catscratch fever : பூனைக் கீறல் காய்ச்சல். பூனை பிறாண்டுவதால் உண்டாகும, கிருமியினால பரவும் நோய் இந் நோய் கண்டவர் களுக்கு, பூனை பிறாண்டிய ஒரு வாரத்திறகுப் பிறகு காய்ச்சலும சுரப்பி வீக்கமும் ஏற்படும்.

cauda : வால் : ஒரு வால் அல்லது வால போலறதொரு துணை யுறுப்பு.

caudal anaesthetic : வால் வழி செலுத்தும் மயக்க மருந்து : இடுப்பு மூட்டு முக்கோண எலும்பிலுள்ள வால் குழாயின் வழியாகச் செலுத் தப்படும மயக்க மருந்து.

caul : தலைக் கவச மென்தோல் : மகப்பேறறின் போது குழந்தை தலையைக கவிந்துள்ள மென தோல்.

cauliflower ear : பூக்கோசுக் காது: குத்துச் சண்டையின் காயங்களி னால் நிலையாகத் தடிப்புப்பெற்று விட்ட காது.

cauliflower growth : பூக்கோசு வளர்ச்சி: விரைந்து பரவக கூடிய, தனனியல்பாக வளரத்தக்க புற்று நோய் வகை. பாதிக்கப்பட்ட பரப் பில் இது திடீரென ஒரு வீங் கைத் திரட்சியாக எழுகிறது.

causalgia : தோல் நரம்பு வலி; எரிச்சல் வலி; எரிக்குத்து வலி : தோலைச் சார்ந்த நரமபில் ஏற் படும் புற அதிர்ச்சிப் புண்ணி லிருந்து உண்டாகும் கடும் வேதனை தருகிற நரம்பு வலி. இதனைத் 'தன்னியல்புப் பிரிவு வலி' என்றும் கூறுவா.

caustic : கடுங்காரம்; எரிகாரம்; எரி : உயிர்ப் பொருளான இழை மங்களை அரிததுத் தின்னும் எரிச் சல் தரும் பொருள். ஆறிவரும் புணமீது முதலில் உருவாகும் புது வளர்ச்சித திசுக்கள், பாலுண்ணி கள் போன்ற மிகை வளர்ச்சிகளை நீக்குவதற்கு இது பயன்படுகிறது. கார்போலிக் அமிலம் கார்பன்டை யாக்சைடுக குழம்பு, வெள்ளி நைட்ரேட்டு ஆகியவை இவ்வகை யைச் சேர்ந்த, மிகுதியாகப் பயன் படுத்தப்படும் பொருள்களாகும்.

cauterize. சூடு இடுதல்; தீய்த்தல்; மின்வழித் தீய்த்தல்; மின் எரிவு: ஒரு சூட்டுக்கோல் கொண்டு புண் ணைச் சுட்டுத் திசுக்களை அளித் தல்; காரப் பொருளினால் புண் ணைச் சுட்டுத் திசுககளை அளித் தல்

cavernous . குடைவான : ஆப்பு எலும்பின் இருபுறமும் உள்ள,

உள்நாளக் குருதிக்குரிய குடைவான எலும்பு உட்புழைவழி. இது உதடுகள், மூக்கு, கண்குழிகள் ஆகியவற்றிலிருந்து இரத்தத்தை வடிக்கிறது. இந்தப் பகுதிகளில் ஏற்படும் குருதி நச்சுப்பாட்டினால், குடைவு எலும்பு வழி அழற்சி உண்டாகிறது.

cavitation : திண் பொருள் குழிவுகள்; பொங்காதல் : நுரையீரல் காச நோயில் ஏற்படுவதுபோல குழிவுகள் தோன்றுதல்.

cavitron : கேவிட்ரான் : 'செவிப் புலன் கடந்த ஒலியலை அறுவைச் சிகிச்சை உடல் நீர் வாங்கி' என்ற கருவியின் வாணிகப் பெயர்

cavity : உட்குழிவு; புண்குழி; வளை; பொங்கு; குழிவு; ஓர் அடைப்புக்குள் உள்ள ஓர் உட்புழை அல்லது துளை அடிவயிற்று உட்குழிவு என்பது உதரவிதானத்திற்கும் கீழே உள்ளது. மண்டையோட்டு உட்குழிவு என்பது மூளை பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள எலும்புக் கூண்டு ஆகும். மூக்கில் உள்ள உட்குழிவை மூக்கின் இரு துளைகளின் இடைப் பகுதி இரு பாதிகளாகப் பிரிக்கிறது

CCU இதயக் கவனிப்புப் பிரிவு : இதயக் கோளாறுகளுக்குத் தீவிரச் சிகிச்சையளிக்கும் பிரிவு.

CDH: இடுப்பு மூட்டு இடப்பெயர்வு : பிறவியிலேயே இடுப்பு மூட்டு இடம் பெயர்ந்திருத்தல்.

cedilanid. செடிலானிட் லானாட்டோசைட்-C என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

cedocard : செடோகார்ட் : சோர்பிடெனிட்ரேட் என்ற மருந்தின் வாணிகப் பெயர்

ceftriaxone: செஃப்டிரியாக்சோன்: மேகவெட்டை நோயைக் குணப்படுத்தப் பயன்படுத்தப்படும் செஃபாலோஸ்பெரின் என்னும் மருந்து.

cefuroxime : செஃபுரோக்சிம் : பெனிசிலினை எதிர்க்கும் நுண்ணுயிரிகளுக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடிய ஒருவகை மருந்து.

celbenin : செல்பெனின் : மெத்திசிலின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

celevac : செலிவாக் : மெத்தில் செல்லுலோஸ் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

cell : ஒருயிரணு: ஓர் உட்கருவைக் கொண்டுள்ள ஒரு நுண்ணிய ஊன்மம். இரத்தச் சிவப்பணுக்கள் போன்ற சில உயிரணுக்களில் உட்கரு இருப்பதில்லை. வேறுசில உயிரணுக்களில் பல உட்கருக்கள் உள்ளன.

cellophane : பொதி பொருள் (செலோஃபேன்) : மரப்பசைச் சத்தினின்றும் செய்யப்படும் பளிங்கு நிறத்தாள் போன்ற பொதி பொருளின் வாணிகப்பெயர்

celimediated immunity உயிரணு இணக்க நோயத் தடைக்காப்பு: உயிரணு இடையீடாக இருந்து ஏற்படும் நோய்த் தடைககாப்பு

cellulitis : இழைம அழற்சி; புரையோடுதல்; உயிரணு அழற்சி : புறத்தோலுக்கு அடுத்துக் கீழுள்ள இழைமத்தின் அழற்சி அல்லது வீக்கம்.

cellulose : மரக்கூறு (செல்லுலோஸ்) : செடியினங்களின் மரக்கட்டைகளுக்கும் பருத்தி போன்ற இழைமங்களுக்கும் உயிர்மங்களின புறத்தோட்டுக்கும் மூலமான பொருள்.

celsius : செல்சியஸ் : ஆண்டர்ஸ் செல்சியஸ் (1701-1744) கண்டுபிடித்த . நூற்றளவையாகப் பகுக்கப்பட்ட நூற்றளவை வெப்பமானி.

cementum : பற்காரை : பல்லின் வேர்ப்பகுதியை மூடியிருக்கும்

சுண்ணமாக மாறிய திசுப்படுகை.

censor : **உள்ளுணர்வு; பகுத் தடக்கி** : அகமனத்திலுள்ள விரும் பத்தகாத உணர்ச்சிச் சிக்கல்கள் உணர்த் தளத்தில் தோன்றாதபடி தடுக்கும் உள்ளுணர்வு.

central venous pressure : **மையச் சிரை அழுத்தம்** : வலது துவாரத்திலுள்ள இரத்தத்தின் அழுத்த அளவு. இது ஓர் இறங்கு குழல், ஒரு காற்று அழுத்தமானி ஆகியவற்றின் உதவியுடன் அள விடப்படுகிறது.

centrifugal : **விரிமை வளர்ச்சி; நடு விலகிய** : மையத்திலிருந்து புறம் நோக்கி விரிவடையும் போக் குடைய நோய். பெரிய அம்மை (வைசூரி) நோயின் கொப்புளம். இவ்வாறு விரிவடையும் தன்மை யுடையது.

centrifuge : **விரைவேகச் சுழற்சி எந்திரம்; மைய விலக்கி** : வெவ் வேறு எடைச்செறிவுள்ள பொருள் களை விரைவேகச் சுழற்சியினால் பிரிக்கும் எந்திரம்.

centripetal : **குவிமையப் போக் குடைய; மைய நோக்கு அசைவு, மை யம் நாடு; நடு ஒன்றிய** : மையத்தை நோக்கிச் செல்லும் போக்குடைய நோய். சின்னம்மை (தட்டம்மை) நோய்க் கொப்புளம் இத்தகைய தன்மையுடையது.

centyl : **சென்டில்**: பெண்ட்ரோ ஃப்ளுவாசைட் என்னும மருந்தின் வாணிகப் பெயர்.

cephalalgia : **மண்டைக் குத்தல்; தலை வலி** : தலையில் ஏற்படும் வலி; மண்டையிடி.

cephalexin : **செ:பாலக்சின்** : சிறு நீர்க் கோளாறுகளுக்கு வாய்வழி கொடுக்கப்படும் செஃபாலோரி டின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

cephal haematoma : **மண்டைத் தோல் குருதிச் சேகரம்; மண்டை குருதிக் கட்டி**: உச்சி வட்டக் குடுமித் தோலின் எலும்படிச் சவ்வு களில் இரத்தம் சேகரமாதல்.

cephalic : **தலை நோய் மருந்து; தலைப்பாகம்**

cephalic index: **தலைத் தகவளவு**: மண்டையோட்டின நீளத்துக்கும அகலத்துக்கும் இடையேயுள்ள விழுக்காட்டுத் தகவளவு.

cephalitis : **மூளை அழற்சி,**

cephalocele : **மூளைப் புடைப்பு முறிவு** : மூளையின பகுதியில் ஏற் படும் மூளைப் புடைப்பினை மண் டையோடு வழியாக முறிவு செய் தல்.

cephalometry : **தலையளவு மானி** : உயிருள்ள மனிதரின் தலை யின அளவினை அளவிடுதல்.

cephaloridine : **சி:பாலோரிடின்** : சிஃபாலோஸ்போரினிலிருந்துஎடுக் கப்பட்ட ஓரளவு செயற்கையான உயிர் எதிர்ப்புப் பொருள்.

cephalosporin : **சி:பாலோஸ் போரின்** : சார்டினியாவில் 1948 இல் சாக்கடையிலிருந்து சேகரிக் கப்பட்ட ஒருவகைப் பசளை மண் ணிலிருந்த மண் கிருமிகளிலிருந்து தயாரிக்கப்பட்ட உயிர் எதிர்ப்புப் பொருள்களில் ஒரு பெருங்குழுமம் இதில் இருந்து தயாரிக்கப்பட்ட உயிர்எதிர்ப்புமருந்துகள்பலநோய் களின்சிகிச்சைக்குப்பயன்படுகிறது

cephradine : **செ:ப்ராடின்** : சிறு நீர்க் குழாய்க் கோளாறுகளுக்கு முக்கியமாகப் பயன்படுததப்படும் ஒரு கலவை எதிர்ப்புப் பொருள். இது பொதுவாக வாய்வழி கொடு கப்படுகிறது. ஊசி வழியாகச் செலுத்தும் மருந்தும் உணடு.

cerebellum : **சிறுமூளை** : தலை யின பின்பக்கத்திலுள்ள மூளை யின் பகுதி. நுட்பமான தன்னியல்பு

அசைவுகளை ஒருங்கிணைப்பதும் நிற்பதைக் கட்டுப்படுத்துவதும் இதன் முக்கிய பணிகள்.

cerebral hemispheres : மூளைக் கோளங்கள் : மூளையின் இரு பெரும் பிரிவுகள்.

cerebralism : மூளைச் செயல் கோட்பாடு : மனத்தின் செயல்களெல்லாம் மூளையில்தான் தோன்றுகின்றன என்னும் கோட்பாடு.

cerebration : மூளை இயக்கம்; பெரு மூளையியக்கம்;மூளைத்திறன்; அறிதிறன் : மூளை செயற்படுதல்; மனதின் செயற்பாடு; எண்ணம்.

cerebritis : மூளையழற்சி; பெரு மூளையழற்சி.

cerebrospinal : மூளை - முதுகந் தண்டுத் தொடர்பு : மூளைக்கும் முதுகந் தண்டு வடத்திற்கும் ஒருங்கேயுள்ள தொடர்பு.

cerbro-spinal fever : சன்னி: மூளைப் போர்வை அழற்சி

cerbro-spinal fluid : மூளைத் தண்டுவிட நீர்.

cerebro vascular. மூளைக் குருதிக் குழாய் தொடர்புடைய; பெரு மூளை **குருதிக் குழாய்:** குருதிக் குழாயடைப்பு காரணமாக மூளையில் இரத்தம் பாய்தல் பாதிக்கப்படுதல்.

cerebrum : பெருமூளை: தலையின் முன பக்கமுள்ள பெருமூளை.

certified patients: சான்றளிக்கப்பட்ட நோயாளிகள் : 1956ஆம் ஆண்டு மனநலச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு மனநோய் மருத்துவமனையிலிருந்து தானாகவே வெளிச் செல்ல முடியாதிருந்த நோயாளிக்கு "சான்



மூளைச செயல கோடபாடு

றளிக்கப்பட்ட நோயாளிகள்'' எனக் குறிப்பிட்டனர் இப்போது இவர்களை ''இருத்தி வைக்கப் பட்ட நோயாளிகள்'' என்கின் றனர்.

certified milk : சான்றளிக்கப் பட்ட பால் : *என்புருக்கி நோய் (காசநோய்) கிருமிகள் தொடர் பற்றதெனச் சான்றளிக்கப்பட்ட பால்.*

cerumen : காது அழுக்கு; காது குரும்பை; காது மெழுகு, குரும்பை; குரும்பி : *புறக் காதுக் குழாயி லுள்ள தனிவகைச் சுரப்பிகளி லிருந்து வெளிப்படும், பழுப்பு நிற மெழுகு போன்ற அழுக்கு. இந்த அழுக்கினை எடுக்கப் பயன்படும் காதுக் குரும்பி.*

cervical : கழுத்து சார்ந்த: கருப் பைக்கழுத்துசார் : *ஓர் உறுப்பின் கழுத்துப் பகுதி சார்ந்த.*

cervicectomy: கருப்பைக் கழுத்து அறுவை மருத்துவம்; கருப்பையகற் றல்; கருப்பை நீக்கல் . *கருப்பைக கழுத்தினை அறுதலெடுக்கும் அறு வைச் சிகிச்சை.*

cervicitis : கருப்பைக் கழுத்து அழற்சி, கருப்பை வாய் அழற்சி; கருப்பை அகற்றல் : *கருப்பையின கழுததில் ஏற்படும் வீக்கம்.*

cervix : கருப்பை வாய்; கருப்பைக் கழுத்து : *ஓா உறுப்பின கழுததுப் பகுதி. கருப்பையின் கழுத்து.*

cetavlon : செட்டாவ்லோன் : *செடரிமைடு என்ற மருந்தின் வாணிகப் பெயர்.*

cetiprin : செட்டிப்ரின் : *எமிப் ரோனியம் புரோமைடு என்ற மருந்தின் வாணிகப் பெயர்.*

cetrihex : செட்ரிஹெக்ஸ : *செட் ரிமைடு என்ற கலவை மருந்தின் வாணிகப் பெயர்.*

cetrimide:செட்ரிமைடு: *நுரைக்கும் இயல்புள்ள ஒருவகை நோய் நுண் மத் தடை மருந்து. காயங்கள், தீச் சுட்ட புண்கள், தோலில் கிருமி நீக்கம் செய்தல் ஆகியவற்றுக்குப் பயன்படுகிறது.*

chalazion : கண் சுரப்பிக் கட்டி; இமைப் புருடு : *கணணிலுள்ள 'மெய்போமியன்' என்ற சுரப்பி களில் ஏற்படும் கட்டி.*

chalk : சீமைச் சுண்ணாம்பு : *உள் ளூரில் கிடைக்கும் கால்சியம் கார் பொனேட, உணவுப் பாதைப் புணணுக்குப் புளிப்பகற்றும் மருந் துகளிலும், வயிற்றுப் போக்குக்குச் செறிவுப்பு மருந்துகளிலும் பயன் படுத்தப்படுகிறது.*

chalone : செயல் தடுப்புக் கசிவு : *செயல் தடுக்கும் உட்கசிவு.*

chancre : கிரந்திப் புண்; வன் கிரந்தி : *மேகப் பிளவை. நிண நீர்ச் சுரப்பிகளின் வீக்கத்தால் உண்டாகிறது.*

chancroid : கிரந்தி போன்ற புண் தொற்றுக் கிரந்தி,பால்நோய்க்கட்டி; மென கிரந்தி : *தொறறு மூலமாக மட்டுமே வரும் கிரந்திநோய். இத னால் ஆண்குறியிலும் பெண்களின் கரு வாயிலும் வலியுடன புண்கள் உண்டாகினறன. வன்கிரந்தியில் அவ்வளவாக வலியிருக்காது.*

character : பண்பு; நடத்தை; இயல்பு : *ஒருவரின் ஒட்டுமொத்த மன இயலபுகள்; குறிப்பாக அவ ரது நடததைமுறை நோயாளியின் இயல்பான நடத்தையிலிருந்து மாறுபட்ட விசித்திர நடத்தை முறையாக வெளிப்படுவது நோய்க் குறியாக இருக்கலாம் வழககமாக மரியாதைக்குரியவராக நடந்து வந்தவர் இழிவாக நடந்து கொள்ளுதல் மனநோய் மூளை நோயின் காரணமாக இருக்கலாம்.*

charcoal : மரக்கரி : கரிமப் பொருள்களை, அடைக்கப்பட்ட ஒரு பாத்திரத்தில் உயர்ந்த வெப்ப நிலையில் எரிப்பதால் எஞ்சியிருக்கும் கரிப்பொருள். இது, ஆவி உறிஞ்சவும், மணம் அகற்றவுமான இயலபுடையது. எனவே, இது மருந்துகளில் பயன்படுத்தப்படுகிறது.

charcot's joint : சார்க்கோட் மூட்டு : இயங்குகிற உடலுறுப்புகளில ஒரு மூட்டு ஒத்தியங்க முடியாமல் முற்றிலுமாகத் தாறுமாறாக இருத்தல். இந்த நிலையில் நோவு இருப்பதில்லை.

cheilitis : உதடு வீக்கம்; உதட்டழற்சி : உதடுகள் வீங்கியிருக்கும் நிலை.

cheiloplasty : உதட்டு அறுவை மருத்துவம்: உதட்டின் மீது செய்யப்படும் ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சை.

cheilosis : வாய் வெடிப்பு, கடைவாய்ப புண்; கடைவாய் வெடிப்பு : வாயின் கோணங்கள் மெலிந்து நலிவுறுதல். பின்னர் வெடிப்புகள் ஏற்படலாம். ரிபோஃபிளேவின் குறைபாட்டினால் இது உண்டாகலாம்

cheiropompholyx : கைக் கொப்புளம் : கைகளின் தோலில் முக்கியமாக விரலில் ஒரே மாதிரியாகக் கொப்புளங்கள் தோன்றுதல். இதனால் நுண்ணிய குமிழ்கள் உண்டாகி, அவற்றில் எரிச்சலும் ஏற்படும். பாதங்களிலும்இதுபோன்ற கொப்புளங்கள உண்டாகும்.

chelation : குறட்டித்தல் : சில உலோக அயனிகளை தங்கள் மூலக்கூற்றுக் கட்டமைப்பினுள் நிலைப்படுத்துகின்ற கரையக் கூடிய கரிமப் பொருள்கள். நச்சுணவு நேர்வுகளில் இதனைக் கொடுக்கும்போது அவ்வாறு உருவாகும் புதிய கூட்டுப் பொருள், சிறுநீர் வழியாக வெளிவருகிறது.

chemonucleolysis : இயக்குநீர் செலுத்தல் : ஓர் இயக்குநீரை (என்சைம), அதனைக் கரையும்படி செய்வதற்காக, எலும்பற்ற வட்டினுள் ஊசி மூலம் செலுத்துதல்

chemoprophylaxis : வேதியியல் முற்காப்பு; நோய்த் தடுப்பு : வேதியியல் பொருள்களைக் கொடுத்து, நோய் வராமல் (அல்லது நோய் மீண்டும் தாக்காமல்) தடுத்தல்.

chemopsychiatry : மருந்தியல் மனநோய்ச் சிகிச்சை : மருந்து மூலம் மனநோயைக் குணப்படுத்தும் முறை.

chemoreceptor : வேதியியல் இணைப்புப் பொருள்; வேதியியல் பொருளேற்பி; வேதியேற்பி : உயிருள்ள உயிரணுவிலுள்ள ஒருவேதியியல் இணைப்புப் பொருள். இது வேறு சில வேதியியல் பொருள்களுடன் இணையும் நாட்டமும், திறனும் உடையது.

chemosis : இமை வீக்கம்; தண்டு நரம்பிணைப்பு அழற்சி : புடைத்த தண்டு நரம்பின் மேல்முனை இணைப்பில் ஏற்படும் இழைம அழறசி அல்லது வீக்கம்.

chemotaxis : உயிரணு இயக்கம்; வேதியீர்ப்பு : வேதியியல் தூணடுதலுக்கிணங்க குறிப்பிட்ட திசையில் உயிரி முழுமையாகப் பெயர்ந்து செல்லும இயக்கம்.

chemotherapy : வேதியியல் பொருள் மருத்துவ முறை; வேதி : நோய் உண்டாககும கிருமிகளை அழிக்கும் திறனுள்ள வேதியியல் சேர்மத்தைக் கொண்டு நோய் குணப்படுத்தும் முறை.

chendol : செண்டோல் : செனோடியாக்சிக்கோலிக் அமிலத்தின் வாணிகப் பெயர்.

chenodeoxycholic acid: செனோ டியாக்சிக்கோலிக் அமிலம் : பித்த நீரில கலந்திருக்கும் ஒரு துப்புரவுப் பொருள். பித்தப் பையில் விளை யும் கல்போன்ற கடும பொருளைக் கரைப்பதற்கு வாய்வழி இது உட் கொள்ளபபடுகிறது.

cheyne - stokes respiration : சுவாசச் சுழற்சி : சுவாசம் ஏறியும் இறங்கியும் வரும் சுழற்சி சில சமயம் மூச்சுவிடுதல் மிக வேகமாக நடைபெறும்; வேறு சமயம், சுவா சம் மிக மெதுவாக நடைபெறும்.

chiasma : கண் நரம்புக் குறுக்கீடு, பிணைப்பு; குறுக்குக் கூட்டு : கண நரமபுகள் 'X' வடிவில் குறுக்காகச் சநதித்தல.



கண நரமபுககுறுக்கீடு

chicken - pox : சின்னம்மை, தட்டம்மை; பயற்றம்மை, நீர்க்கொள்வான்: இது முதலில் இடுப்பில தோனறி சிறுசிறு கொப் புளங்களாக வெடிக்கும் இவை பொருக்காடி, தழும்பு இனறி ஆறி விடும்.

chikun gunya : இரத்தப் போக்குக் காய்சசல் (சிக்குன் குன்யா): வெப்ப மண்டலங்களில கொசுவினால் உண்டாகும் ஒருவகை இரத்தப் போக்கு ஏறபடும் காயச்சல வகை யில் ஒன்று.

chilblain : குளிர்க் கொப்புளம்; பனி வெடிப்பு : கடுங்குளிரினால ஏற்படும் கனனிய கைகால கொப் புளம். இதனால் கடுமையான நமைச்சல ஏற்படும்.

child mishandling : குழந்தை உருக்குலைவு நோய் : குழந்தையை உருக்குலையும்படி செய்யும் நோய்.

chimney sweep's cancer: புகை போக்கி ஒற்றடைப் புற்றுநோய் : புகை போககியில் படியும ஒற் றடை போன்று விதைப்பையில் உண்டாகும் புற்றுநோய் வகை.

chinese restaurant syndrome : சீன உணவக நோய் : மோனோ சோடியம் குளுட்டாமேட் உண் பதால் உணவுககுப் பின்னர் உண டாகும் வயிறறுக் கோளாறு.

chiniofon: சினியோஃபான் : நோய்த் தடுப்பு மருத்துவத்திலும் கடுமையான வயிற்றுப் பூச்சி நோய்க்காகவும் பயன்படுத்தப படும் வயிற்றுப் பூச்சிக் கொல்லி மருந்து.

chiropodist . கால்நோய் மருத் துவர்; விரல் உகிரர் : காலின காய்ப்பு, விரல் கணு வீக்கம், மெய்க்குரு போன்ற நோய்களுக் குச் சிகிச்சையளிக்கும் மருத்துவர்.

chiropody: கால்நோய் மருத்துவம்: காலின் காய்ப்பு, விரல கணு வீக் கம், மெய்க்குரு முதலியவற்றுக் கான மருததுவம்.

chiropractice : வர்ம மருத்துவர்; கரப் பொருத்து : தண்டெலும்பில் தடவி நரமபுகளின் செயற் தடுப்பு நோவினைக் குணப்படுததும் முறை.

chiropractor : வர்ம மருத்துவம்; கரப் பொருத்தர் : தண்டெலும்பில் தடவி நரம்புகளின் செயல் தடுப்பு நோவினைக குணப்படுத்தும் மருத துவர்.

chlamydiae : திண்தோல் சிதல் நோய்க் கிருமி : பறவைகளிடமும், மனிதரிடமும் திண்தோல் சிதல் நோய் உண்டாககும் நோய்க்கிருமி போனற நுண்ணுயிரிகள். இந்

நோயில் சிலவகை, பறவைகள் மூலம் மனிதருக்குப் பரவுகிறது. பாலுறவு வழியாகவும் இந்நோய் பரவுகிறது இந்நோய் கண்ட குழந்தைகள் அதிக அளவில் பிறக்கின்றன. இது கண்ணிமை அரிப்பு நோய்க்கும் காரணமாக இருக்கிறது.

chloasma: **தவிட்டுப் படை; மங்கு:** தோலில், முக்கியமாக முகத்தில், பொன் தவிட்டு நிறத்தில் படரும் படை நோய். பெண்களுக்குக் கருவுற்றிருக்கும்போது இது உண்டாகிறது.

chloral hydrate : குளோரல் ஹைட்ரேட் : நரம்புத் தளர்ச்சியினால் உறக்கமின்மை ஏற்படும் போது கொடுக்கப்படும் விரைவாகச் செயற்படும் சமனப்படுத்தும் மருந்து.

chloralism : குளோரின் உலர் வெறியப் பழக்கம் : குளோரின (பாசிக) உலர்வெறியம் தரும் மயக்கக் கோளாறு.

chlorambucil : குளோரம்புசில் : அறுவைச் சிகிச்சையின் போது நோய்க் கிருமித் தடை மருந்தாகப் பயன்படுத்தப்படும் மருந்து.

chloramphenical : குளோராம் ஃபெனிக்கோல் : அநேகமாக வாய் வழியாகக் கொடுக்கப்படும் உயிர்க் கொல்லி மருந்து நச்சுக் காய்ச்சல (டைபாயடு)போல ற நோய்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது

chlorcyclizine : குளோர்சைக்ளிசின் : புண்ணுண்டாகிய இடததில இரத்தத்தில விழுப்புப் பரவிச் செயலாறறாமல் தடுக்கும் மருநது களில் ஒனறு. இதனை 'எதிர் விழுப்புப் பொருள்' என்றும் கூறுவர். பயண நோய்க்கும் இது பயன படுகிறது.

chlordiazepoxide : குளோர்டையாசிப்பாக்சைடு : மன இறுக்கம் ஆகியவற்றைக் குணப்படுத்தும் மருந்து. தசையைத் தளர்ச்சியடையச் செய்யும் குணமும் உடையது. இதனை வாய்வழியாகவோ ஊசி மூலமாகவோ செலுத்தலாம்.

chlorexolone : குளோரெக்சோலோன். சிறுநீர் கழிப்பதைத் தூண்டும் மருந்து.

chlorhexidine : குளோர்ஹெக்சிடின் : பலவகைப் பாக்டீரியாக்களுக்கு எதிராகப் பயன்படுததப் படும் நுண்ணுயிரிகளைக் கொல்லும் கரைசல் மருந்து.

chlorine : குளோரின் (பாசிகம்) : நிற நீக்க. நோய்க்கிருமித் தடைக் காப்பு, போருக்குரிய நச்சு வாயு ஆயுதங்கள் ஆகியவற்றில் நெஞ்சு திணற அடிக்கும், காரமணமுடைய வாயுவடிவத் தனிமங்களில் ஒன்று. இது பசுமஞ்சள் நிறமுடையது.

chlorine water : குளோரின் கரைசல்.

chlormethiazole : குளோர் மெத்தியாசோல : உறக்க மூட்டும மருந்து. மருந்துறைகளாகவும், ஊசி மருந்தாகவும கிடைக்கிறது. இது மன உளைசசலைத தணிககக் கூடியது.

chlorocresol : குளோரோக்ரிசால்: பாக்டீரியாக்களைக் கொல்லும் மருந்து. ஊசி மருந்துக் குமிழ்களைப் பாதுகாப்பாக வைக்கப் பயன்படுகிறது.

chlorodyne : குளோரோடின் : அபினிசசதது, ஈதர், குளோரோஃபார்ம் ஆகியவை கலந்த ஒரு கரைசல். இது உறக்கமூட்டும் மருந்தாகப் பயனபடுகிறது

chloroform : மயக்க மருந்து (குளோரோஃபார்ம்) : எளிதில ஆவியாகும், இனிமை கலந்த சுவையுடைய, நிறமற்ற உணர்ச்சியகற்றும் நீர்மம்.

chloroma : குளோரோமா; பசும் புத்து : முகத்திலும், மண்டை யோட்டிலும், முள்ளெலும்புகளி லும் எலும்புகளை மூடியுள்ள சவ் வின்மீது உண்டாகும் பசுமஞ்சள் நிறமுடைய வளர்ச்சிகள்.

chloromycetin : குளோரோமை செட்டின் : நச்சுக் காய்ச்சல், முது கந்தண்டு நோய், மூளை அதிர்ச்சி ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் குளோராம்ஃபெனிக்கோல் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

chlorophyll : பச்சையம்; பச்சை நிறமிகள் : தாவரங்களில் ஒளிச் சேர்க்கை நடைபெறுவதற்கு உதவு கிற பசியநிறப் பொருள். இப் போது இது செயற்கையாகத் தயாரிக்கப்பட்டு, மணமகற்றும் பொருளாகப் பயன்படுத்தப்படு கிறது.

chloroquine : முறைக் காய்ச்சல் மருந்து (குளோரோக்குவின்) : முறைக் காய்ச்சலில் (மலேரியா) பயன்படுத்தப்படும் மருந்து. கொள்ளை நோய் பரவும் பகுதி களில் உப்புடன் இது கலக்கப்படு கிறது. வீக்கத்தைக் குறைக்கும் தன்மையும் கொண்டது.

chlorososis: பசலை நோய்: இளம் பெண்களிடம் பசுமை நிறம் பட ரும் சோகை என்ற பசலைத் தளர்ச்சி நோய்.

chloroxylenol : குளோரோக்லை லினால் : நோய் கிருமிக் கொல்லி யாகப் பயன்படுத்தப்படும் ஒரு வகை மருந்து.

chlorpromazine : குளோர்புரோ மாசின் : மிகுந்த மருந்தியல் வினை புரியக்கூடிய ஒரு மருந்து. இது தூக்க மருந்தாகவும், வாந்தித தடுப்பு மருந்தாகவும், வலிப்பு நோய் எதிர்ப்பு மருந்தாகவும், குருதியழுத்தம் குறைக்கும் மருந் தாகவும் பயன்படுகிறது. உள வியல் கோளாறுகளின் போது பயன்படுத்தத்தக்க சிறந்த மருந்து.

chlorpropamide : குளோர்புரோப் மைட்: நீரிழிவு நோய்க்குக் கொடுக் கப்படும் மருந்து. டயாபினீஸ், மெலிட்டாஸ் போன்றவை இவ் வகையைச் சேர்ந்தவை.

chlorprothixene : குளோரோ புரோத்திக்சின்: ஒருவகை நோ வகற்றும் மருந்து. முரண் மூளை நோயகளின்போது பயன்படுத்தப் படுகிறது. ஆனால, நீண்டகாலம் சிகிச்சையளிக்கும்போது இது அவ் வளவாகச் செயற்படுவதில்லை.

chlortetracycline : குளோர்டெட் ராசைக்ளின் : டெட்ராசைக்ளின் மருந்தின் ஒருவகை

chlorthalidone : குளோத்தாலி டோன் : சிறுநீர் கழிவதைத் தூண்டுவதற்கு வாய்வழி கொடுக் கப்படும் மருந்து. இது ஒருநாள் விட்டு ஒருநாள கொடுக்கப்படு கிறது. இது 48 மணிநேரம் செயற் படக் கூடியது.

chocolate cyst : சாக்கலேட் நீர்க்கட்டி; சாக்கலேட் பந்து : கருப் பையின் உட்புறச சவ்வில் ஏற் படும் நீர்க்கட்டி. இது நிலை மாறிய இரத்தத்தைக் கொண் டிருக்கும். இது பெரும்பாலும் பெண் கருப்பையில் உண்டாகிறது.

cholaemia : பித்தசோகை : குருதி யில பித்தநீர் தேஙகுவதால் உண டாகும் நோய்.

cholagogue : பித்தபேதி மருந்து; பித்தநீா ஓட்ட ஊக்கி : குடலுக்குள பிததநீர் பாய்வதை அதிகரிக்கும் மருநது.

cholangiography : பித்தநீர் நாள ஊடுகதிர்ப் படம்; பித்தக குழாய் வரைவி: கல்லீரல், பிததநீர் நாளங் களைப் பரிசோதனை செய்த ஊடு கதிர் (எக்ஸ்ரே) படம். ஊடுகதிர் ஊடுருவாத பொருளினை வாய் வழியே கொடுத்தும, நேரடியாக

ஊசிமூலம் செலுத்தியும் இந்தப் படம் எடுக்கப்படுகிறது.

cholangiohepatitis : பித்த நீர் நாள வீக்கம் : நுரையீரல், பித்த நீர் நாளங்களில் ஏற்படும் வீக்கம்.

cholecystectomy : பித்தப்பை அறுவை மருத்துவம்; பித்தப்பை நீக்கம : பித்தநீர்ப்பையினையும், சிறுகுடலினையும் அறுவை செய்து அப்புறப்படுத்துதல்.

cholecystitis: பித்தப்பை அழற்சி: பித்தநீர்ப்பையில் உண்டாகும் வீக்கம்.

cholecystoduodenostomy : பித்தப்பை-முன்சிறுகுடல் பிணைப்பு : பித்தநீர்ப்பைக்கும், முன் சிறுகுடலுக்குமிடையில் ஒரு பிணைப்பை ஏற்படுத்துதல். பொதுப் பித்தப்பை நாளத்தில் அழற்சி அல்லது அறுவைச் சிகிச்சை காரணமாக நெரிசல் கோளாறு ஏற்படும் போது இந்தப் பிணைப்பு ஏற்படுத்தப்படுகிறது.

cholecystography : பித்தப்பை ஊடு கதிர்ப்படம்; பித்தப்பை வரைவி : ஊடுகதிர் ஊடுருவாத பொருளை கொடுத்தபின்பு பித்த நீர்ப்பையினை ஊடு கதிர்ப்படம் மூலம் பரிசோதனை செய்தல்.

cholecystojejunostomy: பித்தப்பை-இடைச் சிறுகுடல் பிணைப்பு : பித்தநீர்ப்பைக்கும் இடைச் சிறுகுடலுக்கும் (நடுச்சிறுகுடல்) இடையில் ஒரு பிணைப்பை ஏற்படுத்துதல். கணையத்தின் தலைப்பகுதியில் ஏற்படும் வளர்ச்சி காரணமாக உண்டாகும் மஞ்சட்காமாலை அடைப்பின்போது இது ஏற்படுத்தப்படுகிறது.

cholecystokinin : கோலசிஸ்டோக்கினின் : பித்தநீர்ப்பையைச் சுருங்கச் செய்கிற ஓர் இயக்குநீர் (ஹார்மோன்). மேற்குடல் சவ்வில் இது சுரக்கிறது.

cholecystolithiasis : பித்தப்பைக் கல் : பித்தநீர்ப்பையில் கல் போன்ற பொருள் உண்டாதல்.

cholecystostomy ; பித்தநீர் வடிகுழல் அறுவைச் சிகிச்சை : பித்த நீர்ப்பைக்கும் அடிவயிறறுப் பரப்புக்குமிடையில் அறுவைச் சிகிச்சை மூலம் ஏற்படுத்தப்படும் குழல் உறுப்பு. பித்தநீர்ப்பையிலிருந்து கற்களை அகற்றியபிறகு வடிகுழல் அமைப்பதறகாக இது ஏற்படுத்தப்படுகிறது.

cholecystotomy: பித்தப்பை அறுவை, பித்தப்பை திறப்பு . பித்தநீர்ப்பையில் சிறுதுணடு அறுதெடுத்தல்.

choledocholithotomy : பித்தக் கல் அறுவைச் சிகிச்சை : பொதுவான பித்தநீர் நாளத்திலுள்ள கல் போன்ற பொருளை அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றுதல்.

choledochostomy : பித்தநீர் வடிப்பு : பொதுவான பித்தநீர் நாளததிலிருந்து ஒரு 'T' குழாய் மூலம் பித்தநீரை வடித்தெடுததல். கல் போன்ற பொருள் இருக்கிறதா என்று பரிசோதனை செய்தபிறகு இவ்வாறு செய்யப்படுகிறது.

choledochotomy : பித்தநீர் நாள அறுவை : பொதுவான பித்தநீர நாளத்தில் அறுவை செய்தல்.

choledyl : கோலடில் : கோலின் தியோஃபிலினேட்டு எனற மருந்தின் வாணிகப் பெயர்.

cholelithiasis : பித்தக் கற்கள்; பித்தக் குழல் கல் : பித்தநீர்ப்பையில் அல்லது பித்த நாளங்களில். கல்போனற பொருள்கள் இருத்தல்.

choler : பித்தநீர்.

cholera : வாந்திபேதி (காலரா) : கொள்ளை நோயாகப் பரவும ஒரு கொடிய தொற்று நோய். கிழககு

நாடுகளில் மிகுதியாகக் காணப்படுகிறது. இந்நோய் கண்டவர் குருதிசிவப்பு நுண்ணுயிர்களுக்கு அபரிமிதமாகத் தண்ணீர் கலந்த மலங்கழியும்; வாந்தியும் உணடாகும். கைகால் நோவும் ஏற்படும். உடனடியாகச் சிகிச்சைசெய்யாவிட்டால் மரணம் உணடாகும். மாசுபட்ட நீர், அளவுக்கு அதிகமான மக்கள் நெரிசல், சுகாதாரமற்ற சூழ்நிலை காரணமாக நோய்க் கிருமி பரவி பெருமளவு உயிர்ப்பலி ஏற்படுகிறது.

காலரா நோயக கிருமி

choleric temperament : **சிடுசிடுப்பு; முன் கோபக் குணம் :** எளிதில் சீற்றம் கொள்ளுகிற சிடுசிடுப்பான நடத்தைப் போக்கு இது, நான்குவகை நடத்தைப் போக்குகளில் ஒன்று.

cholerine : **வேனிற்கால வாந்திபேதி** . வேனிற்காலத்தில் உண்டாகும வாந்திபேதி நோய்.

cholestasis : **பித்தநீர் அடைப்பு; பித்த நீரோட்டத் தடை; பித்தத் தேக்கம் :** பித்தநீர் பாய்வது குறைதல அல்லது அடைக்கப்படுதல். உள் கல்லீரல் பித்தநீர் அடைப்பு என்பது, தடுப்பு வகையைச் சேர்ந்த மஞ்சள் காமாலையினால் உண்டாகிறது.

cholesteatoma : **காதுக் கழலை** . கொலஸ்டிரால் அடங்கிய, பையில் அடைபட்டுள்ள, கடுமையாக இராத கழலை. இது பெரும்பாலும் நடுக்காதில் ஏற்படுகிறது.

cholesterol: **கொழுப்பினி; கொழுவியம்; கொலஸடிரால்:** கொழுப்புத் தனமை வாய்நத படிகம் போன்ற பொருள். மூளை, நரம்புகள் நுரையீரல், இரத்தம், பித்தநீர் ஆகியவற்றில் இது காணப்படுகிறது. அது எளிதில் கரைவதில்லை. இது பித்தநீர்ப்பையிலும் தமனிச் சுவர்களிலும் உறைநது விடும். ஒளிபடும்போது, இது 'வைட்டமின்-D' என்ற ஊட்டச் சத்து ஆகிறது.

Cholesterosis : **கொலஸ்டிரால் மிகைப் படிவு :** கொலஸ்டிரால் அளவுக்கு அதிகமாகப் படிதல்.

cholestyramine : **கொஸ்டிரால் பிசின் :** குடலில் பித்தநீர் அமிலங்களுடன் இணைந்து கொள்கிற ஓர் அடிப்படையான அயனிப் பரிமாற்றப் பிசின். இவ்வாறு இணைத்து உண்டாகும் பொருள் ஈர்த்துக் கொள்ளப்படுவதில்லை. எனவே, இது இரத்தத்தில் கொலஸ்டிரால் அளவைக குறைக்கிறது.

choline : **கோலின் ;** லெசித்தின் அசிட்டில்கோலின் போன்றவையாக அமைந்துள்ள விலங்குத் திசுக்களில் காணப்படும் ஒரு வேதியியல் பொருள். இது வைட்டமின -B தொகுதியின் ஒரு பகுதி எனக் கருதப்படுகிறது. இது உடல் வளர்ச்சிக்கு ஒரு காரணியாக அமைந்துள்ளது. நுரையீரலில் கொழுப்புப் படிவதை இது தடுக்கிறது பால் பொருள்களில் இது மிகுதியாகக் கிடைக்கிறது

choline magnesium trisalicylate : **கோலின் மகனீசியம் டிரைசாலிசைலேட் ;** சாலிசிலிக் அமிலத்தின் ஒருவழிப் பொருள். இது வீக்கத்தைக் கட்டுப்படுததும் தனமை வாய்ந்த மருந்து.

choline theophyllinate : **கோலின் தியோஃபைலினேட் :** இது ஒரு கூட்டுப் பொருள். இது பொது வான விளைவுகளில், அமினோஃபைலின் போன்றது. எனினும், வினைபுரிவதில், ஒழுங்காக இயங்காதது.

cholinesterase : கோலினெஸ் டெராஸ் : *நரம்பு முனைகளில், அசிட்டில் கோலினை நீரிடைச் சேர்மப் பிரிப்பு செய்து கோலினாகவும், அசிட்டிக் அமிலமாகவும் பிரிக்கும் ஒரு செரிமானப் பொருள்-நொதி.*

chondritis : குருத்தெலும்பு வீக்கம்; குருத்தெலும்பு அழற்சி.

chondrodynia : குருத்தெலும்பு நோவு

chondrolysis : குருத்தெலும்பு கரைதல்.

chondroma : குருத்தெலும்புக் கழலை; குருத்தெலும்புக் கட்டி : *குருத்தெலும்பில் உண்டாகும் கடுமையாக இராத கழலை இதனை அகற்றிய பின்பும் மீண்டும் ஏற்படலாம்.*

chondromalacia : குருத்தெலும்பு மென்மையாதல்.

chondrosarcoma : குருத்தெலும்பு ஊன்ம வளர்ச்சி : *குருத்தெலும்பில் ஏற்படும் உக்கிரமான ஊன்ம வளர்ச்சி.*

chordee : ஆண்குறி விறைப்பு : *ஆண்குறி கடும்நோவுடன் விறைத்திருத்தல். இதனால் மூத்திரக் குழாய் அழற்சியும் ஏற்படுகிறது.*

chorditis : விந்து இழை வீக்கம்; விந்துக் குழல அழற்சி : *விந்து இழை வீக்கம்.*

chorea கூபக்கட்டுப்பாடிலா வலிப்பு *இது வலிப்பு வகையில் ஒன்று. நோயாளியின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டு ஏற்படும் நோய். இதனை நடன வலிப்பு என்றும் கூறுவர்.*

chorion : கருப்பைப் புறத்தோல்; கரு வெளியுறை; சவ்வுறை : *கருப்பையைச் சுற்றியிருக்கும் புறச் சவ்வு.*

chorionic villi : கருப்பை புறத்தோல் துய்யிழை : *கருப்பையின் புறத்தோலிலுள்ள மயிர்போன்ற இழை. இதிலிருந்து நச்சுக் கொடியின் முதிர் கருப் பகுதி உருவாகிறது.*

chorionic villus biopsy : கருப்பைத் துய்யிழை ஆய்வு : *பேறு காலத்திற்கு முந்திய பல்வேறு கோளாறுகளுக்காகக் கருப்பைப் புறத்தோல் துய்யிழையில் செய்யப்படும் உயிர்ப் பொருள் ஆய்வு.*

chorioretinitis : கருவிழி வீக்கம்: *கண்ணின் கரும் படலத்திலும் கண் விழியின் பின்புறத் திரையிலும ஏற்படும் வீக்கம்*

choroid : கண கரும் படலம்; கருவிழிப் படல ஊடு சவ்வு : *விழித் திரைப்படலத்தின் தொடர்ச்சியாக இருக்கும் கண்விழியின் பின்பக்கத்தின் நடுப்பகுதியில் ஆறில் ஐந்து பகுதியாக அமைந்துள்ள நிறமியான செல்'குழாய்ப்படலம். இது வெளிப்புறம் வெண்விழிச் கோளத்தின் புறத்தோலுக்கும், உட்புறம் கணவிழியின பினபுறத் திற்குமிடையில் அமைந்துள்ளது. இது ஒளிக் கதிர்கள் ஊடுருவுவதைத் தடுக்கிறது.*

choroiditis : கண் விழி பின் படல அழற்சி;கருவிழி பின்படல அழற்சி : *விழித்திரைப் படலத்தைப் பாதிக்கும் ஒரு சிதைவு மாற்றம.*

choroidocyclitis : கண் வீக்கம் : *கண் கரும படலத்திலும், கண்ணிமை இழை உறுப்பிலும் ஏற்படும்.*

chromatogram : நிற ஆய்வுப் பதிவு; நிற வரைவு : *நிறங்கள் பற்றிய ஆய்வின் முடிவுகளைப் பதிவு செய்தல்.*

chromic acid: குரோமிக் அமிலம்: *குரோமியமாக்கிய நரம்பிழையில உறை பொருளாகப் பயன்படுத்தப்படும் 5% கரைசல். அதிக அடர்த்தி வாய்ந்த கரைசல்கள் கடுங்காரத் தன்மை வாய்ந்தவை.*

chromosome: இனக்கீற்று; பண்புக் காரணித் தொகுப்பு, அணுக்குரும்: உயிர்மப் பிளவுப் பருவத்தில் உயிரியலான பங்குகொண்டு இனமரபுப் பண்புகளைக் கொண்டிருப்பதாகக் கருதப்படும் இனக் கூறின் கம்பியிழை போன்றபகுதி இதுஇரட்டித்துப் பெருகும் தன்மையுடையதாகும்.



இனக்கீற்று இரட்டித்தல

chronological age: காலவரிசை வயது; காலக்கிரம வயது. ஒருமனிதரின் உண்மையான வயது (ஆண்டுகளில).

Chvostek's sign : முகச்சுரிப்பு: முக நரம்பில் துளையிடுவதால் முகம் அளவுக்குமீறிச் சுரித்துப் போதல். இது, முறை நரம்பிசிவு நோயின் அறிகுறி.

chyle : உணவுப் பால், குடல் கூழ், குடற்பால்; குடற் சாறு : உடலில் உணவிலிருந்து ஊறும் கொழுப்பு கலந்த வெள்ளை குடல் நிணநீர்.

chylothorax: உணவுப்பால் கசிவு; மார்பில் குடல் கூழ் : நுரையீரல் உட்குழிவிற்குள் மார்பக நிணநீர்க் குழலிலிருந்து உணவுப்பால் கசிதல்.

chyluria : சிறுநீரில் உணவுப்பால்; குடற்பால் நீரிழிவு; கொழுநீர் : சிறுநீரில் உணவுப்பாற்கூறு காணும் உட[illegible]கோளா

Chymar : கைமார் : கைமோட்ரிப்சின் என்ற மருந்தின வாணிகப் பெயர்.

chyme : உணவுச் சாறு; இரைப் பைக் குழம்பு : குடலில உண்டாகும் உணவின குழம்பு இது கனமான மஞ்சள நிற அமிலம். இது இரைப்பையிலிருந்து, முனசிறுகுடலுக்குச் செல்கிறது. இதன் அமிலத் தன்மை, உணவுச்சாறு அடிக்கடி இடைவெளிகளில் வெளியேறும் வகையில், இரைப்பையின் வாயில் காப்பைக் கட்டுப்படுத்துகிறது.

chymification : உணவு குழம்புருவாதல் : உணவு குழம்பாக மாறும் மாறுபாடு.

Chymoral : கைமோரால் : டிரிப்சின், கைமோட்ரிப்சின் போன்ற செரிமானப் பொருள் கலவையின் (என்சைம்கள்) வாணிகப் பெயர்.

chymotrypsin : கைமோட்ரிப்சின்: புரதத்தைச் சீரணிககககூடிய ஒரு செரிமானப் பொருள் (என்சைம்). இது கணையத்தில் சுரக்கிறது.

Cicatrin : சிக்காட்ரின் : நியோமைசின், பாசிட்ராசின அடங்கிய ஒரு தயாரிப்பின் வாணிகப்பெயர். இது அமினோ அமிலமாகக் கிடைக்கிறது. இது காயுங்களைக் குணப்படுத்துகிறது.

Cidex : சைடெக்ஸ் : நுட்பமான அறுவைச் சிகிச்சைக் கருவிகளிலும் ஆடிகளிலும் பயன்படுத்தப்படும் பாக்டீரியாக் கொல்லி மருந்தின் வாணிகப் பெயர்.

Cidomycin : சைடோமைசின் : ஜெண்டாமைசின் சல்ஃபேட் எனற மருந்தின் வாணிகப் பெயர்.

cilia : கண்ணிமை மயிர் : கண்ணிமைகளில் காணப்படும் இழை போனற உறுப்பு.

Cimex : சிமெக்ஸ் : மூட்டுப் பூச்சி வகையைச் சேர்ந்த இரத்தம் உறிஞ்சும் பூச்சிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவகை.

cinchocaine : சிங்கோக்கைன் : ஆற்றல் வாய்ந்த உறுப்பெல்லை உணர்வு நீக்கி. இது தோல் மேற்

பரப்பு உணர்வு நீக்கியாகவும் (1%—2%), ஊடுருவு உணர்வு நீக்கியாகவும் (0.05%—0.2%), முதுகந்தண்டு உணர்வு நீக்கியாகவும் பயன்படுகிறது. இது களிம்பு வடிவிலும் கிடைக்கிறது.

cinchona : சிங்கோனா : காய்ச்சல் மருந்துப் பொடிக்குப் பயன்படும் மரப்பட்டை. இது கசப்புச் சுவையுடையது.

cincophen : சிங்கோ:ஃபென் : கீல்வாதம், வாதக் காய்ச்சல் ஆகியவற்றுக்குப் பயன்படும் நோவகற்றும் மருந்து.

cinnamon : இலவங்கப்பட்டை : இலவங்க மரப்பட்டை. வயிற்று உப்புசத்தை அகற்றும் தன்மையுடையது சிலசமயம் வயிற்றுப் போக்கு மருந்துடன் சேர்த்துப் பயன்படுத்தப்படுகிறது.

circinate : வளையக் கொப்புளம்; வட்ட உரு; வட்ட வட்டமான : கிரந்தி நோயில் படர் தாமரை போன்று தோலில் உண்டாகும் வளைய உருவக் கொப்புளங்கள்.

circulation : குருதிச் சுற்றோட்டம் : சாதாரணமாக உடலெங்கும் ஏற்படும் இரத்த சுழற்சியை இது குறிக்கும்.

circumcision : சுன்னத்து செய்தல்; முனைத்தோல் வெட்டல்; நுனித்தோல் நீக்கம் ; தோல் நுனியிதழ் அகற்றுதல்.

circumoral : மைனாவாய்; வாயைச் சுற்றி; வாய்சூழ் : மைனாவின் வாயைச் சுற்றியுள்ளதுபோல் வாய்த் தோலைச் சுற்றி வெண்ணிறம் தோன்றுதல். செம்புள்ளி நச்சுக் காய்ச்சலின் ஓர் அறிகுறி.

circumvallate : சூழ் வளையம்; வட்டப் பொட்டு : நாக்கின் அடிப்பகுதியிலுள்ள பெரிய சுற்று அடுக்குத் தசை போனறு சூழ்ந்து பரவியுள்ள வளையம்.

cirrhosis : உறுப்புத் தடிப்புக் கோளாறு; கரணை நோய்; ஈரல் இறுக்கி ; உறுப்பின் இழைமம இறறுப் போய் இணைமங்கள் மட்டுமீறி வளர்ச்சியடையும் கோளாறு.

cirsoid : நரம்புக் காழ்ப்பு, சுருள் மலி : நரம்புப் புடைப்புக் கோளாறு.

cisplatin : பிளாட்டினக் கூட்டுப் பொருள : உக்கிர வேகமுடைய நிலைகளில் சிகிச்சையளிப்பதற்குரிய ஒரு பிளாட்டினம் கூட்டுப் பொருள்.



குருதிச் சுற்றோட்டம்

Citanest : சிட்டானெஸ்ட் : பிரிலோக்கைன் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

citric acid : சிட்ரிக் அமிலம் : எலுமிச்சைப் பழங்களிலுள்ள அமிலம். வயிற்று உப்புசத்தைக் குணப்புடுதத பொட்டாசியம் சிட்ரேட்டாகக் கொடுக்கப்படுகிறது.

citrin : சிட்ரின் (வைட்டமின்-P) : இழைமக் குருதி நாளங்களின் முற்வெளிமைப் பண்பை இயக்குவதாகக் கருதப்பட்டு நீரில் எளிதாகக் கரையும் பண்புடைய எலுமிச்சைப் பழ ஊட்டச்சத்து. இது வைட்டமின்-C எனற ஊட்டச்சத்தின் வினையை அதிகரிக்கிறது. எலுமிச்சை இனததைச் சேர்ந்த பழங்கள், கருமுநதிரிப் பழம் போனறவற்றில் இது உளளது.

clairaudience : சேணோசை : புலன் கடநதவற்றைக் கேட்கும் கேள்வியாற்றல்.

clap : மேக நோய் (வெட்டை) : வெட்டை நோய்த் தொற்று படர்தல்.

claudication : நொண்டுதல்; கால் ஊனம்; கால் தசை வலி : கால்களுக்கு இரததம் செல்வது தடைபடுவதால காலை நொண்டி நடத்தல். நாளங்களில் இசிப்பு அலலது நோய் காரணமாக இது உண்டாகலாம்.

claustrophibia : ஒதுக்கிட அச்சம் : ஒதுக்கிடம் எனறாலே அச்சம உண்டாகும் கோளாறு.

claustrum : மூளை மென்படலம் : மூளைக் கோளங்களில் உளள சாம்பல் நிறப் பொருளின் மென படலம்.

clavicle : கழுத்துப் பட்டை எலுமபு

clavulanic acid : கிளாவுலானிக் அமிலம் : பென்சிலினை எதிர்க்கும் பாக்டீரியா உற்பத்தி செய்யும் செரிமானப் பொருளைத் தடை செய்வதற்கு அமோக்சிலினுடன் சேர்த்துப் பயன்படுத்தப்படும் அமிலம்.

clawfoot : வளை நகப் பாதம்; வளை அங்கால்; புலிப்பாதம்; முடங்கு கால் : பாததத்தின நீள வளைவு உயரத்தில் அதிகமாகும் ஓர் உறுப்புத் திரிபு. கால் விரல் பகுதி வளைந்து விடுவதால் இது உணடாகிறது. இது பிறவியிலோ அல்லது நோயாலோ ஏற்பட்டிருக்கலாம்.

clawhand : வளை நகக் கை; மடங்கு கை; வளைவு அங்கை; முடக்கை கை வளைந்து,வளைநத நகம்போல தோற்றமளித்தல். காயத்தினால் அலலது நோயினால் இது உண்டாகலாம்.

cleft palate : பிளவு அண்ணம்; அணணப் பிளவு ; இடது, வலது அண்ணங்கள பிறவியிலேயே இணையாமலிருத்தல், பிளவுபட்ட மேல் உதடு (ஒலுவாய்) என்ற கோளாறுடன் தொடர்புடையது.

Clifton assessment procedures for the Elderly : முதியோர்க்கான கிளிஃபடோன் கணிப்பு நடைமுறை ; முதியோரின் புலனுணர்வுச் செயற்பாடு, நடததை முறை ஆகியவற்றை அளவிடுவதற்கான பரிசோதனைகளின தொகுதி.

clindamycin : கிளிண்டமைசின் : லிங்கோமைசினிலிருந்து கிடைக்கும் வழிப்பொருள். இது தாய்க் கலவையைவிட அதிகச் செயலூக்கம் வாய்ந்தது.

clinical : மருத்துவப் பயிற்சி சார்ந்த; மருத்துவ : படுக்கை மருத்துவப் பயிறசியைச் சார்ந்த. நோயாளிகளைப் பரிசோதனை செய்தல, அவர்களுக்குச் சிகிச்சை யளித்தல் குறித்து ஏடடில் படித்த

தை நடைமுறைப் பயிற்சிமூலம் கற்றல் கற்றல் சார்புடைய.

Clinimycin : **கிளினிமைசின் :** ஆக்சிடெட்ராசைகளின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்

clitoridectomy . **பெண்கந்து அறுவை மருத்துவம் :** பெண்கநதினை (பெண்லிங்கம்) அறுவைச் சிகிச்சைமூலம் அகறறுதல்.

clitoriditis : **பெண்கந்து வீக்கம் ; அல்குல வீக்கம் :** பெண்கந்தில (பெண்லிங்கம்) ஏற்படும் வீக்கம.

clitoris : **பெண்கந்து (பெணலிங்கம்); அல்குல; பெணகுறி :** பிறபபு வாயில் மேட்டுககுக சறறுக் கீழே அமைந்துள்ள ஒரு சிறிய நிமிாத தக்கூடிய உறுப்பு.

cloaca : **நிணவெலும்புப் பிளவு :** நிணவெலும்பு வீக்கததில், சீழ் வெளிப்படுததும் மேலுறை வழியாக ஏற்படும பிளவு

cloberasol propionate : **குளோபெராசோல் புரோப்பியோனேட் :** தோல் தடிப்பு (படை) போனற நோய்களுக்குத் தோலில பூசுவதற்குப் பயனபடும மருந்து.

clofazimine : **குளோஃபாசைமின்;** தொழுநோய் அறிகுறிகளைக் கட்டுப்படுததுவதற்கு வாய்வழி கொடுக்கப்படும சிவப்பு நிறச் சாயப்பொருள்.

clofibrate. **குளோஃபிப்ரேட்:** இரத்தத்தில் கொலஸ்டிராலைக் குறைக்கும் மருந்து. எலும்பு முறிவின் போது கொழுப்பு படியாமல் தடுக்கப் பயனபடுததப்படுகிறது.

clomid : **குளோமிட் :** குளோமிஃபீன் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

clomiphene : **குளோமிஃபீன் :** கருவுறாத பெண்களிடம் கருவணுவைத் தூண்டி, மாதவிடாய் வரவழைத்து, அவர்களின கருவுறும் திறனை அதிகரிக்கக்கூடிய ஒரு செயற்கைக் கலவைப் பொருள்.

clomipramine : **குளோமிப்பிராமின் :** சுறுசுறுப்பைக் குறைப்பதைத் தடுக்கும் மருந்துகளில் ஒனறு. 3-15 நாட்கள் இம்மருந்தினை உட்கொணடபின் இது செயற்படத் தொடங்கும். இதனை நரம்பு வழியாகச் செலுத்தலாம்.

clomocycline : **குளோமோசைக்ளின் :** டெட்ராசைகளின மருநதின் ஒரு திருந்திய வடிவம் நீண்ட கால முகப்பருவுக்கு ஏறறது.

clonidine : **குளோனிடின் :** மெத்தில் டோப்பா என்ற மருந்தினைப் போனறது தாழ்ந்த குருதியழுத்த நிலையைக் குறைக்கிறது. எனினும், சில நோயாளிகளுக்கு வாய் வறட்சியை உணடாக்குகிறது. இதனைச் சிறிதளவில் கொடுத்து வந்தால், கடுமையான ஒற்றைத் தலைவலியைத தடுக்கிறது.

clonus : **தசைத் துடிப்பு; வலிப்பு :** மாறிமாறிச் சுருககமும் தளர்வுமாக வரும் தசைத் துடிபபு.

Clostridium : **குளோஸ்டிரிடிய நுணணுயிர் :** ஒருவகைப் பாக்டீரியா வகை. இது நரம்பிசிவு நோய், தகரக் கல உணவு நச்சுப் பாடு போன்றநோய்களை உண்டாக்குகிறது.



குளோஸடிசிய நுண்ணுயிா

clove oil : **கிராம்பு எண்ணெய் :** கிராம்பிலிருநது எடுக்கப்படும் எண்ணெய் இது, நோய்க் கிருமித் தடுபபு, வயிற்று உப்புசத் தடுப்பு, நோயாற்றுதல் ஆகிய பணபுகளை உடையது. பலவலியையும் போக்கக் கூடியது.

cloxacillin : **குளோக்சாசிலின் :** பெனசிலினை எதிர்க்கும் நோய்க்

கிருமிகளுக்கு எதிராகச் செயற் படும் ஒரு செயற்கைப்பென்சிலின். இதனை வாய்வழியாகக் கொடுக்க லாம்.

clubbed fingers : விரல் பருமன் நோய்; விரல் முனைத் திரள், திரள் முனை விரல் : நகங்களுக்கு அடி யில் விரலகள் பருமனாகவும் அகல மாகவும் இருததல். இதற்கான காரணம் தெரியவில்லை. எனினும் இதயநோய் அல்லது நுரையீரல் நோய் உள்ளவர்களுக்கு இந்நோய் உண்டாகிறது.

clubbing : விரல் நுனி பருத்தல் : பூச்சிக்கடியினால் விரல் நுனி பருத் துப் போதல்.

clubfoot: கோணற்கால்(தொட்டிக் கால), பிறவி வளைபாதம் : பிறவி யிலேயே கால்கள திருகு முறுக லாக அமைந்திருத்தல. இருகால் கள் அல்லது ஒருகால் கோணற் காலமாக அமைந்திருக்கலாம்

clumping : குருதியணு ஒட்டித் திரள்; கொத்தாடுதல்.

Clutton's joints:கிளட்டன் மூட்டு நோய் : முழங்கால் மூட்டுகளில் ஒரே மாதிரியாக ஏற்படும் வீக்கம். இந்த வீக்கத்தினால் பெரும் பாலும் வலி ஏறபடுவதில்லை. பிற விக் கிரந்தி நோயினால் இது உண்டாகிறது.

clysodrast : கிளைசோடிராஸ்ட் ; குடலை ஊடுகதிர்ப்படம் எடுப் பதற்கு ஆயத்தமாகக் குதவாய் வழியே குடல் கழுவுவதற்குப் பயன்படும் கருவியின வாணிகப் பெயர்.

CNS : மைய நரம்பு மண்டலம் (சிஎன்எஸ்): மைய நரம்பு மண்ட லம் (central nervous system) என் பதன் சுருக்கம்.

coagulase: உறை பொருள்: குருதி நீரை (பிளாஸ்மா) உறையச் செய் யும் ஒரு பாக்டீரியா உண்டாக்கும் ஒருவகைச் செரிமானப் பொருள் (என்சைம்) நொதி.

coagulum : உறைவித்த பொருள் : உறையச் செய்யப்பட்ட பொருள்.

coalesce : தோல் திரட்சி : நோய் பாதித்த தோல் பகுதியில் ஏற்படும் திரட்சி.

coarctation : நாள இறுக்கம் : குழாய் அல்லது நாளம் சுருங்கி, குறுகி இறுக்கமடைதல்.

coarse tremor : கடும் நடுக்கம்.

cobalamin : கோபாலமின் : வைட்டமின்-12 தொகுதியின் பொது இனப் பெயர்.

cobalt . கோ ல்ட் : வெண்ணிற உலோக வ இது அணு எண் 27 உடைய னிமம். இதனை மிகச் சிறிதளவு உணவில் சேர்த் தால் ஊட்டசசத்தாக அமையும். வைட்டமின்-B (கோபாலமின்) என்ற ஊட்டச்சத்தில் இது ஓர் அமைப்பான் ஆகும். இரத்த சோகையை இது தடுக்கிறது.

cobalt - blue : கோபால்ட் நீலம் : கோபால்ட் என்னும் வெண்ணிற உலோக வகையிலிருந்து எடுக்கப் படும் நீலவண்ணப் பொருள்.

cocaine : கோக்கைன் : கோக்கோ என்ற தென் அமெரிக்கச் செடியின் இலைகளிலிருந்து உண்டுபண்ணப் பட்டு, உடற்பகுதியை உணர்ச்சி யிழக்கச் செய்யும் மருந்துப் பொருள்.

cocainism: கோக்கைன் கோளாறு: மரத்துப்போகச் செய்யும் கோக் கைன் மருந்து வகையை அளவுக்கு மீறிப் பயன்படுததப்படுவதால் உண்டாகும் கோளாறு.

coccus : **கோளக் கிருமி; வட்ட நுண்ணுயிர் ; பரல் நுண்மி :** கோள வடிவமுள்ள நோய்க்கிருமி.



வட்ட நுண்ணுயிர்

coccydynia: **உள்வால் எலும்பு நோவு** உள்வால் எலும்புப் (குதஎலும்பு) பகுதியில் ஏற்படும் நோவு.

coccyx : **உள்வால் எலும்பு (குதஎலும்பு): வால் எலும்பு :** தண்டெலும்புக் கண்ணிகளின் கடைசி எலும்பு.


உள்வால் எலும்பு

cochlea : **செவிச் சுருள் வளை ; உட்காது சுருள் குழாய்; திரி சுருளை :** காதில் நத்தைக் கூடு போன்று சுருண்டு வளைந்திருக்கும் சுருள்வளை.

திரி சுருளை

cocoa : **கோக்கோ :** கெக்கேயோ மரத்தின் விதை; சாக்கலேட் செய்யப் பயன்படும் கெக்கேயோ விதைத்தூள்; கெக்கேயோ விதையிலிருந்து இறக்கப்படும் பானம். இதன் விதையிலிருந்து எடுக்கப்படும் வெண்ணெய், கட்டி, வீக்கம் முதலிய நோய்களுக்கு இடும் இளக்கு மருந்தாகப் பயன்படுகிறது

codeine : **கோடைன் :** உறங்க வைக்கும் மருந்தாகப் பயனபடுத்தப்படும் அபினியிலுள்ள உப்புச் சத்து சத்து இருமலை அடக்கும்.

codliver oil : **மீன் எண்ணெய்; மீன் நெய் :** மருந்தாகப் பயன்படும் மீன் ஈரல் எண்ணெய். இதில் வைட்டமின்-A, வைட்டமின்-D அடங்கியுள்ளது. இந்த ஊட்டச் சத்துப் பொருள்கள் குறைபாட்டினை ஈடுசெய்ய இது கொடுக்கப்படுகிறது.

coeliac : **வயிற்றுக்குரிய; உடற்குழி :** அடிவயிற்றுக் குழி சார்ந்த தமனிகள், சிரைகள், நரம்புகள் ஆகியவற்றையும் குறிக்கும

coenzyme : **செரிமான ஊக்கி; துணை நொதிப்பி; இணை என்சைம் :** ஒரு செரிமானப் பொருளைச்(என்சைம்)செயற்பட ஊக்குவிக்கும் பொருள்.

coffee ground vomit : **இரத்த வாந்தி;** இரத்தம் கலந்த வாந்தி. இது காப்பிக் கசட்டினை ஒத்திருக்கும்.

cognition : **புலனுணர்வு; அறிதல் நிலை; தெரிதல்; அறிகை; நினைவுறல்:**இவைமூன்றும் ஒட்டுமொத்தமாகச் செயறபடுகின்றன.எனினும் எந்த ஒரு மன இயக்கததிலும் ஏதேனும் ஒன்று ஓங்கியிருக்கலாம். உணர்தல் அடையாளம் தெரிதல், எடைபோடுதல், ஆராய்தல், பகுததறிவால் வகைப்படுத்துதல் ஆகிய அனைத்தும சேர்ந்து அறிதல் என்னும் ஒட்டுமொத்தமான செயல்பாட்டைக் குறிக்கும் சொல்லாக அமைந்துள்ளது 'எனக் கூறலாம்.

colchicum: இரணிய துத்தம் : கீல் வாதம், முடக்கு வாதம முதலிய வாத நோய்களுக்குப் பயனபடும் மருந்துப் பூண்டுவகை.

cold: தடுமன்; நீர்க்கோள்: சளி. இது வெப்ப தட்ப நிலைகள் திடீரென மாறும்போது ஏற்படக்கூடும்.

cold sore : வாய்ப் புண் : கடுங் குளிர்ச்சியினால வாயில் ஏற்படும் புண்.

colectomy : பெருங்குடல் அறுவை மருத்துவம்; பெருங்குடல் பகுதி நீக்கம் : பெருங்குடலின ஒரு பகுதியை அல்லது அதை முழுவது மாகத் துண்டிதது எடுததல.

colic : கடும் வயிற்றுவலி; குடல் தசைச் சுருக்கு வலி: அடிவயிறு வீக்கத்துடன் கூடிய குடல் நோவு.

coliforom : மலக கிருமி : கடும் வயிறறு வலி உண்டாககும கிருமி யை ஒத்த ஒரு பாக்டீரியம் இது மலத்தில பலுகக் கூடியது.

colistin : கோலிஸ்டின : கிராம் சாயம எடுககாத உயிரிகளுக்கு எதிராகச் செயறபடககூடிய ஒரு வகை உயிர் எதிர்ப்புப் பொருள்.

colitis : குடல் அழற்சி; பெருங் குடல் அழற்சி : பெருஙகுடல் வீக் கம. இதனால் குடற்புண் உணடா கலாம்.

collagen : எலும்புப் புரதம்; சவ்வு (கொலலாஜன்). தோல, தசைத தளை, எலும்பு, குருத்தெலும்பு போன்ற இணைப்புத் திசுக்களில் அமைந்துள்ள முககியமான புரதம் இது நோயுறுவதால் வீக்கத்துடன் கூடிய நைவுப்புண உண்டாகிறது. இநநோய்க் காரணம் தெரிய பலவாக இருக்கலாம்.

collapse : சோர்ந்து வீழ்தல், செயல் ஒடுக்கம்; செயல் சரிவு; ஒடுங்கல்; சோர்வு : உட்புழையுள்ள உறுப்பு அலலது நாளம் தளர்ந்து உள்வீழ் தல். எடுத்துககாட்டு நுரையீரல், உள்காற்றழுத்த மாற்றத் தினால் தகர்ந்து வீழ்தல். மனம் இடிந்து போவதாலும் தளர்ச்சி ஏற்படுவதுண்டு.

collapsing pulse : நாடித்துடிப்பு வீழ்ச்சி; குறையழுத்த நாடி; வீழ் நாடி : பெருந்தமனியின் உள் அழுத்தவிசைக் குறைவினால் நாடித்துடிப்பு வீழ்ச்சியடைதல்.

collateral circulation : பக்கக் குருதியோட்டம்; மாற்றுவழிக் குருதி யோட்டம்; ஒத்திசைவான குருதி யோட்டம்: முதன்மை ரத்தக் குழாய் கள் அடைபட்டிருக்கும்போது, துணை இரத்தக் குழாய்கள் மூலம் இரத்தவோட்டம் நடைபெறுவ தற்கு மாற்றுவழி அமைத்தல்.

collodion : கொல்லோடியன் : பிசினும், விளக்கெணணெயும் கலநத பைராக்சிலின் கரைசல. இது தோலில் நெகிழ்திறன் கொண்ட படலமாகப் படிகிறது. இது பாதுகாப்புக் கட்டுப் போடு வதற்குப் பயன்படுகிறது

colloid : இழுதுபொருள (கரைத் தககை), கூழமம்; கூழமப் புரதம் : கரைநத நிலையிலும சவ்வூடு செல்லுமளவு ஒனறுபட்டுக் கல வாக கூழ்நிலைப்பொருள்.

colloidal gold test : கரைதக்கைத் தங்கச் சோதனை : கூழான தங்கச் சோதனை : நரம்புக கிரந்தி நோயைக் கண்டுபிடிப்பதற்கு மூளைத்தண்டுவட நீரைக் கொண்டு செய்யப்படும் பரிசோ தனை

coloboma : கணவிழி வெடிப்பு; விழி உருககுறை : கண்விழியில அலலது அதன பகுதிகளில ஒன றில், பிறவியிலேயே ஏற்படும் வெடிப்பு அல்லது பிளவு.

colocystoplasty . சிறுநீர்ப்பை அறுவை மருத்துவம் : பெருங்குட லின ஒரு பகுதியைப் பயனபடுததிச் சிறுநீரகப்பையின கொள்ள ...

அதிகரிப்பதற்கான அறுவைச் சிகிச்சை.

Colomycin : கோலோமைசின் : கோலிஸ்டின என்ற மருநதின் வாணிகப் பெயர்,

colon : பெருங்குடல் : குடல் வாலிலிருந்து மலக் குடல்வரையுள்ள பெருங் குடல பகுதி



பெருஙகுடல

coloniza -tion: உடலுண் வாழ்வு: மனித உடலில் கிருமிக் கூட்டம் ஒரே உணவைஉண்டு ஒன்றுக் கொன்று உதவி கூட்டு வாழ்வு நடத்துதல். பிறந்தவுடனேயே இந்த உடனுண்ணிகள் பல உண்டாகிவிடுகின்றன ஆனால் இவைநோய் உணடாக்குவதில்லை. உடனுண்ணிகளுக்கும் தற்காப்பு அமைப்பு முறைக்குமிடையில் சம நிலையின்மை ஏற்படும்போது தான நோய் தொற்றுசிறது

colony: கிருமிக் கூட்டம்; நுண்ணுயிர்க் குழுமம் : உடலில ஒன்று அலலது அதற்கு மேற்பட்ட உயிரிகளின் எண்ணிக்கை பெருகுவதால் உண்டாகும் நோய்க் கிருமிகளின் ஒரு கூட்டம். ஒரு கிருமிக்கூட்டத்தில் கோடிக்கணக்கான தனித்தனி உயிரிகள் அடஙகியிருக்கும்.

colostrum : சீம்பால் : குழந்தை பிறந்த முதல 3 நாட்களில் தாயின் மாாபகததில் சுரக்கும் பால் முறையான பால் சுரபபதற்கு முன்பு இந்தப் பால் சுரக்கிறது.

colotomy : பெருங்குடல் அறுவை மருத்துவம்; பெருங்குடல் நீககல் : பெருங்குடல்இறுதிப்பகுதியில்கீறிச் செயற்கைக் குதம் உணடாக்குதல்.

colour blindness : நிறக்குருடு; நிறப்பார்வையின்மை ; சில நிறங் களைப் பிற நிறங்களிலிருநது பிரித்தறிய இயலாத நிலைமை. சிலருக்குச் சில நிறங்களைக் காண இயலாது. சிவப்பு நிறத்தையும், பச்சை நிறததையும் பகுத்தறிய முடியாத நிலையை 'நிறமயக்கம்' (டால்டனிசம்) என்பர்.

colpitis : யோனிக்குழாய்; அல்குல் அழற்சி ; பெண்ணின கருப்பைக் வாய்க குழாயில் ஏற்படும் வீக்கம்.

colpocete : நெகிழ்வு நீட்சி: சிறு நீர்ப்பையின் அல்லது மலக்குடலின நெகிழ்ச்சி முன்புறம் நீண்டு, யோனிக்குழாய்ச் சுவரை அழுத்துதல்.

colpocentesis : யோனித் திரவ வெளியேற்றம் : யோனிக்குழாயிலிருந்து திரவம் வெளியேறுதல.

colpohysterectomy : கருப்பை நீககம்; அல்குல வழி கருப்பை நீக்கம் . யோனிக் குழாய் வழியாக கருப்பையை அகற்றும் அறுவைச் சிகிச்சை.

colpoperineorrhaphy : யோனிக குழாய் மருத்துவம்; அலகுல் அடித் தளத் தைப்பு காயமுற்ற யோனிக குழாயையும, கருவாய்க்கும்பெண் உறுப்புககும் இடைப்பட்ட பகுதியையும் அறுவைச் சிகிச்சை மூலம் சீர்படுத்துதல.

coma : முழு மயக்கநிலை; ஆழ் மயக்கம், நிறை மயக்கம் : எல்லா உணாச்சிகளையும் இழந்து செயலற்றிருக்கும் முழு மயக்கநிலை.

combined oral contraceptive : ஒருங்கிணைந்த கருத்தடை மாத் திரை : வாய்வழி உட்கொள்ளப் படும பலவகை கருத்தடை மருந்து

கள். பொதுவாக, இது மாத்திரை யைக் குறிக்கிறது.

comedo : தோலடிச் சுரப்பி : தோலுக்கடியில் காணப்படும் கரிய முகடு கொண்ட வெண்ணிறமான சுரப்பி வகை.

commensals : உடனுண்ணிகள்; கூட்டுவாழ்வு உயிரிகள் : ஒன்றுக் கொன்று உதவிக் கொண்டு ஒரே உணவை உண்டு இணைந்து வாழும் உயிரிகள்.

communicable : தொற்று நோய்; தொற்று; பரவக் கூடிய . ஒருவரிட மிருநது மற்றொருவருக்கு நேரடி யாக அல்லது பிற சாதனங்கள் வழி பரவக் கூடிய நோய்.

compatibility : ஒத்தியல்பு; பொருந்தும் பண்பு, ஒவ்வுமை : உடனியைபு. இரண்டு மருந்துகள், இரத்த உயிரியல் பொருள்கள், உயிரணுக்கள் போன்றவை பாதக மான விளைவுகள் ஏற்படாமல் ஒன்றோடொன்று ஒத்து இயங்கும் இயல்பு.

compensation : சரியீடு செய்தல்; ஈடுசெய்தல்; இழப்பீடு : ஒருவா தனனிடமுள்ள சமூகத்தில் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு பணபினை முனைப்பாக எடுத்துக்காட்டி, தன்னிடமுள்ள ஒரு பலவீனத்தை முடிமறைக்கக் கையாளும உளவி யல் தந்திரம்.

Complan : காம்ப்ளான் : உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற் குரிய ஒரு தூள் உணவின் வாணி கப் பெயர். இதில் 100 கிராம் தூளில், 31 கிராம் புரதம், 16 கிராம் கொழுப்பு, 44 கிராம் கார் போஹைட்ரேட்டு, போதிய அளவு கனிம உப்புகள், வைட்ட மின்கள் அடங்கியுள்ளன. இதனை வாய்வழியாகவோ திரவமாகவோ உட்கொள்ளலாம்.

complemental air : குறைநிரப்புக் காற்று; நிரப்புக் காற்று : ஆழ்ந்த சுவாசத்தின் மூலம் நுரையீரல் களுக்குள் இழுக்கப்படும கூடுதல் காற்று.

complementary feed : குறை நிரப்பு உணவு, நிரப்புணவூட்டல் : குழநதைகளுக்குத் தாய்ப்பால் போதிய அளவு கிடைக்காதபோது அந்தக் குறையை நிரப்புவதற் காகக் கொடுக்கப்படும் புட்டி உணவு.

complex : செறிதேக்க உணர்ச்சி; மனப்போங்கு; மனப்பான்மை; உளப் போக்கு : அடக்கி உணர்வு ஆழத் தின் மறதியில் செறிவிக்கப் பெற் றுக் குமுறும் உணர்ச்சித் தொகுதி. எதிர்பாலராகிய பெற்றோர் வகையில், பிள்ளைகளுக்கு உட் செறிவாக இருப்பதாகக் கருதப் படும் உள்ளுணர்ச்சி இதற்கு எடுத்துக்காட்டு.

complication : உடனியக்க நோய் கள, சிக்கலான; சிக்கலுற்ற : ஒரே சமயத்தில பல நோயகள் உடனி யலுதல். இவ்வாறு ஏற்படுவதால் மரணம் விளையலாம்

composmentis : நலமார்ந்த மன நிலை, நேர் உளத்திய : அறிவுக் கோளாறற்ற, நலமார்ந்த உள்ளத் துடன் கூடிய மனநிலை.

compound : கூட்டுப் பொருள்; சேர்வை; சேர்மம்; சேர்வு : இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட தனிமங்கள் குறிப்பிட்ட வீதஅளவு களில் வேதியியல் முறையில ஒருங் கிணைநது, புதுப் பண்புகளுடன் உருவாகிய புதிய கலவைப் பொருள்.

comprehension : உணர்வாற்றல் : புரிகை : பொருள்களையும் உறவு நிலைகளையும் புரிந்து கொள்ளும் திறன்.

compress· கட்டுத்துணி; அழுத்து; அடுக்குக் கட்டு; அமுக்கு : வீக்கம் அடங்குவதற்கு நீர்த்தடையிட்டுப் பொதியப்பட்ட ஈரத்துணி;

உறுப்புகளுக்கு அழுத்தம் தருவதற்குப் பயன்படுத்தப்படும் பஞ்சு திணித்த கட்டுத்துணி.

compression: அழுத்தம், அழுத்துதல்; அழுத்தப்படும் நிலை; அமுக்கம்; நெருக்கம்; அழுத்தமேற்றல் : உறுப்பினைத் துண்டிக்கும்போது ஏற்படும் உறுப்படியினைச் சுருங்கச் செய்வதற்குக் கம்பளிப்பட்டை அல்லது கட்டுத்துணி கொண்டு இறுக்க கட்டுப்போட்டு அழுத்தம் கொடுத்தல்.

compressor: அழுத்தும் தசைநார்; அழுத்தி . அழுத்தி நெருக்கித் தட்டையாக்குகிற தசைநார்.

compromise : இணக்குவித்தல்; ஏற்பகம்: மனத்தின் விழிப்பு நிலையில் அடக்கி வைத்த இயற்கை உணர்வுகளைத் தளரச் செய்து மனப்பூசல்களைத் தவிர்ப்பதற்குரிய உளவியல் செயல்முறை.

compulsion: வல்லந்தம், வற்புறுத்தல்; விரும்பாச் செயல; கட்டாயச் செயல்; உள் உந்துகை: அறிவுக்குப் பொருந்தாத ஒரு செயலைச் செய்யும் வலுக்கட்டாயமாகத் தூண்டும் உணர்வு இந்த உணர்வினை அடக்குவதன் காரணமாக மன வுலைவு அதிகரிக்கும் அந்தச் செயலைச் செய்தாலொழிய இந்த மன வுலைவு நீங்குவதில்லை

conation : செயல் துணிவாற்றல்; முனைப்பு : விருப்பு வெறுப்பு உணர்ச்சிகளைச் செயற்பட்த தூண்டும் மன ஆற்றல்

computed tomography (CT) : கணிப்பொறி ஊடுகதிர் உளதளப படமுறை . உடலின் வழியே ஒரு மெல்லிய துண்டுகளை உருக் காட்சியாகப் படமெடுக்கும் கணிப்பொறிமுறை இது ஒரு சுற்றோட்ட நுண்ணாய்வு இயக்கத்தினபோது சேகரிக்கப்பட்ட ஊடுகதிர் (எக்ஸ்ரே) ஈர்ப்புத் தகவல்களிலிருந் ... க்கிறது.

concept : கருத்துப் படிவம்; கருதுகோள் : ஒரினப் பொருள்களைச் சுட்டும் பொதுக் கருத்து. மரியாதை, அன்பு, ரோஜாமலர், வீடு முதலியன பற்றிய ஒரு தனிநபரின் பொதுக்கருத்து அவருடைய பண்பியல்புகளைப் பிரதிபலிக்கிறது.

conception : கருவுறுதல் (சூலுறுதல்); கருத்தரிப்பு; சினையாதல்; கருத்தரிவு : கருப்பையினுள் விந்தணுக்கள் பாய்ந்து கருக்கொள்ளுதல.

Concordin : கான்கார்டின் : புரோட்டிரிப்டிலின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

concretion: உடற்கட்டி; இறுக்கம்; திரட்சி : சிறு துகள்கள் ஒன்று சேர்ந்து கடினமாகத் திரண்ட பிண்டம். உடலின் உள்ளுறுப்புகளில் ஏற்படும் "கல்லடைப்பு" என்ற கல் போன்ற தடிப்பையும் இது குறிக்கும்

concussion : அதிர்வடி ; பேரடி; உட்காயம்; வன்குலுக்கு; நிலை குலைவு . அதிர்ச்சியுறும்படியான பெருந்தாக்குதல். தலைமீதான பேரடியினால், நினைவிழப்பு, உடல வெளிறுதல. உடல் குளிர்ச்சியடைதல் நாடித்துடிப்பு அதிகரித்தல அதிகரிக்கக்கூடும். மலம், சிறுநீர் கழிவதைக் கட்டுப்படுத்த முடியாத நிலையும் ஏற்படலாம்.

condensation : உறைமானம்; சுருக்கம்; சுண்டுதல; குவிதல்; திணிதல் : பொருள்கள் சுருங்கிச் செறிவடைதல். எடுத்துக்காட்டு: ஒரு வாயு சுருங்கி ஒரு திரவமாக மாறுதல்.

conditioned reflex கட்டுப்பட்ட அனிச்சைச் செயல் : வழக்கமான நிகழ்ச்சித்தொடர்பு காரணமாக முன் அனுபவத்தை ஒட்டி உள்மனத்தில் இயல்பாக ஏற்படும் எதிர்த்தூண்டுதல் குறிப்பு தனக்கு

மணியடித்ததும் உணவு கொடுக்கப்படுவதில் பழகிப்போன ஒரு நாய், உணவு கொடுக்கப்படாவிட்டாலும் மணியடித்ததும் நாக்கில் எச்சில் ஊற வருவது இதற்கு எடுத்துக்காட்டு.

conditioning: **தகவமைவு; கட்டுப்பாட்டுக்குட்பட்ட; விதிக்கிணங்க.** தக்க சூழ்நிலையை அமைத்து புதிய நடத்தை முறையை ஊக்குவித்தல்.

condom: கருத்தடை உறை; அல்குல் உறை; பெண் குறி உறை: பாலுறவின்போது ஆணும் பெண்ணும் அணிந்து கொள்ளும் சவ்வு போன்ற ரப்பரினாலான காப்பு உறை. இதை அணிநது கொள்வதால் பாலுறவு நோய் பரவாமல் தடுக்கலாம்.

conduction: கடத்துதல்; கொண்டு செய்கை: பொருத்தமான ஊடகத்தின் மூலம் வெப்பம் ஒளி, ஒலி அலைகளைக்கடத்துதல். மின்னோட்டங்களைக் கடத்துவதையும், உடல் திசுக்களின் வழியாக நரம்புத் தூண்டல்களைச் செலுத்துவதையும் இது குறிக்கும்.

conductor: கடத்தி: வெப்பம், ஒளி, ஒலி, மின்னோட்டம் போன்றவற்றைக் கடத்துகிற ஒரு பொருள் அல்லது ஊடகம்.

condyle: எலும்புமுனை முண்டுப் பொருத்துஎலும்பு புடைப்பு; எலும்பு முண்டு; எலும்பு வட்டப்புடைப்பு:

எலும்பு முண்டு

condyloma: கரணைவளர்ச்சி; முண்டுப் புற்று: சளி வரும் வழிகளுக்கருகில் கரணை போன்ற தோலின் புற வளர்ச்சி.

Condy's fluid: நச்சுத்தடை மருந்து: நச்சுத்தடை மருந்தாகப் பயன்படும் சோடியம் பெர்மாங்கனேட்டுக் கரைசல். மாற்றாக, பொட்டாசியம் பர்மாங்கனேட்டும் பயன்படுத்தப்படுகிறது.

confabulation: நினைவழிவு: அண்மை நிகழ்வுகள் பற்றிய நினைவு அழிந்து பட்டிருக்கும் போது ஏற்படும் குழப்பமான நிலை. இந்நோயாளி தமது நினைவில் ஏற்படும் குறைபாட்டினைத் தமது சொந்தப் புனைவுகளால் நிரப்பிக்கொள்கிறார். அந்தப் புனைவுகள் உண்மை எனவும் நம்பிவிடுகிறார்.

confection: இனிப்பான மருந்துக் கலவை; லேகியம்; திண்பொருள்: சர்க்கரை, பாகு, தேன் ஆகியவற்றுடன் மருந்துகளைக் கலத்தல்.

conflict: மனப்போராட்டம்; உளப்போராட்டம்; சச்சரவு: ஒன்றுக்கொன்று மாறான அல்லது முரண்பட்ட இரு விருப்பங்கள் அல்லது உணர்ச்சி ஒருங்கே இருக்கும் மனநிலை. மனப்போராட்டம் கடுமையாகும்போது, விருப்பங்களை அடக்குதல் நடைபெறுகிறது. மனப்போராட்டமும் விருப்பங்களை அடக்குதலும் பல்வேறு நரம்புக் கோளாறுகளுக்கு, முக்கியமாக, மனக் குழப்ப நோய்க்குக் (ஹிஸ்டீரியா) காரணமாகும்.

confluence: திரட்சி; குவி திறன்; கூடல்: அடுத்தடுத்துள்ள கொப்புளங்கள் அல்லது பருக்கள் ஒன்றாக இணைந்து திரட்சியடைதல்.

confusion: மனக்குழப்பம்; குழப்பம்: இயல்பு நிலைக்கு ஒவ்வாத ஒரு குழப்பமான மனநிலை. பல்வேறு உணர்ச்சிகள் ஒன்று கலப்பதால் இது உண்டாகிறது. பல்வேறு நோய்களின்போது இது உண்டாகிறது.

congenital: பிறவி நோய்; பிறவிக் குறை; பிறப்பு நோய்: பிறவியிலேயே அமைந்த நோய்கள் பெரும்பாலும்

ethambutol : எத்தாம்புட்டால் : காசநோயைக் குணப்படுத்தக் கூடிய ஒரு செயற்கை மருந்து. இதனை வாய்வழி உட்கொள்ள லாம். இதனைக் காசநோய்க்கு ஐசோனியாசிட் மருநதுடன் சேர்த் துக் கொடுத்தால் மிகவும் பய னுடையதாக இருக்கும்.

ethamsylate : எத்தாம்சிலேட் ; குருதிப் போக்கினைத் தடுக்கும் ஒரு செயற்கை மருந்து. இதனை வாய்வழியே உட்கொள்ளலாம்; ஊசிமருந்தாகவும் செலுததலாம்.

ethanolamine oleate : எத்தனா லாமினி யோலியேட் : இழைமக் காழ்ப்புக் கோளாறுகளுக்குக் கொடுக்கப்படும் ஒரு மருந்து.நாள நரம்புச் சிகிச்சையில் பயனபடுத தப்படுகிறது.

ether : ஈதர் : இயலுலகமெங்கும் நீக்கமற நிரம்பி,மின்காநத அலை களின் இயக்கததிற்குரியதாகக் கருதப்படும் ஊடுபொருள; மயக்க மருந்தாகப் பயன்படுகிற. எளிதில் ஆவியாகக் கூடிய சேர்ம நீர்மம்.

ethics : அறவியல, தொழில் கோட் பாடுகள : நன்னெறிகள், நம்பிக் கைகள் ஆகியவற்றின அடிப்படை யிலான அறவியல் தத்துவங்களின தொகுதி.

ethinyloestradiol எத்தினைல்எஸடி ராடியோல் : வாய்வழி உட்கொள ளப்படுகிற, ஆற்றல் வாய்ந்த ஈஸ்டிரோஜென்

ethionamide : எத்தியோனாமைட்: காசநோயைக் குணப்படுத்தும் விலையுயர்ந்த செயற்கைக் கூட்டுப் பொருள். இதனால், இரைப்பை- குடல் பக்க விளைவுகள் ஏற்பட லாம்.

ethisterone : எத்திஸ்டெரோன் ; புரோஜெஸ்டெரோனின பணபு களையுடைய, வாய்வழி உட் கொள்ளத்தக்க ஒரு தீவிரக்கூட்டுப் பொருள் ஒருவேளை மருந்து ஊசி யால் செலுத்தப்படும்போது அதே அளவு புரோஜஸ்டிரானை விட ஆறுமடங்கு ஆற்றல் வாய்ந்தது.

ethmoid : சல்லடை எலும்பு : முகர்தல் நரமபுகள் செலவதற் குரிய பல துளைகளையுடைய சதுர வடிவான மூக்கடி எலும்பு.

ethmoidectomy : மூக்கடி எலும்பு அறுவைச் சிகிச்சை: மூக்கடி எலும் பினை அறுவைச் சிகிச்சைமூலம் அகற்றுதல்.

ethnic : இனத்துககுரிய : மனித இனப் பிரிவுகள் அலலது பண் பாடடுப் பிரிவுகள் சார்ந்த; மனித இன ஆராய்ச்சிக்குரிய.

ethnology: மனித இன ஆய்வியல்: மனித இனவகை வேறுபாடுகளை யும், தொடர்புகளையும், பண் பாடுகளையும் ஆராயும் அறிவியல். பிறப்பு, கருவுறுதல்,கருக்கலைப்பு, திருமணம், உணவுமுறை, சுகா தாரக் கவனிப்பு, மரணம் போன்ற வாழ்க்கை நிகழ்ச்சிகள் தொடர் பான மனப்போக்குகள், நெறி முறைகள, நம்பிக்கைகள் குறிதது இதில் ஆராயப்படுகிறது.

ethopropozine : எத்தோப்ரோப் பாசின் : தசைச் சுரிப்புக் கோளாறு களுக்குப் பயன்படுத்தப்படும் மருந்து.

ethosuximide: எத்தோசக்சிமைட்: இலேசான காககாய் வலிப்பு நோய்க்கு எதிராகப் பயன்படுத்தப் படும் மருந்து.

ethotoin : எத்தோட்டாயின் : கடு மையான காக்காய் வலிப்பு நோய்க்கு எதிரான மருந்து.

Ethrane எத்ரான் : என்ஃப்ளூ ரான் எனற மருந்தின் வாணிகப் பெயர்.

ethylbiscoumacetate : எத்தில் பிஸ்கோமாசிட்டேட் : குருதி உறை

வதற்கு எதிராகப் பயன்படுத்தப் படும் மருந்து

ethyl carbamate : எத்தில் கார்பா மேட் : சிறுநீர்க்கழிவினைத் தூண டும் ஒரு கூட்டுப் பொருள்.

ethyl chloride : எத்தில் குளோ ரைடு : சிறிய அறுவைச் சிகிச்சை களின்போது பயன்படுத்தப்படும், விரைந்து ஆவியாகக் கூடிய மயக்க மருந்துப் பொருள்.

ethyloestrenol: எத்தில் எஸ்டிர னால் கடும் எடையிழப்பு நோயைக் குணமாக்க உடலில் புரத உற்பத்தி யைஊக்குவிக்கும்ஊட்டப்பொருள்

ethyloleamineoleate : எத்திலோ லியாமினி யோலியேட். இழைமக் காழ்ப்புக் கோளாறுகளுக்குக் கொடுக்கப்படும் மருந்து.

ethyl pyrophosphate (TEPP) : எத்தில் பைரோஃபாஸ்பேட் : வேளாண்மையில பூச்சிகொல்லி மருந்தாகப் பயன்படுத்தப்படும் ஆர்கனோ ஃபாஸ்பரஸ மனிதருக் கும் பெருந்தீங்கு விளைவிக்கக கூடியது.

ethynodiol diacetate : எத்தி னோடியால் டையாசிட்டேட்; கருப பை இரத்தப் போக்கைக் கட்டுப் படுத்தும் மருநது.

Etophylate : எட்டோஃபைலேட் : தியோஃபைலின என்ற மருநதின் வாணிகப் பெயர்.

etretinate : எட்ரிட்டினேட் : கடு மையான யானைச் சொறி (நமட் டுச சொறி) நோய்க்குப் பயன் படுத்தப்படும 'ஏ' வைட்டமின் வழிப் பொருள்.

eucalyptus oil : நீலகிரித் தைலம்: நச்சுத தடை மருந்தாகப் பயன படும் தைலம். இது ஒருவகைத் தேவதாரு மரத்திலிருந்து எடுக்கப் படுகிறது.

Eucortone . யூக்கோர்ட்டோன் . குண்டிக்காய் சுரப்பி நீரின் வாணி கப் பெயர்.

Eudemine : யூடெமின் : டையாக் சைடின் வாணிகப் பெயர்.

eugenics : இனஆக்க மேம்பாட்டி யல் ; இனத்தை மேமபடுததி வளம பட உயர்ததும் வகை முறைகள் பற்றி ஆராயும ஆய்வுத துறை.

euglnena : யூக்ளினா : நுண்ணிய ஓரணுஉயிர்களில் ஒன்று. இது சிறிய பச்சை இலைகள் போலத் தோற்ற மளிக்கும். தேங் கிக் கிடக்கும் நீரில் இது பசு மையாகப்படர் ந்திருக்கும்.

யூகளினா நுணணுயிர்

euglucon: யூக்ளுககோன : கிளை பெங்கி ளாமைட்என்ற மருந்தின் வா ணிகப் பெயர்.

eugynon: யூஜினான் : எத் தினிலோஸ்டிராடியோல் அடங் கிய, வாய்வழி உட்கொள்ளப் படுய ௳ருத்தடை மருந்தின வாணி கப் பெயர்.

eunuch: அலி; ஆண்மையிழந்தவர்' விரையகற்றப் பட்ட ஆண்

Euphoria : நன்னிலையுணர்வு; உயர்வுணர்வு; உவகை; பேருவகை : நன்னிலையில் உள்ளோம் என்ற மனநிறைவு நிலை.

Eurax : யூராக்ஸ் · யூரோட்டா மிட்டோன எ௲ற மருந்தின வாணிகப் பெயர்.

eurhythmics : உடலியக்க ஒத் திசைவமைதி ; இசைமுறை உட லியக்க ஒத்திசைவமைதிப் பயிறசி.

eusol : யூசோல் : சுண்ணகக் காரததிலிருநது தயாரிக்கப்படும

நுண்மங்களைக் கொல்லும் நச்சுத் தடை மருந்து.

eustachian tube : **தொண்டைக் குழாய்; காது-தொண்டைக் குழாய் :** முன் தொண்டையிலிருந்து நடுக்



காது-தொண்டைக் குழாய்

காதுக் குழிவரையில் செல்லும் குழாய். இது 40-50மி.மீ. நீள முடையதாக இருக்கும்.

euthanasia : **நோவில்லாச் சாவு; வலியின்றிக் கொல்லல்; கருணைக் கொலை; நற்சாவு :** குணப்படுத்த முடியாத துன்பம் நிறைந்த நோயி லிருந்து செயற்கை முறையில் மரணத்தை வருவிக்கும் முறை.

euthyroid state : **கேடயச் சுரப்பி இயல்பு நிலை; நல் தைராய்டு :** கேடயச் சுரப்பியின் (தைராய்டு) இயல்பான இயக்கத்தைக் குறிக் கும் நிலை. சமநிலை இயக்கம்.

eutocia : **இயல்பு மகப்பேறு; இயல் பாக ஈனல்; நற்பேறு :** சிக்கல்கள் எதுவுமின்றி இயல்பாக வயிற்று வலி வந்து குழந்தை பிறத்தல்.

Eutonyl : **யூட்டோனில் :** மானோ மைன் ஆக்சிடேஸ் என்ற தடை யுறுத்து மருந்தின் வாணிகப் பெயர்.

evacuant : **பேதி மருந்து; பேதி யாக்கி; வெளியேற்றி :** வயிற்றைச் சுத்தம் செய்யப் பேதியாகும்படி செய்கிற மருந்து.

evacuation: **பெருங்குடல் தூய்மை யாக்கல்; மலம் அகற்றல்; வெளியேற் றம் :** பெருங்குடலிலுள்ள மலப் பொருள்களை வெளியேற்றுதல்.

evacuator : **வெளியேற்று கருவி; நீக்கி :** சவ்வுப்பையிலிருந்து ஒரு கல்லை அப்புறப்படுத்துவதற்கான கருவி -வெளிப்போக்கி.

evaporate : **ஆவியாக்கு :** திரவ நிலையிலிருந்து சூடாக்குவதன் மூலம் ஆவியாக (வாயுநிலை) மாற்றுதல்.

evaporting lotion : **ஆவியாக் கும் நீர்மம் :** ஆவியாகித் தோலைக் குளிர்விப்பதற்காக வெப்பத்தை உறிஞ்சிக்கொள்ளக் கூடிய ஒரு வகை நீர்மம்.

eversion : **கண்ணிமை பிறழ்வு; வெளிப் புரளல்; புறத்திருப்பம்; வெளித் திருப்பல் :** மேல் கண்ணி மை வெளிப்புறமாகத் திரும்பி யிருத்தல்.

evisceration : **உள்ளுறுப்பகற்றல்:** குடல் போன்ற உளுறுப்புகளை அகற்றுதல்.

evulsion: **விழித்தெடுத்தல்; இழுத்தகற்றல்; பிடுங்கல் :** ஒரு கட்டமைப்புப் பொருளை வலுக் கட்டாயமாகக் கிழித்து எடுத்தல்

Ewing's tumour: **எலும்பு மச்சைக் கட்டி :** ஒரு குழந்தையின் ஒரு நீண்ட எலும்பின் மச்சையில் ஏற் படும் கட்டி. இவிங் விளக்கியது.

exacerbation : **நோவுப் பெருக் கம்; நோய்ப் பண்பு மிகைத்தல்; அதிகரித்தல்; மிகைவு :** நோய் அறிகுறிகளின கடுமை அதிக மாதல்.

exanthema : **பொக்குளம்.**

excision : **துண்டிப்பு; அறுத் தெடுத்தல்; அரிதல் :** ஓர் உறுப் பை வெட்டித் துண்டிதது எடுத் தல்.

excitability : **தூண்டும் திறன்; கிளர்ச்சித்தல்; தூணடல் தகைமை:** *எளிதில் சினங்கொள்ளும் நிலை; எளிதில் உணர்ச்சியைக் கிளறி விடும் நிலை.*

excitation : **கிளர்ச்சியுறச் செய்தல்' தூண்டல்; கிளர்வு** : *ஓர் உறுப்பினை அல்லது திசுவைக் கிளர்ச்சியுறச் செய்யும் முறை.*

exclusion (isolation) : **தொற்றுத் தடைக்காப்பு; ஏற்காமை** ; *நோய் தொற்றுவதிலிருநது பாதுகாப்பதற்காக நோயாளியைத் தனியாகப் பிரித்து வைத்தல். நோயாளிக்கு நோய்த் தொற்றுத் தடைக்காப்பு குறைவாக இருக்கும் போது இது தேவைப்படுகிறது.*

excoriation : **தோல் உரித்தல்; தோல பொரிதல்** : *தோல் உரிககப் படும் நிலை.*

excrescence: **வீண்தசைத் திரட்சி**: *மிகையுறுப்பு; காய்; கழலை.*

excreta : **கழிவுப் பொருள்கள; கழிவு** : *மலஜலம் போன்ற இயல்பான கழிவுப் பொருள்கள்.*

excretion: **மலங்கழித்தல்; கழிப்பு; வெளியேற்றம்** . *மலம்; கழிவுப் பொருள்.*

excurrent : **வெளிபாய்கிற** : *குருதி நெஞ்சுப் பையிலிருந்து புறஞ்செல்கிற.*

exenteration: **உள்ளுறுப்பு அகற்றுதல்; குடல் அகற்றல** : *உட்கிடப் புறுப்புகளை அவற்றின் குழிவிலிருந்து பிடுங்கியெடுத்து அகற்றுதல.*

exfoliation : **திசுப்படலம் உதிர்தல், பகுப படிமம்; தோலுறிதல** : *திசுப்படலங்கள சிம்பு சிம்பாக உதிர்தல், பால்பற்கள் விழுதல்.*

exhelation: **நீர்மக்கசிவு; மூச்செறிதல, மூச்சு விடுகை** . *உடலின் நீர்மங்கள குருதியுடன் சிறிது சிறிதாகக கசிந்தொழுகுதல்.*

exhaustion : **முழுச்சோர்வு; உடல் ஆற்றல் இழப்பு; களைப்பு** : *உடலின் உரம் முழுமையாக வடிந்து, சோர்வு ஆட்கொள்ளுதல்.*

exhibitionism : **அம்மணச் சித்தக் கோளாறு; இன உறுப்பைக் காட்டி மகிழ்தல்** : *பிறர் ஏளனத்துக்கிடமாக மடத்தனமாக நடந்து கொள்ளுதல். பிறப்புறுப்புகளை மற்றவர்கள் பார்க்கும்படி அம்மணமாகத் திரியும் சித்தக் கோளாறு நிலை. இது ஆண்களுக்கே ஏற்படுகிறது*

exna . **எக்ஸ்னா** : *பென்ஸ்தையாசிட் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.*

exocrine : **புறச்சுரப்பு: நாளச் சுரப்பிகள்; வெளிச் சுரப்பு** : *புறப் பகுதியில் சுரப்பு நீர் சுரக்கும் சுரப்பிகள.*

Exolan : **எக்சோலன்**: *கறைபடாத எரிநது போகாத ஒரு டைத்ரோனால் வகை மருந்தின் பெயர்.*

exophthalmic goitre: **கண்விழிப் பிதுக்கம்**: *கண்விழி அளவுக்கு மீறிப் பிதுங்கியிருத்தல் இந்நோய்கணடவர்களுக்குக் கழுத்து வீங்கியிருக்கும். இது கேடயச் சுரப்பி (தைராய்டு) நோய்களில் ஒன்று.*

கணவிழிப பிதுககம

exophthalmos: **கண்விழிப் பிதுக்கம்; விழித்துறுத்தம்**' *கண்விழி இயல்புக்கு மீறிப் பிதுங்கியிருத்தல்.*

exoplasm : **உயிர்ச்சத்துப் புறப் படலம்.**

exoskeleton : **உடல்புறத்தோடு** : *எலும்பாக அல்லது தோலாக உள்ள உடலின் புறத்தோடு.*

exostosis : **எலும்புத் திசுக்கட்டி; எலும்புக்கட்டி; எலும்பு முண்டு :** *எலும்புத் திசு அளவுக்குமீறி வளர்ந்து, கடுமையற்ற ஒரு கட்டியாக உருவாதல்:*

exotoxin : **எக்சோடாக்சின்; புற நச்சு; அயல் நஞ்சு :** *பாக்டீரியாவின் ஒரு நச்சுப் பொருள். இது உயிரணு வளர்ச்சியின்போது அதன் சூழலுக்குள் புகுத்தப்படுகிறது.*

expectorant : **இருமல் மருந்து; சளி இளக்கி :** *கபத்தை வெளிக் கொணரும் மருந்து.*

expectoration : **கபம் உமிழ்வு; சளி நீக்கம்; சளி இளக்கம் :** *இருமிச் சளியை வெளிப்படுத்துதல்.*

expiration : **மூச்சு வெளியிடுதல்; வெளிமூச்சு; மூச்சு விடல் :** *மூச்சை வெளிவிடுதல; இறந்து போதல்.*

exploration: **காயப் பரிசோதனை; தேடல் :** *காயத்தைத் தொட்டுப் பரிசோதனை செய்தல்.*

Expranolol : **எக்ஸ்பிரானோலால் :** *புரோப்ரானோலால் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.*

expression : **வெளிப்பாடு; பிதுக்கல்; முகபாவம்:** *கருப்பையிலிருந்து நச்சுக் கொடி வெளியேறுதல், தாயின் மார்பகத்திலிருந்து பால் வெளிப்படுதல் போன்ற வெளிப்பாடுகள். உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் முகபாவங்களையும் குறிக்கும்.*

expressive motor aphasia : மொழித் தடுமாற்றம் : *சொல்லப்படுவது என்ன, அதற்கு என்ன பதில் சொல்வதென நோயாளி நன்கறிந்திருந்தும், அதனை ஒழுங்குபட மொழிக் குறியீடுகளாக ஒருங்கிணைத்துக்கூற முடியாதிருக்கும் நிலை. இதனால், நோயாளி கூறப்படுவதைப் புரிந்து கொள்ள இயலாதிருக்கிறார் என்ற எண்ணம் உண்டாகிறது.*

exsanguination : **குருதி வடிப்பு; குருதி வடித்தல்:** *குருதியை வடித்து வறறச்செய்து, குருதிச் சோகையுணடாக்குதல்.*

extension : **உறுப்பு நீட்டிப்பு, நீட்டல்; விரிவாக்கம்; இழுத்தல்; நீட்டுகை :** *வளைந்துபோன உடலுறுப்புகளை நேராக நிமிர்த்துதல்.*

extensor : **நீட்டத்தசை, நீட்டி :** *உடற்பகுதியினை நிமிர்த்தும் தசை.*

extirpation : **உறுப்பகற்றுதல்; வெட்டி நீக்கல்; அழித்தல் :** *ஓர் உறுப்பினை அடியோடு அகற்றி விடுதல்.*

extraction : **பல்பிடுங்குதல்:** *பல்லை வலிந்து பிடுங்குதல்.*

extrasystole : **மிகைவேக நாடித் துடிப்பு; மிகைத் துடிப்பு :** *நாடித் துடிப்பு சீராகவின்றித் துடித்தல்.*

extravasation: **நீர்மக் கழிவு; புறப் பொழிவு :** *நீர்மம், அதன் இயல்பான அடைப்பிலிருந்து சுற்றியுள்ள திசுக்களில் கசிதல்.*

extravenous: **நரம்புக்கு வெளியே; சிரைக்கு வெளியே.**

extravert extrovert : **வெளியுலக ஈடுபாட்டாளர்; அயல்நோக்கி; புறப் பாங்கு:** *தன் ஆர்வங்கள், நடத்தை முறை அனைததும் மற்றவர்களையும், இயற்கைச் சூழலையும் நோக்கிக் கொண்டிருக்கும் ஒரு மனிதர்*

extrinsic : **புறஇயக்கம்; அயல் :** *தசைப் பற்றுகள் வகையில் உடல் முதலிலிருந்து கிளையை அல்லது அரைவளையத்தை நோக்கிச் செல்லுதல்.*

exudate : **கசிவுப்பொருள்; கழிவு :** *கசிவினால் உண்டாகும் பொருள்.*

exudation : **கசிதல்; வடிநீர் :** *தந்துகிச் சுவர்கள் வழியாக நீர்மம், தோல் துளைகள் வழியாக வியர்வை கசிதல்.*

eyes : கண்கள் : *கண்பகுதி, கண்*



கண அமைபபு

ணிருக்கும் முகத்தின் பகுதி.

eyesight: காட்சித்திறம்; பார்வைத் திறன் : *பார்வையாற்றல்.*

eye-string : கண்ணிமை நரம்பு : *கண்ணிமைக் கதுப்பினை இயக்க உதவும் தசைப்பற்று.*

eyetheeth : கோரப்பற்கள்; மேல் கோரப்பல் : *கண்ணுக்குக் கீழே மேல் தாடையிலுள்ள கூர்மையான பல்.*

eyewash : கண்கழுவு மருந்து.

eyewater : கண்ணீர் : *கண்ணருகே சுரக்கும் நீர்மம்.*

Eumydrin: எய்மிட்ரின் : *ஆட்ரோப்பின்மெத்தோநைட்ரேட்டின் வாணிகப் பெயர். சிறுகுடல் முதற்கூறடுத்த இரைப்பைப்பகுதிக் கோளாறுகளுக்குக் கொடுக்கப்படுகிறது.*

F

facial : முகத்தசை பிடித்துவிடல்; முகத்தின்.

facial angle : முகக்கோண அளவு: *காது, மூக்கு, நெற்றிவரைகளிடையேயுள்ள கோண அளவு.*

facial nerve . முகநரம்பு

facial paralysis : முகவாதம்.

facultative : சூழ்நிலைத் தகவுத் திறன்: மாறுபட்ட சூழலில் வாழும் பணபு : *பல்வேறு சூழ்நிலைகளில் வாழும் ஆற்றல் கொணடிருத்தல்.*

faecalith : மலப்படிவு : *வயிற்றில் கழிவுப் பொருள்கள் வண்டல் கலலாகப் படிதல, இதனால மலச்சிக்கலும், வயிறறு வீககமும் ஏற்படும்.*

faeces : மலம்; நரகல : *இரைப்பையிலிருநது வெளியேறும் கழிவுப் பொருள்.*

Fahrenheit : ஃபாரென்ஹீட்; *உறைநிலை 32 பாகையாகவும், கொதிநிலை 212 பாகையாகவும் கொணட ஒருவகை வெப்பமானி.*

failure to thrive ' உடல் கரைவு : *உடல் மெலியும் நோய். இது குழந்தைகளை மிகுதியாகப் பீடிக்கிறது. ஊட்டச்சத்துக குறைபாடு அல்லது ஊட்டச்சத்தினை ஈர்த்துக கொள்ள இயலாதிருத்தல் காரணமாக இது உண்டாகிறது.*

fallopian tubes : கருவெளியேறும்

கருவெளியேறும குழாய

குழாய்: *மனிதக் கருப்பையிலிருந்து கருவெளியேறும குழாய்*

familial : குடும்ப நோய்; குடும்ப வழிநோய் : *ஒரே குடும்பததைச் சேர்நத பல உறுப்பினர்களைப் பீடிக்கும் ஒரு நோய்.*

family planning : குடும்ப நலத் திட்டம் : *தம்பதியருக்குப் பிறக்கும் குழநதைகளின எணணிக்கையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன குழந்தைப் பிறப்புக்கிடையிலான இடைவெளியை அதிகமாக்கக் கருத்தடைச் சாதனஙகளை அல்லது மருந்துகளைப் பயன்படுத்துதல.*

Fanconi syndrome . சிறுநீரகக் குழாய்க் கோளாறு : *உடலின் மையததை நோககி அமைந்துள்ள சிறுநீரகச் சிறுகுழாய்கள் சரியாகச் செயற்படாமலிருத்தல். இதனால்*

தாகம், எலும்புக் கோளாறுகள், தசை வலுவிழத்தல் போன்ற அறி குறிகள் தோனறலாம்.

fantasy, phanatsy : பகற்கனவு; மனக்கண தோற்றம் : ஒருவர் நிறைவேறுவதாக அறிந்தோ அறி யாமலோ கருதும் கனவு நிலை.

farinaceous . மாவுப்பொருள் : தானிய மாவுப் பொருளாலான பொருள்.

farmer's lung: உழவர் நுரையீரல்: சிலவகை நுண் துகளில் ஏற் படும் ஒவ்வாமையினால் உண்டா கும் நுரையீரல் கண்ணறை நோய். இது ஒரு தொழில்துறை நோய்.

fascia : தசைப்பட்டை, திசுப்பட லம்; திசுத்தகடு : தசை நார்களை சூழ்ந்துள்ள தசைப்பட்டை.

fasciculation : இமைத் துடிப்பு; தசைத் துடிப்பு : மேல-கீழ் கணணி மைகளில கண்ணுக்குப் புலனாகும் வகையில் ஏற்படும் தசைத்துடிப்பு.

fasciculus : தசைக்கட்டு (நரம்புக் கட்டு); நரம்புத்திரள்; நுண்கற்றை : தசையின் அல்லது நரம்புகளின் ஒரு சிறிய திரட்சி.

fasciotomy : தசைப்பட்டை அறுவை; திசுப்படலக் கீறல்; தாள் வெட்டு : தசை நார்களைச் சூழ்ந் துள்ள தசைப்பட்டையை அறு வைச் சிகிச்சை மூலம் துண்டித்து எடுத்தல்.

fastigium: உச்சநிலைக் காய்ச்சல்; நோய் உச்சத்தாக்கல . ஒரு காயச் சலின் உச்சகட்டம். இது நோய் முழு வளர்ச்சி பெற்றிருப்பதைக் குறிக்கும்.

fat . கொழுப்பு (நிணம்) : உடலி லுள்ள நெய்ப்பசையுள்ள பொருள் A,D,E, K ஆகிய வைட்டமினகள் கொழுப்பில் கரையக்கூடியவை. உடலுக்கு சக்தியைக்கொடுக்கிறது

fatigue: சோர்வு;தளர்வு; களைப்பு: களைப்பு; அயர்ச்சி. தூணடுதலுக் குச் செயலாற்றும் திறன் குறைந்து தசை சோர்வடைதல்.

fatty : கொழுப்பேற்றம் : நோய் காரணமாக உடல் பெருத்திருத் தல்.

fatty degeneration : நோய்க் கொழுப்புப் படிவு: உடலில் நோய்த் தன்மையுள்ள கொழுப்புப் படிதல். இதனால் திசுக்கள் நலிவுறுகின்றன. குறிப்பாக, ஈரற்குலை, சிறுநீரகம், இதய நோய்களின்போது இது ஏற்படுகிறது.

fatty heart : இதயக் கொழுப்பு நோய்; கொழுப்பேற்ற இதயம் : நெஞ்சுப்பைக் கொழுப்புக் கோளாறு.

fauces : பின்வாய்ப் புழை; தொண டை வாயில் : வாயின் பினபக்கப் புழை.

favism : கடும் இரத்தசோகை : இரத்தச் சிவப்பணுக்களில G6PD (குளுக்கோஸ் 6 ஃபாஸ்ஃபேட் டிஹைட்ரோஜினேஸ்) என்ற செரி மானப் பொருள் குறைவாக இருத் தல். இதனால் பாதிக்கப்பட்டவர் களுக்குக் கடுமையான குருதிச் சோகை உண்டாகிறது.

favus: படர் தாமரை : ஒரு வகைப் படர் தாமரை நோய். இதனால் முக்கியமாகத் தலையுச்சி வட்டத் தின் மஞ்சள் நிறமான குவளை வடிவான பொருக்கு உண்டா கிறது.

fear : அச்சம்; பயம் : மேல்வரு நிலைகள் பற்றி மன உலைவு கொண்டு கவலையும் கலக் கமும் அடைதல்; பயந்து நடுங்குதல்.

febrile : காய்ச்சல்; சுரம் : பெரும் பாலும் 6 மாதம் முதல் 5 வய துடைய குழந்தைகளுக்கு ஏற்படும் காய்ச்சல். இதனால் உடல் வெப்ப நிலை அதிகரிப்பதுடன் நடுக்கமும் ஏற்படும்.

fecundation : கருவுறல்; சினையாதல்: *கருவுறுதல்; குழந்தை பெறுதல்.*

fecundity : இனப்பெருக்க வளம்; குட்டி ஈனும் திறன்; கருவுறு திறன் : *இனப்பெருக்கம் செயவதற்கான திறம்.*

Feldene : ஃபெல்டென் : *பிரோக்சிக்கம் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.*

Felty syndrome : ஈரல் விரிவு : *ஈரற்குலை. மண்ணீரல், நிணநீர்க் கணுக்கள் விரிவடைதல். இது கீல்வாத மூட்டு வலியினால் உண்டாகிறது.*

felypressin : ஃபெலிப்பிரசின் : *குருதிநாள இறுக்க மருந்து; நரம்புச் சுருக்க மருந்து.*

Femergin : ஃபெமெர்ஜின் : *எர்கோட்டாமின் டார்ட்ரேட் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.*

femoral artery : தொடைக் குருதிக் குழாய் : *தொடையின் முதன்மை வாய்ந்த குருதிக் குழாய்.*

femur : தொடையெலும்பு.

fenbufen : ஃபென்புஃபென் : *வீக்கத்தைத் தணிக்கும் மருந்து.*

fenestra : காதுத் துளை; திறந்த வழி : *காதிலுள்ள பலகணியையொத்த சிறு துளை.*

fenestration : காதுத் துளையாக்கம்; துளைப்பு; *செவிட்டுத் தன்மையைக் குறைப்பதற்காக உட்காதில் அறுவைச் சிகிச்சைமூலம் ஓர் துளை உண்டாக்குதல்.*

fenfluramine hydrochloride : ஃபென்ஃபுளூராமின் ஹைட்ரோகுளோரைடு : *பசியைக் கட்டுப்படுத்தும் ஒருவகை மருந்து.*

Fentanyl : ஃபென்டானில் : *குறுகிய நேரம் செயற்படக்கூடிய நோவுணர்ச்சியகற்றும் மயக்க மருந்து. அபினிச் சத்து போன்றது. ஆனால் அதைவிட அதிக ஆற்றல் வாய்ந்தது. குழந்தைகளுக்கும், வயது முதிர்ந்தவர்களுக்கும் மயக்க மருந்தாகக் கொடுக்கப்படுகிறது.*

fentazin : ஃபென்டாசின் : *பெர்ஃபெனாசின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.*

fermentation : புளிப்பேற்றுதல்; புளிப்பூக்கம்; நொதிப்பித்தல்: *புளித்துப் பொங்கும்படி செய்தல்.*

Ferrivenin : ஃபெர்ரிவெனின் : *வெல்லக்காடியின் காரச்சத்து சேர்ந்த அயஆக்சைடின் வாணிகப் பெயர். இது கடுமையான இரும்புச்சத்துக் குறைபாடுடைய சோகையாளிகளுக்கு ஊசி மருந்தாகக் கொடுக்கப்படுகிறது.*

fertilization : கருவுறல்; கருத்தரித்தல்; கருவூட்டல் : *விந்தணு கருக்கொள்ளச் செய்தல்; சினைப்படுத்துதல்.*

fester : சீழ்ப்புண்; திசு அழிவு; திசு அழுகல்; சீழொழுக்கு : *புரைத்துச் சீழ்க்கட்டி நச்சுநீர் வடிக்கும் புண்.*

fetal alcohol syndrome : கருமுனை ஆல்ககால் நோய் : *தாய் கருவுற்றிருக்கும்போது ஆல்ககால் உட்கொண்டதன் காரணமாக மகப்பேற்றுக்கு முன்பு குழந்தையின் வளர்ச்சி குன்றி, குழந்தை இறந்து பிறத்தல்.*

fetal circulation : கருமுனைக் குருதியோட்டம் : *கொப்பூழ்க் கொடி, கருவக நச்சுக்கொடி மூலமாக இரத்தம் சுற்றோட்டம் நடைபெறுதல்.*

fetishism: போலி உருவ வழிபாடு; அடையாளக் காமம்; பேதவியம் ; *இணை விழைச்சுத் தூண்டுதல் ஏற்படுவதற்காக உயிரில்லாத போலி உருவத்தை வழிபடும் மூடநம்பிக்கை.*

fetor : முடைநாற்றம் : அருவருப்பான வாடை; புழுங்கிய நாற்றம்: சுவாசக் காற்று நாற்றம்.

fetoscopy: கருமுனைச் சோதனை; கரு இதய மானி : பொருத்தமான இழைக் கண்ணாடியாலான உடலின் உட்புறம் உணர உதவும் கருவி மூலம் கருப்பையிலுள்ள குழந்தையைச் சோதனை செய்தல்.

fetus : பிறவாத குழந்தை; உருப்பெற்ற கரு: கருவிலுள்ள குழந்தை.

fever : காய்ச்சல்: உடல் வெப்பம் இயல்பு நிலைக்கு மேல் அதிகரித்தல். குடற்காய்ச்சல், செம்புள்ளி நச்சுக் காய்ச்சல், நச்சுக் காய்ச்சல் (டைஃபாய்டு) போன்றவை தோற்றும் தன்மை வாய்ந்தவை.

Fibogel : ஃபைபோஜெல்; "ஹைடிஃபிலிக் ஜெல்" என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

fibril : சிறு நாரியற்பொருள்; நுண் இழை; நாரிழை : தசைநார் நுண்ணிழை.

fibrillation : இதயத் தசைத் துடிப்பு; நார்த் துடிப்பு; உதறல்; குறு நடுக்கம்: தசை ஒருங்கிணைவின்றி நடுங்குதல். பொதுவாக நெஞ்சுப் பையின் தசைப்பகுதி துடிப்பதைக் குறிக்கிறது. அதில் தமனித்துடிப்பு மிக வேகமாகவும், இதயக்கீழறைத் துடிப்புடன் ஒருங்கிணையாமலும் இருக்கிறது. இதனால் நாடித் துடிப்பு முழுவதும் ஒழுங்கின்றி இருக்கும்.

fibrin : கசிவு ஊனீர்; குருதி உறைவு; உறை புரதம் : கட்டியாக உறையக் கூடிய கசிவு ஊனீர்.

fibrinogen : கரையும் புரதம்; குருதி உறைவு ஆக்கி; உறைமுன் புரதம் : இரத்தத்திலுள்ள ஒரு கரையும் புரதப் பொருள். இரத்தம் கெட்டியாவதற்கு இன்றியமையாத 'ஃபைப்ரின்' என்ற கரையாத புரதம் இதிலிருந்து உற்பத்தியாகிறது.

fibrinogenopenia: இரத்தப் புரதக் குறைபாடு : இரத்தத்தில் கரையும் புரதப் பொருள் குறைவாக இருத்தல். இது பிறவியிலோ, அல்லது நுரையீரல் நோய் காரணமாகவோ ஏற்படலாம்.

fibrinolysin : குருதி ஒழுக்கு செரிமானப் பொருள் : சிறிய காயங்களுக்குப் பிறகு உண்டாகும் இரத்தப் புரதப் பொருளைக் கரைக்கக் கூடிய ஒருவகை செரிமானப் பொருள் (என்சைம்) குருதி உறைவின்போது ஊசி வழியாகச் செலுத்தப்படுகிறது.

fibrinolysis : இரத்தப் புரதம் கரைதல் : இரத்தப் போக்குக்கு முன்பு இரத்தப் புரதப் பொருள் கரைதல். பொதுவாக, உடலில் குருதி உறைவுக்கும், இரத்தப் புரதம் கரைவதற்குமிடையே ஒரு சம நிலை இருந்துவரும்.

fibroadenoma: இழைநார்க் கட்டி; நார்கோளப் புற்று : இழை நார், சுரப்பித் திசு அடங்கிய, கடுமையில்லாத கட்டி.

fibroblast : எலும்புப் புரத உயிரணு : இணைப்புத் திசுக்களின் ஒரு முக்கிய அங்கமான எலும்புப் புரதம் உற்பத்தி செய்யும் ஓர் உயிரணு.

fibrocartilage : இழை நார்க் குருத்தெலும்பு, நார்க் குருத்து: இழை நார்த் திசுக்கள் அடங்கிய குருத்தெலும்பு.

fibrocaseous : மென்புரதம்; நார்ப் பாலாடைக் கூழ் ; பாலடைக்கட்டி போன்ற மென்மையான பொருள் இது எலும்புப் புரத உயிரணுவினாலானது. இதனுள் இழை நார்த் திசு ஊடுருவிச் செல்லுகிறது.

fibrochondritis : இழை நார்க் குருத்தெலும்பு வீக்கம்.

fibrocyst : இழை நார்க்கட்டி: ஒரு வகை நரம்புக்கட்டி.

fibroid : இழை நார்த் தசைக்கட்டி; கருப்பைத் திசுக் கட்டி: இழைநார் அமைப்புடைய கருப்பைப் பரு அல்லது கட்டி.

fibroma : நரம்புச் சிலந்தி; தசை நார்க் கட்டி; நார்ப் புத்து : நரம்புத் திசுவில்ஏற்படும் தீவிரமிலா கட்டி.

fibro sarcoma : நரம்புக் கழலை; நார்ச் சதைப் புற்று: எலும்புப்புரத உயிரணுக்களிலிருந்து உண்டாகும் ஒருவகை புற்றுநோய்க் கழலை.

fibrositis : தசை நார் வீக்கம்; நார் திசு அழற்சி : கீழ் வாதம சார்பான தசை நார் வீக்கம். இது உறுப்புகளிலும், உடலிலும் உள்ள மென்மையான திசுக்களைப் பாதிக்கிறது. பொதுவாகத் தசை விறைப்புடன் தொடர்புடையது.

fibrous tissue : நார்ப் பொருள் திசு; நார்த் திசு : உடலின் தசைகளை ஒன்று சேர்த்து, எலும்புகளுடன் தசைகளை இணைத் திடும் வெள்ளைநிற நாரியற் பொருள். இது தோலின் அடிப் படலமாக அமைந்துள்ளது. தசையில் காயம் பட்டால், சேதமுற்ற தசையைச் சீர்படுதுதி காயத்தை ஆறறுவதும் காயம்பட்ட இடத்தில் வடு ஏற்படுவதற்கும் இது வே காரணம். மஞ்சள் நாற்பொருள் திசுவும் இதுபோன்றதே ஆனால், இது மிகுந்த நெகிழ்திறனுடையது இரத்த நாளங்களிலுள்ளது.



கால சிமபு எலுமபு

fibula : கால்சிம்பு எலும்பு : உடலிலுள்ள மிக நீளமான, மிக மெல்லிய எலும்புகளில் ஒன்று. காலின் வெளிப்புறத்திலுள்ள சிம்பு எலும்பு.

filed of vision : நிலைக் குத்துப் பார்வை; பார்வைப் பரப்பு; பாாவைத் தளம்; பார்வைப் புலம் : நிலைக் குத்துப் பார்வையினால் பொருள்களைப் பார்க்கும் பகுதி.

filaria : இழை ஒட்டுண்ணி : வெப்ப மண்டலங்களிலும், வெப்ப மண்டலம் சார்ந்த பகுதிகளிலும் காணப்படும் நோய் உண்டாக்கும் இழை போன்ற ஒட்டுண்ணிப் புழுக்களின் வகை.

filipuncture: இழைத்துழை; இழை நுழைப்பு : தடைபட்டிருக்கும் இரத்ததின் உறைவை உண்டாக்க குருதிநாள அழற்சியில் கம்பி இழை முதலியவற்றைச் செலுத்துதல்.

filix mas : ஆண் பெரணி : மூளையின் இழைக்கச்சை போன்ற பகுதியை வெளியேற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் ஆணபெரணி.

filtrate : வடிகட்டிய நீர்மம்; வடியம்; வடிசல : வடிகட்டி மூலம் வடிகட்டப்பட்ட பொருள.

filtration : வடிகட்டுதல்; வடித்தல்; வடியம் ' ஒரு வடிகட்டி வழியாக ஈர்ப்பு அழுத்தம் அல்லது வெற்றிடம் மூலமாக ஒரு பொருளை வடிகட்டுதல்.

filum : நார்வடிப்பொருள்; நூலுரு; இழை : நார்வடி அல்லது இழை போன்ற ஒரு பொருள்.

fimbria: விளிம்பு மயிர்: விளிம்பில் உள்ள மயிரிழை.

fine tremor. இலேசான நடுக்கம் : கேடயச் சுரப்பி நச்சு காரணமாக நோயாளியின் நீட்டிய கைகள் அல்லது நாக்கு இலேசாக நடுங்குதல்.

finger : விரல் : கட்டைவிரல் அல்லது மற்ற நான்கு விரல்களில் ஒன்று.

fission : **அணுப்பிளப்பு, கூறுபடல்:** புது உயிரணுக்களின் தோற்றத் திற்காக உயிரணுக்களைப் பிளத் தல்; இனப் பெருக்கத்திற்காக உயிரணு வெடித்துப் பிளத்தல்.

fissure : **மூளை இடைச்சந்து; பிளவு வெடிப்பு :** மூளைச் சுருக்கங் களில் உள்ள நெடும்பள்ளம்; பிள வினாலும் பாகங்களின் பிரிவினா லும் ஏற்படும் இடைச சந்துப் பிளப்பு.

fistula : **புண்புரை; புரையோட்டை:** குறுகிய வாருடைய புரையோடிய புண்புரைக் குழி, புரைக்கால்.

fits : **வலிப்பு (இசிப்பு)** : நோயின் திடீர்த்தாக்குதல அலை; வலிப்பு முதலிய நோய் வகைகளின் திடீர் எழுச்சி அலை; சிறிது நேர உணர் விழப்பு, சிறிது நேரச் செயலிழப்பு

fixation : **நிலைப்பாடு; நிலைப்பு.**

(1) ஒரு பொருளின் பிம்பம் கணவிழியின் பின்புறத் திரையில் விழும் வகையில் அப்பொருளின் மீது இரு கணகளின் பார்வையை யும் நேரடியாக ஒரு முகப்படுத்து தல.

(2) மனவளர்ச்சி தடைபட்ட நிலை; வளர்ச்சி தடைப்பட்டு முதிரா நிலை; இயல் உணர்ச்சி வழிச்செல்லும் நிலை.

flaccid : **தொங்குதசை; துவள தசை; தளர்ந்த :** தளர்வுறறுத் தொங்குகிற தசை, சுருக்கம் விழுந்த தசை,

flagellum : **கசையுறுப்பு; கசை யிழை :** கசையடி போனறு அடிக் கும அசைவுடைய நுணணிய மயிர்போன்ற உறுப்பு.

Flagyl : **ஃபிளாஜில் :** மெடரோனி டாசோல் எனற மருந்தின வாணி கப் பெயர்.

flail chest : **ஊசலாடும் நெஞ்சுக் கூடு; துவள் மார்பு:** முறிவு காரண மாக உறுதியற்று ஊசலாடும் நெஞ்சுக் கூடு.

Flamazine : **ஃபிளாமாசைன் :** சில் வர் சல்ஃபாடையாசின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

flap : **தோல் தொங்கல், மடிப்பு :** அறுவைச் சிகிச்சையில் தளரவிட்ட தோல் தொங்கல், தீப்புண்கள், பிற காயங்கள் போன்றவற்றைக் குணப்படுத்துவதற்கு இது பயன் படுத்தப்படுகிறது.

flatfoot : **தட்டைக்காலடி; சப்பைத் தாள் :** பாதத்தில உட்குழிவுப் பகுதி தட்டையாகவுள்ள காலடி.

flat pelvis : **தட்டை இடுப்பெலும்பு:** விளிம்பு விட்டம் குறைவாகவுள்ள இடுப்பெலும்பு.

flatulence : **வயிற்றுப் பொருமல்; வயிற்று உப்புசம்; வாயு பொருமல் :** உணவுக் குழாயில் உண்டாகும் வாயுவினால் வயிற்றில் ஏற்படும் பொருமல்.

flatus : **வாய்வு; குடற்காற்று :** வயிற்றில் அல்லது குடல்களில் உண்டாகும் வாயு.

Flaxedil : **ஃபிளாக்செடில் :** காலா மைன் என்ற மருநதின வாணிகப் பெயா.

flea : **தெள்ளுப்பூச்சி (உண்ணி) :** இரத்தத்தை உறிஞ்சும் சிறகற்ற ஒருவகைச் சிறிய உயிரினம்.

flesh-eating bacteria : **தசை தின்னிக் கிருமி :** 'மனிதனைத் தின்னும் நோய்' எனப்படும் நோயை (Necrotising facıitus) உண் டாக்கும் நோய்க் கிருமி. இந்த நோயின்போது, இக்கிருமி தசைத திசுக்களை வேகமாக அழித்து விடு கிறது. இதனால், சிலசமயம் மரணம் விளைகிறது. இந்நோய் கண்டவர்களுக்குக் கடுங காய்ச் சலும், கடும வலியும், வாந்தியும் ஏற்படுகிறது. இரத்த அழுத்தம் குறைகிறது. சிறுநீரகமும் நுரை

யிரலும் சரிவரச் செயற்படுவதில்லை. கடுமையான நேர்வுகளில் நோயாளிகள், குருதி நச்சு, பல உறுப்புகள் செயலிழப்பு காரணமாக மரணமடைகிறார்கள்.

flexion : **உறுப்பு வளைவு; மடித்தல்; முடக்கம் :** நீண்ட எலும்புகள் வளைந்திருப்பதால் உண்டாகும் உறுப்பு வளைவு.

flexor : **வசிகரம்பு (மடக்கி) :** மூட்டுமடங்கச் செய்யும் தசை.

flexure : **கோணல்; மடக்கம்; மடிப்பு :** வளைந்து நெளிந்துள்ள நிலை.

flight of ideas : **தொடர்பற்ற எண்ணங்கள் :** பகுத்தறிவுக்குப் பொருந்தாமல், ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் அடுததடுத்துச் சிந்தனைகள் ஏற்படுதல். பிதது நிலைக் கோளாறுகளில் ஒன்று.

floaters : **மிதவைத் தோற்றப் பொருள்கள் :** கண்விழிக் குழியிலுள்ள பளிங்குபோன்ற திண் நீர்மத்தில் மிதக்கும் பொருள்கள். இவை ஆளின் கண்களுக்குப் புலனாகும்.

floating kidney : **நிலைபெயர் சிறு நீரகம்; மிதக்கும் சிறுநீரகம் :** சிறு நீரகம் இயல்புக்குமீறி நிலைபெயரும் கோளாறு.

floccillation: **சன்னிப் பிறாண்டல்** நோயாளி சன்னி வேகத்தில் படுக்கைத் துணிகளைப் பிறாண்டுதல்.

floating rizbs: **நிலைபெயர்வு விலா எலும்புகள் :** நெஞ்சுஎலும்புடனோ மற்ற விலா எலும்புகளுடனோ இணையாமலிருக்கிற 11ஆவது, 12ஆவது விலா எலும்புகள்.


நிலைபெயாவு விலா எலும்புகள

flocculation: **துகள் திரள்படலம் :** கரைந்த நிலையிலும் சவ்வூடு செல்லுமளவு ஒன்றுபட்டுக் கலவாத துகள்களின் சிறு கலவைத் தொகுதி. இது வெறுங்கண்களுக்கு படலம் போல் தோற்றமளிக்கும்.

flooding : **குருதிப்பெருக்கு; கருப்பை குருதி மிகை :** கருப்பையிலிருநது அளவுக்குமீறி இரத்தம் பெருக்கெடுத்தல். பெரும்வொழுக்கு.

flora : **நுண்ணுயிர்ப் படையெடுப்பு:** உடலின பலவேறு உறுப்புகளில நுண்ணுயிரிகள் குடியேறுதல்.

florid: **பகட்டொளி வண்ணம்; செக்கச்சிவந்த :** பகட்டான ஒளி வீசும் வண்ணம்.

flounce : **வெட்டியிழுப்பு :** உடலின் துடிப்பாட்டம்; உடலின் குதியாட்டம, தடுமாறுதல், தள்ளாடுதல்.

flowmeter : **ஒழுகியக்க மானி :** வாயுவின் அல்லது திரவத்தின் ஓட்டத்தை அளவிடும் மானி.

Floxapen : **ஃபுளோக்சாப்பென் :** ஃபுளுக்லோக்சாசிலின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

fluctuation : **கழலை அலைபாடு; ததும்பல்; அலைவு :** சீழ்க்கட்டியிலுள்ள திரவம் அலைபடுதல்.

flufenamic acid : **ஃப்ளுஃபெனாமிக் அமிலம் :** வீக்கததை நீக்கக் கூடிய நோவகற்றும் மருந்து. எலும்புத் தசைப் பகுதிகளுக்குப் பயனுடையது. கீல்வாததிற்கு ஏற்புடையது.

fluke : **ஈரல் கொக்கிப்புழு; தட்டைப் புழு :** ஈரலில் காணப்படும் நங்கூரக கொக்கி போன்ற ஒட்டுண்ணிப்புழு.

fluorescein : **ஃப்ளுவோரெசின்; ஒளிர்மை :** ஒரு பச்சை நிறமான, இருளில் ஒளிர்கினெற கரைசலாக அமையும் ஒரு சிவப்புப் பொருள்.

விழிவெண்படலத்தில் ஏற்படும் நைவுப் புண்களைக் கண்டறிய கண்சொட்டு மருந்தாகப் பயன் படுத்தப்படுகிறது.

fluoride : ஃபுளோரைட் : கனிப் பொருள் வகையின கலவைகளில் ஒன்று. சில சமயம் குடிநீரில் அயம் கலந்திருக்கிறது. இந்த அயம் எலும்பின் கட்டமைப்புடன் ஒருங்கிணைந்துவிட்டால், பல் சொத்தைக்கு எதிராகப் பாது காப்பு ஏற்படுகிறது. இந்த அயம் அளவு அதிகமாகிவிட்டால், பல் கோளாறு உண்டாகிறது. இதைத் தடுக்கக் குடிநீரில் ஃபுளோரைட் சேர்க்கப்படுகிறது.

fludrocortisone : ஃபுளூட்ரோ கார்ட்டிசான் : சோடியத்தை இருத்திவைத்துக் கொள்வதில் உடலில்கார்ட்டிசாலைப்போல்125 மடங்கு தீவிரமானது. இதனால், வரவரத் தளர்ச்சியூட்டி, குருதிச் சோர்வுடன் மேனியில் ஊதா நிறம் படர்விக்கும் 'அடிசன்' நோய்க்குப் பயனபடுத்தப்படுகிறது.

fluoroscopy : ஒளிர்வுச்சோதனை: மின்னணு திரையில் காணல் : ஒளிரும திரை, தொலைக்காட்சி அமைப்பு ஆகியவற்றின் மூலமாக உடலினுள் ஏறபடும் அசைவுகளை ஊடுகதிர்ச் (எக்ஸ்-ரே) சோதனை மூலம் ஆராய்தல்.

Fluothane : ஃபுளோத்தேன் : ஹாலோததேன் என்னும் மருந் தின் வாணிகப் பெயர்.

flupenthilaxol : ஃபுளூப்பெந்தி யாக்சோல் : முரண்மூளை நோய் போன்ற கடுமையான மனக் கோளாறுகளுக்குப் பயன்படுத்தப் படும் மருந்து.

fluphenazine : ஃபுளூஃபெனாசின்: நோவகற்றும் ஒரு வகை மருந்து.

flurazepam : ஃபுளூராஸபாம் : நைட்ராஸ்பாம் என்ற மருந்துடன் வேதியியல் முறையில் தொடர்புடைய ஒரு மருந்து. இது டால் மேன் என்ற மருந்தினையொத்த இயல்புகள் உடையது.

flurbiprofen : ஃபுளூர்பிப்ரோஃ பென் : வீக்கம் நீக்கும் ஒருவகை மருந்து. அழற்சியைக் குறைக்கும்.

fluspirilene : ஃபுளூர்ஸ்பிரிலின் : முக்கியமான மயக்க மருந்துகளில் ஒன்று. ஊசியால் செலுத்திய நான்கு மணி நேரத்திற்குப் பிறகு இது இரத்தத்தில் காணப்படும் முரண் மூளைநோயைக் குணப் படுத்த ஏற்றது.

flux: கழிச்சல்; மிகைவெளிப்போதல்; மிகை உடற்கழிவு பேதி : மலம், சீழ் முதலியவை உடலிலிருந்து அளவுக்கு அதிகமாகக் கழிதல்.

foetus : முதிர்கரு : தாயின் கருப் பையில்(பிறக்குமுன்) இருக்கும் முதிர் கரு சிசு.



முதிர் கரு

fluxion: குருதிக் கழிச்சல்.

folic acid : ஃபோலிக் அமிலம் : வைட்டமின் தொகுதிகளில் ஒன்று, பசுங்காய்கறிகள், நொதி(ஈஸ்ட்) ஈரல் ஆகியவற்றில் நிறைந்துள்ளது. இது சிறு குடலிலிருந்து ஈர்த்துக் கொள்ளப்படுகிறது. வைட்டமின் B_{12} குறைபாட்டினால் உண்டாகும் குருதிச் சோகையைக் குணப்படுத்தக் கொடுக்கப்படுகிறது.

Folicin : ஃபோலிசின் : இரத்த சோகை நோயைக் குணப்படுத்தக் கொடுக்கப்படும் ஃபோலிக் அமிலத்தின் வாணிகப்பெயர். முக்கிய மாக கருவுற்றிருக்கும் காலத்தில் ஏற்படும் சோகையைத் தடுக்க இது பயன்படுத்தப்படுகிறது.

follicle : குமிழ்ச் சுரப்பி; சுரப்பி; திசு நுண்குமிழ் : ஒரு சிறிய சுரப் புப்பை.

folliculitis : குமிழ்ச் சுரப்பி வீக்கம் : மயிர் மூட்டுப்பை போன்ற குழாய்ச் சுரப்பிகளில் ஏற்படும் வீக்கம்.

fomentation : ஒத்தடம் கொடுத்தல் : மருந்திட்ட இளஞ்சூடான கழுவுநீரினால் ஒத்தடம் கொடுத்தல்.

fontanelle : உச்சிமையம், உச்சிக் குழி, உச்சிமடு : குழந்தையின் தலையில் எலும்பு வளராது மென் தோல் மட்டும் உடைய உச்சி மையம் இது பெரும்பாலும் குழந்தையின் இரண்டாம் வயதில் மூடிக் கொள்ளும்.

உச்சிக்குழி

food allergy : உணவு ஒவ்வாமை : உணவு உண்டதும் ஏற்படும் எதிர் விளைவுகள் அனைத்தையும் இது குறிக்கிறது.

food poisoning : உணவு நச்சூட்டம்; நச்சுணவு : பாக்டீரியா நச்சு, நச்சுடைய இயற்கைக் காய்கறிகள் போன்றவற்றை வேதியியல் நஞ்சு காரணமாக, நஞ்சாகிய உணவினை உண்பதால் வாந்தி, வயிற்றுப் போக்கு போன்ற கோளாறுகள் ஏற்படுதல்.

foot : பாதம்; அடிக்கால்; காலடி : கணுக்காலுக்குக் கீழேயுள்ள காலடிப்பகுதி.

foramen: எலும்புப் புழை; எலும்புத் துளை; துளை : எலும்புகளில ஊடு செல்லும் புழை.

forced vital capacity (FVC) : கட்டாயச் சுவாச அளவு : நுரையீரல்களிலிருந்து வலிந்து வெளியேற்றக்கூடிய உச்ச அளவு வாயு

forceps : பற்றுக்குறடு, சாமணம் : அறுவைச் சிகிச்சைகளில் பயன்படுத்தப்படும் சாமணம் போன்ற இடுக்கிக் கருவி.

forensic medicine : தடயவியல் மருத்துவம் : சட்டம் அல்லது நீதி மன்றம் சார்ந்த மருத்துவத்துறை. சட்டவியல் மருத்துவம் என்றும் இதனை அழைப்பர்.

foreskin : நுனித்தோல்; முன்தோல் : மாணி நுதியை அல்லது ஆண்குறி நுனியை மூடியிருக்கும் தோல்.

formal dehyde : ஃபார்மால்டிஹைட் : ஆற்றல் வாய்நத பூச்சி கொல்லி மருந்து. 40% ஃபார்மாலின் கரைசல், அறைகளில் தொற்று நீக்கம் செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது. நோயியல் திசு மாதிரிகளைப் பாதுகாக்கவும் இதனைப் பயன்படுத்துகிறார்கள்.

formic acid : ஃபார்மிக் அமிலம் (கரிச அமிலம்) : எறும்புகளால் வெளியிடப்பட்ட கசிவில் அடங்கிய அமிலம்.

formication : அரிப்புணர்ச்சி ஊரல் : தோலில் எறும்பு ஊர்வது போன்று ஏற்படும் அரிப்புணர்ச்சி.

formula : மருந்துக் குறிப்பு: வரை முறை : ஒரு பொருளில் அடங்கியுள்ள வேதியியல் பொருள்களைக் குறிக்கும் மருந்துமுறைப் பட்டியல் குறிப்பு.

forni x: பேற்றுக் குழாய் வளைந்த முகட்டுப் பகுதி : பெண்ணின கருப்பை வாய்க்குழாய்ச் சுலருக்கும் கருப்பையின் கழுத்துப் பகுதிக்குமிடையிலான இடைவெளி வளைவு போன்ற முகட்டுடன் இருக்கும்.

Fortagesic : ஃபோர்ட்டாஜெசிக் : பெண்ட்டாசோசின் 15 மி.கிராம் பாராசிட்டாமோல் 500 மி.கிராம் அடங்கிய கலவை மருந்தின் வாணிகப் பெயர்.

Fortral : **ஃபோர்ட்ரால் :** பென்ட் டாசோசின் என்ற மருந்தின வாணிகப் பெயர்.

fossa : **குழிவு, பள்ளம்** : நீண்டு குறுகிய குழி; பள்ளம்.

fostering : **ஊட்டி வளர்த்தல்** : குழந்தைகளை அணைத்து ஆதரித்துப் பேணி வளர்த்தல். கவனிப்பு தேவைப்படும் குழந்தையைவீட்டுச் சூழலில் பாதுகாப்பாகக் கவனிப்பதற்கும், குழந்தையைக் குடும்பத்தினருடன கூடிய விரைவில் இணைப்பதற்கும் இது தேவைப் படுகிறது.

fracture : **எலும்பு முறிவு** : காயம் காரணமாக எலும்பில் ஏற்படும் முறிவு.

fragilitas : **எலும்பு முறிவு நோய்:** எலும்பு அளவுககுமீறி நொய்மையாக இருப்பதன் காரணமாக அடிக்கடி முறிவு ஏற்படுதல். இது ஒரு பிறவி நோய்.

framycetin : **ஃபிரமிசெட்டின் :** நியோமைசின் மருந்துடன் நெருங்கிய தொடர்புடையது. காது, கண், தோல் மருந்தாகப் பயனபடுத்தப்படுகிறது.

Franol : **ஃபிரானால் :** கடும் மார்புச சளி நோய்க்கும், ஈளை நோயக்கும கொடுக்கப்படும் ஒரு வகை மருந்தின் வாணிகப் பெயர்.

Freamine **ஃபிரியாமின் :** முட்டை இறைச்சி, மீன ஆகியவற்றிலுள்ள புரததததைப போன்று உட்செலுத்தப்படும் அமினோ அமிலங்கள் ஒன்றின் செயற்கைத் தயாரிப்பின வாணிகப் பெயர்.

freiberg's infarction : **எலும்புத் திசு அழுகல் :** எலும்புத திசுவின இழைமஙகள் அழுகுவது. இந்த நோய பெரும்பாலும இரணடாவது கால்விரல் எலும்புகளில் ஏற்படுகிறது. ஃபெரெயில்பர்க் எனபவரால் விளக்கபபட்டது.

Frenkel's exercises: **முள்ளெலும்புப பயிற்சி** : தசைக்கும் மூட்டுகளுக்கும் உணர்வூட்டுவதற்காக முதுகுத் தண்டிலுள்ள முள்ளெலும்புக்குத தனிவகைப் பயிற்சி யளிததல்

frenotomy : **ஃப்ரீனோட்டமி :** உறுப்பின் இயக்கத்தைத் தடுக்கும் சிறுநரம்பினை அறுவைச் சிகிச்சை மூலம் அப்புறப்படுத்துதல். முக்கியமாகத் தெற்றுநாக்கினைச சீர் படுத்த இந்த அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது.

frenum : **இயக்கத் தொடர் சவ்வு :** உறுப்புகளின இயக்கத்தைக் கட்டுப்படுத்தும சவ்வு மடிப்பு.

Freud, Sigmund (1856-1939) : **ஃபிராய்டு, சிக்மண்ட் (1856-1939):** நரம்புக் கோளாறுகளுக்குக் காரணமான உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டினை வகுத்தவர். மனிதரின் இயல்பான மற்றும் இயல்பு மீறிய நடத்தை முறைக்குப் பல்வேறு உளவியல் காரணங் களைக் கண்டு கூறியவர்.

friar's balsam : **பொன் மெழுகு :** பண்டைக் காலத்தில் நோவகற்றும் மருந்தாகப் பயன்பட்ட நறுமணப் பொருள்; சாராயததில் கரைக்கப்பட்ட சாம்பிராணி.

friction : **மருத்துவத் தேய்ப்பு முறை :** மருததுவ முறைப்படித் தேயத்துவிடுதல். உராய்தல்.

Friedreich's ataxia : **உறுப்புகள் ஒத்தியங்காமை :** உடலுறுப்புகள் ஒததியங்க முடியாமல் இருத்தல். முதுகந்தண்டிலுள்ள உணர்வு மற்று இயக்க நரம்பு நாள மையங்களில் குழந்தைப் பருவத்திலேயே உள்ளரிக் காழ்ப்பு காரணமாக இந்நோய் உண்டாகிறது. இதனால் தசை நலிவடைந்து, தள்ளாட்டம் ஏற்படுகிறது. இதயமுங் கூட பாதிக்கப்படலாம்.

Frigidity : **கிளர்ச்சியின்மை; காமமின்மை :** பாலுறவு கொள்வதில் இயல்பான விருப்பம் இல்லாதிருத்

தல். பெரும்பாலும் பெண்களுக்கு இந்நோய் உண்டாகிறது.

Froben : ∴புரோபென் : ஃபிளர்பி புரோஃபென் என்னும் மருந்தின் வாணிகப் பெயர்.

frog : ஒரு தவளை இனம்.

frog plaster : தவளைச் சாந்துக் கட்டு : பிறவியிலேயே இடுப் பெலும்பு இடம் பெயர்ந்திருப் பதைச் சீர்செய்வதற்காக அரைச் சாந்தினால் போடப்படும் மருத் துவக்கட்டு.

frontal : நெற்றி எலும்பு; தலை முன்னெலும்பு; முன் உச்சி : நெற்றி யைச் சார்ந்த முனபக்கமுள்ள எலும்பு.

frostbite : பனிக்கடுப்பு; திசு உறைவு : கடுங்குளிரினால் ஏற் படும் பொல்லா வீக்கம்.

frozen shoulder : விறைப்புத் தோள்; தோள் இறுக்கம் : தோளில் முதலில் வலிதோன்றி, பின்னர் விறைப்பு ஏறபட்டுப் பல மாதங் கள் நீடிக்கும் வலி குறைந்ததும், இயல்புநிலை திரும்பும் வரைப் பயிற்சி செய்தல் வேண்டும். இந் நோய்க் காரணம் தெரியவில்லை.

frusemide : ∴புருசமிடி : சீரான சிறுநீர்ப் போக்கினை உண்டாக் கும் மருந்து. இதனை வாய்வழி உட்கொண்ட பிறகு 4 மணி வரை இது நீடிக்கிறது.

Frusene : ∴புருசென் : ஃபுரு செமிடி என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

Fucidin : ∴பூசிடின் : ஃபூசிட அமி லம் சோடியம் ஃபூசிடேட் இரண் டும் கலந்த கலவை மருந்தின் வாணிகப் பெயர்.

fugue : இடமாற்ற நினைவிழப்பு : இடமாற்றத்துடன ஏறபடும் நினைவிழப்பு. இசிப்பு நோயின போது அல்லது சிலவகைக் காக்கை வலிப்பு நோயின்போது இது உண் டாகிறது.

fulguration : திசுவழிப்பு; மின்வழி திசு வலிப்பு : உட்பகுதிகளுக்கு மின் அலைகளால் வெப்பமூட்டு தல் மூலம் திசுக்களை அழித்தல்.

full-term : நிறைமாதம்; வளர் வுற்ற கரு : குழந்தை கருப்பையில் 40 வாரங்கள் முழுவதுமாக இருந்து முதிர்ச்சியடைதல்.

fulminant: திடீர்த் தோற்றம்: திடீ ரெனத் தோனறி, அதேவேகத்தில் மறைதல். அதிரடித் தாக்கம்.

fumigation : புகைத் தூய்மையாக் கம்; புகையூட்டத் தூய்மை : நறு மணப் புகையூட்டித் தூய்மையாக் கம் செய்தல்.

function : உறுப்புப் பணி; இயக் கம் : இயல்பான நிலையில் உட லின் ஒவ்வொரு உறுப்பும் செய்யக் கூடிய தனிப்பணி.

functional : உறுப்பியக்க முறை : உடல் உறுப்புகளின் இயக்கக்கூறு சார்ந்த; உறுப்புகளின் கட்ட மைப்பு சீர்குலையாமல், இயக்கத் தில் கோளாறு ஏற்படலாம்.

fundoplication : இரைப்பை வாய் மடிப்பு : இரைப்பை உச்சிப் பரப்பினை அறுவைச் சிகிச்சை மூலம் மடித்து விடுதல். இரைப்பை யிலுள்ள பொருள்கள் உணவுக் குழாய்க்குள் சென்று விடாமல் தடுப்பதற்காக இந்தச் சிகிச்சை செய்யப்படுகிறது.

fundus . உச்சி வாய்ப் பரப்பு; விழி மையம்; குழி முகடு : குறுகலான குழாய் அமைப்பின் உசசி வாய்ப் பரப்பு.

fungicide : காளான் கொல்லி : காளான்களைக் கொல்வதற்கான மருந்து.

fungiform : காளான் வடிவம் : நாக்கின் பின் மையப் பகுதியில் காணப்படும் நாய்க்குடை (காளான்) போனற வடிவுடைய சதைக் காம்பு.

Fungilin : **ஃபங்கிலின்:** *ஆம்போட்டெரிசின் B என்ற மருந்தின் வாணிகப் பெயர்.*

Fungistatic : **காளான் தடுப்பு மருந்து :** *காளான்கள் வளர்வதை தடுக்கும் ஒருவகை மருந்து.*

fungizone : **ஃபங்கிசோன் :** *அம்போட்டெரிசின் B என்ற மருந்தின் வாணிகப் பெயர்.*

fungoid : **காளான் போன்ற :** *நாய்க்குடையின் தன்மையுடைய.*

fungosity : **காளான் தன்மை :** *நாய்க் குடையின் தன்மை.*

fungus : **காளான் (நாய்க்குடை); பூஞ்சக் காளான் :** *மட்கிய உயிர்ப் பொருள்களின மீது வளரும் பச்சையமற்ற குறிமறையினச் செடியினம். கடற்பஞ்சு போன்ற நோய்த் தன்மையான வளர்ச்சி.*

funiculitis : **விந்து நாள வீக்கம்; விந்துக் குழாய் அழற்சி :** *விந்து நாளத்தில ஏற்படும் வீக்கம்.*

funnel chest : **புனல் மார்பு; குழி மார்பு:** *முதுகந்தண்டினை நோக்கிக் குழிவாக இருக்கும் மார்புக் கூடு.*

Furacin : **ஃபூராசின்:** *நைட்ரோஃபுராசோன் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.*

Furadantin : **ஃபூராடான்ட்டின் :** *நைட்ரோ ஃபூரான்ட்டாயின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.*

Furamide : **ஃபூராமைட் :** *டைலாக்சானைட் ஃபூரோவாட் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.*

Furazolidone : **ஃபூராசோலிடோன்:** *கிருமியினால உண்டாகும் வயிற்றுப் போக்கு, கிருமியினால் ஏற்படும் உணவு நச்சு ஆகியவற்றுக்குப் பயன்படுத்தப்படும் மருந்து.*

furor : **திடீர் அமளி :** *கட்டுக் கடங்காத சீற்றம் அல்லது கடும் சினம் காரணமாக திடீரென ஏற்படும் வெறி. இதனால் நோயாளி அறிவுக்குப் பொருந்தாத செயல்களைச் செய்கிறார்*

Furoxone : **ஃபூராக்சோன்:** *ஃபூராசோலிடோன் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.*

furunuculosis : **கழலை; கழலை வீச்சு :** *கொப்புளங்கள் காரணமாக ஏற்படும் கட்டி.*

G

gag : வாயடைப்பு; வாயடைப்புக் கட்டை : வாய் திறந்தபடி இருக்குப்படி செய்வதற்குப் பல் மருத்துவர் இடும் பொறியமைப்பு.

gait : நடக்கும் பாணி; தோரணை; நடையமைவு : இணக்க அல்லது இயல்பு மீறிய நடக்கும் பாணி 'சிறுமூளை நடை 'எனப்படும். சுழன்று தள்ளாடும், சாய்வான, கத்திரிக் கோல் நடையில் கால்கள் ஒன்றையொன்று குறுக்கே வெட்டுகின்றன. கால் விளங்காக் கோளாறினால் நடக்கும் பாணியில், பாதம மிக உயரத்திற்குத் தூக்கப்பட்டுத் திடீரெனத்தரையில் ஊன்றப்படுகிறது இதில் பாதம் முழுவதும் தரையைத் தாக்கும்.

galactagogue : பால்சுரப்பு மருந்து; பால்ஊக்கி,பால் பெருக்கி : தாயிடம் பால சுரப்பதை அதிகரிக்கும் ஒருவகை மருந்து.

galactocele : பால் கட்டி : பால் அலலது பால் போன்ற திரவம் அடங்கிய நீர்க்கட்டி.

galactorrhoea : மிகு பால்சுரப்பு; பால்சுரப்பு மிகைப்பு; பாலொழுக்கு : தாயிடம் இயல்புக்கு மீறி மிகுதியாகப் பால சுரத்தல்.

galactosaemia : மிகு பாற்சர்க்கரைப் பொருள் : இரததத்திலும, மறறத் திசுககளிலும பாறசர்க்கரைப்பொருள் மிகுதியாக இருத்தல். சிறுகுடலிலுளள பாறசர்க்கரைப் பொருள், பால் வெல்லத்தை சர்க்கரையாகவும், பாற் சர்க்கரையாகவும் மாற்றுகிறது. நுரையீரலிலுள்ள மற்றொரு செரிமானப் பொருள் (என்சைம), பாற்சர்ககரைப் பொருளைச் சர்க்கரையாக மாற்றுகிறது. இந்த இருவகைகளிலும் பிறவியிலேயே செரிமானப் பொருள் குறைபாடு காரணமாக, மிகு பாற்சர்க்கரைப் பொருள் உண்டாகிறது. இது மனக்கோளாறுக்குக் கார்ணமாகிறது.

galactose பாற்சர்க்கரைப்பொருள்; பாலினிமம் : பாலில் உள்ள சர்க்கரையில சர்க்கரையுடன் காணப்படும் பொருள். நுரையீரல் சேதமடைந்திருக்கிறதா என்பதைக் கண்டறிய பாற்சர்க்கரைப் பொருள் சோதனை செய்யப்படுகிறது நோயாளிக்கு வெறும் வயிறறில், 500 மி.மீ. நீரில் 40 கி. பாற்சர்க்கரைப பொருள கரைக்கப்படட கரைசல் கொடுக்கப்படுகிறது. ஐந்து மணி நேரத்திற்கு அவரது சிறுநீர் பரிசோதிக்கப்படுகிறது. சிறு நீரில் 2 கிராம அல்லது அதற்குமேல் பாற்சர்க்கரைப் பொருள் இருநதால், அவரது நுரையீரல் சேதமடைந்திருக்கிறது என்று பொருள்.

gall: (1) கல்லீரல் சுரப்பு; பித்தநீர்: கலலீரலில சுரக்கும் பித்தநீர்.
(2) வீககம/கொப்புளம் : உராய்வதால் உணடாகும் புண.

gallamine : காலாமின் : தசைக்குத் தளர்ச்சியூட்டும ஒருவகை மருந்து.

gallbladder: பித்தப்பை; பித்தநீர்ப் பை: நுரையீரலின் அடிப் பரப்பில் உள்ள பேரிக்காய் வடிவமுள்ள பை. இதில் பித்த நீர் சேர்த்து வைக்கப் படுகிறது



பிததபபை

gall-duct: பிதத நீர் வடிகுழாய்

gallipot : சாடி; குழம்புப் பானை: தைலம வைக்கப் பயன்படும் பளபளப்பான மட பாண்டம்.

gallstones : பித்தப்பைக் கல்; பித்தக் கல் : பிததப பையில் உண்டாகும கல போன்ற கடுமபொருள்.

galls : மரக்கரணைகள்; மாசைக்காய் : கருவாலி போனற சில மரங்களின் சுரணைகளிலிருந்து சுரக்கும் பால். இதிலிருந்து தானிக அமிலம தயாரிக்கப்படுகிறது

galvano cauterization : மின்னோட்டத்தீய்ப்பு : திசுக்களை அழிப்பதற்கு மின்னோட்டம் மூலம் சூடாக்கப்பட்ட ஒரு கமபியைப் பயன்படுத்துதல்.

galvanometer: மின்னோட்டமானி; கால்வானிய மானி : மினனோட்டததை அளவிடுவதறகான ஒரு சருவி.

gamete: பாலணு; பாலின உயிரணு; புணரி : இனப பெருககததில் இரு பால்களின சார்பாகவும இணைந்து ஒன்றையொன்று பொலிவுபடுத்தும் பாலினச் சார்பான ஊன்மத் துகள்.

gammabenzenehexach'oride : காமபென்சீன்ஹெக்சாகுளோரைடு : தலைப்பேனை ஒழிப்பதற்குச் சவர்க்காரக் குழம்பாக (ஷாம்பூ) பயன்படுத்தப்படும் பொருள்.

gamogenesis : பாலிணைவு இனப் பெருக்கம் : இருபாலகள் இணைந்து இனப்பெருக்கம் செய்தல்.

gamma rays: சிற்றலை ஒளிக்கதிர்; காமாக கதிர்கள் : மிகக குறுகிய ஒளிக்கதிர்லையுள்ள ஊடுருவு கதிர் கதிரியக்கத் தனிமங்களின அணுக்கரு மையம் சிதைவுறுவதால இது உணடாகிறது.

ganglion : நரம்பு மண்டல மையம்; நரம்புமுடிச்சு; நரம்பு முண்டு : மங்கிய சாம்பல நிற முடைய மாபபொருள் நிரம்பிய நரமபு மண்டல மையம்.

ganglion-cell/ganglion corpus cule/ganglion globule : நரம்பு மையக கருவணு.

ganglionectomy : நரம்பு மண்டல மைய அறுவை மருத்துவம்; நரம்பு முகை நீக்கம்.

gangrene : தசையழுகல் நோய்; அழிவுறல; அழுகம் : தசையழுக லுடனகூடியஉடலின் உட்கூறு அல்லது திசுக்கள் அழிந்து போதல். இது பெருமபாலும் இரத்தவோட்டக் குறைபாட்டினால் உண்டாகிறது. சிலசமயம், நேரடிக காயம் அல்லது நோய்த தொறறு காரண மாகவும் ஏறபடலாம்.

gangrenous stomatitis : தசையழுகல அழற்சி; அழுகிய வாயற்சி : புறறுப் புண.

Ganser syndrome : உளறல் நோய் : ஒருவர் கேள்விகளுக்குத் தவறான பதில்களைக கூறி, தான் சரியான பதிலைக் கூறிவிட்டதாக

எண்ணிக் கொள்ளும் மனக் கோளாறு நோய். எடுத்துக்காட்டாக, இந்நோய் கண்டவர் ஒரு குதிரைக்கு ஆறுகால்கள் என்று கூறுவார்.

Gantrisin : கேண்ட்ரிசின் ; சல்ஃபாஃபுராசோல் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

Gardenal: கார்டினால் : ஃபினோபார்பிட்டோன் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

gargle: தொண்டை கழுவும் நீர்மம்; வாய்க் கொப்பளிப்பு; கொப்புளி : தொண்டையைக் கழுவுவதற்குப் பயன்படும் ஒரு கரைசல்.

Garoin : காரோயின் : ஃபெனிட்டாயின் சோடியம், ஃபினோபார்பிட்டோன் இரண்டும் கலந்த கலவை மருந்தின் வாணிகப் பெயர். காக்காய் வலிப்பு நோய்க்கு இது பயன்படுகிறது.

gas : வாயு; வளிமம் : ஒரு பொருளின் மூன்று நிலைகளில் ஒன்று வாயுநிலை. திடநிலையும், திரவ நிலையும் மற்றஇருநிலைகளாகும். வாயு வெளிப்படும்போது அதன் வடிவையும் கனஅளவையும் அப்படியே இருத்தி வைத்துக் கொள்வதில்லை.

gasserectomy : நரம்புக்கணு அறுவை மருத்துவம் : நரம்பு மண்டல மையத்தை அறுவைச் சிகிச்சை மூலம் வெட்டியெடுத்தல்

gastralgia : வயிற்று வலி, இரைப்பை வலி : வாயுக் கோளாறினால் ஏற்படும் வயிற்று வலி.

gastrectomy' இரைப்பை அறுவை மருத்துவம்; இரைப்பை நீக்கம்; இரைப்பை அகற்றல் ; இரைப்பையின் ஒரு பகுதியை அல்லது இரப்பை முழுவதையும் அறுவை மருத்துவம் மூலம் அகற்றுதல்.

gastric : அடிவயிறு சார்ந்த இரைப்பைகள் : இரைப்பையில் சுரக்கும் நீர் அமிலமாவதால் அடிவயிற்றில் வலி உண்டாகிறது. இதனால், உணவு உண்டதும் வயிற்றில் வலி ஏற்படுகிறது.

gastric fever : குடற் காய்ச்சல்.

gastric juice : இரைப்பை நீர்.

gastrin: இரைப்பைச் சுரப்புப்புரதம். இரைப்பைக்குள் உணவு சென்றதும் சுரக்கும் ஒரு வகை இயக்குநீர் (ஹார்மோன்). இது இரைப்பை நீர மேலும் சுரப்பதற்கு வழிசெய்கிறது.

gastritis : இரைப்பை அழற்சி; இரைப்பை வீக்கம் : இரைப்பையில் ஏறபடும் வீக்கம்.

gastrocele : இரைப்பைக் கட்டி ; இரைப்பைப் பிதுக்கம்.

gastrocnemius : கெண்டைக்கால் தசை : கெண்டைக்கால புடைத்திருக்கச் செய்யும் தசை.

gastrodynia : இரைப்பை நோவு; இரைபபை வலி.

gastroenteritis : இரைப்பை-குடல அழற்சி : இரைப்பையிலும், சிறுகுடலிலும் சளிச்சவ்வில் ஏற்படும் வீக்கம். நுண்ணுயிரியல் காரணமாக இது உண்டாகிறது. குழந்தைகளிடம் நோய்க் கிருமிகளினால ஏறபடுகிறது.

gastroenterology : இரைப்பை-குடல் ஆய்வியல் : நுரையீரல், பித்தநீர்க் குழாய், கணையம் போன்ற சீரண உறுப்புகள் பற்றியும், அவற்றில் உணடாகும் நோய்கள் பறறியும் ஆராயதல்.

gastroenteropathy : இரைப்பை-குடல் நோய : இரைப்பையிலும், குடலிலும் ஏற்படும் நோய்கள்.

gastroenteroscope : இரைப்பை-குடல் நோய் காணும் கருவி :

இரைப்பையிலும், குடலிலும உண்டாகும் நோய்களைக் கண்ணால் பார்த்தறிவதற்குப் பயன்படும் கருவி.

gaatroenterostomy : இரைப்பை -சிறுகுடல் பிணைப்பு : இரைப்பையையும் சிறுகுடலையும் அறுவை மருத்துவம்மூலம் பிணைத்தல்.

Gastrografin : கேஸடிரோகிராஃபின் : சோடியமும், மெக்ளுமின் டயாட்ரிசோயேட்டும கலந்த கலவை மருந்தின் வாணிகப் பெயர். குருதிப் போக்குக்குக் கொடுக்கப்படும் மருந்து.

gastrooesophageal : இரைப்பை -உணவுக் குழாய் சார்ந்த : இரைப்பை மற்றும உணவுக் குழாய் சார்ந்த.

gastrooesophagostomy: இரைப்பை உணவுக் குழாய் இணைப்பு : இரைப்பையுடன் உணவுக் குழாயை இணைப்பதற்கான அறுவை மருத்துவம்.

gastropathy : வயிற்று நோய்; இரைப்பை நோய் : இரைப்பையில் ஏற்படும ஒரு நோய்.

gastropexy : இரைப்பையைப் பொருத்துதல் : இடம்பெயர்நத இரைப்பையை அறுவை மருதத்துவம் மூலம் பொருத்துதல்.

gastrophrenic : இரைப்பை-உதர விதானம் சார்ந்த : இரைப்பை மறறும உதரவிதானம் சார்ந்த.

gastroplasty . இரைப்பை பிளாஸ்டிக அறுவை மருததுவம் : இரைப்பையின நெஞ்சுப்பைத் துவாரத்தை மீணடும அமைப்பதற்காக இரைப்பையில் செய்யபபடும் பிளாஸ்டிக் அறுவை மருத்துவம்.

gastroptosis . இரைப்பை கீழ நோககி; இரைப்பை கீழிறக்கம; இடம் பெயர்தல : இரைப்பை கீழ் நோக்கியவாறு இடம் பெயர்ந்திருத்தல்.

gastroschisis : உள்ளுறுப்புப் புற நீட்சி : அடிவயிற்றுச் சுவர் பிறவியிலேயே முழுமையாக மூடாதிருத்தல். இதனால் உள்ளுறுப்புகள் இரட்டைச் சவ்வுப் பையினால மூடப்படாமல் வெளியே நீட்டிக் கொணடிருக்கும்.

gastrostomy· செயற்கை உணவுக் குழல் இரைப்பைக்கும புற அடிவயிறறுச் சுவருக்குமிடையில் அறுவைச் சிகிச்சைமூலம் செயற்கை முறையில் உணவூட்டுவதற்காக உண்டாககப்படும் ஒரு குழல்

gastrotomy : அடிவற்றுத் துளை மருத்துவம்; இரைப்பை அறுவை; இரைப்பைத் துளைப்பு; இரைப்பை உதர இணைவு : அடிவயிற்றில் அறுவைச் சிகிச்சை செய்யும் போது அயல்பொருள்களை அப்புறப்படுத்துதல், குருதிக குழாயில் குருதிக் கசிவைத் தடுத்தல, உணவுக குழாயை அணுகுதல போன்ற காரியஙகளுக்காக இரைப்பையில் துளையிடுதல்.

gastrula : பின் கருக்கோளகை நிலை : முதிரா நிலைக் கருமுளையில் கருக்கோளகைக்கு அடுதத நிலை.

Gaucher's disease : மண்ணீரல் விரிவாக்க நோய : மண்ணீரல் அளவுக்குமீறி விரிவடையும் நோய இதுசில யூதக்குழந்தைகளுக்குவழி. வழியாக வரும் ஓர் அரிய குடும்ப நோய்

gavage feeding : குழாய் வழி உணவூட்டல : உணவுக குழாயினுள் வாயவழியாக ஒரு குழாயை செருகி வயிறறுக்குள் திரவ உணவுகளையும், ஊட்டச் சத்துப் பொருளகளையும் செலுத்துதல்.

Gaviscon : காவிஸ்கான் : அலுமினியம ஹைட்ராக்சைடும், மகனீ

சியம் டிரைசிலிக்கேட்டும் கலந்த வயிற்றுப் புளிப்பகற்றும் மருந்தின் வாணிகப் பெயர்.

Geigercounter : கதிரியககம் கண்டறியும் கருவி : கதிரியக்கத்தைக் கண்டுபிடித்துப் பதிவு செய்யும் சாதனம்.

gelatin (e) : ஊன்பசை: ஊன்மம். எலும்பு, தோல்களிலிருந்து எடுக்கப்பட்டு உணவுப் பொருள உறை, ஒளிப்படத்தகடு, பசைகள் முதலியவற்றில் பயன் படும் கூழ் போன்ற பொருள்.

gene : மரபணு; மரபுக்கூறு: பண்பியக்கி : ஒரு குறிப்பிட்ட இனக்கீற்றில் (குரோமோசோம்) ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமைந்திருக்கும் ஒரு குறிப்பிட்ட அலகு இது உயிரமத்தின் இணைமரபுக் கீற்று ஆகும். இது மரபுவழிப் பண்புகளைக் காட்டுகிறது.

general paralysis of the insane (GPI) .கிரந்திப் பித்து நிலை: கிரந்திப்புண் தொற்றுவதினால் மூளையில் ஏற்படும் பாதிப்பு. இதனால் மனத்தளர்ச்சியுண்டாகி பைத்தியம் ஏற்படும். தொடக்கத்தில் மறதி ஏற்பட்டு பின்னர் ஆளுமை சீர் குலைந்து போகும்.

generative : இனப்பெருக்கம் சார்ந்த.

genetic code : மரபுவழிப் பண்பு விதி; மரபணு நெறி : இனக்கீற்றின டி ஆக்சிரிபோ நியூக்ளிக் அமில (DNA) மூலக் கூற்றில் சேமித்து வைக்கபபட் டிருக்கும் மரபுவழிப்பண்புப் பொருள் நிரல் வரிசைக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பெயர். இந்த விதிமுறையின் படிதான் மரபணுக்களில் அடங்கியுள்ள தகவலகள் உயிரணுக்களுக்கு அனுப்பப்படுகின்றன.

genetics: மரபுவழிப் பண்பியல்; மரபியல்; மரபணுமுறை: பாரம்பரியம் பற்றியும் அதன் மாறுபாடு குறித்தும் ஆராயும் அறிவியல். அதாவது, மரபுவழிப் பண்புப் பொருள பற்றியும், அது உயிரணுவுக்கு உயிரணு, தலைமுறைக்குத தலைமுறை செல்வது குறித்தும் ஆராய்தல்.

genital : பிறப்புக்குரிய; இனப்பெருக்க உறுப்பு;இனவுறுப்புசார்ந்த; பிறப்புறுப்பிடம் : பிறப்புறுப்புகளுக்குரிய.

genitalia : புறப்பிறப்புறுப்புகள்.

genitocrural:பிறப்புறுப்பு-தொடை சார்ந்த : பிறப்புறுப்புப் பகுதி மற்றும் தொடை சார்ந்த.

genito urinary : பிறப்புறுப்பு-சிறுநீரகம் சார்ந்த; சிறுநீரகப்பிறப்புறுப்பு. பிறப்புறுப்பு மற்றும் சிறுநீரக உறுப்புகள் சார்ந்த.

genome : மரபியல் உயிர்மம் : மரபணுக்களில் அடங்கியுள்ள அடிப்படை இனக்கீற்றுகளின் தொகுதி.

genotype: மரபுசார் வடிவம் ; கால்வழியமைப்பு : ஒரு தனிமனிதரின் இனக்கீற்றுகளில் குறியிட்டு முறையில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் முழுமையான மரபுவழிப் பண்புபற்றிய தகவல்கள்.

genu : முழங்கால் முட்டி; வளைவு .

genu pectoral position : முழங்கால-மார்புநிலை : உடலின் எடையை முழங்கால்களும், மார்பின் மேற்பகுதியும் தாங்கிக்கொண்டு, தோள்பட்டையையும் தலையையும் முன் பகுதித் தண்டு தாங்கி நிற்கும் நிலை.

genus : உயிரினம்; இனப்பகுப்பு; பேரினம் : ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடைய பல வகைகள் கொண்ட உயிரினங்களின் முழுநிறைக் குழுமம்.

genu valgum (bow legs): வளைவுக் கால்கள்; சப்பைக்கால்; வெளி

வளைவு : கால்கள் இயல்புமீறி வெளிப்புறமாக வளைந்திருத்தல். இதனால், முழங்கால்கள் விலகி யிருக்கும்.

genu varum (knock knee) : இடிப்பு முழங்கால! முழங்கால் உள வளைவு : கால்கள் இயல்புமீறி உட்புறமாக வளைந்திருத்தல். இதனால் முழுங்கால்கள் இணைந் திருக்கும்போது பாதங்களிடையே இடைவெளி இருக்கும்.

geophagia ; மண் தின்னல் : மண் உண்ணி : களிமண்ணை அல்லது மண்ணைத் தின்னும் பழக்கம்.

geophagism (geophogy) : மண் சோகை : மண்ணைத் தின்பதால் உண்டாகும் சோகை நோய்.

geriatrician : மூப்பியல் மருத்து வர்; முதுமையியல் மருத்துவர்; முதி யோர் மருத்துவ வல்லுநர் : மூப்பி யல் மருத்துவததில் வலலுநர்.

geriatrics : மூப்பியல் மருத்துவம்; முதுமை மருத்துவம் : மூப்புப் பற்றி யும் மூப்புக்குரிய நோய்கள் குறித் தும் ஆராயும் மருத்துவத்துறை.

germ : நுண்மம்; நுண்ணுயிரி : நோய் தோறறததை உருவாக்கும ஒரே உயிரணுவுடைய நுண்ணு யிரி.

germicide : நுண்மக் கொல்லி; நுண்ணுயிர்க கொல்லி: நோய் நுண் மத்தை அழிக்கும் மருந்து.

gerontology : மூப்பியல்; முதுமை யியல் : மூப்புபறறியும் மூப்புக் குரிய நோய்கள் குறித்தும் அறிவி யல் முறைப்படி ஆராய்தல்.

gigantism . அரக்க உருவம்: பேருருவம் உடல் அளவுக்கு மீறி வளாந்திருத்தல்; முக்கியமாக உயரமாக வளர்ந்திருததல். உடல் வளர்ச்சிக்கு முக்கியமாக உதவுவ தாகக் கருதப்படும் தூம்பற்ற மூளையடிச்சுரப்பியான கபச்சுரப் பியின் முன்பக்தத்தில் ஏற்படும் கழலை காரணமாக இது உண்டா கிறது.

ginger : இஞ்சி: மணமும் சுவையு முண்டாக்குவதற்காகப் பயன் படுத்தப்படும் இஞ்சிக் கிழங்கு.

gingiva : பல்லெயிறு: ஈறு : பல் லைச் சுற்றியுள்ள தசைத் திசு.

gingivitis : பல்லெயிற்று வீக்கம்; ஈறுவீக்கம்; எயிறு அழற்சி : பல் வீக்கத்தினால உண்டாகும் எரிச்ச லினால் ஏற்படும் எயிற்று வீக்கம்.

girdle : என்பு வளையம்; இருப்பு : கைகால்களைத் தாங்கும் என்பு வளையப்.வரிந்துகட்டுப்வளையம், இடுப்பு, தோல்பட டை வளையம்.

gland : சுரப்பி : உள்ளே அல்லது சுரப்பு நீரைச் சுரந்திடும் சுரப்பி. உடலின் இயக்கத்திற்குத் தேவை



சுரபபிகள

யான பொருள்களைச் சுரக்கும் உடலின் பகுதி. வியர்வைச்சுரப்பி, பால் சுரப்பி, நிணநீர்ச்சுரப்பி, சீரணத்திற்கு உதவும் திரவங் களைச் சுரக்கும் கணையம் போன்றவை இவ்வகையைச் சேர்ந்தவை.

glanders : குதிரைச் சயம், புரவிக் காய்ச்சல : குதிரை, கோவேறு

கழுதைகள், கழுதைகள் ஆகியவற்றிடமிருந்து மனிதரைத் தொற்றிக் கொள்ளும் சயநோய்.

Glauber's salts : **கிளாபர் உப்பு** : சோடியம் சல்ஃபேட். ஜெர்மன் வேதியியலறிஞர் ஜே.ஆர். கிளாபர் இதனைக் கண்டுபிடித்தமையால் இது 'கிளாபர் உப்பு' எனப் பெயர் பெற்றது.

glaucoma : **கண்விழி விறைப்பு நோய்; விழி மிகையழுத்த நோய்; கண்ணழுத்த நோய்.** கண்ணில் உள் அழுத்தம் காரணமாக உண்டாகும் நோய். இந்நோய் கடுமையானால் கடும வலி ஏற்படும.

gleno humeral. **தோள்பட்டைஎலும்புக் கிண்ணம் தொடர்பான** : தோள பட்டை மறறும முனகால் மேற்புற எலும்பில் கிண்ணம் போன்ற குழிவான பகுதி தொடர்பான.

glenoid : **எலும்புக் கிண்ணம்** : எலும்புத் திசுவில் கிண்ணம் போன்ற குழிவு.

Glibenese: **கிளைபினேஸ்** : கிளிப்பிசைட் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

glioblastoma multiforme : **மூளைக்கட்டி** : கடும் உக்கிரத் தன்மையுடைய மூளைக்கட்டி

gliomyoma : **நரம்புதசைக் கழலை** : நரம்பு மற்றும் தசைத் திசுவில் உண்டாகும ஒருவகைக் கட்டி.

glipizide : **கிளிப்பிசைட்** : நீரிழிவு நோய்க்கு எதிராக வாய்வழி உட்கொள்ளப்படும் மருந்து.

globin : **குளோபின்** ; இரத்தச் சிவப்பணுவுடன் இணைந்து செந்நிறக் குருதியணுப் பொருளாக மாறும் ஒரு புரதப் பொருள்.

globulin : **தசைப் புரதம்** : உப்பு நீரில் கரையும இயலபுடன் உயிரினத் தசைக்கூறுகளில் காணப்படும் புரதவகை. இதில் நோய்த்தடைபபுக்கான A, D, E, G, M ஆகிய புரதங்கள் அடங்கியுள்ளன.

globulinuria ; **சிறுநீர்ப் புரதம்** : சிறுநீரில புரதம் கலநதிருத்தல.

globus hystericus : **தொண்டை அடைப்பு** : தொண்டையில தசை முணடு அடைப்பது போன்ற உணர்வு. இது நரம்புக் கோளாறினால் உண்டாகிறது. இசிவுநோய் கவலை, மனச்சோர்வு நிலைகளில இது ஏற்படும்.

glomerulitis: **தசை இணைக் குச்ச வீக்கம்; திரணைகள்** : தசைக்கூறுகளின இணைக் குச்சத்தில் ஏற்படும் வீக்கம்.

glomerulosclerosis: **தசைக் குச்சக் கழலை**: சிறுநீரகத்தின தசைக்கூறுகளின் இணைக் குச்சத்தில் ஏற்படும் கட்டி.

glomerulus : **நரம்புத்திரள்,**



நரமபுததிரள

திறணை; குஞ்சம் : நாடி நரம்புகளின் திரள்முடி.

glossa · **நாக்கு.**

glossectomy · **நாக்கு அறுவை மருத்துவம்; நாவெடுப்பு** : நாக்கை வெட்டியெடுத்தல்.

glossitis : **நாக்கு அழற்சி. நாவழற்சி**: நாக்கு வீக்கம்.

glossoplegia : **நாக்குவாதம்· நாவாதம் :** நாக்கு செயலற்றுப் போதல்.

glottis : குரல்வளை முகப்பு; குரல்வாய் : குரல் எழுகின்ற தொண்டையின் பகுதி.

glucagon : குளுகாகோன் : கணையப் பகுதியின் ஆல்ஃபா உயிரணுக்களில் உற்பத்தியாகும் இயக்குநீர் (ஹார்மோன்). இது கிளைக்கோஜனை குளுக்கோசாக மாற்றி, உணவு உண்டபோது இரத்தத்தில் சர்க்கரை அளவுக்கு மீறிக் குறைந்து விடாமல் தடுக்கிறது.

Glucophage : குளுக்கோ:ஃபாஜ் : மெட்ஃபாாமின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

Glucoplex : குளுக்கோப்பிளக்ஸ் : அமினோ அமிலங்களின் கரைசலின் வாணிகப் பெயர். இதனை ஊசிமூலம் செலுத்தலாம்.

glucose : குளுக்கோஸ்; குருதி பழச் சர்க்கரை: கொடிமுந்திரி அல்லது திராட்சைப்பழத்திலிருந்து தயாரிக்கப்படும் சர்க்கரை. இது நுரையீரலில் கிளைக்கோஜனாகச் சேமித்துவைக்கப்படுகிறது.

glue ear : காதுப் பசை : காதின் மையப்பகுதியில் திரளும் பசை போன்ற பொருள். இது திரண்டு செவிப்பறையை விரிவாக்கிக் கேட்கும் திறனைக் குறைக்கும்

gluten : மாப்புரதம்: பசையம் : விலங்குகளிலிந்து சுரக்கும் பசைப் பொருள். இது நீரில் கரையாது.

Glutril : கிளட்ரில் ; கிளிபோனூரைடு என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

glycerin(e): களிநீர்ப் பாகு: கொழுப்பிலிருநது காரம் சேர்ப்பதால் விளைவிக்கப்பட்டு, மருந்துக்கும் பூச்சு நெய்க்களிம்புகளுக்கும் வெடி மருந்துக்கும் பயன்படுத்தப்படும் நீர்மப் பொருள்.

glycerophosphates, கிளிசரோபாஸ்:ஃபேட்: உடல்ஊக்க மருந்துக்கலவையில் சேர்க்க பசியைத் தூண்டும்.

glyceryl trinitrate : கிளிசரில் டிரினிட்ரேட் : குருதிநாள விரிவகற்சி மருந்து. இது மாத்திரைகளாகக் கிடைக்கிறது. மாத்திரையை வாயில்போட்டு உமிழ்நீரில் கரைத்து உட்கொள்ள வேண்டும்.

glycine : கிளைசின் : இன்றியமையாத அமினோ அமிலங்களில் ஒன்று.

glycinuria : சிறுநீர் கிளைசின் : சிறுநீரில் கிளைசின வெளியேறுதல்

glycogen: கிளைக்கோஜன்: இழைமங்களில் பழச்சீனி போன்ற பொருளை உண்டாக்கப் பயன்படும் பொருள்.

glycogenase : கிளைக்கோஜினேஸ : கிளைக்கோஜனை குளுக்கோசாக மாற்றுவதற்குத் தேவையான ஒரு செரிமானப் பொருள் (என்ஸைம்) நொதி.

glycogenesis : கிளைக்கோஜனாக்கம் : இரத்தக் குளுக்கோசிலிருந்து கிளைக்கோஜன் உருவாதல்.

glycogenolysis : கிளைக்கோஜன் பகுப்பு : கிளைக்கோஜன் பகுபட்டுக் குளுக்கோசாக மாறுதல்.

glycogenosis : கிளைக்கோஜன் பெருக்கம்: கிளைக்கோஜன் அளவு அதிகரிக்கும் வளர்சிதை மாற்றக் கோளாறு.

glycolysis : கிளைக்கோஜன் சிதைவு : உடலிலுள்ள சர்க்கரை நீரின துணையினால் சிதைந்து கூறுபடுதல்.

glycopyrrolonium : கிளைக்கோப் பைரோலோனியம் : செயற்கை நச்சுக்காரம் போன்ற ஒரு மருந்து.

எனினும், இது நச்சுக்காரம் போன்று இதயத் துடிப்புக் கோளாறு ஏற்படுத்துவதில்லை.

glycosides : கிளைக்கோசைட்ஸ் : காடி, காரங்களின் மூலம் பழ வெல்லம் போன்ற பொருள்களைத் தரும் தாவரப்பொருள் வகை.

glycosuria : சிறுநீர்ச் சர்க்கரை; சிறுநீரில் குருதிச் சர்க்கரை; சர்க்கரை நீரிழிவு : சிறுநீரில அதிக அளவில் சர்க்கரை இருத்தல்.

glycyrrhiza : அதிமதுர வேர் : இதிலிருந்து மருந்தாகவும், தின்பண்டமாகவும் பயன்படும் கருநிறப்பொருள் எடுக்கப்படுகிறது.

glymidine : கிளைமைடின் : நீரிழிவு நோய்க்கு வாய்வழி கொடுக்கப்படும ஒரு மருந்து.

gnathalgia : தாடைவலி.

gnathoplasty : தாடை பிளாஸ்டிக் மருத்துவம்; தாடை ஒட்டு அறுவை: தாடையில் செய்யப்படும் பிளாஸ்டிக் அறுவை மருத்துவம்.

goblet cells· கிண்ண உயிரணு : கிண்ணம் போன்ற வடிவுடைய ஒரு தனிவகைச் சுரப்பு உயிரணு. இது சளிச்சவ்வில் காணப்படுகிறது.இது குடுவை உயிரணுவாகும்.

Goeckerman regime யானைச் சொறிச் சிகிச்சை. யானைச்சொறி எனப்படும் நமட்டுச சொறி நோயைக் குணப்படுததுவதற்கான ஒரு முறை இதில, புற ஊதாக் கதிர் காட்டுவதும், கீல எண்ணெய் பூசுவதும், மாறறி மாறறிச் செய்யப்படுகிறது.

goggle-eyed : முட்டைக்கண விழி பிதுங்கி, விழி உருணடு திரணடு இருத்தல்.

goitre · குரல் வளைச் சுரப்பி வீக்கம்; கழலை; கணடமாலை : குரல வளை தொங்கு சதையாக வீங்கி ஆறாதிருக்கிற கோளாறு.

goitrogens : குரல்வளைச் சுரப்பி வீக்கப் பொருள் : குரல்வளைச் சுரப்பி வீக்கத்தை உண்டாக்கும் பொருள்கள்.

gonad: இருபால் உயிரணு மையம்; ஈனுறுப்பு : ஆண்-பெண் உயிரணு உருவாகும் உறுப்பு.

gonado trophin : இருபால் உயிரணு உறுப்பு இயக்கு நீர் : ஆண்-பெண் இரணடும் பொதுவான நுண்ம உயிர்மத்தைத் தூணடுகிற இயக்குநீர் (ஹார்மோன).

gonalgia -முழங்கால் வலி

Gondafon : கோண்டா∴போன் : கிளைமிடின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

gonioscopy:கண் கோண அளவீடு; கோளம் காணல்;ஈனுறுப்பு நோக்கல்: கணணின் முனபக்க அறையின் கோணத்தைக் கண்கோணமானியினால் அளவிடுதல்.

goniotomy : கண்விழி அறுவை மருத்துவம்; கோணத் திறப்பு: ஈனறுவை: கண்விழி விறைப்பு நோயைக குணப்படுத்தப்படும அறுவை மருத்துவம.

gonorrhoea: மேகவெட்டைநோய்; வெட்டை நோய . வயது வந்தவாகளுககுப் பாலுறவு மூலம் பரவும் நோய். அரிதாகக் குழந்தைகளிடமும இது தொறறும.

goose flesh தோல் சிலிர்ப்பு · தோல் சிலிாப்பு நிலை மயிாககால்களுடன் இணைந்துள்ள நுண்ணிய தசைகள் சுருங்குவதால் தோல் சிலிர்ப்பு உண்டாகிறது இது அதிகக குளிரினாலும், பயத்தினாலும் ஏற்படும்.

gouge: நகவுளி; எலும்பு அகற்றுளி: அறுவை மருத்துவத்தில் எலும்பை அகற்றுவதற்குப் பயன்படுத்தப் படும் உட்குழிவான அலகுடைய உளி.

gout : மூட்டு வீக்கம் : மூட்டுகளி லும், காதுகளிலும், வேறிடங்களி லும் உள்ள குருத்தெலும்புகளில் சோடியம் பையூரேட் படிந்து ஏற் படும் ஒருவகை வளர்சிதை மாற் றக் கோளாறு. இதனால், கால் விரல் வீங்கி, கடும் வலி உண்டா கிறது. இப்போது இந்தச் சோடி யம் பையூரேட்டை வெளியேற்று வதற்கு மருந்துகள் உள்ளன.

Graefe's knife : கிரா:.பிக் கத்தி: கண்ணில் புரையை அகற்றுவதற் குப் பயன்படுததப்படும் குறுகிய நுண்ணிய கத்தி.

graft : ஒட்டு முறை பதியம்; ஒட்டு: அறுவைச சிகிச்சையில் திசுவை அலலது உறுப்பினை இடம் மாற் றிப் பொருத்துதல்.

gramicidin : கிராமிசிடின் : உயிர் எதிர்ப்புத தனமை வாய்ந்த ஒரு கலவை மருந்து. இது டைரோதரி சினிலிருந்து எடுக்கப்படுகிறது. மிகவும் நச்சுத் தன்மை வாய்ந்தது. ஆனால் வெப்ப மண்டலத்தில் பயனபடுத்தத்தக்கது.

Gram's stain : கிராம் சாயம் : நுணணுயிரிகளை வேறுபடுத்திக காண்பதற்கான பாக்டீரியாவியல சாயம். கிறாம் உருவாக்கியது.

grand mal: பெருங்காக்காய். வலிப்பு, பெருவலிப்பு; கால கை வலிப்பு .

granny bashing. முதியோர் காயம் முதியோரைக் கவனிக்கும் பொறுப்புடையவர்கள் அவர் களுக்கு விளைவிக்கும் காயஙகள்.

granulation: புண்முளை; வளர்வு: புண முதலியவற்றில் குணமாவ தற்கு வளரும் மணல்போல் முளை களுடன் தோன்றும் திசு.

granuloma : திசுக்கட்டி ; குருணைக்கட்டி; வளர்மைக்கட்டி : ஆறிவரும் புணமீதான திசுக்களி னால் உண்டாகும் ஒருவகைக் கட்டி.

gravel: கல்லடைப்பு: சிறுநீர்பையில் மணிக்கற்கள் (பரல்கள்) கட்டுதல்.

gravid : கருவுற்ற; சூல் கொண்ட; சூலுற்ற : சூலகொண்ட.

gravity : ஈர்ப்பாற்றல்; ஈர்த்தல்; ஈர்ப்பு : பொருள்களிடையிலான இயல் ஈர்ப்பு வலிமைத்தரம்.

greenstick fracture : எலும்பு முறிவு : குழந்தைகள் வகையில் ஒரு புற எலும்பு வளைந்தி ருக்க மறுபுறஎலும்பு முறிந்திருக்கும்.

எலும்பு முறிவு

gregarianism : கூடி வாழும் தன்மை : இணைந்து வாழும் இயல்பு; மந்தை மனப்பான்மை.

gregarious : மந்தை மனபபான்மை : மந தை மனப்பான்மை யுடைய; கூடிவாழும் தன்மையுடைய; இணைந்து வாழ விருமபுகிற.

grinder's asthma: உலோகத் தூசு ஈளை நோய் : உலோகத் தூசியைச் சுவாசிப்பதால் உண்டாகுமநோய்.

gripe : கடும் வயிற்று வலி; வயிற் றளைவு : கடுமையான வயிற்று நோவு; குடற்சுருக்குவலி.

Gripe-water : குடல்வலி மருந்து.

griseofulvin : கிரைசியோ:.புல் வின் : படர்தாமரை நோய்க்குப் பயனபடும் மருந்து. இது வாய் வழி உட்கொள்ளபபடுகிறது

grocer's itch : கரப்பான் நோய் : *சர்க்கரையை அல்லது மாவைக் கையாள்வதால் மளிகைக் கடைக் காரருக்கு உண்டாகும கரப்பான நோய்.*

groin : அரை/இடுப்பு; கவட்டை : *வயிறும் தொடையும் சேருமிடம்.*

growing pains : இளம்பிள்ளை நரம்பு நோவு; வளர்ச்சி வலி ; *இளமையில் உறுப்புகளில உண்டாகும் வலி. இது வாத வலியிலிருந்து வேறுபட்டது.*

guanethidine: குவானித்தைடின் : *தாழ்நத குருதியழுத்தத்தைத தடுக் கக்கூடிய ஒரு மருந்து.*

Guanimycin : குவானிமைசின் : *வயிற்றுப் போக்கினைத் தடுக்கக் கூடிய ஒரு மருநதின் வாணிகப் பெயர்.*

guanoxan : குவானோக்சான் : *தாழ்ந்த குருதியழுத்தத்தைத தடுக் கக்கூடிய மருந்தின வாணிகப் பெயர்.*

guanazolo : புற்று ஒழிப்பு மருந்து : *புறறு நோயில புற்றுபபகுதிகளை ஊட்டமறுத்து ஒழிககும் முயற்சிக் குத் தேர்வு முறையான மருந்தாக உதவும் பல்கூட்டுச் சேர்மப் பொருள்.*

Guarem : குவாரெம் : *குவார் என்ற பானத்தின் வாணிகப் பெயர்.*

guillotine : உள்நாக்கு வெட்டுக் கத்தி : *உள்நாக்கு முதலியவற்றை வெட்டியெடுப்பதற்கான அறுவை மருததுவக் கருவி.*

Guinea worm: நரம்புச்சிலந்திப்புழு.

gumboil : பல்லீற்றுக்கட்டி; ஈறு கட்டி : *பல் ஈறுகளில் உண்டாகும் சிறுகட்டி; இதனால் கடும் வலி உண்டாகும்.*

gumma: மேகநோய்கட்டி; மேகப்புண் *கிரந்திநோயின்நாள்பட்டவிளைவு உறுப்புகளில் உண்டாகும் பிசின் போன்ற செறிவுள்ள புடைப்பு.*

gums : எயிறு : *பல் நிற்கும் தசை; ஈறு.*

gut : குடல் நாளம் : *உணவு செரி மான அடிக்குழாய்; குடற்கூறு.*

gynaecology: மகளிர் மருத்துவம்; பெண்நோயியல்: பெணபாலுறுப் பியல் : *பெண்களின் இனப் பெருக்க மண்டல நோய்களைப் பற்றிய ஆய்வியல்.*

gynoecomastia : ஆண்முலைப் பெருக்கம்; மார்திறள்; பாலசுரப்பி விரிவாககம் : *ஆணகளின் பாலூட் டும் சுரப்பி விரிவடைதல்.*

Gypsona: ஜிப்சோனா : *விரைவில் ஒட்டிக் கொளளக்கூடிய பாரிஸ் சாந்து ஒட்டுப் பசைமாவின வாணிகப் பெயர்.*

gypsum : களிக்கல் (ஜிப்சம்) : *மருத்துவத்தில் பயனபடுததப் படும் கட்டுக்காரைக்குரிய மூலக் கணிப்பொருள்.*

gyrectomy : மூளை மடிப்பு அறுவை மருத்துவம்: *மூளையின மடிப புச் சுருளை அகற்றுவதற்கான அறுவைச் சிகிச்சை.*

gyrus : மூளைமடிப்புச் சுருள்; மடி மேடு; மூளை மடிப்பு : *மூளையின மடிப்புச் சுருள்பகுதி.*

H

habilitation : தற்சார்பு வளர்ச்சி : ஒரு குழந்தை உடல அளவிலும், உளவியல் அளவிலும் உயர்ந்த அளவு தற்சார்பினைப் பெறுவதற்குப் படிப்படியாக வளர்ச்சியடைவதற்கான வழிமுறை.

habit : மனப்பாங்கு; பழக்கம். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில அலலது தூண்டுதலின்போது நடந்து கொளளும் பழக்கம் அல்லது உடற்பாங்கு. இது வளரும் வகை அலலது முறையினால உருவாகிறது.

habitude : உடற்பாங்கு' பழக்கம், போக்கு; மனப்பாங்கு.

habitual abortion . வாடிக்கைக் கருக்கலைப்பு; வழக்கக கருச் சிதைவு : வாடிக்கையாகக் கருச சிதைவு செய்தல்.

habituation : பழக்கப்படுத்துதல்

வழக்கப்படுத்தல்; வழக்கமாதல் : ஒரு வகை நடததை முறையைப் பழக்கமாக வளர்த்துக்கொள்ளுதல. பொதுவாக, இது எதிர்மறைப் பழககத்தையே குறிககும். எடுத்துக்காட்டாக, தூககமாத்திரை அருந்தி உறக்கங்கொள்ளுதல், போதை மருந்துப் பழக்கம் போன்றவற்றைக கூறலாம்.

haem . குருதிச் சிவப்பு : குருதிச் சிவப்புப் பொருளில் பிசிதம சேர்நத வண்ணப்பொருள்.

haemangioma : குருதிக் குழாய்க் கோளாறு : குருதிக்குழாய்களா தவறாகவளர்ச்சியடைதல். இது உடலின எந்தப் பகுதியிலும் ஏற்படலாம். தோலில் இது செம்புள்ளியாகத் தெனபடும்

haemarthrosis : மூட்டுக் குருதி; மூட்டில் குருதிக்கசிவு; குருதி மூட்டு; மூட்டுகளின குழியில் இரத்தம் சேர்ந்திருத்தல்.

haematemesis : இரத்த வாந்தி : அண்மையில உண்ட உணவு இரத்த வாந்தியாக வெளிவந்தால் அநத இரத்கம் ஒளிச்சிவப்பாக இருககும். இலலையெனில் இரைப்பை நீரின வினை காரணமாகக் காப்பித்தூள போனறு கருஞ்சிவப்பு நிறமாக இருக்கும்.

haematic : குருதிவினை மருந்து.

haematin : இரும்புச்சத்து : உலர்நத குருதியிலிருநது கிடைக்கும் பழுப்புநிற இரும்புச்சததுப் பொருள்.

haematinic . சிவப்பணு உற்பத்திப பொருள்: இரத்தச் சிவப்பணுககளும், அதன் அமைப்பான்களும் உறபததியாவதறகுத தேவையான பொருள.

haematocele : குருதிக் குழிவு : இரத்தக்குழி; இரத்த வணடம.

haematocolpos: யோனிக்குழாய்க் குருதி · பெணணில கருப்பைக குழாயில் (யோனிக் குழாய்) குருதி சேர்ந்திருத்தல்.

haematogenous : குருதி உருவாதல்.

haematology : குருதியியல் : குருதி உருவாதல், அதன் அமைப்பான்கள், அதன் பணி, குருதி நோய்கள் ஆகியவை பற்றி ஆராயும் அறிவியல்

haematoma : குருதிக்கட்டி ; இரத்தம் சேர்ந்து உண்டாகும் வீக்கம்.

haematometra: கருப்பைக் குருதி: கருப்பையில குருதி திரண்டிருத்தல். இதனை 'மாதவிடாய் திரவம்' என்றும் கூறுவர்.

haematopoiesis : யோனிக் குழாயக் குருதி; குருதி உற்பத்தி; குருதியாக்கம்.

haematosalpinx : கருக்குழாய்க் குருதி, குருதி அண்டக் குழல் : மனிதக் கரு உறுப்பிலிருந்து கரு வெளியேறும் குழாயில் உள்ள இரததம்.

haematozoa : குருதி ஒட்டுண்ணி: இரத்தததிலுள்ள ஒட்டுண்ணிகள்.

haematuria : சிறுநீர்க் குருதி, குருதிச் சிறுநீர் : சிறுநீரில் இரத தம இருத்தல.

haemochromatosis : திசு அயப் பெருக்கம் : இருமபு வளர்சிதை மாறறததில் பிறவியிலேயே ஏற் படும் கோளாறு. இதனால் திசுக்களில் இரும்புச்சத்து அதிகரிக்கிறது. இதன காரணமாகத் தோல் பழுப்பு நிறமாகிறது. ஈரலறிப்பும் உண்டாகிறது.

haemoconcentration குருதி அடர்வு; சிவப்பணுப் பெருக்கம்; குருதிச் செறிவு : இரத்தததில நிண நீா அளவைவிட இரத்தச் சிவப் பணுக்கள் அதிகமாக இருத்தல்.

haemocytometer : குருதியணு அளவைமானி : இரததத்திலுள்ள குருதியணுக்களின் எண்ணிக்கையை அளவிடுவதறகான கருவி.

haemodynamics : குருதியோட்ட இயக்கம் : உடலில் இரத்தவோட்டம் நடைபெறும் இயக்கங்கள்.

haemoglobin: குருதிச் சிவப்பணு நிறமி; குருதி நிறமி ; செந்நிறக குருதியணுவுடலியின் வண்ணப் பொருள். இது இரும்புச் சத்தினாலானது. இதில் மறிநிலை ஆக்சிஜனும் உள்ளது.

haemoglobinaemia : குருதி நிணநீர் சிவப்பணு நிறமி : குருதி நிணநீரில் குருதி சிவப்பணு நிறமிகள் இருத்தல்.

haemoglobinometer : குருதிச் சிவபபணு நிறமி மானி : இரததத்திலுள்ள குருதிச் சிவப்பணு நிறமியை அளவிடுவதற்கான கருவி.

haemoglobinopathy : குருதிச் சிவப்பணு நிறமக் கோளாறு : குருதிச் சிவப்பணு நிறமி இயல்பு மீறியதாக இருததல்.

haemoglobinuria : சிறுநீர்ச் சிவப்பணு நிறமி: சிறுநீரில் குருதிச் சிவப்பணு நிறமி இருத்தல்.

haemolysin : ஹீமோலைசின். குருதிச் சாறு இளக்கி: குருதி முறி : இரததத்திலுள்ள சிவபபணுக்களைச் சிதைவுறச் செய்யும் மருநதுு. மருந்து அல்லது நொதி.

haemolysis : குருதிச் சிவப்பணுச் சிதைவு; குருதிச் சிவப்பணு அழிப்பு; குருதிக் குலைவு : இரதத்திலுளள சிவப்பணுக்கள் சிதைந்து அதிலுள்ள குருதிச் சிவப்பணு நிறமிகள் வெளிப்படுதல்.

haemolytic disease of the new born . குழந்தை குருதிச் சோகை: குழந்தையின் இரதத்திலும், தாயின் இரத்தத்திலுமுள்ள உறைமக் கூறு மாறுபடுவதால், பிறந்த குழந்தைக்கு ஏற்படும் குருதிக்கோளாறு. இதனால், குழந்தையின் சிவப்

பணுக்கள் அழிந்து விடுகின்றன; இரத்த சோகை உண்டாகிறது; மஞ்சள் காமாலை நோயும் ஏற் படும்.

haemopericardium: குலையுறைக் குருதி; இதயச் சுற்றுப்பை குருதி; இதய உறை குருதி : *குலையுறை யில் குருதி சேர்ந்திருத்தல்.*

haemoperitoneum: வபைக் குருதி; குருதி உதரப் பை : *வயிற் றின உட்பகுதியைச் சூழ்ந்துள்ள நீரடங்கிய இரட்டைச் சவ்வுப் பை யில் (வபை) இரத்தம் சேர்ந்திருத் தல்.*

haemophilias : குருதிப் பெருக்கு; குருதி உறையாக் கேடு : *சிறுகாயத் திலிருந்தும் குருதிப் பெருக்கம் ஏற் படும் பரம்பரை நோய்.*

haemophthalmia : கண் விழிக் குருதிக் கசிவு: *கண் விழியில் இரத் தம் கசிதல்.*

haemopneumothorax : நுரை யீரல உள்வரிச் சவ்வுக் குழிக் குருதி; குருதி வளி மார்பு : *உள்வரிச் சவ் வுக் குழாயில் இரத்தமும், காற் றும் சேர்ந்திருத்தல்.*

haemopoiesis: குருதி உருவாதல்; குருதியாக்கம்.

haemoptysis : இரத்த வாந்தி; இரத்த இருமல.

haemorrhage : குருதிப் போக்கு; குருதி ஒழுக்கு : *குருதிக குழாய்களி லிருந்து இரத்தம நிற்காமல் வெளிப்படுதல்.*

haemorrhagic disease of the new born : குழந்தை குருதிப் போக்கு நோய் : *பிறந்த குழநதை களுக்கு இரபபையிலும், குடலி லும ஏற்படும் இரத்தப் போக்கு நோய்.*

haemorrhagic fever : குருதிப் போக்குக் காய்ச்சல : *கொசுவி னால் பரவும் குருதிப் போக்குக் காய்ச்சல்.*

haemorrhoidal : மூல நோய் சார்ந்த: *குதவாய்ப் பகுதியில் உண் டாகும் மூல நோய்*

haemorrhoidectomy : மூலநோய் அறுவை மருத்துவம்; மூல நீக்கம் : *மூலத்தை அறுவைச் சிகிச்சைமூலம் அகற்றுதல்.*

haemorrhoids: மூலநோய்; மூலம்: *குதவாய்ப் பகுதியிலுள்ள நாளங் களில உண்டாகும் நாளப் புடைப்பு.*

haemosiderosis : திசு அயப் படிவு : *திசுக்களில் அயச்சத்து படி தல.*

haemospermia : குருதி விந்துக் கசிவு : *விந்துடன் கலநது இரத்தம் வெளியேறுதல்.*

haemostasis : குருதித் தடை; குருதிக் கழிவுத் தடை ; *குருதி நாளததிற்குள்ளேயே குருதிதேங்கி யிருத்தல்.*

haemostat : குருதிப் போக்குத் தடைக் கருவி : *குருதிப் போக் கினை நிறுத்தும் கருவி.*

haemothorax: மார்புவளிக் குருதி, குருதி மார்பறை: நுரையீரலுறைக் குருதிமை : *மார்பு உள்வரிச சவ் வுக குழியில் இரத்தம் சேர்ந்திருத் தல்.*

hair : மயிர் (முடி) : *மனிதரின் உள்ளங்கை, உள்ளங்கால், உதடு கள், ஆணகுறி ஆகிய உறுப்புகள் நீங்கலாக தோலின எல்லாப் பகுதி களிலும் வளர்ந்திருக்கும் மயிரிழை கள்*

haldol : ஹால்டோல் : *ஹால்பெரி டோல எனற மருநதின் வாணிகப் பெயர்.*

halibut liver oil : தட்டை மீன் எண்ணெய்: *பெரிய தட்டை மீனின்*

நுரையீரலிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய். இதில் வைட்டமின் A வைட்டமின் D நிறைந்துள்ளன. 'காட்' என்னும் மீனின் நுரையீர லிலிருந்து எடுக்கப்படும் எண்ணெ யைவிட இதைக் குறைந்த அளவில் பயன்படுத்தினால் போதும்.

halitosis : ஊத்தை நாற்றம்; நாறும் மூச்சு; மூச்சு நாற்றம் : மூச்சு விடும்போது கெட்டநாற்றம் ஏற் படுதல்.

hallucination : மாயக் காட்சி (மருட்சி); மாயத் தோற்றம்; இல் பொருள் தோற்றம்; பிரமை; மாய் மை: உண்மையான புலன் தூண்டு தல் எதுவுமின்றி ஏற்படும் பொய் யான தோற்றம். இது முரண் மூளை நோய் உட்பட உளவியல் கோளாறுகளின்போது ஏற்படும்.

hallucinosis : மாயத் தோற்றப் பித்து நிலை; இல்பொருள் தோற்ற நோயாளி : நோயாளிக்கு மாயத் தோற்றங்கள் உண்டாகும் ஒரு பைத்திய நிலை. இதில் பெரும் பாலும், மாய ஒலிகளும், பொய்க் காட்சிகளும் உண்டாகும்.

hallux : குளம்பு விரல்; காற் பெரு விரல் : கால் விரல்கள் பெரிதாகக குளம்புபோல் இருத்தல். இந்த விரல்கள் மற்றப் பாதத்தை நோக்கி இருக்கும.

halo : முழந்தாழெலும்பு : வட்ட இடுப்பெலும்புத் தசைச் சுரிப்பைச் சுற்றியிருக்கும் முழந்தாழெலும்பு.

halogen: உப்பீனி (ஹேலோஜென்): புரோமின், குளோரின், ஃபுளோ ரின், அயோடின் போன்ற அலோ கத் தனிமங்களில் ஒன்று.

halo peridol: ஹாலோ பெரிடால்: முரண் மூளைநோய் போன்ற உள வியல் கோளாறுகளைக் குணப் படுத்துவதற்கான ஒருவகை மருந்து. இதனை வாய்வழி உட் கொள்ளலாம். தேவைப்பட்டால் ஊசி மூலமும் செலுத்தலாம்.

halothane : ஹாலேத்தேன் : சுவாச மயக்க மருந்தாகப் பயன் படுத்தப்படும், தெளிவான நிற மற்ற திரவம். இது தீப்பிடிக்கா தது; இதமான மணமுடையது; எரிச்சலூட்டாதது.

hammer toe: கால்விரல் கோணல்; சுத்தி விரல் : கால்விரல்களில் ஒன்று நிலையாக மேல் நோக்கி வளைந்து மடிந்திருக்கும் அங்கக் கோணல்.

கால் விரல் கோணல்

hand : கை : மனிதருக்கு இடுப்புக்கு மேலுள்ள உறுப்பு. நாற்கால் விலங்குகளுக்கு முன்னங் கால்.

handicapped: ஊனமுற்றவர்; முட மானவர் : இயல்பாக இயங்க முடி யாதபடி உறுப்புக் குறைபாடுள்ள வர்.

hangnail : நகத்தோல் : நகமடிப் பிலிருந்து ஒரு பகுதி விடுபட்டிருக கும் குறுகிய தோல் பட்டை.

harelip : பிளவு உதடு (ஒறுவாய்): பிளவு இதழ் : முயலுக்கு இருப் பதைப்போன்று பிளவுபட்ட மேல் உதடு. இது பிறவியிலேயே ஏற்படுவது.

பிளவு உதடு

Hartmann's solution: ஹார்ட்மன் கரைசல் : சோடியம் லாக் டேட், குளோரைட், பொட் டாசியம் குளோரைட், நியோமை

சின் ஆகியவை அடங்கிய ஒருவகை மின்பகுப்புக் கரைசல்.

Hashimoto's disease : ஹாஷிமோட்டோ நோய்: நடுத்தர வயதுப் பெண்களுக்குக் கேடயச் சுரப்பி (தைராய்டு) விரிவடைவதால் உண்டாகும் நோய்.

haustration: ஊனீர் சுரப்பு: பெருங்குடலில் உள்ளது போன்று ஊனீர் சுரத்தல்.

hay fever : தூசுக் காய்ச்சல்; தும்மல் காய்ச்சல்; மறி நீர்க்கோள் : தூசியினால் ஏற்படும் வேனிற்காலச் சளிக்காய்ச்சல்.

Haygarth's nodes: மூட்டுவீக்கம்: விரல் மூட்டுகளில் ஏறபடும் வீக்கம். மூட்டு வலியுடைய நோயாளிகளுக்கு இது உண்டாகும்.

heaf test: காசநோய்ச் சோதனை: ஒரு தனிவகைத் துப்பாக்கி மூலம் மேந்தோலில் பல துளைகள் இட்டு நடத்தப்படும் காசநோய்ப் பரிசோதனை. துளையிட்டதால் வீக்கம் ஏற்படுமானால், காசநோய் உள்ளது என்று அறியலாம்.

healing: குணப்படுத்துதல்; ஆறல்; நோயாளியை மீண்டும் நலம் பெறச் செய்தல். நோயாளியை இயற்கை முறையில் குணப்படுத்துதல் அல்லது திசுக்களைச் சீர்படுத்துதல்.

heal-all : சஞ்சீவி : அனைத்து நோய்களையும் குணப்படுத்தும் மருந்து.

health : உடல்நலம்; நலவாழ்வு : உடல், உள்ளம் சமூகம் அனைத்தும் முழுமையான நலத்துடன் இருப்பதேஆரோக்கியமான உடல் நலம் என்று உலகச் சுகாதார அமைவனம் கூறியுள்ளது. நோய் அல்லது ஊனம் எதுவும் இல்லாதிருப்பது மட்டும் உடல் நலம் ஆகாது. சமூக நிலையிலும், பொருளாதாரத்திலும் சுறுசுறுப்பாக இயங்கும் திறனுடன் இருப்பதே ஆரோக்கியமான வாழ்வு ஆகும்.

heart : இதயம் : உடலில் குருதி ஓட்டத்தை ஊக்குவிக்கும் உறுப்பு. இது மார்பெலும்புக்குப் பின்புறம் இரு நுரையீரல்களுக்குமிடையில் சாய்வாக அமைந்துள்ளது.

heart-lung machine : இதயம் நுரையீரல் எந்திரம்; இதய நுரையீரல் பொறி : ஆக்சிஜனேற்றிய ஒரு குழாய் நாளத்திலிருந்து இரத்தத்தை வெளியேற்றி மீண்டும் அதில் குருதியைச் செலுத்துவதற்கான ஓர் எந்திரம்.

heat exhaustion : வெப்ப மயக்கம்; வெப்பச் சோர்வு : கடும் வெப்பம் காரணமாகச் சோர்வு ஏற்பட்டு உண்டாகும் மயக்கம். அளவுக்கு மீறி வியர்வை சுரந்து உடலிலுள்ள திரவமும், உப்பும் இழக்கப்படுவதால் இது உணடாகிறது.

heat stroke : வெப்பத் தாக்குதல்; வெப்பத் தாக்கம்; வெப்ப வாதம்: வெப்ப மயக்கத்தின் இறுதி நிலை. உடல் வெப்பத்தை இழக்க இயலாதிருக்கும்போது இத்தாக்குதல் ஏற்பட்டு, மரணமும் உண்டாகலாம்

hebephrenia : உளச் சிதைவு : முரணமூளை நோயின் ஒருவகை. இதனால் பொதுவாக ஆளுமை சிதைவுறுகிறது. இது திடீரெனத் தோன்றும். பெரும்பாலும் குமரப் பருவத்தினரை இது தாக்குகிறது.

hedonism : இன்ப நாட்டம்: இன்பவியல் கோட்பாடு : அளவுக்குமீறிய இன்ப நாட்டம் கொண்டிருத்தல். இந்நாட்டம் காரணமாக ஒருவர் வெறுக்கத்தக்க நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்.

Hegar's sign : கருப்பைக் கழுத்து மென்மை : கருவுற்ற தொடக்க நிலையில், கருப்பையின் கழுத்துப்

பகுதி பெரிதும் மென்மையாக இருத்தல்.

heimlich's menoeuvre : குரல் வளைத் தடை நீக்கம் : குரல்வளை முகப்பினை அடைக்கின்ற, அயல் பொருளை (உ-ம் : உணவு) வெளிக்கொணர்வதற்கு மேற்கொள்ளப்படும் முதலுதவி நடவடிக்கை. ஹிம்லிக் முறை.

helium : ஹீலியம் (பரிதியம்): கதிரவன் மண்டலத்தில் இருப்பதாகக் கருதப்பட்ட ஒரு வாயுத் தனிமம். இது 1868இல கண்டுபிடிக்கப்பட்டது. சில சமயம் ஈளை நோயாளிகளுக்கு மருத்துவம் அளிக்க ஆக்சிஜனுடன இதனைக் கலந்து கொடுக்கப்படுகிறது.

Heller's operation: ஹெல்லர் அறுவை மருத்துவம்: உணவுக்குழாயக்கும் இரைப்பைக்குமிடையிலான சந்திப்பிலுள்ள தசைப்படலத்தைப் பிளவு செய்தல். விழுங்குவது சிரமமாக இருக்கும்போது இவ்வாறு செய்யப்படுகிறது.

helminthagogue : குடற்புழு மருந்து : குடற் புழுவை வெளிக்கொணடுவரும் மருந்து.

helminthiasis : புழுநோய்: குடற்புழுவினால் உண்டாகும் நோய். புழுவின் உடல் ஆக்கிரமிப்பு.

helminthology : குடற்புழுவியல் : ஒட்டுண்ணிக் குடறபுழுக்கள் பற்றிய ஆய்வியல்.

hemeralopia : ஒளிக்கூச்சம்; பகற் குருட்டுத்தன்மை : பிரகாசமான ஒளியில் பார்வை மங்குதல். இது இரவுக் குருட்டிலிருந்து வேறுபட்டது.

hemianopia : அரைக்குருடு; பாதிப் பார்வை : அரைப பார்வை; மங்கல்

hemiatrophy : ஒருபக்கத் தேய்வு; பகுதி உறுப்பு நலிவு; பக்கத் தேயவு : முகத்தின் ஒருபாதி நலிந்து தேய்வுறுதல். இது ஒரு பிறவிக் கோளாறு.

hemichorea : ஒருபக்க வலிப்பு : காக்கா வலிப்பு நோயின் ஒரு வகை இதில் உடலின் ஒரு பகுதி மட்டுமே வலிப்புக்குள்ளாகும்.

hemicrania : ஒருபுறத் தலைவலி; ஒற்றைத் தலைவலி; ஒருபக்கத் தலைவலி: ஒற்றைத் தலைவலி போன்ற ஒருபக்கத தலைவலி.

hemidiaphoresis : ஒருபக்க வியர்வை: உடலின் ஒரு பக்கத்தில் மட்டும் வியர்த்துக் கொட்டுதல்.

hemiglossectomy : பாதி நாக்கு அறுவை : நாக்கின் பாதிப் பகுதியை அகற்றிவிடுதல்.

Heminevrin : ஹெமிநெவ்ரின் : குளோர்மெத்தியாசெல் என்ற மருந்தின் வாணிகப்பெயர்.

hemiparesis: ஒருபுறவாதம்; பாதி உடல் தளர்வு; பாதி முகத்தளர்வு : முகத்தின் அல்லது உடலின் ஒரு பக்கத்தில் இலேசான வாதம் உண்டாதல்.

hemiplegia: ஒரு பக்கவாத நோய்; பக்கவாதம் : ஒருபுறமாகச் செயலற்ற தன்மையூட்டும் வாதநோய்.

hemispherectomy : மூளைப் பகுதி நீக்கம் : காக்காய் வலிப்புச் சிகிச்சையின்போது, மூளையின் இருபெரும் பிரிவுகளில் ஒன்றை அறுவை மருத்துவமமூலம் அகற்றுதல். இது பகுதியாகவோ முழுமையாகவோ இருக்கலாம்.

Henoch schonlein purpura : தோற்படைக் குருதிக் கசிவு : தோலினமேல் காணப்படும் கருஞ்சிவப்புப் புள்ளிகள் கொண்ட படையிலிருந்து குருதி கசிதல். குறிப்பாக, முழங்கால தண்டுகளிலும், பிட்டங்களிலும் இவ்வாறு இரத்தம் கசியும் இந்நோய்

பெரும்பாலும் குழந்தைகளைப் பாதிக்கிறது.

heparin : ஈரல் அமிலம் : ஈரல் மற்றும் நுரையீரல் திசுக்களில் உள்ள ஓர் அமிலம். இதனை நரம்புவழியாகச் செலுத்தினால், குருதிக் கட்டுத் தடுக்கப்படுகிறது, குருதியுறைவு நோய்களைக் குணப் படுத்தப் பெருமளவில் பயன்படுத் தப்படுகிறது.

hepatectomy : ஈரல் அறுவை மருத்துவம்; ஈரல்பகுதி நீக்கம்; ஈரல் எடுப்பு : ஈரலை அல்லது ஈரலின் ஒரு பகுதியைத் துண டித்து எடுத் தல்.

hepatic : கல்லீரல் மருந்து : கல்லீ ரலுககு நன்மை செயயும் ஒரு வகை மருநது.

hepatico choledochostomy : கலலீரல் - பித்தநீர்நாள இணைப்பு; ஈரலில் பித்தக் குழல் வாயமைப்பு : கல்லீரல் மற்றும பொதுவான பித்தநீர் நாளங்கள் துண்டுபட்டி ருந்தால் அவற்றை முனைக்கு முனை இணைத்தல்.

hepatitis : கல்லீரல் அழற்சி : நச்சுப் பொருள்கள் காரணமாக கல்லீரலில் ஏறபடும் வீக்கம். இதன காரணமாக, காய்ச்சலும், இரைப் பை-குடல் கோளாறுகளும், தோல் அரிப்பும் ஏற்படும.

hapatization: கல்லீரல் இறுக்கம்: நுரையீரல் போன்ற பகுதிகள கல் லீரல் போனற பொருளாக இறுகி விடும் நோய்.

hepatocirrhosis· ஈரலரிப்பு; கடின ஈரல் · ஈரல் உறுப்பின் இழைமம் இறறு இணைமங்கள் மட்டுமீறி வளர்ச்சியடையும் கோளாறு.

hepatomegaly : ஈரல் விரிவு, ஈரல் பெருக்கம்; பேரீரல்; ஈரல் வீக்கம் : ஈரல சரிவடைதல்

hepatotoxic : ஈரல் நச்சு : ஈரல் உயிரணுக்களுக்குத தீங்கு விளை விக்கும் நச்சுப்பொருள்.

hereditary : மரபுப் பண்பு, பாரம் பரிய.

heredity : மரபு வழி; பாரம்பரியம்.

hermaphrodite : இருபால் உயி ரினம்; இருபாலினவுடலி : பெண கூறும் ஆண் கூறும் ஒருங்கேயு டைய உயிரினம்.

hernia : விரிசல; குடலிறக்கம்; குடல் பிதுக்கம்: ஓர் உறுப்பு அல் லது ஓர் உறுப்பின் ஒரு பகுதிச் சுவர்ப் பகுதி விரிசல் வழி நீட்டிக் கொண்டிருத்தல். குடலின் ஒரு பகுதி, உடலின முன்புறமுளள தசை சுவரின் வலுக்குறைந்த பகுதி வழி யாக வெளித தளளப்படுதல்.

hernioplasty: குடலிறக்க அறுவை மருத்துவம்; பிதுக்க ஒட்டறுவை மருத்துவம்; குடலிறக்க திருத்த மைப்பு : குடலிறக்கத்தை அகற்று வதற்கான அறுவைச் சிகிச்சை.

herniorrhaphy : குடலிறக்க வலு வூட்டம்; பிதுக்கத் தைப்பு : குடலி றக்க நோயில, நலிவாகவுள்ள பகுதியை நோயாளியின் சொந்தத் திசுக்களைக் கொண்டு வலுப்படுத் துவதற்குச் செய்யப்படும அறுவை மருத்துவம்.

herniotome: குடலிறக்க அறுவைக் கத்தி; பிதுக்க வெட்டி : குடலிறக்க அறுவை மருத்துவங்களால் பயன் படுத்தப்படும் ஒரு தனிவகைக் கததி.

herniotomy : குடலிறக்க உட்பை அகற்றல; பிதுக்க நீக்கம : குடலி றக்க உட்பையினை அகற்றிவிட்டு அதன் உள்ளடக்கப் பொருள் களை இயல்புநிலைக்கு மீண்டும் கொணடுவருவதற்கான அறுவை மருததும்.

heroin(hern): தீவிரமருந்து:மயக்க மருந்திலிருந்து உண்டாககப்படும் ஒருவகை மருந்து மருநதடிமைப் பழக்கத்தை உணடாக்கக்கூடியது. சட்டத்தில் தடைசெய்யப்பட்டது.

herpangina : அணணக்கொப்புளம்; அக்கி நெறிப்பு : முதுகெலும் புடையவற்றின் மேல்வாயின் (அண்ணம்) பின்புறத்திலுள்ள மிக நுண்ணிய கொப்புளங்கள் மற்றும் புண்கள்.

herpes:தேமல்;படர்தாமரைதோலில் ஏறபடும் ஒருவகை வைரஸ நோய். இது ஒரு தொற்றுநோய்;பாலுறவு காரணமாகப் பெண்களுக்கு யோனிக் குழாய், பெண்குறி இதழ்கள் ஆகியவற்றில் உண்டாகும். ஆண்களுக்கு ஆண்குறியிலும் ஏற்படும்,இது இருவகைப்படும.ஒனறு சாதாரணம். மற்றொன்று, சின்னம்மைக் கிருமியால் ஏற்படுவது.

hesperidin: எலுமிச்சைப் பொருள்: பெரும்பாலான எலுமிச்சை வகைகளில உள்ள படிகம் போன்ற பொருள். இது எலுமிச்சைச்சாறு போன்று செயற்படக்கூடியது.

heterophile : பலவேறு வினைப் பொருள் : இன்னோர் இனததிற்கு எதிராகச் செயற்படக்கூடிய ஓர் இனததின் பொருள். எடுத்துக் காட்டாக, மனிதரின் காப்புமூலம் ஆட்டின் இரதத சிவப்பணுக்களுக்கு எதிராக வேலை செய்கிறது.

heterosexual : வேற்றுப்பால் கவர்ச்சி; வேற்றுப்பால புணர்; இயற்கைப் பாலிணைவுடையவர்: இயற்கையான பால் இணைவுடையவர்கள். எடுத்துக்காட்டாக,ஓா ஆண் ஒரு பெண்ணுடன் பாலுறவு கொள்ளவிழைதல்.

heterotaxy : உறுப்பு மாறாட்ட அடுக்கம.

heterozygote:வெவ்வேறு பாலணுவால் உணடாகும் உயிருரு: இரட்டைக் குழநதைகளில் வெவ்வேறு கருமுட்டையில்உருவாகும்உயிருரு.

hexachlorophane : ஹெக்சாகுளோரோஃபேன் : தோலில் கிருமி நீக்கம் செய்வதற்குப் பயன்படும் ஒருவகை மருந்து. தவறாகப் பயன்படுத்தினால் குழந்தைகளுக்கு மூளைச்சேதம் உண்டாகலாம்.

hexamine : ஹெக்சாமின் : சிறுநீர்க்குழாய் அறுவை மருந்துக்கு முன்பு பயன்படுத்தப்படும் நோய் நுண்மத்தடை மருந்து.

hexobarbitone : ஹெக்சோபார்பிட்டோன் : ஒருவகைத் தூக்க மருந்து.

hexopal : ஹெக்சோப்பால் : இன்னோசிட்டால் நிக்கோட்டினேட் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

hexylresorcinol : ஹெக்சில் ரிசோர்சினால் : கீரைப்பூச்சி, வட்டப்பூச்சி, கொக்கிப்புழு, குடற்புழு ஆகியவற்றுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் மருந்து.

Hibb's operation: ஹிப் அறுவை மருத்துவம் : முதுகந்தண்டுக் காச நோயினையொட்டி, முதுகந்தண்டுக் கூட்டிணைவு செய்வதறகான அறுவை மருத்துவம்.

Hibiscrub: ஹிபிஸ்கிரப் : அறுவை மருத்துவத்துக்கு முன்னர் கழுவுவதற்காகப் பயன்படுத்தப்படும் மருநதின் வாணிகப் பெயா இது, 4% சவர்க்காரக் கரைசலில் கலந்த குளோர்ஹெக்சிடின் குளுக்கோனேட் ஆகும்.

Hibitane : ஹிபிட்டேன் குளோர் ஹெகசிடின என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

hiccough : விக்கல் : குரல்வளை முகப்பு திடீரென அடைத்துக் கொள்வதால், சுவாச உறுப்பு

களில் விக்கல் ஒலியுடன் தன்னை யறியாமல் ஏற்படும் துடிப்பு.

hidrosis: வியர்வைச் சுரப்பு;வியர்த்தல்.

hilum : உள்வாய்ப் பள்ளம்: நாடி நரம்புக் குழாய்கள் உறுப்பினுள் நுழையும் உள்வாய்ப் பள்ளம்.

hip bone: இடுப்பெலும்பு : இடுப்புச் சந்து எலும்பு.

hip disease: இடுப்பு நோய்: இடுப்புச சந்தில்காளான் வகை வளர்ச்சியினால் ஏற்படும் கோளாறு.

Hippocrates : ஹிப்பாக்கிரேட்டிஸ : புகழ் பெற்ற கிரேக்க மருத்வர்; தத்துவஞானி. தாம் பிறந்த ஊரான காஸ் என்னுமிடத்தில ஒரு மருத்துவப்பள்ளியை நிறுவினார். "மருததுவத்தின் தந்தை" எனப் போற்றப்படுபவர்.

hirsuties; hirsutism: மயிரடர்த்தி; மயிர் மிகைப்பு; மிகைமுடி: உடலில் மயிர் காணப்படும் பகுதிகளில் அளவுக்கு மீறி மயிர் அடர்ந்து வளர்தல்.

hirudin : ஹிருடின் : குருதி உறிஞ்சும் உயிரினமாகிய அட்டையிலிருந்து சுரக்கும் ஒரு பொருள். இது குருதிக் கட்டைத் தடுக்கப் பயன்படுகிறது.

Hirudoid : ஹிருடாய்ட்: தோலின் மேல்நோய்களுக்குப் பயன்படுத்தப் படும் மருந்தின வாணிகப் பெயர்

histidine : ஹிஸ்டிடின் : இரத்தச் சிவப்பணுக்களில் பரவலாக அமைந்துள்ள இன்றியமையாத அமினோ அமிலங்களில் ஒன்று.

histology : திசுவியல்; உயிர்தசையியல்; நுண்உடற் கூறியியல் : உயிர்த்திசுக்கள் பற்றிய நுண்ணாய்வியல்.

histolysis : திசுச்சிதைவு; திசுமுறிவு : கரிமத் திசுக்கள் சிதைவுறுதல.

histones : ஹிஸ்டோன் : உயர் உயிரிகளின் இனக்கீற்று டிஎன்ஏயுடன் நெருங்கிய தொடர்புடைய ஒரு தனிவகைப் புரதம்.

HIV: எச்ஐவி (மனிதநோய்த்தடைக் காப்புக் குறைபாட்டு நோய்க்கிருமி) "எய்ட்ஸ்" எனப்படும் ஏமக் குறைவு நோய்க்கு மூலகாரண மான நோய்க்கிருமி.

hives: தோல்வீக்கம்;தோல் அரிப்பு: படைநோய்; குடல்வீக்கம்;தொண்டை அழற்சி.

hobnail liver : திரள் ஈரல்; ஈரல் கரணை : ஈரலறிப்பு நோயில் காணப்படும் திண்மையான ஈரல்.

Hodgkin's disease : ஹாட்ஜ்கின். நோய்: நிணநீாக்கரணைகள் படிப் படியாக விரிவடைகிற,கேடுவிளை விக்கக்கூடிய கட்டி.

Hogben test : ஹாக்பென் சோதனை (கருச்சோதனை): பெண் கருவுற்றிருக்கிறாளா என்பதை அறிய நடத்தப்படும் சோதனை. கருவுற்றிருப்பதாகக் கருதப்படும் பெண்ணின் அதிகாலைச் சிறு நீரை, ஒரு பெண்தேரைக்கு ஊசி மூலம் செலுத்தப்படும். பெண் கருவுற்றிருந்தால் அந்தத்தேரை, 2-24 மணி நேரத்தில் முட்டையிடும்.இச்சோதனை 99% துல்லியமானது.

Homans' sign : ஹோமன் நோய்க்குறி : கால்விரல் வளைவு காரணமாக, பினகால் தசைப்பகுதியில் வலி ஏற்படுதல்.

homeopathy : இனமுறை மருத்துவம் (ஹோமியோபதி) : நோயக கூற்றுப் பெருக்கத்தால் நோய் நீக்கும் முறை. இதனை ஜெர்மன மருத்துவ அறிஞர் ஹானிமன் கண்டுபிடித்தார். நோயினால் உண்டாகும் அதே அறிகுறிகளை உண்டாக்கும் மருந்துகளை நோயாளிகளுக்குச் சிறிதளவு

கொடுத்து அதன் மூலம் நோய் நீக்கும் மருத்துவ முறை. எடுத்துக் காட்டாக வேனற்கட்டியை உண்டாக்கும் ஒரு மருந்தினை உடலில் செலுத்துவதன் மூலம் வேனற கட்டியைக் குணமாக்கல்.

homeostasis : சமநிலைபேணல்; நீர்ச் சமநிலை; உட்சீர்மை: குருதி அழுத்தம், உடல் வெப்பம், மின்னழுத்தம் போன்ற இயக்கங்கள் சீராக நடைபெறுமாறு செய்தல்.

homicide : மனிதக் கொலை; கொலை : ஒருவர் மற்றொருவரைக் கொலை செய்தல். ஒருவர் மற்றவரை வேண்டுமென்றே உட்கருத்துடன் கொன்றால், அது குற்றமுறு கொலைச் செயலாகும்; தற்செயலாக மரணம் விளைவித்தால், அது தற்செயல் கொலைச் செயலாகும்.

homocystinuria : சிறுநீர்க் கந்தகம் : சிறுநீரில் அமினோ அமிலம் அடங்கிய 'ஹோமேசிஸ்டைன்' என்ற கந்தகம் அடங்கியிருத்தல். இது பிறவியிலேயே மரபாக உண்டாகும் வளர்சிதை மாற்றப் பிழையாகும். இதனால் மனவளர்ச்சி குன்றுதல், கண்வில்லை இடம் மாறுதல், எலும்புகள் அளவுக்கு மீறி வளர்ச்சியடைதல் போன்ற கோளாறுகள் ஏற்படும். குழந்தைகளுக்கு மரணம் விளையலாம்.

homogeneous : ஒரு சீரான; ஒரே படித்தான; ஓரின : உறுப்புகள் அனைத்தும் ஒரே மாதிரியாக அமைந்திருத்தல். எங்கணும ஒரே மாதிரியான தனமை கொணட.

homogenize : ஒரு படித் தாக்கம்· ஒரே சீராக்கு; ஒரு படிததாக இருக்கும்படி செய்தல். பாலில் உள்ள கொழுப்பு அணுக்களை உடைத்து அதனை நன்றாகச் செரிக்கத் தக்கதாகச் செய்தல்.

homogeny: ஒரு படித்தான நிலை: ஒரே மூலத்திலிருந்தும் தோன்றிய தனால் ஏற்படும் ஒரு படித்தான நிலை.

homologous : ஒத்திசைவு; ஒத்தமைப்பு; பண்பொத்த: உடனொத்த தொடர்புடைய; உயிரணுக்கள் பிளவுபடும்போதும் ஒவ்வொரு பிரிவும் கட்டமைப்புடன இருத்தல்.

homosexual: ஒருபால் புணர்; ஓரினச் சேர்க்கையாளர்; ஒரு பாலின விருப்பு; ஒரு பாலினம் : தன்னையொத்த பாலினத்தவர் மீதே பாலின விருப்புடையவர்.

homosexuality : ஓரினச் சேர்க்கை; ஓரின விழைவு : தன்னொதத பாலினத்தவர் மீதே பாலின விரும்பமுடனிருக்கும் மனப்பாங்கு

homotransplant : மாற்று உறுப்பு இணைப்பு; ஓரின உறுப்பு மாற்றம் : ஒரே இனததைச் சேர்ந்த, ஒப்புடையதல்லாத உறுப்பினர்களிடமிருந்து உறுப்புகளை அல்லது திசுக்களைப் பொருத்துதல்.

homotype : ஒத்த உறுப்பு : உடனொத்த அமைப்புடைய உறுப்பு.

homozygote: இரட்டைப் பிறப்பில் ஒரே இணைவு: கருமுட்டைஒததஇரு பாலணுக்களாகபிரிந்துகருவுறுதல்.

hormone : இயக்குநீர் (ஹார்மோன்) : குருதியில் கலந்து உறுப்புகளைச் செயறபடத் தூணடும் உட்சுரப்பு நீர்.

Horton syndrome : கடுந் தலைவலி : உடலில் ஹிஸ்டாமின் சுரத்தல் காரணமாக ஏற்படும் கடுமையான தலைவலி. இது ஒற்றைத் தலைவலியிலிருந்து வேறுபட்டது.

host : ஒட்டுண்ணித் தாய் உயிர்; ஊட்டுயிர் : ஒட்டுண்ணி உயிர்களுக்கு ஆதாரமாக உளள தாய்ப் பிராணிகள். விருந்தோம்பும் உயிர்.

hot dog headache : சூட்டுத் தலைவலி : உணவு உண்டபின் சோடியம் நைட்ரேட் அதிகமாவ தால் உண்டாகும் சூட்டுத் தலை வலி.

hourglass contraction: நாழிகை வட்டில் சுருக்கம் : இரைப்பை, கருப்பை போன்ற உட்புழையுள்ள உறுப்புகளின் மத்தியில் வடு ஏற் பட்டு அதனை இருபகுதிகளாகப் பிரிக்கும் மணல் நாழிகை வட்டில் போன்ற வட்டவடிவமான சுருக் கம்.

HSV : எச் எஸ் வி: படர் தாமரை எனனும் தோல் நோயை (தேமல்) உண்டாக்கும நோய்க் கிருமி.

human chorionic gonado trophin (HCG) : நச்சுக்கொடி இயக்குநீர்: நச்சுக் கொடியிலிருந்து சுரக்கும் இயக்குநீர். சிலசமயம் பெண் மலடு நீக்கக் கொடுக்கப்படு கிறது.

human T-cell lymphotropic viruses (HTLV) : மனித T-உயி ரணு நிணநீர்க் கிருமிகள் : மனித ருககு வெண்குட்டம் உண்டாக் கும் நோய்க்கிருமி. இது 'எய்ட்ஸ்' எனனும் ஏமக்குறைவு நோய்க்கும் காரணமாகிறது.

humerus : கைமேலெலும்பு; மேற் கையெலும்பு; புய எலும்பு : மனித உடலில கையின் மேற்புறமுள்ள எலும்பு.

humor : தாது நீர் : உடம்பின் தாதுக்களைச் சார்ந்த நீர்.

humoralisim : உடல் நீரியல் கோட்பாடு : உடலின் நீரியல் தாதுப் பொருள்களின் நிலைகளி னாலேயே நோய்கள் தோன்றுகின் றன என்னும் கோட்பாடு.

Humullin : ஹியூமுல்லின் : மனி தக் கணையச் சுரப்பு நீர்த் (இன்சு லின்) தயாரிப்பின் வாணிகப் பெயர். இதில் விலங்குக் கணையச் சுரப்பு நீரோ, கணைய மாசுபாடு களோ இருப்பதில்லை.

hunger : பசி; உணவு வேட்கை : பொதுவாக உணவை உணபதற் கான விருப்பம். பசியினால் இரைப்பையில் வலி உண்டாகும். உணவுஉண்டதும் வலிநீங்கிவிடும் முன் சிறுகுடலில் புண் ஏற்படுவ தால் இந்த வலி உண்டாகிறது.

Hutchinson's teeth : உளிப்பல் அகற்சி : மேல் உளிப் பல்லின எதிற்று முனையான வெட்டு முனையைவிட அகன்று இருக்கும் கோளாறு.

உளிபபல் அகறசி

Hyalase : ஹையாலேஸ் : ஹையா லூரோனிடேஸ் எனனும் மருந் தின் வாணிகப் பெயர்.

hyaline· படிகநிறப்பரப்பு; ஒளிபுகும் பளிங்கு தெள்ளி: இணைப்புத திசுக்கள் சிதைவுற்று, கண்ணாடி போன்று ஒளி ஊடுருவும் தன்மை யுடையதாகுதல்.

hyalitis : கண்படல அழற்சி; விழி நீர்ம அழற்சி : கணணின மேற்பட லத்தில் ஏற்படும் வீக்கம்.

hyaloid : கண்ணாடிப் படலம் : கண்ணின் கண்ணாடித்தாள் போன்ற புறப்படலம்.

hyaloid membrane : கண்மேற் படலம்.

Hycal : ஹைக்கால் : சிவப்பு நிற மான நறுமணமுள்ள, புரதமற்ற திரவ மருந்தின் வாணிகப் பெயர்.

hydatid cyst : நாடாப்புழு நீர்க் கட்டி: நாடாப்புழுவின் முட்டைப் புழுவினால் உண்டாகும் நீர்க்கட்டி.

நாய், ஆடு ஆகியவற்றிலிருந்து இது மனிதருக்குத் தொற்றுகிறது. இதனை அறுவை மருத்துவம் மூலம் அகற்றலாம்.

hydatidiform : கோப்பீர்த்தேக்கம் நீர்க்குமிழ் வடிவ : இழைக்கச்சைப் புழுவினாலாகி அதனை உட் கொண்ட நோய் நீர்த்தேக்கப் பை.

hydraemia: குருதிநீர் மிகுதி; குருதி நீர் மிகைப்பு : இரத்தத்தில் உயி ரணு அளவைவிட நிணநீர் அளவு அதிகமாக இருத்தல். நிறைமாதக் கர்ப்பத்தின்போது இந்நிலை இருக்கலாம்.

hydrallazine : ஹைட்ராலாசின் : இரத்த அழுத்தத்தைக் குறைக்கக் கூடிய செயற்கைக் கூட்டுப்பொரு ளின வாணிகப் பெயர்.

hydraminios: கருத்திரவ மிகைச் சுரப்பு; நீர்ச்சூலை; பனிக்குடநீர் மிகைப்பு; நீர் பனிக்குடம் : கருத் திரவம் அளவுக்கு அதிகமாகச் சுரத்தல்.

hydrargaphen : ஹைட்ரார்கா ஃபென் : சீழ் உண்டாகும் நுண்ணு யிரிகளுக்கு எதிராகப் பயனபடுத் தப்படும் ஒரு பாதரசப் பொருள். இது பாலேடு, தூள், திரவ வடிவில் கிடைக்கிறது.

hydrarthrosis: எலும்பு உயவு நீர்; நீர்ம மிகை மூட்டு; நீர் மூட்டு : எலும்பு மூட்டிணைப்பினுள் கசிவு றும் ஒருவகை உயவுநீர். இது இளம்பெண்களிடம தோனறி சில நாட்கள் இருந்துவிட்டு, மர்மமாக மறைந்துவிடும்.

hydrate : ஹைட்ரேட்; நீரேறிய : தனிமததுடன அல்லது மற்றொரு சேர்மததுடன் நீர் இணைந்த சேமப்பொருள.

Hydrenox : ஹைட்ரினாக்ஸ்: ஹைடராஃபளூ மெத்தியாசிட் என்ற மருந்தின் வாணிகப் பொருள்.

hydro : நீர் மருத்துவமனை : நீர் மருத்துவ முறையினைப் பின் பற்றும மருந்தகம்.

hydroa . தோல் அழற்சி : வெப்ப மண்டலப்பகுதிகளில் வெயில்படும் தோல் பகுதிகளில் ஏற்படும் அழற்சி நோய். இது குழந்தை களுக்கு அதிகம் உண்டாகும்.

hydrocele : ஓதம்; நீர்ம விரை வீக்கம்; நீரணடம்: மனித விரைப் பையில் நீர்க்கோர்ப்பதால் உண டாகும் வீக்கம்.

hydrocephalus : மூளை நீர்க் கோவை; மூளை நீர்மிகைப்பு; நீர் கபாலம்; தலைநீர் தேக்க நோய் : தலையில்நீா தங்குவதால் ஏற்படும் கோளாறு. மண்டையோட்டினுள் மூளைத் தண்டுவடநீர் அளவுக்கு அதிகமாகத் தங்குவதால் இது உணடாகிறது.

hydrochloric acid : ஹைட்ரோ குளோரிக் அமிலம் : இரைப்பை உயிரணுக்களில சுரக்கும அமிலம். 0 2% வலிவுள்ள அமிலமாகக் கலந்துள்ளது.

hydrochlorothiazide : ஹைட் ரோகுளோரோதையாசிட் : சிறுநீர்க் கழிவினைத் தூண்டும் மருந்து.

hydrocyanic acid : ஹைட்ரோ சயனிக் அமிலம் : இதனை நீர்சய னிக் அமிலம் எனறும் கூறுவர். இது 2% நீர்த்த அமிலம் இது வயிற்றுவலி அகற்றும் மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. இதனை அதிக அளவில் உட்கொண்டாலும் ஆவியை உறிஞ்சினாலும் ஆபத்து ஏற்படும. மரணமும விளையக் கூடும.

hydrogen : ஹைட்ரஜன் (நீர்வாயு) நீர்வளி: நிறமற்ற, மணமற்ற எளி தில தீப்பற்றக்கூடிய வாயு. இது எடை மானத்தில் மிகக்குறைந்த தனிமம். இது, நீரில் மூன்றில் இரண்டு பங்கு அடங்கியுள்ளது.

hydrogen bomb : **நீர்வாயுக் குண்டு :** நீரகக் சேர்மம் செறியப் பெற்று உள்ளமைந்த அணு குண் டினால் ஹைட்ரஜன் கதிரகமாக மாற்றப்படுவதன் மூலம் பெரு விசையாற்றலை வெளிப்படுத்தும குணடுவகை.

hydrolysis : **நீரால் பகுத்தல் :** நீர் இயல்பின் துணைகொண்டு நீர்கலந்த சேர்மத்தில் நீர்க்கூறு சேர்மக் கூறுகள் சிதைவுற்றுக் கூறுபடும் நிலை.

hydromania: **நீர்ப் பேரார்வம்.**

hydrometer : **நீர்ம எடைமானி :** நீரம எடைமான ஒப்பீட்டள வைக் காட்டும் கருவி.

hydropathic: **நீர் மருத்துவமனை :** நீர் மருத்துவ முறைக்குரிய தனி வசதிகளையுடைய மருந்தகம்.

hydropathy: **நீர் மருத்துவமுறை :** அகப்புற நிலைகளில் நீரைப் பயன் படுத்தி நோய் குணப்படுத்தும் மருத்துவமுறை.

hydropericarditis : **குலையுறை அழற்சி :** நெஞ்சுப்பையை மூடிக் கொண்டிருககும சவ்வு வீங்கி, நீர் வழிதல்.

hydropericardium : **குலையுறை நீர்; நீர் இதயப் பை :** குலையுறை யில் வீக்கமில்லாமலே திரவம் சேர்ந் திருத்தல். இது இதயமும் சிறுநீரக மும் செயலிழக்கும்போது உண டாகும்,

hydrophobia : **நீர்வெறுப்பு; நீர் அச்சம்; நீர்மருட்சி :** வெறிநாய்க கடி காரணமாக உண் டாகும் தொண்டைத் தசை இறுக்கம்.

hydrophylic: **நீர் வேட்கை·** அள வுக்கு மீறி நீர் அருநதும் விருப்பு உண்டாதல்.

hydropic: **நீர்கோவைக் கோளாறு.**

hydropneumopericardium : **குலையுறைக் காற்று:** இதயத்தைச் சுற்றியுள்ள குலையுறைச் சவ்வில் காற்றும்,நீர்மமும் சேர்ந்திருத்தல்.

hydro penumoperitoneum : **வபை வாயு:** அடிவயிற்று உட்பகுதி யைச் சூழ்ந்துள்ள நீரடங்கிய இரட்டைச் சவ்வுப் பையில்(வபை) நீர்மமும் வாயுவும் சேர்ந்திருத்தல்.

hydropneumothorax : **மார்புக் குழித் திரவம்; நீர்வளி மார்பகம் :** மார்புவரிக்குழியில திரவம் கசிந்து நெஞ்சுக் கூட்டில் ஏற்படும் கோளாறு.

hydrops : **இழைம அழற்சி; நீர்க் கட்டு; நீர்க்கோவை :** இழைமங் களின் நீர்க்கோவை.

hydropsy : **மகோதரம் :** நீர்க் கோவை நோய்.

hydrosalpinx : **கருக்குழாய் விரிவாக்கம்; நீர்அண்டக்குழல் :** மனிதக் கருப்பையிலிருந்து கரு வெளியேறும குழாய்நீர் கோர்த்து உண்டாகும் விரிவாக்கம்.

hydrosaluric : **ஹைட்ரோசலூ ரிக் :** ஹைட்ரோகுளோரோத்தியா சைட் என்ற மருந்தின் வாணிகப் பெயர்

hydrotherapy: **நீர்மருத்துவமுறை; குளியல் மருத்துவம் நீர்மருத்துவம் :** அகப்புற நிலைகளில் நீரைப் பயன் படுத்தி நோயைக் குணப்படுததும மருத்துவமுறை.

hydrothorax: **மார்புநீர்க் கோவை; நீர்மார்பகம்:** மார்புவரி உட்பள் ளத்தில் ஏற்படும் நீர்க் கோவை நோய்.

hydroxycobalamin : **ஹைட்ராக்சி கோபாலமின் :** வைட்டமின் B_{12} என்ற ஊசிமருந்தின் வாணி கப் பெயர்.

hydroxybutyrate dehydrogenase : **ஹைட்ராக்சிபூட்ரேட் (டிஹைட்ரோஜினேஸ) :** நிண இயக்குநீர் (என்சைம்). இது நெஞ்

சுப்பைத் தசைப்பகுதி வீக்கத்தைக் குறிக்கும்.

hydroxyl : ஹைட்ராக்சில் : ஒற்றை இணைதிறனுள்ள அயனி. (OH). இதில் ஓர் ஆக்சிஜன் அணுவுடன் இணைந்துள்ள ஒரு ஹைட்ரஜன் அணு அடங்கியிருக்கும்.

hydroxy progesterone caproate : ஹைட்ராக்சிபுரோஜெஸ்டிரான் காப்ரோயேட் : அடிக்கடிக் கருச்சிதைவு ஏற்படுவதைத் தடுக்கத் தசையில் ஊசிவழி செலுத்தப்படும் மருந்து.

hydroxyurea. ஹைட்ராக்சியூரியா· வெண்குட்டத்திற்கு வாய்வழி கொடுக்கப்படும் ஒரு கூட்டுப் பொருள்.

hydroxyzine : ஹைட்ரோக்சிசின் : குமட்டல், வாந்தி ஆகியவற்றை நிறுத்தப் பயன்படும் மருந்து.

hygiene : உடல்நல இயல்; தூய்மை; துப்புரவு : உடல நலம பேணுவது பற்றிய அறிவியல்.

hygraphen : ஹைக்ரா:.பென் · தலைமுடி சார்ந்த கோளாறுகளுக்குப் பயன்படுத்தப்படும் மருந்தின் வாணிகப் பெயர்.

hygroma: கழுத்து நீர்க்கட்டி; நீர்மக் கட்டி : பிறவியிலேயே கழுததில் அமைந்திருக்கும் நீர்மம் அடங்கிய வீங்கிய கட்டி.

hygrometer : ஈரமானி: ஈரநிலையை அளவிடும் கருவி

hygrometry : ஈரக்கணிப்பு · ஈரநிலையை அளவிடும் கணிப்பு.

hydroscope: ஈரங்காட்டி: காற்று மண்டலத்தில் ஈரநிலை காண உதவும் கருவி.

hygroscopic : ஈரம் உறிஞ்சி; நீரம உறிஞ்சி; ஈரமீர்க்கும்; ஈரம் ஏற்பி · காறறு மண்டலத்திலுள்ள ஈரததை எளிதாக உறிஞ்சுகிற பொருள. எடுத்துக்காட்டு: கிளிசரின்.

Hygroton : ஹைக்ரோட்டோன் : குளோரோத்தாலிடோன் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

hymen : கன்னிமைத் திரைச் சவ்வு கன்னிச் சவ்வு : முதிரா இளமைப் பருவத்தில் பெண் குறியின் புற வாயை மூடியுள்ள தாள்போன்ற சவ்வு.

hymenectomy : கன்னிச் சவ்வு; அறுவை மருத்துவம் : கன்னிமைத் திரைச் சவவினை அறுவை மருத்துவம் மூலம் கீறி விடுதல்.

hyoid : நாவடி எலும்பு; கவை எலும்பு : நாக்கின் வேர்ப்பகுதியில் உள்ள 'U' வடிவில் வளைந்த எலும்பு.

hyoscine : நச்சுச் செடிக்காரம் : நச்சுச் செடி வகையிலிருந்து எடுக்கப்பட்டு மருந்தாகப் பயன்படும ஒரு காரப் பொருள்.

hyperacidity : மீமிகு அமிலத் தன்மை; அமில மிகைப்பு; அமிலப் பெருக்கம் : அளவுக்குமீறிய அமிலத் தன்மை

hyperaemia : மீமிகு குருதிப் பாய்வு; குருதித் திரட்சி; மிகைக் குருதி; குருதிப் பெருக்கம் : உடலின ஒருபகுதியில் அளவுக்குமீறி குருதி பாய்தல்.

hyperaesthesia : மட்டற்ற கூருணர்வு நிலை; அதியுணர்வு : அளவுக்கு மீறிய கூர்நரமபுணர்ச்சிக் கோளாறு.

hyperalgesia . மட்டற்ற வலியுணர்வு; மிகைத்த வலியுணாவு, அதிவலி வலியை அளவுக்குமீறி உணரும திறனுடனிருத்தல்.

hyperalimentation : மட்டற்ற ஊட்டம் : அளவுக்குமீறி உணவு ஊட்டி வளர்த்தல்

hyperbaric oxygen treatment: அதி அழுத்த ஆக்சிஜன் மருத்துவம்: காாபன மானாக்சைடு வாயு நச்சி

னால் பாதிக்கப்பட்ட நோயாளி களை அழுத்தமூட்டிய ஆக்சிஜன் அடங்கிய ஒரு நீள் உருளைக்குள் செலுத்திச் சுவாசம் சீராக நடை பெறுவதற்குச் செய்யப்படும் சிகிச்சை.

hyperbilirubinaemia : மட்டற்ற பிலிரூபின் : *இரத்தத்தில் அளவுக்கு மீறி பிலிரூபின் இருத்தல். இதன் அளவு 100மி.லிட்டருக்கு 1-1-5மி. கிராம் அளவைவிட அதிகமாக இருக்குமாயின் அது மஞ்சள் காமாலை நோய் இருப்பதைக் குறிக்கும்.*

hypercalcaemia : மட்டற்ற கால் சியம்; அதி கால்சியக் குருதி : *குருதி யில் அளவுக்குமீறி கால்சியம் இருத்தல். இதனால், பசியின்மை, அடிவயிற்றில் வலி, தசைவலி, உடல் நலிவு உண்டாகிறது.*

hypercalciuria : மட்டுமீறிய சிறு நீர் கால்சியம் ; அதி கால்சிய நீரி ழிவு : *சிறுநீரில் அளவுக்குமீறி கால் சியம் இருத்தல். இது எலும்பு கால்சிய கசிவின் காரணமாக ஏற் படுகிறது*

hypercapnia: குருதியில் மட்டற்ற கார்பன்டையாக்சைடு; அதி கரியம்: *தமனி இரத்தத்தில கார்பன்டை யாக்சைடு* (CO_2) *அளவுக்குமீறி அதிகமாக இருத்தல்.*

hypercatabolism : மட்டற்ற உயிர்ப் பொருள் சிதைபாடு: *உடலி னுள் சிக்கலான பொருள்கள் அள வுக்குமீறிச் சிதைந்து எளிய பொருள்களாக மாறுதல்.*

hyperchloraemia : மட்டற்ற குளோரைடு குருதி ; *இரத்தத்தில் அளவுக்குமீறி குளோரைடு இருக் தல்.*

hyperchlorhydria : மட்டற்ற ஹைடிரோகுளோரிக அமிலம்; அமில மிகைப்பு : *இரைப்பை நீரில் அளவுக்கு அதிகமாக ஹைட்ரோ குளோரிக் அமிலம் இருத்தல்,*

hyper electrolytaemia : நீர் வெளியேற்றம் : *நிணநீர் அடங்கிய சோடியம் மற்றும் குளோரைடு அளவு அதிகமாகி, நீர் மிகுதி யாக வெளியேறுதல்.*

hyperemesis: மிகை வாந்தி; அதி வாந்தி : *கருவுற்ற பெண்கள் அளவுக்கு அதிகமாக வாந்தி எடுத்தல்.*

hyper extension : மிகை நீட்சி; அதிநீட்டம் :

hyper flexion : மிகை வளைவு; மிகை மடங்கு; அதிமடக்கம் : *உறுப்பு அளவுக்கு மீறி வளைந் திருத்தல்.*

hyperglycaemia : குருதியில் மிகைச் சர்க்கரை; அதி சர்க்கரைக் குருதி : *குருதியில் சர்க்கரை அளவுக்கு அதிகமாக இருத்தல். இது நீரிழிவு நோயைக் குறிக்கும்.*

hyperglycinaemia : மிகைக் கிளைசின் : *நிணநீரில் அளவுக்கு மிகுதியாக கிளைசின் இருத்தல். இதனால், இரத்தத்தில் அளவுக்கு அதிகமாக அமிலம் உண்டாகும், மனவளர்ச்சியும் குன்றும்.*

hyperhidrosis : மிகை வியர்வை; வியர்வை மிகைப்பு : *உள்ளங்கை களில் வியர்வை அளவுக்கு அதிக மாகச் சுரத்தல்.*

hyperinsulinism :மிகைக கணைய இயக்கு நீர்ச் சுரப்பு; இன்சுலின் மிகைபபு : *கணையத்தில் அளவுக்கு அதிகமாகக் இயக்கு நீர் சுரந்து, இரத்தத்தில் சர்க்கரை அளவு குறைவதாலும், இயககு நீரை (இன்சுலின்) அளவுக்கு அதிக மாகக் கொடுப்பதாலும் விட்டு விட்டு அல்லது தொடர்ச்சியாக, வலிப்புடனோ, வலிப்பு இல்லாம லோ மயக்கம் உணடாதல்.*

hyperinvolution : மிகை உட் சுருளவு : *மகப் பேற்றுக்குப் பிறகு கருப்பை இயல்பு அளவுக்குக் குறைவாக உட்சுருளாக இருத்தல்.*

hyperkalaemia : மிகைப்பொட்டாசியம் : குருதியில் அளவுக்கு மிகுதியாகப் பொட்டாசியம் இருத்தல். இதனால் குமட்டல், வயிற்றுப் போக்கு, தசை நலிவு உண்டாகும்.

hyperkeratosis : மிகைப் பொருமல் : மிகை ஊட்டத்தினால் ஏற படும் உறுப்புப் பொருமல்.

hyperkinesis : மிகை இயக்கம்; அதிசலனம் .

hyper kinetic syndrome : மிகை இயக்க நோய்: பெரும்பாலும் 2-4 வயதுக் குழந்தைகளுக்கு ஏற் படும் நோய் இநநோய் கணட குழந்தைகளுக்கு மனவளர்ச்சி மெதுவாக நடைபெறும்.அளவுக்கு மீறிய முரட்டுததனம் ஏற்படும். அச்சமின்மையும், எந்தத் தண்ட னையும், அஞ்சாத போக்கும் காணப்படும்.

hyperlipaemia: மிகைக்கொழுப்பு· இரத்தத்தில் அளவுக்கு அதிக மாகக் கொழுப்பு இருத்தல்·

hypermagnesaemia : மிகை மக்னீசியம் : குருதியில் அளவுக்கு மீறி மக்னீசியம்இருத்தல்.இதனால் சிறுநீரகச்செயலிழப்புஉண்டாகும். அதிக அளவு மக்னீசியம் அடங் கிய வயிற்றுப் புளிப்பகற்றும் மருந்தினை உட்கொள்வதாலும் இது உணடாகும்.

hypermetabolism : மிகை வளர் சிதை மாற்றம் : உடலில் அளவுக்கு அதிகமாக வெப்பம் உண்டாதல.

hypermetropia : தொலைப் பாாவைக் கோளாறு; தூரப்பார்வை: கண தவறான இடத்தில் அமைந திருப்பதால் ஏற்படும் கோளாறு. இதனால், ஒளிக்கதிர்கள், விழித திரையின் மேல் விழுவதற்குப் பதி லாக, அதற்கு அப்பால விழுகின றன.

hypermobility . மிகை அசைவு; அதியசைவு : அளவுக்கு மீறி இயக் கத் தன்மையுடனிருத்தல்.

hypernatraemia : மிகை சோடி யம்; குருதி உப்பு மிகைப்பு : அள வுக்கு மீறி நீர்வெளியேறுவதால் இரத்தத்தில் அளவுக்கு அதிகமாக சோடியம் இருததல.

hyperonychia : மிகை நகம்; அதி நகம் : நகங்கள் அளவுக்கு அதிக மாக வளர்தல்.

hyperosmolar diabetic coma : மிகை நீரிழிவு மயக்கம் : குருதியில் மிகஉயர்ந்த அளவுக்கு சர்க்கரை அதிகரிப்பதால் உண்டாகும் இயல்பு கடந்த, எல்லா உணர்ச்சி களும் இழந்த முழு மயக்கநிலை.

hyperoxaluria · மிகைக் கால் சியம் ஆக்சாலூரியா : சிறுநீரில் அளவுக்கு மிகுதியாகக் கால்சியம் ஆக்சாலேட் இருத்தல்

hyper peristalsis · மிகைத் தசைச் சுருக்கம்; அதியளவு : உணவு சாரம் எளிதில் செல்வதற்கு இசை வான தானியங்கிக் குடல் தசை களின் சுருக்கு அலைகள் மிகுதி யாக இருத்தல்.

hyperphagia : பெருந்தீனி; அதி யுணவு : அளவுக்கு அதிகமாக உண்ணுதல்.

hyperphosphataemia : மிகை ஃபாஸ்ஃபேட் குருதி : இரத்தத்தில் ஃபாஸ்ஃபேட்டுகள் மிகுதியாக இருத்தல்.

hyper pigmentation· மிகை நிறமி யாககம்; அதி நிறமேற்றம் : நிறமி யாககம் அளவுக்கு அதிகமாக நடைபெறுதல்.

hyperpituitarism : அரக்க வளர்ச்சி : உடல் வளர்ச்சிக்கு முக்கியமாக உதவுவதாகக் கருதப் படும மூளையடிச் சுரப்பியில் அளவுக்கு அதிகமாக இயக்குநீர் சுரந்து அரக்க உருவம்உண்டாதல்.

hyperplasia : **மிகையணு வளர்ச்சி; அதி பெருக்கம்** : உயிர திசுவணுக்கள் அளவுக்கு அதிகமாக உருவாதல்.

hyperpnoea : **மூச்சுத் திணறல** : விரைவான ஆழ்ந்த சுவாசம்; மூச் சுத் திண றல்.

hyperpyrexia : **மிகைக் காய்ச்சல்.** உடல் வெப்பநிலை 40-41°C-க்கு (150°F) அதிகமாக இருத்தல்.

hyper secretion : **மிகைச் சுரப்பு** : உடலில் சுரப்புநீர் அளவுக்கு அதிக மாகச் சுரத்தல்.

hypersensitivity : **மிகை உணர்வு; கூறுணர்வு** : ஒரு தூண்டுதல அலலது ஊறுபொருள் காரண மாக அளவுக்கு அதிகமாக உணர்ச்சிவயப்படுதல்.

hypersplenism : **மிகை மண்ணீரல் சுரப்பு** : மண்ணீரலில அள வுக்கு அதிகமாகச் சுரப்பு ஏற்படு தல். இது மணணீரல் வீக்கம காரணமாக ஏற்படுகிறது.

hypertalorism : **மிகை மண்டைத் திரிபு; அதி விலகு புருவம்** : மன வளாச்சிக குறைபாடு காரணமாக உண்டாகும் மண்டையோடு சார்ந்த திரிபுக்கோளாறு (தாழ்ந்த நெறறி, கூரிய உச்சித்தலை).

Hypertensın : **ஹைப்பர்டென்சின்** : ஆஞ்சியோடென்சின் எனற மருந் தின் வாணிகப் பெயர்.

hypertension . **மிகைக் குருதி அழுத்தம்; பேரழுத்தம்; குருதி உயா அழுத்தம்** : மிக மட்டுமீறி உயர்நத இரத்த அழுத்தம். இது மூளை இயக்கம் மற்றும் பலசுரப்பு சார்ந்த காரணங்களால் உணடாகிறது.

hyperthermia : **மிகை வெப்ப நிலை, அதி வெப்பநிலை**. ஒரு புற்றுககட்டியை வெபபத்தின் மூலம் கரைப்பதற்கு உடலில் உண் டாக்கப்படும் மிக அதிக அளவு வெப்பநிலை.

hyperthyroidism: மிகைக்கேடயச் சுரப்பி நோய்; கேடயமிகை: கேடயச் சுரப்பியில் (தைராய்டு) சுரப்புநீர் மிக அதிகமாகச் சுரப்பதால் உண் டாகும் நோய்.

hypertonia : **மிகைத்தசைத் திண்மை; அதி விறைப்பு** : தசைக கட்டமைப்பில் திணமை அளவுக்கு அதிகமாக இருத்தல்

hypertrichosis : **மிகைமயிர் அடர்த்தி** : பொதுவாக மயிர் அதிகமில்லாத இடங்களில் மயிர் அளவுக்கு அதிகமாக அடர்ந்திருத தல (எ-டு· நெற்றி).

hypertrophy: உறுப்புப் பொருமல்; மிகை வளர்ச்சி; பெருக்கம்; அதி வளப்பம்: மிகை ஊட்டத்தால் ஏற் படும் உறுப்புப் பொருமல்.

hıperuricaemia : **மிகைச் சிறுநீர் அமிலம்** : இரத்தத்தில சிறுநீா அமிலம் அளவுக்கு அதிகமாக இருத்தல். இது கீல்வாததத்தின் அறி குறி.

hyperventilation : **மிகை மூச்சு**: சாலிசைலேட் நச்சு, தலைக்காயம் போன்ற நேரங்களில் மிகுதியாக மூச்சுவிடுதல.

hyper vitaminosis : **உயிர்ச்சத்து மிகைப்பு; மிகை வைட்டமின்** : வைட்டமினகளை, முக்கியமாக வைட்டமின D-ஐ அதிக அளவு உட்கொளவதால் உணடாகும நிலைமை.

hyper volaemia . **மிகைக் குருதி யோட்டம்** . சுற்றோட்டமாகச செல்லும் குருதியின் அளவு அதிக மாக இருததல.

hypeaema : **கண் அறைக் குருதி; குருதி முன்னறை**. கண

முனபுற அறையில் குருதி இருத்தல்.

hypnogenesis : **துஞ்சுநிலை தூண்டிவிடல்.**

hypnology : அரிதுயிலியல் : *மன ஆற்றல் கொண்டு தூண்டப்படும் அரிதுயில் பற்றிய ஆய்வியல்.*

hypnosis : அரிதுயில் நிலை: *மன ஆற்றல் கொண்டு தூண்டப்படும் அரிதுயில், வலியற்ற மகப்பேறு, பல்பிடுங்குதல், அரிதாக சிறிய அறுவைச் சிகிச்சை ஆகியவற்றுக்கு இது பயன்படுததப்படுகிறது.*

hypnotherapy : அரிதுயில் மருத்துவ முறை : *மனஆற்றல் மூலம் நீண்ட உறக்கத்தை அல்லது அரிதுயிலைத் தூண்டிச் சிகிச்சையளித்தல்.*

hypnotic: (1) அரிதுயில் மருந்து; உறக்க ஊக்கியம்; உறக்கமூட்டி; சிவம் : *அரிதுயிலைத தூணடுகிற மருந்து*

(2) அரிதுயிலாளர் : *மன ஆற்றலால் தூண்டப்படும் அரிதுயில் நிலைக்கு ஆட்பட்டவர்.*

hypnotism: உறக்க முடுக்கம், அறிதுயிலுத்துவம் : *புறத்தூண்டுதலின மீது மட்டுமே செயலாற்றும் இயல்புடைய செயற்கையான அரிதுயில் நிலை.*

Hypnovel: ஹிப்னோவல்: *மெடாசோலம் எனற மருந்தின வாணிகப் பெயர்.*

hypoaesthesia : குன்றுணர்ச்சி; தாழுணர்வு : *உடலின் ஓா உறுபபில் உணாச்சி குன்றியிருத்தல்.*

hypocalcaemia: கால்சியம் குறைபாடு : *இரதததில் காலசியம குறைவாக இருத்தல.*

hypocapnia : கரியமில வாயுக் குறைவு : *தமனி இரத்ததில் கார்பன்டையாக்சைடு (கரியமில வாயு CO_2) குறைவாக இருத்தல்.*

hypochloraemia : குளோரைடுக் குறைபாடு : *சுற்றோட்ட இரத்தத்தில் குளோரைடுகள குறைவாக இருத்தல்.*

hypochlorhydria : ஹைட்ரோ குளோரிக் அமிலக் குறைபாடு; அமிலக் குறை : *இரைப்பை நீரில் ஹைட்ரோ குளோரிக் அமிலம் குறைவாக இருத்தல்.*

hypochlorite : ஹைப்போகுளோரைட் : *ஹைப்போகுளோரஸ் அமிலத்தின் வாணிகப் பெயர். காயங்களைக் குணப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது.*

hypochondria: மனவாட்ட நோய்; நோய்மைக் கலக்கம்: நோயெண்ணம். *கும்படைவுக் கோளாறு; கற்பனைப் பிணி; மௌட்டீக நோய்.*

hypochondriac : மனவாட்ட நோயாளி : *மௌட்டீக நோயாளி.*

hypochondrium : கீழ்விலா எலும்புப் பகுதி; விலாவடி : *கீழ்விலா எலும்புகளுக்குக் கீழேயுள்ள அடிவயிற்றின் மேல் கிடைமட்டப் பகுதி (இடம், வலம்).*

hypochromic : நிறமிக் குறைபாடு : *இரத்தச் சிவப்பணுக்களில் செந்நிறக் குருதியணுக்கள் குறைவாக இருப்பதன காரணமாக வண்ணப் பொருள் அல்லது நிறமி குறைவாக இருததல்.*

hypodermic : அடித்தோல்; அடித்தோல் சார் : *தோலின அடிப்பகுதி.*

hypofunction : செயலின்மை; குறை இயக்கம், தாழ்வினை : *செயலியககக குறைபாட்டு நோய்.*

hypogastrium : அடியகட்டுப் பகுதி, உந்திக கீழ்ப்பகுதி . *அடிவயிற்றின் அடியகட்டுப் பகுதி.*

hypoglossal : நாவடி நரம்பு: நாவின அடியிலுள்ள நரம்புப் பகுதி.

hypogycaemia : குருதிக் குளூக் கோஸ குறைபாடு; குருதிச் சர்க் கரைக் குறை : குருதியில் குளூக் கோஸ் குறைவாக இருத்தல் இத னால், கவலை, மனக்கிளர்ச்சி, ஆழ்ந்த உறக்க நிலை, சன்னி ஆகி யவை உண்டாகும். நீரிழிவு நோயாளிகளுக்கு இன்சுலின் அதிக மாகக் கொடுத்து விட்டால் இந் நிலை ஏற்படலாம்.

hypokalaemia : பொட்டாசியம் குறைபாடு : குருதியில் பொட்டாசி யம் அளவு மிகமிகக் குறைந்து விடு தல்.

hypomagnesaemia : மக்னீசியம் குறைபாடு : குருதியில் மக்னீசியம் குறைந்து விடுதல்

hypometabolism · உடல் வெப் பம் குறைதல; தாழ்வளர் சிதை மாற்றம் · மந்திப்புக் கோளாறு காரணமாக உடலில் வெப்பம குறைவாக உற்பத்தியாதல்.

hypomotility . இயக்கக் குறை பாடு; குறையசைவு : இரைப்பை யில் அல்லது குடல்களில் இயக்கம் குறைவாக இருததல்.

hyponatraemia : சோடியம் குறை பாடு : இரத்தத்தில் சோடியம குறைவாக இருத்தல்.

hypopharynx. அடிக் குரல்வளை; அடித்தொண்டை : குரல்வளைக் குக் கீழே, குரல்வளையின் பின் புறமுள்ள குரலவளையின பகுதி.

hypothermia : ஆழ் உறை நிலை மருத்துவ முறை : ஒரு நோயாளி யை இயல்பான உடல் வெப்ப நிலையிலிருந்து பல பாகைகள் குறைநத குளிர்ந்த வெப்ப நிலை யில வைத்திருந்து நோயைக் குண மாக்கும ஆழ்ந்த உறைநிலை மருத்துவமுறை.

hypophoria : காட்சி அச்சு முரண் தாழ்ச்சு:ஒரு கண்ணிலுள்ள காட்சி அச்சு மற்றொன்றை விடக் கீழே இருக்கும் நிலை.

hypophosphataemia : ஃபாஸ் ஃபேட் குறைபாடு : இரத்தததில் ஃபாஸ்ஃபேட்டுகள் குறைவாக இருத்தல்.

hypophysectomy : கபச்சுரப்பி அறுவை மருத்துவம் : கபச்சுரப் பியை அறுவை மருத்துவம் மூலம் அகற்றுதல்.

hypopigmentation : நிறமிக் குறைபாடு; தாழ் நிறமேற்றம்: நிறமி குறைந்த அளவில் இருத்தல்.

hypopituitarism : கபச்சுரபிக் குறைபாடு . உடல் வளர்ச்சிக்கு முக்கியமாக உதவுவதாகக் கருதப் படும் தூம்பற்ற மூளையடிச் சுரப் பியான கபசசுரப்பி போதிய அள வில் இலலாமலிருந்தல். இதனால் பெண்களுக்குக் கருப்பை மெலிவும் மாதவிடாய் தோன்றாமையும், பாலுணர்ச்சி உந்துதல் இன்மை யும் உண்டாகும். குழந்தைகள் குள்ளமாக இருப்பார்கள்.

hypoplasia : திசு வளர்ச்சிக் கோளாறு; குறை வளர்ச்சி: திசுவில் ஏற்படும குறைபாடான வளர்ச்சி.

hypoproteinaemia : புரதக் குறைபாடு; புரதககுறைவு: தாழ் புரதக் குருதி : இரத்த ஊனீரில் புரதம குறைவாக இருத்தல்

hypopyon : கண்ணறைச்சீழ்; சீழ முன்னறை : கண்ணின் முன்பகக அறையில் சீழ் சேர்ந்திருத்தல்.

hyposecretion : சுரப்புக் குறை பாடு; தாழசுரப்பி.

hyposensitivity : உணர்வுக் குறைபாடு : ஒரு தூண்டுதலுக்கு உணாவு ஏற்படாதிருத்தல

hyposmia : மோப்ப நுகர்வுணர்வுக் குறைபாடுதாழமோபபம:இயல்பான

நுகர்வுத் திறன் குறைந்திருத்தல்.

hypospadias : **சிறுநீர்க் குழாய் உருத்திரிபு; அடிநீர்த்துளை; வழிக் கீழ்துளை :** *ஆணின மூத்திர ஒழுக்குக் குழாய் பிறவியிலேயே உருத திரிபுடன் இருத்தல்.*

hypostasis : **குருதி வண்டல்; அடித் தேக்கம் :** *குருதி ஓட்டக் குறைவினால் உட லுறுப்புப் பகுதி களில் ஏற்படும் செயலற்ற தேக் கம்.*

hypotension ; தாழ் குருதியழுத் தம்; தாழழுத்தம்; குறை அழுத்தம் : *தாழ்ந்த குருதியழுத்த நிலை. நெஞ்சுப்பைச் சுருக்கம் (10 எம்எம் எச்ஜி (mm Hg) அளவுக்குக் குறை வாகவும நெஞ்சுபபை விரிவியககம் 70 எம்எம் எச்ஜி அளவுக்குக் குறை வாகவும் இருத்தல.*

hypothalamus : கீழ்த்தளம் : *உடலின் செயற் பாடுகளைக்கட டுப்ப டு த் து ம் முன் மூளைப் பகுதி இஃது உணர்ச்சி களுக் கும் இயற்கைக் கடன் உநதுதல் களுக்கும் பிறப் பிடமாகும்.*

hypothenar eminence : அடிமுழ எலும்பு மேடு; அங்கையடி மேடு : *உள்ளங்கையில் சுண்டு விரலின கீழுள்ள அடிமுழ எலுமபுப் பகுதி மேடாக இருத்தல்.*

hypothermia: வெப்பக்குறைபாடு; குறை வெப்பம்; தாழ வெப்ப நிலை: *உடலின் வெப்பநிலை இயல்பு அளவுக்குக் குறைவாக இருத்தல். இது மிக இளம் வயதினருககும் மிகவும் முதியவர்களுக்கும் ஏற்படு கிறது. தலைக் காயங்களைக் குணப் படுத்துவதற்கும். நெஞ்சுப்பை அறுவைச் சிகிச்சையின் போதும் செயற்கையான வெப்பக் குறை பாடு (30°C அல்லது 86°F) எற் படுத்தப்படுகிறது.*

Hypovase : ஹைப்போவாஸ் ; *பிராசோசின் என்ற மருந்தின வாணிகப் பெயர்.*

hypoventilation : உயிர்ப்புக் குறைபாடு.

hypovitaminaemia : வைட்டமின் குறைபாடு : *குருதியில வைட்ட மின்கள் குறைவாக இருத்தல்.*

hypovitaminosis . வைட்டமின் குறைவு நோய், தாழ் உயிர்ச்சத்துவம்: *வைட்டமின்கள் குறைவாக இருப் பதால் ஏறபடும் நிலை.*

hypoxaemia : ஆக்சிஜன் குறை பாடு : *தமனி இரததததில் ஆக்சி ஜன குறைவாக இருததல்.*

hypoxia : திசு ஆக்சிஜன் குறை பாடு; உயிர் வளிகுறை : *திசுக் களில் ஆகசிஜன அளவு குறைந் திருததல்.*

hysterectomy. கருப்பை அறுவை மருத்துவம, கருப்பை ஆக்கம்; கரு வகம் எடுப்பு : *கருப்பை சார்ந்த அடிவயிற்றுப பகுதியை அறுவை மருத்துவம்மூலம் அகற்றுதல்.*

hysteria : அச்சவெறி; வெறுப்பு நோய், நரம்பிழுவை: *நரமபுக் கோளாறினால் அநேகமாக பெண்கள் உளப் பணபு உரம் பாதிப்பால் தன் வயம் இழககும் இசிப்பு, முடக்குவாதம், உணர்விழப்பு ஆகி யவை இந்நோயின அறிகுறிகள.*

hysterics . வலிப்புத் துடிப்புகள் : *பெணடிர் தனவயம் இழப்புக் கோளாறில் உறுப்புகளின் இழுப்பு வலிப்புகள்.*

hysterogeny : இசிப்பு நோய்த் தூணடல, இசிப்பு நோய்க் கோளாறு உணடு பண்ணுதல்.

hysterology : கருப்பையியல் : *கருப்பை பற்றிய ஆய்வியல்.*

hystero salpingectomy : கருப்பைக் குழாய்த் துண்டிப்பு : கருப்பையினையும் கருப்பைக் குழாய்கள் இரண்டையும் துண்டித்து எடுத்தல்.

hysterosalpingostomy : கருவக அண்டக் குழல் வாயமைப்பு: கருப்பைக்குள் கரு உட்புகும் குழாயில் உள்ள அடைப்புகளைக் களையும் அறுவை மருத்துவம். கருவண்டத்திலிருந்து கருமுட்டை அணுவை கருப்பைக்குள கொண்டு சேர்க்கும் கருக்குழாயில் அடைப்பிருந்தால் அறுவை மருத்துவம் செய்து அடைப்பை அகற்றுதல்.

hysterotomy : கருவக அறுவை; கருப்பை துளைப்பு;கருவகத் திறப்பு: கருவை அகற்றுவதறகாகக கருப்பையில் செய்யப்படும் அறுவை மருத்துவம்.

hysterotrachelorraphy : கருப்பைக் கழுத்துச் சீராக்கம்; கருவகக் கண்டத் தைப்பு : சிராய்த்துக் காயப்பட்ட கருப்பைக் கழுத்துப் பகுதியைச் சீர்படுததுதல்.

I

iatrogenic : **இரண்டாம் நிலை; மருத்துவத் திரிபியம் :** ஒரு முதல் நிலையைக் குணப்படுத்துவதால் உண்டாகும் இரண்டாம் நிலை.

ibuprofen : **ஐபுப்ரோ:பென் :** மயக்கமூட்டாத அழற்சியகற்றும் மருந்து.

Ice : **பனிக்கட்டி :** உறுப்புகளில் காயங்களும் வீக்கங்களும் ஏற்பட்டிருந்தால், அதில் பனிக்கட்டியை வைத்துக் குணப்படுத்தும் முறை.

ichthammol: **இக்தம்மோல் :** மென்களிக்கல்லைச் சிதைத்து வடித்தல் மூலம் கிடைக்கும் திண்மையான கறுப்புத் திரவம். தோல் கோளாறுகளுக்கு மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றது. கிளிசரைனில் இதன் கரைசல் வீக்கத்தைக் குறைக்கும்.

Ichthyol : **இக்தியால் :** இக்தம்மோல் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

ichthyoses: **தோல் கெட்டியாதல்:** மேல்தோல் கெட்டியாகி சுரசுரப்பாகிவிடும் நோய்.

icterus : **மஞ்சட் காமாலை; மஞ்சணம் :** செந்நிறக் குருதியணுப் பொருள் அளவுக்கு அதிகமாக அழிந்துபடுவதால ஈரலில் ஏற்படும மரமரப்பு நோய்.

id: **(1) மரபியல் மூலக்கருத்து; ஆழ்மனம் :** கரு உயிர்ம இனக்கீற்றில மரபியல் சிறப்பியல்புகளையெல்லாம் கொண்டுள்ளதாகக் கருதப்படும் மூலக் கருத்து. **(2) உணர்வுந்தல் :** தனிப்பட்ட ஒருவரின் உணர்வுந்தல்களின் தொகுப்பு.

ideation : **கற்பனை செய்தல் :** எண்ணப்படிவங்களை உருவாக்குதல். இதில் சிந்தனை, அறிவுத்திறன், நினைவுத்திறன் ஆகியன அடங்கும்.

identical twins : **முழுதொத்த இரட்டையர் :** சினைப்பட்ட ஒரே கருமுளையிலிருந்து வளர்ச்சியடைந்த இரட்டைக் குழவிகள்.

identification : **அடையாளம்; இனமறிதல்; இனம் காண்டல் :** உளவியலில், தேர்ந்தெடுத்த ஒருவரை முன்மாதிரியாகக் கொண்டு நமது ஆளுமையை உருவாக்கிக்கொள்ளுதல்.

ideomotor : **உளவியல் கிளர்ச்சி :** தசைகளின் தானியக்கத்தை உண்டுபண்ணும் கருத்துகளின் வடிவில் எழும் உளவியல் உந்து ஆற்றல். எடுத்துக்காட்டாக, உறுப்புகளின் கிளர்ச்சி இயக்கத்தை உண்டாக்கும் மனக்கிளர்ச்சி.

idiopathic : **ஆதாரமில்லா முதல் நிலை நோய்; மூலமிலா;** வேறொரு நோயின நிலையாய் அமையாமல் முதல் நிலையாக குறிப்பிட்ட காரணமின்றித் தோன்றும் நோய்

idiosyncrasy : **தனிமனப்போக்கு; இயல்புக்கு மாறான செயல்; தனித்துவம் :** தனிச் சிறப்புக்குரிய பண்பு

தனிமனிதருக்குச் சிறப்பியல்பான உடலமைப்பு.

idoxuridine : ஐடோக்சுருடின் : விழிவெண்படலப் படர்தேமல் சீழ்ப்புண்ணுக்குப் பயன்படுத்தப் படும் மருந்து.

ileitis : சிறுகுடல் வீக்கம்; கடைச் சிறுகுடல் அழற்சி : சிறுகுடலின் பின்பகுதியில் ஏற்படும் வீக்கம் (அழற்சி).

ileocolostomy : செயற்கைப் புண் புரை; சிறுகுடல் பெருங்குடல் இடைத்துளைப்பு: சிறுகுடல் பின் பகுதிக்கும் பெருங்குடலுக்குமிடையில் அறுவை மருத்துவம் மூலம் ஏற்படுத்தப்படும் செயற்கைப் புண்புரை. பெருங்குடல் முற்பகுதியில் அல்லது ஏறுமுகப் பெருங்குடலில் ஏற்படும் தடையை அல்லது வீக்கத்தை அகற்ற இது செய்யப் படுகிறது.

ileocystoplasty : சிறு நீர்ப்பை விரிவாக்க மருத்துவம் : சிறுநீர்ப் பையின் வடிவளவை அதிகரிப்பதற்குச் செய்யப்படும் அறுவை மருத்துவம்.

ileum: சிறுகுடற்பின்பகுதி, கடைச் சிறுகுடல்; ஈர்ப்பகம்; குடலீறு: சிறுகுடலின் கீழ்ப் பகுதியிலுள்ள ஐந்தில் மூன்று பகுதி.

சிறுகுடல் பின்பகுதி

ileus: குடல் அடைப்பு; குடல் அசைவிழத்தல்; குடல்தொய்வு பக்க வாதத்தின் போது ஏற்படும் குடல் அடைப்பு. இதனால் வாந்தி உண்டாகும்.

ileoproctostomy : தனடநாளப் பிணைப்பு; சிறுகுடல் மலக்குடல் இணைப்பு : சிறுகுடல் பின்பகுதிக்கும் பெருங்குடல் அடிக் கூறுக்கும் (குதவாய்) இடையில் தசை நாளங்களில் அறுவை மருத்துவம்

iliac artery: இடுப்புக் குருதிநாளம்: இடுப்புத் தமனி.

iliac passion: குடலடைப்பு வலி அடிக்குடலில் அடைப்பு ஏற்படுவதால் உண்டாகும் நோவு.

ilium : இடுப்பெலும்பு : வயதுவந்தவரிடையே மூன்று எலும்புகளின் இணைவாக உள்ள இடுப்பெலும்பின் மேற்பகுதி.

இடுப்பெலும்பு

illusion : விழிமாறாட்டத் தோற்றம்; திரிபுக்காட்சி; தோற்ற மயக்கம்; மருட்கை : பொய்த் தோற்றம்; மாயத் தோற்றம். எடுத்துக்காட்டாக, ஒரு வெள்ளைத் துணியை பேய் என்று தவறாக எண்ணுதல்.

illotycin : இலோட்டிசின் ; எரித்ரோமைசின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்

image : மனக்காட்சி; உள உரு, வடிவமைவு. மனதில் உருவம் கற்பித்துக் காணுதல்.

imagery: நினைவுக் காட்சி; மனக் காட்சி : மனத்தகத் தோற்றம்; புனைவாற்றல்; கற்பனை.

Imferon : இம்ஃபெரோன் : அயன் டெகஸ்ட்ரான் தொகுப்பின் வாணிகப் பெயர். அயச் சத்துக் குறை

பாட்டுக்குக் கொடுக்கப்படும் மருந்து.

imipramine : இமிப்பிராமின் : மனச்சோர்வினைப் போக்கக் கொடுக்கப்படும் மருந்து.

immune reaction response : ஏம மறுவினை விளைவு: உடலில் பொருத்தப்படும் மாற்று உறுப்பினை உடல் ஏற்றுக் கொள்ள மறுத்தல்.

Immunity : தடைகாப்பு நிலை; தடுப்பாற்றல்; நோய் எதிர்ப்புச் சக்தி; ஏமம் : உடலில் புகும் நோய்க் கிருமிகளை எதிர்த்து நோய் உண்டாவதைத் தடுக்கும் தடைகாப்பு நிலை.

immunization : தொற்றுத்தடை : தொற்று நோய்களிலிருநது தடைகாப்பு அளித்தல்.

immuno compromised patients தடைகாப்பு ஒடுங்கிய நோயாளிகள் : தடைகாப்பு நிலை ஒடுக்கபபட்ட நோயாளிகள். மருந்துகளினால் குறைபாடான நோய்த்தடைகாப்பு ஏற்படுதல்.

immunodeficency : தடைகாப்புக் குறைபாடு : நோய்த தடைகாப்பு நிலை குறைவாக இருத்தல். இதனால் நோய்கள் எளிதில பீடிக்கின்றன.

immuno deficiency diseases : தடைகாப்புக் குறைபாட்டு நோய்கள் : நோய்த்தடை காப்புநிலையில் ஏற்படும் கோளாறுகளினால் வரும் அல்லது வந்தடையும் நோய்.

immunogenesis : தடைகாப்பு உருவாக்கம் : உடம்பில் நோய்த தடைகாப்பு நிலையை உருவாக்கும் முறை ஏமவாக்கம்.

immunogenicity : தடைகாப்புத் தூண்டுதிறன் : உடலில் நோய்த் தடைகாப்பு நிலையைத் தூண்டும் திறம்பாடு ஏமத் தூண்டுதிறன்.

immunoglobulins (Igs) : தடைகாப்புப் புரதங்கள் : அதிக அளவு மூலககாற்று எடையுள்ள புரதங்கள். இதனை நிணநீர் உறபத்தி செய்கிறது இது பாக்டீரியா, போன்ற மூலங்களுடன் இணைந்து நோய்த்தடைக் காப்பினை உண்டாக்குகிறது.

immunology : நோய்த் தடைக் காப்பியல்; நோய்த் திசுப்பாற்றியல்; ஏமவியல் : உடம்பிலுள்ள நோய்த் தடைக்காப்புத் தூண்டு திறன் பற்றிய ஆய்வியல்.

immunopathology : தடுப்பாற்று நோயியல; திசுக்காய ஆய்வியல் : நோய்த் தடைக்காப்பு அமைப்புத் தொடர்பான திசுக்காயம் குறித்து ஆராய்தல்.

immunosuppression : நோய்த் தடைக்காப்புக குறைப்பு மருத்துவம், தடுப்பாற்றடக்கு : நோய்த தடைக் காப்புத தூண்டு திறனை மட்டுப் படுத்துவதற்கான மருத்துவம்.

Imodium : இமோடியம் : ஐயோ பெராமிட் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

impacted tooth : தெற்றுப் பல் : மற்றொரு பல்லுக்கு அடியில் வளரும் பல.இது மேல்நோக்கிவளர முடிவதில்லை.

தெற்றுப பல

impalpable: தொட்டுணர முடியாத : தொட்டுணர முடியாத அளவுககு மிக மெல்லியதான; மிக நுண்ணிய தான.

impaludism· மண்ணீரல் அழற்சிக் காய்ச்சல் . சதுப்பு நிலததில் வாழ்வோரிடையே காணப்படும் இடையிடையிட்ட மண்ணீரல் அழற்சியும். காய்ச்சலும் வாய்ந்த நோய் வகை.

impediment in speech: தெற்று வாய் : திக்கித் திக்கிப் பேசுதல்.

inperforate: துளையில்லா மாதவிடாய் வழியடைப்பு, இயல்பு மாறிய அடைப்பு : பெண்ணின் கருப்பை வாய்க் குழாயில் (யோனிக் குழாய்) மாதவிடாய்த் திரவம் வெளியேறுவதற்கு இயற்கையான திறப்புவழி இல்லாதிருத்தல். இது பிறவியிலேயே ஏற்படுகிறது

impetigo : கொப்புளத் தொற்று நோய்; செஞ்சொறி; தொற்றுச் சிரங்கு : கொப்புளததில் உணடாகும் ஒருவகைத தோல் வீக்க நோய் இது கடுமையாகத் தொற்றக் கூடியது.

implantation. உயிரணு பொருத்துதல்; உயிரணுப் பதியம்; உள்வைத்தல்; இடுகை : திசுக்களில் உயிருள்ள உயிரணுக்களை அல்லது திடப்பொருள்களை உள்ளே புகுத்துதல். எடுத்துக்காட்டு: ரேடியம் அல்லது திட மருந்துகளை உட்புகுததுதல்; கருப்பையின உள் வரிச் சவ்வில கருவுற்ற சினையைப் புகுத்துதல்வேறு திசுவை ஒட்டுதல்.

implants : செலுத்துத் திசுக்கள்; உள்வைப்பு : திசுக்களில் அறுவை மருத்துவமமூலம் புகுத்தப்படும் ஒட்டுத் திசுக்கள்.

impotence : ஆண்மையின்மை : ஆணிடம் பாலுறவுக்கான ஆண்மைத் தன்மை இல்லாதிருத்தல.

impregnate ; சினைப் படுத்துதல்; கருவுறச் செய்தல்; சூலமை : கருவுறச செய்தல்.

impulse . திடீர் உணர்ச்சி; உளத் தூண்டல்; உணர்ச்சி வயப்படுதல; துடிதுடிப்பு; உட்தூண்டு . நாடி நரம்புகளில் திடீரென அலை யெழுப்பும புறத்தூண்டுதல்.

Imuran : இமுரான் : அசாத்தியோப்பிரின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

inaccessibility : அணுக முடியாமை; எட்டாமை : உளவியல் மருத்துவததில் நோயாளியிடம் எவ்விதப் பதில் செயலும் எழா திருத்தல்.

inassimilable : செரிக்க முடியாத; அகத்துறிஞ்சாத : செரிமானம் செயது கொள்ள இயலாதிருக்கிற.

incest : முறை தகாப் புணர்ச்சி; கூடா பாலுறவு; கூடாக்கலவி: தடைவிதிக்கப்பட்ட அணுக்க உறவினரிடையிலான கலவி. எடுத்துக் காட்டு; தந்தை மகளுக்கிடையில், தாய் மகனுக்கிடையில் புணர்ச்சி தடை செய்யப்பட்டதாகும்.

incised wond : வெட்டுக்காயம் : கூரிய கத்தி போன்ற ஆயுதங்களால் வெட்டிய காயம்.

incision : வெட்டுதல் (கீறுதல்); கிழிததல்; கீறல் : கூர்மையான கருவியினால் உடல் திசுவில் வெட்டுதல்.

incisor : உளிப்பல்; வெட்டுப்பல் : முனவாய்ப்பால், உணவை அரைத்து உண்ணப் பயன்படுகிறது.

inclusion bodies: உள் துகள்கள் : நோய்க் குணத் திசுக்கள், இயல்பான திசுக்களின் சில உயிரணுக்களில் காணப்படும் நுண்ணிய துகள்கள்.

incombatibility : ஒவ்வாமை; பொருந்தாமை; ஒன்றாமை: இரத்த தானமளிக்கப்பட்ட இரத்தத்தை நோயாளிக்குச் செலுத்துமபோது அந்த இரத்தம் ஒத்திசையாமல போதல்.

incompetence : திறமைக்கேடு, தகுதியற்ற; உடல் இயலாமை; தகாமை : சில இயல்பான பணிகளைச் செய்திட இயலாதிருத்தல் எ-டு நெஞ்சுப்பைச் சவ்வடைப்பு இயங்காதிருத்தல.

incontinenca : தன்னடக்கமின்மை; கட்டுப்பாடிழந்த; அடக்காமை ஒழுகை : சிறுநீர் கழித்தல் போன்ற இயற்கை முனைப்புகளை அடக்க இயலாதிருத்தல்.

incoordination: இணக்கமின்மை; தசை ஒத்தியங்காமை; இணை:ஒழுங்கின்மை; ஒருங்கிணையாமை; தசை இயக்கங்களை ஒருமுகப்படுத்த இயலாதிருத்தல்.

incubation : அடைகாப்பு; அடைவுக் காலம்; நோய்காப்புக் காலம்; அடைநிலை : நோய்க்குறி தோன்றும் முனபு நோய்க்கிருமிகள் பெருக்கமடையும் கால அளவு.

incubator: கருமுதிர்ச்சிக் கருவி; சீர் வெப்பப் பெட்டி; அடை காப்பி : (1) முழுவளர்ச்சியுறாமல் உரிய காலத்திற்கு முன்னரே பிறந்த குழந்தைகளை வளர்க்கும் கருவி. (2) மருத்துவ முறைகளுக்கான நோய்க்கிருமிப் பெருக்க அமைவு.

incus : காதெலும்பு : சுத்தி எலும்பிலிருந்து ஒலியலை அதிர்வுகளை வாங்கும் காது எலும்பு.

indapamide : இண்டாப்பாமைடு: தாழ்ந்த குருதியழுத்தத்தை எதிர்க்கும் சிறுநீர்க் கழிவினைத் தூண்டும் மருந்துவம்.

Indema: இண்டிமா : ஃபெனிண்டியோன் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

Inderal : இண்டெரால். புரோப்ரானோலால் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

Inderetic : இண்டெரெட்டிக் : பெண்ட்ரோஃப்ளுளைசட் என்ற மருநதின வாணிகப் பெயர்.



indian hemp : இந்தியச் சணல்.

indican : இண்டிக்கான் : சிறுநீரிலிருந்து வெளியேறும் பொட்டாசியம் உப்பு.

indicanuria : மிகை இண்டிக்கான்: சிறுநீரில் உள்ள மிகையான பொட்டாசியம் உப்பு. இயல்பான சிறுநீரில் இது சொற்ப அளவில் இருக்கலாம். அதிக அளவில் இருந்தால் குடலில் தடை ஏற்பட்டிருப்பதைக் குறிக்கும்.

indigenous : வட்டார நோய்கள்; உள்ளூர் நோய் : ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் அல்லது நாட்டில் பரவும் நோய்.

indigestion : செரிமானமின்மை; செரியாநிலை : வயிற்றில் உணவு சீரணிக்காமலிருத்தல்; வயிற்று மந்தம்.

indigocarmine : நீலச்சாயக் கரைசல் : சிறுநீரகம் செயற்படுவதைப் பரிசோதிக்க உதவும் 0.4% கரைசல். சிறுநீர் நீலநிறமாக இருந்தால் சிறுநீரகம் இயல்பாகச் செயற்படுகிறது என்று பொருள்.

Indocid : இண்டோசிட் : இண்டோமெத்தாசின் என்ற மருந்தின்

வாணிகப் பெயர்.

indole : இண்டோல் : குடல்களிலுள்ள டிரிப்டோஃபான் சிதைவுறுவதால் உண்டாகும் பொருள். இது நுரையீரலில் இண்டாக்சிலாக ஆக்சிகரணமாகி, சிறுநீரில் இண்டிக்கானாக வெளியேறுகிறது.

indolencea : நோவற்ற புண்; வலியற்ற புண் : வேதனை உண்டு பண்ணாத, ஆனால் மெதுவாக ஆறக் கூடிய புண.

indomethacin : இண்டோமீத்தாசின் : வீக்கத்தைக் குறைக்கக் கூடிய மருந்து. வாதக் கோளாறுகளுக்குப் பயன்படக் கூடியது. குமட்டலைத் தடுக்க வாய்வழி உட்கொள்ளலாம்.

indoramin : இண்டோராமின் : தாழ்நத குருதியழுத்தத்தைக் குறைக்கக் கூடிய மருந்து.

induced abortion : தூண்டிய கருச்சிதைவு; கருச்சிதைவு தூணடல்; தூணடல் சிதைவு : மருததுவ முறை மூலம் கருச்சிதைவினைத் தூண்டிவிடுதல்.

induction : இடுப்புவலி வருவித்தல்; தூண்டல்;ஊக்குதல்: மயக்கம், இடுப்பு வலி, (மகப்பேற்று வலி) போன்றவற்றைத் தூண்டி வருவித்தல்.

induration · உணர்விழப்பு : திசுக்களைக் கடினமாக்கி உணர்ச்சியிழக்கச் செய்தல்.

industrial disease : தொழிலியல் நோய்கள; தொழில்சார் நோய்கள ; ஒரு தொழிலில் ஈடுபடும்போது தூசு, புகை, வேதியியல் போன்ற பொருள்களால் உண்டாகும் நோய்.

industrial therapy : தொழிலியல் மருத்துவம் : உளவியல் மருத்துவ மனையில், தொழிலாள நோயாளிகளுக்கு உளவியல் சிகிச்சையளித்து, அவர்களை மீண்டும் தொழிலாளர் சமுதாயத்தில் சேர்ப்பதற்கு ஆயத்தம் செய்யும் பகுதி.

inertia : செயலின்மை; இயக்கொழிவு; மெது நிலை : கருப்பை சுருங்கி விரியாமல் செயலற்றதாக இருத்தல்.

inextremis : இறக்குந்தறுவாயில்

infant: குழவி; பச்சிளங் குழந்தை; கைக்குழந்தை : ஒரு வயதுக்குக் குறைந்த பச்சிளங் குழந்தை.

infantilism : உடல்-உள வளர்ச்சியின்மை; குழந்தையுள்ளம்; இளந்தோற்றம்; மழலையம் : அறிவோ உடம்போ வளர்ச்சியடையாத நிலை.

infarction : திசு மாள்வு; திசு அழிவு; குருதி நசிவுறல்: இரத்தம் பாய்வது நின்று போவதால் திசுவின் ஒரு பகுதி மாண்டுபோதல்.

infection : நோய் தொற்றுதல் நோய்த்தொற்று : காற்று, நீர் மூலம் நோய்க் கிருமிகள் பரவி நோய் தொற்றுதல்.

infectious disease: தொற்று; நோய் : ஒரு குறிப்பிட்ட நோயக கிருமி மூலம் தொற்றுகிற நோய். இது ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு நேரடியாக அல்லது மறைமுகமாகப் பரவும்.

infectious mononucleosis : சுரப்பிக் காய்ச்சல் : ஒருவகைத் தொற்று நோய். இந்நோய் கண்டவர்களுக்குக் காய்சசல், தொண்டைப்புண், நிணநீர்க கரணைகள விரிவடைதல் உண்டாகும்.

infective : தொற்றவைக்கும் இயல்புடைய; தொற்றும் பணபு : தொற்று நோயை ஒன்றிலிருந்து இனனொன்றுக்குத் தொற்றச செய்யும் இயல்புடைய.

inferior . கீழார்ந்த.

inferiority complex: **தாழ்வு மனப் பான்மை:** *தனக்குப் பாதுகாப் பில்லை என ஒருவருக்கு ஏற்படும் உணர்வு. இதனால் சிலர் மூர்க்கத் தனமாக நடக்கக்கூடும்.*

infertility : **மலட்டுத்தன்மை; கருத்தறிக்காமை; மலடு :** *இனப் பெருக்கம் செய்யும் திறன் இல்லா திருத்தல். இந்நிலை கணவனிட மோ மனைவியிடமோ இருக்க லாம்.*

infestation : **ஒட்டுண்ணி மொய்ப்பு; பீடித்தல்; மொய்ப்பு :** *மனித உடம்பில் விலங்கு ஒட் டுண்ணிகள் நிறைந்திருத்தல்.*

infiltration : **ஊடுபரவல்; ஊடுரு வல்; உட்பரவல் :** *சுற்றுப்புறத் திசுக்கள் ஊடுருவுதல. வடியும் அல்லது கசியும் திரவம் படிப்படி யாக உட்சென்று பரவுதல்.*

inflammation: **அழற்சி (வீக்கம்) :** *காயம் காரணமாக உயிர் வாழும் திசுக்களில் உண்டாகும் எரிச்சல், வீக்கம், அழற்சி போன்ற விளைவு கள்.*

influenza : **சளிக்காய்ச்சல்; புளுக் காய்ச்சல் :** *கடுநீர்க கோப்புடன கூடிய காய்ச்சல். இது கொள்ளை நோயாகப் பரவக் கூடியது.*

infrared rays: **அகச்சிவப்புக் கதிர் கள்:** *நிறப்பட்டையில் சிவப்பு நிறத் துக்கு அப்பாற்பட்ட கட்புலப் படாக் கதிர்கள்.*

infundibulum : **பெய்குழல் வடிவு; கூப்புப் புழை :** *ஊற்றாங்குழல போனற வடிவுடைய குழாய்*

infusion: **சிரைவழி உட்சொரிதல்; உட்செலுத்துதல், நீரேற்றம்:** *உட லினுள திரவம் சொரிதல். அமி னோ திரவங்களை உடலுக்குள் உட்செலுததுதல;திரவமேற்றுதல்.*

ingestion : **உணவுச் செலுத்தம் :** *உணவை அல்லது மருநதை இரைப்பைக்குள் கொண்டு செல்லுதல்.*

ingram regime : **யானைச் சொறி மருத்துவம் :** *யானைச்சொறி எனப் படும் நமட்டுச் சொறியைக் குணப் படுத்தும் முறை. இதற்கு டித்ரோ னால் குழம்பு, புறஊதா ஒளி பயன்படுத்தப்படுகிறது.*

inhalation : **மூச்சுவழி உள் இழுத் தல்; ஆவி பிடித்தல்:** *காற்று அல் லது பிற ஆவி முதலியவற்றை உள் வாங்குதல்.*

உள் இழுக்கப்படும் மருந்துப் பொருள்.

inherent: **உள்ளார்ந்த; உற்ற :** *இரண்டற நீங்காது உள்ளியல் பாக இருக்கிற*

inhibition : **தடையுணர்ச்சி; கூச் சம்; உட்தடுப்பு :** *நீடித்த பழக்கம் அல்லது பயிற்சி காரணமாகச் செயல் வேட்கைகளின் உள் ளார்ந்த தடையுணர்ச்சி.*

injection : **மருந்து ஊசி போடு தல்; உட்செலுத்தல்; ஊசிகுத்தல் :** *திசுக்களில் ஊசியிட்டு மருந்து செலுத்துதல் ஊசிவழிமருந்தேற்றல்.*

injector : **ஊசிக் கருவி :** *திரவத் தை அதிக அளவில் பாய்ச்சும் ஒரு சாதனம்.*

innate : **உள்ளியல்பான :** *உள் ளார்ந்த; மரபணுவியல் சார்ந்த இயல்பு.*

innervation : **நரம்பு வலுவூட்டு தல்; நரம்பூட்டம் :** *ஓர் உறுப்பின் நரம்பூட்டம்.*

Innocent : **தீங்கற்ற; தீமையற்ற; சாதுவான .** *நோய் வகையில் கடு மையிராத.*

innocuous . **கேடற்ற; தீங்கிலா; தீதற்ற, தீங்குவிளையா :** *தீங்கு விளைவிக்காத.*

innominate : **பெயரற்ற; பெய ரிலா;** *பெயரிடப்படாத.அநாமதேய*

innominate bone: பெயரிடப்படா இடுப்பு எலும்பு: வயதுவந்தவரிடையே மூன்று எலும்புகளின் இணைவாக உருவான இடுப்பெலும்பு.

inoculation : நோய்த்தடுப்பு ஊசி; தடுப்பூசி : தொற்று நோய்களைத் தடுக்க, பாதுகாப்பு வினையை ஊக்குவிக்க அந்நோயணுக்களைக் கொண்ட மருந்தை ஊசிமூலம் உடலில் செலுத்துதல்.

inorganic : கரியமற்ற கனிம : கனிப்பொருள் தோற்றமுடைய.

inositol nicotinate : இனோசிட்டோல் நிக்கோட்டினேட் : குருதி நாள விரிவகற்சி மருந்தாகப் பயனபடுத்தப்படும் நிக்கோட்டினேட்.

inquest : சடல ஆய்வு; இறப்பாய்வு : திடீரென அல்லது எதிர்பாராமல் நடந்த மரணத்தின் போது உடலைப் பரிசோதனை செய்தல்.

insecticide : பூச்சிகொல்லி மருந்து : புழுபூச்சிகளை அழிப்பதறகான மருந்து.

insemination : கருவூட்டல்; விந்தேற்றல்; விந்தூட்டம்; விந்தளிப்பு : பொதுவாகப் பாலுறவு மூலம கருப்பைக்குள் விந்தணுவைச் செலுத்துதல்.

insensible : உணர்ச்சியற்ற, புலப்படா; உணரா : உணர்விழநது காழ்த்துப் போன.

insertion : உறுப்பிணைப்பு; செருகல்: தசை உறுப்பு இணைந்திருக்கும் முறை.தசையின இறுதிப்பகுதி எலும்பில் இணைந்திருததல்.

Integrin : இன்ட்டெக்ரின் . ஆக்சிபெர்டடின் எனற மருந்தின் வாணிகப் பெயா.

integument : புறஉறை மேந்தோல : தோலின் புறப்போர்வை.

Intellect : அறிவாண்மை : பகுத்தறிவுத் திறன்;சிந்திக்கும் ஆற்றல்.

intelligence : மதிநுட்பம்; அறிவுத்திறம்; நுண்ணறிவு; அறிவாற்றல் : ஆறறிவுடைய உயிர்களுக்குள்ள கூர்மைத் திறன்; விவேகம், இதை அறிவு அளவெண் மூலம் அளவிடலாம், அறிவாற்றல்.

intelligence quotient : அறிவுத்திற அளவெண் : அறிவுக்குறி எண். மதிநுட்ப அளவு அலகு

intensive therapy unit (ITU) : தீவிர மருத்துவப் பிரிவு: மிக உயர்ந்த மருந்து உத்திகள் பயன் படுத்தப்படும் மருத்துவப் பிரிவு.

intensive inoculation : தீவிர மருந்தூசி போடுதல் : படிப்படியாகச் செறிவை மிகுதிப்படுத்தி மருந்தூசி போடுதல்.

interaction : பின்னிய செயல் விளைவு; இடைவினை : ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை ஒன்றின மீது ஒன்று செயல்விளைவினைக் கொண்டிருத்தல்.

interarticular: மூட்டுகளிடையே; மூட்டிடை.

interatrial: இதயத்தமனிகளிடையே.

intercellular : உயிரணுக்களிடையே.

intercostal : இடுப்பெலும்புகளிடையே; விலா எலும்பு இடைவெளி :

Intercourse : பாலுறவு; கலவி : கலவி; புணாச்சி.

intercurrent . உடனிகழ்வான : ஏற்கெனவே ஒரு நோய் பீடிதத ஒருவருக்கு இரண்டாவதொரு நோய் பீடித்தல்.

interferon இடையீட்டுப் புரதம் ; சில நோய்க் கிருமிகளுக்கு எதிரான ஒருவகைப் புரதம். ஓர் உயிரணுவை ஒரு கிருமி தாக்கும்போது

இந்தப் புரதத்தை உற்பத்திசெய்யுமாறு உயிரணு தூண்டப்படுகிறது. அந்தப் புரதம் நோய்க்கிருமியை எதிர்த்துப் போராடுகிறது.

interlobar : தொங்குதசைகளிடையே: பகுதி பிதுக்கங்களிடையே.

inter menstrual : மாதவிடாய்களிடையே.

internal: உட்பகுதியில், உட்காது: காதின் உள்ளுறுப்புகள் உள்ளபகுதி

interosseous : எலும்புகளிடையே

interphalangeal: கைகால் விரல் மூட்டுகளிடையே.

interposition operation : சிற்றெலும்பு மாற்று மருந்து : சிறு எலும்புகளின் தொகுதி முழுவதையும் அல்லது ஒரு பகுதியை அறுவை மருந்துமூலம் மாற்றுதல்.

interserosal : ஊனீர்ச்சவ்வுகளிடேயே.

intersexuality : இருபால்தன்மை: ஆண்-பெண் இருபால தன்மைகளுமுடைய.

interstices : சிறு இடைவெளிகள்: ஒடுங்கிய பிளவுகள்; சந்து வெடிப்பு.

intestine : குடல் : உணவுக் குழாயின் கீழ்ப்பகுதி. இது



குடல்

பெருங்குடல், சிறுகுடல் என இரு பகுதிகளைக் கொண்டது.

intertrigo : தோல் வீக்கம் : ஈரமான தோல் மடிப்புகளில் ஏற்படும்.

intervertebral : முள்ளெலும்புகளிடையே.

intima : குருதி நாள உள்பூச்சுச் சவ்வு உட்படலம்: குருதி நாளத்தின உளபூச்சுக் சவ்வுத திசு.

intolerance : சகிப்புணர்வின்மை; சகியாமை : சத்துப்பொருள்கள், மருந்துகள் போனற குறிப்பிட்ட பொருள்களை உடல் ஏற்றுக் கொள்ள மறுத்தல்.

intraabdominal: உள் அடிவயிறு; வயிற்றுள்; வயிற்றினுள .

intracapillary : தந்துகியுள்

intracapsular : பொதியுறையுள்.

intracardiac : இதயத்துள்.

intracellular : உயிரணுவுள்.

intracerebral : பெருமூளையுள்.

intracorpuscular : குருதிக் கணத்துள்

intracranial : மணடையோட்டுள்.

intracranial pressure (ICP) : மணடையோட்டு உள்ளழுத்தம் : மண்டையோட்டினுள் உள்ளழுத்தத்தை மூளைத்திசுக்கள் இயல்பான அளவில் வைத்திருத்தல்

intracutaneous : தோல் திசுவினுள; சருமத்துள்.

intradermal . தோலினுள்; தோலுள்.

intradural : மூளைச் சவ்வுள்; கடின உறையுள் : மூளையையும் முதுகுத தணடையும சூழ்ந்திருக்கும் மேல் சவ்வின உட்பகுதி.

intrahepatic . ஈரலுள்.

intralobular : காது மடலுள்; நுண்வளையக.

intralymphatic: ஊனீர் நாளத்துள்.

intramedullary: எலும்பு மச்சையினுள்.

intramural சுவர்ப் படுகையுள, சுவருள்: புழையுடைய குழாய் அல்லது உறுப்பின சுவர்ப் படுகைப் பாளங்களுக்குள்.

intramuscular : தசையுள்; தசைக்குள்.

intranasal : மூக்குள்; நாசியுள்.

intraocular : கண்கூட்டுள், கண்ணுள்.

intraoral : வாய்வழியே; வாயுள : வாய்வழியே செலுததுதல்.

intraorbital : கண குழியுள்.

intrapartum : பிறப்பின்போது; பேற்றுள்.

intraperitoneal : வபையுள; உதரப்பையுள் : அடிவயிற்று உட்பகுதியைச் சூழ்ந்துள்ள நீரடங்கிய இரட்டைச்சவ்வுப் பையுள்.

intrapharyngeal: அடித்தொண டையுள.

intraplacental : நச்சுக்கொடியுள்.

intrapleural : நுரையீரல குழியுள.

intrapulmonary : ஈரலுள.

intrapunitive : தற்தண்டனைப் போககு, தன் நிந்தைய.

intraretinal : விழித்திரையுள : கண விழியின் பின்புறத திறையுள்.

intraspinal : முதுகுத் தண்டுப் புழையுள; முளைத் தண்டுள.

intrasplenic · மணணீரலுள.

intrasynovial : உயவு நீர்மத்தினுள.

intrathoracic· மார்புக் கூட்டினுள்; மாாபகம்.

intratracheal: குரல்வளையுள.

intrauterine : கருப்பையுள : கருவுறுவதைத் தடுக்கக கருப்பையுள் செருகப்படும் சாதனம்.

intravaginal : யோனிக் குழாயுள்; அல்குலுள : பெண்ணின் கருப்பைக் குழாயினுள்.

Intraval : இன்ட்ராவல் : தியோப் பெனட்டோன என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

intravascular : குருதி நாளத்துள்; குழலுள்.

intravenous : சிரை வழி; நரம்பு வழி, சிரையுள் : நரமபின ஊடாக உட்செலுத்துதல்.

intraventricular : இதயக் கீழறையினுள

intrinsic : உயிர்க்கூறான, அக நிலை : உளளாாந்த உயிாக் கூறான.

introitus : உள்வழி; நுழைவாயில்: யோனி வாய · உடலிலுள்ள ஓர் உள்வழி. ஒரு குழிவினுள் உள்ள நுழைவு வாய்; குறிப்பாக, கருப்பை வாய்க் குழாய்.

introjection : தாதான்மிய உணர்வு; உள் வீச்சு . புற உலகப் பொருளகளுடனும் ஒன்றுபட்டு அவற்றின் நிலைகளையும் முடிவுகளையும் தமதாக உணரும் உணர்வு.

Introspection : உள்முக நோக்கு; தன் உள ஆய்வு ; உற்புறக் காட்சி; தற்காடசி, தன் உள்ளத்தைத் தானே நுணுகிக் காணும் செயல்.

introversion : அகமுகக் கோட்டம்; உட் திருப்பம், உள்ளொடுக்கம்· அகம் புறமாகத் திருப்புதல்; உள்முகச் சிந்தனை, எண்ணங்களை உள் நோககித திருப்புதல்.

introvert : அகமுக நோக்காளர்; உள நோககுபவர்; அழுத்தமானவா; சிந்தனை உளமுகமாகத திருப்பும் இயலபுடையவர்; தன்னைப் பறறியே எணணுபவர்.

intubation : **உட்செருகல்; குழல் பொருத்தம்; குழலுட் செலுத்தல் ;** குரல்வளை திறந்திருக்கும்படி அதனுள் குழாயைச் செருகுதல்.

intussusception: குடல் செருகல்; குடலுள் மடிப்பு; குடலேற்றம் : குடலின ஒருபகுதி இன்னொரு பகுதிக்குள் செருகிக் கொண்டிருக்கும் நிலை. இதனால் குடலிலும் வயிற்றிலும் கடும் அடைப்பு ஏற்படும். இது பெரும்பாலும் குழந்தைகளுக்கு, குறிப்பாகப் பால் குடி மறக்கும் வேளையில் ஏற்படும்.

inunction : நெய்யாட்டு; எண்ணெய் தேய்த்தல்; நீவல்; தடவுகை : தோலில எணணெய் தடவுதல.

invagination : உறையிலிடுதல்; உளமுக மடிப்பு உளளுறையீடு ; உட்குழிவு: குழாய் போனற உறையை அகம்புறமாகத் திருப்புதல்.

invasion: வல்லந்த நுழைவு; பற்றுதல; தாக்கம் : உடலுக்குள நோய்க் கிருமிகள் வல்லந்தமாக நுழைதல்.

inversion : தலைகீழ்த் திருப்புதல்; உள திருப்பல்; கவிழ்த்தல் : கருப்பையைத தலைகீழாகப் புரட்டுதல் போன்ற தலைகீழ்த் திருப்பம்.

invertase : சர்க்கரைப் பகுப்பான்: குடல் நீரிலுளள சர்க்கரையைப் பிரிக்கும செரிமானப் பொருள.

invitro : கண்ணாடிக் குழாயில்' குழலில்; புற நிலை : வேதியியல் துறை ஆயவுக கூடத்தில சோதனைககண்ணாடிக்குழாயில்.

invivo : உயிருள்ள திசுவில்; உடலுக்குள; அகநிலை.

involucrum : எலும்பு மேலுறை : புதிய எலும்பின் மேலுறை. இது எலும்பு இனஅழமததைச் சுறறி அமையும்.

involuntary : தன்னியக்க; அனிச்ச ' விருபபாற்றலுக்குட் படாமல் தானாக இயலகிற; இதயத் தசைகள், இரைப்பைத் தசைகள் இவ்வாறு இயங்குவன.

involution ; உட்சுருங்கள்; உள் மடிப்பு; உட்சுருள்வு : ஓர் உறுப்பு தனது பணியைச் செய்து முடித்ததும் இயல்பாகச் சுருண்டு சுருங்கி விடுதல். எடுத்துக்காட்டாக, மகப்பேற்றுக்குப் பிறகு கருப்பைச் சுருங்கிக் கொள்ளுதல்.

Iodatol : ஐயோடாட்டோல்: அயோடினேற்றிய எண்ணெயின வாணிகப் பெயர்.

iodex : அயோடெக்ஸ் : அயோடின் அடங்கிய கறைபடாத களிம்புமருந்தின் வாணிகப்பெயர். சுளுக்கு குழநதைகளின் மயிர்க்குரு ஆகியவற்றுக்கு ஏற்றது.

iodides : அயோடைடுகள : மற்றொரு தனிமத்தோடு அயோடின் சேர்நத கூட்டுக் கலவை. பொட்டாசியம் அயோடைடு, சோடியம் அயோடைடு. ஆகியவை மருத்துவத்தில் பெருமளவில் பயன்படுகின்றன.

iodine : அயோடின் (கறையம்) : கரியப் பொருளைக் கருந்தவிட்டு நிறமாகக் கறைப்படுத்தும் இயல்புடைய தனிமம். சிறுகாயங்களுக்கு உடனடியாகப் பூசுவதற்கான 'டிங்சர்' தயாரிக்கப் பயனபடுகிறது.

iodism · அயோடின் நச்சு அயோடின் அல்லது அயோடைடுகளினால் நச்சூட்டம் ஏறபடுதல். தடுமன், வேனற்கட்டி ஆகியவை இதன் அறிகுறிகள்.

iodized oil : அயோடினேற்றிய எண்ணெய் ' கரிம முறையில் இணைக்கப்பட்ட 40% அயோடின் அடங்கிய கசகசா விதை எண்ணெய். இது நிறமற்றதாகவோ வெணமஞ்சள் நிறத்திலோ இருக்கும். இதன கருநிறக் கரைசல்கள் ஊடுகதிர் (எக்ஸ்-ரே) சோதனைகளில் பயன்படுகிறது.

iodoform : அயோடின் நச்சுத் தடை மருந்து : நச்சுத்தடைக் காப் பாகப் பயனபடுத்தப்படும் அயோ டின் சேர்மம்.

iodopsin : அயோடாப்சின் : வைட்டமின் A-இல உள்ள ஒரு புரதப்பொருள். கண்விழியின் பின் புறத் திரையிலுள்ள கழிவடிவக் கட்டமைப்பில் இருக்கும் கருஞ் சிவப்புப்பகுதியின் ஒரு கூறு.

iodoxyl : அயோடாக்சில் : 50% அயோடின கலந்த ஒரு கலவை மருந்து. சிறுநீர்க்கோளாறுகளுக்கு நரம்பு வழியாகச் சிறிது சிறிதாகச் செலுத்தப்படுகிறது.

ion : அயனி (மின்மயத் துகள்) : நீர்க்கரைசலிலும் சேண வெளியி லும் அணு அமைதிக் குலைவால் ஏற்படும மின்செறிவூட்டப்பட்ட துகள்

Ionamin : அயோனாமின் : ஃபெனட்டர்மின என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

ionization : அயனியாக்கம் : கரைசலிலுள்ள ஒரு பொருளைப் பிரித்தல.

iopanoic acid : அயோப்பானாயிக் அமிலம் : புட்யிரிக் அமிலத்தி லிருந்து வழிப்பொருளாக எடுக்கப் படும் சிக்கலான அயோடின்.

IQ : அறிவுத்திற அளவெண், அறி வுத்திறன் குறியீடு ; அறிவுக் குறி விழுக்காடு எண்.

iridectomy : விழித் திரைப்படல அறுவை மருத்துவம்; திரையெடுப்பு; விழித்திரை நீக்கம் : விழித திரைப் படலததின் ஒரு பகுதியைத் துண் டித்து எடுத்தல்.

iridium இரிடியம் (உறுதியம்) அணு எண 77 கொண்ட உறுதி மிகக உலோகத் தனிமம். மார்புப் புறறு நோயைத தொடக்கத்தில் குணப்படுத்தப் பயன்படுகிறது.

iridocele : விழித்திரைப் பிதுக்கம் : விழித்திரைப்படலத்தின் ஒரு பகுதி பிதுங்கியிருத்தல்.

iridocyclitis : விழித்திரை வீக்கம்; திரைச் சூழலழற்சி; திரை குவித் தசையழற்சி: விழித்திரைப்படலம வீங்கியிருத்தல்.

iridodialysis : விழித்திரைப் பிரிப்பு : விழித்திரைப் படலத்தைக் கண ணிமை இணைப்பிலிருந்து தனியாகப் பிரித்தல்.

iridotomy : விழித்திரைக் கீறல்; திரை வெட்டு : விழித்திரைப் படலததில் கீறல் செய்தல்.

iridoblegia : விழித்திரை வாதம் : விழிததிரைப்படலம் செயலற்றுப் போதல.

iris : விழித்திரைப்படலம் : நடுவில் விழிமணிக்குரிய துளையுடைய கரு விழிச சவ்வு.

iritis : விழித் திரை அழற்சி.

irongluconate : அயக்குளுக் கோனேட் : இரும்பின் கரிம உப்பு களில் ஒன்று எரிச்சலைக் குறைக் கக்கூடியது.

iron chelators : அயம் நீக்கிகள்.

irreducible : குறுக்க இயலாத; குறையா; உள்ளொடுங்கா : விரும் பிய நிலைக்குக் கொண்டுவர முடியாதிருத்தல்.

irritable : கூருணர்ச்சியுள்ள; தசைகள், நரம்புகள் வகையில் புறததூண்டுதலினால் எளிதில உயிர்ப்பியக்கம் எழுப்பப்பெறத் தக்க.

irritant, எரிவந்தப் பொருள்; உறுத்தி : எரிச்சலூட்டக் கூடிய ஒரு பொருள்.

ischaemia: குருதிப் பற்றாக்குறை; குருதியோட்டக்குறை : உடலின எநத ஒரு பகுதிக்கும் இரத்தம போதிய அளவு செல்லாதிருத்தல்.

ischaemic heart disease : இதயக் குருதிக் குறைநோய் : இதயத் தசைகளுக்கு போதிய அளவு இரத்தம் செல்லாததால் உண்டாகும் இதயநோய்.

ischium : இடுப்பெலும்பு ; இடுப்பெலிம்பின் கீழ்ப்பகுதி : உட்காரும் போது உடலைத் தாங்குகிற எலும்பு.

islets of langerhans : கணைய உயிரணுக்கள் : கணையம் முழுவதிலும் பரவலாக இருக்கும் தனி வகை உயிரணுக்களின தொகுதி. இவை கணைய நீரைச் (இன்சுலின்) சுரக்கின்றன. இந்நீர் இரத்த ஓட்டத்தில் நேரடியாக ஈர்த்துக் கொள்ளப்படுகிறது.

Ismelin : இஸ்மெலின் : குவானித்தைடின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

isocarboxazid : ஐசோகார்பாக்சாசிட் : சோர்வு நீக்கும் மருந்து.

isoflurane : ஐசோஃபுளூரான் ; விரைந்து ஆவியாகக் கூடிய திரவ மயக்கமருந்து. இது உப்பீனியோடு சேர்ந்த ஒருவகை ஈதர்.

Isogel : ஐசோஜெல் : பேதி மருந்தாகப் பயன்படும ஒருவகைக் குருணை மருந்தின் வாணிகப் பெயர்.

isolation : தனிமைப்படுத்துதல்; ஒதுக்கிவைப்பு; தனியம் : பல்வேறு காரணங்களுக்காக ஒரு நோயாளியை மற்ற நோயாளிகளிடமிருந்து பிரித்துவைத்தல்.

isolation hospital : தனிமை மருத்துவ மனை: தொற்று நோயாளாகளுக்காகத் தனிப்படுத்தபட்ட மருத்துவ மனை.

isolation ward : தனிமைப் பிரிவு: தொற்று நோயாளர்களுக்காகத் தனிப்படுத்தப்பட்ட மருத்துவ மனைப் பிரிவு.

isoleucine: ஐசோலூசின் : இன்றியமையாத அமினோ அமிலங்களில் ஒன்று.

isolevin : ஐசோலெவின்: ஐசோப்பிரினாலின் சல்ஃபேட் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

isometric : சம மட்டுடைய; சம நீள்; இணை அளவு : ஒரே சீரான அளவுள்ள.

isoniazid : ஐசோனியாசிட் : எலும்புருக்கி நோயில் (காச நோய்) பயன்படுத்தப்படும் மருந்து. இது ஐசோநிக்கோட்டினிக் அமிலத்திலிருந்து வழிப் பொருளாக எடுக்கப்படுகிறது.

isoprenaline sulphate : ஐசோப்பிரினாலின் சல்ஃபேட். ஈளை நோய்க்குக் (ஆஸ்த்மா) கொடுக்கப்படும் மருந்து. இது குண்டிக்காய் இயக்குநீரிலிருந்து எடுக்கப்படும் வருபொருள்.

isotopes : ஒரகத் தனிமங்கள் (ஐசோடோப்புகள்): ஒரே பொருண்மையுடன் எடை மட்டும் வேறுபாடுடைய தனிம வகை. கதிரியக்கத் தன்மையுடைய இத்தகைய தனிமங்கள் மருத்துவத்தில் நோய் மருத்துவத்துக்குப் பயன் படுத்தப்படுகிறது.

isopropanal : ஐசோபுரோப்பானால் : கைகளுக்குத தொற்றுத் தடைகாப்பு மருந்தாகப் பயன் படும் வேதியியல பொருள்.

isotone : ஒரெண் அணு : கருவுட் பகுதியில் நொதுமங்களை ஒரே எண்ணாக உடைய அணு.

isoxazole penicilline . ஐசோக்சாசோல் பெனிசிலின் : கொப்புளங்கள், அரச பிளவைகள் ஆகியவற்றைக் குணப்படுத்த வாய்வழி உட்கொள்ளப்படும் மருந்து.

isoxuprine : ஐசோக்சுப்ரின் : கருமுதிர்வுக்கு முன் ஏற்படும்

வயிற்று வலிக்குக் கொடுக்கப்படும் மருந்து.

ispaghula : இஸ்பாகுலா: வயிற்று உப்புசத்திற்குப் பயன்படுத்தப் படும் இயற்கை இழைம உணவு.

isthmus. இணைப்புறுப்பு; உறுப்பு: இடை இணைப்பு: கேடயச் சுரப்பி யின இரு பகுதிகளையும் இணைக் கும ஒடுக்கமான உறுப்புக்கும் இச் சொல பயன்படும்.

itch: சிரங்கு (நமைச்சல்); அரிப்பு; சொறி : தோலில் அரிப்புக்காணும் தொற்று நோய் வகை.

itch-mite : **சிரங்குப்பூச்சி** : தோலைத் துளைத்து, சிரங்குக் குக் காரணமாக இருக்கும் சிறு பூச்சிவகை.

ITU : **தீவிரச் சிகிச்சைப் பிரிவு.**

IUCD : **உளகருப்பைக் கருத்தடைச் சாதனம்.**

IUGR: **உள்கருப்பை வளர்ச்சிக் குறைவு.**

IVF : **சோதனைக் கூடக் கருவுறல்** :

Izal : **ஐசால்** : தொற்றுத் தடை காப்பு மருந்தாகப் பயன்படுத்தப் படும் குழம்பு மருந்தின் வாணிகப் பெயர்.

J

jacquemier's sign : யோனிக் குழாய் நீலம் : தொடக்க நிலைக் கருப்பத்தில் யோனிக் குழாய்ச் சவ்வில் காணப்படும் நீலநிறம்.

jakob-Creutzfeldt disease : ஜேக்கப்-குருட்ஸ்ஃபெல்ட் நோய் : மனத் தளர்ச்சியினால் ஏறபடும் ஒருவகைப் பைத்தியம்.

jaundice: மஞ்சட் காமாலை; மஞ் சனம்: குருதியில்பிலிரூபின் அளவதிக மாவதால் உண்டாகும் நோய். இதனை வேதியியல் முறையில் மட்டுமே கண்டறிய முடியும். தோல் மஞ்சள நிறமாதல், வெண் விழிப்படலம் மஞ்சள் நிறமாதல், சளிச்சவ்வு மஞ்சளடைதல் ஆகியவை இந்நோயின் அறிகுறிகள்.

jawbone : தாடை எலும்பு : கீழ்த் தாடை அல்லது மேல் தாடை எலும்பு.

jectofer : ஜெக்டோஃபர் : அயான் சோர்பிட்டால கைட்ரிக் அமிலத தின் வாணிகப்பெயர். இது ஊசி வழியாகச் செலுத்தப்படுகிறது.

jejunal biopsy : சிறுகுடல் சவ்வுச் சோதனை : வயிற்று நோயைக் கண்டுபிடிப்பதற்குப் பயன்படுத் தபபடும் ஒருவகைச் சோதனை. இடைச்சிறுகுடல் சவ்வு சிறிதளவு வெட்டி எடுக்கப்பட்டு அதில் உயிர்ப்பொருள் ஆய்வு செய்யப் படுகிறது.

jejunostomy : இடைச் சிறு குடல் அறுவை மருத்துவம் : இடைச் சிறு குடலுக்கும் முன் அடிவயிற்றுச் சுவருக்குமிடையில் அறுவை மருநது மூலம் உண்டாக்கப்பட்ட குழல் உறுப்பு.

jejunum இடைச்சிறுகுடல் (நடுச் சிறுகுடல); இடைக்குடல : இலியம என்ற முற்பகுதிச் சிறுகுடலுககும் சிறுகுடல் பினபகுதிக்கும் இடையிலுள்ள சிறுகுடலின பகுதி இது 2 44மி. நீளமுடையது.

jelly test : பாகுச் சோதனை; கூழ்ம ஆய்வு; இழுதுச் சோதனை : பழைய எலும்புருக்கி நோய் மருந் தின் பாகு வடிவம். இது குழந்தை களுக்குத் தோளெலும்புகளுக் கிடையில் செலுத்தப்படுகிறது. அந்த இடத்தில் வீக்கம் ஏற்படுமா னால், நோய் இருக்கிறது என்று பொருள்.

Jelonet: ஜெலோனெட், மெழுகுத் துணி : கன்மெழுகு மென் கட்டுத துணியின் வாணிகப் பெயர்.

jigger: தோல் நோய் ஈ : தோலைத் துளைத்து நோய் உண்டாக்கும் வெப்ப மணடல ஈ வகை.

joint : மூட்டு: எலும்புப் பிணைப்பு; மூட்டிணைப்பு மூன்று எலும்புகளின் மூட்டு.

jointbreaker fever : மூட்டு முறிவுக் காய்ச்சல், "ஓ'நியாங் நியாங்" என்னும் காய்ச்சல்.

joule : யூல் : வேலை ஊக்க ஆற்றலின் அலகு, ஒரு யூல் என் பது, ஒரு கிலோ எடையை ஒரு மீட்டர் தூரத்திற்கு ஒரு நியூட்

டன் விசையினால் நகர்த்தும் போது செலவழியும் ஆற்றல் அளவு.

jugular : கழுத்துச் சார்ந்த : கழுத்து அல்லது தொண்டை சார்ந்த பெரிய நரம்புகள்.



கழுதது சார்நத
பெரும் நரம்புகள

junkfood: அலம்பு உணவு: மானோ சோடியம் கிளட்டாமேட் போன்ற வேதியியல் பொருள்கள் சேர்க்கப்பட்ட அலப்பு உணவு.

junctional tubule : இணைப்பு நுண்குழல்.

junket : தயிர்க்கட்டி : மேலே பாலேடு கவித்த இனிப்பூட்டிய தயிர்க்கட்டி.

juvanile : இளம் பருவம்; சிறார் : இளமைப் பருவத்துச் சிறப்பியல் பான பருவம்.

juxtangina : தொண்டை வீக்கம்; தொண்டையழல்.

juxta-ephiphyseal vessels : முனை வளரி அணுக்கக் குழலகள்.

juxtaposition : அணுக்க விருப்பு.

juxtaspinal: முதுகெலும்பு அருகில்

juxtavasical : சிறுநீர்ப்பை அருகில.

K

kahn test: கான் சோதனை; கான் ஆய்வு : கிரந்தி நோயைக் (மேகப் புண்) கண்டறிவதற்கான ஓர் ஊனீர்ச் சோதனை.

kalaazar : காலா-அசார்; கருங் காய்ச்சல் : கீழ்த்திசை வெப்ப மண்டலங்களில நிலவும் கடுங் கொள்ளைநோய். இரத்தச்சோகை காய்ச்சல், மண்ணீரல் அழற்சி, சோர்வு ஆகியவை இந்நோயின் அறிகுறிகள். இது ஒருவகை ஒட்டுண்ணியால உண்டாகி மணற்பூச்சியினால் பரவுகிறது.

kanamycin : கானாமைசின் : ஸ்டிரெப்டோமைசின் போன்ற உயிர் எதிர்ப்பொருள்.

kaolin : காவோலின் : இயற்கை யாகக் கிடைக்கும் அலுமினியம் சிலிக்கேட். வயிற்றுப் போக்கு, உணவு நச்சு ஆகியவற்றுக்கு வாய வழி கொடுக்கப்படுகிறது.

kaposi's sarcoma : காப்போசிக் கழலை : உக்கிரத்தன்மையுடைய ஒருவகைக் கழலை. இது முதலில் பாதங்களில் பழுப்பு நிற அல்லது கருஞ்சிவப்பு நிறப் படலமாகத் தோன்றித் தோல் முழு ம் பரவு கிறது. இது, "எய்ட்ஸ் என்னும் ஏமக்குறைவு நோயைக் கடுமை யாக்கும் என இப்போது கருதப் கிறது.

kay's test : கேய் சோதனை : பெருகுலிக்கும் ஹிஸ்டாமின் சோதனை.

keflex : கெஃப்ளெக்ஸ் : செஃபா லெக்சின் மெனோ ஹைட்ரேட் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

kelfizine : கெல்ஃபிசின் : சல்ஃபா மெட்டோபைசின் என்ற மருந் தின் வாணிகப் பெயர்.

kell factor : கெல் காரணி : காக் கசியர்கள 10% பேருக்கு பரம் பரையாகக் காணப்படும் ஒருவகை குருதிக் குழுமம் சார்ந்த காரணி.

keloid : வடுத் திசு வளர்ச்சி; வடு மேடு; தழும்பேற்றம் : தழும்புத் திசு அளவுக்கு அதிகமாக வளர்ச்சி யடைதல். இதன் உறுப்பு சுருங்கி உருத்திரிபு ஏற்படும். சில வகைக் கறுப்புத் தோல்களில் இது ஏற்படு கிறது.

kemadrin · கெமாட்ரின் : புரோ சைக்ளிடின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

kemicetine : கெமிசெட்டின் ; குளோராம் பெனிக்கால் என்ற மருந்தின் வர்ணிகப் பெயர்

keratectomy . விழிவெண்படல அறுவை மருந்து : விழிவெணபட லத்தை அறுவை மருநது மூலம் துண்டித்து எடுத்தல்.

keratinization : கொம்புப் பொருள மாற்றம் : வைட்டமின் A குறைபாடு காரணமாகக் கொம் புத் திசு மாற்றமடைதல்

keratitis : விழி ஊடுருவு படல அழற்சி; விழி வெணபடல அழற்சி;

ஒளிப்படல அழற்சி: விழிவெண் படலத்தில் ஏற்படும் வீக்கம்.

kerato conjunctivitis : **கண் நோய், கண் சவ்வழற்சி** : விழி வெண்படலமும், இமையிணைப் படலத்தில் ஏறபடும் வீக்கம். இது ஒரு தொற்று நோய்.

kerato conus : **விழி வெண்படலப் பிதுக்கம்; கூம்பு விழி** : விழி வெண் படலம கூமபுபோல் பிதுக்க மடைநதிருத்தல்.

keratoiritis : **விழித்திரை வீக்கம்: விழித்திரை அழற்சி** : விழிவெண் படலமும் விழித்திரைப்படலமும் வீக்கமடைதல்.

keratomalacia : **விழிவெண் படல நலிவு; விழி நைவு** : வைட்டமின் A குறைபாடு காரணமாக, விழிவெண்படலம் நலிவடைதல்.

keratome : **விழி அறுவைக் கத்தி: விழிவெட்டி** : விழி வெண்படலத் தைக் கீறுவதற்கு ஏற்றவாறு ஒரு சட்டுவக் கரண்டியுடைய ஒரு தனி வகைக் கத்தி.

keratopathy : **விழிவெண்படல நோய்; விழி நோய்.**

keratophakia:**விழியாடி பொருத்து தல்** : தொலைப் பார்வைக கோளாறினைச் சரிப்படுத்துவதற் காக விழி வெணபடலத்திற்குள் உயிரியல் முறை ஆடியை அறுவை மருததுவம மூலம் பொருத்துதல்.

keratosis : **தோல் புடைப்பு:முள் உரு வளர்ச்சி; கரடு தட்டல்** : தோலின் கொம்புப் படுகைத் தடி மனாதல. இது பாலுண்ணிபோல் புடைப்பாகத தோனறும்.

kerecid . **கெரசிட்** . ஐடோக்சூரிடின் எனற மருந்தின் வாணிகப் பெயர்.

kerion . **உச்சித் தோல் சீழ்க்கட்டி; மண்டைத் தோல சீழ்க்கட்டி;தலைத் தோல் கட்டி; சீழககூடு** : உச்சி வட்டக் குடுமித் தோலில் ஏற்படும் சதுப்புத் தன்மையுடைய சீழ்க் கட்டி. இது முடியின் படர் தாமரை நோயுடன் தொடர் புடையது.

kernicterus : **காமாலை மூளைக் கோளாறு; பித்தநீர் மாசுபாடு** : மூளையில் அடி நரம்புக் கணுவில் பித்தநீர் மாசுபடுதல். இதனால் மனக்கோளாறு ஏற்படக் கூடும்.

kernig's sign : **முழங்கால் மூட்டு வளைவு** : தொடை இடுப்புப் பகுதிக்குச் செங்குத்தாக வளைந் திருக்கும்போது முழங்கால் முட்டிக்காலை நீட்டுவதறகு இய லாதிருத்தல். தண்டு மூளைக் கவி கைச் சவ்வழற்சியின்போது இது ஏற்படுகிறது.கெர்னிக் விளக்கியது.

ketalar : **கேட்டலார்** : கேட்டாமின என்ற மருநதின் வாணிகப் பெயர்.

ketamine : **கேட்டாமின்** : நரம்பு வழியாகச் செலுத்தப்படும் நோவகற்றும் மருந்து.

ketonaemia : **குருதிக் கரிமச் சேர் மம்** : இரத்தத்திலுள்ள கரிமச் சேர்மப் பொருள்கள்.

ketonuria: **சிறுநீர் கரிமச் சேர்மம்** : சிறுநீரில் கரிமச சேர்மப் பொருள் கள இருத்தல்.

ketoprofen:**கேட்டோபுரோ:பென்.** வீக்கத்தைக் குறைத்து நோவகற றும் மருந்து. கீலவாதம், வாதம போன்றவறறுக்குப் பயனுடையது.

ketosis **குருதிக் கரிமச் சேர்மத் திரட்சி** : இரத்தவோட்டததில் கரிமச்சேர்மப் பொருள்கள் அதிக மாகச் சேர்ந்திருத்தல்.

ketovite : **கேட்டோவைட்** : வைட்டமின C, B_1, B_6, ஃபோலிக் அமிலம் ஆகியவை அடங்கியுள்ள மாத்திரை மற்றும் திரவத்தின் வாணிகப் பெயர்.

kidney : சிறுநீரகம்; சிறுநீர் வடிப்பி: இரத்தத்திலிருந்து கழிவுப்



சிறுநீரகம

பொருளைப் பிரித்துச் சிறுநீராக்கி வெளியேற்றும் உறுப்பு.

kinaesthesis : தசையசையுணர்வு; இயங்குணர்வு

kinetic : இயக்கம் சார்ந்த; இயக்க வியல் : இயக்கத்தின் விளைவுடைய.

kleptomania : திருட்டுப் பழக்கம்; அனிச்சைத் திருட்டு; திருட்டு வெறி: மனக்குழப்பம் காரணமாகக் கட்டாயமாகத் திருடும் பழக்கம்.

klumpke's paralysis : முடக்கு வாதம் : கை மற்றும் முன்கைத் தசையில் முடக்குவாதம் ஏற்பட்டு மெலிதல். மேற்கை நரம்புகள், கழுத்துப் பரிவு நரம்புகள் ஆகியவற்றின் அடிவேர்களில் காயம் காரணமாக உணர்வு மற்றும் கண் பார்வைக் கோளாறுகள் உண்டாகின்றன. கிளம்ப்சே விவரித்தது.

knee : முழங்கால் மூட்டு; முட்டி : துடையெலும்பின் கீழ்முனை, முன்கால் எலும்பின் தலைப்பகுதி இவை இணையும்கீல்மூட்டு.

knuckles : கைமுட்டி; விரல்முட்டி: கைவிரல்களுக்கும் உள்ளங்கை எலும்புகளும் இணையுமிடையிலான பின்புறப் பகுதி.

kohler's disease : எலும்பு வீக்கம்: கைகால்களிலுள்ள படகு வடிவ எலும்பில் ஏற்படும் வீக்கம். இது 3-5 வயதுக் குழந்தைகளுக்கு ஏற்படுகிறது.

koilonychia : கரண்டி நகம்; கூண்டு நகம்; குழி நகம் : அயச்சத்துக் குறைபாடு காரணமாக உண்டாகும் சோகையினால் ஏற்படும் கரண்டி வடிவ நகங்கள்.

konakion : கோனாக்கியான் : ஃபைட்டோமினாடியோன் என்ற மருந்தின வாணிகப் பெயர்.

koplik's spots : வாய் வெண் புள்ளி : தட்டம்மையின் தொடக்க நாட்களில் வாயினுள் ஏற்படும் சிறிய வெண் புள்ளிகள்.

korsakoff psychosis syndrome: போதைப் பைத்தியம் : மதுபானப் போதையினால் மனத்தளர்ச்சி உண்டாகி ஏற்படும் பைத்தியம். இந்நோய் கண்டவர் தன்னுணர்வுடனும், விழிப்புணர்வுடனும் இருப்பார். ஆனால் அண்மை நிகழ்ச்சிகள் மறந்து போகும்.

krabbe disease : மைய நரம்பு மண்டல நலிவு : மைய நரம்பு மண்டலம் நலிவுறுவதால் உண்டாகும் மரபு நோய் இது மனக் கோளாறு நிலையுடன் தொடர்புடையது. கிராபே விவரித்தது.

krukenberg tumour : கருப்பைக் கட்டி . பெண் கருப்பையில் உண்டாகும் இரண்டாம் நிலை உக்கிரமான கட்டி. முதல் நிலைக்கட்டி இரைப்பையில் உண்டாகிறது.

kur : மைய நரம்பு நோய் : மைய நரம்பு மண்டலத்தில் மெல்ல மெல்ல உண்டாகும் கிருமி நோய். இது மனித இறைச்சியை உண்பதால் உண்டாகிறது. நியூகினியில் மலை வாழ் மக்களிடம் பெரும்பாலும் ஏற்படுகிறது.

kwashiorkor : புரதக் குறைபாட்டு நோய்; சவலை நோய்; புடைச் சவலை : கடும் புரதச் சத்துக் குறைபாட்டினால் பிறந்த குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்கும் ஏற்படும் நோய். இதனால், இரத்தசோகை, உடல் நலிவு, நுரையீரல் வீக்கம் ஏற்பட்டு இறுதியில் மரணம் விளையும்.

kyphosis : **முதுகுத் தண்டு வளைவு நோய்; கூனல் (முதுகு) ; கூன்:** முதுகுத் தண்டு அளவுக்குமீறி முன் பின்புறமாக வளைந்திருக்கும் நோய்.



கூனல் முதுகு

kyphotic : கூனன் :

L

labetalol : **லேபெட்டாலோல் :** *மிக உயர்ந்த குருதி அழுத்தத்தைக் கட்டுப்படுத்த ஊசிமூலம் செலுத்தப்படும் ஆல்ஃபா-பீட்டா தடுப்பு மருந்து. இதனை வாய்வழியாகவும் கொடுக்கலாம்.*

labia : **பெண்குறி இதழ் :** *இதழ் போன்ற பெண் குறியின் பகுதி.*

labile : **நிலையற்ற, நிலையா, சீரற்ற :** *நிலைமாற்றமடையக் கூடிய; பொருள் மாற்றம் பெறக் கூடிய.*

lability : **நிலையின்மை, நிலை பிறழும் :** *நிலைமாறும் தன்மை.*

labioglossolaryngeal : **வாய் முடக்குவாதம் :** *உதடுகள், நாக்கு குரல்வளை ஆகியவற்றில் படிப் படியாக ஏற்படும் முடக்குவாதம்.*

labyrinth : **காதுத் திரிபுத்துளை;**



காதுத திரிபுத் துளை

செவி வளை : *உட்காதின் திருக்கு மறுக்கான துளை.*

labour : **பிள்ளைப் பேற்றுவலி; பேறுகை வலி :** *குழநதை பிறப்பதற்கு உண்டாகும் இடுப்புவலி. முதற்கட்டத்தில் கழுத்துப்பகுதி முழுமையாக விரிவடைகிறது; இரண்டாம் கட்டத்தில் குழந்தை வெளிவருகிறது; மூன்றாம் கட்டத்தில் நச்சுக்கொடி வெளியேற்றப் படுகிறது.*

labyrinthitis : **உட்காது அழற்சி.**

lacerated wound : **கீறல் காயம்; சிராய்ப்பு; குதறிய காயம்:** *திசுக்கள் கிழிந்து ஏற்படும் சிராய்ப்புக் காயம்.*

lacrimal, lachrymal; lacrymal : **கண்ணீர்க்கலம் சார்ந்த; கண்ணீரக.**

lachrymal canal ; **கண்ணீர்க் கால்.**

lachrymal duct : **கண்ணீர்க் குழாய் :** *கண்ணின் உள்மூலையிலிருந்து கண்ணீரை மூக்கடிக்குக் கொணரும் நரம்புக் குழாய்.*

lachrymal sac : **கண்ணீர்ப்பை.**

lachrymal vase. **கண்ணீர்க்கலம்**

lachrymals : **கணணீர் உறுப்புகள்** *கணணீர்த் தொடர்புடைய உறுப்புகள; கண்ணீர்ச் சுரப்பி, கண்ணீர்க்கால் முதலியவற்றின தொகுதி.*

lacrimation : **கணணீர் வடிதல்; கண்ணீர்ச் சுரப்பு,கண்ணீர்ச் சொறிதல் ,** *அழுகையினால் கண்ணீா வடிதல்.*

lactagogue : **பால் சுரப்பு மருந்து; பால்சுரப்பூக்கி :** *பால் சுரப்பைத்*

தூண்டுவதற்குக் கொடுக்கப்படும் மருந்து.

lachrymal gland : கண்ணீர்ச்

கணணீர்ச சுரப்பி

சுரப்பி : *கண்கடையிலுள்ள கண்ணீர்ச் சுரப்பி.*

lactalbumin: பால் புரதம். *எளிதில் சீரணமாகக் கூடிய இரு பால் புரதங்களில் ஒன்று.*

lactation : (1) பால் சுரப்பு; பாலூட்டல் : *தாயின் மார்பகத்திலிருந்து பால் சுரத்தல்.*

(2) பால் கொடுத்தல் : *குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுத்தல்.*

lacteals : பால் நாளங்கள்; குடற் பால் குழாய்; பாற்குழல் : *குடல் நீர்மங்களால் உண்டாக்கப்படும் பால் போன்ற கணையம், பித்தம் ஆகிய நீர்மத்தைக் கொண்டு செல்லும் நாளங்கள்.*

lactic acid : லாக்டிக் அமிலம் : *பாலை புளிக்கச் செய்யும் அமிலம்.*

lactiferous : பால் சுரப்பிக்கிற; பாலேந்தி : *பால்போன்ற நீர்மத்தை உண்டாக்குகிற.*

lactogenic : பால் சுரப்புத் தூண்டல், பாலூக்கி; பலசுரப்பூக்கி.

lactometer : பால்மானி : *பாலின் ஒப்பு அடர்த்தியை அளவிடுவதற்கான கருவி.*

lacto-protein : பால் புரதம் : *பாலில உள்ள வெண்கரும பொருளாகிய புரதம்.*

lactose : பாலிமம், பால் சர்க்கரை: *பாலில் உள்ள சர்க்கரை. குழந்தைகளுக்குக் கொடுப்பதற்கான நீர்த்த பசும்பாலில் கார்போஹைட்ரேட்டை அதிகமாக்குவதற்கு இது சேர்க்கப்படுகிறது.*

lactosuria : சிறுநீர்ச் சர்க்கரை; பால் சிறுநீர்; நீரிழிவு.

lacuna : இடைக் குழிவு; சிறுபள்ளம்; வெற்றுக்குழி : *எலும்பு, தசை முதலியவற்றிலுள்ள இடைக் குழிவான பகுதி.*

laevulose, levulose : பழச்சர்க்கரை : *பல்வேறு இனிப்புக் கனிகளில் காணப்படும் சர்க்கரைப் பொருள். தேன, கரும்பு ஆகியவற்றில் உள்ள சர்ககரை இதில் அடங்கும்.*

lamella : தாள் படலம்; நுண் தகடு · *செதிள் அடுக்கு; தசைச் சவ்வு; எலும்புத்தகடு.*

lamina : மென்தகடு; எலும்புப் பட்டை; தகடு : *எலும்பினாலான தாள்படலம்; சவ்வு.*

laminectomy : மென்தகடு அறுவை மருத்துவம்; தகடெடுப்பு : *மென்தகட்டினை அகற்றுவதற்கான அறுவை மருத்துவம்.*

lamprene : லாம்ப்ரென் : *குளோஃபாசிமின் என்ற மருந்தின் பெயர்.*

lanolin : ஆட்டுக் கம்பளச் சத்து : *தைலவகை மூலப்பொருளான ஆட்டுக்கம்பளச் சத்து. ஆட்டுக் கம்பளத்திலிருந்து எடுக்கப்படும் கொழுப்புப் பொருள். இது களிம்புப் பொருளாகப் பயன்படுகிறது.*

lanoxin : லானோக்சின் : *டைகோக்சின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.*

laparotomy : அடிவயிற்று அறுவை; உதரத் திறப்பு: வயிற்றுத திறப்பு: *அடிவயிற்றின் புறத்தோட்டின் அறுவை.*

laperocele : குடல்சரிவு; இடுப்பி லுள்ள தசைகள் விலகுவதால் ஏற் படும் குடல் சரிவு

Largactil : லார்காக்டில் : அமிட் ரிப்டிலின் என்ற மருந்தின் வாணி கப் பெயர்.

laroxyl : லாரோக்சில் : அமிட்ரிடி லின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

larva : முட்டைப்புழு, கூட்டுப்புழு; புழுப்பருவம்; இளஉயிரி : அரை குறை உருமாற்றமடையும் உயிர் களின முதிரா வடிவம்.

larvicide : முட்டைப்புழு அழிப் பான்; முட்டைப் புழுக் கொலலி : முட்டைப்புழுவை அழிததிடும் மருந்து.

laryngeal : குரல்வளை சார்ந்த மிடற்று.

laryngectomy : குரல்வளை அறுவை மருத்துவம், குரல்வளை வெட்டு; மிடற்றெடுப்பு : குரல் வளையை அறுவை மருத்துவம் மூலம் அகற்றுதல்.

laryngitis : குரல்வளை அழற்சி, மிடற்றழற்சி : குரல் வளையில ஏற் படும் வீக்கம்.

laryngologist : குரல்வளை நோய் வல்லுநர்; மிடற்றியலார்.

laryngology : குரல்வளை நோயி யல்; மிடற்றியல் : குரல்வளை நோய்கள் பற்றிய ஆய்வியல்.

laryngopharyngectomy: தொண் டை அறுவை மருத்துவம் : குரல் வளையையும அடிததொண்டை யின் கீழ்ப்பகுதியையும் துண்டித்து அகற்றுதல்.

laryngoscope : குரல்வளை ஆய் வுக் கருவி; குரல்வளை நோக்கி; மிடறுகாட்டி : குரல்வளையைக் கூர்நது ஆயவதற்குப் பயனபடும் துணைக் கருவித தொகுதி.

laryngotomy : உட்குரல்வளை அறுவை மருத்துவம்; குரல்வளை வெட்டு; மிடற்றுத் திறப்பு : வெளி யிலிருநது குரல்வளையின் உட் பகுதியில் வெட்டும் அறுவை மருத்துவ முறை.

laryngotracheitis குரல்வளை மூச் சுக் குழாய் அழற்சி: குரல்வளையி லும் குரல்வளைப்பை தொடரும். மூச்சுக்குழாயிலும்ஏற்படும்வீக்கம்.

laryngotracheo bronchitis : சுவாச குழாய் வீக்கம்; மூச்சுக் குழல் அழற்சி : குரல்வளை, குரல் வளைக் குழாய், மூச்சுக் குழாய் கள் ஆகியவற்றில் ஏற்படும் வீக் கம்.

lasen syndrome : மூட்டுப் பிறழ்ச்சி : பனமுக மூட்டுப் பிறழ்ச் சிகள். லேசன் விவரித்தது.

laser : லேசர் கற்றை; வீச்சுமிழ் ஒளி : தூண்டிவிட்ட கதிரியக்க வெளிப்பாட்டின மூலம் ஒளிப் பெருக்கம் செய்தல். இதனால் உண்டாகும் வெப்பம் திசுக்களை உறையவைக்கிறது. இது புற்று நோய் மருததுவத்திற்குப் பயன் படுகிறது.அறுவைக்கும் பயன்படும்.

Lassa fever : குருதிப் போக்குக் காய்ச்சல் : கிருமிகளினால் உண் டாகும் இரத்தப் போக்குக் காய்ச் சல்களில் ஒன்று. இது பீடித்த 3-16 நாட்களில் அறிகுறிகள் தோன்றும். நச்சுக்காய்ச்சல் (குடற்காய்ச்சல்; டைஃபாய்டு) குருதி நச்சூட்டு போன்ற நோய் களில் நோய்க் குறிகள் தோன் றும். ஆறாம் நாள் வாயி லும் தொண்டைப் புண்கள் உண டாகும் இந்நோய் கண்டவர் களில் 67% பேர் இறந்து விடுகி றாாகள். இந்நோயாளிகளைத் தனிமைப்படுததி மருத்துவமளிக்க வேண்டும்.

lassar's paste : லேசர் பசை : துத்தநாக ஆக்சைடு மாவுப்

பொருள். சாலிசலிக் அமிலம் ஆகியவற்றை மென்கன் மெழுகில் கலந்த பசை மருந்து. படை நோய்க்குப் பயன்படுத்தப்படு கிறது.

latent heat : உட்செறி வெப்பம்; மறைந்துள்ள வெப்பம் : *புதை சூடு. வெப்ப நிலை மாறாமல், பொருளின் நிலையில் மாறுதல் ஏற்படுத்தும் வெப்பம்.*

laudanum : சாராய அபினிக் கரைசல் : *சாராய அபினிக் கரைசலின் பழைய பெயர்.*

laxatives : பேதி மருந்துகள்; மலமிளக்கிகள் : *குடலிளக்க மருந்துகள்; மலச்சிக்கலின் போது மலத்தை இளக்கி எளிதாக வெளியேற்றுவதற்குப் பயன்படுத்தப் படும் மருந்துகள்.*

LE : தோல்படை உயிரணுக்கள் : *தோல்படை நோய்கண்ட நோயாளிகளிடம் காணப்படும் உயிரணுக்கள்.*

lead : ஈயம்; காரீயம்; *நச்சு உப்புகள் உள்ள மென்மையான உலோகம். இதனால் தோலில் கொப்புளம், வலி, வீக்கம் உண்டாகும். இதைக் குணப்படுத்த அபினி தடவுகிறார்கள்.*

lecithinase : லெசித்தினேஸ் : *லெசித்தின் ஆக்கச் சிதைவினை ஊக்குவிக்கும் ஒரு செரிமானப் பொருள்.*

Lederfen : லெடெர்ஃபென் : *ஃபென்பூஃபென் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.*

Ledermycin : லெடெர்மைசின் : *டிமெத்தில் குளோர்டெட்ராசைக்ளின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.*

leech : அட்டை; சூப்பட்டை : *குருதி உறிஞ்சும் நீர் வாழ் உயிரினம்.*

legumen : பயற்றங்காய் : *உணவாகப் பயன்படும் பயற்றினச் செடியின் பகுதி.*

legumes : பயற்றினம், அவரையினம் : *பட்டாணி, அவரை, மொச்சை போன்ற பயற்றினத் தாவரங்கள்.*

lenitive : நோவகற்று மருந்து : *பிணி தணிக்கும் மருந்து.*

lens : வில்லை; விழி வில்லை; விழியாடி; கண் வில்லை : *கண்ணின படிக நீர்மம் பளிக்கு நீர்மங்களுக் கிடையேயுள்ள கதிர் சிதறுவிக்கும் அமைவு.*

lenticular : வில்லை வடிவான : *கண்ணின் விழி வில்லை வடிவான.*

lentil : அவரை விதை : *புரதம் பெருமளவு உள்ள அவரை விதை. இது மலிவானது; ஊட்டச்சத்து நிறைந்தது.*

lentizol : லென்டிசோல் : *அமிட்ரிப்டிலின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.*

leontiasis : சிங்கமுகத் தோற்றம்; சிங்கமுகம்; சிங்கத் தலை; பெருந் தலை : *முகமும் தலையும் பருத்துச் சிங்கம் முகம்போல் தோற்றமுண்டாக்கும் ஒருவகை நோய்.*

பாதுகாப்பு இன்றியமையாத தாகும்.

periostitis : எலும்புச் சவ்வழற்சி எலும்புறை அழற்சி : எலும்புகளை மூடியுள்ள சவ்வில் ஏற்படும் வீக்கம்.

peripartum : பிறப்புக் காலம் : குழந்தை பிறக்கும நேரம். இதனைப் "பேறுகாலம்" என்பர்.

peripheral : புற உறுப்புகள்; புற; புறத்திய; வெளிப்புற : ஓர் உறுப்பின அல்லது உடலின புற உறுப்புகள் சார்ந்த.

peripheral nervous system : வெளி நரம்பு மண்டலம்; புற நரம்பு மண்டலம்.

periportal : கல்லீரல் சூழ்ந்த: கல்லீரல் சிரையைச் சுறறியுளள.

periproctitis : குதவாய் அழற்சி; மலக்குடல் வாய் அழற்சி; குதச் சுற்றழற்சி : மலக்குடலையும, குதவாயையும் சுற்றி ஏற்படும வீக்கம்.

perirenal : சிறுநீரகம் சூழ்ந்த; சிறுநீரகத்தைச் சுற்றி, சிறுநீரகப் புறம் : சிறுநீரகததைச் சுற்றியுள்ள,

perisplenitis : மணணீரல் உறையழற்சி; மண்ணீரல சுற்றழற்சி : மண்ணீரலிலும் அதையடுதத கட்டமைவுகளிலும் உள்ள உறைகளில் ஏற்படும் வீக்கம்.

peristalsis : வயிற்றுத் தசை இயக்கம்; குடல் அலைவு; குடல தசை அலைவு; அலைவியககம் : குடலிலுள்ள பொருள்கள் வயிறு நெடுகிலும் நகர்ந்து செல்லும் வகையில குடலில் ஏற்படும அசைவியக்கம் ஒரு தசைத் தளாவு அலையைத் தொடர்ந்து இந்த அசைவு அலைவு தோனறும். உணவுச் சாரம எளிதில் செல்வதற்கு இசைவாக உணர்வறற வட்டாகார மான தன்னியக்கத் தசைச் சுருக்க அலைகள் உண்டாகும்.

peritomy : இமையிணைப் படல அறுவை; சுற்று வெட்டு: கண்ணின் கருவிழிப் படலம் சுருங்கிவிடாமல் தடுக்க கருவிழிப் படலத்தின் விளிம்பிலுள்ள இமையிணைப் படலத்தின் ஒரு பகுதியை வெட்டியெடுததல்.

peritoneum : வயிற்று உறுப்பு உறை (வபை); உதர உறை; வயிற்றுள்ளுறை : அடிவயிற்று உட்பகுதியைச சூழ்ந்துள்ள நீரடங்கிய இரட்டைச் சவ்வுப்பை.

peritonitis : வபை அழற்சி; வயிற்றறை உறை அழற்சி; உதரப் பையுறை அழற்சி ; வயிற்று உறுப்பு உறையில (வபை) ஏறபடும் வீக்கம்.

peritonsiliar abscess (quinsy) : தொண்டைச் சதை அழற்சி; தொண்டைச் சதை சுற்றுச் சீழ்க்கட்டி; தொண்டை வீக்கம்; உளநாக்குப் பழுப்பு : தொணடைச சதையிலும, அதைச் சுற்றியுளள நெகிழ்வான திசுக்களிலும ஏற்படும் கடும் அழறசி.

periumbilical : தொப்புள சூழ்ந்த; உந்திச் சுற்று: தொப்புளைச் சுற்றியுள்ள.

periurethral : சிறுநீர் வழி உறை சார்ந்த : சிறுநீர் வழி உறையைச சுற்றியுள்ள.

periurethralabscess: சிறுநீர் வழி உறை புறச் சீழ்க்கட்டி.

perivascular : குருதி நாளம் சூழ்ந்த; குருதிக் குழாய்ச் சூழல் : ஒரு குருதிநாளத்தைச் சுற்றியுள்ள.

perleche: உதடு நக்குதல்; கோட்டுவாய்ப்புண் : உதடு சிதைவுறுதல், உதட்டில் பொருக்குப் படர்தல் காரணமாக உதட்டை நாக்கால் நக்கிக் கொண்டிருத்தல். இது தெற்றுப் பல், பாக்டீரியா நோய், வைட்டமின் பற்றாக்குறை, கை சூப்புதல் காரணமாக ஏற்படலாம.

permeability: ஊடுருவும் தன்மை; ஊடுருவு திறன்; ஊடியல்பு . உடல்

திரவங்களில் கரைந்துள்ள பொருள்கள் உயிரணுக்களின இழைமங்களின் அல்லது உயிரணுப் படலஙகளின் வழியே எந்த அளவுக்கு ஊடுருவிச் செல்லக் கூடியவை என்ற திறன்.

pernicious anaemia : **கடுங் குருதிச் சோகை; உயிர் போக்கும் குருதிச் சோகை; கொடுஞ்சோகை:** மரணம் விளைவிக்கக் கூடிய கடுமையான குருதிச் சோகை நோய்.

perniosis : குளிர்ப் பரு : கடுங் குளிர் காரணமாக உண்டாகும் தோல் பாதிப்பு. குளிர்படும்போது தசைச் சுரிப்பு ஏற்பட்டு இது உணடாகிறது.

peroidin : **பெராய்டின் :** பொட்டாசியம பெர்க்குளோரேட் எனற மருந்தின வாணிகப் பெயர்.

peromelia : **உறுப்புத் திரிபு: பிறவி உறுப்புக் குறை;** முடப பிறவி : ஓர் உறுப்பு ம்காரமாகத தரிபடைந்திருத்தல்.

peroral ; வாய்வழியே : சிறுகுடல் உயிர்ப் பொருள் ஆய்வு போன்று வாய்வழி ஆய்வு.

peroxide ; **பெராக்சைடு :** ஹைட்ரஜன பெராக்சைடு.

Perphenazine : **பெர்ஃபினாசின் :** உறக்கமூட்டுதல், நோவகறறும் மருந்து.

persantin : **பெர்சான்டின்:** டைப்பிரிடாமோல் எனற மருநதின் வாணிகப் பெயர்

personality : **ஆளுமை; தன்மை; பணபியல தொகுப்பு.** ஒரு மனிதரை வேறுபடுத்திக காட்டும் அவரது பலவேறு மனப்போக்குகள் மற்றும குண இயல்புகள. தனிமனிதப் பண்புகளின் மொததத தொகுதி.

perspiration : **வியர்த்தல், வியர்வை; இயலபான வியர்வை :** வியர்வைச் சுரப்பிகளிலிருந்து தோல துளைகளின் வழியாக வியர்வை வெளியேறுதல்.

perthes'disease : **தொடை ஊனச் சிதைவு:** தொடை சார்ந்த நோயில் குழாய் நாளச் சிதைவு ஏற்படுதல். தொடை முனையில் திரிபு ஏற்பட்டு மூட்டிணைப்பு மாறுதல்கள் ஏற்படலாம்.

pertussis : **கக்குவான்; கக்கு இருமல்; கக்குவான் நுண்ணுயிர் ;** குழந்தைகளுக்கு ஏறபடும ஒருவகை இருமல நோய். இது ஒரு தொற்று நோய். கடுமையாக உள் மூச்சு வாங்கி ஈளை இருமல் ஒலி உண்டாகும்

pes : **பாதம் போன்ற; அங்கால்; பாதம் :** பாதம் போனற கட்டமைவு.

passary: **அல்குல் வாயில் செருகும் சதனம்;செருகுமருந்துக்குச்சி;புழை. வில்லை :** கருப்பையை நிலை பிறழாமல் தாங்குவதற்காக அல்குல் வாயிலில் பெண்கள் பொருத்திக் கொள்ளும் கருவி; கருவை நிலைப் படுத்தும் குறிவாயினுள் கரையும் மருந்து. அல்குல் வாய்ப்புழை வழி மருந்து ஏற்ற பயன்படும் வில்லை.

pessimism: சோர்வு மனப்பான்மை; தோல்வி மனப்பான்மை; துன்ப வுணர்வு : எதிலும் தீமையையே காணும மனப்போக்கு; உலகில் அனைததுமே தீயவை என்று கருதும் மனப்பான்மை.

pest : **தொற்று நோய்.**

pest-house : தொற்று நோய் மருத்துவமனை

pesticides : **பூச்சிகொல்லி ·** பூச்சிகளைக கொல்லும் மருந்துகள்.

patechia: **குருதி சொட்டுக் கசிவு; சிறு குருதி ஒழுக்கு; நுண்கசிவு:** குருதிக குழாயகளிலிருநது இரத்தம் வெளிப்படும் சிறு பகுதி. தோலில் புள்ளி அளவில் இருநது குண்டூசித தலையளவுவரை இரத்தக் கசிவு. அழுத்தினாலும் நிறம் மாறாது சிவப்பாகவே இருக்கும்.

pethidine : பெத்திடின்; மூளையில் உணர்வின்மை உண்டாக்கி நோவ கற்றும் ஒரு செயற்கை மருந்து. இது அறுவைச் சிகிச்சைக்கு முன்பும் பின்பும் மார்ஃபினுக்குப் பதிலாகக் கொடுக்கப்படுகிறது. இதனை வாய்வழியாகவும் நரம்பு ஊசி மூலமும் செலுத்தலாம். இது இரத்தழுத்தத்தைக் குறைக்குமாகையால், இதனைக் கவனமாகப் பயன்படுத்த வேண்டும்.

pethilorfan : பெத்திலோர்ஃபான் : பெத்திடினும்,லெவல்லோர்ஃபான் டார்ட்டிரேட்டும் கலந்த ஒரு தயாரிப்பின் வாணிகப் பெயர். இது மயக்கத்தை எதிர்க்கக் கூடியது. இது உணர்ச்சியின்மையைப் பாதிக்காமல் மூச்சோட்டத் தாழ்வினைக் குறைக்கிறது.

petrous : பாறை போன்ற; பொட்டெலும்பு சார்ந்த : கல்போல் மிகவும் கடினமான பொட்டெலும்புப் பகுதி சார்ந்த.

peyer's patches : திரள் நிணநீர்க் குருணைகள்; பேயர் திட்டு : சிறுகுடலில் நிணநீர்த் திசுக்களின் தட்டையான பட்டைகள். இது முக்கியமாக பின் சிறுகுடலில் காணப்படும். இது, குடற் காய்ச்சல் (டைஃபாய்டு) நோய் தோன்றுமிடம். இவற்றைத் 'திரள் நிணநீர்க் கரணைகள்' என்றும் கூறுவர்.

phagocyte : துகள் சூழ் உயிரணு; விழுங்கணு : பாக்டீரியாக்களையும், மற்றத் துகள் பொருள்களையும் சூழ்ந்து கொள்ளும் நிணநீர உயிரணு; நோயணுக்களை ஈர்த்துக் கொண்டு உடலை நோய்களிலிருந்து காக்கும் ஆற்றலுள்ள நிணநீர் அணு.

phagocytosis : துகள் சூழ் உயிரணு சூழ்தல் : பாக்டீரியாவை அல்லது பிற துகள் பொருள்களைத் துகள் சூழ் உயிரணுக்கள் சூழ்ந்து அணுக்குள் ஈர்த்து உட்கொள்ளல்.

phakoemulsification : பசைக் குழம்பாக்கம் : முதிர்ச்சியடைந்த கண்படிக ஆடி இழைகளைத் திரவமாக்குவதற்குப் புறஒலி அதிர்வு பயன்படுத்தப்படுகிறது. திரவமான ஆடிப் பொருள் பிறகு வெற்றிடத் துப்புரவுக் கருவி செய்வதுபோல் வெளியே உறிஞ்சி எடுக்கப்படுகிறது.

phalanges : விரல் எலும்புகள்: கை விரல்களின் அல்லது கால விரல்களின் தனித்தனி எலும்புகள்.

phallus : ஆண்குறி

phantom limb மருள்தோற்றவுறுப்பு உடலிலுள்ள ஓர் உறுப்பு வெட்டியெடுக்கப்பட்ட பினனரும் அந்த உறுப்பு உடலில் இணைந்திருப்பதாகத் தோன்றும் உணர்வு. வெட்டியெடுக்கப்பட்ட உறுப்பிலிருந்து வலி உண்டாவதாகவும் தோன்றும்.

phantom pregnancy : போலிக் கர்ப்பம்; போலிக் கருத்தோற்றம் : குழந்தையில்லாத ஒரு பெண்ணிடம் குழநதை பெற வேண்டும் என்ற தீராத வேட்கையினால், கருவுறுதலின் தொடக்க நிலை அறிகுறிகள் தோன்றுதல்.

pharmaceutical : மருந்தாக்கம் சார்ந்த; மருந்தாக்கிய : மருந்தாக்கம், மருந்து விற்பனைத் தொழில் தொடர்பான.

pharmaceutics : மருந்தாக்கவியல, மருந்தாக்கியல்.

pharmacist : மருந்தாக்குநர்; மருந்து கலப்போர் : மருந்துக் கடைக்காரர். மருந்தாளுனர்.

pharmacogenetic : மருந்து விளைவு : மருந்துகளினால் உண்டாகும் பக்க விளைவுகள.

pharmacokinetics : மருந்தடையும் மாற்றம்; மருந்து ஈர்ப்பியல : உடலில் மருந்துகள எவ்வாறு ஈர்த்துக் கொளளப்படுகின்றன,

எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படுகின்றன, எவ்வாறு வெளியேற்றப்படுகின்றன எனபதை ஆராய்தல்.

pharmacology : மருந்தியல்; மருந்துப் பொருளியல் : மருந்துப் பொருள்கள் பற்றி ஆராயும் அறிவியல்,

pharacopia : வாகட நூல்; மருந்தியல் முறை நூல் : மருந்துப் பொருள்களின விவர நூல் தொகுதி.

pharmacy: மருந்தகம்; மருந்தாக்க நிலையம். மருந்துக்கடை; மருந்தாக்கக் கலை.

pharyngeal pouch : தொண்டைப் பை; தொணடைக் குழி; தொண்டை சார் : தொண்டையின் கீழ்ப் பகுதியை நோய்க குறியியல் முறையில் விரிவாக்குதல்.

pharyngectomy: தொண்டை அறுவை : தொண்டையின ஒரு பகுதியை அறுவை மருத்துவம் மூலம் அகற்றுதல்.

pharyngismus : தொண்டை இசிப்பு. தொண்டை தசையிசிப்பு.

pharyngitis ; தொண்டை அழற்சி.

pharyngocele : அடித் தொண்டையில் (பை போன்ற) புழை.

pharyngolaryngeal : தொண்டை குரல்வளை: தொண்டை மற்றும் குரல்வளை சார்ந்த.

pharyngoplasty : தொண்டை ஒட்டு அறுவை : தொண்டையில் செய்யப்படும இணைப்பு அறுவை மருத்துவம்.

pharyngotomy: தொண்டையழற்சி அறுவை; தொணடைத் திறப்பு : தொண்டையில் உண்டாகும் அழற்சியைக் குணப்படுத்த சீழ் வடிக்கச் செய்யப்படும் மருத்துவம்

pharynx : தொண்டை : வாயின் பினபகுதியிலுள்ள குழிவு. இது கூப்பு வடிவில் இருக்கும். இதன் நீளம் சராசரி 75மி.மீ. இதன் கீழ்ப்



தொண்டை

பகுதியில் சளிச்சவ்வுப் படலப் பூச்சு இருக்கும். மேற்பகுதி உணவுக் குழாய்ப் பக்கமாகத் திறந்திருக்கும்.

phasal : ஃபாசல் : லிதியம் கார்போனேட் எனற மருந்தின் வாணிகப் பெயர்.

PHC : தொடக்கச் சுகாதாரக் கவனிப்பு.

phenacetin : ஃபெனாசெட்டின் : முன்பு நோவகற்றும் மருந்தாகப் பயன்படுத்தப்பட்ட மருந்து. இதனை நீண்டகாலம் பயன்படுத்தினால் சிறுநீரகங்கள் சேதமடைவதால், இப்போது இதற்குப் பதிலாக பாரசிட்டாமோல் என்ற மருந்து பயன்படுத்தப்படுகிறது; காய்ச்சல் தடுக்கும் மருந்து.

phenazone : ஃபெனாசோன் : பெனாசெட்டின் போனற மென்மையான நோவகற்றும் மருந்து. இதன் நச்சு விளைவுகள் காரணமாக இது அரிதாகவே பயன்படுத்தப்படுகிறது.

phemazocine : ஃபெனாசோசின் : கடுமையான வலிகளுக்குப் பயன் படுத்தப்படும் ஒரு வீரியம மிகுநத நோவகற்றும் மருந்து.

phenazopyridine hydrochloride : ஃபெனாசோப்பைரிடின் ஹைட்ரோகுளோரைடு; சிறுநீர்க் குழாயில் ஏற்படும் நோவை அகற்றும் மருந்து. சிறுநீர்ப்பை அழற்சிக்குப் பயன்படுகிறது.

phenergan: ஃபெனர்கான் : புரோமித்தாசின் ஹைட்ரோகுளோரைட என்ற மருந்தின வாணிகப் பெயர்.

phenethicillin: ஃபெனத்திசிலின்: ஓர் மருந்து. பென்சிலினுக்குப் பதிலாக வாய்வழி கொடுக்கப்படுகிறது.

phenindione ஃபெனிண்டியோன்: இரதத உறைவுக்கு எதிராக வாய் வழி கொடுக்கப்படும் மருந்து. குருதியுறைவுக் கோளாறுகளில் பெருமளவு பயன்படுத்தப்படுகிறது.

phenobarbitone: ஃபெனாபார்பிட்டோன் : காக்காய் வலிப்பு நோய்க்குக் கொடுக்கப்படும் பார்பிட்டுரேட்டு என்ற மருநது. இது நீணட நேரம் வேலை செய்யக் கூடியது

phenolic disinfectants ; ஃபெனால தொற்றுநீக்கிகள : தொற்று நீக்கி மருநதாகப் பயன படும். ஃபெனால்வழிப்பொருள்கள் இதனைத் தோலும், நுரையீரல் களும் உறிஞ்சிக கொள்ளும. இத னால் மஞ்சடகாமாலை உண்டாக லாம்.

phenolphthalein: ஃபெனால்ஃப்தலின்: மலமிளக்கி மருந்து.

phenothiazines ; ஃபெனாத்தையாசின் : வீரியம் வாய்நத துயிலூட்டும் மருந்துகள. குளோர்புரோமாசின் இந்த வகையைச் சேர்ந்தது. மன அதிர்ச்சியைக் குறைக்கும்.

phenoxymethylpenicillin : ஃபெனாக்சிமெத்தில் பெனிசிலின் : வாய் வழி உட்கொள்ளப்படும் பெனிசிலின மருந்து.

phentermine : ஃபென்டெர்மின் : பசியைக் குறைக்கும் மருந்து.

phentolamine : ஃபென்டோலாமைன் : குண்டிக்காயிலிருந்து சுரக்கும் 'அட்ரீனலின' என்ற இயக்குநீருக்கு எதிரான பொருள். இரத்த அழுதததம் அளவுக்குமீறி மாறுவதைக் கட்டுப்படுத்துவதற்கு அறுவை மருத்துவம் செய்யும்போது இது ஊசி வழியாகச் செலுத்தப்படுகிறது. அரிதாக வாய்வழியாகவும் கொடுக்கப்படுகிறது.

phenylalanine : ஃபெனிலாலனைன் : இன்றியமையாத அமினோ அமிலங்களில் ஒன்று.

phenylbutazone : ஃபெனில்புட்டாசோன் : வீரியததுடன நீண்ட நேரம் செயற்படக்கூடிய ஒரு அழற்சியகற்றும் மருந்து. இதனால நச்சு விளைவுகள் அடிக்கடி ஏற்படும். இது இப்போது மூது கெலும்புக கணணி அழற்சிக்கு மருத்துவமனையில் மட்டுமே பயனபடுத்தப்படுகிறது.

phenylephrine: ஃபெனிலெஃப்ரின்: குருதிநாள இறுக்க மருநது; அட்ரினலின் போன்றது. ஆனால் அதைவிட உறுதியானது. இதனை தசை வழியாக ஊசிமூலம்செலுத்தலாம் இது பொதுவாகக் கண் சொட்டு மருந்தாகவும் (0 5-10%) மூக்குத் தெளிப்பு மருந்தாகவும (0.25%) பயன்படுத்தப்படுகிறது.

phenylketonuria (PKU) : ஃபெனில்கெட்டோனூரியா : ஃபெனிலாலானைனின் வளர்சிதை மாற்ற எச்சப் பொருளகள இது சிறுநீரில் ஃபெனில் கெட்டோன்களாக உள்ளது. உணவிலுள்ள ஃபெனிலாலானைனினை டைரோசினாக மாற்றுகிற நுரையீரலிலுள்ள ஃபெனிலாலானைன ஹைட்ராக்சிலேஸ் என்ற செரிமானப் பொருள் (என்சைம்) செயலிழப்பதன காரணமாக இது உண்டாகிறது. இதனைப் பிறவியிலேயே கணடு

பிடித்து உரிய உணவு முறையைக் கைக்கொண்டாலன்றி, இதனால மனக்கோளாறு ஏற்படும்.

phenytoin : ஃபெனிட்டாயின் : கடுமையான காக்காய வலிப்பு நோய்க்குப் பயன்படுத்தப்படும் வலிப்பு நீக்கு மருநது. சில சமயம், ஃபெனோபாரபிட்டோனும் சோததுக் கொடுக்கப்படுகிறது.

phimosis . மாணி நுதி இறுக்கம்; உறை நீங்கா ஆணகுறி; முனதோல் குறுககம், நுனித்தோல் இறுககம் . மாணி நுதி (லிஙகக்கவசம்) இறுக்கமடைதல். இதனால் அது சுருங்கி ஆண்குறியை மூடிக கொள்ள இயலாது போகிறது.

pHisoHex . ஃபைசோஹெகஸ் : நோய் நுணமத்தடை மருந்தாக வும, பாக்டீரியாவுக்கு எதிராகத் தோலைச் சுத்தப்படுததும மருந் தாகவும் பயனபடும மருந்து என்ட்ரூஃபோன என்ற சல வைப் பொருள் 3%ஹெக்சாகுளோ ரோஃபேன,லானோலின,கொலஸ் டெரோல்ஸ், பெட்ரோலாட்டம் ஆகியவற்றுடன் சேர்ததுப் பயன் படுததப்படுகிறது.

phlebectomy ; சிரை அறுவை; சிரை நீககம் · இதயததிற்குக் குருதியைக கொணடு செல்லும் சிரை எனனும குருதிக் குழாயை வெட்டியெடுக்கும அறுவை மருத்துவம.

phlebitis : சிரை அழற்சி. இதயத திற்குக குருதி கொணடு செல்லும சிரை என்னும் குருதிக் குழாய் புறததோலில ஏறபடும வீக்கம

phlebolith : சிரைக்கட்டி; சிரைக் கடினமடைதல்; சிரைக்கல் : இதயத் திறகு இரததம கொண்டு செல லும் சிரை எனனும் குருதிக் குழா யில் ஏற்படும் கட்டி.

phlebotomy : குருதி வடிப்பு, சிரைத் திறப்பு : மருததுவ முறை யில குருதயை வடித்தல.

phlebothrombosis : சிரைக் குருதிக்கட்டு, சிரைப்படிம உறைவு ; இதயததிற்குக் குருதியைக் கொண்டு செல்லும் சிரை என்னும் குருதி நாளத்தில ஏற்படும் இரத்த கட்டு. சிரையில் மெதுவாக குருதி பாய்வதால் இது உணடாகிறது. பெருமபாலும் படுத்த படுக்கை யாக இருக்கும் நோயாளிக்கு இது உண்டாகிறது.

phlebotomist : குருதி வடிப்பு வல் லுநர் : குருதியை வடிக்கும் மருத் துவத்தில வல்லுநர்.

phlegm : சளி; கோழை; கபம் : மூசசுக் குழாயிலிருந்து வெளியேற் றப்படும் கபம; சளி, கோழை.

phlegmagogue : சளி மருந்து : கபததை வெளிப்படுததும் மருந்து.

phlegmatic மடிமை மனிதன் : எளிதில் செயறபடாத அல்லது எளிதில் உணர்ச்சிவயப்படாத மனிதன.

phlegmon : அழற்சிக் கட்டி/பரு.

phlogistic : அழற்சியுடைய.

phlyctenule : இமை கொப்புளம்; நுணகுமிழ : இமையிணைப் பட லததில் அல்லது விழிவெண்படலத் தில் ஏற்படும் நுணணிய கொப் புளம்

phobia: காரணமில்லா அச்சவுணர்வு அச்ச நோய் மருட்சி; மருளியம் : நோய்த தன்மையுடைய அச்சக் கோளாறு; வெறுப்புக் கோளாறு எடுததுக்காட்டு: இதய நோய் பற றிய அச்சம; புற்று நோய் குறித்த அச்சம்.

phocomelia : கோர உறுப்புத் திரிபு, கை கால் வளர்ச்சியின்மை, கை-கால் உருப்பெறாமை கைகளும, காலகளும் திரிபடைந்து கடல் நாய் (சீல) போனறு தோற்ற மளித்தல். 1960களில், கருவுற்ற பெண்கள் தாலிடோமைடு என்ற மருந்துச் சந்தைக்குப் புதிதாக வந்த துயிலூட்டும் மருந்

தை உட்கொண்டதால் குழந்தைகள் இத்தகை உறுப்புத் திரிபுடன் பிறந்தன.

phocodine : ஃபோக்கோடின்: இருமல் உண்டாக்கும் மையத்தைச் சமனப்படுத்தும் மருந்து. கோடைன் போன்ற குணமுடையது. சளியில்லாத வறட்டு இருமலுக்குக் கொடுக்கப்படுகிறது.

phonation : ஒலி செய்தல்; சொல்லொலி : குரல் வளை நாளங்களின் அதிர்வினால உண்டாகும் ஒலி.

phonocardiography : இதய ஒலி வரைவியல் : இதயததின ஒலிகளையும், முணுமுணுப்புகளையும் மின்னியல் பதிவுமூலம் வரைபடமாகப் பதிவு செய்தல் இதன்மூலம், கருவிலுள்ள குழந்தையின இதயத் துடிப்பு வீதம், கருப்பைச் சுருக்கத்துடன் அதன் தொடர்பு ஆகியவற்றைத் தொடர்ந்து அளவிடலாம்.

phosphaturia : சிறுநீரில் ஃபாஸ்ஃபேட்; ஃபாஸ்ஃபேட் நீரிழிவு : சிறுநீரில் அளவுக்குமீறிப் ஃபாஸ்ஃபேட்டுகள் இருத்தல்.

phospholine iodide: ஃபாஸ்ஃபோலின் அயோடைடு : கோலினெஸ்டிராசுக்கு எதிரான ஒரு மருந்து.

phosphonecrosis : குழித்தாடை : தீப்பெட்டித் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு ஏற்படும் குழிவுத்தாடை: ஃபாஸ்ஃபரஸ் காரணமாக பற்கள இற்றுப் போய் இந்தத் தாடையெலும்புச் சீரழிவு ஏறபடுகிறது.

phosphorus : ஃபாஸ்ஃபரஸ் (எரியம்) : எலும்பு, நரம்புத் திசுக்களின் முககிய அமைப்பானாக அமைந்துள்ள ஓர் அலோகத் தனிமம்.

photalgia : ஒளி நோவு; ஒளி வழிக் கண் வலி; ஒளிவலி : அதிக ஒளிபட்டால் கண்களில் உண்டாகும் வலி.

photochemical : ஒளி வேதியியல் பொருள் : ஒளிபட்டு வேதியியல் வினைபுரியக் கூடிய வேதியியல் பொருள்.

photochemotherapy : ஒளி வேதியியல் மருத்துவம் : நோயாளியைப் புறஊதா ஒளிக்கு உட்படுத்தி மருந்தின் விளைவினை அதிகரிததல்.

photocoagulation: ஒளிவழி உறைதல் : ஆற்றல் வாய்ந்த ஒளியை ஒருமுகமாகப் பாய்ச்சித் திசுக்களை எரித்தல்.

photoendoscope : ஒளி உள நோக்குக் கருவி ஓர் ஒளிப்பதிவுக் கருவியில், உள்ளுறுப்பு நோக்குக் கருவியை இணைத்து, உள்ளுறுப்புகளைப் பார்தது ஆராய்தல்.

photo phobia : ஒளியச்சம்; கண் கூச்சம்; ஒளி மருளியம் : கணணில் ஒளிபட்டால் தாங்கிக் கொள்ள முடியாத நிலை.

photosensitive : ஒளியுணர்வு; ஒளிக் கூச்சம் : ஒளிபட்டதும தூண்டுதல் பெறும இயல்பு; கண்ணிலுள்ள நிறமிகள் இத்தன்மையுடையவை.

phototherapy : ஒளி மருத்துவம் : செயற்கையான ஊதா ஒளி. பாய்ச்சி நோய் மருத்துவம் செய்தல். பிறந்த குழந்தைகளுக்கும், குறைமாதக் குழந்தைகளுக்கும் ஏற்படும் மஞ்சட்காமாலை நோயைக் குணப்படுத்த இந்த மருத்துவம் அளிக்கப்படுகிறது.

phren : உதரவிதானம் ; வயிற்றின் உந்து தசை

phrenicotomy : உதரவிதானப் பிளப்பு : உதரவிதானத்தின் ஒரு பகுதியைச் செயலிழக்கச் செய்யும் உதரவிதான நரம்புப் பிளவு

phrenology : தலை அமைப்பியல்; கபாலவியல் : மண்டையோட்டின் வெளியமைப்பு மூலம் பல்வேறு உறுப்புகளின் வளர்ச்சியை ஆராயும் அறிவியல்.

phrenoplegia : உதரவிதான வாதம் : உதரவிதானம் செய லிழந்து போதல்.

phrenotropic : மருந்து உளவியல் விளைவு : சிலவகை மருந்துகள் மனத்தில் ஏற்படுத்தும் விளைவு கள்.

phrogen . காய்ச்சல் பொருள.

phrogenic · காய்ச்சல் உண்டாக் கக் கூடிய.

phthalylsulphathiazole:தாலைல் சல்ஃபாதையாசோல்: உணவுக குழலினால் குறைநத அளவே ஈர்த துக கொள்ளப்படும் ஒரு சல்ஃபோ னமைடு மருந்து முன்புகுடல்நோய் களினபோது, அடிவயிறறு அறு வை மருத்துவம்மூலம் பயனபடுத் தப்பட்டது.

phthisis : ஈளை நோய்; காச நோய்; நுரையீரல காசநோய்: நுரை யிரல் காசநோயைக் குறிக்கும் ஒரு பழைய சொல்.

physeptone : ஃபிசெப்டோன் : மெததாடோன் என்ற மருநதின் வாணிகப் பெயர்.

physic : மருத்துவத் தொழில் : நோய் தீர்க்கும கலை; மருததுவம்; பண்டுவம்; மருந்து.

Physician: மருத்துவர்: மருத்துவத் தில் தகுதி பெறறவர்.

physioky : மருந்து போன்ற; மருந் தை நினைவூட்டுகிற.

physicochemical : இயற்பியல-வேதியியல சாாந்த : இயறபியல் மற்றும வேதியியல தொடாபான.

physiology : உடலியல்; உடலியங் கியல்; உடலியக்கவியல் : உடலின இயல்பான இயக்கம பற்றி ஆரா யும அறிவியல. உடலின் இயறகை யான கட்டமைப்பு, அவறறின வழக்கமான செயலமுறை பற்றி ஆராய்தல.

physiotherapy : இயல் மருத் துவம்; உடற்பயிற்சி மருத்துவம் : உடலைப் பிடிதது விடுதல், தூய காற்று, மினசாரம் போன்ற இயற் கை முறைகளால் மருததுவம் செய் யும முறை.

physiotherapist : இயல் மருத் துவா; மின் மருத்துவர் : பிடித்து விடுதல் போன்ற இயற்கை முறை களால் நோய்களைக் குணப்படுத் தும் மருத்துவர்.

physique; உடற்கட்டு; உடலமைவு: உடலமைப்பு; உடலின் கட்டுக் கோப்பு.

physostigmine : ஃபைசோஸ்டிக் மைன்: கணவிழி விறைப்பு நோயில் சொட்டு மருநதாகப் (0 5%—1%) பயனபடுத்தப்படும் மருந்து. சில சமயம் வாதநோய் எதிர்ப்பு மருந் தாகவும் பயனபடுகிறது.

physohorax : சுவாசப்பை உறைச் சீழ் நோய் : சுவாசப்பை உறையில் உணடாகும் சீழ்நோய்.

phytomenadione : ஃபைட்டோமி னாடியோன் : வைட்டமின-K என் னும ஊட்டச்சத்து, பிறநத குழந் தைக்கு இரததக் கசிவு ஏற்படும் போதும் வைட்டமின் K பற்றாக் குறையின்போதும் கொடுககப்படு கிறது.

pia, pia mater : மூளை நாளப் பட லம்; மூளை உள்ளுறை; மென்னுறை: மூளை வெளியுறைகளில் மிகவும் உள்ளார்ந்திருக்கிற செல் குழாய் நாளப் படலம். இது மூளையிலும், முதுகந்தணடிலும அடங்கியுள்ள பொருளுடன நெருங்கிய தொடர் புடையது.

pica : மசக்கை; இயல்பிலா உணவு வேட்கை, கண்டது உணணல : கரு வுறறிருககும்போது சாம்பல போனற அசாதாரணப் பொருள் களை உண்ண வேண்டுமென உண் டாகும் வேட்கை

picolax : பிக்கோலாக்ஸ் : *சோடியம் பிக்கோசல்ஃபேட் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.*

pigeon chest (pigeon-breast) : குறுகல் மார்பு; கூட்டு மார்பு; புறா மார்பு : *உருவத் திரிபாகக் குறுகலாக அமைந்த மார்பு. இதில் மார்பக எலும்புப் பகுதி முன்புறம் துருத்திக் கொண்டிருக்கும்.*

pigment : நிறமி, தோல் நிறமி; வண்ணம் : *உடலின் இயற்கை வண்ணப் பொருள்; சாயப் பொருள்.*

pigmentary epithelium : நிறமி அடர்புறப்படலம்.

pigmentary layer *நிறமி அடுக்கு.*

pigmentation : நிறமி அடுக்குப் படிவு; கறைப் பிடிப்பு ; *நிறமி அளவுக்குமீறி அடுக்கடுக்காகப் படிதல்.*

pigments bile . பித்தநீர் நிறமிகள்.

pill : மாத்திரை; குளிகை : *விழுங்கக் கூடிய வகையில் அமைந்த திடமருந்து மாத்திரை.*

pillule . சிறு குளிகை ; *சிறிய மாத்திரை.*

pilomotor nerves . சிலிரப்பு நரம்புகள். *மயிர் மூட்டுப்பையுடன் இணைந்த நுண்ணிய நரம்புகள், இவை மயிரை விறைப்பாக நிற்கச் செய்து தோல் சிலிர்ப்புத் தோற்றத்தை உண்டாக்குகிறது.*

pimafucin : பிமாஃபூசின் . *நாட்டாமைசின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்*

pimple : முகப் பரு; குரு; பரு . *முகத்தில் உண்டாகும் பரு.*

pineal body (pineal gland) : நடுமூளைச் சுரப்பி: *மூளையின் நடுவில் மூன்றாவது குழிவின் பின் கூம்பு வடிவான சிறியசெம்பழுப்பு நிறச் சுரப்பி இதன் செயல் என்ன என்பது இன்னும் அறியப்படவில்லை.*

pinguecula: ; மையிணைப் படலக் குமிழ் : *கண்எரிமை இடைவெளி அருகிலுள்ள சற்றே உயரமான, திண்மையான, மஞ்சள் நிறக்குமிழ் வடிவ இமையிணைப் படலம். இது முதுமையடைவதுடன் தொடர்புடையது.*

pink-eye : செங்கண் நோய் : *மிக விரைவாகப் பரவும் செந்நிறக் கண் கோளாறு. குழந்தை நெருங்கிப் பழகும் உணவு வசதிகளுடைய பள்ளிகள், நீண்ட காலம் தங்கி மருத்துவம் பெறும் மருத்துவ மனைகளில் முகத்துணிகளைப் புழங்குவதால் இது உண்டாகிறது.*

pinna : காதுமடல்; வெளிக் காது; செவிமடல் : *புறச் செவியின் அகன்ற மேற்பகுதி.*

piperacillin sodium : பிப்பராசிலின் சோடியம்: *பல்வேறு வகையில் செயற்படக் கூடிய ஓர் உயிர் எதிர்ப்பொருள். நச்சுத் தன்மை குறைந்தது. பாக்டீரியா இதனை எதிர்ப்பது குறைவு.*

piperazine citrate : பிப்பராசின் சைட்ரேட் : *குழந்தைகளின் மலக் குடலில் உள்ள நூலிழை போன்ற கீரைப்பூச்சி என்ற புழு, உருண்டைப்புழு ஆகியவற்றுக்கு எதிராகக் கொடுக்கப்படும் வீரியம் மிக்க குடற்புழு அகற்றும் மருந்து.*

pipril : பிப்ரில் : *பிப்பராசிலின் சோடியம் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.*

pirenzepine : பைரன்செப்பின் : *வயிற்றில் சீழ்ப்புண்ணைக் (அல்சர்) குணப்படுத்தும் உயிரணுக்களை உற்பத்தி செய்து அமில உற்பத்தியைக் குறைக்கக்கூடிய ஒரு மருந்து.*

piriton : பிரிட்டோன் : *குளோர்ஃபெனிராமின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்*

piroxicam : பைரோக்சிக்காம் : வீக்கத்தைத் தணிக்கக் கூடிய ஒரு மருந்து.

pitressin : பிட்ரெசின் : வாசோப் பிரெசின் என்ற அமினோபுரத மருந்து.

pit : அம்மைத் தழும்பு : அம்மை நோயினால் உடலில உண்டாகும் தழும்புக் குழி; உடம்பின் உட் பொள்ளல். குழித் தழும்பு.

pituitary gland (pituitary body): கபச் சுரப்பி; குருக்கழலை, அடிமூளைச் சுரப்பி : உடல் வளர்ச்சிக்கு முக்கியமாக உதவுவதாகக் கருதப்படும் தூம்பற்ற மூளையடிச் சுரப்பி.

கபச் சுரப்பி

placenta : நச்சுக்கொடி; கருக்கொடி; பனிகுடம் : கருவுற்ற மூன்று மாதங்களில் கருப்பையின உட்சுவருடன் இணைந்தவாறு ஒரு செல்குழாய் போன்ற கட்டமைப்பு உருவாகிறது. இதன் வழியாகக் கருப்பைக் குழந்தைக்கு ஊட்டச் சத்தும், ஆக்சிஜனும் செல்கிறது. இதன வழியாகவே கருக் குழநதை கழிவுப்பொருளகளை வெளியேற்றுகிறது. இயல்பான மகப்பேற்றின்போது குழந்தை பிறந்த ஒரு மணி நேரத்திறகுள் இது வெளியேறிவிடும். அவ்வாறு வெளியேறாத நச்சுக் கொடி, 'ஒட்டு நச்சுக் கொடி' எனப்படும். இதுபொதுவாக, கருப்பையினமேற் பகுதியில் ஒட்டிககொண்டிருக்கும். இதனால் நச்சுக் கொடி முறிவு (அற்று விழுதல்) ஏற்படும்.



கருக்கொடி

pityriasis : கரணைப் பொக்குளம்: தோல் கொப்புளம்; பொடுகு உதிர்வு: தோலில் ஏற்படும் கரணைச் சொறிப் பொக்குளம்; சிதல் சிதலாக உரியும் தோல் நோய்.

pityrosporum : பிட்டிரோஸ் போரம் ; நொதியின (ஈஸ்ட்) ஓர் இனம்.

placental abruption : நச்சுக் கொடி முறிவு : மகப்பேற்று வலி எடுப்பதற்கு முன்பும், 28 வாரங்களுக்குப் பின்பும் யோனிக் குழாயில் இரததக் கசிவு ஏற்படுதல்.

placenta acreta : வேரூன்றிய நஞ்சு. ஒட்டி இறுகிய நஞ்சு.

placentapreavia : முன்னிருக்கும் நஞ்சு; நச்சுக் கொடி முந்துநிலை.

placental insufficiency : நச்சுக் கொடிக் குறைபாடு; நஞ்சு திறக் குறை நச்சுக் கொடி போதிய அளவில் இல்லாதிருத்தல். இது தாய்க்குள்ள நோய் அல்லது மாதங்கடந்து கருமுதிர்வடைதல் காரணமாக உண்டாகலாம். இதனால், குழந்தை குறைமாதத்தில் பிறக்கக் கூடும்.

placentography : நச்சுக் கொடி ஊடுகதிர்ச் சோதனை: ஒளி ஊடுருவாத பொருளை ஊசிமூலம செலுத்தி நச்சுக் கொடியை ஊடுகதிர் (எக்ஸ்-ரே) மூலம் பரிசோதனை செய்தல்.

plague : பிளேகு : நோயுற்ற எலிகளமூலம் மிக விரைவாகப் பரவும் மிககொடிய கொள்ளை நோய். எலிகளிடமிருந்து தெள்ளுப்பூச்சி (உணணிகள்) மூலம் இது மனிதனுக்குப் பரவுகிறது.

plague-spot : பிளேகு மையம் : பிளேகு என்னும் கொள்ளை

நோயினால் வீக்கம் உண்டாகும் இடம்.

plantar : உள்ளங்கால் சார்ந்த; அங்கால்; பாத : உள்ளங்காலுக் குரிய.

plaquenil : பிளாகுவினில்: ஹைட் ராகசிகுளோரோக்குவின என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

plasmodia : ஒட்டுயிர் நுண்மம் : மலேரியா போன்ற முறைக காய்ச் சலுக்குக் காரணமான ஒட்டுயிர் நுண்மம்.

plasm : உயிரியற் பொருள்: உயிர் மத்தின் ஊன்மம.

plasma : குருதிநீர்; ஊனீர்: குருதி, குருதிநீர் ஆகியவற்றின் திரவப் பகுதி. கருமையான தீப்புண்களில் நோயாளிக்குக் குருதிச செறிவு ஏற்படும்போது இரததம் செலுத தப் பயனபடுததபபடுகிறது. உலர்ந்த குருதிநீர் மஞசள் நிறத் தூளாக இருக்கும். இதனைத் திரவ மாக்கி உட்செலுத்தலாம. டெக்ஸ் டிரான் பிளாஸ்மோவின போன்ற பல்வேறு குருதி நீர் மாறறுகள் உளளன.

plasma proteins : குருதி நீர்ப் புர தங்கள.

plasmic (plasmatic) : ஊனீர் சார்ந்த : ஊன்மம் சார்ந்த.

plasmin : பிளாஸ்மின் : ஒரு ஃபைப்ரினோலிசின்.

plasminogen . பிளாஸ்மினோஜன்: பிளாஸ்மினின் முனனோடி, சேத மடைந்த திசுவிலிருந்து வினை யூக்கிகள வெளிப்படடு, பிளாஸ்மி னோஜனைப் பிளாஸ்மினாக மாற்ற ஊககுவிக்கிறது

plasmodium : ஒட்டுயிர் நுண்மம் : வெப்ப இரத்தப பிராணிகளின் இரத்தத்திலுள்ள ஓரணு உயிர் ஒட்டுண்ணிகளின ஒருவகை. இவை ஒட்டுத்தோடுடைய இணைப் புடலிகளின் இரத்தத்தை உறிஞ்சி தங்கள் பாலினச் சுழற்சியை முடித் துக் கொள்கினறன. இவற்றின் நான்கு இனங்கள் மனிதரிடம் முறைக் காய்ச்சல் (மலேரியா) நோயை உணடாக்குகின்றன.

plasmolysis : ஊன்ம உலர்வு : நீரி ழப்பால் உண்டாகும் ஊன்மச் சுருக்கம். **ஊன்ம நசிவு; அழிவு.**

plaster of paris : களிக்கல் தூள்: வார்ப்புக் குடுவையாகவும் காரை மண்ணாகவும பயன்படும் களிக கல் தூள்.

plastic surgery : ஒட்டுறுப்பு அறு வை; ஒட்டறுவை மருத்துவம : உட லில் சேதமடைந்த பகுதியைச் சீர் படுத்துவதற்கு ஆரோக்கியமான திசுவை மாற்றிப் பொருத்தும் அறுவை மருத்துவம்.

platelets : தகட்டணுக்கள்; குருதி வட்டுகள்; தட்டயம்கள்.

platyhelminth : குடற்புழு: குடலி லுள்ள தட்டையான புழு

play therapist : விளையாட்டு மருத்துவ வல்லுநர் : குழந்தை களுக்கு விளையாட்டு மூலம நோய் மருத்துவம் செய்யும் வல்லு நர்.

plethora : குருதிமிகை; நிரம்பு நிலை: குருதி மிகையாக இருத்தல்; மிகு நிறைவு. செவ்வணு மிகை.

plethysmograph : குருதி அள வைக் கருவி;குருதிப் பாய்சசல் பரும வரைவி; வளி அழுத்த மானி : ஓர் உறுபபில பாயும் குருதியைத துல் லியமாக அளவிடுவதற்கான ஒரு கருவி

pleura : மார்புவரி; நுரையீரல் உறை; ஈரல் உறை : உளளுறுப்பு களைக் கவிந்து போர்தத பால்குடி உயிர்களின் உளவரிச் சவ்வுகள் இரண்டில் ஒன்று.

pleurisy pleuritis : நுரையீரல் சவ்வழற்சி : மார்பு உளவரிச் சவ்வில் ஏற்படும் வீக்கம். நுரையீரல் உறை சீழ் நோயுடன இது தொடர்புடையது.

pleurodesis ; உள்ளுறுப்புப் பிணைப்பு : மண்டைப் பக்க எலும்பு உள்வரிச் சவ்வுடன் உட்கிடப்புறுப்புகள் ஒட்டிக் கொண்டிருத்தல் அயோடினாக்கிய வெளிமக் கனமகியைப் பயனபடுத்தி இவ்வாறு ஒட்டிக் கொண்டிருக்குமாறு செய்யலாம்.

pleurodynia : தசைவாத வீக்கம்' விலா எலும்பு வலி : கீல்வாதம் தொடர்பான தசைநாரின் வீக்கம்; மார்புத தசை வாதத்தால ஏறபடும் விலா வலி நோய்.

pleuropneumonia : குலைக் காய்ச்சல் : மார்பு உள்வரிச சவ்வழறசியுடன் கூடிய குலைக காய்சசல நோய்.

pleuro pulmonary : மார்பு வரி-நுரையீரல சார்ந்த : மார்பு உளவரிச் சவவு, நுரையீரல் இரண்டையும் சார்ந்த.

plexus : பின்னலமைவு, பின்னல்; வலை : நாளங்களின அல்லது நரமபுகளின் பின்னல் அமைவு.

plica : தோல் மடிப்பு, மடிப்பு : சவ்வின மடிப்பு.

plica polonica · தலைமுடிச் சடைப் பிடிப்பு : நோய் காரண மாக ஏறபடும் தலை மயிரின சடைப்பிடிபபு.

plumbism ; ஈய நசசூட்டு; ஈய நச்சேற்றம்

plumbage . மெழுகு வைபபு.

plumbum : காரீயம், ஈயம் . உலோக ஈயத்தின லததீன பெயர்.

PMS . மாதவிடாய் முந்து நோய்.

pneumatometer : மூச்சுமானி.

pneumaturia : சிறுநீர்வாயு; சிறுநீர் வளிமம்; வளி நீரிழிவு : சிறுநீருடன் குடல் வாய்வு பிரிதல. இது சவ்வுப்பைப் பணபுரை காரணமாக ஏற்படுகிறது.

pneumococcus : சீதசன்னிக் கிருமிகள் : இணை இணையாக அமைந்துள்ள புள்ளிக் கிருமிகள். இவை சீதசன்னியை உணடு பண்ணுகின்றன.

pneumoconiosis ; தூசு அழற்சி; தூசு வளி நோய்: தொழில் துறைப் பணிகளில் தொடர்ந்து தூசியைச் சுவாசிப்பதால் உண்டாகும் நுரையீரல் அழற்சி சிலசமயம் காச நோயும் உணடாகும்.

pneumocystis (carinii) : சீதசன்னி நுண்ணுயிரி : சீதசனனி எனப்படும சளிக் காய்ச்சலை உண்டாககும் ஒரு நுண்ணுயிர். இது பெரும்பாலும் குழநதைகளையே பாதிக்கிறது. இதனால் உண்டாகும் மரண வீதம அதிகம்.

pneumogastric ; நுரையீரல் - இரைப்பை சார்ந்த : நுரையீரல், இரைப்பை ஆகியவை தொடர் புடைய.

pneumogastric nerves : நுரையீரல்-இரைப்பை நரம்புகள : மூளை நரம்புகளில பத்தாவது இணை.

pneumomycosis : நுரையீரல் பூஞ்சண நோய் நுரையீரலைப் பீடிக்கும் பூஞ்சண நோய்.

pneumonectomy நுரையீரல் அறுவை, நுரையீரல நீக்கம, நுரையீரல வெட்டு, திறபபு · நுரையீரலை அறுவை மருததுவம்மூலம வெட்டியெடுததல்.

pneumonia : சீதசனனி; சளிக் காய்ச்சல; நுரையீரல காய்சசல; நுரையீரல அழற்சி : நுரையீரல் இழைமஙகளின ஒரு பகுதி அல்லது முழுவதும் வீங்கிய நிலை. இந் நோய் இரண்டு நுரையீரல்களையும பாதிததால் அது 'இரட்டை

நுரையீரல் காய்ச்சல்' எனப்படும். ஒரு நுரையீரலைப் பாதித்தால் அது 'ஒற்றை நுரையீரல் காய்ச்சல்' எனப்படும்.

pneumonitis : நுரையீரல் திசு அழற்சி; மூச்சுப்பையழற்சி : நுரையீரல திசுக்களில் ஏற்படும் வீக்கம்.

pneumothorax : நுரையீரல் உறை காற்று நோய். உறைவளி நோய் : நுரையீரல் திசுக்களை அழுத்தும் வகையில் நுரையீரல் உறையில் காற்று அல்லது வாயு நிறைதல். இது ஈளை நோயினால (ஆஸ்துமா) உண்டாகலாம்

PNI : உளவியல் நரம்பு நோய்த் தடுப்பியல்.

poldine methylsulphate : போல்டின் மெத்தில்சல:ஃபேட் : உணவு உண்டவுடன இரைப்பையில் அமிலம் சுரப்பதைக் கட்டுப்படுத்தும் மருந்து.

polioencephalitis · மூளைவாத அழற்சி : பெரு மூளையில் ஏற படும வாத வீக்கம்.

poliomyelitis : இளம்பிள்ளை வாதம் : முதுகந்தண்டின் சாம்பல் நிற உட்பகுதியில் ஏற்படும் அழற்சி. மூளைத் தண்டிலும், முதுகந்தண்டிலும் உள்ள முன் பக்கக் கொம்புகளின் இயக்க நரம் பணுக்களை ஒரு கொள்ளை நோய்க் கிருமி தாக்குதலால இது உண்டாகிறது.

polio viruses : இளம்பிள்ளை வாதக் கிருமி : இளமபிளளை வாதத்தை உண்டாக்கும் நோய்க் கிருமிகள். வைரஸ் நுண்ணுயிரி.

politzer's bag : போலிட்சர் பை : முன் தொண்டையிலிருநது நடுக் காதுக் குழிவரையில் செல்லும் குழாயை உப்பச் செய்வதற்கான ஒரு ரப்பர் பை.

pollicization, சுட்டு விரல் குறுக்க அறுவை; கட்டை விரல் மாற்றம் : சுட்டு விரலைச் சுழற்றி, பெரு விரலின் நிலைக்குக் கொண்டு வருவதற்காகக் குறுக்குவதற்குச் செய்யப்படும் ஒருவகை அறுவை மருத்துவம்.

polya operation: இரைப்பை அறுவை : இரைப்பையின ஒரு பகுதியில் செய்யப்படும் அறுவை மருததுவம். போல்யா விளக்கியது.

polyarteritis : பல தமனி அழற்சி; தமனிகள் அழற்சி: பல தமனிகளில் ஏற்படும் வீக்கம். இதனால் பாதிக்கப்பட்ட நாளங்களில் வீக்கமும் குருதியுறைவும் ஏற்படுகிறது. மேற்கொண்டு சேதம் உண்டாகுமானால் இரத்தப் போக்கு ஏற்படுகிறது.

polyarthralgia : பல மூட்டு வலி : பல்வேறு மூட்டுகளிலும் உண்டாகும் நோவு.

polyarthritis : பலமூட்டு அழற்சி; மூட்டுகள் அழற்சி; பன்மூட்டழற்சி : பலமூட்டுகளில ஒரே சமயத்தில் உண்டாகும் வீக்கம்.

polybactrin : பாலிபாக்ட்ரின் ; நியோமைசின் சல்ஃபேட் பாலிமிக்சின்-B, பாசிட்ராசின் ஆகியவை கலந்த ஒரு கலவையின் வாணிகப் பெயர். இது ஓர் உயிர்ப் பொருள் எதிர்ப்புத் தெளிப்பு மருந்து. காயங்கள், அறுவைச் சிகிச்சைக் காயங்களைக் குணப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது.

polycystic : பல நீர்க்கட்டி ; பல நீர்க்கட்டிகளையுடைய, சிறுநீரக நோய். இது பெரும்பாலும் நுரையீரல் கட்டிகளுடன் தொடர்புடையது.

polycythaemia : சிவப்பணுப் பெருக்கம்; சிவப்பணு மிகைப்பு : இரத்தத்தில் சுற்றோட்டமாகச் செல்லும் சிவப்பணுக்களின் எண்ணிக்கை பெருகுதல். இது நீர்ம இழப்பு காரணமாக ஏற்படலாம். ஒரு பிறவி இதய நோயில் ஏற்படு

வது போன்று, ஆக்சிஜனைக் கொண்டு செல்லும் திறனை அதிகரிப்பதற்காகவும் உண்டாகலாம்.

polydactyly : **மிகைவிரல், விரல் மிகைப்பு :** கை-கால்களில் இயல்பான எண்ணிக்கைக்குக் கூடுதலாக விரல்கள் இருத்தல்.

polydipsia : **பெருந்தாகம்; நீர்வேட்கை; வெகுதாகம் ;** அளவுக்குமீறித் தாகம் எடுத்தல்

polyhydramnios : **மிகைக் கருச்சவ்வு நீர்மம்; வெகு நீர்ப்பனிக்குடம்.** கருவை அடுத்துச சுற்றியுள்ள சவ்வில் சுரக்கும் நீர்மம அளவுக்கு அதிகமாகச் சுரத்தல்.

polymyalgia rheumatics: **தசைக் கீல் வாதம் :** முதியவர்களுக்கு ஏற்படும் ஒரு நோய். இதனால, தோள் பட்டைகளிலும் இடுப்புக் குழித் தசைகளிலும, முதுகந்தண்டிலும் கடும் வலிதோன்றும. காலை நேரத்தில் தசைப்பிடிப்பும் உணடாகும். இது கன்னப் பொட்டெலும்பு நாடி அழற்சியுடன தொடர்புடையது இது கீல் வாயு மூட்டு வீக்கததிலிருந்து வேறுபட்டது.

polymyositis : **தசை நலிவு :** பெரும்பாலும் நடுவயதில் ஏற்படும் தசை நலிவு நோய் தசையில் அழற்சி மாறுபாடுகள் ஏற்படுவதால் இது உண்டாகிறது.

polymyxin B : **பாலிமைக்சின் B :** கிராம்சாயம் எடுக்காத நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் ஓர் உயிர் எதிர்ப்பொருள். இதனைத தசை வழி ஊசிமூலம் செலுத்தினால் வலியுண்டாகும் எனபதால், நரம்புவழி, மெல்ல மெலலக் கொடுக்கப்படுகிறது காது, கண் நோய்களுக்கும இதிலிருநது மருந்து தயாரிக்கப்படுகிறது.

polyneuritis : **பன்முக நரம்பழற்சி; பல நரம்பழற்சி.**

polyoma ; **கட்டிக்கிருமி :** கட்டி உண்டாக்கும் கிருமிகளில் ஒன்று.

polyopia : **பல்வடிவக் காட்சி, பல உரு பார்வை :** ஒரே பொருளின் பலவேறு உருக்காட்சிகள் தோன்றும் பார்வைக்கோளாறு.

polyp, polypus : **சவ்வுக் கழலை; விழுது; சவ்வுக்கட்டி :** கருப்பை, மூககு போன்ற சளிச்சவ்வுப்பரப்புகளில் உண்டாகும் கழலைக்கட்டி.

polypectomy : **தொங்கு தசை அறுவை; விழுது நீக்கம்; விழுது எடுப்பு :** தொங்கு தசையை அறுவை மருததுவம் மூலம் அகற்றுதல விழுதுத் தடை நீக்கம்.

polypeptides : **அமினோப் புரதங்கள் :** நீராற் பகுக்கும்போது இரண்டுக்கு மேற்பட்ட அமினோ அமிலங்களைக் கொடுக்கும் புரதங்கள்.

polypharmacy : **பன்முக மருந்து; பல மருந்து மருத்துவம் :** ஒரே நோயாளிக்கு வாய்வழி உட்கொள்ளப்படும் பல மருந்துகளை எழுதிக்கொடுத்தல். இது நோயாளி மருத்துவரின் அறிவுரையைப் பின்பற்றாமல் போவதற்கு வழி வகுக்கும்.

polypoid: **தொங்கு தசை போன்ற; விழுதுரு; விழுதனைய :** தொங்கு தசையை ஒததிருககினற.

polyposis : **பெருங்குடல தொங்கு தசை; விழுதியம், :** பெருங்குடலில் ஏராளமான தொங்கு தசைகள் இருத்தல். இது பெரும்பாலும் மரபாக ஏறபடுகிறது. இது பொதுவாகப் பெருங்குடல் புறறுக்கு வழி வகுக்கிறது. தொங்குதசையை அகற்றுவதே இதைத் தடுப்பதற்குரிய வழி.

polyp pectum : **மலக்குடல் தொங்கு தசை.**

polysaccharide : **சர்க்கரைச் சேர்மங்கள் ($C_6H_{10}O_5$) :** பல்வேறு ஒறறைச் சர்க்கரைச் சேர்மங

களைக் கொண்டுள்ள கார்போ ஹைட்ரேட்டுகள் மாச்சத்து, இன்சுலின், கிளைக்கோஜன்,டெக்ஸ்டிரின், செல்லுலோஸ் ஆகியவை இவ்வகையின.

polyserositis : பன்முக நிணநீர்ச் சவ்வழற்சி : பல்வேறு குருதி நிணநீர்ச்சவ்வுகளில் உண்டாகும் வீக்கம். மரபணு முறையில் உண்டாகும் இவ்வகை அழற்சியை 'மத்திய தரைக்கடல் காய்ச்சல்' என்பர்.

polythiazide : பாலித்தயாசிடு : சிறுநீர் கழிப்பதை ஊக்குவிக்கும் மருந்து.

polyuria· மிகைச் சிறுநீர்ப் போக்கு சிறுநீர் மிகைப்பு; சிறுநீர்ப் பெருக்கு : சிறுநீர் அளவுக்கு அதிகமாகக் கழிதல்.

pompholyx : தோல் கொப்புளம்; தோல் குமிழ்வு : தோலில் உண்டாகும் குமிழான கொப்புளம். இதனால் நமைச்சல் அல்லது எரிச்சல் ஏற்படும்.

POMR : சிக்கல் சார்ந்த மருத்துவ வரலாறு .

Ponderax: பான்டெராக்ஸ்: ஃபென்ஃபுளூராமின் ஹைட்ரோகுளோரைடு என்ற மருந்தின் வாணிகப்பெயர்.

pons varoli : மூளை இணைப்பு; நரம்புப் பாலம் : மூளையின் இரு பாதிகளையும் இணைத்து மூளையின் பல்வேறு பகுதிகளையும் இணைக்கின்ற நரம்பிழைத் தொகுதி.



மூளை இணைப்பு

pons : திசுப் பாலம்; முகுளம், மூளைப் பாலம் : மூளையின் இரு பாதிகளையும் இணைக்கும் நரம்பிழைப் பட்டை.

ponstan : பான்ஸ்டான் : மெஃபினாமிக் அமிலத்தின் வாணிகப் பெயர்.

pontiac fever: பாண்டியாக் காய்ச்சல் : சளிக்காய்ச்சல் (இன்ஃபுளூயென்சா) போன்ற ஒருவகைக் காய்ச்சல். இது நுரையீரல் தொடர்பானது அன்று.

popliteal : முழங்கால் பின் பகுதி சார்ந்த; முழங்காலின் பின்னாலுள்ள குழிவுக்குரிய.

popliteus : பின்கால் தசை; தசை; முழங்காலின் : துடையின் பிற்பகுதி சார்ந்த இடத்திலுள்ள ஒரு தசை. இது காலை மடக்கவும் சுழற்றுவதற்கும் உதவுகிறது.

poradenitis : பின் சிறுகுடல் அழற்சி : பின் சிறுகுடல சுரப்பிகளில் வலியுடன் ஏற்படும் திரட்சி. அரையாப்புக் கட்டியின்போது இது உணடாகிறது.

pore : நுண்துளை/மயிர்க்கண்; சிறு தோல் ஓட்டை; புரை : வியர்வைச் சுரப்பிகளுக்குச் செல்லும் நாளங்களின் ஒருவாய். தோல் மேற்பரப்பில் இவற்றை நுண்ணிய அடுக்குத் தசைகள் கட்டுப்படுத்துகின்றன. குளிரில் இது சுருங்கி அடைபட்டும், வெப்பத்தில் விரிவடைந்தும் இது நடைபெறுகிறது.

porphyria : போர்ப்பைரின் வளர்சிதை மாற்றப்பிழை : போர்ப்பைரின் வளர்சிதை மாற்றத்தில் உள்ள உள்ளார்ந்த பிழை. இது பொதுவாக மரபுவழி உண்டாகும். இது நரம்பு மற்றும தசைத்திசுக்களில் நோய்க்குறி மாறுதல்களை ஏற்படுத்துகிறது. சில நோய்களில், மலம் அல்லது சிறு நீர் அல்லது இரண்டிலும போர்ப்பைரின் இருக்கும்.

porphyrins : போர்ப்பைரின் · குருதிவண்ணப் பொருள் போன்ற மூச்சுக்குழாய் நி

மிகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ள ஒளியுணர்வுக் கரிமக் கூட்டுப் பொருள். யூரோ போர்ப்பைரின், காப்ரோ போர்ப்பைரின ஆகியவை இயற்கையாகக் கிடைக்கும் போர்ப்பைரின்கள்.

porphyrinuria : **சிறுநீர் போர்ப்பைரின் :** *சிறுநீரில் அளவுக்கு அதிகமாக போர்ப்பைரின் இருத்தல. இது வளர்சிதை மாற்றத்தில் ஏற்படும் உள்ளார்ந்த பிழையினால் உண்டாகிறது.*

porta : **கல்லீரல் பிளவு :** *கல்லீரலின குறுக்கேயுள்ள பிளவு.*

portal (vein) : **கல்லீரல் சிரை :** *கல்லீரலுக்குக் குருதி கொண்டு செல்லும் குருதி நாளம்.*

portahepatitis : **கல்லீரல் சிரையழற்சி; ஈரல் வாயில் அழற்சி :** *கல்லீரல் சிரையில் ஏற்படும் வீக்கம்.*

portal hypertension **கலலீரல் சிரை மிகையழுத்தம்; ஈரல் அழுத்த மிகைப்பு :** *கலலீரல் சிரையில அழுத்தம் அதிகரித்தல.இது பொதுவாக ஈரலரிப்பு காரணமாக உண்டாகிறது.*

portal circulation : **கல்லீரல் சிரை; இரத்தவோட்டம்; சுற்றோட்டம் :** *குடல், கணையம், மணணீரல், இரைப்பை ஆகியவறறின இரத்தம இதயத்திற்குத் திருமபுவதற்கு முனபு ஈரலில் சிரையினால சேகரிக்கப்படுதல்*

portal vein : **கல்லீரல் சிரை; வாயில் சிரை .** *கல்லீரலுக்கு இரதத்தைக் கொண்டு செலலும் சிரை. இது 75 மி.மீ. நீளமுடையது இது குடற்குழாய்ச் சவ்வுச சிரைகள் ஆகியவை இணைந்து அமைந்தது*

position **இருப்பு நிலை;இருக்கை;** *இருப்பிடம்.*

positive pressure ventilation : **ஆக்கமுறை அழுத்தக் காற்றூட்டம்; நேரமுத்த மூச்சோட்டம் :** *மூச்சு உள்வாங்குவதற்காக நுரையீரல்களில் ஆக்கமுறையில் காற்றழுத்தம ஏற்படுதல். நுரையீரல் சுருங்குவதன் மூலம் மூச்சு வெளியேறுகிறது இயக்கழுத்தக் காற்றேறறம்.*

posterior urethral valve : **சிறுநீரப்புறவழிப் பின்புறத் தடுக்கிதழ்:** *பினபுறச் சிறுநீர்க் குழல் தடுக்கிதழ்கள்.*

posseting : **பத்தியப் பாலூட்டல் :** *குழந்தைகளுக்குக் கட்டிப்பாலைச் சிறிது சிறிதாகக் கொடுத்தல்.*

post anaesthetic : **மயக்க மருந்தூட்டியபின்; உணர்வகற்றுப்பின்.**

postanal : **மலவாய்ப் பின்புறம்.**

postcoital : **புணர்ச்சிக்குப் பின் :** *கருத்தடை உறையைப் பயன்படுத்திப் பாலுறவு கொண்டதன் பின்.*

postconcussional syndrome : **தலைமோதல் நோய்; தலைக காயத்தின்பின் மயககம் :** *தலைக்காயம ஏறபட்டபின ஏற்படும் தலைவலி, மயக்கம், மயக்கவுணர்வு போன்ற நோய்க்குறிகள்.*

post diphtheritic : **தொண்டையடைப்பான் பின்னோய் :** *தொண்டையடைப்பான் நோய்த் தாக்குதலுக்குப் பிறகு உணடாகும் உறுப்பு வாதம். மேல்வாய் உணர்வின்மை போன்ற நோய்க் குறிகள்.*

post hepatic: நுரையீரல் பின்புறம்; ஈரலின் பின்னால.

post herpetic : **அரையாப்புப் பின்புறம்**

posthitis : **மானி நுதி வீக்கம், மானி முனை அழற்சி.**

posthumous : **மரணத்தின்பின்; இறப்புக்குப்பின் :** *(1) தந்தை இறந்தபின் குழந்தை பிறததல. (2) தாய் இறநதபின், தாயின் வயிற்றிலிருநது குழநதையை*

அறுவை மருத்துவம் மூலம் வெளி யில் எடுத்தல்.

postmature baby : மாதங்கடந்த குழந்தை : எதிர்பார்த்த தேதிக்குப் பிறகு பிறந்த குழந்தை 40 வாரங் களுக்கு அப்பாலும் வயிற்றி லிருந்து தாமதமாகப் பிறக்கும் குழந்தை.

postmenopausal : மாதவிடாய் நிறுத்தத்திற்குப்பின் .

postmortem. சடலப் பரிசோதனை/ பிண ஆய்வு· பிணக் கூற்றாய்வு; மரணப் பின் ஆய்வு : இறப்புக்குப் பின் சடலத்தை அறுத்துப் பரி சோதனை செய்தல.

post nasal : மூக்குப் பின்புறம்; மூக்கின் பின்னால் : மூக்கிற்குப் பின்புறம் மூக்குத்தொண்டையில் அமைந்துள்ள.

postnatal : பேறுகாலத்திற்குப் பின்; பிறந்தவுடன், பிறந்த பின் குழந்தை பிறந்தபின நிகழ்கிற.

postpartum haemorrhage : பேறு காலத்திற்குப் பின் இரத்த இழப்பு; பேற்றுக்குப்பின் ஒழுக்கு.

postoperative : அறுவை மருத் துவத்திற்குப்பின்; அறுவைக்குப் பிற் பாடு.

postpartum : பேறுகாலத்திற்குப் பின்: பேற்றுக்குப் பின்னா.

postprandial . உணவுக்குப் பின் னர்.

postural : தோற்றம் சார்ந்த.

posture : தோற்ற நிலை, உடல் இருக்கை நிலை; தோரணை; இருப்பு நிலை : முழு உடலின் தோற்ற அமைப்பு அலலது தோற் றததின் ஒருபகுதி.

post urethral instillation : புறச் சிறுநீர் குழலைத் தாண்டி ஒழுக்குதல.

postvaccinal : அம்மை குத்திய பின்.

potaba-6: போட்டாபா-6; பொட் டாசியம் பாராமினோ பென்சி னேட் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

potassium chlorate : பொட்டா சியம் குளோரேட் : இலேசான நோய் நுணமத்தடை. வாய் கழுவு மருந்துகளிலும், தொண்டைகழுவு நீர்மங்களிலும் பயன்படுகிறது. பொட்டாசியம் குளோரைடி லிருந்து வேறுபட்டது.

potassium chloride : பொட்டா சியம் குளோரைடு: பொட்டாசியத் திறகுப் பதிலாகப் பயன்படுத்தப் படும் கரைசல், தையாசைடு சிறு நீர்க் கழிவுச் கிசிச்சையிலும் பயன படுத்தப்படுகிறது

potassium citrate : பொட்டா சியம் சைட்ரேட் : சிறுநீரைக் காரத் தன்மையடையச் செய் கிறது.இன்னும் சிறுநீர்க்கட்டி முத லியவற்றில் பயனபடுகிறது. சல்∴ போனாமைடு சிகிச்சையினபோது சிக்கல்கள் ஏற்படாமல் தடுக்கப் பயன்படுகிறது.

pottassium cyanide : பொட்டா சியம் சையனைடு : மிகக் கொடிய நஞ்சு வகை.

potassium deficiency : பொட் டாசியம் பற்றாககுறை; பொட்டா சியம் குறைபாடு: மினபகுப்புச் சம நிலை சீர்குலைதல். அளவுககு அதிகமான வாந்தியினபோது அல் லது வயிற்றுப் போக்கினபோது ஏற்படுகிறது. சிறுநீர்ப் போக்கை அதிகரிககும் மருநதுகளை நீண்ட காலம் பயன்படுத்துவதாலும உண்டாகலாம். குமட்டல், தசை நலிவு இதன் அறிகுறிகள். இடை யிடையே மாரடைப்பும் ஏற்படக் கூடும்.

potassium hydroxide : பொட்டாசியம் ஹைட்ராக்சைடு : காரப் பொட்டாஷ். அரிதாகப் பாலுண்ணிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது

potassium lodide : பொட்டாசியம் அயோடைடு: மூச்சுக் கிளைக் குழல் அழற்சியின்போது சளியகற்றும் மருந்தாகப் பயன்படுத்தப் படுகிறது. குரல் வளைச் சுரப்பி விக்கத்தைக் குணப்படுத்தவும் பயன்படுகிறது.

potassium paraamino benzoate : பொட்டாசியம் பாராமினோ பென்சோயேட் : புறததோல் சுழலைக்குப் பயன்படும் மருந்து. 3 கிராம் மாத்திரைகளை நாள் தோறும் நான்கு வேளை உணவுடன் வாய்வழியாகப் பல மாதங்கள் உட்கொள்ள வேண்டும்.

potassium perchlorate : பொட்டாசியம் பொக்குளோரேட் : கேடயச் சுரப்பியில் அயோடின் திரட்சியைக் கட்டுப்படுத்தும மருந்து.

potassium permanganate : பொட்டாசியம பெர்மாங்கனேட் : ஆற்றல்மிக்க தொற்றுத்தடை மருந்து. கருஞ்சிவப்பு நிறமுடையது. மணம் அகற்றும் இயல்புடையது. காயங்களைக் கழுவும் கரைசலாகப் பயன்படுகிறது.

potency: வீரியம்: ஆற்றல்; சக்தி.

potter's rot (potter's asthma; potter's bronchitis) : குயவர் நோய் : மணபாணடத் தொழிலாளர்களுக்கு மண் தூசியினால் உண்டாகும் கொடிய மார்ச்சளி நோய்.

povidone iodine : போவைடோன் அயோடின் : அயோடினை விடுவிக்கும் ஒரு திரவம். இது, தோலிலும் சிலேட்டுமப் படலத்திலும் படும்போது அயோடின் மெல்ல மெல்ல விடுவிக்கப்படுகிறது. இதனால் இது அறுவை மருத்துவத்துக்கு முந்திய தோல் மருந்தாகவும், அலசிக் கழுவும் மருந்தாகவும் பயன்படுகிறது.

pott's disease : முதுகெலும்பு அழற்சி : முதுகந்தண்டுசொதமையாதல்; முதுகந்தண்டுக் காச நோய், இதனால் முதுகெலும்பு இழைம அழுகல் ஏற்படுகிறது.

முதுகெலும்பு அழற்சி

pott's fracture: கணுக்கால் மூட்டுப்பெயர்வு: கணுக்கால் மூட்டு முறிந்துஇடம் பெயர்தல். கணுக்கால் மூட்டுக்கு 75மி மீ. மேலேயுள்ள முன்கால் எலும்பின் கீழ்முனையிலும் சிம்பு காலின வெளிப்புறத்திலுள்ள சிம்பு எலும்பிலும் முறிவு ஏற்படுதல். முன்கால் எலும்பின கீழ்முனையிலும் சிம்பு காலின் வெளிப்புறத்திலுள்ள சிம்பு எலும்பிலும் முறிவு ஏற்படுதல். முன்கால எலும்பின இடைச் சுத்தி எலும்பில ஏற்படும் முறிவு.

கணுக்கால் மூட்டுப பெயர்வு

PPS: இடுப்புக்குழி வலி நோய்.

PR : மலக்குடல் வழி: மலக்குடலை பரிசோதனை செய்வதறகாக அல்லது உடலுக்குள் பொருள்களைச் செலுத்துவதற்கான வழி.

prazosin : பிராசோசின் : மட்டுமீறிய இரத்தஅழுத்தத்தை மட்டுப்

படுத்தும் மருந்து. இது நேரடி யான குருதிநாள விரிவகற்சி மூல மாக வெளிநரமபுகளில வினைபுரி கிறது.

precancerous : புற்று நோய்க்கு முந்தி; புற்றுமுன் : புற்று நோய்க்கு முன்பு உக்கிரமில்லாமல் ஏற்படும் நோய்க் குறியியல் மாற்றங்கள். இந்த மாற்றங்களைத் தொடர்ந்து புற்று நோய் உண்டாகும் என்பர்.

precipitated labour : திடீர்ப் பேறுகாலம்: அவசரப் பேறுகாலம.

preciptin : பிரசிப்டின் : ஒரு காப்பு மூலத்துடன் சேர்ந்து ஒரு நோய்த் தடைக்காப்புத் தொகுதி யை உண்டாக்கக் கூடிய ஒரு நோய் எதிர்ப் பொருள். இது பல நோய்களைக் கண்டறிய அடிப் படையாக அமைகிறது.

precoecious : வயது மீறிய வளர்ச்சி.

precordial prae cordial · இதயத் திற்கு முனபுளள; இதயமுன் . நெஞ சுப்பைக்கு அடுதது முனபுள்ள.

precostal: விலாவெலும்புக்கு முன் புள்ள ; விலாவெலுமபுகளுக்கு முனபுள்ள.

precursor : முன் பொருள் முன் னோடி; முன் நிலை.

predigestion : முற்செரிமானம் : உணவை உண்பதறகு முனனர் செயற்கையாக எளிதாகச் செரி மானமாகக் கூடியதாகச் செய்தல்.

predisposition : இயற்சார்வு நிலை : இயற்கையாகவே சில நோய்கள் பிடிப்பதற்கான அல் லது ஏற்படுவதறகான நிலை.

prednisolone. பிரட்னிசோலோன்: இணைப்புத் திசு நோய்கள், நோய்த் தடைக்காப்புக் கோளாறு கள் போன்றவற்றைக் குணப படுத்தக கொடுக்கப்படும் ஒரு செயற்கை . இயக்குநீர் (ஹார் மோன).

prednisone: பிரட்னிசோன்: நுரை யீரலில் பிரட்னிசோலோனாக மாறும் மருந்து. இது பிரட்னி சோலோன் கொடுக்கப்படும் நோய்களுக்கே கொடுக்கப்படு கிறது.

preeclampsia : கர்ப்பகால வலிப்பு நோய். பேற்றுக்கு முன் மருட்சி; இளம் பேற்றுச் சன்னி : பெண்கள் கருவுற்றிருக்கும் காலத்தின் பிற் பகுதியில் சிறுநீர்ப் புரத நோய், மிகை இரத்த அழுத்தம், இழைம அழற்சி போன்றவை தோன்றும் நிலை.

pregnancy · கர்ப்பம்; சூல்; கரு வுற்ற நிலை; சினை படல : கருப பையில் குழநதை கருவுயிர்த்திருக் கும் காலம. இது பெரும்பாலும் 40 வாரங்கள் அல்லது 280 நாட் கள் ஆகும்.

pregnanediol· பிரக்னேன்டியால் : பிராஜஸ்டிரோனிலிருந்து எடுக்கப் படும் சிறுநீரைச் சுரக்கும பொருள்.

pregnyl : பிரக்னில் ; கருப்பைக்கு வெளியில் விதைப்பை இறங்காமல் இருக்கும்போது பயன்படுத்தப் படும் மருந்தின வாணிகப் பெயர்.

premarin : பிரிமாரின் : மாத விடாய் நிறுத்தக் கோளாறுகளுக் குக் கொடுக்கப்படும் மருந்தின் வாணிகப் பெயர். இது வாய்வழி கொடுக்கப்படுகிறது.

premature : பருவமடையா; முதிர் வுறா.

premature baby : குறைமாதக் குழந்தை; முற்றாக் குழந்தை: உரிய காலத்திற்குமுன பிறக்கும் குழந்தை, குறைமாகக் குழந்தை யின எடை 2 5 கி.கிராமுக்குக் குறைவாக இருந்தால் அதற்குத் தனிச் சிகிச்சையளிக்க வேண்டும்.

premedication : மருந்துக்கு முன் மருநது; முன்னோடி மருந்து; முன்

மருந்து : ஒரு மருந்தைக் கொடுப்பதற்கு முன் கொடுக்க வேண்டிய மருந்து. எடுத்துக்காட்டாக, மயக்க மருந்து கொடுப்பதற்கு முன்னர் கொடுக்கப்பட வேண்டிய மருந்து. இவை உறக்க மூட்டும் மருந்துகள், எச்சில் சுரப்புத் தடுப்பு மருந்துகள் எனப் பல வகைப்படும்.

premenstrual : முந்திய மாதவிடாய்.

premolar tooth : முன் கடைவாய்ப்பல், முன் கடைப்பல் : கடைவாயப் பல்லுக்கு முன்னுள்ள பல்; கதுப்புப் பல்

prenatal : பேறுகால முன்; பேற்றுக்கு முன்; பிறப்புக்கு முன் : பேறுகாலத்திற்கு முந்திய கடைசி மாதவிடாய்க்கும் குழந்தை பிறப்பதற்கும் இடைப்பட்ட காலம். இது பொதுவாக 40 வாரங்கள் அல்லது 280 நாட்கள் ஆகும்.

prenatal syphilis . பிறவிக் கிரந்தி

prenylamine : பிரனிலாமைன் : குருதி நாள விரிவகற்சி மருந்துகளில் ஒன்று. இடது மார்பு வேதனைதரும் இதய நோயின் போது கொடுக்கப்படுகிறது.

preoperative: அறுவைக்கு முன்பு; அறுவை முன் : அறுவை மருத்துவத்துக்கு முன்பு.

preparalytic: வாதத்திற்கு முன்பு; வாத முனனோடி : வாதநோய் ஏற்படுவதற்கு முன்பு பொதுவாக இளம்பிள்ளை வாதத்தின தொடக்க நிலையைக் குறிக்கும்

prepubertal: பூப்புக்கு முன்; பருவமடையும் முன் : பூப்புப்பருவம் எய்துவதற்கு முன்பு.

prepatellar : முட்டுச் சில்லுக்கு முன் : கால்முட்டுச் சில்லுக்கு (முட்டுச்சிப்பி) முன்பு. இது மசகு நீர்ச்சுரப்பியைக் குறிக்கும்.

prepuce : மாணி நுதி; முன் தோல்; ஆணகுறி நுனியுறை; ஆண்குறி நுனிக் கவசம.

presbyopia: வெள்ளெழுத்து; முதுமை பார்வைக் குறை; வெளளெழுத்து; சாளேசுரம்; முதுமங்கல் : கிட்டப் பார்வைக்குறை பெரும்பாலும் 45 வயதுக்கு மேல் ஏற்படுகிறது.

prescription : மருந்துச் சீட்டு; மருத்துவ மருந்துக் குறிப்பு; மருந்து வரைவு; மருந்தெழுத்து : தேவையான மருநதுகள கொடுப்பதற்கு மருந்துக் கடைக்காரருக்கு அறிவுறுதத மருத்துவர் எழுதிக் கொடுக்கும் மருந்துப் பட்டியல்.

presenility : முதுமைக்கு முன்பு; மூப்புக்கு முன்: முதுமை முன்னம் : முதுமைக்கு முனபு ஏறபடும் நலிவு நிலை.

presentation : பிறப்புத் தோற்றம்; கருக குழந்தைப் பகுதி; பிறக்கும் போது தோற்றம் ; இடுப்பெலுமபு விளிமபுககுள் முதலில் நுழையும் கருப்பைக் குழந்தையின் பகுதி. இதனை வயிற்று வலியின்போது பரிசோதிக்கும் மருததுவர் விரலால் தொட்டுப் பார்க்கலாம். இது, உச்சநததலையாக, முகமாக, கண்ணிமையாக, தோளாக அல்லது பிட்டமாக இருக்கலாம்.

pressor : குருதி அழுத்த மிகு பொருள்; அழுத்த ஊக்கி அழுத்தி : இரதத அழுததததை அதிகரிக்கும் ஒரு பொருள்.

pressure . அழுத்தப் பகுதி; அழுங் திடங்கள் ; உடலில் எலும்புகள் முனைப்பாகத் தெரியும் பகுதி. படுக்கையில் அல்லது நாற்காலியில் இருக்கும் நோயாளிகளுக்கு களுக்கு இந்தப் பகுதிக்கு இரததம செல்வது புற அழுத்தம் காரணமாகக் குறைந்துவிடும்.

pressure point : **அழுத்தப் புள்ளி; அழுந்திடம் :** இதயத்திலிருந்து குருதி கொண்டு செல்லும் நாள மாகிய ஒரு தமனி, ஒரு எலும்பின மேலாகச் செல்லும் ஓர் இடம். இந்த இடத்தில் அழுத்தி, குருதிப் போக்கை நிறுத்தலாம்.

pressure sore : **அழுத்தப் புண்; அழுந்து புண் :** அழுத்தம் காரண மாக உண்டாகும் சீழ்ப்புண்.

presystole : இதயச் சுருக்கத்திற்கு முன் : குருதிநாளச் சுருங்கியக்கத் திற்கு அல்லது இதயத் தசைச் சுருங்கியக்கத்திற்கு முந்திய காலம்.

preventive paediatrics : **குழவி நோய்த் தடுப்பு மருத்துவம்.**

priapism: ஆண்குறி விறைப்பு;குறி விறைப்பியம் : பாலுணர்வுத் தூண்டுதல் இன்றியே ஆண்குறி நீண்ட நேரம் விறைப்பாகி இருத் தல். நோயால் ஏற்படும் விறைப்பு.

prilocaine : பிரிலோக்கெய்ன் : ஓர் உணர்வு நீக்கிச் செயற்கைமருந்து; கோக்கைனைவிட நச்சுத் தன்மை குறைந்தது. இதன் சில தயாரிப்பு களில் செல் குழாய் இறுக்கும் பொருள்கள் அடங்கியுள்ளன.

primaquine : பிரைமாக்குவின் : முறைக்காய்ச்சல் (மலேரியா) எதிர்ப்பு மருந்து. முறைக் காய்ச் சலுக்குக் காரணமான ஒட்டுயிர்க் கிருமியை நுரையீரலிலிருந்து நீக்கு வதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

primary amputation : **முதல் நிலை உறுப்புத் துணடிப்பு :** அழறசி அல்லது வீக்கம் இடையூறாக நிகழ் வதறகு முனனர் செய்யப்படும முதறபடியான உறுப்புத் துண்டிப்பு.

primary complex : முதல் நிலைக் காசநோய்; காசநோய் தொற்று நிலை: ஒருவருக்கு முதறபடியாகக் காசநோய் ஏற்படுதல். பொது வாக இது சுவாசப்பையில் (நுரை யீரல்) உண்டாகும். இந்த நிலை யில் இந்நோயை பெரும்பாலும் குணப்படுத்தி விடலாம்.

primary health care: தொடக்கச் சுகாதாரக் கவனிப்பு; முதற்படி நல் வாழ்வு பராமரிப்பு : முதல நிலைச் சுகாதாரக் கவனிப்பு முறை. எல் லோருக்கும் இன்றியமையாத சுகா தார வசதிகள் கிடைக்கும்படி செய்வதற்காக உலகச் சுகாதார அமைவனம் வகுத்த திட்டத்தின் படி செயறபடும மருத்துவக் கவனிப்பு முறை.

primary immunisation : **முதல் முறை நோய்த் தடுப்பு**

primary sore : **முதற்புண்.**

primary syphilis , முதல் நிலைக் கிரந்தி.

primidone : பிரைமிடோன் : வலிபபுக்கு எதிராகக் கொடுக்கப் படும் மருந்து. பொதுவாகக் கடுங் காக்காய் வலிப்புக்குக் கொடுக்கப் படுகிறது. எனினும் சிலசமயம் இலேசான காக்காய் வலிப்புக்கும் பயனபடுத்தப்படுகிறது.

primigravida : தலைச் சூலி; தலைக் கர்ப்பிணி, தலைப் பிள்ளைத் தாய்மை; தலைச்சான் கருவுற்ற தாய் : முதனமுதலாகக் கருவுற் றிருக்கும் பெண்மணி.

primipara : தலைக் கர்ப்பிணி; தலைப் பிள்ளைத்தாய்ச்சி; தலைச் சான் தாய்; முதற் பேற்றி : முதன் முதல் குழந்தை பெறற பெண மணி.

probenecid : புரோபினெசிடு : பெனிசிலின், பாராஅமினோ சாலி சிலிக் அமிலம போனற சில கூட்டுப் பொருளகளைச் சிறு நீரகம சுரப்பதைத் தடுக்கும் ஒரு மருந்து. கீல் வாதத்தைக் குணப் படுததுவதற்கு இது பயன்படு கிறது.

procainamide : புரோக்கைனமைடு : புரோக்கைன் வழிப் பொருள்களில் ஒன்று தானியங்குத் தசைகளைத் தளர்ச்சியடையச் செய்வதற்குப் பயன்படுகிறது. இதனை வாய்வழியாகவோ, சிறிது சிறிதாக நரம்பு ஊசிமூலமாகவோ கொடுக்கலாம்.

procaine : புரோக்கெய்ன் : ஒரு சமயம் மிகப் பெருமளவில் உறுப்பெல்லை உணர்ச்சி நீக்க மருந்தாகப் பயன்படுத்தப்பட்ட மருந்து நச்சுத் தன்மை குறைந்தது; மிகுந்த வீரியமுடையது. இப்போது இதற்குப் பதிலாக லிக்னோகைன பயன்படுததப்படுகிறது.

procarbazine : புரோக்கார்பாசின்: நைட்ரஜன் மருந்துகளில் ஒன்று. கடுகுக் குழுமததைச் சேர்ந்தது. ஹாட்கின் நோய்க்குப் பயன்படுத்தப்படுகிறது.

process : முற்புடைப்பு; துருத்த வளாவு : ஓர் உறுப்பின புற வளர்சசி அலலது புடைபபு.

prochlorperazine : புரோக்குளோர்ப்பெராசின் : ஃபெனாததியாசின் மருந்துகளில் ஒன்று. உறக்க மூட்டக கூடியது, வாந்தியைத் தடுகக வல்லது. கடுமையான குமட்டலையும், வாந்தியையும் தடுக்கப் பயனபடுகிறது.

procidentia : கருப்பை நழுவல்; கருப்பைத் தொங்கல் : கருப்பை முற்றிலுமாக நழுவி, யோனிக் குழாய் உட்பையினுள், ஆனால் உடல் மட்டத்திற்கு வெளியே அமைந்திருத்தல்-கருப்பை இறக்கம்.

proctalgia : மலக்குடல் வலி : மலக்குடல் பகுதியில உண்டாகும் வலி

proctitis : மலக்குடல் அழற்சி : மலக்குடலில் ஏறபடும் வீககம். துகள் சவ்வுப் படலம் வீங்குவதால் இது உண்டாகிறது.

proctocolectomy : குடல் அறுவை : மலக்குடலையும் பெருங குடலையும் அறுவை மருத்துவ மூலம் வெட்டியெடுத்தல்.

proctocolitis : மலக்குடல்-பெருங்குடல் அழற்சி : மலக்குடலிலும் பெருங்குடலிலும் ஏற்படும் வீக்கம். பொதுவாக சீழ்ப்புண் உண்டாகும் வகை.

proctoscope : மலக்குடல் ஆய்வுக் கருவி; மலக்குடல் நோக்கி; மலக்குடல் காட்டி : மலக்குடலைப் பரிசோதனை செய்வதற்கான ஒரு கருவி.

proctosigmoiditis : மலக்குடல்-வளைப் பெருங்குடல் அழற்சி; மலக்குடல் நெறியழற்சி: மலககுடலிலும வளைவுப் பெருங்குடலிலும் உண்டாகும் வீக்கம்.

procyclidine : புரோசைக்ளிடின் : தசைச் சுரிப்பு நோய்த் தடுப்பு மருந்துகளில் ஒன்று. பார்க்கின்சன் நோயைக் குணப்படுததப் பயன்படுத்தப்படுகிறது. இது தசை விறைப்பைக் குறைக்கும்; ஆனால் நடுக்கத்தைக் குறைப்பதில்லை.

prodexin : புரோடெக்சின்: வயிற்றுப் புளிப்பு அகற்றும் மாத்திரை மருந்தின் வாணிகப் பெயர். இதில் அலுமினியம் கிளைசினேட் மக்னிசியம கார்பொனேட் அடங்கியிருக்கிறது.

prodromal : நோய் முன் குறி : நோய்க்கு முந்திய அடையாளங்கள்

proflavine : புரோஃபிளேவின்: ஒரு நோய நுண்மத்தடை மருந்து. அக்ரிஃபினேவின் என்ற மருநதினைப் பெரிதும் ஒத்தது.

progestational : கர்ப்பத்திற்குச் சாதகமான : கருவுறுதலுக்குச் சாதகமான

progesterone : **புரோஜெஸ்டிரோன் ;** கருப்பைக் குருதிப் போக்கினைக் குணப்படுத்தப் பயன்படுத்தும் இயக்குநீர் (ஹார்மோன்). கருச்சிதைவினைக் குணப்படுத்தவும் பயன்படுகிறது. தசைவழி ஊசி வழி செலுத்தப்படுகிறது.

proglottis : **நாடாப் புழு :** பாலுற வில் முதிர்ச்சியடைநத நாடாப் புழுவின் பகுதி

prognosis: **முன்கணிப்பு: முன்னறிதல்; வருநிலை அறிதல்:** ஒரு நோய் எப்போது குணமாகும் என்பது பற்றிய முன் கணிப்பு.

proguanil : **புரோகுவானில் :** முறைக் காய்ச்சலுக்கு எதிரான ஒரு செயற்கை மருந்து.

projection : **பிறழ்ச்சி அறிவு; முன் வீச்சு:** இயல்பான மக்களிடம் அவர்கள் அறியாமலேயே அமையும் ஒருவகைஉளவியல்நேர்வு.இது மனநோய் அறிகுறி. முக்கியமாக அறிவுப் பிறழ்ச்சி. இந்நோய் கண்டவர்கள் தனது உணர்வுகளுக்கு மற்றவர்கள் காரணம் என்று குற்றஞ்சாட்டுவார்கள்.

prolapse : **உறுப்புப் பிறழ்ச்சி; வெளித்தள்ளல்; பிதுக்கம்; சரிவு :** உடலுறுப்புகள் இடம் பெயர்தல்; கருப்பை நெகிழ்ச்சி அல்லது மலக் குடல் இடம்பெயர்வு.

prolapse uterus : **கருப்பை நெகிழ்ச்சி; கருப்பைப் பிதுக்கம்.**

prolapsus : **உறுப்புப் பெயர்ச்சி :** கருப்பை அல்லது மலக்குடல் இடம பெயர்தல்.

proliferate: **உயிரணுப் பெருக்கம்:** உயிரணு பகுபட்டு எண்ணிக்கை பெருகுதல.

promazine : **புரோமாஸைன் :** துயிலூட்டும் மருநதுகளில ஒன்று. மது பானத்திற்கு அடிமையாகி இருப் பதைக குணப்படுத்தவும் பயனபடுகிறது.

promethazine : **புரோமித்தாசின் :** பயண நோய்க்குப் பயன்படும் மருந்து. பயணத்திற்கு 2 மணி நேரத்திற்கு முன்பு இதை அருந்தலாம். இது 6-12 மணிநேரம் வேலை செய்யும்.

pronator : **கைகவிழ்த் தசை; உட்புரட்டி: புறனுருட்டி :** கையைக் கவிழ்த்து வைப்பதற்கு உதவும் தசை.

prone : **முன்கவிந்த; புரளல்; குப்புற:** முகங்கவிந்து படுத்திருத்தல்; நெடுஞ்சாண கிடையாகக் குப் புறப்படுத்திருத்தல்.

propantheline: **புரோப்பந்தெலின்:** இரைப்பை வாயில் நோய், உணவுப் பாதைப் (சீரணப் பாதைப்) புண் முதலிய நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் ஒரு செயற்கைக் கூட்டுப் பொருள். இது சில நோயாளிகளுக்கு வாய் உலர்வை உணடாக்கும்.

prophylactic : **நோய்த் தடுப்பு மருந்து; முற்காப்பு; தடுப்பு முறை :** நோய்த் தடுப்பு முறை; நோயைத் தடுக்கிற.

prophylaxis : **முற்காப்பு; நோய்த் தடுப்பு மருத்துவம்; நோய்த் தடுப்பு; தடைமுறை :** நோய்த தடுப்பு மருத்துவம்; நோய்த்தடுப்பு முயற்சி.

proprietary name : **வாணிகப் பெயர் :** மருந்தாக்க நிறுவனம் தான் தயாரிக்கும் மருந்துக்குக் கொடுக்கும் பெயர்.

proptosis: **விழித் துருத்தம்; விழிப் பிதுக்கம் :** விழி முனபுறமாகப் பிதுங்கி இருத்தல்.

propylthiouracil : **புரோ:பில் தையோராசில் :** கேடயச் சுரப்பி இயக்கத்தை மட்டுப்படுத்துகிறது சில சமயம் கேடய நச்சுச் சுரப்பிநோய்குப் பயன்படுததப்படுகிறது. அதி தீவிர கேடயச் சுரப்பு இயக்க நச்சுத்தன்மையைக கட்டுப்படுத்தும்.

prostacyclin : புரோஸ்டாஸைக்ளின் : குருதிநாளச் சுவர்களின அக அடர்ப்படலத்தின் உயிரணுக்களினால் அமைந்த, இயற்கையாக உண்டாகும்ஒரு இயக்கப்பொருள். இது தகட்டணுக்கள் திரள்வதைத் தடுக்கிறது.

prostaglandins: புரோஸ்டாகிளாண்டின்ஸ் : முதலில் பிராஸ்டேட் சுரப்பியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இயக்குநீர்கள், வைட்டமின்கள், செரிமானப் பொருள் வினையூக்கிகள்ஆகியவற்றின் சில இயல்புகளைக் கொண்ட பொருள். உடல் திசுக்கள் அனைத்தும் ஏதேனும் புரோஸ்டாகிளாண்டினைக் கொண்டிருக்கிறது. தொடக்க நிலையில் கருச்சிதைவு செய்வதற்கும், ஈளை நோய்க்கும், இரைப்பை மிகை அமிலத் தன்மைக்கும பயன்படுத்தப்படுகிறது.

prostate (gland) : சிறுநீர்ப்பை முன் வாயில் சுரப்பி ; ஆணபால் உறுப்புக்கு உடன் இணைவாகவுள்ள சுரப்பித் திரள்களாலான பெருஞ்சுரப்பு.



சிறுநீர்பபை முனபாயில சுரபபி

prostatectomy : சிறுநீர்ப்பை வாயில் சுரப்பி அறுவை : சிறுநீர்ப்பை முன் வாயில் சுரப்பியை அறுவை மருத்துவம்மூலம் அகற்றுதல்.

prostatic acid phosphatase : புரோஸ்டாட்டிக் அமில ஃபாஸ்ஃபாட்டேஸ் : சிறுநீர்ப்பை முன் வாயில் சுரப்பியினால் சுரக்கப்படும் விந்துநீர்மத்திலுள்ள ஒரு செரிமானப் பொருள்.

prostatic massage : முன்வாயில் சுரப்பி அழுக்கம்: சிறுநீர்ப்பை முன் வாயில் சுரப்பியை அழுக்கி விடுதல். அழுத்தித் தடவுதல்.

prostatism : சிறுநீர்ப்பை முன் வாயில் சுரப்பி நோய் : சிறுநீர்ப்பை முன் வாயில் சுரப்பியில் ஏறபடும் நோய். சிறுநீர் அடைப்பு, சிறுநீர்க் கசிவு போன்றவை இதன அறிகுறிகள்.

prostatitis : முன்வாயில் சுரப்பி அழற்சி : சிறுநீாப்பை முனவாயில் சுரப்பியில் ஏற்படும் வீக்கம்.

prostatocystitis : சிறுநீர்ப்பை அழற்சி: சிறுநீர்ப்பை முன வாயில் சுரபபியிலும், ஆண்களின் சிறுநீர்ப்பையிலும் ஏறபடும் வீக்கம்.

prosthesis ; சீரமைவு அறுவை முறை; செயற்கை உறுப்புப் பொருத்தல், கட்டுறுப்பு : ஊனங்களைச் செயற்கையாகச் சீரமைப்பதற்கான அறுவை முறை; உடம்பில செயற்கை உறுப்புகளை இணைத்தல்.

prosthetics செயற்கை உறுப்பு செய்தல்.செயற்கை உறுப்புஅமைத்தலியல்; உடம்பில செயறகை உறுபபுகளை இணைக்கும் அறுவை மருத்துவப் பிரிவு.

prosthetic group : ஒட்டும் தொகுதி.

prosthetier : செயற்கைப் பலலியல்.

prosthokeratoplasty : கருவிழி இணைப்பு முறை : மனித அல்லது விலங்குத் திசுவாக இல்லாத ஒரு பொருளைக் கருவிழிப படலத்தில பொருத்தும் அறுவை மருத்துவ முறை.

prostin : புரோஸ்டின் : மகப்பேறு இடுப்பு வலியைத் தூண்டுவதற் காகக் கொடுக்கப்படும் புரோஸ் டாகிளாண்டின-E_2 அடங்கிய கரு நிலைப்படுத்தும் குறிவாயுள் கரை யும் மருந்துகளின வாணிகப் பெயர்.

protamine sulphate : புரோட்டா மின் சல்ஃபேட் : எளிய கட்டமைப் புடைய ஒரு புரதம் ஹெப்பாரின் என்ற கல்லீரல் சுரப்பு நீருக்கு மாற்று மருந்தாகப் பயன்படுத்தப் படுகிறது இதன் 1% கரைசலின் 1 மி.லி. அளவு 1000 அலகு ஹெப் பாரினின் விளைவுகளைச் செய லிழக்கச் செய்கிறது.

protamine zinc insulin : புரோட் டாமின் துத்தநாக இன்சுலின் : இனசுலினின கரையாத ஒரு வடி வம். புரோட்டாமின (எளிய புர தம), சிறிதளவு துத்தநாகம ஆகிய வை இணைதது இது அமைகிறது இது 24 மணிநேரம வரை வேலை செய்யும்.

protease : புரத நொதிப்பு; புரோட் டீஸ் : புரதததைச் சீரணிககும ஒரு செரிமானப் பொருள் (என்சைம). இது புரதத்தைச் சிதைக்கும் செரி மானப் பொருள்.

protective isolation : பாது காபபுத் தனிமையாக்கம் : தொற்று நோய்கள எளிதில பிடிக்கும வாயப்புள்ளவாகள எனக் கருதப் படும் நோயாளிகளை நோய்த் தொற்றிலிருநது பாதுகாப்பதற காகப் புறதொடாபில்லாமல தனியாக ஒதுக்கி வைததல.

protein calorie malnutrition (PCM) : புரதக கலோரி ஊட்டக் குறைவு; புரத ஆற்றலூட்டக் கேடு : போதிய சீருணவு இல்லாமையால் உடலில் கொழுப்புச் சத்தும், புரதச் சத்தும் குறைந்து ஏற்படும் ஊட்டச் சத்துக் குறைபாடு.

protein : புரதம் : நைட்ரஜனும் பிற இன்றியமையாத உயிர்ச் சத்துகளும் அடங்கிய ஊட்டச் சத்துப் பொருள். இவை விலங்கு மற்றும் தாவரத் திசுக்களில் உள் ளன. இவை அமினோ அமிலங்களி னாலானவை. உடலின் வளர்ச்சிக் கும், பழுதடைந்த உறுப்புகளைச் சீர்படுத்துவதற்கும் இவை இன்றி யமையாதவை. விலங்குப் புரதங் கள் மிகுந்த உயிரியல் மதிப்பு வாய்ந்தவை. இவற்றில் இன்றி யமையாத அமினோ அமிலங்கள் அடங்கியுள்ளன தாவரப் புரதங் களில் சில அமினோ அமிலங்கள் மட்டுமே உள்ளன. புரதங்கள் உட லில் நீரால பகுக்கப்பட்டு அமி னோ அமிலங்கள் உருவாகின்றன. இந்த அமினோ அமிலங்கள் புதி தாக உடல் புரதங்களை உற்பததி செய்யப் பயன்படுததப்படுகின் றன.

proteinuria : சிறுநீர்ப் புரதம்; புரத நீரிழிவு : சிறுநீரில் கருபபுரதம இருககும் நோய்.

proteolysis : புரதச் சிதைவு; புர தப் பிளவு : புரதத்தின் செரிமானப் பிணைப்புகள் நீரால் பகுத்தல் மூலம சிதைந்து பல சிறிய பிணைப்புகளாக உருவாதல்.

proteolyte : புரதச் சிதைவுப் பொருள் ; புரதத்தைச் சிதைக்கும் பொருள்.

proteolytic enzymes : புரதச் சிதைவுச் செரிமானப பொருள்கள் : புரதச் சிதைவை ஊக்குவிக்கும் செரிமானப் பொருள்கள் (என் சைம்கள்).

proteose : பிளவுக கலவை : புர தங்களைப் பிளவுபடுத்தும்

பொருள்களின் ஒரு கலவை. இது புரதத்திற்கும் பெப்டோனுக்கும இடைப்பட்ட பொருள்களாகப் புரதத்தைப் பிளவுபடுத்துகிறது.

proteus : **அணுவுடலி :** ஒழுகு உடல் உடைய அணு உயிரினம்; அடிக்கடி மாறும் இயல்புள்ள வயிற்றுடலி. இது உடலில், குடல் குழாயில் உடலுண்ணிகளாக வாழ் கினறது. காயங்கள், சிறுநீர்க் குழாய் நோய்கள் போன்றவற்றில் நோய்க்குக் காரணமாக அமைகின் றன.

protopathic : **உணர்வுக் குறைவு :** ஊறுணர்ச்சி குறைவாக இருக்கக் கடத்தும் உணர்வு நரம்புகளைக் குறிக்கும்.

protozoa : **ஓரணுவுயிர்; ஒற்றை யணு உயிரி :** நுணணிய ஓரணு உயிர்ப்பிரிவைச் சேர்ந்த உயிர்கள்; நோய்களை உணடாக்கும் ஓரணு உயிர் நுண்மங்கள்.

protriptyline : **புரோட்ரிப்டிலின் :** சோர்வகற்றும் மருந்துகளில் ஒன்று. விரைவாக வேலைசெய்யக் கூடியது. இது உறக்கமூட்டுவ தில்லை.

proud flesh · **தழும்பு :** ஆறிவரும் புண்ணைச் சுற்றி வளரும் தசை.

provitamin : **வைட்டமின் முன் பொருள; முன்னுயிரச் சத்து; முன் வைட்டமின :** வைட்டமினுககு முன் னோடியான ஒரு பொருள. கரோட்டின, வைட்டமின்-A ஊட் டச் சத்தாக மாறறப்படுகிறது.

proximal : அணுக்க நோக்கு; மையம் நோக்கிய; நெருங்கிய; அணமைய . உடலின் மையத்தை நோக்கி அமைந்துள்ள.

prune belly syndrome : **வயிற்று நலிவு நோய்:** ஆண குழந்தைகளின அடிவயிற்றுத தசைமண்டல மெலி வடைநது வயிறு வறறிக் காணப் படும் நோய்.

prurigo (pruritus) ; **அரிப்புக் கொப்புளம்; தோல் அரிப்பு நோய்; சொறி ;** குழந்தைகளுக்கு அடிக்கடி ஏற்படும் தோல் அரிப்பு நோய்.

pruritus **தோல் அரிப்பு; அரிப்பு; நமைச்சல்.**

pseudoangina : **போலி இதயவலி; இடது மார்பு பொய் வலி :** இடது மார்பில் ஏற்படும் போலியான வேதனை. இதில் உண்மையில் இதய வலி ஏற்படுவதில்லை. கவலை கொண்டவர்கள் தங் களுக்கு இத்தகைய வலி இருப்ப தாகக் கறபனை செய்து கொள் கிறார்கள்,

psudoarthrosis : **போலி மூட்டு :** ஒன்றிணையாத எலும்பு முறி வின் காரணமாக உண்டாகும் போலிமூட்டு. முன்கால் எலும்பில் பிறவியில் ஏற்படுவதுண்டு.

pseudo bulbar paralysis: **போலி நாக்கு வாதம்; போலி முகுள வாதம்:** நாக்கின் ஒரு புறததைச் செய லிழக்கச் செய்யும் வாத நோய். அடுத்தடுத்து ஏற்படும் தாக்குதல் களினால மூளைக் கோளாறு ஏற் படக கூடும்.

pseudo cholinesterase : **போலி கோலினெஸ்டிராஸ் :** குருதி நீரிலும் நரம்புத் திசு அல்லாத மறறத் திசுக்களிலும் காணப்படும் ஒரு செரிமானப் பொருள்கள் (என சைம்). இது நுரையீரலில் சேர்த் திணைக்கப்படுகிறது.

pseudocrisis : **போலி நெருக்கடி :** உடலில வெப்பம் விரைவாகக் குறைந்து ஒரு நெருககடிபோல் தோனறுதல். இதனைத் தொடர் ந்து காய்ச்சல் அதிகரிககும்.

pseudo cyesis : **போலிக் கர்ப்பம்; கருவுற்ற பொய்புணர்வு; போலிச் சூல்.**

pseudoglobulins : **போலி உரு ளைப் புரதங்கள்.**

pseudo hermaphrodite : போலி இருபால் இனப்பெருக்கச் சுரப்பி; போலி இருபாலி: ஒருவரிடம் ஒரு பாலினத்தின் இனப்பெருக்கச்சுரப்பிகள் இருந்து, புற இனப்பெருக்க உறுப்புகள் எதிர்ப்பாலினத்தினுடையதாக இருத்தல்.

pseudologia fantastica : கற்பனை நோய் : நம்ப முடியாத கற்பனைப் பொய்களைக் கூறி, அவற்றை வலியுறுத்தும் மனப்போக்கு. சில இசிப்பு நோயாளிகளிடமும் மனநோயாளிகளிடமும் இது காணப்படும.

pseudomonas : போலிப் பாக்டீரியா : ஒரு பாக்டீரியா இனம். இது கிராம்சாயம் எடுக்காத சாயத் தாவரப் பொருள்.

pseudomucin: போலிப்பிசின்: சில சூல் சுரப்பி நீர்க் கட்டிகளில் காணப்படும் பிசின் அல்லாத ஊன் பசைப் பொருள்.

pseudoparalysis : போலி வாத நோய் : நரமபு மணடல நைவு காரணமாக ஏற்படாத ஒருவகைத் தசை ஆற்றல் குறைபாடு.

pseudoplegia : போலி நரம்பு வாதம் : உடல் நரம்புக் கோளாறு போன்று தோற்றமளிக்கும் வாத நோய். ஆனால் இது இசிவு நோயினால் உணடாவதாகும்.

pseudopolyposis : போலிப் பெருங்குடல் தொங்கு தசை : விரிவாகப் பரவியுளள மலக்குடல் வீக்கத்தினால இது பெரும்பாலும் உண்டாகிறது.

psittacosis : பறவை நோய்; கிளி நோய்; கிளிப்பிணி: கிளிகள், புறாக்கள் போன்ற பறவைகளிடமிருந்து மனிதருக்குத்தொற்றும் சீதசனனி (சளிக்காய்ச்சல்)என்னும் நிமோனியா நோய்.

psoas : இடுப்புத் தசை

psora : சிரங்கு.

psoralen : சோரலென் : இயற்கையாகக் கிடைக்கும் ஓர் ஒளியுணர்வுக் கூட்டுப் பொருள் இது புற ஊதாக் கதிர்வீச்சுக்கு உட்படும் போது தோலில் கருநிறமிகளை அதிகரிக்கிறது. வெள்ளைத் தோல் நோய்க்குப் பயனபடுத்தப்படுகிறது.

psoriasis: சாம்பல் படை; நமட்டுச் சொறி; யானைச் சொறி; தடிப்புத் தோலழற்சி: மரபுவழி உண்டாகும் கடுமையான தோல் நோய். இதில் தோலில் ஏற்படும் தடிப்புப் பகுதிகளில் ஒட்டிக் கொண்டிருக்கும் செதிள்கள் உண்டாகின்றன. இது உடலின் எந்தப் பகுதியிலும் ஏற படலாம். நீட்சிப் பரப்புகளில, குறிப்பாக முழங்கால் மூட்டு, முழங்கைப் பகுதிகளில் ஏற்படும. இஃது மன அழுத்த உளைச்சலினால் மிகைப்படக் கூடும்.

psoriatic arthritis: சாம்பல் படை மூட்டு வீக்கம் : சாம்பல் படை நோயாளிகளுக்கு ஏற்படும் வாத மூட்டு வீக்கம். சாமபல் படை நோயாளிகளில் 3.5% பேருக்கு இது உண்டாகிறது.

psoriderm : சோரிடெர்ம் : சாம்பல் படை நோய்க்குப் பயன்படக் கூடிய, லெத்திசினும், கரி எணணெயும் (கீல்) கலந்த நிறமற்ற பொருள்.

psychiatrist : மனநோய் மருத்துவர்; உள நோய் மருத்துவர் : உளவியல் நோய் மருத்துவர்.

psychiatry: மனநோய் மருத்துவம்; உள நோயியல் : உளவியல் நோய்களைக் கண்டுபிடித்துக் குணப்படுத்தும் மருத்துவமுறை.

psychic : உள்ளம் சார்ந்த; உள்ளத்தின் : உடலியல்பு கடந்து உள்ளம சார்ந்த

psychics : உள ஆய்வியல்.

psychoanalysis : உளவியல் பகுப்பாய்வு; உளப் பகுப்பியல்; உள ஆய்வு : உளநிலை, உணர்வு ஆகியவற்றை ஆய்வு செய்து நோய்களைக் குணப்படுத்தும் உளவியல் மருத்துவமுறை.

psycho-analyst : உளவியல் மருத்துவ அறிஞர்; உளப் பகுப்பாய்வாளர் : உள ஆய்வாளர்.

psychochemotherapy : உளவியல் வேதி மருத்துவம்; வேதி உள மருத்துவம் : உணர்வு நிலையில் நோயக் குறியியல் மாறுதல்களை மேம்படுத்துவதற்கு அல்லது குணப்படுத்துவதற்கு மருநதுகளைப் பயனபடுத்துதல்.

psychodyama : உளவியல் நாடக மருத்துவம்; உள நாடகம் : நோயாளிகள் தங்கள் சொந்தச் சிககல்களை நாடகமாக நடத்திக் காட்டும்படி செய்து அவாகளுக்கு சிகிச்சையளிக்கும் ஒரு உளவியல் மருத்துவமுறை. இதில குழு விவா தங்களில் நோயாளிகளைப் பங்கு கொள்ளும்படி செய்து, அவர்களை உட்கிடக்கையை வெளிப் படுத்துமாறு செய்யலாம்.

psychodinamics : உள ஆற்றல் ஆயவியல்; உள இயக்கவியல் : உளவியல் செயமுறைகள், குறிபபாக உளவியல் நடவடிக்கையில காரண காரிய அம்சங்கள் பற்றி ஆராயும் அறிவியல.

psychogenesis (psychogony) : மனத் தோற்ற வளர்ச்சி : மனத்தின் தோற்ற வளர்ச்சி; மனதில கருத்து உருத்தோற்றம.

psychogenic: உளவியல் குறிகள்: உடம்பில் அல்லாமல் உள்ளத்தில் தோனறும் உளவியல குறிகள்.

psychological diseases : உளவியல் நோய்கள் . மனம் விளைவிக்கும் உடல் நோய்கள்.

psychological moment : உற்ற வேளை : மனத்தைத திறம்படக கவர்ந்து ஆட்படுத்துவதறகுரிய துல்லியமான காலக் கூறு.

psychogeriatric: மூப்பு உளவியல் சார்ந்த; முதியோர் உள மருத்துவம் : மூப்பியல் மருத்துவம தொடர்பான உளவியல் சார்ந்த.

psychologist : உளவியலறிஞர் : மன இயல்புகளையும் இயக்கங்களையும, விளைவுகளையும் ஆராயும் அறிஞர்.

psychology : உளவியல் : உள இயல்பு நிலை, இயக்கங்களையும் விளைவுகளையும் ஆராயும் அறிவியல் துறை மருத்துவத்தில் மனித நடத்தையை ஆராயும் துறை.

psychometry : உற்றறி பண்பாற்றல் : தொடுவதன் மூலம் பொருள்களின் அல்லது ஆட்களின் உள்ளியல்புகளை அறியும் ஆற்றல்.

psychomotor : உளவியல் தசை இயக்கம்; உளவியக்க: உள ஆற்றல் மூலம் தசைப் பகுதியை இயங்கும்படி செய்தல்.

psychoneurosis : தொடக்கச் சித்தப் பிரமை, உள நரம்பியம் : சித தப் பிரமையின தொடகக நிலை.

psychopath : மனநோயாளி; உளப் பிறழ்வு, உளக் குழப்பம் : மனநிலை திரிநதவர், உள நோயாளி.

psychopathic personality : உள நோய் ஆளுமை : இடையறாத மனக் கோளாறு அல்லது உள்ள ஊனமை. இநத நோயாளிகள், முரட்டுத்தனபாகவும், பொறுப் பற்ற முறையிலும் நடந்து கொள் கிறார்கள். இதற்கு மருத்துவச் சிகிச்சை தேவை.

psychopathist : உளநோய் மருத்துவம்

psychopathology : உளநோய் ஆய்வியல்; உள நோயியல் : இயலபு

மீறிய உளவியல் நோய்கள் பற்றிய ஆய்வியல்.

psychopathy : **உளவியல் நோய்; உளப்பிணி, உளவியல் மருத்துவம்** : *மனதனைப் பீடித்திருக்கும் ஒரு நோய். இந்நோயாளிகளுக்கு மன முதிர்ச்சியும, உணர்வு வளர்ச்சியும் குன றியிருக்கும்.*

psychopharmacology : **மனக் கோளாறு மருந்து மருத்துவம்; உள மருந்தியல்** : *மனக கோளாறு களுக்கு மருந்துகளைப் பயன் படுத்துதல்.*

psychophysics : **உடலுளத் தொடர்பியல்; உள இயற்பியல்** : *உடல் உணாவுகளுக்கும் தூண்டுதல் களுக்குமிடையிலான தொடர்பு கள பற்றி ஆராயும் உளவியலின் ஒரு பிரிவு.*

psychoprophylactic : **உள நோய் தடுப்பு; உள முற்காப்பு** : *உளநோய் களைத் தடுப்பதற்கான மருததுவ முறை.*

psychosis : **பைத்தியம்; கோட்டி; கிறுககு; உளப்பிணி; உளவியம்** : *உணர்வுகளுக்கு எதிர்ச் செயல் புரிதல், நினைவு கூாதல, செய்தித் தொடர்பு கொள்ளுதல், பொருள் கொள்ளுதல், முறையாக நடந்து கொளளுதல் ஆகியவறறுக்கான திறமை குறைவாகவுள்ள ஆள்.*

psychosomatic diseases : **உளவியல் வழி நோய்கள; உளவழி உடல் நோய்; உள உடலிய நோய்கள** : *உளவியல் கோளாறு காரணமாக உண்டாகும் உடல் நோய்கள் மனக கவலைகளினால் ஏற்படும் உடல நோய்கள். தானியங்கும் நரம்பு மண்டலம் அளவுக்குமீறி இயங்குவதால் இது உண்டாகிறது எடுத்துக்காட்டாக,குற்ற உணர்வு காரணமாக முகம் சிவக்கிறது*

psychosomimetics : **மருட்சி மருந்துகள்; உளநோய் விளை** : *பைத்தியம் போன்ற அறிகுறி களைத் தோற்றுவிக்கும் எல்எஸ்டி போன்ற மருட்சியூட்டும் போதை மருந்துகள்.*

psychotherapeutics : **வசிய மருத்துவம்** : *வசியத் துயில் போனற வழிகளினால் மன நோய்க்கு மருத்துவம் செய்தல்.*

psychotherapy : **அரிதுயில் மருத்துவம்; உளவழி மருத்துவம்** : *வசியத தின மூலம் உறககமூட்டி நோய் களுக்குச் சிகிச்சையளித்தல.*

psychotropic : **மூளையணு விளைவு; மனநிலை மாற்றி** : *மூளை அணுக்களின மீது குறிப்பிட்ட விளைவுகளை ஏற்படுததுகிற பொருள்.*

pterygium : **இமை முனைத் திசு வளர்ச்சி; தசைப் படர்த்தி; விழிப படலம்** : *விழி வெணபடலத்தை மூடிக்கொள்ளும் வகையில் இமையிணைப் படலத்தில் ஏற்படும் சிறகு போன்ற தசைப்படலம்.*

pterygoid : **தாடை முனை எலும்பு** : *வல்லணண எலுமபுகளுக்குப் பின னால் மேல்தாடையிலுள்ள இரட்டை முளை எலும்புகளில் ஒன்று.*

pterygoid process : **வல்லண்ண** *எலும்புகளுக்குப் பின்னால் மேல தாடையிலுள்ள இரட்டைமுளை எலும்புகளின அமைப்பு.*

ptosis : **இமை தொய்வு; இமை வாதம்; இமை இறக்கம்; இமை இயங்காமை; இமைத் தொங்கல்** : *தசையின் பக்கவாததத்தினால் கண ணின் மேலிமை கீழ்நோக்கித் தொங்குதல்.*

ptyalin . **உமிழ நொதி; உமிழ்நீர்** : *எசசில் மாச்சதது இலேசான அமிலத தன்மையுடையது. இது மாச் சத்தை டெக்ஸடிரினாகவும்,மால்ட் டோசாகவும மாற்றுகிறது.*

ptyalism : **மிகை எச்சில்; எச்சில்**

பெருக்கு : எச்சில் அளவுக்கு அதிக மாகச் சுரத்தல்.

ptyalolith : எச்சில் அடைப்பு; எச் சிற்கல் : எச்சில் கரப்பி நாளத்தில் உண்டாகும் கல்லடைப்பு.

pubertas praecox: முதிராப் பாலி யல் வளர்ச்சி; முன் அலர் பூப்பு: பரு வம் வரும் முன்பு ஏற்படும் பாலி யல் வளர்ச்சி.

puberty : பூப்புப் பருவம்; பெண் மையடைதல்; பூப்பு நிலை : இனப் பெருகக உறுப்புகள் முதிர்ச்சி யடையத் தொடங்கும் வயது.

pubes. பூப்பு மயிர்ப் பகுதி; அல் குல் : பூப்பு எலும்பை மூடியிருக் கும் மயிருள்ள பகுதி.

pubiotomy: இடுப்பெலும்பு முறிவு: உயிருள்ள குழந்தையை வெளிக் கொணர்வதற்காக இடுப்பு முன் எலும்பை முறித்தல்.

pubis : இடுப்பு முன் எலும்பு; அல் குல் எலும்பு : இடுப்புக் குழி எலும் புக் கூட்டின் முன்புள்ள மைய எலும்பாக அமைந்துள்ள முன் எலும்பு.

pudendal block : மறையுறுப்பு உணர்ச்சி நீக்கம் : பாலினப் புற உறுப்பு போன்ற மறையுறுப்பினை உறுப்பெல்லை உணர்ச்சியகற்றும் மருந்து கொடுத்து உணர்விழக்கச் செய்தல். ஆயுதத்தால் குழந்தை யை எடுக்கும்போது இவ்வாறு செய்யப்படுகிறது.

pudendum : புற உறுப்பு; பெண் பால் வெளியுறுப்பு : இனப் பெருக் கத்திற்கான பாலினப் புற உறுப்பு; முக்கியமாகப் பெண்களுடையது.

pudenz-Hayer valve : கபாலத் தடுக்கிதழ்: நீர் கொண்ட கபாலத் திலிருந்து நீரை வெளியேற்றுவதற் காக அறுவை மருத்துவம் மூலம் பொருத்தப்படும் ஒரு வழித் தடுக் கிதழ்.

puerile breathing : முணுமுணுச் சுவாசம் : முணுமுணு என்ற ஒலி யுடன் குழந்தைபோல சுவாசிக்கும் கோளாறு.

puerperal : மகப்பேறு சார்ந்த : பிள்ளைப்பேறு சார்ந்த.

puerperal fever : பேறு காலக் காய்ச்சல்.

puerperal insanity : பேறு காலப் பைத்தியம் : மகப்பேறு கால (பிரச வம்) பைத்தியம்.

puerperal sepsis : மகப்பேற்றுச் சீழ்க் காய்ச்சல் : மகப்பேற்றுக்குப் பின் உண்டாகும் சீழ்க் காய்ச்சல்.

puerperium : மகப்பேற்றுப் பின் காலம்; மகப்பேற்றுக் களைப்புக் காலம் : மகப்பேற்றுக்குப் பின்பு வயிறு உட்சுருள்தல் முடிவடைகிற 6-8 வார காலம்.

pulmoflator : நுரையீரல் விரி வாக்கி : நுரையீரலை உப்பச் செய்யும் கருவி.

pulmonary : நுரையீரல் சார்ந்த : நுரையீரல்கள் தொடர்பான; நுரையீரல்களில் உள்ள; நுரை யீரல்களை உடைய; நுரையீரல் நோயினால் பீடிக்கப்பட்ட; நுரை யீரல்களில் வலிமையிழந்த:

pulmonary artery : நுரையீரல் தமனி : இதயத்திலிருந்து நுரை யீரல்களுக்குக் குருதி கொண்டு செல்கிற முதன்மைக் குருதிநாளம்.

pulmonary oedema : நுரையீரல் நீர்க்கோவை : நுரையீரலில் உண் டாகும் நீர்த்தேக்கம்.

pulmonary tuberculosis : நுரை யீரல் கபம்.

pulmonic : ஈளை மருந்து : நுரை யீரல் நோய்க்குரிய மருந்து.

pulp : தசைக்கூழ்; பற்கூழ்; கூழ்; பசை : பல்லடித் தசைக் குழம்புப்

பொருள், சில உறுப்புகளின் உட்பகுதியில் காணப்படும் மிக மென்மையான நீரியலான குழம்புப் பொருள்.

pulsatile : துடிப்பு சார்ந்த; துடிக்கும் : *நாடித் துடிப்பு இயல்பு வாய்ந்த.*

pulsation : நாடித் துடிப்பு; துடிப்புள்ள : *ஒழுங்காக இயங்கும் இதயத் துடிப்பு.*

pulse : நாடி/நாடித் துடிப்பு; துடித்தல் : *இதயத்தின் இடது கீழறை சுருங்குவதால் தமனிகளுக்குக் கடத்தப்படும் துடிப்பு; குருதிக் குழாய். அதிர்வு. மணிக்கட்டில் கை வைத்து இந்தத் துடிப்பை அறியலாம்.*

pulseless disease : நாடியின்மை நோய் : *கழுத்திலும், புயங்களிலும் நாடித் துடிப்பு இல்லாமலிருந்து தமனிகள் படிப்படியாக நலிவடையும் நோய்.*

pulsimeter : நாடிமானி : *நாடி ஆற்றலை அல்லது நாடித் துடிப்பு வீதத்தை அளவிட்டுக் காட்டும் கருவி.*

pulsus alternans : ஏற்ற இறக்க நாடித் துடிப்பு : *நாடித் துடிப்புகள் வலுவினறியும், வலுவாகவும் மாறி மாறி ஏற்படுதல் இது இதயத்தின் இடது மேலறை நோயினால் உண்டாகிறது.*

pulsus bigeminus : இரட்டை நாடித் துடிப்பு : *சில நோய் நிலைகளில் உண்டாகும் இரட்டை நாடித் துடிப்பு அலை. இது அளவுக்கு அதிகமாக மருந்து கொடுப்பதாலும் உண்டாகிறது.*

கொடுப்பதால் உண்டாகிறது.

pultaceous : கூழ் மருந்து : *வீக்கத்திற்கான களி போன்ற மருந்து.*

pulvis : தூள்; பொடி; சூரணம் : *மருந்துப் பொடி.*

puncture . துளை; கீறல்; கிழிசல்; துளையிடல் : *கூர்மையான கருவியினால் ஏற்படுத்தப்பட்ட குத்துக் காயம். ஒரு திரவத்தை உட்செலுத்துவதற்காக உடலில் துளையிடுதல்.*

PUO : காய்ச்சல் : *காரணம் தெரியாத காய்ச்சல்.*

pupil : கண்ணின் மணி/பாப்பா/பாவை : *ஒளி புகுவதற்காக கண்ணின் விழித்திரைப் படலத்தின் மையத்திலுள்ள பாவை.*

pupillary : கண்மணி சார்ந்த; பாவை சார்ந்த : *கண்ணின் மணி தொடர்பான.*

purgation :மிகு மல நீக்கம்; பேதி : *மலக்கழிவு; குடல் துப்புரவாக்குதல்.*

purgative : |பேதி மருந்து; பேதி ஊக்கி; மலமிளக்கி : *குடல் இளக்க மருந்து. மலத்தை வெளியேற்றிக் குடலைத் தூய்மைப்படுத்துகிற மருந்து.*

purity: தூய்மை: *உடல் துப்புரவு.*

purpura : ஊதாப் புள்ளி நோய்; இரத்தக் கசிவு : *தோலின் மேல் கருஞ்சிவப்பு நிறப்புள்ளிகள் கொண்ட நோய். தந்துகிச் சுவர்களின் இணைப்பு பழுதடைவதால் அல்லது இரத்தத் தகட்டணுக்களின் தரம் அல்லது அளவு குறைவாக இருப்பதால் இது ஏற்படுவதாகக் கருதப்படுகிறது.*

purpuric acid: பர்ப்பூரிக் அமிலம்: *ஊதாநிற உப்புகள் கொண்ட அமிலம்.*

purulence (purulency) : சீழ்க் கட்டு *சீழ்கட்டிய நிலை.*

purulent : சீழ்க்கட்டிய; சீழ்நிலை : *சீழ்க்கண்ட; சீழ் வடிகிற.*

pus : சீழ் : *சிலவகைக் கட்டிகளில் உண்டாகும் திரவம். இது பொதுவாக மஞ்சள் நிறமாக இருக்கும்.*

இதில் திசுத்திரவமும், பாக்டீரியா வும், இரத்த வெள்ளணுக்களும் அடங்கியிருக்கும்.

pus cells : **சீழ் அணுக்கள்.**

pustule : **சீழ்க் கொப்புளம்** : சீழ் கொண்ட மறுப்போன்ற தசை வீக்கம்.

putrefaction : **அழுகல் / பத னழுவு; நொதித்தல்**: உடல் உறுப்பு கள் பாக்டீரியாவினால் சீழ் பிடித்து அழுகிப் போதல்.

putrescible : **அழுகக் கூடிய**: சீழ் பிடித்து அழுகுந் தன்மையுடைய.

putrid : **அழுகிய/பதனழிந்த.**

putrid fever : **குடற் காய்ச்சல்.**

putrid sore throat : **நச்சுத் தொண்டைக் கட்டு.**

putridity : **அழுகல்.**

PVD : **வெளிச் செல் குழாய் நோய்.**

pyaemia : **சீழ் நச்சுக் குருதி** : மூளை, சிறுநீரகம், நுரையீரலகள், இதயம் போன்ற உறுப்புகளில் இரத்தப் பாக்டீரியாக்கள் தோன்றிப் பெருகி வளரும் ஒரு கடுமையான குருதி நச்சூட்டு நோய்.

pyarthrosis : **மூட்டுக்குழிச் சீழ்; மூட்டுச் சீழ்.**

pyelitis: **சிறுநீரகக்குழி அழற்சி; சிறு நீரக நுண்குழல் நோய்**: கர்ப்ப காலத தில் சிறுநீரகக் குழியில ஏற்படும் இருமிகளின தாக்கத்தினாலும்வரும்

pyeloilithotomy : **சிறுநீரகக் கல் அறுவை** : சிறுநீரக குழிக் கூட்டில் ஏறபடும் கலலை அகறறுவதற்குச் செய்யப்படும் அறுவை மருத் துவம்.

pyelonephritis : **சிறுநீரகம்-குழி அழற்சி** : சிறுநீரகக் குழியிலிருந்து சிறுநீரகத்தின மேலுறைவரைப் பரவும் ஒருவகைச் சிறுநீரக நோய்.

pyeloplasty : **சிறுநீரக குழி ஒட்டு றுப்பு அறுவை** : சிறுநீரகக் குழி யில் செய்யப்படும் ஒட்டுறுப்பு அறுவை.

pyelostomy : **சிறுநீரக குழித் திறப்பு** : சிறுநீரகக குழிகுள திறப்பு ஏற்படுத்துவதற்காகச் செய்யப்படும் அறுவை மருத் துவம்.

pyknolepsy : **குழந்தைக் காக்காய் வலிப்பு** : குழநதைகளிடம் அடிக் கடி ஏற்படும் இலேசான வகைக் காக்காய் வலிப்பு. இது ஒரு நாளில் நூறு முறைக்கு மேலும் உண் டாகும். பெரும் இசிவின்மை

pylephlebitis : **கல்லீரல் சிரை அழற்சி** : கல்லீரல் மணடலச் சிரை களில் ஏற்படும் வீக்கம்.

pylethrombosis: **கல்லீரல் சிரைக் குருதிக் கட்டு** : கல்லீரல் மண்டலச் சிரைகளில் அல்லது அதன் கிளை களில் ஏற்படும் உள்தசைக் குருதிக் கட்டு.

pyloric stenosis : **இரைப்பைக் காப்பு வாயில் சுருக்கம்.**

pyloroduodenol : **இரைப்பைச் சிறுகுடல் சார்ந்த** : இரைப்பைக காப்பிவாயில் சுருங்கு தசை மற் றும் முன்சிறுகுடல தொடர்பான.

pyloromyotomy : **இரைப்பைக் காப்புத் தசை அறுவை** : இரைப் பைக் காப்பு வாயில் சுருங்கு தசை யை வெட்டியெடுத்தல்.

pyloroplasty : **இரைப்பு வாயில் காப்புத் தசை அறுவை**: இரைப்பை வாயில காப்புத தசையில் செய்யப் படும் ஒட்டுறுப்பு அறுவை மருத் துவம். வழியை அகலப்படுதது வதற்காக இது செய்யப்படுகிறது.

pylorospasm : **இரைப்பைக் காப்பு வாயில் இசிவு.** இரைப்பைக் காப்பு வாயிலில் ஏற்படும் இசிப்பு. இது பெரும்பாலும முன் சிறுகுடல்

சீழ்ப்புண் காரணமாக உண்டாகிறது.

pylorus : இரைப்பைக் காப்பு வாயில்; சிறு குடல வாய்: இரைப்பையிலிருந்து முன் சிறுகுடலுக்குச் செல்லும் இடை வழிவாய்.



இரைப்பை

pyocolpos: யோனிக் குழாய்ச் சீழ்.

pyoderma : தோல் சீழ் நோய்.

pyodermia, pyoderma : தோல் இழைம அழற்சி : புறத்தோலுக்கு அடுத்துக் கீழுள்ள இழைமத்தில் ஏற்படும் கடுமையான அழற்சி நோய்.

pyogenesis : சீழ்க் கட்டுதல் : சீழ் உருவாதல்.

pyogenic : சீழ் சார்ந்த : சீழ்க் கட்டுதல் தொடர்பான.

pyometra : கருப்பைச் சீழ் : கருப்பையில் தங்கியிருக்கும் சீழ். இது நோய் காரணமாகக் கருப்பைக் கழுத்து வழியாக வெளியேற முடியாமல் தேங்கியிருக்கும்.

pyonephritis: சிறுநீரக சீழ் அழற்சி

pyonephrosis : சிறுநீரகக் குழிச் சீழ் விரிவு : சிறுநீரகக் குழிச் சீழ் நிறைநது விரிவடைதல்.

pyorrhoea : சீழ்ப் பல்நோய்; பல் வேர் சீழ் ஒழுக்கு; சீழவாய் : பல் நோய் காரணமாகப் பலலிலிருந்து சீழ் வடிதல்.

pyosalpinx: கருக்குழாய்ச் சீழ்; சீழ் அண்டக் குழல் : அண்டத்திலிருந்து கருப்பைக்கு வரும குழாயில் சீழ் கட்டியிருத்தல்.

pyothorax: மார்பு வரிக்குழிச் சீழ்; சீழ் மார்பகம: மார்பு வரிக் குழியில் சீழ்க்கட்டியிருத்தல். நெஞ்சகச் சீழ்

pyrazinamide : பைராசினாமைடு: காச நோயைக் குணப்படுத்தக் கொடுக்கப்படும விலையுயர்ந்த மருந்து. இது வாய்வழி கொடுக்கப்படுகிறது. இது கல்லீரலில் நச்சுத் தன்மை உண்டாக்கக் கூடியது. எனவே கவனமான பரிசோதனைக்குப் பிறகே இது கொடுக்கப்படுகிறது.

pyretic : காய்ச்சல் சார்ந்த: காய்ச்சலைத் தூண்டுகிற.

pyrexia : காய்ச்சல்

pyridine: பைரிடின்: திசு நெய்வடிம மூலப்பொருள் வேதியியல் சோதனைக்கூடத்தில்பயன்படுத்தப்படும்

pyridoxine : பைரிடாக்சின் : வைட்டமின-B_6 என்ற உயிர்ச் சததுப் பொருள இது பூரித மாகாத கொழுப்பு அமிலங்களுடன் அல்லது புரதங்களிலிருந்து பெறப்படும் செயற்கைக் கொழுப்புடன் சேர்ததுப் பயன்படுத்தப் படுகிறது. மசககையின்போது இது கொடுக்கப்படுகிறது.

pyriform : ஈட்டி உரு.

pyrimethamine : பைரிமெத்தமின் : முறைக் காய்ச்சல (மலேரியா) நோய்க்கு எதிராகப் பெருமளவில் பயன்படுத்தப்படும் மருநது. குழந்தைகளுக்கு மிகவும் ஏற்றது.

pyrogen : காய்ச்சல் விளைவிக்கும் பொருள்; காய்ச்சலூக்கி : காய்ச்சல் உண்டாக்கக்கூடிய பொருள்.

pyrogenetic: காய்ச்சல் விளைவிக்கிற ; காய்ச்சலுக்குரிய; காய்ச்சல் உண்டாக்குகிற; உடல் வெப்பத்தை அதிகரிக்கிற.

pyrogenic : காய்ச்சல் சார்ந்த : காய்ச்சல் தொடர்பான.

pyrogenic contamination: காய்ச்சல் பொருளால் தூய்மைக்கேடு : *காய்ச்சல் உண்டாக்கும் பொருளால் ஏற்படும் தூய்மைக்கேடு. சிரை வழி ஏற்றப்படும் திரவமருந்துகளில் கலந்தால் காய்ச்சல் வரும்.*

pyrogen test : காய்ச்சல் பொருள் சோதனை.

pyropericardium : இதய உறைச் சீழ்

pyrascupe: காய்ச்சல் அளவி: *சூடு செய்யப்பட்ட ஒரு பொருளின் வெப்பத்தை அதன் ஒளியைச் சூடாக்கப்படாத இயற்கைப் பொருளின் ஒளியுடன் ஒப்பிட்டுப் பார்த்து அளவிடும் கருவி.*

pytotherapy: செயற்கைக் காய்ச்சல் : *செயறகை முறையில் காய்ச்சல் உண்டு பண்ணுதல்.*

pyrotoxin : காய்ச்சல் நச்சு.

pyroxicam : பைரோக்சிக்கம்: *வீக்கத்தைப் போக்கி நோவகற்றும் மருந்து.*

pyuria : சிறுநீர்ச் சீழ்; சீழ் நீரிழிவு : *சிறுநீரில் சீழ் போதல்.*

Q

Q fever : கியூ-காய்ச்சல் : ஆடு மாடுகளிடமிருந்து மனிதருக்குத் தொற்றும் ஒருவகைக் காய்ச்சல் நோய்.

quadriceps:நான்கு தலைத்தசைகள்: தொடையிலுள்ள நீட்டத் தசையின் நான்கு தலைத் தசைகள். இது நான்கு பகுதிகளைக் கொண்டது.

quadruple vaccine:நாற்கூட்டு மடங்கு அம்மைப்பால்: தொண்டை அடைப்பான், கக்குவான், இளம் பிள்ளை வாதம், வில்வாத சன்னி ஆகிய நோய்களுக்கு எதிராக நோய்த் தடுப்பு செய்வதற்கான அம்மைப்பால் மருந்து.

qualitative : பண்பு சார்ந்த; பண்புத் திறன் : பண்பு அடிப்படையிலான; பண்பு தொடர்பான.

quantitative : அளவு சார்ந்த; அளவுத் திறன்: அளவுக்குரிய; அளவு தொடர்புடைய.

Quarantine : தொற்றுத் தடைக் காப்பு; ஒதுக்குக் கண்காணிப்பு; அடைமனை; நோயாளியை தனிமைப்படுத்தல் : பயணிகள், கப்பல் நோயாளிகள் ஆகியோரைத் தொற்றுத் தடைக் காப்புக்காக தனிமையில் வைக்கும் கால அளவு.

quartan : நான்கு நாள் முறைக் காய்ச்சல் : நான்கு நாட்களுக்கு ஒருமுறை வரும் காய்ச்சலுடன் கூடிய வலிப்பு நோய்.

questran : குவஸ்டிரான்: எலுமிச்சை மணமுடைய கொலஸ்ட்ரிராமின் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

quickening : கருத் துடிப்பு; கரு அசைவு : கருவில் குழந்தை உயிர்த்துடிப்பு நிலையடைதல். பொதுவாக 16-19 வார காலம்.

quicksilver : பாதரசம்.

Quiescent:அமைதியான அசைவின்மை: ஒரு நோய் அடங்கிக் கிடக்கும் நிலை;குறிப்பாக ஒரு தோல் நோய் இவ்வாறு இருக்கும அமைதிக் காலம்.

quinalbarbitone : கொய்னால் பார்பிட்டோன் : குறுகிய காலம் செயற்படும் ஒருவகைப் பார்பிட்டுரேட். இலேசான உறக்கமின்மை, மனக்கவலை நிலைகளில் பயன்படுத்தப்படுகிறது.

quinestrol : செயற்கைப் பெண்பால் இயக்குநீர் : செயற்கையான பெண்பாலின இயக்குநீர் (ஹார்மோன்). இது பால் சுரப்பதை மட்டுப்படுத்துகிறது.

qunidine : கொயினிடின் : கொயினா போன்ற வெடியக் கலப்புடைய ஒரு வேதியியல் மூலப்பொருள் (காரகம்). இது இதயத் தமனித் தசையில் தனி விளைவினை உண்டுபண்ணுகிறது. சில சமயம் தமனி நாரிழையாக்கத்திலும் பயன்படுகிறது.

quinine: கொயினா: சிங்கோனாப் பட்டையிலுள்ள காரகப் பொருள் சிங்கோனாப்பட்டைக் காரகமடங்

கிய மருந்து. ஒரு சமயம், முறைக் காய்ச்சலுக்குப் (மலேரியா) பயன் படுத்தப்பட்டது. பின்னா இதற் குப் பதிலாக வேறு மருந்துகள் பயன்படுததப்படலாயின. இந்த மருந்துகளுக்கு எதிராக முறைக் காய்ச்சல் எதிர்ப்பு ஆற்றல் பெற்று விட்டதால், இப்போது இது மீண்டும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

quininism : **கொயினா நோய் :** தலைவலி, காதுகளில் ஓசைகள் எழுதல், ஓரளவு செவிட்டுத் தன் மை; கண்பார்வைக் கோளாறு; குமட்டல் போன்ற நோய்க் குறி கள் தோன்றுதல். கொயினாவை தொடர்ந்து பயன்படுத்துவதால் இவை ஏற்படுகின்றன.

quinsy : **தொண்டை வீக்கம்; தொண்டை சீழ்க் கட்டி :** உள் நாக்குப் பழுப்பு; உள்நாக்கு அழற்சி.

quotidian : **நாள் முறைச் சன்னி:** நாள்தோறும் விடாமல் வரும் காய்ச்சல்.

quotient : **ஈவு :** வகுத்து வந்த எண். அறிவுக்குறி எண் என்பது அறிவுத் திறன் அளவெண். சுவாச ஈவு என்பது, ஒரு குறிப்பிட்ட கால அளவின்போது உள இழுக்கும் ஆக்சிஜன அளவுக்கும், வெளி விடும் கார்பன்டையாக்சைடின் அளவுக்கும இடையிலான விகிதம்.

R

ra latex test: கீல்வாயு மூட்டு வீக்கச் சோதனை : இரத்ததில் கீல்வாயுக் காரணிகள் இருக்கின்றனவா என்பதைக் கண்டறிவதற்கான சோதனை. இச்சோதனையிலிருந்து கீல் வாயு மூட்டு வீக்கத்திற்கான காரணத்தைக் கண்டறியலாம்.

rabid : நாய் வெறி சார்ந்த : நாய் வெறி நோய் பீடித்த; நீர் வெறுப்பு நோய் கண்டுள்ள. வெறி கொண்ட.

rabies : வெறி நாய் கடி நோய் : நாய், பூனை, நரி, குருதி உறிஞ்சும் வௌவால் போன்ற பிராணிகள் வெறி கொணடு கடிப்பதால் மனிதருக்குப் பரவும் ஒரு கிருமியினால் உண்டாகும் நீர் வெறுப்பு நோய். இது உலகெங்கும் ஏற்படும் நோய். இதைக் குணப்படுத்த தடுப்பூசி மருந்துகள் உள்ளன. நோய்க் கிருமி தொற்றியபின் நோய் வெளிப்படுமுன் எதிர்ப் பொருள் நீர்மம் கொடுக்கப்படும்.

rachis (rhachis) : இறகு நடு நரம்பு (முருந்து); முதுகெலும்புத் தண்டு : முதுகந்தணடு துணர் நடுக்காம்பு.

rachitis(rickets): குழந்தை கணை எலும்புருக்கி நோய் எலும்பு நலிவு நோய். வைட்டமின் குறைவுநோய.

radial: ஆரை நாடி; ஆரை: ஆரை நரம்பு; முன்கை ஆரை எலும்புக்குரிய.

radical : மூல உறுப்பு (மூலவேர்) : சேர்மததின் அடிபபடைக் கூறாக அமைந்து, சேர்மத்தின் இயல்பான வேதியியல் மாற்றங்களின் போது மாறாமலே இருக்கும் தனிமம் அல்லது தனிம அணு அல்லது அணுக்களின் கூட்டம். ஓர் உறுப்பின மூலவேர் சிலசமயம், ஓர் உறுப்பில் கண்ட நோய் உடல் முழுவதும் பரவாமலிருக்க அறுவை மருத்துவம்மூலம் அந்த உறுப்பின் மூலவேர் அகற்றப்படுகிறது.

radicle : நரம்பு வேர்; சிறு குருதிக் குழாய் : நரமபின் அல்லது நாளத்தின் வேர் போன்ற உட்பிரிவு.

radicular : வேருக்குரிய : பல். நரம்பு போன்றவறறின் வோ சார்ந்த.

radiculogrephy: வேர் ஊடுகதிர்ப் படம் : முதுகந்தண்டு நரம்பு வேர்கள் ஊடுகதிர் (எக்ஸ்-ரே) படம். இந்த வேர்களைக் கதிர் ஊடுருவாதவாறு செய்து, அந்த வேர்களின் ஊடுகதிர்பபடம் எடுக்கப்படுகிறது. நெகிழ்ச்சியடைந்த இடை முதுகெலும்பு வட்டச் சில்லின் இடத்தையும், அளவையும் கண்டறிய இப்படம் எடுக்கப்படுகிறது.

radioactive: கதிரியக்கப் பொருள்: கதிரியக்க : அணுக் கருமையம் உறுதியற்றிருப்பதால் வெப்பக் கதிர்களை வீசக்கூடிய பொருள. நுரையீரல் நோய்களை ஆராய கதிர்யக்கத் தங்கம் பயன்படுத்தப் படுகிறது. கேடயச் சுரப்பியில (தைராய்டு) கதிரியக்க அயோடின் இருக்கிறது. இதனை அளவிட்டு அறியலாம.

radiobiology : **கதிரியக்க உயிரியல் :** உயிருள்ள திசுக்களின் மீது கதிரியக்கத்தின் விளைவுகளை ஆராயும் அறிவியல்.

radiocaesium : **கதிரியக்கச் சீசியம் :** சீசியம் என்ற தனிமத்தின் கதிரியக்கத் தன்மை கொண்ட ஒரு வடிவம்; இது. நோய்களுக்கான கதிரியக்க மருத்துவத்தில் பயன்படுகிறது.

radiocarbon : **கதிரியக்கக் கார்பன் :** கார்பன் (கரியம்) என்ற தனிமத்தின் கதிரியக்க வடிவம். இது. வளர்சிதை மாற்றம் பற்றிய ஆராய்ச்சியில் பயன்படுகிறது.

radiogram : **ஊடுகதிர் ஒளிப்படம்.**

radiograph : **ஊடுகதிர்ப் படம்; ஊடுகதிர் வரைபடம்; கதிர் வரைபடம் :** ஊடுகதிர் (எக்ஸ்-ரே) ஒளிப்படம். ஊடுகதிர்களைக் கொண்டு ஒளிப்படம் எடுத்தல்.

radiographer : **ஊடுகதிர் வல்லுநர்; ஊடு கதிர்ப்படப் பதிவாளர் ; கதிர் வரைவாளர் :** ஊடுகதிர் (எக்ஸ்-ரே) நோய்களைக் கண்டறிவதிலும், நோய் மருத்துவத்திலும் தகுதி பெற்ற வல்லுநர்.

radiography : **கதிர் வரைவியல்; கதிர் வீச்சு ஒளிப்பட வரைவி; ஊடு கதிர்ப் படமெடுப்பு; ஊடு கதிரியம் :** நோய்களைக் கண்டறிய ஊடு கதிர் (எக்ஸ-ரே) ஒளிப்படம் எடுத்தல்; மருத்துவ ஆலோசனைப்படி, உக்கிரமான நோய்களுக்கு ஊடுகதிரைப் பயனபடுத்தி மருத்துவம் செய்தல்.

radioiodinated human serum albumin (RIHSA) : **கதிரியக்க அயோடினேற்றிய குருதி நிணநீர்க் கருப்புரதம் :** மூளை நைவுகளைக் கண்டறிவதற்கும், இரத்தம் மற்றும் குருதிநீர் அளவுகளைக் கண்டறிவதற்கும், சுற்றோட்ட நேரம், இதய வெளிப்பாடு ஆகியவற்றை அளவிடுவதற்கும் பயன்படுகிறது.

radioisotope : **கதிரியக்க ஓரகத் தனிமம் :** ஒரே அணு எண்ணுடன் வெவ்வேறு பொருண்மை எணகள் (எடை) கொண்ட ஒரு தனிமத்தின் வடிவங்கள் கதிரியக்க ஓரகத் தனிம நுண்ணாய்வு (Scan) மூலம் ஒரு குறிப்பிட்ட உறுப்பில் கதிரியக்க ஓரகத் தனிமம் உள்ளதா என்பதையும், அதன் அளவையும் கண்டறியலாம்.

radiologist : **ஊடுகதிர்-கதிரியக்க மருத்துவர்; கதிரியலார் :** ஊடுகதிர் (எக்ஸ்-ரே) மற்றும் அதுபோன்ற உருக்காட்சி உத்திகளைப் பயன்படுத்தி நோய்களைக் கண்டறியும் மருத்துவ வல்லுநர்.

radiology : **ஊடுகதிர்-கதிரியக்க மருத்துவம்; கதிர் வீச்சியியல்; கதிரியல் :** ஊடுகதிர்களையும், அது போன்ற உருக்காட்சி உத்திகளையும் பயன்படுத்தி நோய்க் குறிகளைக் கண்டறிதல்.

radiopaque : **ஊடுகதிர் ஊடுருவாத :** ஊடுகதிர் (எக்ஸ்-ரே) ஊடுருவுவதைத் தடுத்து, ஊடுகதிர்ப் படத்தில் உருவங்கள் தெரியும்படி செய்யும் பண்பு. பேரியம், அயோடின் கூட்டுப் பொருள்கள் இந்தப் பண்புகள் கொண்டவை. எனவே, இப்பொருள்கள் ஊடுகதிர்ப் படம் எடுப்பதறகுப் பயன்படுத்தப்படுகிறது.

rsdioscopy : **ஊடுகதிர் ஆய்வு.**

radiosensitive : **ஊடுகதிர் உணர்வுடைய :** ஊடுகதிர்களினால் (எகஸ்-ரே) பாதிக்கப்படக் கூடிய, ஊடுகதிர்ச் சிகிச்சையினால் குணமாகக் கூடிய கட்டிகள.

radiotherapist : **ஊடுகதிர்க் கதிரியக்க மருத்துவர்:** புற்றுநோய் போன்ற நோய்களை ஊடுகதிர் மற்றும் பிற கதிரியக்க வடிவங்களைப் பயன்படுத்திக் குணப்படுத்தும் மருத்துவ வல்லுநர்.

radio therapeutics (radio-therapy) : ஊடுகதிர் மருத்துவம் : ஊடுகதிர்க் கதிரியக்க மருத்துவ முறை.

radium : ரேடியம் (கதிரியம்) : இயற்கையாகக் கிடைக்கும் ஒரு கதிரியக்க உலோகத் தனிமம்; தார் வண்டல் திரள்களிலிருந்து கிடைக்கிறது. ஊடுகதிர்க் கதிரியக்க மருத்துவத்தில் அவ்வப்போது பயன்படுத்தப்படுகிறது.

radium therapy : ரேடியம் சிகிச்சை; கதிரிய மருத்துவம் : ரேடியத்தை (கதிரம்) அல்லது அதன் விளை பொருட்களைப் பயன்படுத்தி நோய் தீர்க்கும் முறை.

radius : முன்கை வெளி எலும்பு; ஆர எலும்பு ; முன் கை வட்டச் சீர் எலும்பு; முன் கை ஆரை எலும்பு.

radon : ரேடியம் வாயு (கதிரம்) : கதிரியக்கத்தின் சிதைவால் உண்டாகும் வாயு வடிவக் கதிரியக்கத் தனிமம்.

radon seeds : ரேடியம் வாயு மாத்திரை : 'ராடோன்' என்ற கதிரியக்க ரேடியம் வாயு (கதிரம்) அடங்கிய மருந்து மாத்திரைப் பொதியுறை. ரேடியம் அணுக்களைச் சிதைத்து இந்த வாயு உண்டாக்கப்படுகிறது. இது ஊடுகதிர்க் கதிரியக்க மருத்துவமுறையில் பயன்படுத்தப்படுகிறது.

rale : நுரையீரல் துடிப்பு; குழல் ஒலி : நுரையீரலில உண்டாகும் நோய் காரணமாக ஏற்படும் நாடித் துடிப்பு.

Ramsay Hunt syndrome : காது மடல் அக்கி : மடலில் கடுமையான அக்கி நோய், அததுடன் முகவாதமும் சுவையுணர்வின்மையும் சேர்ந்திருக்கும்.

ranula : அடிநாக்குக் கட்டி; நாவடி வீக்கம் : நாக்கின் அடியில், நாள அடைப்பு காரணமாக உண்டாகும் நீர்க்கட்டி.

raphe : நாக்கு மடிப்பு; ஒட்டல் : நாக்கின் பின்பரப்பிலுள்ள ஒரு தையல் விளிம்பு; பொருத்துவாய்; கூடல் வாய்; மடிப்பு வரை; நடு மடிப்பு.

rarefaction : எலும்பு சொய்மை; மென்மையாக்கம் : எலும்பு செறிவின்றி நொய்மையாக இருத்தல். எலும்பு அடர்த்திக் குறைதல்.

ratbite fever : எலிகடிக் காய்ச்சல் : திருகு சுருள் வடிவ நுண்ணுயிரியினால் உண்டாகும் மறுக்களிப்புக் காய்ச்சல்.

rationalization : நியாயப்படுத்துதல் : ஒருவர் தனது நடத்தையை அந்நிகழ்ச்சிக்குப் பிறகு, பகுத்தறிவுக்கு அல்லது சமூகத்திற்கு ஏற்ற முறையில் நியாயப்படுத்துகிற உளவியல் பாங்கு.

Raynaud's disease : ரேனாட் நோய் : விரல் தமனிகளின் தசையில் ஏற்படும் சுரிப்பு. இதனால். கைகால் விரல்களில் தோல் வெளிறிய நிறமாக அல்லது நீலநிறமாக மாறும். சிலசமயம் இளம் பெண்களுக்குத் தசையழுகல் நோய் உண்டாகலாம். கால் கைவிரல்களுக்கு இரத்தவோட்டம் குறைவதால் ஏற்படும் நோய்.

reaction : மறுவிளைவு; மறுசெயல: எதிர் விளைவு : வேதியியல மாற்றம்; விளைவு; மறுதலிப்பு. எ-டு: லிட்மஸ் தாளுக்கு அமிலத்தால் அல்லது காரத்தால் ஏற்படும் விளைவு. மறுவினை; எதிர்செயல்.

reagent : விளைவிப்புப் பொருள்; வினையூக்கிப் பொருள் : எதிர்த்தாக்காற்றல் மூலம் சேர்மத்தின பொருட்கூறு கண்டறிய உதவும் பொருள்.

reality orientation (R O.): உண்மை உணர்த்தும் மருத்துவம்: குழப்பமும் மனச சோர்வும் அடைந்த நோயாளிகளுக்கு அவர்களின் பெயா, நேரம், இடம், தேதி முதலியவற்றை அடிக்கடி நினைவு படுத்தி அவர்கள் இயல்பு நிலையை உணரும்படி செய்யும் மருத்துவ முறை.

recalcitrant : முரண்வாத எதிர்ப்பு நோயாளி : மருத்துவத்துக்கு ஒத்துழைக்காமல் எதிர்ப்புத் தெரிவித்துமுரண்டுபிடிக்கும் நோயாளி.

recall : நினைவு கூர்தல்; மீட்டறிதல் : நிகழ்ச்சிகளை நினைவில் வைத்துக் கொண்டு, தேவையான போது நினைவுபடுத்திக் கொள்ளுதல்.

recannulation: வீரிய நிலைப்பாடு: ஒரு நாளத்தின் வீரியத்தை மீண்டும் நிலைநாட்டுதல். அடைத்திருக்கும் குழாயை சீர்செய்து திரவ ஒழுக்கு மீண்டும் ஏற்படச்செய்தல்

receptaculum : 'தேக்கப்பை'; கொழுப்புப்பை: முதல் வயிற்றுப்பக்க முதுகெலும்பின முனபுள்ள மார்பக நிணநீர்க்குழலின் தொடக்கத்திலுள்ள பேரிக்காய் வடிவப் பை. இது குடலிலிருந்து சீரணித்த கொழுப்பை ஏற்றுக் கொள்கிறது.

receptive sensory aphasia : உணர்வுப் பேச்சிழப்பு : கேட்கும் சொற்களுக்கு எந்தப் பொருளும் கொளள முடியாமலிருக்கும் மூளை சார்ந்த நோய். இந்நோயாளி சைகை, எழுத்து, ஓவியம் போனற செய்தித் தொடர்பு வடிவங்களைப் புரிந்து கொண்டாலும் பேசும் சொற்களைப் புரிந்து கொள்வதில்லை.

receptor: ஏற்பி: நரம்புத் தூண்டுதல்களை ஏறறு, அனுப்பககூடிய உணர்வு நரமபு. வேதியியல் பொருள்கள், மருந்துகளை ஏற்றுச் செயல்படும் அணுப்பகுதி.

recessive : மரபியல்பு மறைவு; அடங்கிய; மங்கிய : மரபாகத் தோன்று பண்பியல்புகள் தலைமுறைக்குத் தலைமுறை குறைந்து கொண்டு வந்து இறுதியில் மறைந்து விடுதல்.

recipient ;பெறுநர்;ஏற்பான்;ஏற்பி:

Recklinghausen's disease : எலும்பழற்சி நோய் : துணைக் கேடயச் சுரப்பி அளவுக்குமீறிச் செயற்படுவதன் காரணமாக உண்டாகும் எலும்பழற்சி நோய். இதனால் எலும்புகளில் கால்சியம் குறைந்து நீர்க்கட்டிகள் உண்டாகும். தோலில் நிறப்புள்ளிகளும் ஏற்படும். இதனை 'ரெக்ளிங்க்ஹாசன் நோய்' என்றும் கூறுவர்.

recliner's reflux syndrome : மல ஒழுக்கு நோய் : முன்பக்க மலக் கழிவுச் செயலமுறையில் ஏற்படும் கடுமையான கோளாறு காரணமாக இது உண்டாகிறது. இந்நோயாளிகள், படுத்திருந்தாலும் தாழ்வான நாற்காலியில் சாய்ந்திருந்தாலும், எந்த நேரத்திலும் மலம் கசியும்.

recombinantDNA:ஒருங்கிணைப்பு டி என் ஏ : இரு வேறுபட்ட உயிரிகளின் மரபணு டிஆக்சிரிபோ நியூக்ளிக் அமிலத்தை (டி என் ஏ) வேதியியல் முறையில் ஒருங்கிணைக்கப்பட்ட டி என் ஏ. இயல்பான மரபணுக்கள், இயல்புமீறிய மரபணுக்களை ஆகியவற்றின் கட்டமைப்புகளையும் செயற்பணிகளையும் ஆராய்வதற்கு இது பயன்படுகிறது. நடைமுறையில் நோய்க் குறிகளைக் கண்டறிய பயன் படுத்தப்படுகிறது.

recrudescence : நோய்க்குறி மறு தோற்றம் : நோய்க்குறிகள மீண்டும் கிளர்ந்தெழுந்து தோன்றுதல்:

reactivity : விளைவிப்பு ஆற்றல்.

reactor ; விளைவிப்புக் கருவி.

rectal atresia . மலக்குடல் குறை வளர்ச்சி.

rectal bladder: மலக்குடல் பை: மலக்குடலினுள் சிறுநீர் நாளங்களைப் பொருத்துவதை இது குறிக்கிறது. சிறுநீர்ப்பைகளில் கடுமையான நோய் ஏற்படும்போது பெருங்குடல் இறுதிப் பகுதியில் கீறி செயற்கை நீர்ப்பை உண்டாக்கி நீர் போக்குக்கு வழி செய்யப்படுகிறது

rectal varices : மூல நோய் : மலக்குடலில் ஏற்படும் மூலநோய்.

rectocele : மலக்குடல் நழுவல்; மலக்குடல் பிதுக்கம்; மலக்குடல் சரிவு : மலங்கழிக்கும் வாய்க்கு வெளிப்புறத்தில் அமைந்திருக்கும் வகையில் மலக்குடல் நழுவியிருத்தல்.

rectoscope : மலக்குடல் ஆய்வுக் கருவி; மலக்குடல் நோக்கி, மலக்குடல் காட்டி : மலக்குடலைப் பரிசோதனை செய்வதற்கான கருவி.

rectosigmoid: மலக்குடல் சார்ந்த: மலக்குடல், மற்றும் பெருங்குடலின் 'S' போன்று வளைந்த பகுதி தொடர்பான.

rectosigmoidectomy ; மலக்குடல் அறுவை; மலக்குடல் வெளி எடுப்பு : மலக்குடலையும், பெருங்குடலின் 'S' போன்று வளைந்த பகுதியையும் அறுவை மருத்துவம் மூலம் அகற்றுதல்.

recto urethral fistula : மலக்குடல்-சிறுநீர்ப் புற வழிப்புரை.

rectouterine : மலக்குடல்-கருப்பை சார்ந்த : மலக்குடல், கருப்பை ஆகியவை தொடர்பான.

rectovaginal: மலக்குடல்-யோனிக் குழாய் சார்ந்த : மலக்குடல், யோனிக் குழாய் ஆகியவை தொடர்பான

recto vaginal fistula: மலக்குடல் யோனிப் புரை.

recto vesical : மலக்குடல்-சிறுநீர்ப்பை சார்ந்த : மலக்குடல், சிறுநீர்ப்பை தொடர்பான.

recto vesical fistula: மலக்குடல் சிறுநீர்ப் பை புரை.

rectum : மலக்குடல் / குதவாய் : பெருங்குடலின் அடிப்பகுதி. இது "S" போன்ற நெளிவுப் பகுதிக்கும், மலக்கழிவு வாய்க் குழாய்க்கு மிடையில் அமைந்துள்ளது.

recumbent : சாய் நிலை : படுத்துக் கொண்டிருக்கும் நிலை; சாய்ந்திருக்கும்நிலை. பரிசோதிப்பதற்காகச் சாய்ந்திருக்கும் நிலை.

recuperation : குணமாதல்; மீட்சி பெறல் : நோயிலிருந்து மீள்தல்; இழந்த வலிமையை மீளப் பெறுதல்.

red blood corpuscles : சிவப்புக் குருதி அணுக்கள்.

reducing agent : ஆக்சிஜன் குறைக்கும் பொருள்.

reduction : ஆக்சிஜன் குறைத்தல்; உயிர்வளிக் குறைப்பு : ஆக்சிஜன் வாயுவைக் (பிராணவாயு) குறைத்தல்; எலும்பு ஒருங்கிணைத்தல்.

referred pain : ஏவு வலி : வலி உண்டாகும் ஆதார இடத்திலிருந்து தொலைவில் வலி ஏற்படுதல். எடுத்துக்காட்டாக, தோள் பட்டை சார்ந்த வலி பித்தப் பை நோயில் உரைப்படுதல்.

reflex (reflex action) : அனிச்சை செயல / இயல் நரம்பியக்கம்; மறி வினை : மனதினால் கருதப் படாமல், புறத் தூண்டுதல் நேரி

டும்போது, நரம்புக் கிளர்ச்சிக் கிணங்கத் தன்னியல்பாகத் தூண்டப்படும் உள்ளுறுப்பு இயக்கச் செயல். எடுத்துக்காட்டு: தும்முதல்; கண்ணிமைத்தல்; இருமுதல்.

reflux: பின்னொழுக்கு; பின்னோட்டம் : பின்னோக்கிய நீரோட்டம்.

refraction : ஒளி விலகல் / ஒளிக் கோட்டம்; கதிர்ச் சிதைவு : ஒளிக் கதிர்கள் மாறுபட்ட அடர்த்திகளையுடைய ஊடகங்கள் வழியே செல்லும்போது கோட்டமடைதல் இயல்பான கண்பார்வையில் ஒளிக் கதிர்கள் விழித்திரையில் சந்திக்கும் வகையில் கோட்டமடைகின்றன.

refractory : படியாமை / முரண்டு பிடித்தல் : மருத்துவத்திற்கு உட்பட மறுத்தல்; மருத்துவம் செய்து கொள்ள பிடிவாதமாக முரண்டு செய்தல்.

refractory error : ஒளி விலகல் அளவு. ஒளி விலகல் பிழையளவு.

refrigerator: குளிர்பதனப் பெட்டி.

regeneration : புத்துயிர்ப்பு; புத்துயிரளித்தல்; மீளமைப்பு : திசுக்களுக்குப் புத்துயிருட்டிப் புதுவாழ்வளித்தல்.

regional ileitis : பின் சிறுகுடல் அழற்சி : சிறுகுடல் பின்பகுதியில் ஏறபடும் அழற்சி. இது பெரும்பாலும் வயதுவந்த இளையோருக்கு உணடாகிறது. இதனால் பின் சிறுகுடலில் வீக்கத்துடன் புண் உண்டாகிறது. பெருங்குடல, மலக்குடல், மலங் கழியும் வாய் ஆகியவற்றிலும் இது ஏற்படலாம்.

regression : பின்னடைவு; சவலை; சிறுபிள்ளைத்தனம்; பிற்போக்கு . மனநோய் மருத்துவத்தில், உளவியல் வளர்ச்சியின் தொடக்க நிலைகளுக்குப் பின்னோக்கிச் செலலுதல். அதாவது, மேன்மேலும் சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்ளுதல். மனத்தளர்ச்சியினால் ஏற்படும் பைத்தியத்தின்போது இது உண்டாகிறது. தாய்க்கு இன்னொரு குழந்தை பிறக்கும்போது இளங்குழந்தைகளுக்கு இது உண்டாகிறது. இந்தக் குழந்தைகளைச் சவலைப் பிள்ளைகள் என்பார்கள்.

regurgitation ; எதிர் ஒழுக்கு; பின்னேற்றம்; எதிர்க்களித்தல்: பின்னோக்கிப் பாய்தல்; எ-டு: இரைப்பையிலுள்ள பொருள்கள் வாய் வழி வெளியேறுதல்.

rehabilitation : மறுசீரமைவு; மறுவாழ்வு : நோய் நலிவின் இயலா நிலைகளை அகற்றி முன்போல் வாழ்க்கை நடத்துவதற்கு உதவி புரிதல்.

reiter's syndrome : மூட்டு வலி (ரெய்ட்டெர் நோய்): பெண்களுக்கு உண்டாகும் ஒருவகை மூட்டு வலி நோய். இமையிணைப் படல அழற்சி, மூத்திரக் குழாய் அழற்சி ஆகியவையும் இதனுடன் சேர்ந்து வருகிறது.

rejection : ஏற்க மறுத்தல்; திசுப் பொருந்தாமை : பொருத்தப்பட்ட திசுக்கள் அழிந்துபடுவதற்கான செய்முறை. உடலில் ஒட்டு அறுவை மருத்துவம்மூலம் பொருத்தப்பட்ட உறுப்பினை உடல் ஏற்க மறுத்து விடுதல். திசுத் தள்ளுதல்.

rejuvenation : இளமையாக்கம் : மீணடும் இளமையின் வலிவும் பொலிவும் பெறுதல்.

relapsing fever : மீள் காய்ச்சல்; மறுக்களிப்புக் காய்ச்சல் : உண்ணியினால் உண்டாகும ஒருவகை நோய். ஒரு வாரம் காய்ச்சல் இருந்து, மீணடும் குணமாவது போல் தோனறி, மறுபடியும் கடுமையாகக் காய்ச்சல் தோன்றுதல்.

relax : **தளர்த்துதல்; தளர்வு**: தசை நரம்புகளைத் தளர விடுதல்.

relaxant; **தசைத் தளர்ப்பு மருந்து; அழுத்தக் குறைப்பி; தளர்த்தி; நெகிழ்த்தி.**

relaxation . **தசைத் தளர்ப்பீடு; தளர்வுறல்; நெகிழவு.**

relaxin : **ரிலாக்சின்** : பெண் கருப் பையில் சுரக்கும நீர். இது கருப் பைக் கழுத்தினை மென்மையாக்கி தசை நார்களைத் தளர்த்தி குழந் தை பிறப்பதை எளிதாக்குகிறது.

REM : **விரைவுக் கண் இயக்கம்** : கனவு நிலையில் ஒரு இயக்கம்.

remission: **நோய் தணியும் காலம் குறைப்பு; தணிவு** : காய்சசல் அல் லது வேறு நோய் தணிகிற கால அளவு.

renal : **சிறுநீரகம் சார்ந்த; சிறு நீரகம்**

renal artery : **சிறுநீரகத் தமனி.**

renin , **ரெனின்** : சோடியம் இழப் புக்குப் பதிலாகச் சிறுநீரகத்தி லிருந்து இரத்தத்திற்குள் செலுத் தப்படும் ஒரு செரிமானப் பொருள் (என்சைம்).

rennin : **ரென்னின்** : குழந்தை களின் இரைப்பை நீரில் காணப் படும் பாலை உறைய வைக்கும் (தயிராக்கும்) பொருள். இது கேசினோஜனைக் கேசினாக மாற்றுகிறது. இந்தக் கேசின், கால்சியம் அயனிகளுடன் சேர்ந்து கரையாத தயிராக மாற்றப்படு கிறது.

reovirus : **மூச்சுக் குடற்காய்ச்சல் கிருமி** : மூச்சுக் குடறகாய்ச்சல் கிருமி என்று முன்பு அழைக்கப் பட்டது. இது RNA கிருமிகள் அடங்கிய தொகுதியில் ஒன்று. இது கடுமையான நோய் எதனையும் உணடாக்காமல் மூச்சுக் குழாயை யும் குடலையும் பாதிக்கிறது.

repatition strain injuries : **மறு நிகழ்வுத் திருகுக் காயங்கள்**: முதுகு வலி, ஒரு கையில் அல்லது இருகை களிலும் அல்லது கால்களில் வலி ஆகியவை இதில் அடங்கும். பொருத்தமில்லாத அசைவுகள், இயக்கமில்லாத தசை நிலைமை, இடக்குமுடக்காக நின்று கொணடு வேலை செய்தல் ஆகியவை இதற் குக் காரணம்.

repression : **உணர்ச்சி ஒடுக்கம்; செயல் தடை** : இயற்கைத் தூண்டு தல்களை அடக்கி ஒடுக்குதல். அவா, உணர்ச்சி போன்றவற்றை உணர்வு நிலையிலிருந்து விலக்கி உள் மனதிற்குள் ஒடுக்கி வைத்தல். உணர்ச்சிகளும சிந்தனைகளும் நடத்தை முறையை உருவாக்குவ தாகப் ஃபிராய்டு கருதினார். இவற்றை ஒடுக்குவதால், அவை கனவுகளாகவும் நரம்பு நோய்க் கோளாறுகளாகவும் வெளிப்படு கின்றன.

reproduction : **இனப் பெருக்கம்**

reproductive system : **இனப் பெருக்க மணடலம்** : இனப் பெருக் கத்திற்காக அமைந்துள்ள உறுப்பு களும் திசுக்களும் ஆண்களிடம விரை, குருதிநாளங்கள, சிறுநீர்ப் பை முனவாயில் சுரப்பி, விந்துப் பைகள், மூததிர ஒழுக்குக் குழாய், ஆண்குறி, பெணணிடம கருப்பை, கருப்பையிலிருந்து கரு வெளி யேறும் குழாய்கள, யோனிக் குழாய் கருவாய் (குய்யம்) ஆகி யவை இதில் அடங்கும.

reproductory insanity : **பேறு கால மனநோய்.**

resection : **அறுத்து நீக்குதல்; வெட்டி அகற்றல, அரிதல்** : அறு வை மருததுவத்தில எலும்பு, குருத்தெலுமபு முதலியவற்றை சீவி நறுக்கி எடுத்தல்.

resectotome : **அறுத்து நீக்குக் கருவி; அரிவெட்டி** : அறுத்து நீக்கு வதற்குப் பயன்படுத்தப்படும்கருவி.

reserpine : ரிசர்ப்பின் : மட்டு மீறிய இரத்த அழுதத்தின்போது பயன்படுத்தப்படும் முக்கியக் காரகம். இது மற்ற மருநதுகளோடு கொடுக்கப்படுகிறது. இதனை நீண்ட நாள் பயன்படுததினால் கடும் மனச்சோர்வு நோய் உண்டாகும்.

reservoirs of infection: நோய்த் தோற்றப் பகுதிகள. மனித உடலில் கைகள், மூக்கு, தோல், வயிறு ஆகியவை நோய் தோனறும் பகுதிகளாகும். இவை சில சூழ்நிலைகளில் நோய் தோன்றும் இடங்களாக அமைகின்றன.

residual : எஞ்சிய; எச்சப் பொருள்; மீந்த; தேங்கிய: எச்சம்;நுரையீரலில் வல்லந்தமாகக் காற்றை வெளியேற்றிய பிறகு எஞ்சியிருக்கும் காறறு; சிறுநீர்ப்பையில் சிறுநீர் கழித்தபிறகு எஞ்சியிருக்கும் சிறுநீர்.

resins : பிசின்கள்; ஒட்டுப் பசை : நீரில் கரையாத, தடமான, மணி உருவமற்ற கரிய மீச்சேர்மங்கள. இவை இயற்கையாகக் கிடைக்கும்; செயற்கையாகவும் தயாரிககலாம.

resistance : எதிர்ப்பு; தடையாற்றல் . எதிர்க்கும் அலலது தடுககும ஆறறல். உளவியலில, தனனுணர்வற்ற எதிர்ப்பிலிருந்து உணர்வு நிலைக்குத் திருமபுவதைத் தடுக்கும் ஆற்றல் மருத்துவத்தில் ஒரு நோயை எதிர்த்துத தாக்குப் பிடிக்கும் ஆற்றல்.

resolution : ஊமைவீக்க நீக்கம்: வீக்கத் தளர்வு; ஊமை வீக்கம, சீழ் வைக்காமலேயே மறைந்து விடுதல்

resolutive : தசை கரைப்பான் . தசை கரைப்பு மருந்து. தசை கரைப்பு மேறபூச்சு மருந்து தசை கரைககும் ஆறறல் கொணட.

resolvent : கரைப்பு மருந்து : கழலை முதலியவற்றைக் கரைக்கும் மருந்து கட்டிகளைக் கூறுபடுத்திக் கரைக்கும் மருநது.

Resonium: ரெசோனியம் : பொட்டாசியத்தை ஈர்த்துக் கொள்ளக் கூடிய ஒரு செயற்கைப் பிசினின் வாணிகப் பெயர். இரத்தத்தில் அளவுக்கு அதிகமாகப் பொட்டாசியம் இருக்கும்போது இது கொடுக்கப்படுகிறது.

resorcinol : ரிசோர்சினால் : தோலில தேய்க்கும் பூச்சு மருந்து. முகப்பருவுக்குக் களிம்பாகவும், தலைப் பொடுகுக்குக் கழுவு நீர்மமாகவும் பயன்படுத்தப்படுகிறது.

resorption : மறு உறிஞ்சல்; ஈர்த்துக் கரைத்தல்; மீள உறிஞ்சுகை : மீண்டும் உறிஞ்சிக் கொள்ளும் செயல். (எ-டு) எலும்பு முறிவைத் தொடர்ந்து எனபுப் பொருளை உறிஞ்சிக் கொள்ளுதல்; பருவத்தில் விழுகிற பற்களின் வேர்கள் மறுபடி உள்வாங்கிக் கொள்ளுதல்

respiration : மூச்சோட்டம் (சுவாசம்); மூச்சு விடுகை : ஒருமுறை காறறை உள்வாங்கி வெளியே விடுதல். ஓர் உயிரணுவுக்கும் அதன சுற்றுச்சூழலுக்குமிடையிலான வாயுப் பரிமாறறம்.

respirator : மூச்சுக் கருவி (சுவாசக் கருவி); மூச்சு இயக்கி : உட்கொள்ளும காறறின் மாசு அகற்றி வெதுவெதுப்பாக மூக்கும் வாயும் கவிந்து அணியப்படும் மெல்லிய வலைமூடிக் கருவி. நச்சு வாயுக் குண்டின் நச்சு ஆவியைத் தடுக்க அணியப்படும வாய மூக்கு வலைமூடி.

respiratory acdemia: சுவாச அமிலப் பெருக்கம் : மூச்சு இயக்கத் தளர்வினால் குருதியின் அமிலத் தன்மை மிகுதியாதல்.

respiratory function tests : சுவாசஇயக்கச்சோதனைகள்: சுவாச

இயக்கத்தைக் கணித்தறிவதற்காக பல பரிசோதனைகள் கையாளப் படுகின்றன. உள்ளிழுக்கும் காற் றின் அளவு வெளியேறும் காற் றின் அளவு, ஒரு நிமிட நேரத்தில் மிக அதிகமாக உட்சுவாசிக்கும் காற்றின் அளவு ஆகியவற்றைக் கண்டறிய இந்தச் சோதனைகள் செய்யப்படுகின்றன.

respiratory failure: சுவாச இயக் கத் தோல்வி: நுரையீரல்கள் இரத் தத்தில் போதிய அளவு ஆச்சிஜ னேற்றுவதற்குத் தவறுதல்.

respiratory syncytial virus (RSV): பல கரு சுவாசக் கிருமி: பச்சிளங் குழந்தைகளுக்குக் கடுமை யான சுவாச நோயை உண்டாக் கும் நோய்க் கிருமி. இது சிலசமயம் மரணம் விளைவிக்கும்.

respiratory system : மூச்சு மண் டலம் : மூச்சை உள்ளிழுதது வெளி யிடுவதற்கு உதவும உறுப்புகள். இதில மூக்கு, மூக்குத் தொண்டை, குரல்வளை. மூச்சுக் குழாய்கள், நுரையீரல்கள் ஆகியவை இதில் அடங்கும்.

responaut : எந்திரச் சுவாச நோயாளி; பொறி மூச்சர் நிரநதர மாக மிகக் கடுமையான சுவாச வாத நோய் உடைய நோயாளி. இவர் சுவாசிப்பதற்கு எந்திர உதவி தேவை.

restless leg syndrome : ஓயாக் கால் நோய் : கால் ஓயாமல் அசைந்து கொண்டே இருக்கும் நோய். கால் எப்போது ஊர்நது கொண்டிருத்தல், மெலல மெல்ல நகர்தல், சொரிநது கொணடிருத தல், குத்துதல் ஆகியவை இதன அறிகுறிகள்.

resuscitation:உயிர்ப்பித்தல்;இதய இயக்க மீட்பு : இடிந்துபோன அல் லது அதிர்ச்சியடைந்த ஒருவருக்கு மீண்டும் புத்துயிா கொடுத்தல். இதில் நோயாளியை மல்லாக்கப் படுக்க வைத்து அவரது இதயப் பகுதியைப் பிடித்துவிட்டு, இதயம் நினறிருந்தால் அது இயக்குவிக்கப் படுகிறது. வாயில் வாயை வைத் தும், வாயை மூக்கில் வைத்தும், வாயை மூக்கிலும் வாயிலும் வைத்து மூச்சோட்டம் ஏற்படுத் தப்படுகிறது.

retained placanta : நஞ்சுத் தங் கல் : தங்கிப்போன நஞ்சு.

retardation : வளர்ச்சிக் குறை பாடு; குறை வளர்வு : ஏற்கெனவே வேகமாக அல்லது அதிவேகமாக நடைபெறும் வளர்ச்சியைத் தாமத மாக்குதல். வளர்ச்சியை அல்லது செய்முறையை நிறுத்துதல்.

retarded child : வளர்ச்சிக் குறைக் குழந்தை: மூளை குறை வளர்ச்சிக் குழந்தை

retching : குமட்டல்: வாந்தி முயற்சி : வாந்தி எடுப்பதற்காகக குமட்டுதல்.

retention ; கழிவுப் பொருள தேக் கம் ; உடலில் கழிவுப் பொருட்கள் தேங்கியிருதல், சிறுநீர் வெளி யேறாமல் தேங்கியிருத்தல்.

reticular : வலைச் சவ்வு : வலைப் பினனல் போனற சவ்வு.

reticulocyte : இளம் சிவப்பணுக் கள : சுற்றோட்டமாகச் செல்லும இளம் இரத்தச சிவப்பணு. உயி ரணு எலும்பு மச்சையாக வளரும் போது அதில இருந்த உட்கருவின சுவடுகள் இதில இனனும் அடங்கி யிருக்கும்.

reticulo endothelial system (RES) : குருதியோட்ட மணடலம் : ஒரே மரபு வழியில் வந்த பரவ லாக அமைந்த உயிரணுக்களின மண்டலம் இது பல முக்கியமான செயல்களைச் செய்கிறது. இது நோய்க்கு எதிராகப் பாதுகாப பளிக்கிறது. பித்தநீர் நிறமிகள் உருவாகாமல் தடுக்கிறது;சிதைநது

போன பொருட்களை அப்புறப் படுத்துகிறது, எலும்பு மச்சை, கல் லீரல், ஈரல்குலை, நிண அணுத் திசு ஆகியவை இவற்றின் மையங் கள்.

retina : **விழித்திரை ;** கண் விழி யின் பின புறத்திரை கண் விழி யின் ஒளி யு ண ர் வு டைய உள் பூ ச் சு ப் பகுதி.



retinitis : **விழித்திரை அ ழ ற் சி :** கண் விழித் திரையில் உண்டாகும் வீக்கம்

retino blastoma : **விழித்திரைச் சவ்வுக் கட்டி; விழித்திரை முன்புற்று** விழிததிரையின் நரம்புச் சவ்வில் ஏற்படும் உக்கிரமான கட்டி. இது குழந்தைகளுக்கு மட்டுமே உண்டா கிறது. ஊஸ்டிராஸ்-D என்ற செரி மானப் பொருள் குறைபாட்டி னால் இது உண்டாகிறது.

retinopathy : **விழித்திரை நோய் :** விழித்திரையில் வீககம் உண்டாகா மல் ஏற்படும் நோய்.

retinoscope , **விழித்திரை ஆய்வுக் கருவி; விழித்திரை நோக்கி; விழித் திரை காட்டி:** விழித் திரையில் ஒளி விலகல் பிழைகள் இருக்கின்றனவா என்பதைக் கணடறியும் கருவி.

retinotoxic : **விழித்திரை நச்சு .** விழித் திரையில் ஏறபடும் நச்சு.

retractile : **பின்னிழுவை :** பின னுக்கு இழுக்கக் கூடிய; நாக்கை உள்ளே இழுததுக கொள்ளுதல்.

retractor : **இழுவைக் கருவி :** உள்காயங்களைப் பா ர் க் கு ம் வகையில் காயத்தின் விளிம்புகளை இழுத்துப் பிடித்துக்கொள்ளும் அறுவைக் கருவி.

retrobulbar : **பி ன் க ண் வி ழி :** கண்விழியின் பின் பகுதி சார்ந்த கண்விழியின் பின்புறமுள்ள ஒளியி யல் நரம்பில் ஏற்படும் வீக்கம்.

retrocaecal : **பெருங்குடல் பின் -பகுதி :** பெருங்குடல் வாய்ப் பின் -பகுதி.

retroflexion : **பின் வளைவு; பின் மடக்கம் :** பின்புறமாக வளைந் திருத்தல்.

retrograde : **பின் போக்கு :** பின் னோக்கிச் செல்லுதல்.

retroocular ; **கண் பின்பகுதி.**

retroperitoneal : **வயிற்றின் பின் பகுதி :** வயிறறு உ ட ற் ப கு தி சூழ்ந்துள்ள நீரடங்கிய இரட் டைச் சவ்வுப் பையின பின்புறப் பகுதி.

retropharyngeal:பின்தொண்டை: தொண்டையின் பின்பகுதி.

retropharyngeal abcess : **பின் தொண்டைச் சீழ்க்கட்டி.**

retroplacental : **பின் நச்சுக் கொடி :** நச்சுக்கொடியின் பின பகுதி.

retrospection ;பின்காட்சி ஆய்வு: முன நிகழ்ச்சிகளை நினைவு கூர் தல.

retrosternal : **பின் மார்பெலும்பு :** மார்பெலும்புக்குப் பினபுறமுளள.

retrotracheal: **பின் மூச்சுக்குழல:** மூச்சுக குழலின் பினபுறமுள்ள.

retroversion : **பின் சாய்வு; பின் கவிழ்தல் :** கோளாறுடைய கருப் பை இடம் பெயர்ந்து பின்புறம் சாய்தல்.

retrovertsd grarvid uterus : **பின்சாய்வுக் கருக் கொண்ட கருப் பை :** பின்புறம சாய்நது திரும் பிய கருக்கொண்ட கருப்பை.

revascularization : குருதிநாள மறு வளர்ச்சி : திசுவில் அல்லது உறுப்பில் இயல்பான இரத்தம் பாய்தல் தடைபட்டு, அந்தத் திசுவினுள் அல்லது உறுப்பினுள் இரத்த நாளம் மீண்டும் வளர்தல்.

Reye syndrome: ஈர மூளைநோய்: மூளையில் ஈரக் கசிவும், பருத்த ஈரல் குலையும் உண்டாக்கும் நோய். இதில் மூளை நீர்க்கோவை ஏற்படுகிறது ஆனால், கண்ணறை ஊடுருவல் ஏற்படுவதில்லை. ஈரல் குலையிலும், சிறுநீரகம் உட்பட மற்ற உறுப்புகளிலும் கொழுப்பு ஊடுருவிப் பரவுகிறது. இது சாலிசைலேட்டு மருந்து கொடுத்தல், சின்னம்மை ஆகியவற்றுடன் தொடர்புடையது.

rhagades : உதட்டுத் தழும்புகள் : பிறவிக் கிரந்தி நோயினபோது உதடுகளில் ஏற்படும் நீண்ட தழும்புகள்.

Rheomacrodex : ரியோமாக்ரோடெக்ஸ் : குறைந்த மூலககூற்று எடையுள்ள டெக்ஸ்ட்ரான் எனற மருந்தின் வாணிகப் பெயர். இது மாற்றிப் பொருத்திய சிரையில் குருதிக்கட்டைத் தடுக்கப் பயன் படுத்தப்படுகிறது.

Rhesus factor(RH-factor)குருதி உறைக் காரணி : குருதியின் செங்குருமத்தில் காணப்படும் உறைமதனை ஊக்குவிக்கும் கூறு. குருதியில் உறைமம் ஊக்குவிக்கும் கூறு செலுததப்படும்போது எதிர்ச் செயல்காட்டாத காரணி "எதிர்ச் செயல்காட்டா உறைமக் காரணி" (RH-negative) எனப்படும். குருதியில் உறைமம் ஊக்குவிக்கச் செலுத்தப்படும்போது எதிர்ச்செயல்காட்டும் காரணி "எதிர்ச்செயலகாட்டும் உறைமக் காரணி" (RH-positive) எனப்படும்

rhesus incompatability, iso immunisation: குருதி உறைமக் காரணி ஒவ்வாமை : எதிர்ச் செயல் காட்டாத உறைமக் காரணி (RH-negative) உடைய கருவை வயிற்றில் கொண்டிருக்கும் போது இந்தச் சிக்கல் எழுகிறது. குழந்தை பிறக்கும்போது, கருப்பைக் குழந்தையின் இரத்தமும் தாயின் இரத்தமும் கலக்கின்றன. அப்போது எதிர்ச் செயலகாட்டும் உறைமக் காரணியுடைய இரத்தத்திற்கு எதிரான உயிர்ப் பொருள்களைத் தாயின் உடல் உருவாக்குகிறது. அடுதத குழந்தையும் எதிர்ச் செயல்காட்டும் உறைமக் காரணியுடைய குழந்தையாகக கருவுறுமானால் அதன இரத்தத்தைத தாயின் உடலிலுள்ள எதிர்ப் பொருள்கள் தாக்குகின்றன. இதனால், கடுமையான குருதி அணுச் சிதைவு உண்டாகும்.

rheum : வாத நீர் : கண்ணீர், வாயூறல் போன்றவற்றுக்குக் காரணமாக சிலேத்தும நீர்; கபம்; சளி.

rheumatic: வாத நோயாளி: வாத நோய் பீடிக்கப்பட்டவர்; வாத நோய் உணடாக்குகிற; வாத நோய் சார்ந்த.

rheumatic fever · கீல்வாதக் காய்ச்சல்;வாதக் காய்ச்சல்: முடககு வாதக் காய்ச்சல்.

rheumatism : கீல்வாதம்; முடக்கு வாதம்; மூட்டு வாதம்; வாதம் : இணைப்புத் திசுக்களில் ஏற்படும் பல்வேறு நோய்களைக் குறிக்கும் சொல். இதனால் தசைகளிலும், மூட்டுகளிலும் வலியும் வீக்கமும் விறைப்பும் உண்டாகும்.

rheumatoid : போலிக் கீல்வாதம் : கீல்வாதம் போன்ற நோய்.

rheumatology : கீல்வாத நோயியல்; முடவியல்; முடக்கு வாதவியல்;

வாதவியல் : கில்வாத நோய்கள் பற்றி ஆராயும் அறிவியல்.

rheums : **வாத நோவுகள் :** வாதத்தினால் உண்டாகும் வலிகள்.

rheumy: **கபமுடைய:** சளியுடைய.

rhinitis : **மூக்கழற்சி; நாசியழற்சி :** மூக்குச் சிலேட்டுமப் படல வீக்கம்.

rhinology : **மூக்கு நோயியல் :** மூக்கினைப் பாதிக்கும் நோய்களை ஆராயும் அறிவியல்.

rhinopharyngeal : **உள் மூக்கு வளை சார்ந்த.**

rhinophyma : **மூக்குத் தோல் கரணை :** மூக்கின் தோலில ஏற படும் கரணை விரிவகற்சி

rhinoplasty: **மூக்கு ஒட்டு அறுவை** மூக்கின் கட்டமைப்பில செய்யப்படும் ஒட்டு அறுவை மருத்துவம்.

rhinorrhoea : **மூக்குக் கசிவு; நாசியொழுக்கு :** மூக்குச்சளி கழிதல்.

rhinoscopy : **மூக்குச் சோதனை :** மூக்கின உட்பகுதியைக் கருவி மூலம் பரிசோதித்தல்.

rhino sporidosis : **மூக்குப் பூஞ்சண நோய் :** மூக்கு, கண்களை, காதுகள, குரல் வளை, அரிதாகப் பிறப்புறுப்புகள் ஆகியவற்றைப் பாதிக்கும் பூஞசண நோய்.

rhinovirus : **தடுமன் கிருமிகள்** . பொதுவான தடுமனை உண்டு பண்ணும் சுமார் 100 வகையான கிருமிகள. நாசி வைரஸ்கள்.

rhizotomy: **முதுகந்தண்டு நரம்புப் பிளவு; வேர் நீககம் :** முதுகந்தணடு நரம்பின பிறபகுதி வேர்களை அறுவை மருத்துவமமூலம் பிளவு படுததுதல.

rhodopsin **விழித்திரை நிறமி:** விழிததிரைக் கோல்களிலுள்ள பார்வைக் கருஞ்சிவப்பு. இதன் நிறம் இருட்டில் பாதுகாக்கப்படுகிறது. பகல் ஒளியில் இது வெண்மையாகிறது. வைட்டமின்-A உயிர்ச் கத்தினைப் பொறுத்து இது அமைகிறது.

rhonchus : **நுரையீரல் புற ஒலி, கீச்சு மூச்சு ஒலி :** நுரையீரலின் புறததேயிருநது வரும் ஒலி. இது இழைம அழறசியினால் மூச்சுக் குழாய் வழியே காற்று செல்வது தடுக்கப்படுவதால் உணடாகிறது.

rhubarb : **பேதி மருந்து :** ஒரு சீனச் செடியின் உலர்ந்த வேரி விருந்து எடுக்கப்படும பேதி மருந்து.

riboflavine : **ரிபோஃபிளேவின் :** வைட்டமின்-B உயிர்ச் சததின் ஒரு கூறு. மேனியேர் நோய், வாய்ப்புண் போன்ற பல நோய் களுக்குக் கொடுக்கப்படுகிறது.

ribonuclease : **ரிபோநுக்ளியேஸ் :** ரிபோநுக்ளிசிக் அமிலத்தின் மீச் சேர்மத்தைச் சிதைவிக்கும் ஒரு செரிமானப் பொருள். இதைச் செயற்கையாகவும் தயாரிக்கலாம்.

ribonucleic acid (RNA) : **ரிபோநுக்ளிக் அமிலம் :** உயிருள்ள உயிரணுக்கள் அனைத்திலும் காணப்படும் நூக்ளிக் அமிலம. இதனை நீரால் பகுக்கும்போது அடினைன, கானின், சிஸ்டோசின, யூராசில், ரிபோஸ், ஃபாஸ்ஃபோரிக் அமிலம் ஆகியவை கிடைக்கின்றன. இவை புரத இணைப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

ribosomes . **ரிபோசோம் :** உயிரணுக்கள் அனைத்தினுள்ளும் வினையூக்கிகளை உண்டு பணணும் நுண்ணிய புரதம்.

ribs ; **விலா எலும்புகள் :** மார்புக் கூட்டெலும்புகள.இவை 12இணை எலும்புகளைக் கொண்டவை. மேலேயுள்ள ஏழு இணை எலும்பு

கள், மார்பெலும்புடன் இணைந்துள்ளன. எஞ்சிய 5 இணை எலும்புகள் போலி விலா எலும்பு



விலா எலும்புகள்

கள்; இவற்றில் மூன்று இணைகள் மார்பெலும்புடன இணைநதிருக்க வில்லை. ஆனால், குருததெலும்புகள் மூலம் பிணைந்துள்ளன. கீழே யுள்ள கடைசி இரு இணைகள் மிதக்கும் விலா எலும்புகளாகும்.

rice water stool : அரிசிக் குருணைக் கழிச்சல்; நீராக மலம் : வாந்தி பேதியின்போது (காலரா) அரிசிக் குருணைபோல மலங்கழிதல். குடலின புற அடர் படலம் செதில்களாக உரிவதால் இந்த அரிசிக் குருணை வெளிப்படுகிறது.

rickets : குழந்தைக் கணை; உயிர்ச் சத்துக் குறை நோய்; என்புருக்கி : குழந்தைகளுக்கு எலும்பு மென்மையடையும் நோய். வளர்சிதை மாற்றத்தில் கால்சியம், ஃபாஸ்பரம் குறைபாட்டினால் இது உண்டாகிறது. இது வைட்டமின-D உயிர்ச் சத்துக் குறைப்பாட்டுடன் தொடர்புடையது. ஆறு மாதம முதல் 2 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு இது ஏற்படுகிறது. இதனால் பளுதாங்கும் எலுமபுகள் வளைந்து விடும்; தலை வியர்க்கும்; முறை நசிப்பு உண்டாகும்,

Rickettsia : நச்சுக் காய்ச்சல் நுண்ணுயிரி : நச்சுக் காய்ச்சல்கள் (சன்னிக் காய்ச்சல்கள்) உண்டுபணணும் ஒட்டுண்ணி நோய் நுண்ணுயிரிகள். இவை பாக்டீரியாக்களைவிடச் சிறியவை; கிருமிகளைவிடப் பெரியவை. பல கீல் கால் அமைந்த உயிரினங்களின் குடல் நாளங்கள் இவை இயறகையாக வாழ்கின்றன.

ricketsial diseases : கணைச் சூட்டு நோய்கள : கணைச சூட்டு வகையைச சேர்ந்த நோய்கள்.

rickety : கணைச் சூட்டுக்குரிய : கணைச சூட்டினால பாதிக்கப்பட்ட.

rickety rosary : கணைச் சூட்டு வீக்கம் : கணைச் சூட்டு நோய் (குழந்தைகளை) பீடிக்கப்பட்ட குழந்தைகளின விலா எலும்புகளிலும், விலா எலும்பு சார்ந்த குருத்தெலும்புகளிலும் ஏற்படும கடு

மையான வீக்கம் அல்லது புடைப்பு (கொம்மை).

rider's bone : **சவாரிக் கட்டி :** *குதிரைச் சவாரியின்போது தொடையில் திரும்பத் திரும்ப ஏற்படும் இலேசான காயத்திலிருந்து முன்னிழுக்கும் இயல்புடைய தசைநாரில் தோன்றும் எலும்பு போன்ற திரட்சி (கட்டி).*

ridge : **தண்டெலும்பு;நீண்ட முகடு.**

Riedel's thyroiditis : **ரைடல் கேடயச் சுரப்பிக் கழலை :** *கேடயச் (தைராய்டு) சுரப்பியில் ஏற்படும் கருமையான கழலை.*

rifampicin : **ரி∴பாம்பிசின் :** *காச நோயைக் குணப்படுத்துவதற்குரிய ஒரு மருந்து. இது மற்றக் காச நோய் மருந்துகளுடன் சேர்த்துக் கொடுக்கப்படுகிறது. தொழு (குட்டம்) நோய்க்கும் இது பயன்படுத்தப்படுகிறது.*

Rift valley fever : **வெடிப்புப் பள்ளத் தாக்குக் காய்ச்சல் :** *கொசுவினால் பரவும் குருதிநாளக் காய்ச்சல்களில் ஒன்று.*

rigor : **குளிர் நடுக்கம் (பனிப்பு); விறைப்பு :** *காய்ச்சல் போன்ற நோய்களில் முன்னதாக வரும் திடீர்க் குளிர் நடுக்கம். இதில் உடல் வெப்பநிலை திடீரென உயர்ந்து, வியர்வை வரும்வரை உயர்ந்த அளவில் இருந்து, படிப்படியாக வெப்பம் குறைகிறது.*

rigor mortis : **சாக்காட்டு விறைப்பு; மரண விறைப்பு :** *இறந்த பின் ஏற்படும் உடல் விறைப்பு.*

rimactane : **ரிமாக்டான் :** *காச நோயைக் குணப்படுததப் பயன்படும் ரி∴பாம்பிசின என்ற மருந்தின வாணிகப் பெயர்.*

rimaglottilis : **குரல் தந்தி இடை; குரலியச் சந்து.**

ringworm : **படர்தாமரை; படை; வளைப் புழு வெட்டு:** *தோலில் உண்டாகும் படர்தாமரை என்னும்*

வளைப் புழு வெட்டு

படை நோய். இது ஒரு தொற்று நோய். இது வளையம் வளையமாக செதில் படலத்துடன் இருக்கும்.

risus sardonicus : **இசிவு இளிப்பு; விரைப்பு முறுவல் :** *நரப்பிசிவு நோயின் வலிப்பு இளிப்பு.*

RNA : **ஆர்என்ஏ :** *ரிபோநூக்ளிக் அமிலத்தின் சுருக்கப் பெயர்.*

rodent ulcer : **கொறி விலங்குப் புண் :** *முகத்தில் அலலது கபாலத் தோலில் ஏற்படும் அடி உயிரணுப் பிளவை அல்லது புரையோடும்புண்.*

rods and cones : **கண் நுண்கம்பிகளும் கூம்புகளும்; திரைக் கூம்பு.**

romberg's sign : **ரோம்பர்க் குறி:** *உடலுறுப்புகள் ஒத்தியங்க இயலாமல் இருக்கும் நிலையின் அறிகுறி. கணகளை மூடி, பாலங்களை ஒன்று சேர்த்து வைத்திருக்கும் போது உடல் ஆடாமல் நேராக நிறக முடியாதிருககும் நிலை இவ்வகையைச் சேர்ந்தது.*

roof of the nose : **மூக்கு மேல் தளம்: மூக்கின் முகட்டுத்தளம்.**

root of the nose : **மூக்கு அடிப் பகுதி.**

rose bengal : **வங்காள ரோஜா :** *நோயுற்ற விழித்திரை, இமை*

யிணைப் படலத்தைக் கண்டறியப் பயன்படுத்தப்படும் ஒரு சாயப் பொருள். ஒரு நிறமி.

roseola : தட்டம்மைப் புள்ளி; செம்புள்ளி : விளையாட்டம்மை எனப்படும் தட்டம்மையின் ரோசாப்பூ போன்ற சிவந்தபுள்ளி. இது உடலில் கைகளிலும், முகத்திலும் தவிர மற்றப் பகுதியெங்கும் பரவியிருக்கும்.

rotaviruses : இரைப்பை அழற்சிக் கிருமி : குழந்தைகளிடமும பச்சிளங்குழந்தைகளிடமும் ஏற்படும் இரைப்பை அழறசிநோய் தொடர்புடைய நோய்க் கிருமிகள்.

rotator : சுழல் தசை; சுழற்றி : உறுப்பைச் சுழற்றும் தசைத் தொகுதி.

Roth spots : விழி வெண்புள்ளி : விழித திரையில் உண்டாகும் வட்டமான வெண்புள்ளிகள். சில நேர்வுகளில் குலையணைச் சவ்வு வீக்கம் காரணமாக ஏற்படுகிறது. குருதிக் குழாய் அடைப்பினால் இது தோனறுவதாகக் கருதப்படுகிறது.

rouleaux : சுருள் சிவப்பணுக்கள்; காசடுக்குச் சிவப்பணுக்கள் : நாணய அடுக்குப் போன்று இரத்தத்திலுள்ள இரத்தச் சிவப்பணுக்களின் வரிசை.

roundworm : நாக்குப் பூச்சி (உருண்டைப் புழு); உருளைப் புழு; நாகப் பூச்சி : உலகெங்கும் காணப்படும் மண்புழு போன்ற புழுவகை. மனிதரிடம் ஒட்டுண்ணியாக வாழ்கிறது. மலத்தோடு வெளியேறும். இதன் முட்டைகள் உணவு வழியாக உட்சென்று, வயிற்றில் குஞ்சு பொரித்து திசுககள், நுரையீரல் கள், மூச்சுக் குழாய்களுக்குப் பரவி முதிர்ந்த புழுக்களாக மீண்டும் இரைப்பைக்கு வருகிறது. இது சில சமயம், வாந்தியுடன் வெளிவந்து அச்சம் உண்டாக்கும். இதன படையெடுப்பு அதிகமானால் சீத சன்னி (சளிக்காய்ச்சல்) ஏற்படும்; குடல் அடைப்பும் உண்டாகும் இதைக் குணமாக்க பிப்பராசின் சிறந்த மருந்து.

Rous sarcomavirus (RSV) : கோழிக் கழலைக் கிருமி : கழலைகளை உண்டாக்கும் ஒருவகைக் கோழிக் கிருமிகள் ரிபோநூக்ளிக் அமிலத் (RNA) கழலைக் கிருமித் தொகுதியில் ஒன்று. இது பற்றி மிகுந்த ஆராய்ச்சிகள் நடைபெற்றுள்ள போதிலும் இக்கிருமிகளை மனிதக் கழலைகளிலிருந்து பிரித தெடுக்க இன்னும் முடியவில்லை.

rovsing's sign : இடுப்புப் பள்ள அழுத்தம் : இடது இடுப்புப் பள்ளத்தில் ஏற்படும் அழுத்தம். இது. குடல்வால் அழற்சியின்போது. வலது இடுப்புப் பள்ளத்தில் வலி உணடாக்குகிறது.

rubefacients: சிவப்பாக்கும் மருந்துகள்; சிவப்பிப்பி: இரத்தவோட்டத்தை மிகைப்படுத்தி தோலைச்சிவக்கச் செய்கிற மேற்பூச்சுப் பொருள்.

rubor : வீக்கச் சிவப்பு : வீக்கத்தின்போது ஏற்படும் நால்வகை சின்னங்களில் ஒன்றான சிவப்பு நிறம்.

S

saccharides: சர்க்கரை: கார்போ ஹைட்ரேட்டுகளின் மூன்று முக்கிய வகைகளில ஒன்று. கரும்பு வெல்லம்.

saccharin : சர்க்கரைப் பதிலி; இனிப்பூட்டி : சர்க்கரைக்குப் பதிலாகப் பெருமளவில் பயனபடுத்தப்படும் பொருள். இது வெல்லத்தை ஒத்தது. தித்திப்பு மிக்கது. நீரிழிவு நோயாளிகள் சர்க்கரைக்குப் பதிலாக இதனைப் பயன்படுத்துவர்.

saccharoid : சர்க்கரை போன்ற பொருள : சர்க்கரையை ஒதத சிறு மணித் திரளான பொருள்.

saccharolytic: சர்க்கரைச் சிதைப்பான்; சர்க்கரை முறி. கார்போ ஹைட்ரேட்டுகளைச் (சர்க்கரை) சிதைக்கும் திறனுடைய பொருள்.

sacchromyces: சர்க்கரை நொதி: சர்க்கரையை நொதிக்கச் செயயும் நொதிப் பொருள் (ஈஸ்ட்). ரொட்டி நொதி, சாராய நொதி ஆகியவையும் இதில அடங்கும்.

saccharose : கரும்பு வெல்லம் : கரும்புச் சாற்றிலிருந்து தயாரிக்க படும் வெலலம் (சுக்ரோஸ்).

sacculation: பைபோல் உப்புதல்; நுண பையாக்கம் . பல சிறு பைகள் தோன்றி உப்புதல்.

saccule: சிறு பை; நுண் பை; நுண்ணிய பை.

sacral : புனித எலும்பு சார்ந்த : புனித எலும்பு எனப்படும்



புனித எலும்பு

இடுப்புக் குழி பின் இணைப் பெலும்பு தொடர்பான.

sacral vertebra : புனித எலும்பு : இடுப்புக்குழிஇணைப்புஎலுமபாக செயல்படும் தணடுவட எலும்பு.

sacroilioc:புனிதஎலும்பு-பின் இடுப்பெலுமபுசார்ந்த:புனித எலும்பு-பின் இடுப்பெலும்புதொடர்புடைய.

sacroiliitis : புனித எலும்பு மூட்டு அழற்சி ; இடுப்புக் குழி இணைப்பு எலும்பு மூட்டுகளில் உண்டாகும வீககம்

sacrolumbar ; புனித எலும்பு - இடுபபு சார்ந்த : இடுப்புக் குழி இணைப்பு எலுமபும், இடுப்பும் தொடாபுடைய.

sacrum : புனித எலும்பு; பிட்ட எலும்பு . இடுப்புக் குழி மூட்டு முக்கோண எலும்பு. வயிறறுப் பக்க முதுகெலும்புக்கும் வால்பகக முதுகெலும்புக்கும் இடையில் அமைந்துள்ளது. இது ஒனறாக இணைக்

கப்பட்ட ஐந்து முள்ளெலும்பு களைக் கொண்டது.

saddle nose : வக்கை மூக்கு; அழுந்து நாசி; சேண மூக்கு : மூக்கு மேல் விளிம்பில் இடையே பள்ளம் உடைய மூக்கு. இது பிறவிக் கிரந்திப் புண்ணின் அறிகுறி.

sadism : கொடுமை விருப்பம்; கொடுமைப் பாலுறவு; கொடு மனம்: மற்றவருக்கு அல்லது பாலுறவுக் கூட்டாளிக்கு வலி, வன்முறை போன்ற கொடுமை விளைவித்து அதில் இன்பம் காணும் கொடு வெறிக் காமம்.

Safapryn : சே:பாப்பிரின் : பாது காப்பான ஆஸ்பிரின மருநதின் வாணிகப் பெயர். இது இரைப்பை யில் இரத்தக் கசிவு உணடாக்குவ தில்லை.

sagittal : அம்பு போன்ற; வகிட்டு: அம்பு வடிவுடைய மண்டையோட் டின் உச்சிக்கும் பக்கங்களுக்கும் உரிய எலிம்பிணைகள். அமபு வடிவ இணைப்பு சார்ந்த.

salbutamol : சால்புட்டாமோல் : காற்றுக் குழாய் (குரல் வளை) விரிவகற்சி மருந்து. ஐசோப்பிரி னாலினிலிருந்து எடுக்கப்படுகிறது.

salicin : மரப்பட்டை மருந்து : ஒருவகைக் கசப்பு மரப்பட்டையி லிருந்து எடுக்கப்படும் மருந்து.

salicyl : மரப்பட்டைச் சாறு: மரப் பட்டையிலிருந்து எடுககப்படும் மருந்துச் சாறு.

salicylamide : சாலிசிலமைடு : இலேசான நோவகறறும் மருந்து. சாலிசைலேட் போனறு வினை புரியக் கூடியது. ஆனால், இரைப் பைக் கோளறை உண்டாக்காது.

salicylate : சாலிசைலேட் : மரப் பட்டையிலிருந்து எடுக்கப்படும் மருந்துக் காரம்.

salicylic acid : சாலிசிலிக் அமி லம்: பூஞ்சணங்களையும், பாக்டீரி யாக்களையும் அழிக்கும் மருந்து. பல்வேறு தோல் நோய்களுக்குப் பயன்படுகிறது. புரைமுறையாக வும், வாத முறியாகவும் பயன் படும் மரப்பட்டை வகை மருந்துச் சாற்று அமிலம்.

salicylism : மரப்பட்டை அமிலத் தன்மை : மரப்பட்டை வகை மருந் துச் சாற்றின் அமிலத் தன்மை.

saline : உப்புநீர் / உப்பேரி; உவர் நீர் : உப்பு அடங்கிய பொருள். பேதி மருந்து உப்பு. உப்பு சார்ந்த.

saliva : உமிழ்நீர்; எச்சில் : உமிழ் நீர் சுரப்பிகளிலிருந்து சுரக்கும்நீர். இதில் நீர், சளி. தியாலின் அடங்கி யுள்ளன.

salivary calculus ; உமிழ்நீர் கல் லடைப்பு; எச்சிற்கல் : உமிழ்நீர்ச் சுரப்பிகளில் ஏற்படும் கல்போன்ற தடிப்பு.

salivary glands: உமிழ்நீர்ச் சுரப்பி கள்; எச்சில் சுரப்பி : எச்சில் சுரக் கும் சுரப்பிகள்.

salivate : மிகை உமிழ்நீர் ஊறல் . வழக்கத்திற்கு மிகுதியாக வாயில் உமிழ்நீர் ஊறுதல்.

salivation : மிகை எச்சில்; உமிழ் நீர் மிகைப்பு; உமிழ்நீர் ஊறல் : வாயில் அளவுக்குமீறி உமிழ்நீர் சுரத்தல்

salk vaccine : சால்க் வாக்சின் : கொல்லப்பட்ட இளம்பிள்ளை வாதக் கிருமிகளிலிருந்து தயாரிக் கப்படும் ஒரு எதிர்ப்பொருள் இது இளமபிள்ளை வாத காப்புக்கான ஒரு தீவிரச் செயற்கைக் காப்புப் பொருள் ஊக்கியாகப் பயன்படு கிறது இது ஊசிமூலம் செலுத்தப் படுகிறது.

salmonella : சால்மோனெல்லா : கிராம் சாயம் எடுக்காத நுண் கம்பிப் பாக்டீரியா வகை. இது ஒட்டுண்ணியாகப் பல விலங்குகளி

லும், மனிதரிடமும் உள்ளது. இதனால் நோய்கள் ஏற்படுகின்றன

salpingectomy : சுறுக்குக் குழாய் அறுவை; அண்டக் குழல் எடுப்பு : கருப்பையிலிருந்து கருமுட்டை கருப்பைக்கே கடத்தும் குழாயில் அறுவை மருத்துவம் செய்தல்.

salpingitis : கருக்குழாய் அழற்சி : அண்டப்பையிலிருந்து கருமுட்டை கருப்பைக்குக் கடத்தப்படும் குழாயில் ஏறபடும் கடுமையான வீக்கம்.

salipingo-oophorectomy : கருக்குழாய்-கருப்பை அறுவை; அண்டக் குழல் கருப்பை (அண்டாசய) எடுப்பு : கருப்பையிலிருந்து கரு வெளியேறும் சுறுக்குக் குழாயையும், கருப்பையையும் வெட்டியெடுத்தல்.

salpinx : கருக்குழாய், அண்டக் குழல : முன் தொண்டையிலிருந்து நடுக்காதுக் குழிவரையில் செல்லும் குழாய் அல்லது கருப்பையிலிருந்து கருவெளியேறும் குழாய்.

salsalate : சால்சலேட் : வீக்கம் தணிக்கும் மருந்து. இது சாலிசிலிக் அமிலத்தின் ஒரு கூறு. இது இரைப்பை நீரில் கரையாதது. இதனால் இது இரைப்பை எரிச்சலையும், அரிமானத்தையும் உணடாக்குவதில்லை.

salvarsan : வெட்டை மருந்து : வெட்டை நோய் தீர்க்கும ஒரு மருந்து,

salve : களிம்பு மருந்து: புண்ணை ஆற்றக் கூடிய ஒரு களிம்பு மருந்து.

salvolatile : அமோனியாக் கரைசல் : மயக்கம் நீக்கும் மருந்தாகப் பயன்படும் நவச்சார ஆவிக் (அமோனியா) கரைசல். இது இனிய சுவையும் மணமும் உடையது. இதனை வீடுகளில் நலிவகற்றி நலமூட்டும் மருந்தாகப் பயன்படுத்துகிறார்கள்.

samaritans : நல்லிரக்கத் தொண்டர்கள் : விரக்தியடைந்து தற்கொலை செய்து கொள்ள முனையும் மனநோயாளிகள், தொலைபேசியில் தொடர்பு கொண்டால், அவர்களுக்கு எல்லா நேரத்திலும் உதவி புரியும் தன்னார்வ நட்புத் தொலைபேசித் தொண்டர்கள்.

sanatorium : உடல் நல நிலையம்; நலம் பேணும் மனை : நோயைக் குணப்படுதநி உள நலம் பேணுகின்ற நிலையம்.

sandfly : மணற்பூச்சி; மணல்ஈ; மணற்கொசு: மணறபூச்சிக் காய்ச்சல் என்னும் நோயை உண்டு பண்ணுகிற சிறிய பூச்சி வகை:

sanguinariness : குருதிச் சோர்வு: இரததம் மிகுதியாகக் கசிந்துசிந்துவதால் உண்டாகும் சோர்வு.

sanguine : மிகைக் குருதி நோய் : இரத்தம் மிகையாக இருப்பதால் ஏற்படும் கோளாறு.

sanguineous : குருதி சார்ந்த; செந்நீரிய : இரத்தம் சார்ந்த; இரத்தம் உடைய; குருதி மிகைக் கோளாறுடைய.

santonin : எட்டி எண்ணெய் : எட்டி மரத்திலிருந்து எடுக்கப்படும் எண்ணெய். ஒரு சமயம் உருண்டைப் புழுவுக்கு (நாக்குப் பூச்சி) எதிராகக் கொடுக்கப் பட்டது.

saponification : சவர்க்காரமாக்கல் : காரங்களுடன் சேர்த்துச் சூடாக்குவதன்மூலம் சவர்க்காரமாகவும் கிளிசெராலாகவும் மாற்றுதல்.

sapraemia : குருதி நச்சு : ஒரு நஞ்சு குருதியோடு சேர்ந்து உடலில சுற்றோட்டமாகச் செல்வதால் உடலில் பொதுவாக உண்டாகும் நச்சுத் தன்மை. அழுகிய கரிமப் பொருள்களில் வாழும்

தாவர உயிர்கள் சிதைவதால் இது உண்டாகிறது.

saprophyte : அழுகல் பொருள் நுண்மம்: அழுகிய கரிமப் பொருள வாழும் தாவர நுண்ணுயிரிகள்.

sarcoid : நைவுப் புண்கள்: தோலி லும், நுரையீரலிலும், பிற உறுப்பு களிலும் உண்டாகும் நைவுப் புண்களின் ஒரு தொகுதி.

sarcoidosis : துகள் கழலை; காச நோய்த் தோற்றம் : துசள் கழலை நோய். இதன நோய்க் காரணம் இன்னும் தெரியவில்லை. இதன் திசுவியல் தோற்றம் காச நோய் போல் தோன்றுகிறது. இது உட லின் உறுப்புகளைப் பாதிக்கிறது. பெரும்பாலும் தோலின் நிணநீர்ச் சுரப்பிகள் கையெலும்புகள் பாதிக் கப்படுகின்றன.

sarcoma (sarcomata) : கழலை; இணைப்புத் திசுப் புற்று; இழைமைப் புற்று : இணைப்புத திசு, தசை, எலும்பு ஆகியவற்றில் ஏற்படும் உக்கிரமான வளர்ச்சி அல்லது கட்டி.

sarcomatosis : உடற் கழலை : கழலை உடலெங்கும் பரவியிருக் கும் நிலை.

sarcoplasm: தசை நார்மம், நிணச் சோறு : தசை நார்ப் பொருள்.

sarcoptes : சிரங்கு ஒட்டுண்ணி: சிரங்கு உண்டு பண்ணும் ஒரு வகை ஒட்டுண்ணி.

sartorius : தையல் தசை : தொடையிலுள்ள தையல் தசை. இது ஒரு காலை மற்றொன்றின் மீது வளையச் செய்கிறது.

saventrine : சாவன்டிரின் : இத யத துடிப்பு வேகததை அதிகரிப் பதற்காகக் கொடுக்கப்படும் மருந்து. இது நீண்டநேரம் வேலை செய்யக் கூடியது.

savlon : சாவ்லான் : அறுவை மருத்துவத்துக்கு முன்பு கழுவு நீர்மமாகப் பயன்படுத்தப்படும் நோய் நுண்மத் தடைப் பொருள். இதில் 1.5% குளோர்ஹெக்சிடினும் 15% செட்ரிமைடும் அடங்கியுள் ளது.

scabies : சொறி சிரங்கு : ஒட் டுண்ணிக் கிருமியினால ஏற்படும் தோல் நோய். கடுமையாகத் தொற்றக் கூடியது.

scald : சுடு புண் : ஆவியினால் உணடான பொக்குளம்.

scalene: முக்கோணத் தசை: முது கெலும்பையும் விலா எலும்பு களையும் இணைக்கும் தசை.

scall : சொறி : சொறி நோய் வகை, வன்சொறி, சிரங்கு, மென் சொறி கரப்பான புண் ஆகியவை இவ்வகையின.

scalp : தலைத் தோல் : கபாலத் தோல்; உச்சி வட்டக் குடுமித் தோல்.

scalpel : அறுவைக் கத்தி.

scalpriform : முன் வாய்ப் பல் : உளிவடிவான முன் வாய்ப்பல்.

scammony : பேதிப் பிசின் : கடும் பேதி மருந்தாகப் பயன்படும் பிசின் வகை.

scan : நுண்ணாய்வு ஒளி-நிழல் கருவிகள்மூலம உடல் உறுப்பு களை நுணணாய்வு செய்தல்.

scanning speech : தெற்று வாய்: அனும உள்ளிக் காழ்ப்பில் ஏற் படும பேச்சுக் கோளாறு. இதில் பேச்சு தொடர்பின்றியும் மெது வாகவும் இருக்கும்.

scaphoid: படகு எலும்பு; அங்கைப் படகெலும்பு: கணைககால் எலும்பு, மணிககட்டு எலும்பு போன்ற படகு வடிவ எலும்பு.

scaphoid abdomen : படகு வடிவ அடி வயிறு.

scapula : தோள் பட்டை; தோள் எலும்பு; பட்டையெலும்பு : தோலிலுள்ள பெரிய முக்கோண வடிவப் பட்டை எலும்பு.

scapulo-humeral : தோள் பட்டை மேற்கை இணைப்பு சார்ந்த

scapulo-radial : தோள் பட்டை முனகை கட்டெலும்பு இணைப்புச் சார்ந்த.

scapulo-ulnar : தோள் பட்டை முன்கை உளளெலும்பு இணைப்புச் சார்ந்த.

scar : தழும்பு/வடு : தோலில் ஏற்பட்ட காயம் அல்லது புண் ஆறிய பின்பு உண்டாகும் தழும்பு.

scarlatina : செம்புளளி நச்சுக் காய்ச்சல்; செஞ்சிவப்பு : குழநதைகளுக்கு முக்கியமாக உண்டாகும் காயச்சல். முதலில் தொண்டை நோய் ஏற்பட்டு பின்னர் காய்ச்சல் உண்டாகும். பினனல் தோலில் செம்புள்ளிப் புண்கள் எழும்.

scarlet fever : செங்காய்ச்சல் : செம்புள்ளி நச்சுக் காய்ச்சல்.

scarlat rash : செம்புள்ளி அமமை: செம்புள்ளி அம்மை நோய் வகை.

scarlet red : செஞ்சாயம். புண்கள, காயங்கள, சிராய்ப்புகள் ஆகியவற்றைச் சுத்தபபடுத்துவதற்கு ஒரு சமயம் பயனபடுத்தப் பட்ட சிவபபுச சாயம்.

scathe : புண.

SCBU : குழந்தைகள சிறப்புக் கவனிபபுப் பகுதி.

schick test . தொண்டையடைப்பான் சோதனை ஒருவருக்குத் தொணடையடைப்பான (டிஃப்தீரியா) நோய் இருக்கிறதா என்பதைக் கண்டறிவதற்கான ஒரு சோதனை. இதில் புதிதாகத் தயாரிக்கப்பட்ட நோய் நஞ்சின் 2 அல்லது 3 மினிம் அளவு ஊசி மூலம் இடது புயததோளுக்கு அடியில் செலுத்தப்படுகிறது. இதே போன்று வலது புயத்திலும் செலுத்தப்படுகிறது. ஆனால் இதில் புரதத்தை அழிக்காமல் நோய் நஞ்சை அழிப்பதற்காக குருதி வடிநீர 75°C வரை அல்லது 10 நிமிட நேரம் சூடாக்கப்படுகிறது. இடது புயத்தில் 25-48 மணி நேரததில சிவப்பு வளையம் தோன்றும். நானகாம் நாள் இவ்வளையம் மிக உச்சநிலையை அடையும்; பிறகு இது படிப்படியாக மறைந்துவிடும். இந்த வினை நோய்த் தடைக்காப்பு இல்லாமையைக் குறிககும். இவ்வாறு சிவப்பு வளையம் எதுவும் தோன்றாவிட்டால் அவருக்குத் தொண்டை அடைப்பானுக்கு எதிராகத் தடைக்காப்பு உள்ளது என்று அறியலாம.

schildar's disease : நசிவு நோய்; சிதைவு நோய் : மரபுவழித் தோன்றும் இனச் சிதைவு நோய். இது மனவளர்ச்சிக் குறைபாட்டுடன் தொடர்புடையது (ஷில்டர் நோய்).

schilling test: ஷில்லிங் சோதனை: மரணம் விளைவிக்கக் கூடிய குருதிச் சோகை (Pernicious anaemia) இருப்பதை உறுதிப் படுத்துவதறகாக, கதிரியக்க வைட்டமின்-B_{12} சத்துப் பொருள் ஈர்ப்புத் திறனை மதிப்பிடுவதற்கான சோதனை.

schistosoma : நத்தைக் கிருமி : இரத்ததநிலுளள ஒட்டுண்ணிப் புழுக்களில ஒருவகை. இது நனனீரிலுளள நததைகள மூலமாக மனிதரைப் பிடிக்கிறது.

schistosomiasis : நத்தைக் கிருமி நோய் : நன்னீரிலுள்ள நத்தைகள் வாயிலாக மனித உடலுக்குள் படையெடுக்கும் நோய்ஒட்டுண்ணிகளால் உண்டாகும் நோய். இது தோல் அல்லது சிலேட்டுமப் படலம் வழியாக உடலுக்குள் நுழைகிறது. தனியொரு கிருமி உடலின் ஒரு பகுதியில் வாழ்ந்து, பல ஆண்டுகள் வரை முட்டையிடுகிறது கீழ்த்திசை நாடுகளில் இது பெருஞ்சிக்கலாக எழுந்துள்ளது குடிநீரில் குளோரின் சேர்த்தல், மனிதக் கழிவுகளை முறையாக அப்புறப்படுத்துதல், நன்னீரில் நத்தைகளை ஒழித்தல் ஆகியவற்றின்மூலம் இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காணலாம்.

schizophrenia : முரண் மூளை நோய்; மூளைச் சிதைவு; உளச் சிதைவு; புத்தி பேதம் : எண்ணம், உணர்வு, செயல் ஆகியவற்றில் தொடர்பு இல்லாமல் இருக்கும் ஒரு மூளைக் கோளாறு. இது அழிவுறுத்தும் கொடிய நோய். இதன் அறிகுறிகள் 20 வயதுகளில் தோன்றும். எனினும், இதற்கான வித்து கரு வளர்ச்சியின்போதே இடப்பட்டு விடுகிறது. அப்போது தான் நரம்பு உயிரணுக்கள் வளர்ந்து, கிளைவிட்டு, ஒன்றோடொன்று இணைகின்றன. மூளை முதலில் உருப்பெறும்போது, சில நரம்பணுக்கள், தவறான இடங்களில் குடியேறி, மூளையில் நிரந்தரமான அல்லது தவறான இணைப்புகளுடைய சிறுசிறு பகுதிகளை உண்டாக்குகின்றன. கருவுற்றிருக்கும்போது தாயை ஒரு நோய்க் கிருமி பீடித்தால், இந்தத் தவறான இணைப்புகள் முதிர்ச்சியடைந்து விடுகின்றன. உணர்ச்சியின்மை, அறிவு மழுங்கல் மருட்சிகள், அகக் குரல்களைக் கேட்டல் போன்ற நோய்க் குறிகள் முக்கியமாகத் தோன்றுகின்றன. இந்த நோய்க்குறிகள் அவை நோயாளியின் வாழ்நாள் முழுவதும் கூடுவதும் குறைவதுமாக இருக்கும். கரு வளர்ச்சியின் இரண்டாம் மும்மாதப் பருவத்தின்போது, நரம்பு உள்தகட்டின் மூலமாக மூளை உயிரணுக்கள் இடம்பெயர்வது முழுமையாக நடைபெறுகிறது. இது ஓரளவுக்கு மரபுவழி நோயாகும்.

schizophrenic : முரண் மூளை நோயாளி; புத்தி பேதித்த : முரண் மூளை நோய் கொண்டவர். இந்த நோயைக் குழந்தைப் பருவத்தில் கண்டறியலாம். இந்த நோய்க்கான 9 காரணங்களை 1961 ஒரு வலலுநர் குழுவினர் வகுத்துரைத்துள்ளனர்.

schilatter's disease : ஷிலாட்டர் நோய் : எலும்புக்கும் கருமூலமான வெண்ணீல நிறமுடைய கெட்டியான மணிப்பசைப் பொருளில ஏற்படும் அழற்சி.

schlemm's canal : கருவிழி நிணநீர்க் குழாய் : விழி வெண்படலத்திற்கு அருகே, சூழ்ந்திருக்கும் கருவிழியின் சந்திப்பின் உட்பகுதியில் உள்ள நிணநீர்க் குழாய்த் தொகுதி.

scholz's disease : ஸ்கோல் நோய் : மரபு வழித் தோன்றும் இனச் சிதைவு நோய். இது மன வளர்ச்சிக் குறைபாட்டுடன் தொடர்புடையது.

sciatica : இடுப்புச் சந்து வாதம்; இடுப்பு வலி : பிட்டம், பின் தொடை, பின்கால் தசை, பாதம் ஆகியவை சார்ந்த இடுப்புச் சார்ந்த நரம்புகளில் ஏற்படும் வலி.

scirrhous : மகோதரம் போன்ற : காழ்க்கழலை (மகோதரம்) ஒத்திருக்கிற.

scirrhus: கார்தசை கடினப்பட்ட மகோதரம்மார்பகத்தின கடினமான

புற்று நோயின் திண்மையான இணைப்புத் திசுவில் கணிசமாக ஏற்படும் புற்று வளர்ச்சி

scissor leg deformity : கத்திரிக் கால்; முட்டிக்கால், கத்தரி நடை முடம் : நடக்கும்போது கால்கள் கத்திரிபோல் குறுக்கே செல்லும் உருத்திரிபுக் கோளாறு இது இரட்டை இடுப்பு மூட்டு நோயினால் உண்டாகிறது.

sclera : விழி வெண்படலம்; வெள்விழி : வெணவிழிக் கோணத்தின் புறத்தோல். இது கருவிழிப்படலத்தின முனபுறம் இணைகிறது.

sclerema : விழி வெண்படலக் காழ்ப்பு . விழி வெண்படலத்தின் தோல, சவ்வுப் பொருள் படிவதால கடினமடைதல்.

scleriasis : காழப்பு நோய் : இழையக் காழ்ப்புக் கோளாறு.

scleritis. விழி வெண்படல அழற்சி· விழி வெண்படலத்தில் ஏற்படும வீககம்.

sclerocorneal ; விழி வெண்படலம்-கருவிழி சார்ந்த . விழி வெண்படலம, கருவிழி ஆகிய தொடர்புடைய.

scleroderma: கெட்டி மேல் தோல்; இணைப்புத் திசுக் கடினமாதல் . கடினமான மேல் தோல் நோய். இதனால், தசை இயக்கம் குறையும்; விரல்கள் சுருங்கி விடும்.

scleroma : இழைமக காழப்பு : இழைமக் காழ்பபுக் கோளாறு.

scleromeninx : மூளையுறை : மூளை, தண்டுவடம் ஆகியவற்றை மூடியிருக்கும் சவ்வுறை

sclerosis : அணும உள்ளரிக் காழப்பு; நுரைமீரல கடினமான: ஒரு திசு அளவுக்குமீறிக் கெட்டிப்படுதல் அல்லது வீக்கமடைதல்.

scleroskeleton : தசையெலும்பாக்கம் : தசை நார்கள் எலும்புபோல் காழ்ப்புடையதாகுதல்.

sclerotic (1) கண்ணின் வெண் சவ்வு : வெண்விழிக் கோளத்தின் மேல தோல்.

(2) இழைமக் காழ்ப்பு சார்ந்த : இழைமைக் காழ்ப்புக் கோளாறு தொடர்புடைய.

sclerotomy : விழி வெண்படல அறுவை : கடுமையான கண்விழி விறைப்பு நோயைக் குணப்படுத்துவதற்காக வெள்விழிக கோளத்தின புறத்தோலைக் கீறிவிடுதல்.

scolex : நாடாப் புழுத்தலை; புழுத் தலை; தலைப் பகுதி : குடல் சுவரில் ஒட்டிக் கொண்டிருக்கும் நாடாப்புழுவின் தலை.

scoliosis : முதுகெலும்புப் பக்க வளைவு; பக்க வளைவு; வளை முதுகு : முதுகெலும்பு பக்கவாட்டில் வளைந்திருத்தல். இது பிறவியிலோ அல்லது பின்னரோ ஏற்பட்டதாக இருக்கலாம். முள்ளெலும்பு, தசைகள், நரம்புகள் ஆகியவை திரிபடைவதால் இது உண்டாகிறது.



வளை முதுகு

scorbutic : சொறி நோயாளி : வைட்டமின்-C உயிர்ச் சத்துப் பற்றாககுறையினால் உண்டாகும் வயிறு வீக்கம். சோறிகரப்பான் போன்ற நோய்களினால் பீடிக்கப் பட்டவர்.

scotodinia : தலைச் சுற்று; மயக்கம்.

scotoma: பார்வைப் பரப்பில் குறிப்பிட்ட குறைவு; திரை நோய்; இருட் புள்ளி: *பார்வைப் பரப்பெலலையில் ஒருகுறிப்பிட்டபகுதிமறைப்பு*

scott's dressing : ஸ்காட் கட்டு மருந்து : *கறபூரம, ஒலிவ எண்ணெய, பாதரசம், தேனீமெழுகு ஆகியவை அடங்கிய ஒரு களிமபு மருந்து. இதனைக் கட்டித துணிகளில் பூசி வீங்கிய மூட்டுகளில் கட்டுகிறார்கள்.*

scour : குடல கழுவுதல் : *குடலை நன்றாகக கழுவுதல்.*

scourge : கொள்ளை நோய்.

scratch : கீறல்; கீறல் காயம் : *சிராய்ப்புக் காயம்.*

scratching : சொரிதல் : *நகத்தால் பிறாண்டுதல.*

scrapie : ஆட்டு நோய்க் கிருமி : *வெள்ளாடுகள், செமமறியாடுகள் ஆகியவற்றிலிருந்து மனிதருக்குத தொற்றுய நோய்க் கிருமி.*

screening : பார்வை மறைப்பு; திரையிடல், பொதுச் சோதனை : *படலத்தால் கண்பார்வை மறைதல*

scrofula : கண்டமாலை : *எலும்பில் அல்லது நிணநீர்ச் சுரப்பியில் உண்டாகும் காசநோய்*

scrofuloderma : கணட மாலைப் புண் : *எலும்பு அல்லது நிணநீரச் சுரப்பிகளின கீழ், காசநோய்ப் புண்கள் காரணமாகத தோலில் ஏற்படும் நைவுப்புண்.*

scrotum . அண்டகோசம்; விரைப் பை . *ஆண்களின் விரைப்பை.*

scuff : பிடரி : *கழுத்தின பின்புறம்.*

scurf: பொடுகு: *தோல் பொருக்கு; உதிர்தொலி, கழிதோல்; வங்கு, மேறபுறச் செதிள.*

scurvy : எகிர் வீக்கம் : *வைட்டமின்-C உயிர்ச் சத்துப் பற்றாக் குறை காரணமாக ஏற்படும் சொறி கரப்பான், பல் எகிர் வீக்க நோய் இதனால் சோர்வும் பல்லில் குருதிக் கசிவும் உண்டாகும்.*

scurvy-grass: எகிர்வீக்க மருந்துச் செடி : *வைட்டமின்-C உயிரச் சத்துக் குறைபாட்டினால் உண்டாகும் எகிர்வீக்கக் கோளாறைக் குணப்படுத்தும் கடுகுக் குடுமபச் செடி.*

scutum: முட்டுச் சில்லு; ஒட்டுண்ணிகளின் *மேல்புறக கவசததோடு.*

sebaceous : கொழுப்பு சார்ந்த; சர்ம மெழுகு.

sebaceous cyst : எண்ணெய்ச் சுரப்பி அடைப்பு · *தோலிலுள்ள எண்ணெய் சுரக்கும் சுரப்பி அடைபடுதல்.*

sebaceous duct : மயிர்ப்பை எண்ணெய்க் குழாய்.

sebaceous follicle: மயிர் மூட்டுப் பை.

sebaceous gland, மயிர்ப்பை எண்ணெய்ச் சுரப்பி; சாம மெழுகு சுரபபி.

sebaceous humour : மயிர்ப்பை நெய்மம்.

seborrhoea: உச்சித் தோல் நெய்ப் பசை; மயிரடிச் சுரப்பு மிகைப்பு; மெழுகு ஊறல் . *மயிர்க்கால் எணணெயச் சுரப்பிகள அளவுக்கு அதிகமாகச் சுரப்பதால் உசசி வட்டக் குடுமித் தோலில் உண்டாகும் நெய்ப்பசை*

sebum : மயிாககால் எண்ணெய்; நெய்யம்; சர்ம மெழுகு: *மயிர்க்கால் எணணெய்ச சுரபபிகளில் இயறகையாகச் சுரக்கும் எணணெய். இதில் கொழுப்பு அமிலங்கள், கொழுப்பு. இறநத உயிரணுக்கள அடஙகியிருக்கும.*

secondary sypphilis : இரண்டாம் நிலைக் கிரந்தி.

secondary immunisation : மறுமுறை நோய்த் தடுப்பு.

secretin : முன் சிறுகுடல் சுரப்பு நீர்: முன சிறுகுடல் சவ்வுப் படலத்தில் சுரக்கும் ஓர் இயக்குநீர்(ஹார்மோன்). இது கணையநீர் பெருமளவு சுரக்கத் தூண்டுகிறது.

secretion : சுரப்பு நீர்; சுரத்தல் : உடலிலுளள ஒரு சுரப்பியில் சுரந்து, உணவுக குழாய்க்கு அல்லது இரத்தத்திறகு அல்லது புறத்தே செல்லும் நீர்மப் பொருள்.

secretory : சுரப்பித்தல் : ஒரு சுரப்பி, சுரப்பு நீரை சுரப்பிக்கும் செயல்.

sedation : சமனப்படுத்துதல்; அமைதியூட்டல் : உணாசசியைச சமனப்படுத்துதல்.

sedative : சமன மருந்து; அமைதியூட்டி. உணர்ச்சியைச் சமனப் படுத்தும் மருந்து; நோவகற்றும் மருந்து.

sediment : படிவு / மண்டி/ வண்டல்.

sedimentation rate : படிவு வேகம் : இரத்தச் சிவப்பணுக்கள் படிவுறும் வேகம்

segregation : தனிமைப்படுத்துதல்; பிரித்தல; ஒதுககம் : மரபணுவியலில், இணை இனககீற்றுகளை ஒன்றிலிருநது ஒனறைப் பிரித்து வைத்தல். கருமுனை அணுக்களின அணு இயகக மாற்றத்தினபோது இவ்வாறு செய்யப்படுகிறது.

selenomethionine : செலனோ மெத்தியோனைன்: அமினோ அமில மெததியோனைனில் இருககும் கந்தக அணுவுக்குப் பதிலாகக் கதிரியக்கச் செலினியத்தை மாற்றி வைக்கும் ஒரு ஊசி மருந்து. இது கணைய நோய்களைக் கண்டறியப் பயன்படுகிறது.

self-infection : தன்னோய் இழைப்பு; தன்னோய் தொற்றல் : உடலின் ஒரு பகுதியிலிருநது இனனொரு பகுதிக்கு நுணணுயிரிகளைத் தன்னையறியாமல் மாற்றுதல். இதனால் மற்ற பகுதியில் நோய் உணடாகும்.

sella turcica : கபச் சுரப்பிக் குழி

semen : விந்து (ஆண்கரு); விந்து நீர் : விந்துப் பைகளிலிருநது சுரக்கும் விந்து நீர். இதில் பெண்கரு முட்டைககுப் பொலிவூட்டும் விந்தணு உள்ளது.

semicircular canals : அரை வட்டக் குழல்கள் : உட்செவி வளையுறுப்புகள்.

semicoma : அரைகுறைச் சன்னி மயக்கம்; அரை நினைவு.

semicomatose : அரைகுறைச் சன்னி மயக்குமுள்ள; மயக்குறும் நிலை : அரை மயக்கம் அல்லது அரை நினைவு மயக்கத்திலிருக்கும் நிலை.

seminal : விந்து சார்ந்த : விந்து தொடர்புடைய. விதை போன்ற.

seminiferous : விந்து கொண்டு செல்கிற; விந்து நுண் குழல்கள்; விநதேந்தி : விந்தினை உணடாக்குகிற; ஆணின் கருவைக் கொண்டு செல்லுகிற.

seminoma : விரைக் கட்டி; விரைப் புற்றுக் கட்டி : விரையில ஏறபடும உககிரமான கட்டி.

semiology (semiotics) , நோய்க் குறியியல் : நோய்க் குறிகளை ஆராயும் அறிவியல்.

semipermeable : நீர்புகும் சவ்வு; நீர் ஊடுருவும் சவ்வு : கரைசலில் கரைபொருள் புகவிடாமல் கரைநீர்மம் மட்டும் புகவிடுகிற சவ்வு.

senescence : மூப்படைதல்; முதுமைக கூர்வு, முதுமை : வயது முதிரும்போது உடலிலும் உள்ளத்

திலும் இயல்பாக ஏற்படும் மாறு தல்கள். கிழத்தன்மையுறுதல்.

senile : முதுமைத் தளர்ச்சி; மூப்பு : வயது சென்றதன் காரணமாக ஏற்படும் முதுமைத் தளர்ச்சி.

senility : முதுமை : முதுமைத் தளர்வு. கிழத்தன்மை.

senna : நிலவாவிரை (சென்னா) : மலமிளக்கி (பேதி) மருந்தாகப் பயன்படுத்தப்படும் நிலவாவிரை என்னும் செடி இனம். இதன இலைகளும் நெற்றுகளும் பேதி மருந்தாக இந்தியாவிலும், எகிப்திலும் பயன்படுத்தப்பட்டன.

Senokot : செனோக்கோட் : தரப்படுத்திய நிலவாவிரை (சென்னா) மருந்தின வாணிகப் பெயர்.

sensible : புலனுணர்வு; புலனறி; புலனாகு : புலனகளால் உணரக் கூடிய தன்மை. உணர்வுள்ள.

sensitivity : உணர்ச்சித் திறன்; கூருணர்வு : மிகு உணர்வு. உணர்ச்சித தன்மை; துச்ச உணர்வு.

sensitization : கூருணர்ச்சிப்பாடு : உணவு, பாக்டீரியா, தாவரங்கள், வேதியியல் பொருள்கள், மருந்துகள், ஊனீர் முதலியவற்றுக்கு ஒருவர் கூருணர்வுடையவராக இருக்கும்படி செய்தல்.

sensorineural : உணர்ச்சி நரம்பணு : உணர்ச்சி நரம்பணுக்கள் தொடர்புடையது. உணர்ச்சி நரம்பணுச் செவிடு என்பது நரம்புச் செவிடு எனப்படும்.

sensory: உணர்ச்சி சார்ந்த (நரம்பு) மூளைக்கும் முதுகந்தண்டுககும் தூண்டல்களைக் கொண்டு செல்லும் நரம்புகள்.

sensory (sensorial) : உணர்ச்சி மண்டலம் சார்ந்த; புலன் சார்; உணர் : உணர்வு மண்டலம் தொடர்புடைய; மூளை பற்றிய; புலன்கள் சார்ந்த.

sensory nerve : உணர்ச்சி நரம்பு; உணர் நரம்பு; புலன்சார் நரம்பு.

sentiment : உணர்ச்சி ஆர்வம்; பாச உணர்வு : சில ஆட்கள் அல்லது பொருள்களின்மீது உள்ள உணர்ச்சிபூர்வமான பற்றார்வம். இது சுற்றுச்சூழல் அனுபவத்தால் அதிகமாகிறது.

sepsis ; சீழ்த் தொற்று; குருதியில் நுண்ணுயிர் நஞ்சேறுதல். சீழ்ப் பிடிப்பு; சீழ்மை : காயத்தில் சீழ் உண்டாக்கும் உயிரிகளினால் ஏற்படும் சீழ் நச்சு.

septal abcess : பிரிப்புச் சுவர்க் கட்டி; இடைச் சுவர்க்கட்டி.

septan : வார (காய்ச்சல்) : ஏழு நாட்களுக்கு ஒருமுறை (வருகிற காய்ச்சல்)

septic : நச்சூட்டுப் பொருள்; நுண்ணுயிர் மடிவு : அழுகச் செய்யும ஊறு நச்சு.

septic tank : நச்சுத் தடை மலக் குழி; அழுகு தொட்டி.

septicaemia : குருதி நச்சூட்டு : குருதியோட்டத்தில் உயிர் வாழும் நோய்க் கிருமிகள் பெருக்கமடைதல்.

septum : பிரிப்புச் சுவர்; இடைத் தடுப்பு; பிரிதிசை; இடைச்சுவர்; தடுப்பு : உறுப்பிடைத் தடுக்கு. எ-டு: மூக்கின இருதுளைகளின் இடைப்பகுதி.

sequela : நோய்ப் பின் தளர்ச்சி; நோய்த் தாக்கல் பின் விளைவு : நோயின் பின் விளைவாக உண்டாகும் தளர்ச்சி நிலை. எ-டு: அம்மை நோயினால் ஏற்படும் தழும்பு.

sequestrectomy : இற்ற எலும்பு அறுவை; ஒதுக்கெடுப்பு : எலும்புக் கூட்டுத் தொடர்பற்று இற்றுப்

போன எலும்பினை வெட்டியெடுத்தல்.

sequestrum : இற்ற எலும்பு; மடிந்த எலும்புத் துண்டு; ஒதுக்க எலும்பு; துண்டெலும்பு : எலும்புக் கூட்டுடன் தொடர்பற்று இற்றுப் போன எலும்பு.

sero-diagnosis : குருதி வடிநீர் நோய் ஆய்வு : குருதி வடிநீரைக் கொண்டு நோயைக் கண்டறிதல்.

serology : குருதி வடிநீரியல்; ஊனீரியல் : குருதி வடிநீர்களை ஆராயும் அறிவியல்.

seropurulent: ஊனீர் சீழ் சார்ந்த: ஊனீரும சீழும் உடைய.

serosa : ஊனீர்ச் சவ்வு : அடிவயிற்று உள்ளுறுப்புகளை மூடியிருக்கும் வபைச் சவ்வு.

serositis : ஊனீர்ச் சவ்வு அழற்சி; சவ்வுப்படல அழற்சி : ஊனீர்ச் சவ்வில் ஏற்படும் வீககம்.

scrotum : விந்துச் சுரப்பி தாங்கி.

serous : ஊனீர் சார்ந்த; சவ்வுப் படலம்.

serous membrane : ஊனீர்ச் சவ்வு : உள்ளுறுப்புகளின் உள்வரியாகப் பொதிந்துள்ள ஊனீர் தோய்ந்த மெல்லிய சவ்வு.

serpiginous : பாம்புப் படை : பாம்புபோல் சுருள்சுருளாகப் படரும் படைச்சுற்று நோய்

serpigo : படை : படர் நோய்.

seratia : செராஷியா : மனிதர்களுக்கு நோய் உணடாக்கக் கூடிய கிராம் சாயம் எடுக்காத ஒருவகை நோய் நுண்மம். இது மருத்துவ மனைகளில மிகுதியாக இருக்கும்.

serum . குருதி வடிநீர்; ஊனீர்; வடிநீர்; குருதி நீர் : உடலில உணவிலிருந்து ஊறும் கொழுப்பு கலந்த வெள்ளை ஊனீர்; நோயைக் குணப்படுத்தும் பொருளாகப் பயன்படுத்தப்படும் விலங்கின் குருதி நிணநீர்.

serum lipids : குருதிக் கொழுப்புகள்.

serum sickness : கொப்புளக் காய்ச்சல் : நிணநீர் ஊசியால் ஏற்படும் கொப்புளக் காய்ச்சல்.

sex : பாலினம் ; பால் வேறுபாடு : ஆண்பெண் வேறுபாடு.

sex antagonism : பால் வேறுபாட்டு முரண.

sex appeal : இனக்கவர்ச்சி. பால் வேறுபாட்டுக் கவர்ச்சி; பெண் பாலாரின் கவர்ச்சி.

sex instinct : பாலுணர்வு : பால் இயல்லூகம்.

sex urge : பாலுணர்ச்சி வேகம் : இணை விழைச்சு எழுச்சி.

sex linked : பாலின மரபணுக்கள் : பாலின இனக்கீற்றுகளில் அல்லது குறிப்பாக எக்ஸ் இனக்கீற்றுகளில் (குரோமோசோம்) காணப்படும் மரபணுக்களைக் குறிக்கிறது. இவை இப்போது எக்ஸ்-இனக் கீற்றுகள் எனப்படுகின்றன.

sexual reproduction : கலவி இனப்பெருக்கம்; பால் சார் இனப் பெருக்கம் : ஆண் பெண் கலவி மூலம உண்டாகும் இனப்பெருக்கம்.

sexually transmitted disease ; பாலுறவு நோய்கள : பாலுறவு மூலம் பரவும் நோய்கள். முன்பு இவை மேக நோய்கள் என அழைக்கப்பட்டன.

sham feeding : புறப்பாலூட்டல்.

shearing force : உராய்வு சக்தி : தாங்கப்படும உடலின் பகுதி எதுவும், சாய்வாக இருக்குமானால், எலும்பின் அருகிலுள்ள ஆழமான திசுக்கள் தாழ்ந்த சரிவை நோக்கி நகர்கின்றன. அதே சமயம்,

உராய்வு காரணமாகத் தாங்கப்படும் பரப்புடன் தோல் தொடர்ந்து தொடர்புடையதாக இருக்கும். இந்த உராய்வு ஈரம் காரணமாக அதிகரிக்கிறது. இரத்த நாளங்கள் நீட்டப்பட்டு கோண வடிவமாகின்றன. இதனால், ஆழமான திசுக்கள் நலிந்து, இழைம அழுகல் ஏற்படுகிறது.

sheepskin: மயிர்க் கம்பளி: அழுத்தப் புண்கள் ஏற்படாமல் தடுப்பதற்காக இயற்கையான அல்லது செயற்கையான மயிர்க் கம்பளிகள் பயன்படுத்தப்படுகின்றன. நோயாளி படுதத படுக்கையாக அல்லது நாற்காலியில் சாய்ந்து இருக்கும்போது இந்தக் கம்பளிகள் அழுத்தந் தாங்கும பகுதிகளில் பரப்பி வைக்கப்படுகின்றன.

shelf operation : பந்துக்கிண்ண மூட்டு அறுவை : பிறவியில் உண்டாகும் இடுப்பு மூட்டுப் பெயர்வில் தொடை எலும்பின் பந்துக் கிண்ண மூட்டு பொருந்துகிற குழியில் செய்யப்படும் அறுவை மருத்துவம். 7-8 ஆண்டுக் காலச் சிகிச்சை பலனளிக்காதபோது, இது செய்யப்படுகிறது.

shiatsu : ஷியாட்சு : மனிதத் தோலில் உட்புறமாக ஏற்படும் தவறான இயக்கத்தைச் சீர்படுத்துவதற்காகவும், குறிப்பிட்ட திசுக்களின் ஆரோக்கியத்தைப் பேணிக் குணப்படுத்துவதற்காகவும், கருவிகள் ஏதுமின்றி, பெருவிரல்கள், விரல்கள், உள்ளங்கை மூலம் செய்யும் கைவினை மருத்துவம்.

shigella : ஷிகெல்லா : சீதபேதி விளைவிக்கும் சில நுண்ணுயிரிகள் அடங்கிய பாக்டீரியா வகை. கிராம் சாயம் எடுககாத உருண்டைக் கிருமி. சீதபேதியைக் கொள்ளை நோயாகப் பரப்பும் கிருமிகளில் முக்கியமானது. இது உணவு, நீர்மூலம் பரவுகிறது.

shin bone : முழங்கால் எலும்பு; கணைக்கால் எலும்பு : முன்கால் எலும்பின் மைய எலும்பு.

shingles : அரையாப்பு : இடுப்பைச் சுற்றிலும், உடம்பிலும் பயற்றம் பருப்பு அளவில் மென் குருக்களை அள்ளி இறைக்கும் நோய். நோய்க் கிருமி உணர்ச்சி நரம்புகளைத் தாக்குவதால் கடும் வலியுடன் இது உண்டாகிறது.

shock : அதிர்ச்சி ; கடுமையான காயம் அலலது நோய் காரண மாக உண்டாகும் இரதத வோட்டச் சீர்குலைவினால் ஏற்படும் நிலை. இரத்தத்தின் அளவு திடீரெனக் குறைவதால் இது உண்டாகிறது. இரத்த அழுத்தம் வீழ்ச்சியடைதல, நாடித் துடிப்பு அதிகரித்தல், பதற்றமடைதல், தாகமெடுததல், தோல் குளிர்ச்சியடைதல் இதன் அறிகுறிகள்.

shoulder girdle : தோள்பட்டை[1] தோல் வளையம் : ஒருபுறம் கழுத்துப் பட்டைக்கும் இன்னொரு புறம் தோள்பட்டை மேற்கை இணைப்புக்கும் இடைப்பட்ட பகுதி.

show : பனிக்குடம் உடைதல் : பிள்ளைப் பேறுக்கு முன்பு ஏற்படும் நீர்க் கசிவு

shunt : தடமாற்றம் : இரத்தம் வழக்கமான பாதையில் செல்லாமல் தடம் மாறிச் செல்தல்.

sialagogue : உமிழ்நீர் பெருக்கி; உமிழ் நீர் ஊக்கி : உமிழ் நீர் சுரப்பதை அதிகரிக்கும் மருந்து.

sialogram : உமிழ்நீர்ச் சுரப்பிப் படம் : உமிழ் நீர்ச சுரப்பிகள், நாளங்கள் ஆகியவற்றின ஊடுகதிர்ப்படம.

sialolith . உமிழ் நீர்ச் சுரப்பிக் கல்; உமிழ் நீர்க் குழாய்க் கல் : உமிழ் நீர்ச சுரப்பிகளில் அல்லது நாளங்களில் ஏற்படும் கல்.

SIB : **தற்காய நடத்தை** : தனக்குத் தானே காயம் உண்டாக்கிக் கொள்ளும் நடததை முறை.

sibling : **ஒரு தாய மக்கள்; உடன் பிறப்பு'** ஒரே தாய் தந்தையருக்குப் பிறநதவர்களில் ஒருவர்

sickle-cell : **அரிவாள் உயிரணு.**

side effect · **பக்க விளைவு** : மருந்து கொடுப்பதால விரும்பிய மாறுதலுக்கு மாறாக வேறு உடலியல் மாறுதல் ஏற்படுதல். எடுத்துக்காட்டாகத தசைச் சுரிப்புக் கோளாறுக்கு எதிரான புரோபபெந்தலின என்ற மருந்தினால், சில நோயாளிகளுக்கு வாய் உலர்தல் என்ற பக்க விளைவு உணடாகிறது. மருந்துகளினால் ஏற்படும் விரும்பத்தகாத விளைவுகளையும் இது குறிக்கும. சில மருநதுகளின பக்க விளைவுகள் ஊகிததறியக் கூடியவை. எ-டு: மெப்பாக்ரின் என்ற மருந்தினால், தோலும் கண்களும் மஞசளாகும்; சைக்ளோபாஸ்ஃபாமைடினால் தலைமுடி கொட்டும்.

siderosis : **மிகைக் குருதி அயம்; இரும்பேற்றம்** : இரத்ததத்தில் அலலது திசுக்களில அயச் சத்து (இரும்பு) அளவுக்கு அதிகமாக இருத்தல். அய ஆக்சைடு நுரையீரலுக்குள் செல்வதால் நுரையீரல் அழற்சி உண்டாகிறது.

sigmoid : **'எஸ்' எழுத்து வளைவு; 'S' உரு; இரட்டை வளைவுரு; நெளிகுடல்.** 'S' என்ற ஆங்கில எழுத்துப் போல் வளைந்துள்ள வடிவம்.



நெளிகுடல்

sigmoidoscope : **வளைவுப் பார்வைக் கருவி; வளை குடல நோககி; நெளி உட்காட்டி** : மலக்குடலையும் பெருங்குடலின 'S' வளைவுப் பகுதியையும் கண்ணால் பார்ப்பதற்கு உதவும் கருவி.

sigmoidostomy : **குத அறுவை; வளைகுடல் திறப்பு; குதவாயமைப்பு** : பெருஙகுடலின 'S' வளைவுப் பகுதியின் இறுதியில் கீறிச் செயற்கைக் குதம் உணடாக்குதல்.

sign : **நோய்க்குறி; தடையம்; அறிகுறி** : ஒரு நோய் பீடிததிருப்பதை குறிக்கும் வெளிப்படையான அறிகுறி.

silicone : **சிலிக்கோன்** : நீர்மீது ஒட்டும் தன்மையில்லா ஒரு கரிமக் கூட்டுப் பொருள்.

silicosis : **நுரையீரல் தூசு அழற்சி**: உலோக அரைவை, கலவுடைப்பு போனற தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு தூசி காரணமாக உண்டாகும் நுரையீரல் அழற்சி.

silver nitrate : **வெள்ளி நைட்ரேட் (சில்வர் நைட்ரேட்)** : பாலுண்ணிகளுக்கு எதிராகப் பயன்படுத்தப் படும் சிறிய குச்சி வடிவ மருந்து. சிலசமயம், கண்சொட்டு மருந்தாகவும் பயன்படுத்தப்படுகிறது. காயங்களில் பாகடீரியா புணகள் ஏற்படாமல் தடுக்க 0.5% கரைசலாகவும் பயன்படுகிறது.

sinew : **தசைநாண்; தசைக்கட்டு** ; தசைநார்களை எலும்புடன் இணைக்கும் இழைமம்.

sinus : **எலும்பு உட்புழை; குழிப்பை; குழிவு புழை** : மூக்கின் குறுகிய உட்புழைமூகஎலும்புகளின் உள்ளறை.

sinusitis : **காற்றறை அழற்சி; நெற்றி எலும்புப்புழை அழற்சி; எலும்புக் காற்றறை அழற்சி** : மூளையின மூக்கிணை எலும்புப் புழையழற்சி கோளாறு.

sitz-bath : **இடுப்புக் குளியல்**

sjogren syndrome : சுரப்பு நீர்க் குறைபாடு : *கண்ணீர்ச் சுரப்பிகள் உமிழ் நீர்க் சுரப்பிகள் போன்ற சுரப்பிகளில் சுரப்பு நீர் குறைவாக சுரத்தல். பெண்களுக்கு மாத விடாய் நின்றபின் இது ஏற்படு கிறது. இதனால், இமையிணைப் படல அழற்சி, நாக்கு உலர்தல், குரல் கரகரத்தல் போன்றவை இதன் அறிகுறிகள்.*

skeleton : எலும்புக்கூடு : இறந்த உடலின் தோல், தசை நீங்கிய எலும்பு உருவம்.



எலும்புக் கூடு

skene's glands· மூத்திரக் குழாய்ச்சுரப்பிகள்: பெண்ணின் மூத திர ஒழுக்குக் குழா யின் வாயி லிலுள்ள இரு சிறிய சுரப்பிகள்.

skull : மண்டை யோடு; கபாலம்; மண்டைக் கூடு: தலை யின எலும்புக் கட் டமைப்பு; தலையோடு.

skin : தோல்; சருமம் : உடலைப் போர்த்தியுள்ள மெல்லிய தோல் படலம் இது முக்கியமாக இரு படு கைகளை உடையது (1) மேற் படுகையாக அமைந்துள்ள மேல் தோல் (epidermis) 2. அடித்தோல்

தோல்

(dermis). இது தோலின் அடிப்பகுதி இது மெய்த்தோல் எனப்படும்.

sleep : உறக்கம்; தூக்கம்; துயில் : *மனிதருக்கு 24 மணி நேரச் சுழற்சி யில் ஏற்படும் துயில் நிலை. ஓர் உறக்கச் சுழற்சியில், நடப்புமுறை உறக்கமும், முரண் துயிலும் அடங் கும். இவை ஒவ்வொன்றும் ஏறத் தாழ 60-90 நிமிடம் நீடிக்கும். ஒரு வன் முழு ஓய்வு பெற்று நலன் பெறுவதற்கு இந்த இருவகை உறக்க நிலைகளும் முழுமை பெற வேணடும்.*

sleeplessness (insomnia) : உறக்கமின்மை.

sleepiness : உறக்கக் கலக்கம்.

sleeping draught : உறக்க மருந்து : *தூக்கத்தைத் தூண்டும் குடி நீர்மம்.*

sleeping sickness : உறக்க நோய் : ஆஃப்ரிக்காவில் பரவலாக நிலவும் ஒரு கொடிய நோய். ஒரு

வகைக் ஈ கடியினால் ஏற்படும். நச்சு மூளையைப் பாதிப்பதால் இந்நோய் உண்டாகிறது.

sleep walking : உறக்கத்தில் நடத்தல்; துயில்நடை: உறக்கத்தில் நடக்கும் கோளாறு.

slipped disc : வட்டச் சில்லுச் சரிவு : இடைத் தண்டெலும்பு வட்டச் சில்லு சரிந்திருத்தல்.

slough : தோல் பொருக்கு; அசுறு; அழுகல் படலம்; அழுகு தோல் : சட்டைபோன்று கழன்று உதிர்ந்து விழும் மேலுரிப் போக்கு.

slow release drugs : தாமத மருந்துகள் : இரைப்பையில் கரையாமல், சிறுகுடலில் சிறிதுசிறிதாக விடுவிக்கப்பட்டு ஈர்த்துக் கொள்ளப்படும் மருந்து வகை. சில மருந்துகள் இப்போது அடித்தோல் வழியில் இணைக்கப்படுகின்றன; அங்கு அவை மெல்ல மெல்ல விடுவிக்கப்படும்.

slow virus : தாமத வைரஸ் கிருமி: நீண்ட நாட்களுக்குப் பிறகு நோய்க் குறிகளைத் தோற்றுவிக்கும் நோய்க் கிருமி. இவை வெளிப்படையாக நோய்க் குறிகளைக் காட்டாவிட்டாலும், உள்ளுக்குள் நோய்த் தொற்றுக்கு வேலை செய்து கொண்டிருக்கும்.

small intestines : சிறுகுடல்.

small pox : பெரியம்மை/வைசூரி: ஒருவித வைரஸ் நோய்கிருமியினால் ஏற்படும் நோய். ஓர் உலகளாவிய இயக்கத்தின் மூலம் இது ஒழிக்கப்பட்டது.

SMBG : குருதிச் சர்க்கரைத் தற்கணிப்பு : இரத்தத்திலுள்ள சர்க்கரையின் அளவைத தானே கணக்கிட்டறிதல்.

smegma : மாணி நுதிக் கசிவு; மாணித் தோல் சுரப்பு: ஆண்குறி மெழுகு : மாணி நுதித் தோல் மடிப்பிடைக் களிக் கசிவு.

smelling salts : முகர்வு உப்புகள்: நவச்சாரம் (அமோனியா) கலந்த முகர்வு உப்பு மருந்து.

smokers blindness : புகை பிடிப்போர் குருட்டுத்தன்மை : புகைபிடிப்போர்புகை நிக்கோட்டினிலுள்ள சயனைடு நஞ்சினை உட்கொள்வதால் உண்டாகும் பார்வை இழப்பு. சயனைடு வைட்டமின் B_{12} உயிர்ச் சத்தினை ஈர்ப்பதைத் தடுத்து நிறப் பார்வையை மங்கச் செய்கிறது.

snare : கழலைக் கண்ணி; பொறி : கழலை அறுவை மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் கண்ணியிட்டு பிடித்துக் கொள்ளக் கூடிய கண்ணில் பொறி.

snow : பனி; திட கார்பன்டையாக்சைடு : சிறிய அறுவை மருத்துவத்தில் திசுக்களை உறுப்பெல்லைக்குள் உறையச் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் திடநிலை கார்பன்டையாக்சைடு.

snuffles : மூக்குறிஞ்சல்; மூக்கொழுக்கு : மூக்குச் சளிச் சவ்வு அடைப்பினால் ஏற்படும் மூக்குறிஞ்சும் உணர்வு. அப்போது மூக்கிலிருந்து வடியும் சளியில் சீழ் அல்லது இரத்தம் கலந்திருக்குமானால் அது பிறவிக் கிரந்தி நோயின் அறிகுறியாகஇருக்கலாம்.

sociology : சமூகவியல் : மனித சமுதாயத்தின் வளர்ச்சி, இயல்பு, சட்டங்கள் ஆகியவைபற்றி ஆராயும் அறிவியல்.

sociomedical : சமூக மருத்துவவியல்; சமுதாய மருத்துவம் : மருத்துவத்தினால் ஏற்படும் சமூகப் பாதிப்புகள் பற்றிய சிக்கல்களை ஆராய்தல்.

sodium acid phosphate : சோடியம் அமில பாஸ்ஃபேட் : உப்புப் பேதி மருந்து; சிறுநீர்க்கழிவினைத் தூண்டக் கூடியது.

sodium benzoate : சோடியம்

பென்சோயேட் : அமிலமாக்கக் கூடிய சிறுநீர்க் கழிவினை ஊக்குவிக்கக் கூடிய மருந்து.

sodium bicarbonate : சோடியம் பைக்கார்பனேட் : வயிற்றுப்புளிப்பு அகற்ற வீட்டில் சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் மருந்து நெஞ்செரிச்சலுக்கும் இது பயன்படுகிறது.

sodium chloride : சோடியம் குளோரைடு (சாதாரண உப்பு) : உடல் திசுவில் கலந்திருக்கும் உப்பு அதிர்ச்சியின்போதும், நீர்ம இழப்பின்போதும், இரத்தஅழுத்த குறைவுக் காரணமாக நரம்பு வழியாகச் செலுத்தப்படுகிறது. உப்பு இழப்பு அதிகமாகஏற்படும் அடிசன் நோயினபோதுவாய்வழிகொடுக்கப்படும்

sodium citrate : சோடியம் சிட்ரேட் : காரத் தனமையுடைய சிறுநீர்க் கழிவைத் தூண்டக் கூடிய மருந்து. சேமித்து வைக்கப்படும் இரத்தம் உறையாமலிருப்பதற்கும் இது பயன்படுத்தப்படுகிறது. பாலுணவுகள் கெட்டியாகாமல் தடுப்பதற்கு இது பயன்படுகிறது.

sodium cromoglycate: சோடியம் குரோமோகிளைகேட் : ஈளை நோய்க்கு (ஆஸ்துமா) எதிராகப் பயன்படுததப்படும் உறிஞ்சு மருந்து.

sodium iodide : சோடியம் அயோடின் : இருமல் மருந்தாக அரிதாகப் பயன்படுத்தப்படும மருந்து.

sodium perborate ; சோடியம் பெர்போரேட் : நோய் நுண்மத் தடைப் பண்புகள் கொண்ட நீர்க் கரைசல் மருந்து. வாய் கழுவு மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

sodium picosulphate : சோடிய பிக்கோசல்ஃபேட் : ஒரு பேதி மருந்து.

sodium propionate : சோடியம் புரோப்பியோனேட் : பூஞ்சண நோய்களில் காளான் கொல்லியாகப் பயன்படும் மருந்து. இது களிம்பாகவும், கூழாகவும், கழுவுநீர்மமாகவும், கரையும் மருந்தாகவும் கிடைக்கிறது.

sodium sulphate : சோடியம் சல்ஃபேட் : வீடுகளில் பெருமளவில் பயன்படுத்தப்படும் பேதி மருந்து. இதன் 25% கரைசல் காயங்களைக் கழுவப் பயன்படுகிறது. சிறுநீர்ச் சுரப்பின்மையின்போது இதன் 4.3% கரைசல் நரம்புவழி செலுத்தப்படுகிறது

sodium tetra decyl sulphate : சோடியம் டெட்ராடெசில் சல்ஃபேட் : இழைமக் காழ்ப்புக் கோளாறின் போது ஊசி மருந்தாகக் கொடுக்கப்படும் திரவ மருந்து.

sodium valproate : சோடியம் வாலபுரோயேட் : வலிப்பு நீக்கும் மருந்து.

soft sore : கிரந்திச் சீழ்ப்புண்; மேகப்புண்; மென் கிரந்தி: தொற்று மூலம் உண்டாகும் கிரந்தி நோயின்போது பிறப்புறுப்புகளில் ஏற்படும் தொடக்க நிலைச் சீழ்ப்புண்

solar plexus : உந்தி நரம்பு முடிச்சு வலை; மேல் வயிற்று வலை : அடிவயிற்று உறுப்புகளில் ஒரு குண்டிக்காய்ச் சுரப்பியிலிருந்து இன்னொன்றுக்குச் செல்லும் பரிவு நரம்புகள், இழைமங்கள் ஆகியவற்றின் வலைப்பின்னல் அமைப்பு.

solpadeine : சோல்பாடைன் : கோடைன், காரஃபீன ஆகியவற்றுடன் கூடிய, கரையக் கூடிய பாராசிட்டாமால் என்ற மாத்திரைகளின் வாணிகப் பெயர்.

solute : கரைவம்; கரை பொருள் : ஒரு கரைசலில் கரைந்துள்ள பொருள்.

solution : கரைசல் : ஒரு கரைபொருளைக் கொண்டுள்ள ஒரு

திரவம். பூரிதக் கரைசல் என்பது. ஒரு திரவத்தில் ஒரு பொருள் எவ்வளவு அதிகமாகக் கரையக் கூடுமோ அவ்வளவு கரைந்துள்ள திரவமாகும். ஒரு கரைசல் பூரிதமடைந்தபின் அதில் கரைபொருள் அதற்கு மேல் கரையாது.

solvent : கரைமம் (கரைப்பி); கரைப்பான் : மற்றப் பொருள்களை (கரைவம்) கரைக்கும் ஆற்றலுள்ள நீர்மம்.

somatic : உடல் சார்ந்த : உடற்கூறு தொடர்புடைய.

somatic death ; உடம்பழிவு.

somatogenic . உடலில தோன்றுகிற : உடம்பில் பிறக்கும் இயலபுடைய. உடலால் உதிக்கும்.

somatology : உடலுயிரியல் : உயிருள்ள உடலைப் பற்றி ஆராயும் அறிவியல்; உடல் உள்ளுறுப்பியல்.

somnambulance : உறக்க நடை நோய்; துயில் நடை நோய் : தூக்கத்தில் நடக்கும் மூளைக் கோளாறு.

somnambulant : உறக்க நடையர்: உறக்கத்தில் நடக்கும் கோளாறுடையவர்

somnambulism : உறக்கத்தில் நடத்தல்

somnambulist : உறக்க நடை/துயில் இயக்கம்; தூக்க நடையர் : உறககத்தில் நடக்கும் இயலபு; உறக்கத்தில் இயங்கத தூண்டும் மூளை நிலை.

somniloquence(somniloquism): உறக்கப் பேச்சு : உறக்கத்தில் பேசும பழக்கம்.

somnipathist : துயில் வசியமானவர் : துயில் வசியத்திற்கு உள்ளானவர்.

somnolence (somnolency) : உறக்க மயக்கம் : தூக்க மயக்க நிலை; உறக்கச் சடைவு.

somnolent : அரிதுயில் நிலையான : விழிப்பு நிலைக்கும் உறக்க நிலைக்கும் இடைப்பட்ட நிலையிலுள்ள.

somnolescend : அரைத் துயில் நிலையான.

somnolism : வசியத் துயில் நிலை.

Soneryl : சோனரில் : பூட்டோபார்பிட்டோன என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

Sonicaid : சோனிக்காய்டு ; பூட்டோபாாபிட்டோன் என்ற மருந்தின் வாணிகப் பெயர்.

sonograph: ஒலியலை வரைபடம்; ஒலி வரைபடம் : ஒலியலைகளை வரைபடமாகப் பதிவு செய்தல்.

sonometer : ஒலிமானி : செவிப் புல உணர்வுமானி.

soporific : ஆழ் உறக்க மருந்து; ஆழ்நிலைத் தூக்க ஊக்கி; உறக்க மூட்டி : ஆழ்ந்த உறக்கத்தைத் தூணடுகிற ஒரு மருந்து.

sorbide nitrate : சோர்பைடு நைட்ரேட் : தொண்டை வீக்கத்தில் தாங்கும் திறனை அதிகரிக்கும் மருந்து.

sorbitol; சோர்பிட்டோல்: குழந்தைகளுக்கு ஊட்ட இயற்கையில பழங்களிலிருந்து தயாரிக்கப்படும் சர்க்கரைப் பொருள்.

sordes : வாய்ப் பொருக்கு : நோயினபோது வாயில், முக்கியமாக உதடுகளில ஏற்படும் உலர்ந்த பழுப்பு நிறப் பொருக்கு.

sotalol : சோட்டாலோல் : மட்டு மீறிய இரத்த அழுத்தத்திற்கு எதிரான மருந்து.

souffle : நாடியொலி: நாடி அதிர்வொலி, நாடி மொருமொருப்பு. கருக்குழந்தையின் முணுமுணுபபினால் இது உண்டாசலாம். கருவுற்ற நானகாம் மாததநிலிருந்து இது ஏற்படலாம்

sound : புண் ஆய்வுக் கருவி : ஒலி யுண்டாக்கும் கருவியில் ஏற்படும் அதிர்வுகள் குழிப்புண்ணை ஆய்வ தற்கான ஒரு சாதனம்.

source isolation : மூலத் தனிமை யாக்கம் : நோய்களை மற்றவர் களுக்குப் பரப்பக் கூடிய நுண் ணுயிரிகளின் ஊற்றுக் கணகள் எனக் கருதப்படும் நோயாளிகளை, அவர்களமூலம் அபாயகரமான நோய்கள் பரவாமல் தடுப்பதற் காகத் தனிமைப்படுத்தி வைத்தல்.

soya bean : சோயா மொச்சை; சோயா அவரை : ஆசிய நாடுகளில் இறைச்சிக்குப் பதிலாகப் பயன் படுத்தப்படும் மிகவும் ஊட்டச் சத்து வாய்ந்த பயற்றங்காய். இதில் மிக உயர்தரமான புரதம் அடங்கியுள்ளது. இதில் மாச்சத்து மிகக் குறைவு. நீரிழிவு நோயாளி களுக்கான தயாரிப்புகளுககு மிக வும் ஏற்றது. தீவிர சைவர்களும், பசும்பால் ஒவ்வாமை உடையவர் களும் பசும்பாலுக்குப் பதிலாகப் பயன்படுத்தும் சோயாப் பாலில சோயாப் புரதம் அடங்கியுள்ளது.

spasm : இசிவு; திடீர்ச் சுருக்கம்; விரைப்பு; பிடிப்பு : திடீர் வலியுடன் கூடிய கடுந்தசைச் சுரிப்புக் கோளாறுதானியங்கி தசைச்சுரிப்பு

spasmolytic : இசிப்பு மருந்து : தசைச் சுரிப்புக் கோளாறுக்கு எதி ரான மருந்துகள்.

spastic: தசையிறுக்கம்; விரைத்த; இசிப்பு நோயாளி : மூளை இசிப்பு வாததததுக்கு ஆட்பட்ட நோயாளி.

spastic paralysis : விரைப்பு வாதம், திமிர் வாதம்; தசையிறுக்க வாதம் : தசைச் சுரிப்பினால் ஏற் படும வாதம்.

spasticity : இசிப்பு நிலை; விரைப்பு நிலை; பிடிப்பு நிலை : இசிப்பு நோய்க்கு ஆட்படும் நிலை.

spatula : தட்டைக் கரண்டி : களிம்பு மருந்துகளைப் பரவலாகப் பூசுவதற்குப் பயன்படும் அகன்ற கத்தி போன்ற தட்டலகுக் கரண்டி.

special care baby unit (SCBU): குழவித் தனிக்கவனிப்புப் பிரிவு: 700-2000 கிராம் எடையுடன் பிறக்கும் குழந்தைகளைக் கவனிப்பதற்குத தனித் தொழில் நுட்ப வசதிகள் அமைந்த தீவிர மருத்துவப் பிரிவு.

special senses : சிறப்பு உணர்வு மண்டலம்.

special ward : தனிக்கூடம்.

species : உயிரின வகை; சிறப் பினம்; இனம் : உயிரினங்களின் வகைப் பிரிவுகள், உயிரின வகை வேறுபாடுகள். "The species", "Our species" எனபது மனித இனத்தைக் குறிககும்.

specific : தனி நோய் மருந்து/தனி மருத்துவமுறை: குறிப்பிட்ட; தகு மருந்து குறித்த : குறிப்பிட்ட நோய்க்குரிய தனிப் பண்புகள், அவற்றுக்கான தனி மருந்து வகை கள்; அவற்றைக் குணப்படுத்து வதற்கானத் தனி மருத்துவமுறை

specific anti-body : தனி எதிர்ப் புப் பொருள்; தகு எதிர்ப் பொருள : குறிப்பிட்ட எதிர்ப்புப் பொருள.

specific medicine : தனிப்பிணி மருந்து : குறிப்பிட்ட நோய்க்குரிய பயனுறுதி வாய்ந்த மருந்து.

spectinomycin: ஸ்பெடிக்னோமை சின் : எதிர்ப்பாற்றல் வாய்ந்த நுண்ணுயிரிகளுக்கு எதிராகப் பயன்படுததப்படும் உயிரி எதிர்ப் பொருள். மேகவெட்டை நோயைக் குணப்படுத்தப் பயன்படுகிறது.

spectroscope: வண்ணப் பட்டைக் கருவி; ஒளி முறிவு நோக்கி : ஒளி நிழற்பட்டை ஒளியை ஆராய் வதற்கான ஒரு ஆய்வு கருவி.

speculum : உடற்குழி நோக்கி: அகற்சிக் கருவி; உட்காட்டி : உடல் குழிவுகளை விரிவுபடுத்திக் காட்

டும் கருவி; கண்ணகற்சிக் கருவி.

speech : **பேச்சு; பேச்சாற்றல்** ; *வாய்வழி உரையாடல்.*

speech mechanism : பேச்சுச் செயல் முறை : *மூச்சு விடுதல், குரலொலி எழுப்புதல், ஒலித தெளிவு, ஒலியலை எதிர்வு, சொலலுருவாக்கம் ஆகிய செய்முறைகள் அடங்கிய பேச்சுச் செயலமுறை.*

speech-reading : **செவிடர் பேச்சறி முறை** : *பேசுபவரின் உதட்டு அசைவுகளைக் கவனித்துச் செவிடர்கள் பேச்சைப் புரிநது கொள்ளும் முறை.*

speech therapy : பேச்சு மருத்துவம்; பேச்சுத் திருத்த முறை; பேச்சுப பயிற்சி மருத்துவம் : *உளவியல அலலது உடலியல் குறைபாடுகள் அல்லது நோய் காரணமாகப் பேச்சுத் திறன் இழந்தவர்கள் மீண்டும் பேசுந்திறன பெறுவதற்கு அளிக்கப்படும் மொழித திறன பயிற்சி.*

sperm (**spermatozoa**): **விந்தணு**: *பெண் கருமுட்டைக்குப் பொலிவூட்டும் ஆண் கருச்சத்து; ஆண் கரு உயிர்மம். ஒருமுறை வெளியேறும விநதுநீர் மத்தில்-விந்தணுக்கள் 6 கோடிககும் குறைவாக இருக்குமானால் அந்த விந்தணு கருவூட்டும் ஆற்றல் இல்லாததாகும ௨0-50 கோடி விந்தணுக்கள் இருந்தால் அது இயல்பு நிலை.*

விநதணு

spermatheca: விந்து வாங்கி.

spermatic : விந்து சார்ந்த; விரை : *ஆண கருவுயிர் நீர்மத்துக் குரிய.*

spermatic cord : **விந்துக் குழாய்; விரை நாண்.**

spermaticidal: விந்தணுக்கொல்லி; விந்தணு அழிப்பு : *ஆண விந்தணுக்களைக் கொல்லக் கூடிய.*

spermatogenesis (spermatogeny): விந்தணுவாக்கம்; விந்தாக்க முறை : *ஆண் கருவுயிர்மத தோற்றம.*

spermatology (**spermology**) : **விந்தணுவியல்; விந்தியல்** : *ஆண் கருவுயிர்மம பற்றி ஆராயும் அறிவியல்*

spermatophore: விந்துறை: *ஆண் கருவுயிர்மம அடங்கிய சிதலுறை.*

spermatorrhoea : மேக நோய்; விந்து ஒழுக்கு : *ஆண் கருமக் கசிவுக் கோளாறு.*

spermatozoon : **விந்து உயிரணு; வளர்ச்சியுற்ற விந்தணு; விந்து** : *இனப பெருக்கத்திறகு முதிர்சசியுடைய ஆண் கருவுயிர் உயிரணு.*

spermicide : விந்தணுக் கொல்லி மருந்து. விந்தணுக் கொலலி : *ஆண விநதணுவைக கொல்லக்கூடிய ஒரு மருநது.*

spermoblast (spermatoblast) : **விந்து மூலம்** : *ஆண கருவுயிர்மக் கரு மூலம்.*

sphacelation : **தசையழுகல்** ; *தசையெலும்பு அழிந்து சிதைதல்.*

sphenoid : **ஆப்பு எலும்பு** : *மணடையோட்டு அடிப்புறக் கூட்டெலும்பு.*

sphenoid bone : **ஆப்பு எலும்பு.**

sphenoidal sinus : **ஆப்பெலும்புக் காற்றறை**

spherocyte : **கோளச் சிவப்பணு; உருண்டை உயிரணு** : *கோள வடிவ இரத்தச் சிவப்பணு. இது இரு*

பக்க உட்குழிவான சிவப்பணுக் களிலிருந்து மாறுபட்டது.

spherocytosis : **கோளச் சிவப்பணு அழிவு :** மரபுவழி வரும் ஒரு மரபணுக் கோளாறு. இது பிறவியிலேயே இருக்கலாம். ஆனால்,இதன் அறிகுறிகள் ஆயுள் முழுவதும் வெளிப்படாமல் இருக்கலாம். சிலசமயம், தற்செயலாக இரத்த சோதனை செய்யும்போது இது கண்டறியப்படுகிறது

sphincter muscle : **சுருங்கு தசை; சுருக்கி :** புழைவாய்ச் சுரிப்புத் தசை.

sphinterotomy : **சுருங்கு தசை அறுவை :** சுருங்கு தசையை அறுவை மருத்துவம்மூலம் பிளத்தல்.

sphingomyelinase : **ஸ்பிங்கோமைலினேஸ் :** கொழுப்பு வளர்சிதை மாற்றத்திலும், சேமிப்பிலும் இன்றியமையாத ஒரு செரிமானப் பொருள் (என்சைம்).

sphingmogram : **நாடி அதிர்வுப் பதிவு.**

sphygmograph : **நாடிப் பதிவுமானி; நாடி வரைவி :** நாடித் துடிப்பினைப் பதிவு செய்வதற்கு மணிக்கட்டில், நாடித் தமனி மீது பொருத்தப்படும் ஒரு கருவி.

sphingmology : **நாடி அதிர்வியல்:** நாடித் துடிப்பினை ஆராயும் அறிவியல்.

sphygmomanometer : **குருதி அழுத்தமானி; குருதிக் குழாய்**

குருதி அழுத்தமானி

அழுத்தமானி; குருதி அழுத்தவியல்; நாடி அழுத்தமானி : இரதத அழுத்தத்தை அளவிடுவதற்கான கருவி.

sphygmophone : **நாடி ஒலிக் கருவி :** நாடி அதிர்வொலியைக் காட்டும் கருவி.

sphygmus: **நாடி;** நாடித் துடிப்பு.

spica : **வரிக்கட்டு; பட்டைத் திசுப் பின்னல்; உறை:**புண்பட்ட இடத்தின் மீது திருகு சுற்றாகவும் எதிராகவும் வரிந்துகட்டும்துணிக் கட்டு.



வரிக்கட்டு

spicule; **எலும்புமுள் சிலாம்பு;** ஊசி முள் வடிவுடைய சிறிய எலும்பு.

spina bifida : **நரம்புப் புழை அடைப்பின்மை; பிளந்த முள்;முதுகெலும்புப் பிளவு :** நரம்புப் புழையில் குறிப்பாக இடுப்படி முக்கோண முட்டெலும்புப் பகுதியில் முழுமையாக அடைப்பு ஏற்படாமல் இருக்கும் பிறவிக் கோளாறு.

spinal : **முதுகந்தண்டு சார்ந்த :** முதுகந்தண்டு தொடர்புடைய; முதுகந்தண்டுப் பகுதியில் மட்டும் உணர்வை நீக்கக் கொடுக்கப்படும் மருந்து. ஓர் உறுப்பெல்லை உணர்வு நீக்கக் கரைசல் மருந்தாகும்.

spinal canal : **முதுகந்தண்டுப் புழை; தண்டு வடக் குழாய்.**

spinal column : **முதுகந்தண்டு.**

spinal cord : **தண்டுவடம் :** முதுகந்தண்டுவடம்; தண்டக நாடி.

spine : **முதுகெலும்பு :** முள்ளந்

தண்டு; தண்டெலும்பு; முதுகந் தண்டு.

spinicerebrate ; மூளை-தண்டு வடமுள்ள : மூளையும தண்டுவடமும் உடைய.

spirillum : சுருள் நுண்ணுயிரி : திருகு சுருள் வடிவ நுண்ணுயிரிகளின் தொகுதி. இவை நீரில, கரிமப் பொருள்களில காணப்படும. எலி போன்ற கொறிக்கும் பிராணிகளைப் பீடிக்கும். அவை மனிதரைக் கடிக்கும்போது எலிக்கடிக் காய்ச்சல உணடாகிறது.

spirochaete : திருகு கிருமிகள்; சுருள் உயிரி : திருகு சுருள் வடிவுடைய நுண் கிருமிகள்.

spirochaetaemia : குருதி திருகுக் கிருமி : இரத்த ஓட்டத்தில் திருகு கிருமிகள் இருததல். இரண்டாம் நிலைக் கிரந்தி நோயின்போது இந்த வகை நோய்க் கிருமிகள் உண்டாகினறன.

spirograph : மூச்சியக்க மானி; மூச்சியகக வரைவி : நுரையீரல்களின் இயக்கததைப் பதிவு செய்யும் கருவி.

spirometer : மூச்சுப்பைக்கோள் மானி; மூச்சளவி; மூச்சுமானி மூச்சுப்பையின் கொள்திறனைக் காட்டும் கருவி.

spirophere : செயற்கை மூச்சுக் கருவி : உயிர்த்துடிபபுத தேங்கியிருக்கும்போது செயற்கையாக உயிர்ப்பூட்டுவதற்கான கருவி.

spiroscope : மூச்சளவு மானி; நுரையீரல் காட்சிக கருவி , நுரையீரலகளைக் கணணால் பார்ப்பதற்கு உதவும் கருவி.

spittle : நுரையீரல் கபம்; உமிழ்சளி, கோழை : நுரையீரலிலிருந்து கிருமி கபமாக வெளிக் கொணரப்படும் பொருள். உமிழ் நீரையும் (எச்சில்) குறிக்கும்.

Spitz Holter valve : ஸ்பிட்ஸ் ஹோல்ட்டர் தடுக்கிதழ் : நீர் கொணட கபாலததிலிருநது நீரை வெளியேற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் தனிவகை தடுக்கிதழ்.

splanchnic : குடல் சார்ந்த; உள்ளுறுப்பு சார்ந்த; வயிறு சார்ந்த : குடல் தொடர்புடைய.

splachnicectomy : குடல் நரம்பு அறுவை; உள்ளுறுப்பு எடுப்பு: குடல் நரம்புகளை அறுவை மருத்துவம் மூலம் அகற்றுதல். இதனால உள்ளுறுப்புகளுககுப்பரிவுததூண்டுதல்கள் கிடைப்பதில்லை. இது மிக இரத்த அழுத்தத்தின்போது அரிதாகச் செய்யப்படுகிறது.

splanchnology : உள்ளுறுப்பியல் : மூளை, குடறகொடி, இதயம், நுரையீரல் போன்ற உள்ளுறுப்புகளின் கட்டமைப்பு, செயல்முறை பற்றி ஆராயும் அறிவியல்.

splanchnotomy : குடல் அறுவை: குடல் போன்ற உள்ளுறுப்புகளில் அறுவை மருத்துவம் செய்தல்.

spleen : மண்ணீரல்: இரைப்பைக்குப் பின்புறம, கணையத்தின்

மண்ணீரல

வால் பகுதியில், உதர விதானத்திற்குக் கீழேயுள்ள நிண அணுச் செல் குழாய் உறுப்பு.

splenalgia : **மண்ணீரல் நோவு; மண்ணீரல் வலி :** *மண்ணீரல் பகுதியில் ஏற்படும் வலி.*

splenectomy: மண்ணீரல் அறுவை மண்ணீரல் நீக்கம் : *மண்ணீரலை அறுவை மருத்துவம்மூலம் அகற்றுதல்.*

splenic pulp : மண்ணீரல் கூழ்.

splenetic : மண்ணீரல் மருந்து ; *மண்ணீரல் நோய்க்கான மருந்து. மண்ணீரல் நோயாளி.*

splenic fever : மண்ணீரல் காய்ச்சல்.

splenitis : மண்ணீரல் வீக்கம்.

splenitic : மண்ணீரல் அழற்சி : *மண்ணீரல் வீக்கம்.*

splenius ; திமில் தசை : *தலையை இயக்க உதவும் கழுத்தின் பக்கத்திலும் பின்புறத்திலும் உள்ள தசை.*

splenization : மண்ணீரலாக்கம் : *மண்ணீரல் போன்ற பொருளாக உயிர்ப்புப் பையை மாற்றல்.*

splenoid : மண்ணீரல் சார்ந்த.

splenology : மண்ணீரலியல்: *மண்ணீரல் பற்றிய ஆராயும் அறிவியல்.*

splenomegaly: மண்ணீரல் விரிவு; மண்ணீரல் உருப் பெருக்கம்; மண்ணீரல் வீக்கம : *மண்ணீரல் விரிவடைதல்.*

splenoportal . மண்ணீரல்-கல்லீரல் சிரை சார்ந்த . *மண்ணீரல மற்றும் கல்லீரல் சிரை தொடர்புடைய.*

splenoportogram : மண்ணீரல்-கல்லீரல்சிரை ஊடுகதிர்ப்படம்: *மண்ணீரல் மற்றும் கல்லீரல் சிரையின் ஊடுகதிர் வரைபடம். ஒளி புகா ஊடகம் செலுத்தி இது எடுக்கப் படுகிறது.*

splenorenal : மண்ணீரல்-சிறுநீரகச் சிரைப் பின்னல் : *மண்ணீரல் சிரையும் சிறுநீரகச் சிரையும் பின்னிப் பிணைந்திருக்கும் நிலை.*

splenotomy: மண்ணீரல் அறுவை: *மண்ணீரலைத் துண்டித்து எடுத்தல்; மண்ணீரல் உள்ளறுவை.*

splint : முழந்தாளெலும்பு: *சப்பை; சிம்பு.*

splinter-bone: முழந்தாள் எலும்பு: *மனிதரின் முழந்தாள் எலும்பு.*



SPOD: ஊனமுற்றோர் உதவித்துறை : *உடல் ஊன முற்றோருக்கு ஏற்படும் பாலுறவுச் சிக்கல்களில் உதவிபுரியும் ஒரு துறை. இது ஊனமுற்றோர் மறுவாழ்வுச் சங்கத்தின ஓர் அங்கம்.*

spondyl(spondyle): முதுகெலும்புக் முழந்தாள் எலும்பு கண்ணி: *முதுகெலும பின் தனிக் கண்ணி.*

spondylitis . தண்டு வட எலும்பு அழற்சி, முதுகெலும்பு அழற்சி: *தண்டெலும்பின (முளளெலும்பு) ஒன்று அதற்கு மேற்பட்ட கண்ணிகளில வீக்கம உண்டாதல்.*

spondylolisthesis : முதுகெலும்பு முன் சாய்வு, முதுகெலும்பு முன் பிறழவு; முளளெழும்பு நழுவல் : *வயிற்றுப் பகக முதுகெலும்பு முன் புறமாக இடம் பெயர்ந்திருத்தல்.*

spondylosis deformans. தண்டு வட எலும்பு வீக்கம் : *முதுகெலும்பு இடைததகடு நலிவுற்று, அததகட்டின் சுறறு விளிம்பில் புதிய எலும்பு உருவாதல்; இது பொதுவாக தண்டுவட எலும்பு வீக்கம் எனப்படும.*

spondylotomy : முதுகெலும்பு முறித்தல்.

spongioblastoma multiforme : உக்கிர மூளைக் கட்டி : மிகவும் உக்கிரமுடைய விரைவாக வளரக் கூடிய மூளைக் கட்டி.

spore : கருவணு; சிதல் : கரு மூலம்; விதைமூலம்; விதை புது உயிராக வளரத்தக்க உயிர்ம நுண மம்.

sporicidal : கருவணுக் கொல்லி : கருவணுவைக் கொல்லக் கூடிய.

sporogenesis : கருவணு உருவாக்கம் : கருவியல் நுண்மம் உருவாதல்.

sporotrichosis : பூஞ்சணப் புண : ஒரு காயத்தில் பூஞ்சணம் படையெடுத்தல்.

sporule : சிறு கருவணு : சிறிய கருவியலணு.

sporulation : கருவணு நோய் நுண மம்: கருவணு பாக்டீரியாக்கள் உருவாதல்.

spotted fever : மூளை அழற்சிச் சன்னி, புள்ளிக் காய்ச்சல் . மூளை அழற்சிச் சன்னி நோய். இது கொள்ளை நோயாகப் பரவக் கூடியது.

sprain. சுளுக்கு (சுளுக்கு வீக்கம்); தசைப் பிறழ்ச்சி, பிசகு . ஒரு மூட்டினைச் சுற்றியுள்ள மென்மையான திசுக்களில் ஏற்படும் காயத்தினால் உண்டாகும் வீக்கம். இதனால், நிறமாற்றம், வீக்கம், வலி உணடாகும்.

sprengel's shoulder deformity : ஸ்பிரெங்கல் தோள் திரிபு : பிறவியிலேயே தோள் திரிபடைந்து,தோள் பட்டை நிரந்தரமாக அளவுக்கு மீறி உயர்ந்திருத்தல். இது பிறவி உறுப்புச் சீர்கேடுகளுடன தொடர்புடையது. எ-டு' கழுத்துப் பக்க விலா எலும்பு இருத்தல அல்லது முள்ளெலும்பு இல்லாதிருத்தல.

sprue தொணடை நோய்; செரியா சீதபேதி : வெப்ப மண்டலத் தொண்டை நோய். நாக்கு அழற்சி, செரியாமை, உடல் நலிவு, குருதிச் சோகை, கொழுப்பு மலப் போக்கு ஆகியவற்றுடன் தொடர் புடையது.

spurious diarrhoea : போலி வயிற்றுப் போககு : திண்மமான மலததுடன் சேர்ந்த திரவமலம வெளியேறுதல். பெரும்பாலும் குழந்தைகளுக்கும் முதியவர்களுக் கும இது ஏற்படுகிறது.

sputum : கோழை; சளி.

squma · செதிள (சிம்பு) : செதிள் போன்ற எலும்புப் பகுதி.

squamasal : செப்பை எலும்பு : செதிள் போனற செப்பை எலும்புப் பகுதி.

squamous : செதிள் படலம் : உடலின புறப்பரப்புகளை மூடியிருக்கும சுரப்பிகளற்ற செதிள் போன்ற புறப்படலம்.

squills : அல்லிப் பூண்டு : சிறுநீர் தூண்டும மருந்தாகவும், பேதி மருந்தாகவும் பயனபடும் அல்லியினப் பூணடு.

squint : மாறு கண் : ஒருக்கணிப் புக் கண்; பக்கவாட்டுப் பார்வை. கண் விழித் தசைகள் ஒருங்கிணைந்து இயங்காத காரணத்தால், இரு கண்களின பார்வை அச்சுகளும பொருள் புள்ளியில் சந்திக்காமல் இருததல்.

staccato speech : திக்குவாய் : சொற்களிடையே இடைவெளி விட்டுப் பேசுதல் அணுும உளளரிக் காழ்ப்பு, மூளை நோய் போன்ற வறறின்போது இது உண்டாகிறது.

stagnant loop syndrome: குடல் வளையத் தேகக நோய் : அறுவை மருததுவத்தினால் ஏறபடுத்தப் படட குடல் வளையததில் உட்

பொருட்கள் தேக்கமடைதல். இதனால், பாக்டீரியாக்களின் பெருக்கமும், உணவை ஈர்ப்பதில் இடையூறும் உண்டாகும்.

St. anthony's fire : புனித அந்தோணிக கனல் : எரிச்சல் உணர்வும, பின்னர் கைகால் பகுதிகள் மரத்துப் போதலும், உடல் நடுக்கமும் ஏற்படும ஒரு நோய்.ஒட்டுயிர் நச்சுகளின் கலவையினால் இது உணடாகிறது.

stapedectomy : அங்கவடி செவிச் சிற்றெலும்பு அறுவை: செவி நோய்களின்போது ஆங்கவடி செவிச் சிற்றெலும்புகளை அறுவை மருத்துவம்மூலம் அகற்றுதல். உடலில் செயற்கை உறுப்பு இணைத்தல் மூலம் இந்தச் சிற்றெலும்புகளுக்குப் பதிலாக வேறு செயற்கை எலும்புகளைப் பொருத்தி இயலபான கேட்புத் திறனை மீட்கலாம்.

stapedial mobilization stapediolysis : அங்கவடி செவிச் சிற்றெலும்பு விடுவிப்பு : செவி நோய்களினால் செயலிழந்த அங்கவடி செவிச் சிற்றெலும்புகளை விடுவித்தல்.

stapes : அங்கவடி செவிச் சிற்றெலும்பு : நடுக்காதிலுள்ள அங்க வடிவச் செவி சிற்றெலும்பு.

Staphylococus: வட்ட பாக்டீரியா: காயங்களிலும் கழலைகளிலும் நோய்த் தொற்று உண்டாக்கும் வட்ட வடிவ பாக்டீரியாக் குழுமங்கள்.



வட்ட பாக்டீரியா

staphyloma : கருவிழிப் பிதுக்கம் : கண்ணின் வெண்விழிக் கோணத்தின் புறத்தோல் வெண்விழி பிதுங்கியிருத்தல்.

starch : மாச்சத்து : உருளைக் கிழங்கு, அரிசி, சோளம் ஆகிய வறறில் இருக்கும் கார்போஹைட்ரேட். கஞ்சிப் பசையிடுவதற்குப் பயனபடுததப்படுகிறது.

stasis:(1) குருதியோட்ட நிறுத்தம்; தேக்க நிலை. இரத்தவோட்டம் தேக்கமடைதல்.

(2) மலத் தேக்கம்: இரைப்பை சரியாகச் சுருங்கி விரியாததால் ஏற்படும் மலச்சிக்கல்

STD: பாலுறவு நோய்கள்: பாலுறவு மூலம் பரவும் நோய்கள.

steatorrhoea : கொழுப்பு மலப் போக்கு; கொழுப்பு மல பேதி : பல்வேறு ஈர்ப்புக் கோளாறினால், வெளிறிய, பெருத்த, பசையுடைய கெட்ட நாற்றமுடைய மலம் கழிதல்.

steatocele· அண்ட வாயு: விரைப்பை வீக்கம்

steatoma : விதை வீக்கம் : பையிலுள்ள விதை வீக்கம்.

steatopygia : பிட்டக் கொழுப்புப் புடைப்பு

stecomyia : முறைக் காய்ச்சல் கொசு : முறைக காய்ச்சலைப் (மலேரியா) பரப்பும் ஒருவகைக் கொசு இனம். இந்த ஒட்டுயிர் பெரும்பாலான வெப்ப மண்டல நாடுகளிலும், வெப்ப மண்டலம் சார்ந்த நாடுகளிலும் காணப்படுகிறது.

stein-Leventhal syndrome : துணைமை மாதவிடாய் தோன்றாமை : வாழ்க்கையின் இருபது அல்லது முப்பது வயதுகளில் உண்டாகும் மலட்டுத்தன்மை. இருபுறமும் அண்டப்பையில் பல நீர்கட்டி கருவகங்கள் மயிரடர்த்தி ஆகியவை தோன்றுதல். இது சில சமயம்

வக ஆப்பு அறுவைமூலம் குணப் படுத்தப்படுகிறது.

Stellwag's sign : இமையாமை நோய் : இயல்புக்குமீறிக் கணவிழி பிதுங்கியிருக்கும்போது, நோயாளி இயல்பான அளவு கண்ணிமைக் காமலும், கண்ணிமைகளை முழு மையாக மூடாமலும் இருக்கும் நிலை.

stem cells : மூல உயிரணுக்கள் : உடலிலுள்ள மற்ற உயிரணுக்கள் அனைத்திற்கும் தோற்றுவாயாக அமைந்துள்ள உயிரணுக்கள், எலும்பு, குருத்தெலும்பு, ஈரல் குலை, நரம்பு, குடல்நாளம், நுரை யீரல், மயிர் உயிரணுக்கள் ஆகிய அனைத்தும் இந்த ஆதார உயி ரணுக்களிலிருநதே தோன்றுகின் றன. மனித மூல உயிரணுக்களைத் தனிமைப்படுத்தி, குறிப்பிட்ட உயி ரணுக்களை ஆய்வுக் கூடததில் வளர்க்கலாம்; இவற்றை நோயுற்ற இரத்த, தசை, நரம்பு உயிரணுக் களுக்குப் பதிலாக மாற்று அறுவை மருத்துவமூலம் பொருத்தலாம்.

stenosis:குறுக்கம்;இரைப்பைகாப்பு வாயில் சுருக்கம் : முன் சிறு குடல் புண்ணைக் குணப்படுத்தும் போது வடுத்திசு உருவாகி இரைப் பை வாயில் காப்பு சுருங்குதல்.

stepsin : ஸ்டெப்சின் : கொழுப் பை கொழுப்பு அமிலங்களாகவும், கிளிசரைனாகவும் பகுக்கக் கூடிய ஒரு பொருள். இது கணைய நீரில் உள்ளது.

stercobilin : ஸ்டெர்கோபிலின் : மலத்தின் பழுப்பு வண்ண நிறமி. இது பித்தநீர் நிறமிகளிலிருந்து தோன்றுகிறது.

stercoraceous (stercoral) ; மலம் சார்ந்த: மலத்தைப் போன்ற.

stereotactic suregery : மூளைத் திசுவழிப்பு அறுவை. வாதம், பன்முக அணும உள்ளரிக் காழ்ப்பு, காக்கை வலிப்பு போன்ற நோய் களில திசுக்களைக் கண்காணிப் பதற்கு அல்லது அழிப்பதற்கு மூளையில் ஒரு குறிப்பிட்ட இடத் தில் மின் முனைகளையும், துளைக் கருவி கொண்ட குழாய்க் கருவி களையும் செலுத்துதல், இதனால் வலியைக் குறைக்கலாம்.

sterets : ஸ்டெரட்ஸ் : நோய் நுண்ம ஆய்வெடுப்புக் கசிவு நீர் மத்தின் வாணிகப் பெயர். இதில் 70% ஐசோப்புரோப்பில் ஆல்க கால் அடங்கியுள்ளது. ஊசி குத்து வதற்குமுன்பு இதனைத் தோலில் தடவி காய விடப்படுகிறது.

sterical : ஸ்டெரிக்கால : மேற் பரப்பைச் சுத்தம் செய்வதற்கு மட் டும் பயன்படுத்தப்படும் கரையக் கூடிய கரியக் காடிக் கூட்டுப்பொரு ளின் வாணிகப் பெயர்.

sterile : நுண்ணுயிரற்ற; மலடான: நோய் நுணமங்கள் ஒழிக்கப்பட்ட இனப் பெருக்கத் திறனற்ற.

sterility : மலட்டுத் தன்மை; நுண் ணுயிரற்ற : இனப்பெருக்கத் திறன் இனமை.

sterilization : நுண்ணுயிர் அகற் றல; கிருமி நீக்கம்; கருத்தடை அறு வை; மலடாக்கல் : நோய்க் கிருமி களை அழித்தல். கருத்தரிப்பதைத் தடுப்பதறகான அறுவை மருத் துவம்.

sterilizer : கிருமி அழிப்புக் கருவி; கிருமி நீக்கி, தூய்மையாக்கி : நோய் நுணமங்களை ஒழிக்கும் பொருள்.

sternomastoid : மார்பெலும்பு கூம்பு முனைத் தசை.

sternoclavicular : மார்பு-கழுத் தெலும்பு சார்ந்த : மார்பெலும்பு, கழுத்துப் பட்டை எலும்பு தொடர்புடைய.

sterno cleidomastoid muscle ; கழுத்து வார்த் தசை: *மார்பெலும்பு கழுத்துப் பட்டை எலும்பு இவற்றிலிருந்து எழுந்து, பொட்டெலும்பின் கூம்பு முனைப்புக்குள் செருகிக் கொள்ளும் ஒரு வார் போன்ற கழுத்துத் தசை.*

sterno costal : மார்பு - விலா எலும்பு சார்ந்த : *மார்பெலும்பும், விலா எலும்புகளும் தொடர்புடைய.*

sternotomy : மார்பெலும்பு அறுவை : *மார்பெலும்பை அறுவை மருத்துவம்மூலம பிளத்தல்.*

sternum : மார்பெலும்பு; மார்பு நடு வெலும்பு : *விலா எலும்புகளை இணைக்கும் மார்பு நடுவரை எலும்பு.*

sternutation : தும்மல்.

sternutative (sternutatory) : தும்மல் பொருள் : *தும்மல் தூண்டும் பொருள்.*

steroids : இயற்கை இயக்குநீர்கள் : *கொழுப்புப் பொருளுடன (கொலஸ்டிரால்) தொடர்புடைய இயற்கையாக ஊறும் வேதியியல் பொருட்களின் தொகுதி. இதில், பாலுறவு இயக்குநீர்கள் (ஹார்மோன்), அண்ணீரகப் புற உறுப்பு இயக்குநீர்கள், பித்தநீர அமிலங்கள் போன்றவை அடங்கும்.*

stertor : குறட்டை; ஓசை மூச்சு : *உறங்கும்போது மூச்சு விடுகையில் குறட்டை விடுதல்*

stibocaptate : ஸ்டிபோகாப்டேட்: *குடலில் நத்தைக் கிருமி நோயைக் குணப்படுத்துவதற்குப் பயன்படும் மருந்து.*

stibophen : ஸ்டிபோஃபென் : *குடலில் நத்தைக் கிருமி நோயைக் குணப்படுத்துவதற்கான கருமிளை (ஆன்டிமனி) கூட்டுப் பொருள்.*

stethoscope : நாடிக் குழல்; இதயத் துடிப்பு மானி; மார்பு ஒலி மானி; மார்பு ஆய்வி : *இதயத் துடிப்பினை ஆராய்வதற்கான கருவி.*

இதயத் துடிப்புமானி

stethoscopy: இதயத் துடிப்பு ஆய்வியல் : *இதயத் துடிப்பினை ஆராயும் அறிவியல்.*

stethograph : மார்பு இயக்க வரைவி.

stigmata: நோய்த் தழும்பு: *நோயினால் உண்டாகும் தழும்புகள் அல்லது வடுக்கள்; பிறவியிலேயே ஏற்படும் உருத் திருபுகள்;குறிகள்.*

stilboestrol . ஸ்டில்போயஸடிரால் : *செயற்கைக் கருப்பை இயக்குநீர் (ஊஸ்டிரோஜன) முன் வாயில் சுரப்பிப் புற்றுக்குக் கொடுக்கப்படுகிறது.*

stillborn : இறந்து பிறந்த : *செத்துப் பிறந்த.*

stimulant : கிளர்ச்சி மருந்து ஊக்கி; கிளரி, உந்தி : *கிளர்ச்சியூட்டும் மருந்து; தூண்டியெழுப்பும் உணவு; எழுச்சியூட்டும் குடிவகை போன்றவை.*

stimulus ' தூண்டு பொருள்; உந்து : *உயிர்ததசை இயக்கததைத் தூணடுகிற பொருள்.*

stitch : (1) விலாக் குத்தல் நோய்: *உணவு உண்டவுடன் ஓடுவதால் உண்டாகும் பக்கவாட்டுக் குத்து வலி.*

(2) தையல் : *தைத்து இணைத்தல்.*

Stokes-Adams syndrome: குருதி மயக்கம் : குருதியழுத்தக் குறை பாட்டினால் உண்டாகும் உணர் விழப்பு. இதய நாடி அடைப்பு உள்ள நோயாளிகளுக்கு இது ஏற் படுகிறது. இது கடுமையானால் நோயாளிகளுக்கு வலிப்பு உண்டாகி உணர்விழந்து விடுவார்.

stoma : வாய். ஒரு புழை; திறப்பு.

stomach : இரைப்பை; வயிறு : சீரணக் குழாயில் மிகவும் விரி வடைந்த பகுதி. உணவுக் குழாய்க் கும் சிறுகுடலுக்கும் இடையில அமைந்துள்ளது. இதன் சுவர், ஊனீர் மெனசவ்வு, தசை, சளிச் சவ்வு, அடிச்சளிச்சவ்வு ஆகிய நான்கு படலங்களின உள்வரிப் பூச்சுகளைக் கொண்டது.

stomachics : செரிமான மருந்து கள்; பசியூக்கி; பசி தூண்டி : செரி மானத்துற்கு உதவுகிற மருநதுகள்.

stomatitis : வாய்ப்புண் / வாய் அழற்சி : ரைபோஃபிளேவின் பற் றாக குறையினால் வாயில வெடிப்பு ஏற்பட்டு புண் அல்லது வீக்கம் உணடாதல்.

stone : கல் உடலின் உள்ளுறுப்பு களில் ஏற்படும் கற்கள். இது கனி மப்பொருளினசேர்க்கையால திசுக் களுக்குள் உணடாகலாம். கற்கள் நாளங்களில் நகரும்போது வலியும் அடைப்பும் நிகழும்.

stool : கழிமலம்; நரகல்; மலம் .

stove-in chest : விலா எலும்பு முறிவு; புதை குத்து மார்பு : மார்புக் கூட்டெலும்புகளில், முன்புறம் அல்லது பினபுறம் பல முறிவுகள் ஏற்படுதல் அல்லது அத்தகைய முறிவுகளின் கலவை.

strain : தசை நலிவு; மிகை முயற்சி . அளவுக்குமீறிய உடல் முயற்சி காரணமாகத் தசைகளில் ஏற்படும் நலிவு.

stramonium : ஊமத்தை : ஊமத் தைச் செடி; ஊமததை இலையி லிருந்து எடுக்கபபடும் கபநோய் மருந்து.

strangulated hernia : நெரிப்புப் பிதுக்கம் : பிதுக்கத்தில் ஏற்படும் நெரிப்பு.

strangulation ; நெரிப்புத் தடை முறுக்கம் : அழுததத்தின் மூலம குருதியோட்டத்தைத் கடுத்தல்.

strangury . நீர்க்கடுப்பு, சொட்டுச் சிறுநீர் : சூடு பிடிப்பதனால் வலி யுடன சிறிதுசிறிதாக சிறுநீர் கழி யும் நோய்.

stratified : அடுக்கமைவு : பல அடுக்குகளாக அமைக்கப்பட்ட.

stratum படலம்; தோலடுக்கு : தோலின புற அடல் படலம். எடுத் துக்காட்டு; சொர சொரப்புப் படு கை, வழவழப்புப் படுகை

strawberry-mark : செம்மறு : மென் சிவப்பு நிறமான உடலின் நிலை மச்சம்.

strawberry tongue; செந்நாக்கு: நாககில் தசைப்பற்றுள்ள செந் நிறச் சிறு முகிழ்கள் நீட்டிக் கொண்டிருததல். இந்தச் செம்பட லம் நீங்கியதும் நாக்கு முற்றிய ஸ்டிராபரி என்ற சிவப்புப் பழம் போன்று சிவநதிருக்கும். இது செம்புள்ளி நச்சுக் காய்ச்சலின் அறிகுறி

streptococcus : சங்கிலிக் கிருமி: கிருமிப் பிளப்புக்குப் பின்னரும் ஒட்டிக் கொண்டிருக்கும் நோய்க் கிருமி வகை. இது கிராம் சாயம் எடுக்கும் தன்மையுடையது. இது பல்வேறு நீளமுடைய சங்கிலித் தொடர்களாக அமைந்திருக்கும். இவற்றில் 'லியூக்கோசிடின' என்ற வகை இரதத்திலுள்ள வெள் ளணுக்களைக் கொல்லும்; 'ஹேமேலிசின்' என்ற வகை சிவப் பணுக்களைக் கொல்லும்.

streptokinase : சங்கிலிக் கிருமி நொதி : சிலவகைக் குருதிச் சங்கிலிக கிருமிகளின் வளர்ச்சியிலிருந்து கிடைக்கு ஒரு செரிமானப் பொருள், தசைகளுக்கிடையிலான கசிவு ஊனீரை விரைவாக அகற்றுவதற்குப் பயன்படுகிறது.

streptomycinஸ்டிரெப்டோமைசின் ஒருவகைககிருமிகளிலிருந்துகிடைக்கும் கிருமி எதிர்ப்புப் பொருள். காசநோயைக் குணப்படுத்தப் பயன்படுகிறது.

stress : அழுத்தம் / அதிர்ச்சி; நெருக்கடி : மனநெருக்கடி அல்லது உளைச்சல் காரணமாக உடலில ஏற்படும் தளர்ச்சி அல்லது தேய்மானம். இது உடலியல் அல்லது உளவியல் காரணமாக உண்டாகலாம்.

striae : படுவரி; நிறமிக் கோடுகள்: அடிவயிற்றின் மேறபரப்பில ஏற்படும் படுகைக் கோட்டு வரி அடையாளம். கருவுற்றிருக்குமபோது அடிவயிற்றுத் தோல் நீட்சியடைவதால் இது உண்டாகிறது முதலில் இது சிவப்பு நிறமாக இருக்கும்; பினனர் வெள்ளிபோல் வெண்மையாக மாறும.

striated membrane: வரிச் சவ்வுப் படலம்.

striater muscle . வரித் தசை.

stricture: குறுக்கம்/வழியடைப்பு; ஒடுக்கம; சுருககம் : நாடி நரமபு நாளங்களில் திசுத் தழும்பு அல்லது கட்டி காரணமாக குழாய் வழி குறுகுவதால் உண்டாகும் நெரிசல் கோளாறு.

stricture rectam : மலக்குடல் சுருக்கம்

stricture urethra : சிறுநீர்ப் புறவழி சிறுத்தல்.

stridor : கரகரப்பு மூச்சோட்டம், மிகை மூக்கொலி;கடும் மூச்சிரைப்பு: இடுங்கிய வழியில் காற்று செல்வதால் உண்டாகும் கரகரப்பான ஒலியுடன மூச்சு விடுதல்.

stroke : மூளை வலிப்பு; மூளை வாதம்; தாக்கம்: மூளையில் இரத்த நாளததில் உண்டாக்கும் அடைப்பால் ஏற்படும்திடீர் வலிப்புநோய். இதனால், ஒரு புறமாகச் செயலற்ற தன்மையூட்டும் வாத நோய் உணடாகலாம்

stroma : உயிரணுத் தாங்கி : உயிர்ம உட்பிழம்புக் கட்டமைப்புக் கூறு.

strongyloides : குடல் புழு : மனி தரைப் பீடிக்கும் குடல் புழுக்களில் ஒரு வகை.

strontium : ஸ்டிரான்ஷியம் : ஒரு மஞ்சள்நிற அருகிய உலோகம். வேதியியல் பண்புகளில் கால்சியதததை ஒத்தது. எலும்பில் உள்ளது. இதன ஓரகத் தனிமங்கள் (ஐசோடோப்) உருத் திரிபுகளைக் கண்டறிய எலும்பை நுணணாய்வு செய்யப் பயன்படுகிறது.

strontium-90 : ஸ்டிரான்ஷியம்-90 : ஒரு கதிரியக்க ஓரகத தனிமம் (ஐசோடோப்). ஓரளவு நீண்ட 'அரை ஆயுள்' (28 ஆண்டுகள) உடையது. எலும்புத் திசு உறபத்தி குறைவாக இருக்கும் இடங்களில இது எலும்புக்குள் இணைக்கப்படுகிறது. இது அணுக்கதிர் வீச்சின் மிக அபாயகரமான அமைப்பானாகும்.

strophanthine : ஸ்டிரோஃபாந்தைன்: இருதயதசைவலிமையூட்டும் தாவர நச்சுப்பசை மருந்து. இது 'டிஜிட்டாலிஸ்' என்ற செடி மருநது போன்றது. ஆனால், அதைவிட விரைவாகச் செயற படக் கூடியது. சிலசமயம் நரமபு ஊசி மூலம் கொடுக்கப்படுகிறது.

strychnine: எட்டிச் சத்து; எட்டிக் காய் : நரம்பு மருந்தாகப் பயன்

படுத்தப்படும் நச்சு மருந்து. இது எட்டிக்காயிலிருந்து எடுக்கப்படுகிறது.

student's elbow ; மாணவர் முழங்கை : பசை நீர்ச் சுரப்பி வீக்கம்.

stupe : ஒற்றடம்: நீர் ஒற்றடம் : மருத்துவமுறைப்படி ஒற்றடம் கொடுத்தல். வலி நீங்குவதறதாக இவ்வாறு செய்யப்படுகிறது. எரிச்சலைத தடுக்கக் கர்ப்பூரத் தைலம் சேர்க்கப்படுகிறது.

stupor : உன்மத்த நிலை, அரை மயககம் . செயலற்ற திகைப்பு நிலை; மதிமயக்க நிலை; உணர் விழந்த தன்மை; மந்த நிலை.

Sturge-Weber sindrome: தோல் புறப்படல அழற்சி: பிறவியில் உண்டாகும் தோல புறப்படல அழற்சி நோய். இது மணடையோட்டின் உள்ளேயிருககும் நாளங்களில் தந்துகி மாற்றங்களினால ஏற்படுகிறது. இதனால், காக்கை வலிப்பு போன்ற மூளை நோயகள் உண்டாகின்றன.

stye : கண் மயிர்க்கால் கட்டி; கண்ணிமைக் கட்டி : கண்ணிமையில் உண்டாகும் சிறுகட்டி; இமை வீக்கம்; கண் கட்டி; இமைக் குரு.

stylohyoid : நாவடி முள்ளெலும்பு சார்ந்த

styloid (styloid process) ; பொட்டு முளளெலும்பு : பொட்டெலும்பின் புறநீளமான முள்ளெலும்பு.

stylomaxillary : தாடை முள்ளெலும்பு சார்ந்த.

styptic : குருதி உறைவி; குருதி உறைபபி : குருதி வடிவதை நிறுததும்மருந்துகுருதிஒழுக்குதடுப்பான்.

subacute : இடைநிலை; முனைப்பு குறைவான : முனைப்பு நிலைக்கும் நாட்பட்ட சீர்கேட்டிற்கும் இடைப்பட்ட நிலை;குறைத்தீவிரம்.

subanal : மலவாய் அடுத்த : மலவாய்க்கு அடுததுக் கீழுள்ள.

subarachnoid space : சிலந்திச் சவ்வு இடைவெளி : சிலந்திச் சவ்வுக்குக் கீழே, அதற்கும் மூளையின் அடிச் சவ்வுப் படலத்திற்குமிடையில உள்ள இடைவெளி. இதில் மூளைத் தண்டுவட நீர்மம் அடங்கியுள்ளது.

subclavian: கழுத்துப் பட்டை அடியில்; காரையடி : கழுததுப்பட்டை எலும்புக்கு அடியிலுள்ள.

subclinical . போதிய மருத்துவக் காரணம் இன்மை; நோய்குறி தோன்றா : அடையாளங் காணத் தக்க நோயை உண்டாக்குவதற்குப் போதிய மருத்துவக் காரணம் இல்லாதிருக்கிறது.

subconscious : அரையுணர்வுத் தளம்; உள்மனம்; அடிமனம், அகமனம் . அரையுணர்வு நிலை; உள்ளத்தின அடியுணர்வுத தளம்.

sub-culture : கிருமி மறுவளர்ப்பு

sab-cutaneous : தோலுககு அடியில், தோலடி.

sub-involution கருப்பைச் சுருங்காமை : குழந்தை பிறந்த பின குறிப்பிட்ட காலத்திறகுள் கருப்பை குறிப்பிட்ட அளவுக்குச் சுருங் காதிருத்தல்.

subjective : தன்னுணர்வு : மற்றவாகளுக்குப் புலனாகாமல், தன உள்ளுணர்வால் உணர்நதறிதல்.

sublimate : பதங்கம்; ஆவி உறை படிவு; வளிமமாதல : சூடேற்றி பின்னர் கெட்டியாக ஆறவிடப் பட்ட பொருள்.

sublingual : நாக்கடியில்; நாவடி

subluxation : அரைகுறை மூட்டுப் பெயர்வு; மூட்டு நழுவல்; மூட்டுப் பிசகுதல : ஒரு மூட்டு அரைகுறையாக இடம் பெயர்ந்திருததல்.

submandibular : தாடையடி;

தாடையின்கீழ்; கீழ் தாடையடி : கீழ்த் தாடைக்குக் கீழே.

submaxillary : கீழ்த் தாடை சார்ந்த; கன்ன எலும்படி : கீழ்த் தாடைக்கு அடியிலுள்ள.

submicron : நுணங்கணு: சிறப்பு நுண்ணோக்காடியில்லாமல் பார்க்க முடியாத நுண்ணணு

submucous : சளிச்சவ்வின் கீழ் : சளிச் சவ்வின் கீழிருக்கிற.

subnarcotic: அரைத்தூக்கமூட்டுகிற : ஏறத்தாழ தூகக மயக்கம் ஊட்டுகிற; இள மறமறப்பூட்டுகிற.

subnasal : மூக்கடி : மூக்கின் கீழ் அமைந்துள்ள.

subneural : நரம்புக் கணுவடி : நரமபுக கணுவுக்கு அடுத்துக் கீழுளள நரம்படி.

subnormality: இயல்பு நிலைக்குக் கீழ் : இயல்பு நிலைக்குக குறைந்த தனைம. மன வளர்ச்சி முழுமை பெறாதிருக்கும் நிலை. இது மருத்துவச் சிகிச்சையினால் குணமாகி விடக் கூடியது.

suboccipital : பிடரியெலும்படி; பிடரியடி; பின் உச்சியடி : பிடரி யெலுமபின கீழுள்ள.

subocular : கண்ணடி : கண்ணின் கீழுள்ளகண்கோளத்தின் அடியில்.

suboesophogeal : உணவுக் குழாயடி : உணவுக குழாய்கசு அடியிலுளள.

suborbital ; கட்குழியடி: கடகுழியின கீழுள்ள.

subperiosteal : எலும்புச் சவ்வடி; எலும்புப் புறவடி : எலும்புகளை மூடியுள்ள சவ்வுக்கு அடியிலுள்ள.

subpharyngeal : தொண்டையடி: தொண்டையின் அடியிலுள்ள.

subphrenic : உதரவிதானம் கீழ்; விதானவடி : உதர விதானத்திற்கு அடியிலுள்ள.

subpilose : சிறிது மயிர் மூடிய.

subpleural : நுரையீரல் உறையடி: நுரையீரல்உறைக்கு அடியிலுள்ள.

subsacral : குத எலும்பு முன் : மனிதரின் முக்கோணக் குத எலும்பின் முன்னுள்ள.

subscapular: தோள்பட்டை எலும்பு முன் : மனிதரின் தோள்பட்டை எலும்பிற்கு முன்னுள்ள.

subserous : நிணநீர்ச் சவ்வடி : நிண நீர்ச் சவ்வின கீழுள்ள.

substernal : மார்பெலும்படி: மார்பெலும்புக்குக் கீழுள்ள.

subsultus : தசை நடுக்கம் / நடுக்கியக்கம் : நச்சுக காய்ச்சல (டைஃபாய்டு) போன்ற கடுங்காய்ச்சலின்போது, மணிக்கட்டில் தசைகளும் தசை நாண்களும் நடுக்கமுறுதல்

succus (succulence) : சாற்றுச் செறிவு; சாறு : சாறு தசைக் கண்ணிறுக்கத தன்மை.

sucrose : சுக்ரோஸ்; சர்க்கரை கரும்பு வெல்லம்,கருநம்பு சர்க்கரை, வள்ளி சர்க்கரை, மரப்பாகு ஆகிய வற்றிலிருந்து எடுக்கபபடுகிறது. இது உடலில் நீரால் பகுத்தல் மூலம் டெக்ஸ்டிரோஸ் ஃபிரக்டோஸ் ஆகப் பகுக்கபபடுகிறது.

sucrosuria : சிறுநீர்ச் சுக்ரோஸ்; சிறுநீர்ச் சர்க்கரை : சிறுநீரில் சுக்ரோஸ் இருத்தல்.

sudamina : வியர்க்குரு; வியர்வைக் கட்டி

sudan blindness: சூடான் குருடு.

sudatory : புழுக்க மருந்து : வியர்வையூட்டும் மருந்து.

sudoriferous : வியர்வைச் சுரபபி: வியர்வையை வெளிப்படுததுகிற சுரப்பி.

sudorific : **வியர்வை மருந்து :** வியர்வையைத் தூண்டும் மருந்து.

sugar : சர்க்கரை : மருந்தின் சர்க்கரைப் பூச்சு; வெல்லச் சதது, சர்க்கரைச சத்துப் பொருள்.

sugar reaction : சர்க்கரை வேதியியல் மாற்றம்.

suggestibility : வசிய நிலை ; வசியத்திற்கு ஆட்பட்ட நிலை; கருத்துத தூணடுதலுக்கு உட்பட்ட தன்மை இது குழநதைகளிடம் மனவளர்ச்சிக் குறைபாட்டையும், வயது வநதவர்களிடம இசிவு நோயையும் உணடாக்கும்.

suggestion : உளத்தூண்டுதல் : ஒருவர் தருக்க முறைக காரணமின்றி ஒரு கருத்தை முழுமையாக ஏற்றுக் கொள்ளுமபடி செய்தல். ஒரு நோயிலிருநது மீள முடியாதென நம்பிக்கையிழந்திருககும் நோயாளியிடம் அவரது நோய் குணமாகி விடும் என்ற நம்பிக்கையை ஊட்டுதல். சூசிப்பித்தல்.

sulfametopyrazine : சல்ஃபா மெட்டொப்பைராசின : சிறுநீர்க் கோளாறுகளுககுப் பயன்படுத்தப் படும் சல்ஃபோனாமைடு என்ற மருந்து. இது நீணடகாலம் வேலை செய்யக் கூடியது.

sulphacetamide : சல்ஃப்ாசிட்டாமைடு : கண சொட்டு மருந்தாகவும் சிறுநீர்க குழாய்க் கோளாறுகளுக்காகவும் பயனபடுத்தப்படும் ஒரு சல்ஃபோனாமைடு மருந்து.

sulphadiazine. சல்ஃபாடையாசின்: பல்வேறு நோய்களைக் குணப் படுத்தப்படும் ஓர் ஆறறல் வாய்நத சல்ஃபோனாமைடுக் கூட்டுப் பொருள்.

sulphadimethoxine : சல்ஃபாடிமெத்தாக்சின் : சிறுநீர் நோயைத் தடுககப் பயன்படும ஒரு சல்ஃபோனாமைடு மருந்து.

sulphadimidine: சல்ஃபாடைமிடின்: சல்ஃபோனாமைடு மருந்துகளில் ஆற்றல் மிகுந்ததும், நச்சுத் தன்மை குறைந்ததுமான மருந்து இதன் பக்க விளைவுகள் மிகக் குறைவு. குழந்தை மருத்துவத்தில் மிகவும் பயனுடையது.

sulphaemoglobinaemia : சல்ஃபேமோகுளோபினேமியா: இரத்தத்தில் சல்ஃபாமெத்தியாகுளோபின் சுற்றோட்டமாக ஓடும் நிலை.

sulphafurazole· சல்ஃபாஃபுரசோல்: மூச்சுச் குழாய், சிறுநீர்க் குழாய் நோய்களில் முக்கியமாகப் பயன் படுத்தப்படும் ஒரு சல்ஃபோனாமைடு

Sulphamethazine : சல்ஃபாமெத்தாசின் : குழந்தை மருத்துவத்தில் மிகுதியாகப் பயன்படுத்தப்படும் சல்ஃபாடிமிடின் எனற மருந்தின் வாணிகப் பெயர்.

sulphamethizole: சல்ஃமாமெத்திசோல் : சிறுநீர்க் குழாய்க் கோளாறுகளில பெரிதும் பயன் படும சல்ஃபோனாமைடு.

sulphasalazine : சல்ஃபாசாலசின்: குடல் அழற்சியைக் குணப்படுத்தப் பயனபடும் ஒரு சலஃபோனாமைடு மருந்து.

sulphonamides : சஃல்போனாமைடுகள : நோய்க்கிருமிகளைக் கொல்லும் வேதியியல் பொருள்களின் தொகுதி. இது வாய் வழி உட்கொள்ளப்படுகிறது. இவை இரதத்தில் குறிப்பிட்ட அளவு செறிந்திருக்க வேண்டும. இவை வளர்சிதை மாற்றத்தை எதிர்க்கக் கூடியவை. ஃபோலிக் அமிலம் உருவாவதை இவை தடுக்கின்றன.

sulphones : சல்ஃபோன்கள் : டாப்சோன் போன்ற செயற்கை மருந்துகளின் ஒரு தொகுதி. தொழுநோய்க்குஇவை பயன்படுகினறன.

sulphonylureas : சல்ஃபோனி

ஊரியாக்கள் : சல்ஃபோனாமைடு வழிப்பொருள்கள். கணையத்திலிருந்து கணையநீர் (இன்சுலின்) சுரப்பதை அதிகரிக்கிறது. நீரிழிவு நோயில் கணையநீர் ஊசி போடுவதைத் தேவையற்றதாக்குகிறது.

sulphur : **கந்தகம்** : கரையாத மஞ்சள் நிறத் தூள். ஒரு காலத்தில் சொறி சிரங்குக்குக் கந்தகச் சிரங்குக்குக் கந்தகக் களிம்பு மருந்தாகப் பயன்பட்டது. இன்றும் முகப்பரு போன்ற தோல் நோய்களுக்குக் கழுவுநீர்மங்களில் பயன்படுத்தப்படுகிறது.

sulphuric acid : **கந்தக அமிலம்** : தொழில் துறையில் பெருமளவில் பயன்படுத்தப்படும், மிகுந்த அரிமானத் தன்மை கொண்ட செறிவு மிக்க அமிலம். இதன் 10% கரைசல குருதி உறைவுக்கு மிக அரிதாகப் பயன்படுத்தப்படுகிறது.

sulthiame : **சுல்தியாம்** : காக்கை வலிப்பு நோயில் வலிப்பை நீக்குவதற்குப் பயன்படுத்தப்படும மருந்து.

sunburn: **வேனிற்கட்டி; வெங்குரு**: வெயிலினால முகங்கன்றிச் சிவந்திருத்தல்.

sunstroke : **கதிரவன் வெப்பத் தாக்கம்; வெயில் அதிர்ச்சி; வெப்பத் தாக்கு** : வெயிலின் கடுமையினால தாக்குண்டு மயக்கமடையும் நோய்.

supercilium : **கண் புருவம்.**

superego : **மேல்மனம்** : கீழ்மனத்தின் செயலை இடித்துரைத்துக் கட்டுப்படுத்தும் தனமை வாய்ந்த மேலமனம்.

superfecundation (superfetati-on/superimpregnation : **மிகைச் சூலுறவு; தொடர் பாலுறவுக் கருவுறுதல** : முன்பே சூல் கொண்டுள்ள நிலையில் மேலும் கருக்கொள்ளும் நிலை.

superior : **மேலான; மேலுடல்** : உடல் உட்கூறியலில் மேல இரு பகுதிகள்.

superior meatus : **மூக்கு மேலிடுக்கு.**

superior venacava : **மேல் பெருஞ் சிரை.**

supernatent fluid : **மேல்தெளி திரவம்.**

supernumerary : **மேற்பொருள் எண்ணிக்கை மிகைப்பு; அளவிலா** : குறிப்பிட்ட, வழக்கமான, வேண்டிய எண்ணிக்கைக்கு மேற்பட்ட.

superovulation : **கருவணுப் பெருக்கம்.**

superparasite : **ஒட்டொட்டு** : ஒட்டுயிரின ஒட்டுயிர்.

supinate : **அங்கை மலர்வி; மல்லாந்து** : உள்ளங்கை மேலிருக்குமாறு திருப்பு.

supination: **கை மலர்விப்பு; வெளிப்புரட்டல்; மல்லாத்துதல்** : உள்ளங்கை மேற்புறம் இருக்குமாறு கை விரித்தல்.

supinator : **படுக்கை நிலை; கைக்கீல் தசை** : உள்ளங்கையை விரிகக உதவும் தசை.

supine: **மல்லாந்த; படுக்கை நிலை**; உள்ளங்கை மேறபுறம் திரும்பியிருக்குமாறு செயலற்றுப்படுத திருத்தல்

suppository : **உளவைப்பு; உட்கரை குளிகை; செருகு மருந்து; குதச் செருகு; மல மிளக்கி** : மலக குடல், சிறுநீர்த்துளையுள் நுழைந்து அங்கேயே கரையவிட்டு விடப்படும் கூருருளை அல்லது நீளுருளை வடிவக் குளிகை.

suppression : **அமுக்கம்; அடக்கல்; அமிழ்த்தம்** : நோய் வகையில் நோயின போக்கினைத் தடுத்தல்; குருதிப் போக்கினை நிறுததுதல்;

உணர்ச்சி வலைகயில் உணர்ச்சியை அமுக்கி வைத்தல்.

suppuration : சீழ்க்கட்டு; சீழா தல ;சீழப்பிடித்தல் சீழ்மயம் : சீழ் வைத்தல.

supra clavicular : கழுத்துப் பட்டை எலும்புமேல்; காரை எலும் பின்மேல் : கழுத்துபபட்டை எலும் புககு மேல நிலையிலுள்ள.

supracondylar : எலும்பு முனை மேல்; முணடு மேல் : எலும்பு முனைப் முண்டுப்பொருத்துக்கு மேலே யுள்ள.

supracostal : விலா எலும்புமேல் : விலா எலும்புக்கு மேலேயுள்ள.

supramaxillary : மேல்தாடை : மேலதாடைககு மேறபடட பகுதி.

supraorbital · கணகுழிமேல; விழிக குழிககுமேல் : கண குழி களுக்கு மேலேயுளள.

suprarenal : சிறுநீர்ப்பை மேல்: அணணீரகம், சிறுநீரகமேவி : சிறு நீரப்பைககு மேலுளள.

suprasternal : மாாபெலும்புமேல் : விலா எலும்புகளை இணைக்கும் மாாபு நடுவரை எலும்புக்கு மேலுளள.

sural : கெணடைச் சதை பின காலின் கெண்டைச் சதைப்பகுதி.

suramin· சுரமின்: உறக்க நோய், யானைக்கால நோய் ஆகியவற றில் நரம்புவழிச் செலுத்தப்படும மருந்து.

surgery : அறுவை மருத்துவம்; அறுவை; அறுவையியல்: உறுப்புத திரிபுகள், காயஙகள் ஆகியவற்றை அறுவை மருததும் மூலம் குணப் படுததும் மருததுவம்.

surgical catgut : அறுவைக் குடலியல்

surgical emphysema: அறுவைக் காற்றடைவு; அறுவைக் காற்றுத் திணிவு. அறுவை மருததுவ மயக் கம் அல்லது காயத்தினைத் தொடர்ந்து தோலடித் திசுக்களில் காற்று நிரம்புதல்.

surgical ligature : அறுவை முடிசசு.

surgical suture : அறுவைத் தை யல :

surra : குருதிக்குறை நோய் : வெப்பமண்டலக் குருதிக் குறை நோய்.

susceptibility : மசிவியல்பு ; நோயினால் எளிதில் பாதிக்கப் படும் தன்மை. நோயை எதிர்க்க முடியாத நிலை.

suture: அறுவைத் தையல்; தையல் முட்டு; இணைவு : அறுவை மருத் துவத்துக்குப்பின் தையலிடுதல்; மண்டையோட்டுப் பொருத்து வாய், எலும்புப் பொருத்துவாய்.

swab· பஞ்சுத் துடைப்பான்; ஒற்றி; சுருணை; துடைப்பி. அறுவை மருத் துவததில் பயன்படுத்தப்படும் உறிஞ்சு பஞ்சுத் துடைப்புத் துண்டு.

sweat . வியர்வை : வியர்வைச் சுரப்பிகளிலிருந்து வெளிப்படும் சுரப்பு நர்.

sweat gland : வியர்வைச் சுரப்பி.

sweat test: வியர்வைச் சோதனை.

sycosis ; கத்திப் பரு; நாவிதன் தோற்படை; முகச்சொறி : தாடைத தோல் நோய்.

sycosis barbae : மயிர்க்கால் நோய்.

sycosis nuchae: பிடரித் தடிப்பு : கழுததுப் பிடரியில் தோலில் ஏற் படும தோல் தடிப்பு நோய்.

symbiosis : இணைவாழ்வு; கூட்டு வாழக்கை : உடலில் இரண்டு அல

லது அவற்றுக்கு மேற்பட்ட உயிரி கள் ஒன்றுக்கொன்று உதவிக் கொண்டும், நன்மை செய்து கொண்டும் இணைந்து வாழ்தல்.

symblepharon : இமை விழி ஒட்டல்; விழி இமை ஒட்டு நோய், இணைவிமை : கண் விழியுடன் இமை ஒட்டிக் கொள்ளுதல்

Syme's amputation: மேல் கணுக் கால துண்டிப்பு : கணுக்கால மூட்டுக்கு மேலே துணடிததல். செயற் கைகால் உறுப்பு பொருத்துவதற்கு இவ்வாறு செய்யப்படுகிறது.

sympathectomy : பரிவு நரம்பு அறுவை; பரிவு நரம்பு எடுப்பு. பரிவு நரம்பு மண்டலத்தின் ஒரு பகுதி யை அறுவை மருத்துவம்மூலம் துணடித்து எடுத்தல்.

sympathetic nervous system · பரிவு நரம்பு மண்டலம் : முதுகந் தணடெலும்பின மேல, கீழ்ப்பகுதி களுக்கு முனபுறத்தில் உட்புறமாக நெருக்கமான நரம்புகளின ஒரு தொகுதியினால் இணைக்கப்பட்டு பரவலாக அமைந்திருக்கும் நரம்பு களின் தொகுதி இது தானியங்கும் நரம்பு மணடலத்தின் ஒரு பகுதி. சூழ்நிலையின் தேவைகளுக்கேறப உடல் உடனடியாக வலுவான நடவடிக்கை எடுக்க உதவுவது இம்மணடலத்தின முக்கிய பணி எடுததுககாட்டாக, அபாயம் நேரி டுமபோதும, மனக் கிளாச்சி ஏற் படுமபோதும் செயற்படத் தூண்டு வது இந்நரமபுமண்டலமேயாகும். தானியங்கும் நரமபு மண்டலத் தின இன்னொரு பகுதி துணைப் பரிவு நரமபு மண்டலமாகும. உட லினைப் பேணி வருவதற்கும், அதன் எதிர்காலத் தேவைகளை நிறைவு செய்வதற்கும் இது உதவு கிறது.

sympathetic pain : பரிவு நோவு : தொடர்புணர்ச்சியால ஏறபடும் வலி.

sympatholytic : பரிவு நரம்பு எதிர்ப்பு மருந்து: பரிவு நரம்பு மண் டலத்தின் விளைவுகளை எதிர்க் கும் ஒரு மருந்து.

symphsiotomy : இடுப்புக்குழி அறுவை : இடுப்புக் குழியின் முன பகுதியை வெட்டியெடுத்தல்.

symphysis : கூட்டுக்கணு; ஒருங் கிணைவு : எலும்புகளின ஒருங் கிணைவு.

symptom : நோய்க்குறி; அறிகுறி; உணர்குறி நோயினை உணாத தும் அறிகுறிகள. நோயாளி தானே உணர்ந்து கொள்ளும் நோய்க்குறி தலைவலி. உடல் வெப்பநிலை, நாடித துடிப்பு போன்றவை மருத்துவர் கணடறி யும நோய்க் குறிகள்

symptomatology (symptomatics). நோய்க் குறியியல் நோய்க குறிகள் பற்றி ஆராயும் அறிவியல

symptosis: தேய்வு:உடல் மெலிவு: குறிபபிட்ட பகுதியோ முழுஉடலு மோ தேய்தல்.

synapse, synapsis : நரபணுத தொடர்பு முனை. அடுததடுததுள்ள



நரமபணுத் தொடர்பு முனை

இரு நரப்பணுக்களிடையிலான தொடர்புமுனை.

synchysis : தீப்பொறிக் கண ணோய்; பளிங்கு நீாமை : கண் விழிக் குழியிலுள்ள பளிங்கு போனற திணம நீர்மம் சிதைவுற றுத் திரவமாதல்.

syncope : குருதி மயககம்; மயக்க நிலை, மூர்ச்சை இரத்த அழுத்தக் குறைவினால ஏறபடும உணர் விழப்பு.

syncytium : பல கருவுள் உயிர்ம அணு : கருவுட்கள் பலப்பல அடங்கியிருந்தும் ஒரே உயிர்ம மாக அமைந்து செயலாற்றும் ஊன்மத் திரள்.

syndactyly; syndactylism; syndactylia : வாத்து விரல், இணைவிரல் : வாத்தின கால்விரல் கள போன்று விரல்கள் இடைத் தோலால் ஒன்றுபட்டு இணைந் திருத்தல்

syndesmography : மூட்டு இயல் விவரவுரை : எலும்பு இணைப்புத் தசை நாண் பற்றிய ஆய்வியல் விவரவுரை.

syndesmology (arthrology) : மூட்டு இயல: எலும்பு இணைப்புத தசை நாண பறறி ஆராயும் அறி வியல்.

syndesmosis : எலும்புத் தசை இணைப்பு : எலும்புத தசை நாண இணைப்பு,

syndrome நோய்க் குறித் தொகுதி; இணைப் போக்கு : ஒரு நோயைக காட்டும் குறிகள், அடையாளங் கள், உணர்வுகள ஆகியவற்றின தொகுதி இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து உடலிலுள்ள ஒரு குறிப்பிட்ட கோளாறைக் காட்டு கின்றன. எடுத்துககாட்டாக, மிகுந்த உடல் வெப்பம், தொண டை வீக்கம, மெதுவான நாடித் துடிப்பு, அடிக்கடி ஏறபடும் மயக் கம் ஆகியவை இதயத்தின் மேலறைக்கும் கீழறைக்கும் இடை யிலான தடுக்கிதழ் அடைபட்டிருப் பதைக குறிககிறது.

synechia : உறுப்பிணைப்பு, ஒட் டிணைப்பு : உறுப்புகள் இயல்புமீறி இணைநதிருததல்.எடுத்துககாட்டு: விழிவெண் படலததுடன் விழித் திரைப படலம் இணைந்திருத்தல.

synergism synergy : ஒருங்கியக் கம : மருநதுகள், நுண்ணுயிரிகள, தசைகள போன்ற இரணடு இயக்கிகள் ஒருங்கிணைந்து ஒன் றாக இயங்குதல்.

synergist : ஒருங்கியக்கி; கூட்டுச் செயல்; இனண விளைவி; இணை வுறவு : ஒருங்கியக்கததில் மற் றொரு கூட்டாளியுடனஒத்துழைக் கும் ஓர் இயக்கி.

synkinesis : துல்லிய இயக்கத் திறன் : துல்லியமான இயக்கங் களை நடத்தக் கூடிய திறன.

synosteology உடல் மூட்டிணைப் பியல்.

synosteosis (synostosis). எலும் புக் கூட்டொருமை

synovectomy : மூட்டு உறைச் சவ்வு அறுவை; மூட்டுப்பை எடுப்பு : மூட்டு உறைச் சவ்வுப் படலத்தை வெட்டியெடுத்தல்.

synovial fluid (synovia) : உயவு நீரமம் : எலுமபு மூட்டிணைப் பினுள் கசியும உயவு நீர்மம்.

synovial membrane . மூட்டு உறைச் சவ்வுப் படலம்; மூட்டுறை; நாண உறை; பசைச் சவ்வு.

synovioma. மூட்டு உறைச் சவ்வுக் கட்டி; மூட்டுப்பை உருவாக்கம் : மூடடு உறைச் சவ்வுப் படலத்தில உணடாகும் கட்டி. இது உக்கிர மானதாகவோ உக்கிரமற்றதாக வோ இருக்கலாம்.

synovitis : மூட்டு உறைச் சவ் வழற்சி; மூட்டுப்பை அழற்சி: மூட்டு உறைச் சவ்வுப் படலததில் ஏற் படும் வீக்கம்.

synthesis : மீட்டிணைப்பு; செயற் கைத் தயாரிப்பு. அறுததுப் பிரிககப பட்ட பகுதிகளைச் சோததல்.

syphilide : கிரநதிப் புண் : கிரந்தி யினால் உண்டாகும் தோல் புண்.

syphilis : கிரந்தி; மேகநோய். திருகு சுருள் வடிவான நுணணுயிர் மூலம உண்டாகும் ஒரு நோய்.

இது உடலுறவு மூலம் ஆணிட மிருந்து பெண்ணுக்கும் பெண் ணிடமிருந்து ஆணுக்கும் பரவு கிறது. தொடக்கத்தில் இதனால் உடலின் மேற்பகுதியில் வீக்கமும், புண்களும் ஏற்படும். ஆனால், பின்னர் குருதி நாளங்கள், இதயம், மூளை, முதுகந்தண்டு ஆகியவற் றையும் தாக்குகிறது. இது கருவில் உள்ள குழந்தைகளை பீடிக்கிறது.

syringe : பீற்று மருந்தூசி; பீச்சு குழாய்; உட்செலுத்தி; பீச்சி; சிரிஞ்சு: உடலில் விசைப் பீற்று மருந்து குத்திச் செலுததுவதற்கான குழல் ஊசி.

syringitis : காதுத் தொண்டை தொடர்புக்குழலழற்சி; காதுஉட்குழல அழற்சி நோய்.

syringotomy : காதுக் குழல் அறு வை : காது உட்குழலில் செய்யப படும் அறுவை. புழை அறுவை.

syrinx : காது உட்குழாய் : தொண்டையிலிருந்து காதுக்குக் காறறுக் கொண்டு செல்லும நுண் குழல.

system : மண்டலம் : உடல் இயக் கப் பகுதிகளின தொகுதி. எ-டு: நரம்பு மண்டலம்; தசை மண்டலம் சிரண மண்டலம்.

system for identifying moti vated abilities (SIMA): தூண்டு திறன் கண்டறியும் முறை : தூண் டப்படும் திறன்களை அடை யாளங் காண்பதற்கான முறை. மனச்சீர்கேட்டின் அளவைக் கணக் கிடுவதற்கான சோதனை.

systemic circulation : முழு உடல் குருதியோட்டம்; மண்டலச சுற்றோட்டம்: உடலின் ஓர் உறுப்பு மட்டும் சாராமல், உடல அமைப்பு முழுவதும் சார்ந்து இரததவோட் டம் நடைபெறுதல். ஆக்சிஜனேற றப்பட்ட இரத்தம் இதயத்தின் இடது மேலறையிலிருந்து புறப் பட்டு உடல் முழுவதும் பாய்நது ஆக்சிஜன் நீக்கமடைந்து மீண்டும் வலது மேலறைக்கு வருதல்.

systole : இதயச் சுருக் கம் : நெஞ்சுப் பைச் சுருங்கி இயங்குதல்; குருதி நாளச் சுருங் கியக்கம்.

systole pressure : இதயச் சுருக்க அழுத்தம்.

systolic murmur : இதய முறு முறுப்பு; சுருங்கல் முணுமுணுப்பு; சிற்றொலி : நெஞ்சுப்பை சுருங் கியங்குவதால் உணடாகும் முறு முறுப்பு ஒலி.

sytron : சைட்ரோன் : சோடிய அய எடிட்டேட் என்ற மருநதின வாணிகப் பெயர். அயச்சத்துக் குறைபாட்டினால் உண்டாகும் சோகை நோய்க்கு மருந்தாகப் பயன்படுகிறது.

T

TAB : **நச்சுக் காய்ச்சல் தடை மருந்து ;** நச்சுக் காய்ச்சல் (டைபாய்டு), குடற் காய்ச்சல் போன்ற நோய்களுக்கு எதிராக மனிதரிடம் செயற்கையாக நோய் தடைக்காப்பினை உண்டாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் ஓர் அம்மைப்பால் மருந்து.

tabes: **மிகுமெலிவு (சோகை);உடல் திசு அழிவு நோய் :** முள்ளந்தண்டு மெலிவுறும் நோய். இதில் உணர்வு நரம்புகளும் நோயுற்று கைகால்கள் விளங்காக் கோளாறு உண்டாகும்.

tabescence : உடல்வற்றிபுலர்தல். உடல் மெலிவுக் கோளாறு.

tablet : **மாத்திரை :** பொதி குளிகை.

taboparesis : தண்டுவட அழற்சி : மூளைக் கோளாறுடையவர்களுக்குப் பொதுவாக ஏற்படும் வாத நிலை. இதில், தண்டுவடத்தில், முள்ளந்தண்டு அழற்சி ஏற்படுவது போனறு நைவுப் புண்கள் உணடாகும்

tachycardia : இதயத் துடிதுடிப்பு, மிகை இதயத்துடிப்பு, இதய விரைவு: இதயத துடிப்புத் திடீரென அதிவேகமாகத் துடிக்கும் கோளாறு.

tachyphasia : அதிவேகப் பேச்சு: பேச்சு மிகைப்பு; பேச்சு விரைவு: சில உளவியல் கோளாறுகளின்போது மிக அதிவேகத்தில் பேச்சு வெளிப்படுதல்.

tachypnoea : அதிவேக மூச்சு; மிகை மூச்சு; மூச்சு விரைவு: மூச்சு வாங்குதல் இயல்புக்கு மீறி வேகமாக நடைபெறுதல்.

tactile : தொடு உணர்வு சார்ந்த; தொடுவுணர்வு : தொட்டு உணரக் கூடிய; ஊறுணர்வுப் புலன் சார்ந்த.

taedium vitae : வாழ்க்கை வெறுப்புணர்ச்சி : தற்கொலை புரியத் தூண்டும் வாழ்க்கை வெறுப்பு.

taenia : 1. குடற்புழு; நாடாப்புழு : தட்டையான ஒட்டுண்ணிக் குடற் புழு வகை.

2. மூளையின் இழைக் கச்சை போன்ற பகுதி.

taeniacide : குடற்புழு மருந்து; நாடாப்புழுக் கொல்லி : குடற்புழுக்களைக் கொல்லும் மருந்து.

taeniafuge : குடற்புழு வெளியேற்று மருந்து; நாடாப் புழுவகற்றி: குடறபுழுவை வெளியேற்றும் மருந்து.

talc : கல்மா; வெளிமக் கன்மகி; காக்காய்ப் பொன்: இயறகையாகக் கிடைக்கும் மக்னீசியம் சிலிக்கேட் அடங்கிய ஒரு மென்மையான வெண்ணிறத்தூள். அறுவை மருத்துவத்துக்கு அணியும் கையுறைகளை அணிவதற்கு முன்பு அவற்றில் பூசிக் கொளளப் பயன்படுகிறது.

talipes:முடக் கால்; கோணல் கால்; பிறவி குறுக்குக் கால் : கால்கள் திருகுமுறுகலாக அமைந்திருத்தல்.

talus : கணுக்கால்; முட்டி எலும்பு; கணுவெலும்பு: கணுக்கால் எலும்பு. கீழ்க்கால் உள் எலும்புக்கும் குதிகால் எலும்புக்குமிடையில் அமைந்துள்ளது. இது கணுக்காலின் இரண்டாவது மிகப்பெரிய எலும்பு.

tamoxifen : டாமோக்சி∴பின் : எலும்பு உருவாவதைத் தடுக்கும் ஒரு செயற்கைக் கூட்டுப் பொருள். மாதவிடாய் நிறுத்தத்திற்குப் பிந்திய மார்பகப் புற்றைக் குணப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது.

tamponade : குருதி அடைப்பான்: குருதிப் போக்கினை நிறுத்துவதற்கான அடைப்பான்; அறுவை மருத்துவத்தில் குருதியை நிறுத்த அடைப்பானைப் பயன்படுத்துதல்.

tannafax : டான்னா∴பாக்ஸ் : மேலீடான தீப்புண்கள், சுடுபுண்கள் ஆகியவற்றுக்குப் பயனபடுத்தப்படும் டேனிக் அமிலம் அடங்கிய மருந்தின் வாணிகப் பெயர்.

tannic acid : டேனிக் அமிலம் : கருவாகிக் கரணையிலிருந்து எடுக்கப்படும் பழுப்புநிறப் பொடி. உறைய வைக்கும் குணமுடையது.

tantalum : டாண்டாலம் (வெப்பம்) : வெப்பத்தினாலும் திராவகச் செயறபாட்டினாலும் பாதிக்கப்படாத அரிதான வெள்ளை உலோகத் தனிமம். உடலில் நலிவுற்ற பகுதிகளுக்கு வலுவூட்டுவதற்குக் கம்பி வடிவில் பயனபடுததப்படுகிறது. எடுத்துக்காட்டாக, பெரிய குடலிறக்கத்தைப் பழுது பார்க்கப் பயனபடுகிறது.

tapeworm : நாடாப்புழு: தட்டைப் புழு; ஒட்டுயிராக வயிற்றுக்குள் இருக்கும் புழு.

tapotement: அழுத்தித் தட்டுதல்; அடித்தல்: தசைப் பிடிபபில் அழுததித் தட்டுதல். கைவிரல்களை இறுக்கி மூடித்தட்டுதல், உள்ளங்கையினால் தட்டுதல், விரல் நுனியால் குத்திப் பார்ததல் ஆகியவை இதில் அடங்கும்.

tarsal bone . கணுக்கால் எலும்பு

tarsalgia : பாத வலி; அடிக் கால் வலி; தான வலி: பாதத்தில் உண்டாகும் வலி.

tarsometa tarsal : கணுக் கால் சார்ந்த : கணுக்கால் கணுக் காலுக்கும் கால் விரல் கணுக்கும் இடைப்பட்ட ஐந்து நீண்ட விரல்கள் கொண்ட பகுதி ஆகியவை தொடர்பான.

tarsoplasty : கண்ணிமை ஒட்டுறுப்பு அறுவை; இமைச் சீரமைப்பு. இமையமைப்பு: கண்ணிமையில்செய்யப்படும ஒட்டுறுப்பு அறுவை மருத்துவம்.

tarsorrhaphy : கண்ணிமைத் தையல்; இமைத்தைப்பு: விழிவெண படலம் உணர்விழப்பில் இருக்கும்போது அல்லது அது குணமடைந்து வரும்போது அதனைப் பாதுகாப்பதற்காகக் கண்ணிமைகளை ஒன்றாக இணைத்துத் தைத்துவிடுதல்.

tarsus : (1) கணுக்கால் எலும்பு; முன் பாதம் : பாததிலுள்ள ஏழு சிறிய எலும்புகள்.

(2) கண்ணிமை ஒட்டுத் தசை; இமைத் தசை : கணணிமை ஒவ்வொன்றிலும் உள்ள அடர்ததியான நீண்ட இணைப்புத் தசைத் தகடுகள்.

tartar : பல் ஊத்தை; பற்காரை : பற்களில் படியும் ஊத்தை.

tartar emetic : பேதி-வாந்தி மருந்து: பேதி, வாந்திக் கோளாறு களைக் குணப்படுத்துவதற்கான மருந்து.

taste-bud : சுவை அரும்பு: நாக்கிலுள்ள சுவை நரம்பின நுனியில் தனி வகையான நரம் பணுக்கள் உள்ளன. இந்தத் தனிவகை உயிரணுக்களும் நரம்பு முனைகளும் ஒன்றாக இணைந்து சுவை அரும்புகளாக அமைந்துள்ளன.

சுவை அரும்பு

Tay-Sachs disease : டேய்-சாக் நோய் . B-D-N அசிட்டில் ஹெக்சோ சாமிடேஸ் என்ற செரிமானப் பொருள் குறைபாட்டினால் GM_2 என்ற ஒரு குறிப்பிட்ட கொழுப்புப் பொருள் மிகுதியாகச் சேர்வதால் உண்டாகும அடிப்படைக் கோளாறு.

T-bandage : 'T' வடிவக் கட்டுத் துணி; 'T' உருக்கட்டு : உடலில விரைப் பைக்கும் மலவாய்க்கும் இடைப்பட்ட விடபம் என்ற பகுதியில் கட்டுப்போடுவதற்குப் பயன் படுத்தப்படும் 'T' வடிவக கட்டுத் துணி.

tears . கண்ணீர் : கண்கடையிலுள்ள கணணீர்ச் சுரப்பியிலிருந்து சுரக்கும் நீர். இதில் 'லைசோசைம' என்ற செரிமானப் பொருள (என்சைம்) அடங்கியுள்ளது; இது நோய் நுணமத் தடையாகச செயற்படுகிறது.

teeth : பற்கள் : மெல்லுவதற்குப் பயன்படும் அமைப்பு. இவற்றில் குறிப்பிட்ட பருவத்தில விழக் கூடியவை. இவை 7 வயதுக்குள் விழுந்து அந்த இடத்தில் நிரந்தரப் பற்கள் முளைததுவிடும். நிரந்தரப் பற்களின் மொத்த எண்ணிக்கை 32. இவை 20 வயதுக்குள் முழுமையாக அமைந்துவிடும். பற்களின் அமைப்பினைப் பல் மருத்துவர் கள் வரைபடமாக வரைந்திருக்கிறார்கள். குறிப்பிட்ட பருவத்தில் விழுந்துவிடும் முதல் நிலைப் பற் களை A-E எழுததுக்களால் குறிப்பிடுகிறார்கள். இதன்படி, இடது மேல் உளிப்பல்லும் கடைசிபின கடை வாய்ப்பல்லும் A-E என்று இவ்வாறு குறிப்பிடப்படுகிறது:

மேல்வலம்	மேல்வலம்
EDCBA	ABCDE
EDCBA	ABCDE
கீழ்வலம்	கீழ்இடம்

நிரந்தர அல்லது இரண்டாம் நிலைப் பற்கள் எண்களால் குறிப்பிடப்படுகின்றன. இடது மேல் மைய உளிப்பல்லும், கடைசி பின் கடை வாய்ப்பல்லும் (ஞானப்பல்) 1,8 என்று இவ்வாறு குறிப்பிடப் படுகிறது.

மேல் வலம்	மேல் இடம்
87654321	12345678
87654321	12345678
கீழ் வலம்	கீழ் இடம்

tegument : தோற் போர்வை; பொதிவை : விலங்குடலின் இயற்கை போர்வை.

telangiectasis : தந்துகி விரிவாக்கக் குருதிக் கிளைக் குழல் விரிவு : உடறபரப்பிலுளள தந்துகிகளை விரிவடையச் செய்தல்.

teletherapy : கதிரியக்க மருத்துவம் : புறறு நோய போன்றவற்றில உடலின உள்ளிழைமங்களைக் கோபால்ட் அலலது கேசியம கதிரியக்கக் கதிர்களால குணப்படுத்தும் முறை.

temperament : மனப்போக்கு; இயல்பிலா உளப் பணபு, மனப்

பாங்கு: தனிமனிதரிடம் உணர்ச்சி, செயல்களுக்கு அடிப்படையாக இயல்பாக அமைந்த உடல் உள நிலைப் பாங்கு

temperature : வெப்ப நிலை: உடலின இயல்பான வெப்ப நிலை.

temple : கன்னப் பொட்டு; பொட்டு : செவித்தடம். கண்ணின் புறக்கோணத்திற்கும், காது மடலின் மேற்பகுதிக்கும் இடையிலுள்ள தலையின பகுதி.

